# T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: LXI NO 2 and 3

March 16 and 19
1984


V211,31'N84
N84.61.243;1
136234

வெளியீடு 1-8-1984 Issued 1-8-1984

2770

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1984 மார்ச் 16- தொகுதி LXI எண். 2

**Friday 16th March 1984—Volume LXI No. 2**

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009

**Legislative Assembly Department, Fort St. George, Madras-600009**

விலை: ரூ. 3-50 காசுகள்) [Price Rs. 3-50 paise

N81L31.N84
N84.6102 93
136234
சென்னை-600 008

## உள்ளடக்கம்.

பக்கங்கள்.

16-3-1984.

| | | |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்: உடுக் குறியிட்ட வினாக்கள்.— | 341 376 |
| 3. | தகவல் கோரல்: | |
| | உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை. | 376—377 |
| 3. | முறை தவறிய செயலுக்காக இரு உறுப்பினர்களை அவையைவிட்டு வெளியேறும்படி ஆணையிடல். | 377—388 |
| 4. | கவன ஈர்ப்பு: | |
| | லாட்டரி முகவர்கள் தமிழக அரசின் லாட்டரிச் சீட்டை புறக்கணிப்பது. | 388—389 |
| 5. | வரவு-செலவுத் திட்டம் 1984—85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி). | |
| | (அ) கோரிக்கை எண். 29— தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். | —390 |
| | (ஆ) கோரிக்கை எண். 34— நகர்ப்பகுதி வளர்ச்சி. | —390 |
| | மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் | 390, 433—450 |
| | திரு. எம். அண்ணாதாசன் | 390—396 |
| | டாக்டர் கே. சமரசம் | 396—407 |
| | திரு. ஜே. சி. டி. பிரபாகரன் | 407—416 |
| | திரு சு. முத்துக்கிருஷ்ணன் | 417—424 |
| | திரு. என். விஜயபாலன் | 424—428 |
| | திரு. கே. குப்புசாமி | 428—433 |
| 6. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 451—452 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1984, மார்ச் 16, வெள்ளிக்கிழமை**

**பங்குனி 3, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

''இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.''

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.

### 1. வினாக்கள்— விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சேலம் மாவட்டம் நங்கவல்லியில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம்.

*285—வினா எண் 18195—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் நங்கவல்லி துணை மின் நிலையத்திற்கான நில ஆர்ஜிதப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்போது செயல்படத் துவங்கும்?

மாண்புமிகு திரு, ச. இராமச்சந்திரன்: (அ) சேலம் மாவட்டம் நங்கவல்லியில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்காக 4.56 ஏக்கர் நிலம் 14-10-82-ல் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது,

(ஆ) நங்கவல்லியில் மேற்கூறிய துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை 1984-85-ல் மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பிப்பதற்கு இருக்கிற இந்தத் துணை மின் நிலையத்தினுடைய கட்டுமானச் செலவு எவ்வளவு என்ற விவரத்தையும், அதனுடைய கெப்பாசிட்டி எவ்வளவு என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 96 லட்சம் ரூபாய் செலவில் 10 எம்.வி ஏ. திறன் கொண்ட இரண்டு மின் மாற்றிகளுடன் இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

திரு. சே. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட துணை மின் நிலையத்தை நிறுவுவதால் வோல்டேஜ் இம்ப்ரூவ்மெண்டுக்கு ஒரு வாய்ப்பாக உள்ளது. இந்த அரசு எடுத்திருக்கிற, அதாவது நிறுவ இருக்கிற இந்த துணை மின் நிலையத்தினால், மின் இணைப்பு தமிழகத்தில் பரவலாக்கப்பட்டு, அதிக தூரம் எடுத்துச் செல்லவிருப்பதால், ஏற்படுகிற அந்த வோல்டேஜ் குறையை தவிர்ப்பதற்கும், அதேமாதிரி வோல்டேஜ் இம்ப்ரூவ்மெண்ட்டுக்கும் இப்படிப்பட்ட துணை மின் நிலையங்களை நம்முடைய மின்சார வாரியம் அதிகரிப்பதற்கு ஏதேனும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இப் பகுதியைப் பொறுத்தவரையில் 393 தொழிற்சாலைகளுக்கு நல்ல மின் இணைப்புக் கொடுக்கவும், 119 தொழிற்சாலைகளுக்கு கூடுதலாக மின்பளு வழங்கவும் இத்துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மின் விநியோகம் சீராக்கப்படும். தமிழகத்தில் வேறு பகுதிகளில் இத்தகைய மின் நிலையம் எங்கு அமைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பு தற்போது இல்லை.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் இதேபோன்று தமிழகத்தில் எல்லா இடங்களிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? மின் அழுத்தம் குறைவாக உள்ள இடங்களில், விவசாய பம்ப் செட் மோட்டார்கள் பழுதடைவதால் இத்தகைய துணை மின் நிலையங்களை அதிகமாக ஏற்படுத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய துணை மின் நிலையங்கள், சப்-ஸ்டேஷன்கள் தமிழகத்தில் ஏற்கெனவே பல இடங்களில் இருக்கின்றன. மேலும் பல இடங்களில் அவ்வப்போது தேவையானபோது ஏற்படுத்தப்படுகின்றன. இதற்கும் பம்ப் செட்டுகள் பழுதடைவதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நங்கவல்லியில் துணை மின் நிலையம் ஆரம்பிப்பதற்கு, நில ஆர்ஜிதம் செய்து கிட்டத்தட்ட 1½ ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்த ஆண்டு அதை



ஆரம்பிப்பதற்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இந்த காலதாமதத்திற்கு காரணம் என்ன? இந்த ஆண்டாவது ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, காரணம் பணம் பற்றாக்குறைதான்.

## மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான திட்டம்.

286—*வினா 20474— திரு. சி. கணேசன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருக்க, மாற்று ஏற்பாடுகளுக்கான செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) தமிழ் நாட்டில் மின்பற்றாக்குறை ஏற்படாவண்ணம் இருப்பதற்காக மின் உற்பத்தியை பெருக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட திட்டங்கள் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப் பட்டுள்ளது.—

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வடசென்னை அனல் மின்நிலையம் | 5 | 210 | மெ.வா. |
| 2 | தூத்துக்குடி அனல் மின்நிலைய விரிவாக்கம். | 2 | 210 | மெ.வா. |
| 3 | நெய்வேலி மூன்றாவது அனல் மின் நிலையம். | 5 | 210 | மெ.வா. |
| 4 | எரிவாயு மின்திட்டம். | 6 | 50 | மெ.வா. |

5 இதைத் தவிர, கல்பாக்கம் விரிவாக்கம் மற்றும் இரண்டாவது அனல் மின்நிலையம் போன்ற திட்டங்களை தமிழ்நாட்டில் ஏற்படுத்த மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வற்புறுத்துகிறது.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. மின்பற்றாக்குறையால் தொழிற்சாலைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்கின்ற முறையிலே வடசென்னை அனல் மின்நிலையம், நெய்வேலி, தூத்துக்குடி போன்ற மின்நிலையங்களை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசின் அனுமதி கோரி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாலைகள்

அதிகமாக இருக்கின்ற கோவை போன்ற மாவட்டங்களிலே மின் பற்றாக்குறை அதிகமாக இருப்பதால் தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கம் தாங்களே தெர்மல் நிலையங்களை அமைத்துக்கொள்வதன் மூலமாக மின் பற்றாக்குறையைப் போக்குவதற்கு ஏற்றமுறையிலே அதற்காக அரசிடம் அனுமதி கேட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா? அரசு அனுமதி அளித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. இவைகள் நாமே போட்டிருக்கிற திட்டங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: துணைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையால் அடிக்கடி பஞ்சாலைகளும் தொழிற்சாலைகளும் பாதிக்கப்படுகின்றன. அதைப் போக்குவதற்கு சில ஏற்பாடுகளைச் செய்வதாக அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்பட்டது. அதற்காக மத்திய அரசாங்கம் என்ன பதில் அளித்திருக்கிறது. இருப்பதற்கே ஒரு ஆபத்து வந்திருக்கிறது என்பது உண்மையா? சிங்கரேணியிலிருந்து நிலக்கரி—கட்ட வேண்டிய பணம் கட்டாததால் நிறுத்தி இருப்பதாகவும் நிலக்கரி ஸ்டாக் இல்லாத காரணத்தினால் 5 ஜெனரேட்டர்களுக்கு இப்போது 3 ஜெனரேட்டர்கள்தான் ஓடக்கூடிய நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; சிங்கரேணி பற்றி தனிக் கேள்வி போட்டால் விவரம் தரமுடியும். வடசென்னை அனல் மின் நிலையத்தை 210 மெகாவாட் கொண்ட 5 பிரிவுகளாக அமைக்க வேண்டுமென்று நாம் பரிந்துரை செய்தோம். ஆனால் அவர்கள் 210 மெகாவாட் கொண்ட 3 யூனிட்டுகளுக்குத் தேவையான நிலக்கரியைத்தான் தர இயலும் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். வடசென்னை திட்டம், தூத்துக்குடி அனல் மின்நிலையத் திட்டம் 210 மெகாவாட் கொண்ட 2 யூனிட்டுகள் உள்ள திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களுக்கும் அநேகமாக விரைவிலே மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

திரு. இல. பலராமன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வடசென்னையில் 400 மெகாவாட் என்று கருதுகிறேன், அந்த அளவுக்கு இருந்ததை 510 மெகாவாட்டாக உயர்த்துவதற்கு மத்திய அரசுக்கு கோரிக்கை விட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தூத்துக்குடியிலே 210 மெகாவாட் அளவுக்கு செய்யப்போவதாகச் சொன்னார்கள். ஏற்கனவே இன்றைக்கு இருக்கக்கூடிய கெப்பாசிடி அளவுக்கு மின் உற்பத்தியைச் செய்வதற்கு சில தடைகள் இருக்கின்றனவே, அதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? முழு கெப்பாசிடி அளவுக்கு மின் உற்பத்தி இப்போது செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தூத்துக்குடி அனல் மின் நிலையம் மிகவும் சிறப்பாக இயங்கி வருகிறது. எண்ணூர் திட்டமும் பேசின்பிரிட்ஜ் திட்டமும் நமக்கு சிக்கல்களைத் தருகின்றன. அடுத்த கேள்வி அதைப்பற்றி வருவதாலே இதிலே அதைப் பற்றிய பதிலைத் தரவேண்டியதில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு 12 மணி நேரம் மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். 12 மணி நேரம் உண்மையிலே கிடைத்ததாகத் தெரியவில்லை. ஆகவே காலையில் 6 மணி நேரமும் மாலையில் 6 மணி நேரமும் மின்சாரம் விவசாயிகளுக்குக் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரையில் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, பகல் 6 மணி நேரமும் இரவில் 8 மணி நேரமும் தரப்படுகிறது. காலையிலிருந்து மாலைவரை தருவது என்பது இயலாது.

அனல் மின் நிலையங்களுக்கான மேம்பாட்டுத் திட்டங்கள்.

286— வினா எண் 21289-- திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியம் அனல் மின்சார நிலையங்களைச் செப்பனிடத் திட்டம் தீட்டியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) எண்ணூர் அனல் மின் திட்டத்திற்சாக ரூ. 41.4 கோடி மதிப்பீட்டில் ஒரு மேம்பாட்டுத் திட்டம் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு இத்தகைய திட்டம் தேவையில்லை.

(இ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 6 கோடியாகும்.
1982-83 ஆம் ஆண்டு ரூ. 7 கோடியாகும்.
1983-84 ஆம் ஆண்டு ரூ. 10 கோடியாகும்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏறக்குறைய 90-95 மெகாவாட் திறன் படைத்ததாக இருந்தது. ஆனால் இன்று 20-25 மெகாவாட் திறன் உற்பத்திதான் கிடைக்கிறது. ஆகவே பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தில் இயங்கிவந்த மிஷின்கள் எல்லாம் இன்று பழுதுபட்டு பார்க்காமல் அப்படியே இருக்கிறது. பாயிலர்களும் மற்றும் டவர்களும் பழுதுபட்டு இருக்கின்றன. ஆகவே பேசின் பிரிட்ஜ் அனல்மின் நிலையத்தில் இருக்கிற இயந்திரங்களை அகற்றிவிட்டு அவைகளை செப்பனிட ஏதாவது நடவடிக்கை இருக்கிறதா? அல்லது நவீன மிஷின்களை வைத்து மேலும் அதை நல்ல முறையில் பயன் தரத்தக்க வகையில் வழிவகைகளை அரசாங்கம் செய்யுமா என அறிய விரும்புகிறேன்

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்னால் நான் டெல்லிக்கு சென்று இருந்தபோது இந்திய அரசுடன் பேசின் பிரிட்ஜ் சம்பந்தமாக பேசியிருக்கிறேன். பேசின் பிரிட்ஜ் அனல் மின் திட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது மிகவும் உற்பத்திக் குறைவாக இருக்கிறது. இயந்திரங்கள் நீண்ட நாட்கள் ஆகிவிட்டதால் பழுதடைந்துவிட்டன. அதே நேரத்தில் அதிலே இருந்து வருகிற தூசியும் சென்னை மாநகருக்கு மிகப்பெரிய கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆகவே இதை மாற்றி அமைத்து தூசியும் வராமல் அதே நேரத்தில் உற்பத்தியும் நமக்கு கொஞ்சம் கூடுதலாக கிடைக்கிற வகையில் ஒரு மாற்றுத் திட்டத்தை நாம் வற்புறுத்தி வருகிறோம். அது குறித்து இந்திய அரசு அதிகாரிகளுடன் விரைவில் கலந்துபேசி முடிவு எடுப்பதாக நமக்கு கூறியிருக்கிறார்கள்.

திரு. கு. ரமணி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எண்ணூர் அனல் மின்நிலையம் ஆரம்பித்ததிலிருந்து அதனுடைய 'Turbines' ஒழுங்காக வேலை செய்யாமல் கடலில் இருந்து வரக்கூடிய தண்ணீரில் பலவிதமான [illegible] மற்றும் கடலில் உள்ள பல்வேறு பொருட்கள் அடைத்து அந்த இயந்திரங்கள் ஒழுங்காக வேலை செய்யாமல் இருக்கக்கூடிய தொல்லைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொல்லைகளை நிரந்தரமாக தீர்ப்பதற்கு ஏதாவது திட்டம் அரசு வைத்திருக்கிறதா? அதற்காக உள்ள ஆலோசனை முன்வைக்கப்பட்டதை நிவர்த்தி செய்வதற்கு எவ்வளவு காலத்திற்குள் அதை செய்யும். அதே சமயத்தில் பேசின் பிரிட்ஜிலிருந்து ஏற்படக்கூடிய நிலைமை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சுற்றுவட்டத்தில் இருக்கக்கூடிய பல நூற்றுக் கணக்கான ஜனங்கள் அந்த தூசியினால் டி.பி. வியாதி ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது ரிக்கார்டுகளிலும் பத்திரிகைகளிலும் செய்திகளாக வந்துகொண்டு இருக்கின்றன.



அந்த இயந்திரங்கள் மிகவும் பழையவை, பழுதடைந்துவிட்டன. அந்த இயந்திரங்களை முழுமையாக அகற்றிவிட்டு அதிகப்படியான மின் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை அங்கே அமைக்க தற்போது ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உடனடியாக அந்த தூசியை குறைப்பதற்கு பேசின் பிரிட்ஜைப் பொறுத்தவரையில் 'Electro-static Precipitator' என்று ஒன்று நம்முடைய Bharat Heavy Electricals Ltd. நிறுவனம் மூலம் எவ்வளவு சீக்கிரத்தில் பெற்று நிறைவேற்ற முடியுமோ அதை நிறைவேற்றலாம் என்ற ஒரு யோசனையும் இருக்கிறது. மேலும் அந்தத் திட்டத்தை மாற்றி அமைக்கின்ற ஒரு யோசனையை நான் அன்பு துணைக் கேள்விக்கு பதிலளித்தபொழுது எடுத்து உரைத்தேன். எண்ணூர் அனல் மின்நிலையத்தைப் பொறுத்தவரையில் அதில் பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. டிசைன் சில நேரங்களில் சரியில்லை 'Water coolant' சரியில்லை. அப்படி பல்வேறான சங்கடங்களை எண்ணூர் அனல் மின்நிலையத்தால் தொடர்ந்து நாம் பெற்று வருகிறோம். அதனாலே தான் செக்கோஸ்லோவேக்கியாவிலிருந்து வந்த நிபுணர்களை கொண்டுவந்து அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து 41.4 கோடி ரூபாய் அளவில் ஒரு மேம்பாட்டுத் திட்டத்தை நமக்குத் தந்து இருக்கிறார்கள். அதன்மூலம் தற்போது உற்பத்திச் செய்யும் 1,500 மில்லியன் யூனிட்டுகளுக்கு மாறாக இந்த நிலையம் ஆண்டு ஒன்றுக்கு 2,100 மில்லியன் யூனிட்டுகளுக்கு மின்சாரம் உற்பத்திச் செய்யும். இந்த மேம்பாட்டுத் திட்டம் 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் முடிக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தில் உள்ள 2 யூனிட்டுகள் அடிக்கடி தகராறைக் கொடுக்கிறது. குறிப்பாக நிலக்கரியில் ஓட்டுகிறார்கள். சில நேரங்களில் ஆயில் மூலமாக அதை இயக்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னால் இந்த அவையில் அறிவிக்கும் போது தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் உள்ள இயந்திரங்களை முழுக்க முழுக்க நம்முடைய இன்ஜினியர்களே உற்பத்திச் செய்தார்கள் என்று சொன்னார்கள் அப்படியானால் அங்கே இயந்திரக் கோளாறு இருக்கிறதா? அதை முழுக்கச் சரி செய்வதற்கு அரசு ஏதாவது திட்டம் வகுத்து இருக்கிறதா, என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் அப்படி ஒன்றும் இல்லை. 3 யூனிட்டுகளும் நன்றாக இயங்கி வருகின்றன. நாம் எண்ணெய்யையும் பயன்படுத்துகிறோம். நிலக்கரி; போதாமல் இருக்கும்போது எண்ணெய்யை பயன்படுத்துகிறோம். அந்த இயந்திரங்களும், நிலக்கரியினாலும் எண்ணெயினாலும் இயக்கக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டவை.

[1984 மார்ச் 16

திரு. ரா. கிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த எண்ணூர், பேசின்பிரிட்ஜ், தூத்துக்குடி ஆகிய அனல் மின்நிலையங்களில் உற்பத்தித்திறன் எவ்வளவு, தற்போது உற்பத்தி ஆகக்கூடிய மின்சாரத்தின் அளவு எவ்வளவு. ஆகவே இதை முழுதிறனாக உயர்த்துவதற்கு அதை செப்பனிடுவதற்கு தேவைப்படும் தொகை எவ்வளவு, அது எவ்வளவு காலத்திற்குள் முடியும், என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரங்களைத் தர இயலும்.

திரு இல. பலராமன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புனல் மின் நிலையத்தின் மூலம் சந்தர்ப்பம் என்ற ஒரு நிலை தமிழகத்திலே இன்றைக்கு இருந்தாலும், இந்த ஆண்டு பெய்த மழையின் காரணமாகப் புனல் மின் நிலையங்களில் உற்பத்தி ஓரளவுக்கு அதிகமாக இருக்கும் என்ற நிலைமை இருக்கும்பொழுது இந்த நேரத்தில் அனல் மின் நிலையங்களைப் பழுது பார்ப்பதற்கான சந்தர்ப்பம் இது என்ற வகையில் இந்த ஆண்டில் பழுது பார்ப்பதற்கு வாரியத்திடம் திட்டம் ஏதேனும் இருக்கிறதா? அல்லது அரசு அதற்கான திட்டங்களைக் கொடுத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்து 41 கோடி ரூபாய் அளவிற்கு வடசென்னை அனல் மின் நிலையத்திற்குத் தொகை கேட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறினார்கள். அதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே 41.4 கோடி ரூபாய் மொத்த மதிப்பீடு. நாமும் சிலவற்றைச் செய்வோம், மத்திய அரசிடமிருந்தும் கேட்போம். மத்திய அரசின் உதவி எவ்வளவு தூரத்திற்கு இருக்கும் என்பது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் மழைக் காலம்; அந்த மழைக்காலத்தில் அனல் மின் நிலையங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்கிறோம். ஏனென்றால் அப்பொழுது புனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி அதிகமாக இருக்கும். டிசம்பர் மாதக் கடைசியிலிருந்து ஜூன் மாதம் வரையில் அனல் மின் நிலையங்கள் முழு உற்பத்தியைச் செய்யும் அளவிற்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அந்த வகையில் பராமரிப்பு வேலைகளைச் செய்கிறோம். தற்பொழுது பெய்த மழை, மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யவில்லை; சமவெளியில் அதாவது கடலோரமாகப் பெய்த காரணத்தால் நமக்கு அதனால் அதிக ஆதாயம் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள அனல் மின் நிலையங்களைப் பழுது பார்ப்பதிலே மின்சார வாரியம் அக்கறை எடுத்துக் கொண்டாலும், பல நேரங்களில் எப்பொழுது மக்களுக்கு அதி



1984 மார்ச் 16]

கமான மின்சாரம் தேவையோ அப்பொழுதுதான் எண்ணூரானாலும், தூத்துக்குடியானாலும் ரிப்பேர் என்ற நிலைமை ஏற்பட்டு வருகிறது. நாங்கள் அறிந்த வரையில், சில நேரங்களில் அந்த மின் நிலையங்கள் பழுதடைந்து விடுகின்ற கால கட்டங்களில் மேல் நாடுகளிலிருந்துதான் அதற்கான பொறியாளர்கள் வந்து பழுது பார்க்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பொறியாளர்களைத் தற்சமயம் நம்முடைய வாரியம் அனுப்பிவிட்டதாகவும், தேவையான நேரத்தில் அவர்கள் அடிக்கடி வராத சூழ்நிலையில் காலதாமதம் ஆவதாகவும் சொல்லப்படுகிறது. அது உண்மை என்றால், அந்த நிலைமைகளைப் போக்குவதற்காகச் சரியான பொறியாளர்களை செலவானாலும் இங்கேயே வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இத்தகைய குறைபாடுகள் தற்போது இல்லை என்பதை நான் சொன்னேன். எண்ணூர், பேசின் பிரிட்ஜைப் பற்றித்தான் நமக்குத் தொந்தரவே தவிர, தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் அல்ல. இந்த ஆண்டு சிறந்த முறையில் அது இயங்குவதால்தான் நாம் தாக்குப் பிடிக்க முடிகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல வெளிநாடுகளிலேயிருந்து கொண்டு வருவது என்பதல்ல, நம்முடைய திறமையான என்ஜினியர்களே வெளிநாட்டுக்குப் போய் விடுகிறார்கள், அதுதான் பிரச்னை. அவர்களைப் போகாமல் பார்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடியில் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாங்கள் ஒருமுறை தூத்துக்குடியைப் பார்க்கப் போன பொழுது மின்சாரப் பற்றாக்குறை இருந்த நேரம். அப்பொழுது அங்கே ரிப்பேராக இருந்த நிலைமையைப் பொறுத்தவரையில், சாமான்கள் எல்லாம் வரவேண்டும், அவைகள் வந்தால்தான் ரிப்பேர் ஆகும் என்று சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கே சொன்னார்கள். அப்பொழுதுகூடப் பொறியாளர்கள் சொன்ன தகவல் என்னவென்றால் தேவையான சில ஸ்பேர் பார்ட்ஸ் வெளிநாடுகளிலேயிருந்து வர வேண்டும். அவை காலத்தில் வர இயலவில்லை; நாங்கள் எழுதுகிறோம்; பிறகு அது சேர்மனுக்குப் போகிறது; சேர்மன் அரசாங்கத்திற்கு எழுதுகிறார்; இப்படி அதிலே டிலே ஆவதாகச் சொல்கிறார்கள். இதைப் போக்க வேண்டும். இன்னொரு விஷயம். நெய்வேலி அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில், சேர்மன் பர்சென்டேஜை வெளியிடுகிறார். நம்முடைய தூத்துக்குடி, எண்ணூர் போன்ற நிலையங்களில் மின் உற்பத்தித் திறனை அதிகமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 16

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்திய அரசும். நம்முடைய மாநில அரசும் எதிர்பாராத அளவிற்கு அது இப்பொழுது திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அதனால்தான் இப்பொழுது நிலக்கரி பற்றாக்குறையே ஏற்பட்டது. இல்லையென்றால் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. நீங்கள் போய்ப் பார்த்தபோது இருந்த குறைகளைச் சொன்னீர்கள்: பார்த்த நேரம் அப்படி......

(முற்பகல் 9.20)

திரு. எஸ். என். இராமசாமி: துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்ற இடம் கடற்கரைப் பகுதியாக இருப்பதால் அங்கே போடப்பட்டுள்ள லைன்கள் அத்தனையும் அலுமினியக் கம்பிகளாகப் போட்டிருப்பதால், அவை சரியான நிலைமையில் இல்லை. ஆகவே அங்கே போடக்கூடிய லைன்கள் அத்தனையும் செம்புக் கம்பியாகப் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, செம்புக் கம்பிகள் அங்கே இருப்பதற்கு என்ன உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே அது சாத்தியம் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம்

332—

*வினா எண் 9866—திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் தோட்டங்களினால் 1977-78, 1978-79, 197980-, 1980-81 ஆகிய வருடங்களில் அரசுக்குக் கிடைந்த லாபம் எவ்வளவு?

(ஆ) லாபம் ஈட்டிய பின்னரும் அரசு ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளிகளுக்கு அளிப்பதுபோல் போனஸ் வழங்காதிருக்கும் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ)

| ஆண்டு (1) | நிகர வருமானம். (2) (ரூபாய் இலட்சத்தில்) | இழப்பு. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1977-78 | 3.43 | .. |
| 1978-79 | 24.87 | .. |
| 1979-80 | .. | 34.52 |
| 1980-81 | 61.32 | .. |



1984 மார்ச் 16]

(ஆ) 1965ஆம் ஆண்டு போனஸ் சட்டம் அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்குப் பொருந்தாத காரணத்தினால், கன்னியாகுமரி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்கவில்லை.

திரு டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் தோட்டத்திலே ஏற்பட்ட இலாபத்தையும், இழப்பையும் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். ஆனால் மேலும் அதிகப்படியான இலாபத்தைப பெறுகின்ற வகையிலே அங்கே கிடைக்கின்ற பொருளைச் சரியாகப் பராமரிக்கப்படாத நிலைமை இருக்கின்றது.

ஏற்கெனவே 1983 ஆம் ஆண்டில் கடைசிச் சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது ஒரு தகவலை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்தேன். 100 டன்னுக்கு அதிகமான ஸ்க்ரேப் மழையிலும், வெய்யிலிலும் கிடந்து கிலோ பத்து ரூபாய் என்ற அளவுக்குச் செல்லவேண்டியது கிலோ 2 அல்லது 3 ரூபாய்க்குத்தான் செல்லுகின்ற ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை அந்த ஃபேக்டரியில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளைக் களைந்தால் இன்னும் அதிகப் படியான இலாபத்தை ஈட்ட முடியும். எனவே இதனைச் சரியாகப் பராமரிப்பதற்குரிய தகுந்த நடவடிக்கை எடுத்து அதிகப் படியான இலாபத்தைப் பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் தெரிவித்த அந்த கருத்தின் அடிப்படையில் ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டன; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற விவரங்களின்படி முழுமையாக அங்கே தவறினாலோ அல்லது கவனக்குறைவினாலோ நிகழவில்லை என்று தெரிகின்றது இருந்தாலும் அங்கே பல வசதிக் குறைவு காரணமாக, நிர்வாகத்தில் அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் காரணமாக பல குறைகள் இருக்கின்றன என்பது கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. அவைகளை எல்லாம் விரைவிலே நீக்கி நல முறையில் அந்த இரப்பர் தோட்டத்தினுடைய வியாபாரப் பணியையும், தொழிற்சாலையையும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருடா வருடம் இந்தத் தோட்டங்களிலிருந்து இலாபம் கிடைத்து வருகின்றது என்றும் ஆனால் 1965 ஆம் ஆண்டின் போனஸ் சட்டப்படி போனஸ் கொடுக்க இடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். 1982—83ல் போனஸ் என்ற அந்த கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதன்படி அங்கே போனஸ் கொடுக்க இயலாததன் காரணத்தால் அந்த இரப்பர் தோட்டங்களை ஒரு வாரியமாக அமைத்து அவர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் அந்த வாரியம் அமைக்கவில்லை. அது எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். ஒரே நேரத்தில் நிறையக் கேள்விகள் போட வேண்டாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1982-83லே எக்ஸ்-க்ரேஷியா கொடுக்கப்பட்டதுபோல் 1983-84—லேயும் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், துணைத் தலைவர் அவர்களே, இங்கே வருமானம் வருகின்றது, ஆகவே ஏன் போனஸ் தரவில்லை என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். நான் சில வருடங்களில் வருமானத்தைச் சொல்லி இருக்கிறேன். நட்டத்தையும் சொல்லி இருக்கிறேன். பொதுவாக இந்த இரப்பர் தோட்டம் 1961-லே தொடங்கியதற்குப் பிறகு சுமார் 15 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் பதினொன்றே முக்கால் கோடி ரூபாய் தான் வருவாய் வந்திருக்கின்றது. ஆகவே நிகர வருமானம் என்பது அந்தந்த ஆண்டிலே நம்முடைய முதலீட்டைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தருகின்ற கணக்காகும். இருந்தாலும் தொழிலாளர்களுக்கு தரப்படவேண்டிய அடிப்படை உரிமைப்படி நம் போனஸ் தருவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருந்ததைத் தான் கடந்த ஆண்டிலே தெரிவித்தோம்.

இங்கே அரசாங்கம் ஒப்புக்கொண்டு போனஸ் வழங்கியது என்று சொன்னார்கள். அரசாங்கம் போனஸ் தருவதாக ஒப்புக்கொள்ளவில்லை. எக்ஸ் க்ரேஷியா என்ற அடிப்படையில் தான் ஒரு மாத ஊதியம் தரலாம் என்று முடிவு எடுத்து அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. இப்போது அந்த ரப்பர் தோட்ட, நிறுவனத்தை ஒரு கழகமாக அமைப்பதற்கு ஆணை பிறப்பித்து அதற்கான அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பெற்று எந்த அடிப்படையில் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற விதிகளையெல்லாம் அரசாங்கம் இப்போது ஆணையாகப் பிறப்பித்திருக்கிறது. கழகம் அமைப்பதற்கான அந்தப் பணி நடைபெற்றுவருகிறது. 1984-85ல் எக்ஸ் க்ரேஷியாவாக கொடுக்க வேண்டுமா அல்லது போனஸ் கொடுப்பதா என்பதை அங்கு அமைய இருக்கிற அந்த ரப்பர் தோட்டக் கழகம் முடிவு செய்யும்

## திருவொற்றியூர் தியாகராயர் சுவாமிகள் ஆலயம்

333—

* வினா எண் 15880—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்; மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருவொற்றியூர் தியாகராயர் சுவாமிகள் ஆலயத்தை அரசு நியமித்த அறங்காவலர் வசம் ஒப்படைக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?





மாண்புமிகு திரு ஆர்.எம். வீரப்பன், (அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி ஆலயத்தின் பரம்பரை அறங்காவலர் திரு. டி. கல்யாணசுந்தரம் செய்த பல்வேறு ஒழுங்கீனங்கள் சம்பந்தமாக இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை துணை ஆணையரால் ஒழுங்கு நடவடிக்கை எம்.பி.எண் 2/1975ல் மேற்கொள்ளப்பட்டு, சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நிலுவையில் இருக்கும்பொழுது, திரு. டி. கல்யாணசுந்தரம் தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டு, அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலயத்தின் செயல் அலுவலர் தக்காராக நியமிக்கப்பட்டார். திரு. டி. கல்யாணசுந்தரம், எம். பி. எண் 2/75-க்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு எண் 883/75ஐ தாக்கல் செய்து, துணை ஆணையரின் உத்தரவின் மேல் தடை வாங்கிக் கொண்டார். சென்னை உயர் நீதி மன்றம் 1959ம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டப்பிரிவு 114-ன் கீழ் சீராய்வு மனுவினை அரசுக்கு சமர்ப்பித்து அதன் மூலம் தீர்வுகாணாமல் ரிட் மனு எண் 883/75 விசாரணைக்கு எடுத்துச் கொள்ளப்படமாட்டாது என்று கூறி 18-7-1977ல் ரிட் மனுவை தள்ளுபடி செய்துவிட்டது. இதற்கு எதிராக பரம்பரை அறங்காவலர் எந்த மேல்முறையீடும் செய்யாமல் அரசுக்கு சீராய்வு மனு செய்துக்கொண்டார். அந்த முறையீடு அரசால் நிராகரிக்கப்பட்டது.

திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி ஆலய வருமானம் ரூ. 1 இலட்சத்திற்கு மேல் உள்ளதால், 1959ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டப்பிரிவு 47 (2) மற்று 53 (1) (ஏ) பிரிவின்படி பரம்பரை அறங்காவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணையை தொடர்ந்து நடத்தும் அதிகாரம் அரசுக்குத்தான் உண்டு. எனவே திரு கல்யாணசுந்தரத்தின் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் முடிவு எடுக்கும் முன், சென்னை துணை ஆணையர் எம்.பி.எண் 2/75ல் பரம்பரை அறங்காவலரை பதவி நீக்கம் செய்ததற்கு அரசு பின் ஏற்பு அளித்தது.

இதற்கிடையில் பரம்பரை அறங்காவலர் சென்னை உயர் நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் எண் 10972/81 மற்றும் 10973/81 தாக்கல் செய்து அவைகளை உயர்நீதி மன்றம் ஏற்று உரிய அதிகாரி, அதாவது, அரசு, வடபழனியில் உள்ள அருள்மிகு வடபழனி ஆண்டவர் ஆலய செயல் அலுவலர் திரு. எஸ் கோலப்பனை திருவொற்றியூர் அருள்மிகு தியாகராஜசுவாமி ஆலயத்தின் தக்காராக நியமிக்காத வரையில் அவர் தக்காராக செயலாற்ற முடியாதென 7-1-1982ல் உத்தரவிட்டது. எனவே அரசு தனது ஆணை எண் 41 வணிகவரி மற்றும் அறநிலையத் துறை நாள் 8–1-1982ல் வடபழனி ஆண்டவர் ஆலயத்தின் செயல் அலுவலர் திரு கோலப்பனை அருள்மிகு தியாகராஜசுவாமி ஆலயத்தின் பொறுப்புகளையும், பணிகளையும் செய்வதற்கு தக்காராக நியமித்தது. 8–1-1982 தேதிய அரசு ஆணையை எதிர்த்து மீண்டும் திரு கல்யாணசுந்தரம், சென்னை

[1984 மார்ச் 16

(முற்பகல் 9-30)

திற்குச் சென்று, 1975 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கு 1980, 198 ஆம் ஆண்டுகளிலே நடவடிக்கை எடுப்பது தவறு என்று வாதித்தார். அதை உயர்நீதி மன்றமும் ஏற்றுக்கொண்டு. அதுதவறு என்று தீர்ப்பு அளித்திருக்கிறது. அதனாலேதான், நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்பவும், பரம்பரை அறங்காவலர் நிலைக்கு ஏற்பவும இப்போது புதியதாக அவர் செய்திருக்கிற எல்லா தவறுகளையும், ஊழல்களையும் கண்டுபிடித்து புதியதாக அவர்மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அவரைத் தற்காலிகமாக இந்தப் பதவியிலிருந்து நீக்கம் செய்து வைப்பதற்கும் ஆணையாளர் அவர்களிடமிருந்து அரசுக்கு ஆலோசனை வந்திருக்கிறது. அரசு இதைத் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

### சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாயத் தோட்டக் கலைக் கழகம்

334—

* வினா எண் 19021—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாயத் தோட்டக்கலைக் கழகத்தை சுற்றுலாப் பூங்காவாக மாற்றியமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம் விரப்பன்; (அ) ஆம்.

(ஆ) சென்னை தேனாம்பேட்டையிலுள்ள விவசாய தோட்டக்கலை கழகத்திடம் கொடுக்கப்பட்டுள்ள 9 i . 6 கிரவுண்டு நிலத்தைத் திரும்ப பெறுவதற்கான நடவடிக்கை வருவாய்த் துறையினரால் எடுக்கப்பட்டுள்ளன. அதனை திரும்பப்பெற்றதும் சுற்றுலா பயணிகளுக்கு பயன்படும் வகையில் அதனை சுற்றுலாத் துறைக்கு மாற்ற தகுந்த நடவடிக்கை எடுப்பது பற்றி பிறகு பரிசீலிக்கப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை எடுத்தபிறகு, அந்த நிலம் சுற்றுலாத் துறைக்கு மாற்றப்பட்டு. அது சுற்றுலா மையமாக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி எடுப்பதற்கு எவ்வளவு காலமாகும் ? அது சுற்றுலா மையமாக்கப்பட்டு, அதிலே செய்யப்பட இருக்கின்ற அபிவிருத்திப் பணிகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?





மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அது நீண்ட காலத்திற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்ட ஒரு நிலம். அதை எடுப்பதிலே எவ்வளவு பெரிய சிக்கல்கள் வருமென்பதை இப்போது சொல்ல முடியாது. அரசிடமிருநது இந்தக் கருத்து அறிவிக்கப்பட்டபோது, அந்தக் கருத்தை அரசு ரத்து செய்துவிட வேண்டும். அதை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார். ஆகவே, வருவாய்த் துறையின் நடவடிக்கை நிறைவேற்றப் பெற்று, அரசுக்கு அந்த நிலம் திரும்பப் பெறப்பட்டதற்குப் பிறகு, திரும்ப வருவாய்த்துறைக்கு அந்த நிலம் வந்ததற்கு பிறகு அந்த நிலத்தை சுற்றுலாத் துறைக்கு மாற்றியதற்குப் பிறகுதான் சுற்றுலாத் துறையின் கைக்கு அந்த நிலம் வந்ததற்குப் பிறகுதான், அதிலே என்ன செய்ய முடியும் என்பதை பரிசீலிக்க இயலும். குழந்தையே பிறக்கவில்லை என்று சொல்வதைவிட, கருவே உருவாகவில்லை என்று சூழ்நிலை இருக்கிறபோது, என்ன பெயரிடலாம் என்று இப்போது சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கருவே உருவாகவில்லை என்றாலும், திருமணம் ஆகியுள்ளதாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி. அந்த நிலம் எவ்வளவு காலத்திற்கு அவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த குத்தகைக் காலம் முற்றுப் பெற்று விட்டதா? வருவாய்த் துறை அந்த இடத்தைத் திரும்பத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திருமணம் நடந்துவிட்டது என்கிறார்கள். திருமணப் பேச்சு நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. திருமணம் இன்னும் நடைபெறவில்லை. ஆனால், எவ்வளவு காலத்திற்கு இந்தக் குத்தகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனாலும், ஒரு நீண்டகால குத்தகைக்கு வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தில் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்கின்ற அளவில் இன்றைக்கு விவரம் இருக்கிறது.

### பெருஞ்சாணிப் பகுதி ரப்பர் தோட்டத்தின் கீழுள்ள தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து.

335—

(வினா எண் 20028)—திரு டி. மணி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–82ல் பெருஞ்சாணியிலிருக்கக் கூடிய ரப்பர் தோட்டத்தின் கீழுள்ள ரப்பர் உலர வைக்கும் (மோக் கோஸ்) ரப்பர் தொழிற்சாலையில் தீப்பிடித்ததால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு?

[1984 மார்ச் 16

(ஆ) எத்தனை டன் ரப்பர் தீப்பிடித்தது?

(இ) இதற்குக் காரணமாயிருந்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ஆர். எம். விரப்பன்: (அ) தீ விபத்தில் அரசுக்கு ரூ. 2,00,056.03 நட்டம் ஏற்பட்டது. இந்த நட்டத்தை ஈடு செய்வதற்காக திருவாளர்கள் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியிடமிருந்து ரூ. 1,01,918.94 கிடைத்துள்ளது.

(ஆ) 3324.825 கிலோ கிராம் எடையுள்ள ரப்பர் ஷீட்டுகள் தீயில் எரிந்தன.

(இ) இத் தீ விபத்திற்கு யாரும் தனிப்பட்ட முறையில் பொறுப்பல்ல.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பாக்டரியின் திறப்பு விழாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். அந்த நேரத்தில் நான் சில குறைபாடுகள் நடந்திருப்பதை பற்றிய தகவலைச் சொன்னேன், மாண்புமிகு அமைச்சரவர்கள் மிக வருத்தத்தோடு, சில விசாரணைகள் நடத்தப் போவதாகச் சொன்னார்கள். இந்த தீ விபத்திற்குக் காரணம், அங்குள்ள 'ஸ்மோக் அவுசி'-ன் கட்டுமான பணியின் குறைவுதான். இந்த 'ஸ்மோக் அவுசி'-ல் விறகைப் போட்டு எரிக்க வேண்டுமென்ற விதிமுறையிருக்கிறது. இதற்கு மாறாக சுள்ளியைப் போட்டு எரித்ததால், அதன் தீக்கொழுந்து வெளியே வந்து, ரப்பர் உருகி, தீப் பிடிப்பதற்குக் காரணமாக அமைந்தது என்கிற உண்மை இருக்க, அதற்குப் பொறுப்பானவர்கள் மேல் என்ன நடவடிக்கையை அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை திறப்பு விழா நடைபெற்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சில கருத்துகளை நேரிலே, என்னிடத்திலே தெரிவித்தார்கள். அதையொட்டி அந்த அதிகாரிகளிடத்திலே அப்பொழுது விவாதித்தேன். அதற்குப் பிறகும் விவாதிக்கப் பெற்றிருக்கிறது. அவர்களுக்குள்ள சங்கடங்களை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதைக் கட்டுவதற்காக அமைக்கப்பட்ட நேரத்திலேயே சில தவறுகள் அல்லது எதிர்பாராமல் அந்தக் கட்டுமானம் அமைக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் கூட, தெரிவிக்கப்பட்டது. அதையெல்லாம் சீர்திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இந்தத் தீப்பிடித்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற காரணம் அல்ல என்று இதற்காக, ஆய்வு செய்வதற்கு, அமைக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கையில் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், இப்படிப்பட்ட அதிகாரி



1984 மார்ச் 16]

களுடைய கவனமின்மையால் அல்லது பொறுப்பற்ற தன்மையினாலே இப்படிப்பட்ட நஷ்டம், இழப்பு, அரசுக்கு ஏற்படுகிறதா, பொது மக்களுக்கு ஏற்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்கு குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் நெல்லை காவல் துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல், நெல்லை வட்ட வனப் பாதுகாவலர் ஆகியோர் அடங்கிய ஒரு உயர்மட்டக் குழுவே முழுமையாக எல்லா அடிப்படைகளையும் ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டுமென்று அரசு அந்தக் குழுவை நியமித்தது, அவர்கள் தீவிரமாக ஆய்வு செய்து, தெரிவித்திருக்கிற அந்த அறிக்கையிலே காற்றினால் உள்ளே மரங்கள் வெடித்து, அதன் மூலமாக புகை அறைக்குள் தீ சென்று இருக்கக்கூடும். வெளியிலே உள்ள காற்று அதிகமாக இருந்ததனால் அடுப்புத் திறந்திருக்குமானால் அந்தக் காற்று அடித்து தீ புகை அறைக்குள் சென்றிருக்கக் கூடும். தற்செயலாகப் புகைஅறைக்குள் உலர்த்தப்பட்ட ரப்பர் சீட்டுகள் மூங்கில் சட்டத்திலேயிருந்து கீழே விழுந்து தீ பரவி இருக்கக் கூடும் என்கிற இந்த 3 அடிப்படை காரணங்களை அந்தக் குழு நமக்கு அறிவித்து இருக்கிறது. ஆகவே, எப்படி காரணங்கள் இருந்தாலும் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்காமல் இருப்பதற்கு மிகச் சிறந்த பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அறிவித்து இருக்கிறோம், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. டி. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விசாரணைக் குழு அறிக்கை பற்றியும் தவறு நடக்கவில்லையென்றும் தகவலைத் தந்திருக்கிறார்கள். தீ பிடித்த அடுத்த நாளே நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்க்கும்போது ஏற்கனவே அந்த ஸ்மோக் ஹவுசிலே ஏற்பட்டுள்ள ஒரு வெடிப்பை அடைக்க களிமண்ணை அங்கே சேமித்து வைத்திருக்கிறார்கள். அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் இப்படி வெடிப்பு இருக்கிறது; எனவே அதற்குள்ளே ரப்பர் உலரவைக்கக் கூடாது என்று அதிகாரிகளிடத்திலே சொல்லியும் சுள்ளியைப் போட்டு எரிவித்ததன் விளைவாகத்தான் எரியும்போது இந்தத் தீக் கொழுந்து அந்த வெடிப்பின் வழியாக வெளியேறியது. அப்படித்தான் அந்த நிகழ்ச்சி நடந்தது என்பது உண்மை. இதற்கு மாறாக அரசாங்க அதிகாரிகளைக் குறைகூறுவதற்காக நான் சொல்லவில்லை ஒரு தவறான தகவலைச் சேகரித்துத் தருவது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்வது வேதனைக்குரிய விஷயமாகும். எனவே, இனிமேலாவது, பாதிக்காமல் இருப்பதற்கு முன்னோடியாக இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்திருந்தால் அப்பொழுது அதிகாரிகளுக்குப் பயம் இருக்கும். ஆகவே, இன்றையகாலகட்டத்தில் விஞ்ஞான ரீதியாக ஸ்மோக் ஹவுஸ்கள் எப்படி அமைக்க வேண்டுமென்று புதிய முறைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த முறையில் இனிமேலாவது, இப்படி நட்டங்கள் ஏற்படாமல் இந்த ஸ்மோக் ஹவுசைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

[1984 மார்ச் 16

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியினுடைய அடிப்படை கருத்து, இதற்குத் தனிப்பட்ட அதிகாரிகள், தனிப்பட்ட நபர் பொறுப்பா, என்பதுதான். அப்படி தனியாக ஒரு அதிகாரியின் மீது இந்தப் பொறுப்பைச் சுமத்த முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறுப்பிடுகிறபடி அந்தக் கட்டிடத்திலே வெடிப்பு இருந்தால், அந்தக் கட்டிடம் கட்டுகிறபொழுது ஏற்பட்ட குறைபாடுகளாக இருக்கலாம், அல்லது வேறு சில தவறுகளினால் இருக்கலாம். வெடிப்பு ஏற்பட்டு, அந்த வெடிப்பின் வழியாக காற்று உள்ளே போயிருந்திருக்கலாம். அல்லது வேறு குறைகள் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, எப்படியோ ஒரு சூழ்நிலை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதுதான் எடுக்கப்பட்டிருக்கின்ற முடிவு. ஆகவே, அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு வேறு யாரையோ காப்பாற்றுவதற்காக, ஒரு தவறான அறிக்கையை அரசுக்கு அளித்து இருக்கிறது என்கிற உணர்வை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

தனியாக ஒரு குறிப்பிட்ட அதிகாரி மீது இதற்கு பொறுப்பு சுமத்த முடியாது. ஆகவே அந்த குழு இந்த 'ஸ்மோக் ஹவுஸ்' என்று அழைக்கப்படுகிற கட்டிடத்தை எப்படியெல்லாம் கட்ட வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறது. அப்படிப்பட்ட முறையில் எதிர்காலத்தில் இது திருத்தப்பட வேண்டும். இதற்கான முறையில் இதை அமைக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எந்த அதிகாரியையும் காப்பாற்ற வேண்டும் என்பதல்ல. அதற்காக மூன்று வெவ்வேறு துறைகளிலிருந்து அதிகாரிகள் போடப்பட்டார்கள். வனத்துறை உயர் அதிகாரியை அனுப்பினால் ஒருவேளை அவர்களுக்கு கீழே இருக்கிற அதிகாரிகளுக்கு சாதகமாக சொல்வார்களோ என்ற உணர்வு அரசாங்கத்திற்கு வர, ஒருவேளை தயங்கினாலும், மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்களுக்கு இயற்கையாக வந்துவிடுமோ என்ற அச்சம் எங்களுக்கு உண்டு ஆகவே காவல்துறை துணைத்தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவர், கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் என்ற மூன்று துறைகளின் உயர் அதிகாரிகளை பரிசீலிக்கச் சொன்னோம். ஆகவே எப்படியோ தவறு நடந்திருக்கிறது. எங்கோ வைத்த நெருப்பு விடு வந்து சேர்ந்துவிட்டது என்பது முடிவு. ஆகவே தனிப்பட்ட அதிகாரி இதற்குக் காரணமல்ல என்பதுதான் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிற கருத்து.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மினி காகித ஆலை ஆரம்பிக்கும் திட்டம்.

336—(*வினா எண். 17284) திரு. சி. கணேசன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் மினி காகித ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



1984 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில், அதன் வேலை எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) மினி காகித ஆலை துவங்கும் சாத்தியக்கூறுகள் பல மாற்று வழிகளில் ஆராயப்பட்டு வருகின்றன. சிறந்த சாத்தியக் கூறுகள் தேர்ந்தெடுப்பது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்படும்.

திரு. சி. கணேசன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் மினி காகித ஆலை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை செய்து வருவதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த காகித ஆலை எந்த தாலுக்காவில், எந்த இடத்தில் அமைக்கப் படவிருக்கிறது? அப்படி அமைக்கப்படுவதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படவிருக்கிறது? எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பை தருகிற அளவில் அந்த ஆலை அமையும் என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த சிறு காகித ஆலையைப் பொறுத்த வரையிலும், கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி 4,500 டன்கள் காகிதத்தை தயாரிக்கக்கூடிய அளவில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அருகில் அமைக்க வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு அது ஆயப்பட்டது. ஆனால் வெறுமனே 4,500 டன்கள் மட்டுமே உற்பத்தி செய்கிற காகித ஆலை இலாபகரமாக இருக்காது என்று ஆய்விலே தெரிய வந்தது. அதன் காரணமாக, இதை இலாபகரமாகச் செய்ய என்ன செய்யலாம் என்று அரசு ஆய்ந்து, மானிபோல்டிங் டிஸ்யூ பேப்பர் என்று சொல்லக்கூடிய காகிதத்தை தயார் செய்கிறபோது இலாபம் கிடைக்கலாம் என்று கருதப்பட்டது. Unless the tonnage is increased, it will not be economically viable'. என ஆய்வு கூறியிருக்கிற காரணத்தால் மேலும் ஆய்ந்து எந்த அளவிலே அதை ஆரம்பித்தால் இலாபகரமாக இருக்குமென்று அறிந்து அந்த வகையிலே அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் மூலம் கிடைத்த லாபம்.

337—

* (வினா எண். 17511)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிமெண்ட் கார்ப்பரேஷனுக்கு வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்து விற்பனை செய்ததின் மூலம் கிடைத்த லாபம் எவ்வளவு ?

[1984 மார்ச் 16

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், 1982–83 ஆம் ஆண்டு மத்திய அரசின் இறக்குமதி கொள்கையின் அடிப்படையில் நேரடியாக சிமெண்ட் இறக்குமதி செய்து விற்பனை செய்தவகையில் கிடைத்த இலாபம்.

| வரிசை எண். | ஆண்டு. | | தொகை (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|
| 1. | 1982–83 | | 369.13 |
| 2. | 1983–84 (நடப்பு ஆண்டு— உத்தேசமாக) | | 400.00 |
| | | ஒட்டு மொத்தமாக | 769.13 லட்சம். |

திரு. செ. செம்மலை: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த விற்பனையின் மூலம் 769.13 லட்சம் ஒட்டு மொத்தமாக கார்ப்பரேஷனுக்கு இலாபம் வந்திருப்பதாகச் சொன்னார்கள். இந்த விற்பனையின் மூலம் கார்ப்பரேஷனுக்கு இலாபம் வருகிறது என்ற அடிப்படையிலும், கொரியன்சிமெண்ட் போன்ற சிமெண்டிற்கு பொதுமக்களிடத்தில் அதிக வரவேற்பு இருக்கிறது என்ற அடிப்படையிலும், மீண்டும் இப்படிப்பட்ட இறக்குமதியைச் செய்ய அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் இறக்குமதி செய்வது தமிழ்நாட்டில் அல்லது இந்திய நாட்டில் ஒட்டுமொத்தமாக பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறபோது எந்த அளவிற்கு அதை இறக்குமதி செய்யலாம், எங்கெங்கே இருந்து இறக்குமதி செய்யலாம் என்பதை எல்லாம் மத்திய அரசு முடிவு செய்கிறது. தற்போது மத்திய அரசின் முடிவின்படி இறக்குமதி அந்த நாடுகளில் இருந்து செய்யவேண்டாம் என்று முடிவு செய்து இருக்கிறது. எனவே தற்போது அது குறித்து அரசின் பரிசீலனையில் எதுவும் இல்லை.

வேதாரண்யம் உப்பளப் பகுதியைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள குழு.

338—

(*வினா எண். 19565)—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் உப்பளப் பகுதியைப் பயன்படுத்துவது பற்றி ஏதேனும் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) வேதாரண்யம் பகுதி உப்பளத் தொழில் விரிவாக்கத்தை ஏற்படுத்தி விரைவில் தொழில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



1984 மார்ச் 16]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசு வேதாரண்யம் சதுப்பு நிலப் பரப்பினை அதன் இயற்கை தன்மை கெடாதவாறு உபயோகிக்கும் பொருட்டு திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப. தலைமையில் எட்டு உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்துள்ளது.

(இ) வேதாரண்யம் சதுப்பு நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் (Bombay Natural History Society) ஒரு அறிக்கையினை தந்துள்ளது. இவ்வறிக்கையின்படி அதிராமபட்டினத்திற்கும், முத்துப்பேட்டைக்கும் இடையிலுள்ள 11,652 ஏக்கர்களும், வடக்கில் நீண்ட நிலப்பரப்பு பகுதியில் 22,138 ஏக்கராவும் அதாவது வடக்கு முல்லிப்பள்ளம் ஆற்றுக்கால் பகுதியும், சிறுத்தலைக்காடு ஆற்றுப் பகுதியும் உப்பு உற்பத்திக்கு அப்பாற்பட்ட நிலமாக கருதப்பட வேண்டியுள்ளது. அதிராமபட்டினத்திற்கும், முத்துப்பேட்டைக்கும் இடையே உள்ள பகுதியில்தான் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பளம் அமைந்துள்ளது. குழுவின் தலைவரான திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப. அவர்களும் பம்பாய் இயற்கை வரலாற்று சங்கத்திற்காக அறிக்கை தயாரித்த திரு. நீலகண்டன் அவர்களும் கூட்டாக இந்த இடங்களைப் பார்வையிட்ட பின் வடக்கு பகுதியில் உள்ள முல்லிப்பள்ளம், சிறுதலைக்காடு ஆற்றுக்கால் பகுதியும் உப்புத் தொழிற்சாலைகள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தனர். இல்லையெனில், இது பறவைகளின் இயற்கை இருப்பிடங்களைப் பாதிக்கும். வடக்கிலிருந்து செல்லும் இயற்கை நீரோட்டத்திற்குத் தடை விளைவிப்பதால் மற்ற இடங்களிலுள்ள உயிரின வாழ்க்கைச் சூழ்நிலைப் பாதித்து பறவைகளின் ஒருங்கிணைப்பிற்கு பாதிப்பு உண்டாகும் எனக் கூறியுள்ளது. இக் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

தமிழகத்திலுள்ள நீதித்துறை மாவட்டங்கள்.

339—

(*வினா எண். 21736)—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை நீதித்துறை மாவட்டங்கள் (Judicial Districts) உள்ளன?

(ஆ) அவைகளை அதிகரிக்கும் உத்தேசமுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தமிழகத்தில் 17 நீதித்துறை மாவட்டங்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நீதித்துறை மாவட்டங்களை அதிகரிக்கும் யோசனை இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாவட்டங்களில் இப்படி அதிகரிக்கும் யோசனையை அரசு நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் நீலகிரி மாவட்டத்திற்கு என தனியாக ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்து இருக்கிறது, நெல்லை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது விரைவில் முடிவுக்கு வரும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக மாவட்டங்களின் பிரிவினை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தப் புதிய மாவட்டங்களை பிரிக்கிறபோது, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு நீதித்துறை மாவட்டத்தையும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நலன் கருதி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் இருப்பதுதான் உகந்தது. அந்த அடிப்படையில் அரசு அந்தக் கருத்தை ஆராய்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் என்பதை நடைமுறைக்கு படிப்படியாகக் கொண்டு வரும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தின் செசன்ஸ் கோர்ட் மதுரையில் இருக்கிறது அதன் காரணமாக நாங்கள் எல்லாம் மதுரைக்குப் போகவேண்டியிருக்கிறது, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று பிரிவாகப் பிரிக்க அரசு அறிவித்து இருப்பதால், (குறுக்கீடு) ஸ்ரீவில்லிப்புத்தூரில் நல்ல கட்டிட வசதி இருப்பதால், அங்கே அந்த ஜில்லாக் கோர்ட்டை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற மாவட்டமான நீலகிரி மாவட்டத்திற்கு நீதிமன்றம் இல்லை என்ற குறை இருப்பதால், அரசு தற்போது முடிவு எடுத்து நீலகிரி மாவட்டத்திற்கு முதற்கண் தனியாக மாவட்ட நீதிமன்றம் அமைப்பது என்பதை அந்த மாவட்ட மக்களின் நலன் கருதி எடுத்து இருக்கிறது. புதிதாக மாவட்டங்களை ஏற்படுத்துகிற போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.



திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: துணைத் தலைவர் அவர்களே, கரூரில் ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட் அமையவேண்டும் என்று நீண்ட நாட்களாக பொதுமக்களும், வழக்கறிஞர்களும் கோரிக்கை வைத்து இருப்பதாலும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாலும் அங்கே ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, வழக்குரைஞர்கள் ஒரு கோரிக்கையை அரசுக்குத் தந்துள்ளார்கள்; உயர்நீதிமன்றத்திற்கும் தந்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றம் அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பதில் அரசுக்கு வந்தபிறகு அந்த பரிந்துரையின் அடிப்படையில் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை: துணைத் தலைவரவர்களே, மாவட்ட நீதிமன்றம் ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைப்பதுபற்றி அறிவித்தார்கள். அந்த மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடியில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படவேண்டுமென்பது மக்கள் கோரிக்கையும் வழக்குரைஞர்கள் கோரிக்கையும் ஆகும். உயர்நீதிமன்றம் அதுபற்றி ஆராய்ந்து வருகிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை வந்த பின்னால் அரசு அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 3 டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காரணம் அவ்வளவு வேலை அங்கே இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவில் நீதிமன்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்கள் நிறைந்திருக்கிற நீலகிரி மாவட்டத்திற்கு முன்னுரிமை; மக்கள் கோரிக்கை அதிகமாக வந்துள்ள நெல்லை மாவட்டத்திற்கு இரண்டாவது உரிமை தர அரசு ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறது. மாவட்ட நீதிமன்றம் இல்லாத நீலகிரி மாவட்டத்திற்கு தனி மாவட்ட நீதிமன்றம் அமைந்தவுடன் நெல்லை மாவட்ட நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தூத்துக்குடியில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைப்பது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1984 மார்ச் 16

## தமிழகத்திலுள்ள மருத்துவ கல்லூரிகளில் மைய அரசுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள்

*340 (வினா எண். 13498) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள மருத்துவ கல்லூரிகளில் தனக்கு இடம் ஒதுக்க வேண்டும் என்று மைய அரசு மாநில அரசைக் கோரியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்போதுள்ள ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரிக்க வேண்டுமெனக் கோரியது. ஆனால் அக் கோரிக்கையை ஏற்க இயலவில்லை என மைய அரசுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவரவர்களே, தற்போதுள்ள மருத்துவக் கல்லூரிகளில் இடங்களைஅதிகரிக்கும்படி மத்திய அரசு சொல்லியும் நம்முடைய மாநில அரசு மறுத்துள்ள காரணம் என்ன? இன்றைய சூழ்நிலையில் நமக்கு இன்னும் அதிகமான இடங்கள் இருந்தால்தான் தற்போது வரக்கூடிய மாணவர்களுக்கு ஓரளவுக்கு சீர் செய்ய முடியும்.? எனவே, அரசின் முடிவை மறுபரிசீலனை செய்து, இடங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லிய பதிலை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். மத்திய அரசு நம்மிடம் அதிகமான இடங்களை, அதாவது அவர்களுடைய கோட்டாவை ஒதுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நாம் முடியாது என்று சொல்கிறோம். அது குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என்று எதிர்பார்த்தேன். மத்திய அரசு கோட்டாவுக்கு நம்பர் ஆஃப் சீட்ஸ் அதிகமாக வேண்டுமென்று கேட்கிறார்கள். நாம் முடியாது என்று சொல்கிறோம். மருத்துவக் கல்லூரிகளில் நம்பர் ஆப்சீட்ஸ் அதிகப்படுத்த வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவையில்லை; மெடிக்கல் கவுன்சில் அனுமதி வேண்டும். மத்திய அரசிலிருந்து, அவர்களுக்கு பல கமிட்மெண்ட்ஸ் இருக்கிறது. இன்டர்நேஷனல் கமிட்மென்ட்ஸ் எல்லாம் இருக்கிறது. அதனால் கோட்டாவை அதிகமாக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். முன்னால் அந்த கோட்டா 9 ஆக இருந்ததை நாம் 15 ஆக அதிகரித்தோம். மீண்டும் மீண்டும் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று இரண்டாண்டுகளாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள். திட்டவட்டமாக முடியாது என்று நாம் சொல்லியிருக்கிறோம்.



1984 மார்ச் 16]

## பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*341 (வினா எண். 13585) திரு து. இராசரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுததுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய பகுதியில் ஆரம்ப சுகாதாா நிலையம் இல்லாமல் இருந்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், புதிதாக ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(ஈ) எந்த இடத்தில் ஆரம்பிக்க உத்தேசம்?

மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே : (அ.) ஆவடியில் ஏற்கெனவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. (ஆ), (இ), மற்றும்(ஈ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுப்படுத்தும் திட்டம்.

*342 வினா எண் 19438 திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

திரு. பி. துரைராஜ்: துணைத் தலைவரவர்களே, சங்கரன் கோவில் வட்டாரம் மிகவும் பிற்பட்ட மக்கள்' ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைய வாழும் பகுதியாகும். எனவே அங்கே இருக்கிற அரசு மருத்துவமனையில் ஹோமியோபதி மருத்துவப்பிரிவு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே துணைத் தலைவரவர்ளே' அதுபற்றி தற்போது எந்தவிதமான குறிப்பும் இல்லை.

[1983 மார்ச் 16

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சங்கரன் கோவிலில் தொற்று நோய்ப்பிரிவு என்று ஒரு கட்டிடம் இருந்து செயல்படவேயில்லை. அங்கு எக்ஸ்ரே பிரிவில் பிலிம்கள் இல்லாமலே எக்ஸ்ரே எடுக்க சிரமப்படுவதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்ல, ஆப்பரேஷன் செய்வதுகூட சங்கரன்கோவிலில் போதுமான அளவிற்கு செயல்படவில்லை என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஆகவே சங்கரன் கோவிலின் சுற்று வட்டாரங்களில் ஏழை எளிய மக்கள் சாதாரண மக்கள் இருப்பதால், அதற்கான விசேஷ ஏற்பாடாக முன்னுரிமை கொடுத்து, அதை நடத்துவதற்காக மறு பரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேஜர் ஆப்பரேஷன் அங்கு செய்வது 45, ஒரு ஆண்டுக்கு மைனர் ஆப்பரேஷன் 110- ஆக அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கின்றன. எக்ஸ்ரே பிரிவும் அங்கு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஆறு மாதத்திற்கு முன்பு பிலிம்கள் இல்லை. ஒட்டு மொத்தமாக உதகையிலே நடைபெற்ற ஸ்ட்ரைக்கைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த ஸ்ட்ரைக் எப்படி எல்லாம் நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அதன் விளைவாக நமக்கு பிலிம்கள் கிடைக்கவில்லை. இப்போது பிரச்சினை இல்லை.

கீரனூர் அரசு மருத்துவ மனையை விரிவுப்படுத்தும் திட்டம்

*343 (வினா எண். 19887) திரு. த. மாரிமுத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

குளத்தூர் தொகுதியில் உள்ள கீரனூர் அரசு மருத்துவ மனையைக் கூடுதல் படுக்கை வசதியுடன் விரிவுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே; இல்லை.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கீரனூர் நகரத்தில் கூடுதல் படுக்கை வசதி இல்லை என்று சொன்னார்கள். இப்போது அரசு மருத்துவ மனை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதே நிலையில் தான் இருக்கிறது. ஆனால் மக்கட்தொகை எந்த அளவிற்கு அதிகரித்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். கீரனூர் தாலுக்கா சென்டர். அங்கே பல பள்ளிகள் அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள், இப்போது அங்கே பிரசவ வசதி இல்லை. மாவட்ட வளர்ச்சி



1984 மார்ச் 16]

மன்றக் கூட்டத்திலே தீர்மானம் கொடுத்து பேசப்பட்டிருக்கிறது. எனவே தயவு கூர்ந்து அரசு மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை அதிகரிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வி நியாயமாக இருந்தாலும், நிதிவசதிகளுக்கேற்ப அந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள குடிசைப்பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான யூனிசெப் நிறுவனத்தின் உதவி.

*344 (வினா எண் 20823) திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) 1983 மே மாதத்தில் சென்னை குடிசைப் பகுதிகளுக்கு யூனிசெப் உதவி பற்றி ஒப்பந்தம் ஆகியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எவ்வளவு உதவி கிடைக்கும்?

(ஈ) எவ்வித பணிகளுக்குச் செலவழிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா (அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பராமரிப்பிலுள்ள குடியிருப்புத் திட்டங்களில் வசித்து வரும் மக்களும் வாரியத்தால் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களும் சேர்ந்து சுமார் 50,000 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு யூனிசெப் நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டு நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இந்தப் பகுதி மக்களுக்கு சுற்றுப்புறச்சுகாதாரம், மருத்துவம், கல்வி வேலை வாய்ப்பு, சத்துணவு போன்ற வசதிகள் பெறவும் இவ்வாரியம் ஏற்கனவே பல்வேறு திட்டங்களின்கீழ் அமைத்துக் கொடுத்துள்ள சாலைகள், கழிவறைகள் போன்ற வசதிகளை குடிசைவாழ் மக்களே அரசு அல்லது மாநகராட்சியின் உதவியின்றி பராமரித்துக்கொள்ளவும், அவர்கள் இதற்குரிய நிலையை அடைய தக்க பயிற்சி ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்டத்தில் செய்ய இருக்கும் பணிகளில் சில கீழ்வருமாறு:—

(1) பள்ளிகளில் இருந்து இடையிலே நின்றுவிட்ட இளஞ்சிறார்களுக்கு கல்வி பயில வாய்ப்பளித்தல்.

[1984 மார்ச் 16

(2) குடிசைவாழ் மக்கள் தாங்களாகவே சமூக கூடங்கள் கட்டிக் கொள்வதை ஓரளவு பொருள் அல்லது நிதி கொடுத்து ஊக்குவித்தல்.

(3) குறைந்த விலையில் தனிக்கழிப்பறைகள் கட்டிக் கொள்வதற்கு ஊக்குவிப்புத் தொகை' அளித்தல்.

(4) சிறு குடும்பமே சீரான குடும்பம் என்ற தத்துவத்தை மக்களுக்கு உணர்த்துதல்.

(5) தாய் சேய் நலவாழ்விற்கு வேண்டிய அனைத்து மருத்துவ வசதிகள் சத்துணவு வசதிகள் வழங்குதல்.

(6) குடிசை வாழ் மக்கள் வாழ்ந்துவரும் பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்வதில் அவர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்பதை உணர்த்தி அவர்களிடையே பொறுப்புணர்ச்சி மேலோங்கச் செய்யும் வகையில் பராமரிப்புப் பணிகளை குடிசைவாழ் மக்களே நிர்வகிக்கும் திறனை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) ரூ. 39.98 இலட்சங்கள் யுனிசெப்பிலிருந்து கிடைக்கும். மேலும் தமிழக அரசின் பங்குத் தொகையாக ரூ. 8.00 இலட்சங்கள் இத்திட்டத்திற்கு வழங்கப்படும்.

(ஈ) யுனிசெப்பின் உதவித்தொகை

| | (ரூ. இலட்சங்களில்) |
|---|---|
| (1) ஊழியர்களின் சம்பளத்தொகை | 5.68 |
| (2) உபகரணங்கள் | 3.00 |
| (3) வாகனங்கள் மற்றும் சத்தம் | 7.70 |
| (4) குடிசைவாழ் மக்களுக்கு தன்னிறைவு திட்டங்கள் மேற்கொள்ள உதவியாக | 23.60 |
| மொத்தம் ரூ. | 39.98 |

மாநில அரசு உதவித் தொகை

| | (ரூ. இலட்சங்களில்) |
|---|---|
| (1) உபரி ஊழியர்கள் சம்பளம் தொகை | 1.97 |
| (2) வாகனங்கள் பராமரிக்க மற்றும் எரிபொருள் | 3.33 |
| (3) உபகரணங்கள் பராமரிக்க | 1.20 |
| (4) இதர செலவுகள் | 1.50 |
| மொத்தம் ரூ. | 8.00 |



[1984 மார்ச் 16

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த யூனிசெப் நிறுவனத்துடன் மத்திய மாநில அரசுகள் சேர்ந்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இதில் சொல்லப்பட்டுள்ள ரூ.39.98 இலட்சம் யூனிசெப்பிலிருந்துகிடைக்கும், மேலும் தமிழக அரசு பங்கு ரூ. 8 இலட்சம் கிடைக்கும் என்று சொல்லி இருக்கிறார்களே, மத்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்கான தொகை ஒதுக்கீடு செய்து தரப்படவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா மாண்புமிகு: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த திட்டத்திற்காக அனுமதி அளித்திருக்கிறது. நாம் இந்த செலவுகள் செய்யப்பட்டதற்குப் பின்னாலே, இதற்கான மொத்த செலவுகளையும் 5 ஆண்டுகளுக்குப் பிறகு தெரிவித்து, அதற்குப் பிறகுதான் மத்திய அரசிடமிருந்து நமக்கு உதவி கிடைக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் இந்த திட்டத்திலே இங்கே சொல்லப்பட்டிருப்பது, பள்ளிகளிலிருந்து இடையிலேநின்றுவிட்ட இளஞ்சிறார்களுக்குக் கல்வி பயில வாய்ப்பளித்தல் அதுபோன்று குடிசைவாழ் மக்கள் தாங்களாகவே சமூகக் கூடங்கள் கட்டிக் கொள்வதை ஓரளவு பொருள் அல்லது நிதி கொடுத்து ஊக்குவித்தல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது சுத்தப்படுத்துவதை எல்லாம் மாநகராட்சி கவனிப்பதில்லையா? இதற்காக தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படியென்றால், இவர்கள் எந்த இலாக்காவின் கீழே பணி புரிகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாநகராட்சி செய்கிற பணி வேறு. இந்தப் பணிகள் வேறு. இது ஒரு குறிப்பிட்ட பகுதியை எடுத்துக்கொண்டு, அங்கே வசிக்கின்ற மக்களுக்கு சுகாதார முறையிலே எப்படி இருக்கவேண்டும் என்று எடுத்துச் சொல்லி அதை விரிவான முறையில் திட்டமிட்டு, முழு நல நிலையில் இந்தக் குடிசைப் பகுதிகளை மாற்றுவதற்காக அவர்கள் ஏற்பாடுகளைச் செய்து, அந்த வகையிலே இந்தத் திட்டம் திட்டப்படுகிறது. அது போல் அங்கே உள்ள பள்ளிக்குழந்தைகளை கணக்கில் எடுத்து, அவர்களை எல்லாம், பள்ளிகளுக்கு அழைத்துச் செல்வதற்கான வழிவகைகளைக் கண்டுபிடித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைத்தான் செய்கிறதே தவிர எல்லாவற்றையும் மாநகராட்சி செய்கிறது என்று சொல்வது சரியல்ல ஒரு குறிப்பிட்ட பகுதியிலே இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு அந்தக் காரியங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

[1984 மார்ச் 16

## குடிசைகளை இன்சூர் செய்யும் திட்டம்

*345 (வினா எண் 21006) திருவேசந்தூர் வி. பியாலசுப்பிரமணியன்
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்காரா

மாநிலத்தில் உள்ள குடிசைகளை இன்சூர் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** ஆம்

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் உள்ள குடிசைகளை இன்சூர் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தற்போது பெய்த பருமழையாலும் முன்பு ஏற்பட்ட புயலாலும் ஏராளமான குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டு, அந்த குடிசையில் வசிக்கக்கூடிய மக்கள் நடுத் தெருவிலே நிற்கக்கூடிய ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த இன்சூரன்ஸ் திட்டத்தில் கட்டக்கூடிய அந்த பிரிமியத் தொகையை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் ஏற்பாடு செய்து, அந்த குடிசைகளை எந்த வகையில் அவர்கள் இழந்தாலும் அவர்கள் மீண்டும் இந்தத் திட்டத்தின் மூலம் புதிதாக குடிசைகளை கட்டிக்கொள்ள ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா? இந்த திட்டத்தில் உள்ள பல்வேறு விவரங்களை அறிவிக்க இயலுமா? என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இன்சூரன்ஸ் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று தான் விடையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் திட்டமே அமுலுக்கு வந்து விட்டதாக நினைத்துக் கொண்டு நாளைக்கே கேட்க வேண்டாம். யோசனை பரிசீலனையில் இருக்கிறது. இந்த திட்டத்தை அமுல் படுத்துவதற்காக ஆய்வுகள்மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. இதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டதில் குடிசைகளில் இருக்கிற மக்கள் தீ விபத்து ஏற்படுகின்ற நேரத்தில் அல்லது வேறு வகையிலே அவர்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்ற நேரத்தில், 2 ஆயிரம் ரூபாய் வரையிலும் ஈட்டுறுதி கிடைக்க வேண்டுமென்றால், நாம் காப்பீட்டுக் கழகத்திற்கு 2 ரூபாய் 10 காசு அளிக்க வேண்டும். அதை அவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், அடுத்து 50 க்கும் மேற்பட்ட குடிசைப் பகுதிகளாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி எடுப்பதாக



1984 மார்ச் 16]

இருந்தால், இந்த 2 ரூபாய் 10 காசை அரசாங்கமே தருவதா? அல்லது குடிசைகளில் இருப்பவர்களுக்கும் இதிலே பங்கு இருக்கவேண்டுமா? அவர்களுக்கும் ஆர்வம் வரவேண்டும் என்ற அடிப்படையில் கணக்கு எடுப்பதற்கு வசதியாக அவர்களையும் இதிலே இணைக்க வேண்டும் என்ற அடிப்படையில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசீலனை முடிந்ததும், நிச்சயமாக இந்த திட்டம் நிறைவேற்றப்படுமானால், சென்னை மாநகரத்தில் இன்றைக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் குடிசைகள் இருக்கிறது என்று எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு மொத்தமாக தரவேண்டிய தொகை 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் என்று கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த 6 லட்சத்து 30 ஆயிரத்தைக் காப்பீட்டுக் கழகத்திற்கு கொடுத்துவிட்டால், இந்த தீ விபத்து அல்லது வேறு எந்த வகையிலே அவர்கள் பாதிக்கப்பட்டாலும் இந்தப் பணத்தை வசூலிப்பதற்கு ஒரு மார்க்கம் இருக்கிறது. எனவே இந்தத் திட்டம் தீவிரமான பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, குடிசைகளிலே குடி இருப்பவர்களுக்கே அந்த வீட்டைச் சொந்தம் செய்வதற்கு ஒரு சட்டம் வருவதாக இதற்கு முன்னால் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தச் சட்டம் எப்போது வர இருக்கிறது, சில பேர்கள் அதிகமான அளவில் குடிசைகளைப் போட்டுக் கொண்டு அதிக வாடகைக்கு விடுகிறார்கள். குடிசைகளில் இவ்வளவுதான் வாடகை வாங்கவேண்டும் என்ற வகையில் அதை நிர்ணயிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசைகளை அவர்களுக்கே சொந்தமாக்குவது என்ற திட்டம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. குடிசை போட்டிருக்கிற அந்த இடத்தை பட்டா செய்து கொடுக்கிற திட்டம் தான் இப்போது இருக்கிறது. குடிசையை அவர்கள் போட்டுக்கொண்டு விடுகிறார்கள். அவர்களுக்கு சொந்தமான ஒன்று. அங்கேயிருக்கின்ற இடத்தைத்தான் நாம் சொந்தமாக்கிக் கொண்டு இருக்கிறோம். குடிசையில் இருப்டவர்களுக்கு நல்ல பாதுகாப்பான வீடுகள் வழங்கப்படுகிறதே தவிர, குடிசையில் இருப்பவர்களே வாடகைக்கு விடுகிறார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இதிலே ஆர்வம் காட்டி, யார் யார் வாடகைக்கு விடுகிறார்கள் என்பதைக் கண்காணித்து, அவர்களைக் கட்டுப்படுத்த அவர்கள்மீது வேண்டிய நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு உறுப்பினர் வழி செய்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை நகர குடிசைகளுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தைச் சொன்னார்கள். இந்த திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமப்புறங்களுக்கும் சேர்த்து பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தை நான் ஒரு உதாரணத்திற்காக சொன்னேன். மாநிலம் முழுவதும் இந்தத் திட்டத்திற்காக குடிசைகள் இருக்கிற பகுதியிலே எங்கெல்லாம் வரவேற்பு இருக்கிறதோ, அங்கெல்லாம் இத்திட்டத்தை விரிவாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளை இன்சூரன்ஸ் செய்வதன் மூலம், குடிசை வாழ் மக்கள் 2 ரூபாய் 10 பைசா தரவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது ஏற்கனவே குடிசைகளில் உள்ளவர்களுக்கு சாலை வசதி மற்ற வசதிகளைச் செய்துவிட்டு, அதற்காகும் பணத்திலே ஒரு குறிப்பிட்ட அளவு வசூல் செய்கிறார்கள். அப்படிச் செய்கிற காரணத்தால் இந்த 2 ரூபாயிலேயிருந்து ஒரு ரூபாயைச் சேர்த்து அவர்களிடமிருந்து வசூல் செய்துவிட்டு, மீதி இருக்கின்ற 1 ரூபாயை அரசே மானியமாகக் கொடுத்து, இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஆவன செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலன் அவர்கள் இன்றைக்கு ஒன்றை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு ரூபாய் வசூலிக்கலாம் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், பின்னர் நாம் அவர்கள் தர வேண்டும் என்று சொன்னால், அப்போது அவருக்கு அதை எதிர்க்க வேண்டி வந்தாலும் வரும். ஆகவே அவர்களே ஒரு ரூபாய் வசூல் செய்யலாம் என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் அவர்களிடத்திலே எவ்வளவு வசூல் செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். 2 ஆயிரம் ரூபாய்க்கே, 2 ரூபாய்10 காசுதான் வருகிறது. 10,000 வரையில்கூட இன்ஷ்யூர் செய்யலாம் என்று பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். முடிவு அடைந்த பிறகு, குடிசையினுடைய நிலையை அனுசரித்துச் செய்வதா அல்லது பகுதிக்கு தகுந்த மாதிரி பணத்தை நிர்ணயிப்பதா என்று பரிசீலனையில் இருக்கிறது. முடிவு அடைந்ததும் திட்டம் விரைவாக அறிவிக்கப்படும்.





**மீன் பிடிக்க விசைப் படகுகள் அளிக்கும் திட்டம்.**

*346—(* வினா எண் 18470)* திரு. செ. செம்மலை : மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீன்பிடி விசைப்படகுகளை அளிக்க வேண்டும் என மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. கலைமணி : ஆம். அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக தனியாக திட்டம் ஏதாவது நம் அரசால் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அப்படியானால் அந்தத் திட்டத்தினுடைய விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கண்ணாடி இழை படகுகள் பெறுவதற்கும் வள்ளங்களுக்கு இயந்திர மயமாக்கம் பெறவும் சுமார் 10.5 கோடிக்கான திட்டங்களை நமது அரசு தயாரித்து மைய அரசுக்கு அனுப்பி உள்ளது. அது மைய அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10.5 கோடி ரூபாய்க்கு இந்த திட்டத்தை உருவாக்கி மைய அரசாங்கத்திற்கு நமது அரசாங்கம் அனுப்பி, அது ஆய்வில் உள்ளதாக சொன்னார்கள். அந்தத் தொகை முழுவதும், நமது அரசு மானியமாக கேட்டுள்ளதா? அல்லது கடனாகக் கேட்டுள்ளதா? என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. க. கலைமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த தொகையில் 50 விழுக்காட்டை மானியமாகவும், 50 விழுக்காட்டை வங்கிகளின் மூலம் பெறுவதற்காகவும் நாம் மைய அரசிடம் சொல்லியிருக்கிறோம்.

**கோடியக்கரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம்.**

*347—(* வினா எண் 20336)* திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் கோடியக்கரையில் கட்டி முடிக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகம் பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதைச் சீர்படுத்தி மீனவர்களுக்குப் பயன்பட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம் கோடிக் கரையில் ஒரு மீன்பிடி இறங்கு துறைமுகம் 1982 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது, 1982 ஆம் ஆண்டு இறங்கு துறைமுகம் உபயோகத்திற்குக் கொண்டு வரப்பட்ட போது படகுகள் தங்குவதற்குப் போதுமான ஆழம் இருந்தது. நாளடைவில் படிப்படியாக கடல் கரையை விட்டு வெகுதூரம் தள்ளிச் சென்று விட்டது. எனவே இத்தங்கு துறையினை மீன்பிடி படகுகள் ஆழக் குறைவினால் பயன்படுத்த இயலவில்லை. எனினும் இத்தங்கு துறையை மீண்டும் உபயோகத்திற்குக் கொண்டுவர இதனை 110 மீட்டர் நீளப்படுத்தலாம் என்று மேற்பார்வைப் பொறியாளர் கருத்து தெரிவித்துள்ளார். இக்கருத்தினை தற்போது மீனளத்துறை தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

குலசேகரப்பட்டணத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டம்.

348—(*வினா எண் 22334) திரு. இரா. அமிர்தராஜ: மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி குலசேகரப்பட்டணத்தில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. கலைமணி: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 13 ஆம் தேதியன்று, கடற்கரையோரங்களிலே இருக்கும் பகுதிகளில் தண்ணீர் புகுந்ததே அந்த நிலைமைகளை நான் பார்வை இடச்சென்ற நேரத்திலே, வானத்திலேயிருந்து பெரும் வெளிச்சத்தோடு கடலிலே குண்டு போல ஒன்று விழுந்தது. அது விழுந்தவுடன் பெருமளவு சத்தத்தோடு வெடித்தது. என்னவென்றே தெரியவில்லை. 10 மைல் சுற்றளவுக்கு அந்தச் சத்தம் கேட்டது.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: காலையிலே தான் நீங்கள் அதுபற்றி நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள்.

3. முறைதவறிய செயலுக்காக இரு உறுப்பினர்களை அவையை விட்டு வெளியேறும்படி ஆணையிடல்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கவனத்திற்கு ஒரு செய்தியை நான் கொண்டு வர விரும்புகிறேன். ராம்பிரசாத் ராவ் கமிஷனுடைய அறிக்கையினை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் நேற்று இங்கே படித்தார்கள். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னொரு நாள் அதுபற்றி அவையிலேயே பேசலாம் என்று நேற்றே சொல்லியாகி விட்டது.

திரு. துரைமுருகன்: நான் கேட்பதற்கு முதலிலே allow பண்ணுங்கள், பிறகு தேவையில்லை என்றால் சொல்லுங்கள்.

Mr. DEPUTY SPEAKER: If it is proper it will be there. Otherwise it will be expunged.

திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த அறிக்கையை நமது முன்னவர் அவர்கள் நேற்று இங்கே படித்தார்கள். * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கமிஷன் பற்றி திரு. துரைமுருகன் அவர்கள் கூறியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

(முற்பகல் 10-10)

திரு. துரைமுருகன் : என்ன சொல்கிறேன் என்று கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லுங்கள்; சொல்லப் போவது சரியில்லையென்றால் அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும்.

திரு. துரைமுருகன்: * *

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1984 மார்ச் 16

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கமிஷன் விவகாரம் பற்றி இப்போது பேச முடியாது. இதுவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நேற்றே கேட்டீர்கள், பதில் சொல்லியாகி விட்டது. இன்றைக்கு அதைப்பற்றி பேசமுடியாது. விவாதம் வரும்போது பேசுங்கள் (கூச்சல்-குழப்பம்)

திரு. துரைமுருகன்: எனக்கு வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும். மந்திரிகள் பதில் சொல்லட்டும் (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே அறிக்கை கொடுத்தாகி விட்டது. நீங்களும் கேட்டீர்கள், அவை முன்னவர் பதில் சொல்லிவிட்டார்கள். அதே பொருளை திரும்பவும் இன்று எழுப்புவதற்கு அனுமதி இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நேற்று இதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே ஸ்டே கொடுக்கப்பட்டு இருந்தது, நேற்று 11 மணி அளவில் ஸ்டேயை வெக்கேட் செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு அவருடைய தீர்ப்பு அரசுக்கு வந்தது. அது பத்திரிகையில் வருவதற்கு முன்னால் இந்த அவையில் அந்தத் தீர்ப்பை வைப்பது முறை என்ற அளவுக்கு வைத்தோம்.

அப்படி வைக்கும்போது நான் சொல்லியிருக்கிறேன், விவாதத்திற்கு இடம் கொடுக்கப்படும் என்று. அந்தத் தீர்ப்பு நானூற்று சில்லரை பக்கம் இருக்கிறது. அதை மொழி பெயர்க்க வேண்டும். மொழி பெயர்த்த பிறகு தமிழ் காப்பியும், ஆங்கிலக் காப்பியும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தரப்படும். இங்கே அதை வைத்து விவாதிக்கலாமென்று சொல்லியிருக்கிறேன். அதை அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து அதற்கு ஒரு நாள் ஒதுக்கிப் பேசலாம். அப்போது மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் எல்லாவிதமான கருத்துக்களையும் மற்றவைகளையும் தெரிவிக்கலாம். இதில் எந்த முறைகேடும் தவறும் கிடையாது. அந்த விவாதத்தின்போது உறுப்பினர் தாராளமாகப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். எல்லாக் கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவிக்கலாம். இதில் தவறு எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

திரு. துரைமுருகன்: முடியாது, எனக்கு இப்பொழுது வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும் (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நேற்றே முடிந்து விட்ட விஷயம். (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏதாவது ஒரு முறைக்குள் வரவேண்டுமே தவிர முறை தவறி நடக்கமுடியாது. (கூச்சல்-குழப்பம்)

திரு. துரைமுருகன்: நான் சொல்வதைக் கேட்கிறீர்களா? இல்லையா? (கூச்சல்—குழப்பம்)



1984 மார்ச் 16]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் அமருங்கள். திரு. துரை முருகன், தாங்கள் உணர்ச்சி வயப்படாதீர்கள். (கூச்சல்-குழப்பம்)

திரு. துரைமுருகன்: (இருக்கையின்மீது ஏறி நின்று கொண்டு) வாய்ப்புக் கொடு, வாய்ப்புக் கொடு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுதான் முறையா? தாங்கள் என்ன சொல்ல வேண்டுமோ அதைப்பற்றி எழுதிக் கொடுங்கள் (கூச்சல்-குழப்பம்) திரு. அழகர்சாமி, திரு. உமாநாத், எதிர்க்கட்சித் தலைவர் யாருமே எனக்கு இப்போது உதவிக்கு வரவில்லை. நான் என்ன செய்வது! திரு. துரைமுருகன் இப்படி நடந்து கொள்வது முறைதானா? (கூச்சல்-குழப்பம்) எனக்கு நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. திரு. துரை முருகன் முதலில் அப்படி நடந்து கொண்டதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும். (கூச்சல்-குழப்பம்)

(உறுப்பினர் திரு. ப. பொன்னுரங்கம் தன்னுடைய இருக்கையில் எழுந்து நின்று ஒரு கத்தைத் தாள்களுக்கு தீ வைத்துக் கொளுத்தி, மேலே உயர்த்திக் காட்டினார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டசபையிலே தீ வைத்து இருக்கிறார்கள். திரு. பொன்னுரங்கத்தை அவையை விட்டு வெளியேறும்படி உத்திரவிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்) This is rowdyism.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எய்தவனை விட்டுவிட்டு அம்பை நொந்து பயன் இல்லை. அவர்களது கட்சித்தலைவர் சொல்லி இங்கே இவர்கள் ஆடிக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் இவர்களைச் சொல்லி ஒன்றும் பயன் இல்லை. ஏதோ ஒரு முடிவோடு வந்து இருக்கிறார்கள். அதற்கு நீங்கள் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பொன்னுரங்கம் அவையிலிருந்து வெளியேறவேண்டும் என்று சொல்லியும் வெளியேறவில்லை.

This is not the way to be have
அவரை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். * *

(அவைக்காவலர் (சார்ஜன்ட்) திரு. பொன்னுரங்கத்தின் இருக்கைக்குச் சென்றார். திரு. பொன்னுரங்கத்தை சூழ்ந்து கொண்டு திரு. துரைமுருகன், திரு. என். வி. என். சோமு போன்ற தி. மு. க. உறுப்பினர்கள் கோஷமிட்டார்கள்)

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1984 மார்ச் 16

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இது எல்லாம் அவர்கள் தலைவர் கலைஞர் சொல்லிகொடுத்து இங்கே இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள் (கூச்சல்—குழப்பம்.)

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையில் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. பேரவையிலேயே தீ வைத்து கொளுத்தியிருக்கிறார்கள். இப்படி தீ வைத்த பிறகு எதுவும் கிடையாது. அவரை வெளியேற்றும்படி அவைக் காவலர் (சார்ஜன்ட்)க்கு உத்தரவிடுகிறேன். (கூச்சல் குழப்பம்.)

(முற்பகல் 10-20)

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, நான் சொல்வது என்னவென்றால், என்னுடைய பாயின்டை மட்டும் தயவு செய்து கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது நடக்கும் பொழுது, தீ வைக்கும்பொழுது சும்மா உட்கார்ந்திருந்துவிட்டு இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவு செய்து எழுந்து பேச வேண்டாம். தீ வைத்த பிறகு இந்தச் சட்ட சபையிலே என்ன இருக்கிறது? தீ வைக்கப்பட்டு விட்டது; நடக்கக்கூடாதது நடந்து விட்டது.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, நான் கூறுவது பாயின்ட் ஆப் புரொசீஜர் என்பதில்தான். அந்த முறையில்தான் நான் இதைக் கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். புரொசீஜரிலே அவர்கள் ஒன்றும் நடக்கவில்லை.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பாயின்ட் ஆப் புரொசீஜர் என்னவென்று சொன்னால் அவையின் எந்த விதியை யார் மீறினாலும், நெருப்பு வைப்பது உள்ளிட்டது—இப்போது அது அணைந்து விட்டது-நான் அதை சப்போர்ட் செய்யவில்லை. அது அல்ல பாயின்ட்; இந்த அவையிலே அது சம்பந்தமாக அவரை வெளியேற்ற வேண்டும் என்று சொன்னால் He must go out என்று சொல்லிவிட்டு, அதற்காக ஒரு ரிசல்யூஷனை மூவ் பண்ண வேண்டும். அது அடாப்ட் ஆகி, நேம் செய்தபிறகு அந்த மெம்பர் போகவில்லை என்றால்தான் மார்ஷலை கூப்பிட வேண்டும்.

Mr. DEPUTY SPEAKER : Necessity knows no law.
(கூச்சல், குழப்பம்.)



1984 மார்ச் 16]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதிகளில் 116-வது விதி கீழ்க்கண்டவாறு கூறுகிறது; ''உறுப்பினர் ஒருவரது நடத்தை மிகவும் ஒழுங்கீனமானது எனப் பேரவைத் தலைவர் கருதினால், அவரைப் பேரவையிலிருந்து உடனடியாக வெளியேறுமாறு அவர் கட்டளையிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற உறுப்பினர் உடனடியாகப் பேரவையிலிருந்து வெளியேறிவிடுவதோடு, அன்றைய கூட்டத்திற்கு மீண்டும் வராமலும் இருக்க வேண்டும். ஓர் உறுப்பினர் ஒரே கூட்டத் தொடரில் இரண்டாவது முறையாக அவ்வாறு வெளியேறுமாறு பணிக்கப் பெற்றால், அக் கூட்டத்தொடர் காலத்திற்கு மேற்படாதவாறு, அக் கூட்டத்தொடரில் நடக்க இருக்கும் கூட்டங்களுக்கு வராமல் இருக்குமாறு பேரவைத் தலைவர் கட்டளையிடலாம். அவ்வாறு பணிக்கப்பெற்ற ஓர் உறுப்பினர் அதன்படி கூட்டங்களுக்கு வராது இருக்க வேண்டும். அந்த உறுப்பினர் வெளியேற மறுப்பின், அவரை வலுக் கட்டாயமாக அகற்றுமாறு ''பேரவை சார்ஜென்டிற்கு'' பேரவைத் தலைவர் ஆணையிடலாம். அவ்வாறு ஆணையிடப் பெற்ற உறுப்பினரின் வராமை, அரசியலமைப்புச் சட்டத்தின் 190 ஆவது பிரிவு (4) ஆவது உட்பிரிவின்படி வராமை குறித்துக் கணக்கிடுவதில் சேர்த்துக் கொள்ளப்பெற மாட்டாது.

எனவே, பேரவைத் துணைத் தலைவரவர்கள் அவருடைய பெயரைச் சொல்லி வெளியேறுமாறு கட்டளையிடலாம் என்றும், அந்த உறுப்பினர் வெளியேற மறுத்தால் சார்ஜெண்டிற்கு ஆணையிட்டு வலுக் கட்டாயமாக அகற்றலாம் என்றும்தான் இருக்கிறது, ஆகவே, இதற்காக தீர்மானம் கொண்டு வந்துதான் நிறைவேற்ற வேண்டுமென்பது இல்லை. எனவே, புரொசீஜர்படி தான் நடைபெறுகிறது. (கூச்சல்—குழப்பம்)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வாதங்கள் நடைபெறும்போது இரண்டுமுறை நான் பேசுவதற்காக எழுந்தேன். ஆனால் இரண்டு முறையும எனக்கு லயன் கிடைக்கவில்லை. இது மிகவும் துரதிருஷ்டவசமான சம்பவம் ஆகும்.

அவை முன்னவரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒருநாள் கொடுத்து அன்றைக்கு விவாதத்தை வைப்போம், அவசியம் அப்பொழுது உங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்குக்கூட இந்த விஷயம் பூராவும் தெரியவில்லை. நேற்றைக்கு ஒரு பத்து பக்கங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். மேற்கொண்டு கேட்டேன், அச்சில் இருக்கிறது என்றும், பிறகு கொடுப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். முன்னவர் அவர்கள் விளக்கம் கொடுத்ததைப்போல அவசியம் அவர்கள் ஒருநாள்

ஒதுக்குவார்கள் என்று நினைக்கிறேன், அதற்குள் என்னுடைய நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு அங்கத்தினர்கள் எந்தவிதமான கூக்குரலையும் போட வேண்டாமென்று அவர்களை மிகவும் வேண்டிக் கேட்டு கொள்கிறேன். இதற்கிடையில் நீங்கள் போலீசை வரவழைத்து ஒன்றிரண்டு பேர்களை அகற்ற வேண்டுமென்று சொன்னீர்கள், நீங்கள் அதை வாபஸ் வாங்கி, அவர்கள் இருக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு தூரம் நடந்ததற்கு பிறகு நான் என்ன செய்ய முடியும்?

திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கையாள்கின்ற முறை சரியான முறை அல்ல என்பதை நான் உணருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இதை பற்றி ஒருநாள் விவாதிக்கலாம் என்று கூறி இருக்கிறார்கள். அப்படி வாக்குறுதி கொடுத்திருப்பதின் காரணத்தால் அவசரப் பட வேண்டாம் என்றும், சுமுகமாக நடந்து கொள்ளவேண்டும் என்றும் உங்களையும், அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே...... (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விதிகளை எடுத்து நீங்கள் பேசுவதற்கு முற்படுகிறீர்கள். ஆனால் இவ்வாறு அவர்கள் நடந்துகொண்டது எல்லாம் ப்ரசீஜரா? தீ வைத்தால் எல்லா உறுப்பினர்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே சட்ட சபையிலே தீ வைக்கலாமா? தீ வைப்பதற்கு ஒரு சட்டசபையா? (கூச்சல்-குழப்பம்)

திரு. ரா. உமாநாத்; தலைவரவர்களே, நான் என்ன சொல் கிறேன் என்றால்......

MR. DUPUTY SPEAKER: Are you approving his conduct Can you approve his conduct?

திரு. துரைமுருகன். (இருக்கையின்மேல் நின்றுகொண்டே) Why not you give me a chance?

பேச வாய்ப்புக் கொடுங்கள் (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருக்கையின்மேல் இருந்து கீழே முதலில் இறங்குங்கள். அதுதான் நல்லது.

THIRU DURAI MURUGAN : Why not you give me a chan?



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படி சத்தம் போட்டு, தாள்களைக் கொளுத்திக் கேட்டால் வாய்ப்புக் கொடுக்க முடியாது. நிச்சயமாக வாய்ப்புக் கிடையாது. இப்படி எல்லாம் நடந்துகொள்வது சரியே அல்ல. ஆகவே நீங்கள் நடந்து கொண்ட முறைக்கு வருத்தம் தெரிவித்தால் அவையில் அமரலாம். இல்லை என்றால் என்னுடைய நடவடிக்கை அப்படியே நிற்கும். (கூச்சல் குழப்பம்) இனிமேல் அவையில் இருப்பதற்கு அலவ் பண்ண முடியாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே யார் ஆளும் கட்சி, யார் எதிர்க்கட்சி என்பதல்ல இங்கே பிரச்சினை....

திரு. என். வி. என். சோமு: அவை முன்னவர் இருக்கின்ற போது இவர் ஏன் பேசுகிறார்? (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இங்கே பேசுவதற்கு உரிமை உண்டு. (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை சுமுகமாக நடக்க வேண்டும் என்றால் சில நடவடிக்கைகளை எடுத்துத் தான் ஆகவேண்டும். அதை விட்டுக் கொடுக்க முடியாது. அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றியாக வேண்டும். ஆகவே சில நேரங்களில் நடவடிக்கைகள் எடுக்கத்தான் வேண்டி இருக்கின்றது. (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் பிரச்சினைகள் பூதாகரமாக ஆகிவிடக் கூடும். இங்கே பேப்பர்களை முதலிலே கிழித்தார்கள்; பேப்பர் களை எரித்தார்கள்; அதற்குப் பிறகு பெஞ்சிலே ஏறி நிற்கிறார்கள்;.... (கூச்சல் குழப்பம்) ஆகவே அப்படிப்பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்தாலொழிய இந்த அவையில் கண்ணியத்தைக் காப்பாற்ற முடியாது...... (கூச்சல், குழப்பம்)

திரு. ரா. உமாநாத். துணைத் தலைவர் அவர்களே...... (கூச்சல் குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இவ்வளவு நடந்ததற்குப் பிறகு இதற்கு மேல் பேச்சுத் தேவையில்லை எல்லை எல்லாம் மீறி ஆகிவிட்டது. ஆகவே இவ்வாறு நடந்து கொண்டதற்காக அவர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்களா இல்லையா? இந்த அவையிலே இருப்பவர்களிடத்திலே நான் கேட்கிறேன்—அவர்கள் வருத்தம் தெரிவித்தால் அவையிலே அமரலாம். இல்லாவிட்டால் நான் வெளியேற்றியே தீருவேன்.

இந்த மாதிரி முடியாது. இப்படி நம்முடைய சட்டமன்றத்திலே நடக்கவேண்டிய அவசியம் இல்லை. (கூச்சல் குழப்பம்) ஆகவே தங்கள் செய்கைக்காக அவர்கள் வருத்தம் தெரிவித்தால் அமரலாம். இல்லாவிட்டால் அவர்கள் வெளியேறவேண்டும் அப்படி அவர்களாக வெளியேறவில்லை என்றால் நான் வெளியேற்றியே தீருவேன்.

திரு. ரா. உமாநாத் துணைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சுட்டிக்காட்டத் தேவையில்லை. திரு, உமாநாத் அவர்களுக்குத்தான் சொல்கிறேன். இதிலே எந்த விதியையும் சுட்டிக்காட்டத் தேவையில்லை. விதிகள் எல்லாம் மீறப்பட்டுவிட்டன.

(முற்பகல் 10·30)

திரு ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே

Mr. Deputy Speaker : I have no other alternative, Mr. Umanath. இதிலே யாவருடைய கண்ணியமும் இருக்கிறது; அவையினுடைய கண்ணியமும் இருக்கிறது. தீ வைத்த பிறகு காம்ப்ரமைஸ் ஆக வேண்டுமென்றால், அது தேவை இல்லை. இவ்வளவு நடந்த பிறகு, தீ வைத்த பிறகு, காம்ப்ரமைஸ் என்ற பேச்சுக்கு இடம் எங்கே இருக்கிறது?

திரு ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே ரூல் 116-ஐ அவை முன்னவர் படித்தார்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் உங்களுக்கு பிறகு வாய்ப்பும் தருகிறேன் அவர்கள் ரூலை எல்லாம் மீறி போய் விட்டார்கள்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: ரூல் 116-லே கொளுத்தலாம் என்று இருக்கிறதா? தீ வைக்கிறார்கள்—தீ வைக்கலாம் என்று இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. உமாநாத் சொல்கிறார்கள். தீ வைத்த ஆளை எல்லாம் காப்பாற்ற வேண்டுமென்றால் எப்படி முடியும்? சொல்லுங்கள். ப்ரொசீஜர் எல்லாம் பாலோ பண்ணிவிட்டோம்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: அவர்கள் கட்சி சார்பிலே வெளியிலே தீ வைக்க அறிக்கை எல்லாம் விட்டிருக்கின்றார்கள். அது வேறு சமாச்சாரம். சட்டசபைக்குள், இங்கே, பேசுவதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதிநிதிகள், இங்கே வந்திருக்கிறார்கள். பேசுவதற்கு வக்கில்லாத காரணத்தாலே இங்கே தீ வைக்கிறார்களா? (கூச்சல், குழப்பம்)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது முடிந்து விட்டது நான் தீர்ப்பு கொடுத்து விட்டேன். (திரு. ரா. உமாநாத் குறுக்கீடு) Mr. Umanath is not co-operating with me. அவர்கள் இங்கே இருக்க வேண்டுமானால் வருத்தம் தெரிவிக்க வேண்டும். என்னுடைய முடிவை மாற்றப் போவதில்லை; வருத்தம் தெரிவிக்க வேண்டும்.

THIRU K. S. G. HAJA SHAREEF : The House may be adjourned for ten minutes.

MR. DEPUTY SPEAKER : There is no question of adjournment, I should take action. (குறுக்கீடுகள்) அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் வாச் அன்ட் வார்டை வைத்து நான் வெளியேற்றுவேன். நான் இன்றைக்கு காம்ப்ரமைஸ் ஆகப் போவதில்லை. பேரவையின் கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டுமா, இல்லையா, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இன்றைக்கு எவ்வளவு நேரமானாலும் சரி, ஆக்ஷன் எடுக்கப் போகிறேன். திரு. துரைமுருகன் வெளியேறலாம், திரு. பாலன் வெளியேறலாம், திரு. திருவேங்கடம் வெளியேறலாம், திரு. இராசரத்தினம் வெளியேறலாம், தீ வைத்த பொன்னுரங்கத்தையும் வெளியேற்றுகிறேன். (கூச்சல் குழப்பம்)

(டாக்டர் ஹ. சௌரிராஜன், பேரவைத் துணைத் தலைவரின் இருக்கை அருகில் சென்று, அவையை ஒத்தி வைக்க வேண்டினார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். No adjournment. அவர்கள் வெளியேற வேண்டும். நான் இன்னொன்றும் சொல்கிறேன், நாம் அவையின் கண்ணியத்தைப் பாதுகாக்க வேண்டும். மீண்டும் சொல்கிறேன், சட்டமன்ற உறுப்பினர்கள்தான் மன்றத்தினுடைய கண்ணியத்தைப் பாதுகாக்கவேண்டும். Self-respect-ஐ விட்டு விட்டால் You cannot regain it. சொல்லிவிட்டேன். முதலில் நம்முடைய திரு. பொன்னுரங்கத்தை வெளியேற்றுகிறேன். அவைக்குள்ளேயே தீ வைத்தார் அவர் (குறுக்கீடு) அவராக வெளியேறவில்லை என்றால், அவரை வாட்ச் அன்டு வார்ட் உதவியுடன் தூக்கிக் கொண்டு போங்கள் (கூச்சல் குழப்பம்.)

THIRU K. S. G. HAJA SHAREEF : Please adjourn the House for ten minutes.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அது முடியாது சார். அவைக்குள்ளேயே தீ வைத்த பிறகு நடவடிக்கை எடுப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

(அவைக் காவலர், வாட்ச் அன்ட் வார்ட் உதவியுடன் திரு. பொன்னுரங்கம் அவர்களை அவையை விட்டு வெளியே தூக்கிச் சென்றார்கள்)

[1984 மார்ச் 16

*　　*　　*　　*

(கூச்சல்' குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. துரைமுருகன் அவர்களுக்கு இறுதியாக ஒரு வாய்ப்பைத் தருகிறேன். அவர் இந்த அவையின் கண்ணியத்தை காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தால் வருத்தம் தெரிவிக்க வேண்டும். மன்னிப்புக் கேட்டால்தான் அவரையும் அவையில் அமர அனுமதிப்பேன்.

திரு. துரைமுருகன்: மன்னிப்பா, நான் எந்தப் பரம்பரை தெரியுமா? வன்னியகுல சத்திரியப் பரம்பரையில் வந்தவன். நானா மன்னிப்புக் கேட்பேன்? (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையைப் பொறுத்த வரையில் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் விதிமுறைகளின் அடிப்படையில்தான் அணுக வேண்டும். அப்படியுள்ள நடைமுறைகள் எதையும் கடைப்பிடிக்க முடியாது என்றால்தான் நடவடிக்கையெடுக்க வேண்டி வருகிறது.

திரு. துரைமுருகன்: நடைமுறை கடைபிடிக்கப்படுகிறதா? என்ன முறை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துரைமுருகன் அவர்கள் பேசுவதுதான் முறையில்லையே தவிர இங்கே இந்த அவையில் நிகழ்ச்சிகள் விதிமுறைகளின் அடிப்படையில்தான் நடைபெறுகின்றன. (கூச்சல், குழப்பம்)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் பல சட்டமன்றங்களில் அவையை 15 நிமிடம், அரை மணி நேரம் ஒத்திவைப்பார்கள். அதைப்போலத்தான் இப்போதும் ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை. அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை. (கூச்சல், குழப்பம்)

திரு. சு. பாலன்: போலீசை வைத்து வெளியேற்றுகிறேன் என்று சொன்னீர்கள். போலீசைக் கொண்டு வாருங்கள். (கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வாட்ச் அண்ட் வார்டு என்று தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) எனக்கு என்ன அதிலே ஆசையா? No I am performing an unpleasant job. I am performing an unpleasant duty to-day. I do not have any animosity towards anybody. இந்த அவையினுடைய கண்ணியத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக திரு. துரைமுருகன் அவர்களையும் வெளியேற்றுகிறேன். திரு. துரைமுருகன் வெளியே போகலாம். (கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1984 மார்ச் 16]

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவர் அவர்களே, நான் ரூல்சை படித்தபோது (குறுக்கீடுகள்) துணைத் தலைவர் அவர்களே, சுமுகமாகத் தீர்ப்பதற்கு நீங்களும் இடம் கொடுப்பதில்லை ஆளும் கட்சியினரும் இடம் கொடுப்பதில்லையென்பதால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கோஷங்கள் எதையும் அவைக் குறிப்பிலே ஏற்ற வேண்டாம். (கூச்சல், குழப்பம்)

(முற்பகல் 10-40)

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப்: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், நான் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் பல தடவை உங்களைக் கேட்டுக்கொண்டேன். 15 நிமிடம் இந்த அவையை ஒத்திப் போடுங்கள், இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் அது தான் நல்ல முறை என்று. அதற்கு நீங்கள் இடம் கொடுக்கவில்லை- இவ்வளவு தூரம் இதை வளர்த்து விட்டீர்கள். இதற்கு நீங்களும் ஒரு காரணம் என்று தெரிவித்துக்கொண்டு, அதற்காக நாங்கள் வெளியேறுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டப் பேரவையில் தீ வைத்த பிறகு—I am sorry. நீங்கள் சொல்வது தவறு. (குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்).

Dr. K. SOURIRAJAN: That is our suggestion, you have not accepted it. We have got every right to oppose it.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களையும், திரு. பொன்னுரங்கம் அவர்களையும் அவையில் இருந்து இன்று வெளியேற்றியிருக்கிறோம். கோஷங்கள் மட்டும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகின்றன. ½ மணி நேரமாக நடந்த சத்தம் ஒன்றும் அவைக் குறிப்பில் ஏற்ற வேண்டாம். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்; மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒலிபெருக்கி மூலம் பேசப்பட்டவைகள் கூடவா நீக்கப்பெறுகின்றன? நீங்கள் சொன்னது எல்லாம் கூடவா?

[1984 மார்ச் 16

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் நடந்தவைகள் எல்லாம் இருக்கின்றன. வெறும் கோஷங்கள் மட்டும் நீக்கப்பெறுகின்றன. அவையில் இருந்து வெளியேற்றப் பட்ட இரண்டு உறுப்பினர்கள் மட்டும் இன்றைக்கு அவையின் இதர நடவடிக்கைகளில் வந்து கலந்து கொள்ள முடியாது.

## 4. கவன ஈர்ப்பு.

லாட்டரி முகவர்கள் தமிழக அரசின் லாட்டரிச் சீட்டை புறக்கணிப்பது.

**திரு. இரா. தாமரைகனி:** தலைவர் அவர்களே, ''தமிழ் நாட்டில் குறிப்பாக சென்னை போன்ற நகரங்களில் உள்ள லாட்டரி முகவர்கள் தமிழக அரசின் லாட்டரிச் சீட்டைப் புறக்கணிப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தமிழ் நாட்டில் பிற மாநில பரிசுச் சீட்டுகள் பெருமளவில் விற்பனையாகி வருகிறது. இந்தியாவிலேயே தமிழகம் தான் பரிசுச் சீட்டுகளுக்கு வியாபார சந்தையாக நிலவுகிறது. பிறமாநில பரிசுச்சீட்டுகளின் விற்பனையை கட்டுப்படுத்த பரிசுச் சீட்டுகளின் மீது 20 விழுக்காடு ஒரு முனை விற்பனை வரி விதிக்கப்பட்டது. இது நமது மாநில பரிசுக் சீட்டுக்கும் பொருந்தும். எனவே முகவர்களுக்கு அளிக்கப்படும் கமிஷன் தொகையான 16 விழுக்காடு மற்றும் விற்பனை வரி, மேல் வரி (surcharge) இவைகளைச் சேர்த்து நமது பரிசுச் சீட்டின் அடக்க விலை ஒரு ரூபாய்க்கு மேல் போகிறது. இதனால் முகவர்கள் நமது பரிசுச் சீட்டுகளை வாங்க முன்வருவதில்லை.

இந்த நிலையை போக்க முகவர்களுக்கு அரசு நிர்ணயித்த கமிஷன் அவர்களுக்கு முழு அளிவில் கிடைக்கவும், பரிசுச் சீட்டின் மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியின் சுமை பரிசுச் சீட்டுகளை வாங்கும் பொது மக்களுக்கு செல்லாமல் இருக்கவும் ஒரு பரிசுச் சீட்டினை ஏற்கனவே உள்ள 1 ரூபாய்க்கே விற்பதற்கும் கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநில லாட்டரி சீட்டுகள் அதிக அளவில் நமது மாநிலத்தில் விற்பனையாகின்றன. நமது மாநில பரிசுச் சீட்டுகள் அவ்வளவாக விற்கப்படுவது இல்லை என்பதற்குக் காரணம் என்ன என்பது ஆய்வு செய்யப்பட்டுள்ளதா? அது மட்டுமல்லாமல், நமது மாநில பரிசுச் சீட்டுகள் அவ்வளவாக





கவர்ச்சியாக அச்சடிக்கப்படுவது இல்லை. ஆகவே பலவிதமான வண்ணங்களில் அந்த பரிசுச் சீட்டை அச்சடிப்பதற்கு தனியார் அச்சகங்களில் வசதிகள் இருப்பதால், அந்த முறையில் அச்சடிக்கப் படுமா? லாட்டரி சீட்டின் விலையையும் அதிகரிக்க அரசு முன் வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்;** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநில பரிசு சீட்டுகளோடு போட்டா போட்டி போட்டுக் கொண்டு சமாளிக்கும் அளவிற்கு தமிழக பரிசுச் சீட்டையும் சிறப்பான முறையில் வைப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது என்று ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்து இருக்கிறேன். அதிலே ஒன்று, பரிசுச்சீட்டுகளைக் கவர்ச்சி கரமாக ஆக்கவேண்டும் என்பதாகும். இப்போது இருக்கும் அரசு அச்சகத்தில் கவர்ச்சியாக அச்சடிக்க இயலாது 5 வண்ணங்களில் அச்சடிக்க தனியார் அச்சகத்தில், ஒப்பந்த அடிப்படையில், தக்க பாதுகாப்பான முறையில் செய்யலாமா என்று அரசு யோசித்து வருகிறது. பிற மாநில பரிசு சீட்டுகள் எந்த அளவிற்கு பரிசுத் தொகைகளைத் தருகிறார்களோ அந்த அளவிற்கு ஈடுகட்டத்தக்க அளவிற்கு பரிசுத் தொகை கொடுப்பது, சிறப்பு பரிசு தருவது என்று பல வேறு பிரச்னைகள் அரசின் ஆய்வில் இருக்கின்றன. அதைப் பற்றி விரைவில் அரசு தக்க முடிவு எடுக்கும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, இந்த பரிசுத் தொகை 1 கோடி என்றும், பரிசு விழுந்தவர் உலக நாடுகளில் முழுவதும் சுற்றுப் பயணம் செய்யலாம் என்றும் அரசு திட்டம் வகுக்குமா? அது மட்டுமல்லாமல் அரசு ஊழியர்கள் கண்டிப்பாக எல்லோரும் மாதந்தோறும் இரண்டு பரிசு சீட்டுகள் வாங்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த பரிசுச்சீட்டு விற்பனையைப் பொறுத்தவரையில் நாம் யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. பரிசுச்சீட்டுகளை கவர்ச்சிகரமாக அச்சிட்டு வழங்க நாம் ஏற்பாடு செய்யலாம். நம்முடைய மாநில பரிசுச்சீட்டுகளை மக்கள் வாங்குவதன் மூலம் கிடைக்கின்ற பணம் நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு முழுமையாகப் பயன்படுத்தப் படுகிறது என்பதை உணர்ந்து மக்கள் இதிலே ஆர்வம் காட்டலாம். மக்கள் நம்முடைய பரிசுச்சீட்டுகளை விரும்பி வாங்குவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதுபற்றி அரசு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமல்லால் பிற மாநில பரிசுச்சீட்டுகளோடு போட்டிபோட்டு, சமாளித்து விற்கக்கூடிய அளவுக்கு என்ன என்ன செய்யலாம் என்பதை அரசு ஆராய்ந்து அந்த வகையிலே தேவையான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

5. வரவு-செலவுத்திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,17,86,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,21,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்கள் யாரும் இருக்கையில் இல்லாததால் அவை மொழியப்பெறவில்லை.

மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : துணைத் தலைவரவர்களே, மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் ** புத்தகமாக அச்சிட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்களுடைய கருத்துக்களைச் சொன்ன பின்னால் என்னுடைய பதிலை தெரிவிக்கிறேன்.

திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்களுடைய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பை நல்கிய உங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய மானியக் கோரிக்கை என்ற தலைப்பில் இங்கே அனைத்துத் திட்டங்கள் பற்றிய ஒரு விளக்க உரையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு 1977-க்குப் பின்னாலும், அடுத்து 1980-க்குப் பின்னாலும் எந்த அளவுக்கு தமிழ்நாட்டிலே உழைக்கின்ற வர்க்கத்திற்கு பரிவு காட்டி வந்திருக்கிறது; அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை கடந்த கால நிகழ்ச்சிகளிலிருந்து தொழிலாளர்கள் பெற்றிருக்கக்கூடிய நன்மைகளை நன்றாக இந்த நாட்டு மக்கள்

** 453-543ஆம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.





அறிவார்கள். அந்த வகையில் புரட்சித் தலைவருடைய அரசு பாட்டாளிவர்க்கத்திற்கு பரிவு காட்டி, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற ஒரு ஒப்புயர்வற்ற அரசு என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-50)

தொழிலாளர்களின் மேல் அக்கறை கொண்டிருக்கிற காரணத்தினால்தான் புரட்சித் தலைவருடைய அரசு பல காலக் கட்டங்களில் திருமகள் ஆலை, குடியாத்தம் ராமலிங்க கூடாம்பிகை ஆலை, திருப்பூர் போன்று இன்னும் பல தொழிற்கூடங்களில் வேலை நிறுத்தங்கள் பல ஏற்பட்ட போதிலும், அந்த பேச்சு வார்த்தைகளுக்கு முன்நின்று நடத்தி தொழிலாளர் பிரச்சினைகளில் தீர்வு காணக்கூடிய அளவிற்கு நல்ல பல திட்டங்களை இந்த அரசு செய்து வந்திருக்கிறது என்பதை இங்கே அருமையான தெளிவுரையாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதுபோன்று தொழிலாளர்களுடைய நலனைக் கருதி இந்த அரசு போக்குவரத்துத் தொழிலாளர்களின் மேல் எந்த அளவிற்கு பரிவு காட்டி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதையும், அவர்களுடைய அணுகுமுறையை இந்த அரசு நல்ல முறையில் அணுகி அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று பேச்சு வார்த்தைகளில் ஒப்பந்தத்தைக் கண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோல் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஏராளமாக இருக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் 1983 ஆம் ஆண்டு, ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின் பயனாக 26-9-1983 உடன்படிக்கையினால் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற சுமார் 25,000 தொழிலாளர்கள் இன்றைக்கு ஊதிய உயர்வு பெற்று, அவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அதே நேரத்திலே, தோல் பதனிடும் தொழிற்சாலைகள், திருச்சி மாவட்டத்திலே திருவெறும்பூர் தொகுதியில் செம்பட்டுப் பகுதியில் ஏராளமாக இருக்கின்றன. அந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள், நீண்ட பலகாலமாக தொழிற்கூடங்களில் பணியாற்றுகின்ற அந்தப் பணியாளர்கள் இதுகாறும் இருப்பதற்கு இல்லங்கள் கூட இல்லாத அளவிற்கு அந்தப் பகுதிகளில் இருக்கிறார்கள். இன்னும் சில பேர்கள் வசதி படைத்தவர்கள் இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு அங்கே வீடுகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்

துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, எத்தனையோ வகையான குடியிருப்பு இல்லங்களை அமைத்துத் தருகின்ற திட்டங்களை உருவாக்கி வெற்றி கண்டு கொண்டிருக்கின்ற இந்த அரசு, அந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளை அவர்களுக்கே உரிமைப்படுத்தி, அரசு அதற்கான கடனுதவியும் வழங்கி, அவர்களுக்கு இல்லங்களை அமைத்துத்தரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, தொழிற்சாலைகளின் பக்கத்திலே அந்த கிராமங்களிலே குடியிருக்கிற தொழிலாளர்கள், சுகாதார வசதியின்றி அவதியுற்றுக்கொண்டிருக்கிறார்கள். காரணம், அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் அப்புறப்படுத்தப்படாமல் இருக்கிறது. அதை முறையாக எழுதிக் கொடுத்தும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதனால் துர்நாற்றம் அடிக்கக்கூடிய அளவிற்கு அந்தத் தனியார் நிறுவனங்கள் செயல்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அதை உடனடியாக கவனித்து, நடவடிக்கை எடுத்துக் பாதுகாக்கக்கூடிய வகையிலே, அந்தத் தொழிலாளர்களுக்கு நல்ல திட்டங்களை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் திருவெறும்பூரில் ஒரு பாய்லர் தொழிற்சாலை இருக்கிறது. அந்த பாய்லர் தொழிற்சாலை கிட்டதட்ட 14, 15 ஆயிரம் தொழிலாளர்கள் இன்றைக்கு பணியாற்றக் கூடிய அளவிற்கு ஒரு தொழிற்கூடமாக இருக்கிறது. அந்த பாய்லர் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற அந்த தொழிலாளர்களுக்கு இதுகாறும் அந்த நிறுவனத்தின் சார்பிலே போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவில்லை. அந்த பி.எச்.இ.எல். அந்த தொழிலாளர்களுக்கு சொந்த பொறுப்பிலே பஸ் வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமென்று ஒப்பந்தம் இருந்தும்கூட அவர்களுக்கு இதுகாறும் பஸ் வசதிகள் செய்து தரவில்லை.

கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு போராட்டத்தை துவங்கி அதன் அடிப்படையிலே தமிழக அரசுக்கு கேட்டு, இதுவரைக்கும் 20 சோழன் போக்குவரத்து பஸ்களைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் 1 ஆண்டுக்காலம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உள்ளாக பேருந்துகளை வாங்கிக் கொண்டு, அரசு பஸ்களை அரசுக்கு நாங்கள் ஒப்படைத்து விடுகிறோம் என்று சொல்லியிருந்தும், அந்த ஒப்பந்தம் இதுவரைக்கும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் அந்தப் பகுதியிலுள்ள சிற்றூர்களுக்குப் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகிறது. தொழிலாளர்கள் நிம்மதியாக போய்ச் சேருவதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லை. எனவே அந்த நிறுவனம் ஒப்புக் கொண்டிருக்கிற அந்த ஒப்பந்தத்தின்படி, அந்த நிறுவனத்தின் பொறுப்பிலே உள்ள பஸ்களை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்களுக்கு அறிவுரை வழங்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து, தொழிலாளர் நலச் சட்டங்கள் என்ற பெயரில், ஆலோசனைக் குழுக்களை எல்லாம் இந்த அரசு அமைத்து ஆங்காங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய நிலைமைக்கு ஏற்ப சில நல்ல திட்டங்களை, எல்லாம் நடத்துவதற்குள்ள ஒரு திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 இடங்களிலே இந்த ஆலோசனைக் குழுக்களை அமைத்து செயலாற்றி வருகிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், திருச்சி மாநகரம் தமிழ்நாட்டினுடைய மையப் பகுதியாகும். அந்தப் பகுதி தொழிலாளர்கள் நிரம்பிய தொழிற்கூடங்கள் இருக்கக்கூடிய பகுதியாகும். அந்தத் திருச்சி மாநகரத்திற்கும் இந்த தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், திடீரென்று தொழிலாளர்களுக்கு ஆபத்துக்கள் ஏற்படுகின்றபோது அவர்கள் தங்கள் நிலையை எடுத்துக் கூறுவதற்கு அவர்கள் மதுரைக்குச் செல்லவேண்டியதாக இருக்கிறது. அதோடு அந்த ஆபத்திலே சிக்கிய தொழிலாளி தன்னுடைய கையையோ, காலையோ இழந்த பிறகு, அவன் ஆஸ்பத்திரிக்குச் சென்று அனுமதிக்கப்பட்ட பிறகு, அவன் மதுரைக்குச் சென்று தன்னுடைய நிலையை எடுத்துக்கூறுவதற்கு காலதாமதம் ஆகிறது. அதனால் அந்தத் தொழிலாளியினுடைய குடும்பம் மிகப் பெரிய பாதகத்திற்கு உள்ளாகிறது. ஆகையினாலே அந்தத் தொழிலாளி ஆஸ்பத்திரியில் இருந்தாலும், அவருடைய துணைவியாரோ, அல்லது குழந்தைகளோ, அல்லது உற்றார்களோ, அந்தப் பாதுகாப்புக் குழுவினிடத்திலே சென்று எடுத்துச்சொல்லி, உடனடியாக நிவாரணம் பெறுவதற்கு வசதியும் வாய்ப்பும் அளிக்கும் வகையில், திருச்சியிலும் அந்தப் பாதுகாப்புக் குழுவை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த அரசு தொழிலாளர்களுக்கு பல்வேறு நல்ல திட்டங்களை அமுல்படுத்திக்கொண்டிருக்கிறது. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அவைகளை எல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த தமிழ்நாடு அரசின் சார்பிலே தான், அதாவது பல நிறுவனங்களிலே கோர்ட் அளித்த தீர்ப்பையும் 12-3 ஒப்பந்தத்தையும் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளாத சில கம்பெனிகள்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு அருமையான உத்தரவை தமிழ்நாடு அரசு தந்திருக்கிறது. தமிழ்நாடு அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நினைக்கின்றபோதுதான் நான் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத்துறைக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்கள்மீது அக்கறை காட்டுகின்ற அரசு என்பதைச் சுட்டிக்காட்டுகின்ற வகையில், தொழிலாளர்களுக்கும், விவசாயக் கூலிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற

வகையிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற நிதியாக ரூபாய் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரைக்கும் அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கட்டிடத் தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பம் மேம்பாடு அடைவதற்கும், அவர்களுடைய முன்னேற்றத்தை மனதிலே கருதி புரட்சித் தலைவர் அவர்கள் 1983 ஆம் ஆண்டு ஒரு அருமையான திட்டத்தை இந்த அவையிலே வைத்தார்கள். அந்தத் திட்டத்தினால் கட்டிடம் கட்டுகின்ற தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுடைய சந்ததியினருக்கு, அவர்களுடைய வாரிசுகளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் ஒரு நல்ல திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இங்கே வைத்தார்கள். அதற்காகவும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று ஏராளமான திட்டங்களை இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசு செய்திருக்கிறது. இன்னொன்று, அதாவது தொழிலாளர் நலக் காப்புறுதி திட்டம் என்ற திட்டத்தின் அடிப்படையில் இன்றைக்குப் பல இடங்களிலே 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்தமைக்கு நான் பாராட்டுத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

(முற்பகல் 11-00)

அந்த வகையிலே சேலத்திலேயும், அடுத்து, மேட்டூர் அணை பகுதியிலேயும், அடுத்து திருச்சிராப்பள்ளியிலும், அதேபோல இன்னும் சிவகாசியிலுள்ள தொழிலாளர்கள் பகுதியிலேயும் அந்த மருத்துவமனைகளை ஆரம்பிப்பதற்கு அரசு ஒரு சில திட்டங்களை இங்கே கூறியிருக்கிறது. அந்த வகையிலே திருச்சியிலே ஆரம்பிக்க இருக்கிற 50 படுக்கைகள் கொண்ட அந்த மருத்துவமனையை திருவரும்பூர் பகுதியிலேயே அமைக்க வேண்டும் என்று நான் என்னுடைய கோரிக்கையாக வைத்திருக்கிறேன்.

அந்தக் கோரிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தப் பகுதியிலே வந்து, அந்த மருத்துவமனையை ஆரம்பிப்பதற்குண்டான இடத்தை பார்வையிட்டார்கள் என்று நான் அறிகிறேன். அந்த மருத்துவமனையை உடனடியாக கட்டுவதற்கு இடங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் கோருவது, என்னுடைய பகுதியிலே, திருவறம்பூர் பகுதியிலே அமைக்கப்படவிருக்கும் அந்த மருத்துவ மனைக்கான இடம் சிட்கோ நிறுவனத்தாலே எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களிடத்திலேயும் கேட்டிருக்கிறார்கள். அவர்களும் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் தாமதம் இல்லாத அளவுக்கு அந்த மருத்துவ மனையை அந்தப் பகுதியிலே அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



காரணம், அந்தப் பகுதி சிறு தொழில் கூடங்கள் நிறைந்த பகுதி மட்டும் அல்ல, மிகப் பெரிய தொழிற்சாலைகளும் இருக்கக்கூடிய பகுதி. அதில் அன்றாட கூலிகளாக பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய ஒரு பகுதி. அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்றால், உடனடியாக அந்த மருத்துவமனையை அங்கே நிறுவ வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சி மாவட்டத்திற்கு, திருச்சி பகுதிககு 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர்கள் மருத்துவ மனையை கொண்டு வருவதாக அறிவித்ததற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்னும் இந்த அரசு செய்திருக்கிற நல்ல சாதனைகளை, இங்கே கோடிட்டுக் காண்பித்திருக்கிறார்கள். விவசாய பெருங்குடி மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிக்கெல்லாம் விவசாய காப்புறுதித் திட்டத்தை அமல்படுத்துகின்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அது போன்று பல நல்ல திட்டங்களை இந்த அரசு செய்திருக்கிறது. இத்தகைய நல்ல திட்டங்கள் ஏனைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப் படவில்லை என்பது நிச்சயமாகத் தெரியும். அப்பேற்பட்ட ஒரு சீரிய திட்டத்தை தொழிலாளர்களுக்கு அன்பு காட்டுகின்ற அருமையான திட்டத்தை இன்றைக்கு உருவாக்கி தந்திருப்பது, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்தாம். அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால் தான் தொழிலாளர்களுடைய கோரிக்கை மதிக்கப்படுகிறது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்க்க அதிகாரிகள் பேச்சு வார்த்தைக்கு முறையாக அழைக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பின்னால்தான், தட்டுங்கள் திறக்கப்படும் கேளுங்கள் கொடுக்கப்படும் என்கிற உயரிய கருத்துக்கு ஏற்ப பணியாற்றுகிறார்கள்.

இதனால் புரட்சித் தலைவர் அவர்களை நாட்டிலே இருக்கிற உழைக்கும் வர்க்கம், பாட்டாளி வர்க்கம் பாராட்டிக் கொண்டிருக்கிறது. அப்படி அந்த பாராட்டுக்கள் எல்லாம் வருகிற காரணத்தாலேதான் அவரைப் பொறுத் தாங்க முடியாமல், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இன்றைக்குப் பல சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு, தகராறுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்போடு சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆக தொழிலாளர்களை மதிக்கின்ற வகையிலே, தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே, தொழிலாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய திட்டத்தை வகுத்து தருகின்ற முறையிலே புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிதான், இதுகாறும் வரைக்கும் 1977-க்குப் பின்னாலே 1984 ஆம் ஆண்டு, இந்தக் காலம் வரைக்கும் பல திட்டங்களை தொழிலாளர்களுக்காக தீட்டி தந்திருக்கிறது. தொழிலாளர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி தந்திருக்கிற ஒரே அரசாங்கம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசாங்கம்தான் என்பதை நான் ஆணித்தரமாக சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எத்தனையோ தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து, அதை ஏன் என்று கேட்க ஆளில்லாமல், வீதியிலே அல்லாடிக் கொண்டு, இடம் தெரியாமல் போயிருக்கிறார்கள். ஆனால், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு வந்தபிறகு தான் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற வகையில், நிதி உதவி கொடுப்பதோடு மட்டும் அல்லாமல், தனியார் கம்பெனிகளாக இருந்தாலும், அரசு நிறுவனங்களாக இருந்தாலும், அவர்களுக்குள்ள உரிமையை அவ்வப்போது கேட்பதற்குள்ள ஒரு முறையில், பேச்சு வார்த்தைகளுக்கு அணுகி, சில சமயம் முதலமைச்சர் அவர்களே அத்தகைய பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்து, அவர்களுடைய பிரச்னைகளை சுமுகமாக முடித்து வைத்து தந்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த கால வரலாற்றிலேயே, சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, இந்தக் காலம் வரைக்கும், புரட்சித் தலைவர் அவர்களைத் தவிர, வேறு எந்த முதலமைச்சராவது, இது போன்ற திட்டங்களைத் தீட்டி, இதுபோன்ற அணுகு முறையைக் கடைபிடித்திருக்கிறார்களா என்று எதிர்க்கட்சியினர் யாராவது நிச்சயமாக கோடிட்டுக் காட்ட வேண்டும். அதற்கு வக்கு இல்லாதவர்கள் திறமை இல்லாதவர்கள் இன்றைக்கு எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொன்னான அரசு, புரட்சியான அரசு பாட்டாளி வர்க்கத்தினிடம் பரிவு காட்டுகிற அரசு, ஏழைகளின் அரசு, 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற ஏற்றமிகு கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் அரசு என்று சொல்லி, இந்த வாய்ப்பு நல்கிய, துணை சபாநாயகருக்கு என் நன்றியைச் சொல்லி, உரையை முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் நகர்ப்புற வளர்ச்சி குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே பகிர்ந்து கொள்வதிலே பெருமைப்படுகிறேன். ''ஆண்டவன் எனக்கொரு முதலாளி,





அவனுக்கு நான் ஒரு தொழிலாளி'' என்றார் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். கலை உலகத்திலிருந்து புரட்சித் தலைவர் அவர்கள் என்ன என்ன கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்களோ அந்தக் கருத்துக்களை யெல்லாம் மனதிலே பதிய வைத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த எண்ணங்களை உணர்வுகளை மனதிலே வைத்து மிகத் திறமையாக செயல்படுகிறார்கள்.

இது ஒரு தொழிலாளர் நல அரசு என்பதற்கு இலக்கணமாக தொழிலாளர் நலச் சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அடிப்படையிலே உழைப்பவரே உயர்ந்தவர் என்ற அடிப்படையிலே உழைப்பும், நேர்மையும், திறமையும் உயர்வதற்கு வழிகள் என்று சொல்லக் கூடிய இலக்கணத்தின் அடிப்படையிலே உருவான இந்த மானியக் கோரிக்கைகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை வைப்பதிலே பெருமைப்படுகிறேன். அது மட்டுமல்ல, இந்த மானியக் கோரிக்கைகள் அண்ணாயிச தத்துவத்தின் அடிப்படைத் தன்மைகளை விவரிக்கும் ஆற்றல்மிகு மானியக் கோரிக்கைகள். ஒரே நாளில் ஒரே சட்டத்தால் ஒரே கையெழுத்தால் ஒன்றே கால் லட்சம் பேர்கள் இந்த அரசாலே பதவிபெற்றார்கள் உதவி பெற்றார்கள் வேலை வாய்ப்பு பெற்றார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த மானியக் கோரிக்கையிலே வந்திருப்பது எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ச் மூலமாக வந்திருப்பதுதான். பட்டம் பெறாமல் பதிவு பெறாமல் வாழ்க்கையில் கைவிடப்பட்டவர்கள். கணவனால் கைவிடப்பட்டவர்கள், கணவனை இழந்தவர்கள் எல்லாம் வாழ்க்கையின் ஓரத்திற்கு ஓட்டிவிடப்பட்டவர்களுக்கு அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய உத்திரவாதத்தைக் கொடுத்து நல்ல சத்துணவுத் திட்டத்தைத் தந்தவர் புரட்சித் தலைவர் தான். அந்த அரசில் கொண்டுவந்திருக்கக்கூடிய மிக அருமையான தொழிலாளர் நல கோரிக்கையிலே நான் நாட்டு மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதிலே பெருமைப் படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

22 மாநிலங்களிலே மிகக் குறுகிய காலத்திலே அதிகமான தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டு வந்துள்ள ஒரே முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்தான். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசுதான் உழைப்பவர் போற்றும் அரசு, ஆனால் தொழிலாளர் விரோத அரசு என்கிறார்கள் கம்யூனிஸ்ட் நண்பர்கள். இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள 22 மாநிலங்களிலே மிகக் குறுகிய காலத்திலே மிக அதிகமான தொழிலாளர் நல சட்டங்களைக் கொண்டு வந்த அரசு இந்த அரசுதான். அது மட்டுமல்ல, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மேற்கு வங்கத்திலே உள்ள அரசைவிட அதிகமான அளவுக்கு புரட்சித் தலைவர் அரசுதான் தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறது என்பதை நாம் அறிய முடியும், வேறு

எங்கும் இப்படிப்பட்ட சட்ட திட்டங்களை குறுகிய காலத்திலே தேவையானவற்றை கொண்டு வந்ததாக சரித்திரம் இல்லை. இந்தியத் துணைக் கண்டத்திற்குள்ளே உள்ள இதர மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையிலே புதிய சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் கொண்டுவந்துள்ள அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு ஒன்றுதான் உண்டு என்பதை எத்தனையோ காரியங்களை முன்பு வைத்து எடுத்துச் சொல்ல முடியும்.

சின்ன சின்ன இழை பின்னிப் பின்னிவரும் சித்திரச்சிங்காரச் சேலையடி, என்று பாடுவார்கள், அது மட்டுமல்ல அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு நேரத்திலே தமது திராவிட நாடு இதழிலே எழுதுகிறபோது செந்தமிழ்நாட்டு கைத்தறி நெசவு சேலை, வேட்டிகள் வாங்குவீர், திராவிட நாட்டு கேஷ்மம் வேண்டி சிங்கார ஆடைகள் வாங்குவீர் என்றெல்லாம் எழுதியிருந்தார்கள். அந்த உணர்வை மனதிலே வைத்து கைத்தறி நசிந்து போகாமல் இருக்கின்ற வகையிலே எண்ணிப் பார்த்து இந்தச் சூழ்நிலையில் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பெரும் எண்ணிக்கையில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்று பல ஆண்டுக் காலமாக கோரிக்கை இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையை இதுவரை மத்திய அரசோ இதர மாநில அரசுகளோ நிறைவேற்றவில்லை. கம்யூனிஸ்ட் நண்பர்கள் உள்ள மேற்கு வங்கத்திலேகூட கொண்டுவரவில்லை. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு கைத்தறி நெசவாளர்களைப் பாதுகாக்க பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்து இருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, கருணாநிதியின் 7 ஆண்டுக்கால ஆட்சியிலே கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. கைத்தறி நெசவுத் தொழிலாளி துன்ப துயரங்களை நன்கு உணர்ந்திருக்கிற இந்த அரசு தான் முதன்முதலாக பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அது மட்டுமல்ல, மூட்டை பல சுமந்தேன் மதுரெ[illegible] பாடுபட்டேன் தேடி வந்த காசைக் கொண்டு தேனாபிஷேகம் பால்பழம் தேனும் படைத்தேன் என்றெல்லாம் மூட்டை தூக்கும் அந்தத் தொழிலாளர்கள் ஆண்டவனைப் பார்த்து காளியைப் பார்த்து கருணை மனு போட்டுக்கொண்டிருந்த காலம் இருந்தது. உழைப்பாளர்களுடைய நிலைமை, காலை முதல் மாலை வரை என்று இல்லாமல் இரவு பகல் என்றும் பாராமல் ரத்தத்தை வியர்வையாக்கிக்கொண்டு உழைக்கிறார்களே அந்த மூட்டைதூக்கும் தொழிலாளர்களுக்கு முதன்முதலாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்ததும் புரட்சித் தலைவர் அரசுதான் என்று சொல்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.



அது மட்டும் அல்ல, வீடு கட்டும் தொழிலாளி வீதியிலே தூங்குகிறான்..கூடி அந்த மாளிகையில் கும்மாளம் போடுகிறான்'' என்று எல்லாம் வீடு கட்டும் தொழிலாளர்கள் நிலையைப் பற்றி பாடிய நேரம், பேசிய நேரம் வருந்திய நேரம் ஒன்று உண்டு. அப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய நலனைக் கருதி தன்னுடைய கடும் உழைப்பால் மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் கட்டிக் கொடுத்துவிட்டு, ஓலைக் குடிசைகளில் ஒண்டி வாழ்கிறார்களே கட்டிடத் தொழிலாளர்கள் அவர்களைப் பற்றி கம்யூனிஸ்டுகளின் மேற்கு வங்க அரசோ அல்லது மற்ற அரசுகளோ கவலைப்பட்டதுண்டா? என்றால் இல்லை. அவர்களுக்கு பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார்களா என்றால் இல்லை. கட்டிடத் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு பாதுகாப்புச் சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுத்து சட்டமுன்வடிவை கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தியிருப்பதும் அதனை நிறைவேற்றுகின்ற வாய்ப்பினை உருவாக்கித் தந்து ஆளுநர் உரையில் கூட அதனை குறிப்பிட்டு காட்டி இருப்பதும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தானே தவிர இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த அரசும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

(முற்பகல் 11-10)

அது மட்டும் அல்ல, ''வல்லான் வகுத்ததே வாய்க்கால்'' என்று சொல்வார்கள் அந்த அடிப்படையில் உழைக்கும் வர்க்கத்தைப் பழிவாங்குவதற்காக ஆலை அதிபர்கள் தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்து ஆண்டுக்கணக்கில் விசாரணை என்ற பெயரால் காலம் கடத்தி பட்டினி போட்டு பணிய வைத்தார்கள். இந்த அவல நிலையைப் போக்கி தொழிலாளர்களை காக்கத்தான் தற்காலிக வேலை நீக்க காலத்திற்கு வாழ்க்கை ஊதியம் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தார்கள். அதன் மூலம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட முதல் 90 நாட்களுக்கு 50 சதவீதம் ஊதியமும் 90 முதல் 180 நாட்கள் வரை 75 சதவீதம் ஊதியமும், 180 நாட்களுக்கு மேற்பட்டால் முழு ஊதியத்தையும் பெறமுடிகிறது என்கின்ற ஒரு சட்டத்தை கொண்டு வந்ததும் இந்த அரசு தான் அதுவும் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தான் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

அது மட்டும் அல்ல, கடந்த 1981 ஆம் ஆண்டு இந்தியத் துணைக் கண்டத்தில் தலைமை நீதி மன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பில் பணிக்கொடை பெறுகிற தொழிலாளர்கள் பணிக்கொடை பெறுகிற ஒவ்வொரு ஆண்டும் 240 நாட்களுக்குக் குறையாமல் பணி செய்திருக்கவேண்டும் என்றும், ஒரு ஆண்டில்

240 நாட்களுக்கு குறைவாக பணி செய்திருந்தால், அந்த ஆண்டிற்கு பணிக்கொடை பெறத்தகுதியில்லை என்றும் சட்ட நிலையை எடுத்து விளக்கியது. ஆனால் இதன் காரணமாக தொழிலாளர்கள் பெற்று வந்த உரிமை பறிக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில அந்தப் பணிக்கொடைச் சட்டத்தை உடனே திருத்தி ஏற்கெனவே தொழிலாளர்கள் பெற்று வந்தது போல வேலை செய்த நாட்களின் எண்ணிக்கையை கணக்கில் எடுத்து கொள்ளாமல் பணியில் இருந்த ஒவ்வொரு ஆண்டுக்கும் பணிக்கொடை கணக்கிட்டு வழங்கவேண்டும் என்று மேற்கு வங்கம் உட்பட இந்திய துணைக்கண்டத்தில் உள்ள 22 மாநிலங்களிலும் கோரிக்கை எழுந்தது. ஆனால் கம்யூனிஸ்டு ஆளுகின்ற மேற்கு வங்கமாக இருந்தாலும் சரி இதர இந்தியாவில் இருக்கின்ற எந்த வித தொழிலாளர் அரசு என்று சொல்லக்கூடிய எந்த மாநிலமானாலும் இதனைப்பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தொழிலாளர்களுடைய கோரிக்கையை ஏற்று மத்திய அரசு பணிக்கொடை திருத்தச் சட்டம் கொண்டு வரப்போவதாக அறிவித்தது என்றாலும் இன்னும் கொண்டு வரவில்லை. பணிக்கொடை திருத்தச்சட்டம் கொண்டுவர தாமதிக்கிற ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் தொழிலாளர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது என்கிற காரணத்தால் இனியும் மத்திய அரசு கொண்டுவரட்டும் என்று காத்துக் கொண்டிருக்க முடியாது என்று புரட்சித் தலைவரவர்களின் அரசு பணிக்கொடை திருத்தச் சட்டத்தைக் கடந்த 17-11-83-ல் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறது. பணிக்கொடை திருத்தச் சட்டம் கொண்டுவர மேற்குவங்கம் உட்பட வேறு எந்த அரசும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்வதிலே நான் உண்மையிலேயே மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், 24 மாதங்களில் 480 நாட்கள் பணி புரிந்துள்ள தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று மேற்கு வங்கம் உட்பட இதர மாநிலங்களுக்கு எல்லாம் வழி காட்டுகிற விதத்தில் சட்டம் கொண்டு வந்திருப்பது, இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும் வழி காட்டியாக விளங்கும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் அரசுதான் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன்.

மிகக் குறைந்த ஊதியத்தில் தினக்கூலி, கேஷுவல், டெம்பரரி, மற்றும் பதிலி என்ற பெயர்களில் பத்தாண்டுகள், பத்து ஆண்டுகள், பணிப்பாதுகாப்பின்றி, எந்த நேரத்தில் வேலை போகுமோ என்று பயந்து நித்தம் நித்தம் செத்துப் பிழைக்கின்ற நிலையிலே இருந்து பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தின் மூலமாகப், பணி நிரந்தரமும் உரிய ஊதியமும் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அரசின் பொறுப்பில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் உட்பட பல நிறுவனங்கள் இந்தச் சட்டத்தை அமுல



136234 ... 600 008.

படுத்தியுள்ளன. சில தனியார் நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சென்று தாமதப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அரசாங்கம் நல்ல திட்டத்தை, ஆரோக்கியமான திட்டத்தை, தொழிலாளர்கள் விரும்பும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற தொழிலாளர் அரசாக, புரட்சித் தலைவரவர்களின் அரசு விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் எழுகிற தொழில் தகராறின்மீது அரசு சமரச செயல் நடவடிக்கைகளை எடுக்கிறபோது இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டால் ஒப்பந்தம் ஏற்படுகிறது. இல்லை என்று சொன்னால் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசு நீதிமன்றத்திற்குத்தான் அனுப்ப முடியுமே தவிர தொழிலாளர்களுக்காக நிர்வாகம் ஏதாவது இடைக்கால நிவாரணம் தரவேண்டும் என்று உத்திரவிட அரசுக்கு அதிகாரம் கிடையாது. இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான சூழ்நிலையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு பல்வேறு இழப்புக்களைச் சந்தித்து பட்டினிக்குள்ளாவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்த நிலையில் கடந்த 1981 நவம்பரில் பம்பாய் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சார்ந்த பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு ஆண்டுக்கணக்கில் ஊதியத்தை இழந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் சொல்லொணாத் துன்பத் திற்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகை யாகாது. பம்பாயில் பல ஆலைகள் மூடப்பட்டன. இப்படிப் பட்ட நிலையில் 13 ஆலைகளை மத்திய அரசு ஏற்று நடத்தப் போவதாகத் தற்போது அறிவித்துள்ளதையும் அறிவீர்கள். இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் பம்பாய் பொலிவு இழந்து காணப்படுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த மாதிரியான காட்சியைத் தமிழகத்திலே காண வேண்டும் என்றுதான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவரும், இந்த நாட்டை ஏழரை ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்தவருமான கருணாநிதியும், கம்யூனிஸ்ட் நண்பர்களும், 1982-ல் பஞ்சாலைத் தொழிலாளர்கள் போனஸ் பிரச்சனையில் தீவிர கவனம் செலுத்தினார்கள், தென்னாட்டின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவையும் பம்பாயைப் போல ஆகாதா என்று எண்ணினார்கள். அதை வைத்து அரசியலில் ஆதாரம் தேடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தார்கள். ஆனால் அதை யெல்லாம் முறியடிக்கும் வகையிலே, அந்தக் கனவுகளை யெல்லாம் தூள் தூளாக்கும் விதத்திலே, கருணாநிதியையும், கம்யூனிஸ்டுகளையும் நன்கு புரிந்திருக்கிற காரணத்தாலும், தொழிலாளர் பிரச்சனையில் தீர்வுகாண அரசுக்கு இருக்கின்ற சிரமங்களையும் நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தாலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிற்தகராறு சட்டம் பிரிவு 10 பி-யைப் பயன்படுத்தி, தொழிலாளர் கோரிக்கையை அப்படியே ஏற்று சைமா பார்மூலாப்படி போனஸ் கொடுக்க உத்தரவிட்டுத்தான் நீதி மன்றத்திற்கு வழக்கை அனுப்பி வைத்தார்கள்.

அதுமட்டுமல்ல, தொழிற்தகராறு பிரச்சினைகளில் இடைக்கால நிவாரணம் கொடுத்து உத்தரவு பிறப்பிக்க, கதவடைப்பு, ஆலை மூடுதல் போன்றவற்றைத் தடுக்க தொழில் தகராறு சட்டம் 10-பி என்ற பிரிவை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்திருந்த காரணத்தால்தான் 1982–ல் தொழில் அமைதியை நிலை நாட்ட முடிந்தது என்றால் அது மிகையாகாது. ஆகவே, இப்படிப்பட்ட மிக அருமையான, மிகத் தேவையான, நல்ல திட்டங்களைத் தொழிலாளர்களுக்காகப் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு—முப்பதாண்டுக் காலமாக இந்த நாட்டில் நிறைவேற்றப்படாத தேவைகளை உணர்ந்து அப்படிப்பட்ட திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

இந்த அரசு தொழிலாளர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது என்று நான் உறுதியாகச் சொல்ல முடியும். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள தமிழகத்தில் உள்ள பல தொழிற்சங்கத் தலைவர்கள் முன்வராமல் அரசியல் ஆதாயத்திற்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள். இந்தப் புதிய சட்டப்பிரிவை இங்குள்ள கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள் எதிர்க்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்தையும் 480 நாட்கள் பணி செய்துள்ளவர்களை நிரந்தரமாக்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கொண்டு வந்துள்ள சட்டத்தையும் பற்றிக் கேள்விப்பட்ட மேற்குவங்க அரசு, தங்கள் மாநிலத்திலும் இந்தச் சட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக நமது தொழிலாளர் நல அமைச்சரிடத்திலே நேரிலேயே அந்தச் சட்டங்களின் நகல்களைக் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அரசுக்கு கடிதமும் எழுதிக் கேட்டு அந்தச் சட்டங்களின் நகல்களைப் பெற்றிருக்கிறார்கள்.

அந்த அளவுக்கு உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காக மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு ஆற்றியுள்ள ஏராளமான சாதனைகளில் ஒருசிலவற்றை மட்டுமே இங்கே நான் எடுத்து வைத்திருக்கிறேன். இவைகளெல்லாம் தொழிலாளர் விரோதச் செயல்களா? ஏழாண்டுக்காலம் முதலமைச்சராக இருந்த கருணாநிதி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாரா என்றால் நிச்சயமாக இல்லை. தொழிலாளர்களோடு தோழமை உணர்வு கொண்டவர்கள் என்றும், தொழிலாளர் வர்க்கம் என்றும் சொல்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் கூட கொண்டுவரப்படாத பல்வேறு நல்ல சட்டங்களை இந்தியத் துணைக்கண்டத்திலேயே முன்னோடியாக இந்தத் தமிழக அரசுதான் கொண்டு வந்திருக்கின்றது என்று சொல்லி பெருமைப்படுகிறோம்.





ஆகவே தொழிலாளர்களைப் பற்றி மிக அக்கறையோடு பேசுகிறீர்களே உங்களது கட்சியின் ஆட்சி நடக்கின்ற மேற்கு வங்கத்தில் இந்தச் சட்டங்களில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்றியிருக்கிறீர்களா? தொழிலாளர் நலன் காக்க தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அரசு கொண்டு வந்துள்ளதைவிட அதிகமாக தொழிலாளர் நல சட்டங்களை எங்கள் அரசு மேற்கு வங்கத்தில் கொண்டு வந்திருக்கின்றது என்று பட்டியல் வெளியிடத் தயாரா? மேற்கு வங்கத்திலே இருக்கின்ற பிரச்சினைகள என்ன என்பதைப் பற்றிய முழு விவரங்கள் என்னிடத்திலே இருக்கின்றது. ஆகவே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தொழிலாளர் நலன் காக்கும் அரசாக இந்த அரசு இருக்கின்றது. இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு எத்தனை திட்டங்களையும், சட்டங்களையும் போட்டு உடனடி நிவாரணம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்து தொழிலாளர்களைப் பாதுகாத்து இருக்கின்றது, தொழிற்சாலைகளுக்குப் பாதுகாப்பு கொடுத்திருக்கின்றது, தொழில்கள் வளரக் காரணமாக இருந்திருக்கின்றது என்பதற்கு இன்னும் ஏராளமான காரண-காரியங்களைச் சொல்லிக் கொண்டே இருக்கமுடியும். அவற்றிலே ஒருசிலவற்றை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துத் தருவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இந்த அரசை மக்கள் பாராட்டுகிறார்கள். காரணம் என்ன? இந்த அரசைத் தொழிலாளர்கள் பாராட்டுகிறார்கள். காரணம் என்ன? இந்த அரசை முதலாளிகள் பாராட்டுகிறார்கள், காரணம் என்ன? இந்த அரசை நடுத்தர வர்க்கம் பாராட்டுகிறது. காரணம் என்ன? இந்த அரசு செய்த சாதனைகள் தான் அதற்கெல்லாம் காரணம். ஆனால் ஒரு கட்சி ஆளுகின்ற கட்சி என்று வந்துவிட்டால், ஆளுகின்ற தன்மைக்கு வந்துவிட்டால் பிறகு இயற்கையாகவே சரிவு என்பது ஒன்று இருக்கும், எதிர்க்கட்சிகள் வளரும் என்பதுதான் ஜனநாயகத்தில் இருக்கின்ற ஒரு நம்பிக்கை. ஆனால் 1977-க்குப் பிறகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு அமைந்ததற்குப் பிறகு இதுவரையிலும் எந்த ஒரு எதிர்க்கட்சியும் .00001 என்ற அளவுக்குக் கூட வளரவில்லை என்றால் என்ன அர்த்தம்? ஆட்சியை எப்படி நடத்தவேண்டும் என்பதைப் பற்றி நன்கு அறிந்தவராக நமது முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார் என்பதுதான் அதற்குக் காரணம்.

காங்கிரஸ்காரர்கள் என்ன கருதுகிறார்களோ, கம்யூனிஸ்ட் கட்சியினரின் உணர்வு என்னவோ, திராவிட முன்னேற்றக் கழகம் எதைச் செய்யத் தவறியதோ மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் என்னென்ன செய்யவேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறதோ அவை அனைத்தையும் நிறைவேற்றக்கூடிய ஒரு அரசாக புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இருக்கின்ற காரணத்தால்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக நல்ல முறையில் வளர்வதற்கும் உயர்வதற்கும், மேலும் வளர்ச்சி பெறுவதற்கும் உரிய வாய்ப்பைப் பெற்று இருக்கின்றது.

ஆனால் இன்றைக்கு மற்ற அரசியல்வாதிகள் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்ற நிலையில் இருந்து அப்படிப்பட்ட முறையைக் கையாள்கின்ற காரணத்தால்தான் எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றாக இருப்பதை எல்லாம் இழந்து கொண்டு போகின்றன. மக்களின் ஓட்டு விழுமா, விழாதா என்ற நிலையில் ஒரு சந்தேகத்திற்குரிய நிலையினை ஏற்கெனவே நடந்த தேர்தல்கள் அவர்களுக்கு ஏற்படுத்தி விட்டதன் காரணத்தால், இனி மக்களிடத்திலே செல்கின்றபோது அவர்கள் ஆதரிப்பார்களோ, மாட்டார்களோ என்று சந்தேகம் இருக்கின்ற காரணத்தால்தான் வேறு வழிகளில், குறுக்கு வழிகளில் வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே மக்களுக்கு அவர்களிடத்திலே நம்பிக்கை இல்லை என்பதை அவர்களுடைய நடைமுறைகளே எடுத்துக் காட்டுகின்றன.

இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு தலைசிறந்த அரசாக, தொழிலாளர் நல அரசாக, மக்கள் உணர்வுகளை எடுத்துச் சொல்லக்கூடிய அரசாக புரட்சித் தலைவர் அவர்களின் அரசு இருக்கின்றது என்பதற்கு 108 காரணங்களை என்னாலே இங்கே வைக்க முடியும். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கின்ற நேரத்திலே ஒரு சில காரணங்களை மட்டும் இங்கே சொல்ல அனுமதி வேண்டும் என்று கேட்டு, சொல்கிறேன். அந்த காரணங்களைச் சொல்கிறபோது நான் பெருமைப்படுகிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக கைத்தறி நெசவாளர்களுக்குப் பணிப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், 24 மாதங்களில் 480 நாட்கள் பணி புரிந்துள்ள தொழிலாளர்களை நிரந்தரமாக்கச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், தொழிலாளர்களின் தற்காலிக வேலை நீக்க காலத்திற்கு வாழ்க்கை ஊதியம் வழங்கச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், ஆலைத் தொழிலாளர்களுக்கு சர்வீஸ் கார்டு கொடுக்க திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், குறைந்தது, 20 நபர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் பணிபுரியும் நிறுவனங்களுக்குத்தான் போனஸ் வழங்க வேண்டும் என்றிருந்ததை, குறைந்தது 10 நபர்கள் அல்லது அதற்கு மேலும் தொழிலாளர்கள் பணிபுரிகிற நிறுவனங்களுக்கும் போனஸ் வழங்க வேண்டுமென்று ஆணையிட்ட காரணத்தால், குறைந்தது 100 பேர்கள் அல்லது அதற்குமேல் பணிபுரிகிறவர்கள் உள்ள நிறுவனங்களுக்குத் தான் மாதிரி நிலையான சட்டம் பொருந்தும் என்று இருந்ததைக் குறைந்தது 50 பேர் பணிபுரியும் நிறுவனத்திலுள்ளவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிட்ட காரணத்தால், ஓட்டல் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி அளித்த காரணத்தால், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு வழங்கிய காரணத்தால், பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இந்தியாவிலேயே அதிக ஊதிய உயர்வு வழங்கிய காரணத்தால். தொழிலாளர் நலனையும் தொழில் அமைதியையும் நிலைநாட்ட தொழில் தகராறு சட்டத்தின் 10(1) பிரிவின் கீழ் நீதிமன்றங்கள் அல்லது நடுவர் மன்றங்கள் விசாரணைக்காக அனுப்பி வைக்கப்படும்போது அரசு தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக ஒரு தொகையை வழங்க வேண்டும் என்று ஆணையிடுவதற்கு வகை செய்து புதிதாக இடைக்கால நிவாரணமாக ஒரு ஊதிய உயர்வினை அல்லது இதர சலுகைகளை வழங்க வேண்டும் என்று உத்தரவிடவும், கதவடைப்பு செய்வதைத் தடுக்கக்கூடிய வகையிலும் அரசுக்கு அதிகாரம் அளிக்கக்கூடிய வகையில் தொழிற் தகராறு சட்டத்தின் 10-பி என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிற காரணத்தால், தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவதற்காக மாதிரி நிலை ஆணைகளில் அல்லது சானறிட்ட நிலை ஆணைகளில் உள்ள விதிமுறை மாற்றப்பட்டு அவர் வேலைக்கு வராது இருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு தனிநிலை விளக்கம் கோரி, பிறகு விசாரணை நடத்தி ஆவன செய்ய வேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்த காரணத்தாலும், தொழிலாளர்கள் நலனைக் கருத்தில் கொண்டு உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீடு செய்யும் பொழுது அத்தகைய அலுவலர்களுக்கு, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பி கட்டாயமாக விசாரணைக்கு வரவழைக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டத் திருத்தம் கொண்டு வந்த காரணத்தாலும், 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதிய சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசீய பண்டிகை விடுமுறை) நாட்கள் சட்டத்தை நீட்டித்துள்ளதன் பயனாக இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கும் தேசீய பண்டிகை விடுமுறை நாட்கள் பெற உரிமை பெற்றுத் தந்த காரணத்தாலும் தமிழ்நாடு தொழிலாளர்கள் கல்வி நிறுவனத்தை இந்த அரசு ஓர் உயர்மட்ட நிறுவனமாக்கி அதன்மூலம் தொழிலாளர்களுக்கு அவர்கள் உரிமைகளையும், நலன்களையும் விளக்குவதோடு மட்டுமல்லாது பல சட்ட விவரங்களையும் அறிவிக்கும் நோக்கத்துடன் ''உழைப்பவர் உலகம்'' என்ற மாத இதழ் ஒன்றை 15-9-1978 முதல் வெளிவருகின்றதோடு மட்டுமின்றி, இந்நிறுவனம் பட்டதாரிகளுக்கு உயர்தரக் கல்வி பட்டமாகத் தொழிலாளர் நிர்வாக மேற்படிப்புப் பட்டம் ஒன்றை வழங்கவும் வகுப்புகள் நடத்துவதற்கும் ஆணை பிறப்பித்த காரணத்தாலும் பால்வள நிறுவனத் தொழிலாளர்களுக்கு முதன்முதலாக போனஸ் வழங்கிய காரணத்தாலும், தமிழ்நாடு பொருள் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு முதன்முதலாக போனஸ் வழங்கிய காரணத்தாலும், தமிழ்நாடு பாடநூல் நிறுவன ஊழியர்களுக்கு முதன்முதலாக போனஸ் வழங்கிய காரணத்தாலும், சேலம் மாகனசைட் தொழிற்சாலையை அரசுடமை ஆக்கி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சலுகைகள் வழங்கிய காரணத்தாலும் சென்னை வரும் தொழிற்சங்கத் தலைவர்கள் நல்ல வசதியோடு மிகக் குறைந்த வாடகையில் தங்குவதற்கு ''ஜீவா இல்லம்'' கட்டித் தந்த காரணத்தாலும், தொழிலாளர் நல வாரியத்திற்கு அரசு சார்பில் ஆண்டுதோறும் சுமார் ரூ. 19 இலட்சம் வழங்க ஆணையிட்ட காரணத்தாலும், வேலைநீக்கம்

செய்யப்படுகின்ற தொழிலாளர்கள் தாங்களாகவே நேரடியாக நீதிமன்றம் சென்று தீர்ப்பு பெறுகின்ற சட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தாலும், தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் சமரச செயல் நடவடிக்கைகளுக்கு வர மறுக்கிறவர்களுக்கு சம்மன் அனுப்பும் அதிகாரத்தை தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு வழங்கும் சட்டத்தை நிறைவேற்றிய காரணத்தாலும், விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு செய்து குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்துள்ளதாலும், குறைந்தபட்ச ஊதிய நிர்ணய குழுவில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் நிர்வாகத் தரப்பிலோ, தொழிலாளர் தரப்பிலோ யாரேனும் ஒருவர் கலந்து கொள்ளாமல் இருந்தாலும், விலகிக் கொண்டாலும், சரிசமமான பிரதிநிதித்துவம் இல்லை என்ற அடிப்படையில் அந்தக் குழுவின் பரிந்துரையே செல்லாது என்ற நிலையினை மாற்றி குழுவின் பரிந்துரையினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சட்டத் திருத்தம் கொண்டு வந்த காரணத்தாலும் அனைத்து தொழிலாளர் நலச் சட்டங்களுக்கும் தேவையான திருத்தம் செய்து சட்டரீதியான சலுகைகளை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தொழிற்சங்கத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்களின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் குழுவினை அமைத்து அந்தக் குழு வழங்கும் பரிந்துரைகளை சட்டத் திருத்தங்களாக கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்து வருவதால், பொதுத் துறை, கூட்டுறவுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டால் தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் தொழில் தகராறு எழுப்பி தொழிலாளர் துறை மூலமாக நீதி மன்றத்திற்குச் சென்று தீர்ப்பு பெறுகிற வாய்ப்பினைத் தடை செய்கிற வகையில் கருணாநிதி ஆட்சியில் ஸ்கிரீனிங் கமிட்டி அமைத்திருந்ததை கலைத்ததால், தொழிலாளர்கள் தொழிலாளர் நீதிமன்றம் போன்ற பலவேறு நடவடிக்கைகளில் ஈடுபடும்போது "கோர்ட் பீ ஸ்டாம்ப்" ஒட்ட வேண்டுமென்று இருந்ததை ரத்து செய்தது, கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு, பாரம் தூக்கும் தொழிலாளர்களுக்கு, கடை நிறுவன ஊழியர்களுக்கு, சாயப்பட்டறை-சலவைத்தொழிலாளர்களுக்கு, பட்டுநெசவு தொழிலாளர்களுக்கு, முந்திரி தொழிலாளர்களுக்கு, ஸ்வெட்டரி சலவை தொழிலாளர்களுக்கு, திரைப்படத் தொழிலாளர்களுக்கு, தோல் பதனிடும்

(முற்பகல் 11-20)

தொழிலாளர்களுக்கு, காப்பி-தேயிலை சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு, சோப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு, பாத்திரத் தொழிலாளர்களுக்கு, நெசவு தொழிலாளர்களுக்கு, மருத்துவமனைத் தொழிலாளர்களுக்கு, ஆட்டோமொபைல் தொழிலாளர்களுக்கு, அச்சகத் தொழிலாளர்களுக்கு, தனியார் மோட்டார் தொழிலாளர்களுக்கு, தீப்பெட்டித் தொழிலாளர்களுக்கு, பீடித் தொழிலாளர்களுக்கு, அரிசி ஆயில் மில் தொழிலாளர்களுக்கு, செங்கல், ஓடு தயாரிக்கும் தொழிலாளர்களுக்கு, ஜவ்வரிசித் தொழிலாளர்களுக்கு என்று இங்கே தொழிலாளர்களுக்கெல்லாம் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்படுகிற சட்டத்தை அரசு திருத்தி அமைத்தது.





அதுமட்டுமல்லாமல், முன்பு நடந்த கருணாநிதி ஆட்சியிலும். ஆளுநர் ஆட்சியிலும் 14 தொழிற்சாலைகள் மூடப்பட்டன, மூடப்பட்ட தொழிற்சாலைகளைத் திறப்பதற்கும், வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கொடுப்பதற்கும் புரட்சித் தலைவர் அரசு முதலிடம் கொடுத்தது. மூடப்பட்ட ஆலைகள் மீண்டும் திறக்கப்பட வங்கிகள் மூலமாகவும், அரசே நேரடியாகவும் பல்வேறு வசதிகளை அளித்தது. பின்கண்ட தொழிற்சாலைகள் திறக்கப்பட்டன.

லோட்டஸ் மில்ஸ்—கோவை, சக்தி டெக்ஸ்டைல்ஸ்—பொள்ளாச்சி, சோமசுந்தரா சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ்—முத்தனேத்தல்—முகவை, பிரகாஷ் மில்ஸ்—கோவை, தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ்—திருப்பூர், ராஜா மில்ஸ்—மதுரை, பத்மா மில்ஸ்—சென்னை, சிவகுமார் ஸ்பின்னிங் மில்ஸ்—நெல்லை, இந்தியா மீட்டர்ஸ்—சென்னை போன்ற ஆலைகள் எல்லாம் திறக்கக்கூடிய நிலை உருவாக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாமல், கடலில் மூழ்கி சங்கு எடுக்கும் தொழிலாளி அவர் தொழில் செய்யும்போது இறந்தால் அவரது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் வழங்கப்படும் என்று சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. சங்கு எடுக்கும் தொழிலாளிகள் உபகரணங்கள் வாங்குவதற்கு 50 சதவிகித மானியம் வழங்கப்படுகிறது.

குறைந்தது 10.117 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள மலைத் தோட்டத்தில் 30 பேர்களு அதற்கு மேலும் வேலை செய்தால் தான் இந்தச் சட்டம் அமலாகும் என்ற நிலையை மாற்றி, 5 ஹெக்டேர் நிலப்பரப்புள்ள மலைத் தோட்டத்தில் 15 தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலை செய்தால் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்படி எண்ணற்ற சட்டங்கள். எந்தெந்த வகையில் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்களோ அவற்றை கண்டறிந்து, தொழிலாளர்கள் இல்லையென்றுச் சொன்னால் உலகமே இல்லையென்று சொல்கிற அளவிற்கு அங்கெங்கெனாதபடி எங்கும் நிறைந்து நிற்கும் தொழிலாளர்களுக்கு எல்லாச் சலுகைகளையும், உதவிகளையும் தந்த காரணத்தால் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை தொழிலாளர் நல அரசு என்று மக்கள் பாராட்டுகிறார்கள்; இந்த மன்றம் பாராட்டுகிறது; நாடு பாராட்டுகிறது; நானும் பாராட்டுகிறேன், வணக்கம்.

*திரு. ஜே. சி. டி. பிரபாகரன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி மானயக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பு பெற்றதிலே நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த நல்ல வாய்ப்பை எனக்கு அளித்து இருக்கிற மாற்றுத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த

மாமன்றத்திலே பீடுநடை போட்டு பெருமிதத்தோடு உள்ளே நுழைகிறபோதும், பல்வேறு சட்டங்களை தொழிலாளர் நலனுக்காக இயற்றிக்கொண்டிருக்கிற நல்ல அரசினுடைய சார்பிலே, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளை, எங்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிற வாக்காள பெரு மக்களை சந்தித்து சொல்கிற போதும், தொகுதி வாரியாக மக்களுக்கு நாம் ஆற்றியிருக்கிற பணிகளைப் பற்றி சொல்கிற போதும், உள்ளே வந்து வெளியே போகிற போதும், ஆளுங் கட்சித் தரப்பிலே இருக்கிற எங்களுக்கு மனநிம்மதி இருக்கிறது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன். மனநிம்மதி என்று நான் சொல்கிறபோது பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்கள் கேட்கலாம். இந்த மன நிம்மதி மற்றவர்களுக்கு இல்லையா அதை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு இல்லையா என்று நீங்கள் கருதக்கூடாது.

எங்களைப் பொறுத்தவரையிலும், மக்களிடம் 1977 ஆம் ஆண்டு இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எவற்றையெல்லாம் சொல்லி ஆட்சிப் பொறுப்புக்கு வரவேண்டும், இந்த இயக்கம் அரியணையேற வேண்டும், இங்கே அண்ணாவின் ஆட்சி அமையவேண்டும் என்று பெருமுயற்சி எடுத்துக்கொண்டார்களோ அந்த முயற்சி வெற்றி பெற்று இருக்கிறது. இந்த இயக்கத்தைச் சார்ந்த லட்சோப லட்சம் தொண்டர்கள் இந்த அரசு தொழிலாளர் நலச் சட்டங்களைக் கொண்டுவந்ததற்காக இந்த் அரசைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசு அமைந்த பிறகு தான், இந்த அண்ணா ஆட்சி அமைந்ததற்குப் பிறகு தான், முறையாக அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. அந்த வகையில் நமக்கு ஒரு மனநிம்மதி கிடைக்கிறது.

இதை நான் சொல்வதற்குக் காரணம், 1972-லே இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் விழுது விட்டு வளரக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டபோது, அது தட்டுத தடுமாறி நடை போட்ட நேரத்தில், தமிழகத்தில் மாறுபட்ட கோணத்தில் ஒரு ஆட்சியை அமைப்போம் என்று சொல்லக் கூடிய அந்தக் காலக்கட்டத்திலிருந்து, தொழிலாளர் பெரு மக்களின் உணர்வுகளை இந்தத் தமிழகம் எப்படி மதிக்கிறது என்பதை நாம் உன்னிப்பாக கவனித்துக்கொண்டு வருகிறோம். காங்கிரஸ் சர்க்கார் ஆண்ட காலத்தில் தொழிலாளப் பெரு மக்கள் உரிமைக்காகப் போராடிய நேரத்திலும், அந்த வாய்ப்பைப் பெறுகிற நேரத்திலும், தொழிலாளர்களுக்கான நலச் சட்டங்களைக் குறித்து யாரும் கவலைப்படவில்லை. தொழிலாளர்கள் நலனைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. காரணம், நாங்கள் தான் இந்தியாவிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தோம் என்று சொல்லி ஒரு மாயையை ஏற்படுத்தி, அந்த மாயையிலேயே மக்களைச் சிக்கவைத்து தங்கள் ஆட்சியை நடத்திக் கொண்டு வருகிற முயற்சிகளை எடுத்துவந்தார்கள்.



அது மட்டுமல்லாமல், தொழிலாளர்களின் உரிமைக்காக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், அந்தத் தொழிலாளர் வர்க்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ள நிலைமைக்கு வந்தது. அவர்களை முறையாக கவனிக்க வேண்டும், அவர்களுடைய நிலை உயர்த்தப்பட வேண்டும் என்று அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அந்தக் கனவை நிறைவேற்றுவதற்கு அண்ணா அவர்களுக்கு அதிக நாட்கள் ஆட்சியில் இருக்க வாய்ப்பில்லாமல் இரண்டாண்டு காலத்திலேயே நம்மை விட்டுச் சென்றார்கள். அதற்குப் பின்னாலே அரியணை ஏறி ஆட்சி அமைக்கும் வாய்ப்புப் பெற்றவர்கள் தொழிலாளர்கள் பிரச்னையில் எந்த வித ஆர்வமும் காட்டவில்லை. அப்படி திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி தொழிலாளர்கள் பிரச்னையில் எந்தவிதமான முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்காதது மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு விரோதமான முடிவுகளையும் எடுத்தார்கள். அதற்குப் பின்னாலேதான் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா வழியில் ஒரு அரசு அமைக்கவேண்டும் என்று சொல்லி, பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை அவர்களுக்குச் செய்து தரவேண்டும் என்று சொல்லி பல எண்ணங்களை வெளியிட்டார்கள். நான் இங்கே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டில் மரியாதைக்குரிய தொழிற்சங்கத் தலைவர் திரு.வி. பி. சிந்தன் அவர்கள் ஓடுகின்ற பேருந்தில் பாதுகாப்பற்ற நிலையில், அரசுக்கு எதிராக, தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு ஆதரவாக சில கருத்துகளைச் சொன்னார் என்பதற்காக, சில நடவடிக்கைகளை அது குறித்து எடுத்தார்கள் என்பதற்காக, அதற்கு மாறுபட்ட கருத்துக்குச் சொந்தக்காரர்கள், அவரை ஓடுகின்ற பேருந்தில் கத்தியால் குத்துகிறார்கள். வெளிநாட்டிற்குச் சென்று திரும்புகிற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதை விமான நிலையத்தில் கேள்விப்படுகிறார். நேராக விமான நிலையத்தி இருந்து திரு.வி.பி. சிந்தன் அவர்களைச் சந்திக்கச் செல்கிறார். அந்த உதாரணத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தொழிலாளர்களுக்கு என்று வாதாடக்கூடிய வாய்ப்பு பெற்று இருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன், ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையில், தொழிலாளர்களுக்குச் சாதகமான சூழ்நிலையில் பணியாற்றினார், அரசுக்கு விரோதமாக இருந்தார் என்பதற்காக ஓடுகின்ற பஸ்ஸில் கத்தியால் குத்துவது என்பதுதான் அன்றைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் இருந்த நிலைமை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். இன்னொரு உதாரணத்தையும் சொல்லிக் கொள்கிறேன். ஆவடி திருநகரில் திரு. குசேலர் அவர்கள் பட்டப் பகலில், பலர் முன்னிலையில் தாக்கப்படுகிறார். அந்த அளவிற்கு அப்போது தொழிலாளர்கள் தலைவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருந்தது,

ஆக, ஒரு வி.பி. சிந்தனை தாக்கிய அதே கரங்கள், ஒரு குசேலரை தாக்கிய அதே கரங்கள் தான் தமிழ்நாட்டிலே பட்டிதொட்டிகள் எங்கும், சிற்றூர்களிலும் பேரூர்களிலும் இப்படிப்பட்ட மாற்றுக் கருத்துக்களைச் சொன்னவர்களை எழ விடாமல், குரல் ஓங்கவிடாமல் தடுத்து நிறுத்துகின்ற சூழ்நிலை மட்டுமல்ல; தாக்குகின்ற சூழ்நிலை மட்டுமல்ல; அவர்கள் கரங்களைக் கட்டிப் போடுகின்ற அளவுக்கு அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்தது என்பதை நம்மால் மறந்துவிட முடியாது.

(முற்பகல் 11.40)

ஒருபக்கம் சட்டங்களைப் போட்டு உரிய முறையிலே பாதுகாப்புத் தரத் தவறிய திராவிட முன்னேற்றக் கழக அரசு மறுபக்கத்திலே தாக்குகின்ற சூழ்நிலைகளை ஏற்படுத்திய காரணத்தால் தான் எப்படிப்பட்ட சூழ்நிலை சிம்சனிலே வந்தது, எப்படிப்பட்ட சூழ்நிலை அசோக் லேலான்ட்லே வந்தது, எப்படிப்பட்ட சூழ்நிலை சிறு தொழிற்சாலைகளில் உருவானது என்பதை நம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

தொழிற்சங்கம் வேறு, ஆட்சி வேறு. தொழிற் சங்கத்திலே ஆட்சியினுடைய அதிகாரம் நுழைந்துவிடக்கூடாது, ஆணவம் நுழைந்துவிடக் கூடாது என்பதுதான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய விருப்பமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்தில் ஆட்சி என்ன நினைக்கிறதோ, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அமைச்சர் என்ன நினைக்கிறாரோ, ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற முதலமைச்சர் என்ன நினைக்கிறாரோ அதை எப்படியும் அங்கே பறக்கவிடப் பட்டிருக்கிற அந்தக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கமே நிறைவேற்றியாக வேண்டும் என்ற அந்த பலாத்காரத்திற்கு தொழிலாள பெருமக்கள் ஆளாக்கப்பட்ட சூழ்நிலைகளை இங்கே நான் உங்களுடைய நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பாதுகாப்பற்ற சூழ்நிலை மட்டுமல்ல; பாதுகாக்க வேண்டும் சட்டங்களைப் போட்டுத் தாருங்கள் என்று மன்றாடிக் கேட்டு ஆலோசனை சொன்ன அந்தத் தலைவர்களுடைய சொற்கள் எல்லாம் அந்த மந்தக் காதிலே ஏறாது இருந்த சூழ்நிலையை எண்ணிப்பார்க்கும்போது மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் இங்கே சிறப்பாக சட்டங்களை வகைப்படுத்திச் சொன்னார்கள் ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினார்கள். மேற்கு வங்கத்திலே, ஒரிசாவிலே, பீகாரிலே, கர்நாடகத்திலே இப்படிப் பட்ட சட்டங்கள் இருக்கின்றனவா என்று ஒவ்வொரு கட்சியாக நாம் முறைப்படுத்திப் பார்க்கும்போது, எல்லா அதிகாரங்களை யும் கையில் வைத்துக்கொண்டிருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே கூட இப்படிப்பட்ட சட்டங்



களை இயற்ற முடியவில்லை. தொழிலாளர்களுக்காக நாங்கள் வாதாடிக்கொண்டிருக்கிறோம் தொழிலாள பெருமக்கள் நலனுக்காக உழைத்துக்கொண்டிருக்கிறோம்; எங்கள் உடல், பொருள், ஆவி, அத்தனையும் தொழிலாளர் நலன்களுக்காகத்தான் என்று ஓங்கி குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மேற்கு வங்கத்திலேகூட இப்படிப்பட்ட பல சட்டங்களை போட முடியவில்லை என்பதை புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொன்னார்கள். எந்தச் சட்டத்தை எந்த ஆண்டு போட்டோம்; எத்தகைய உணர்வுக்குச் சொந்தக் காரரான மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இருந்து நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளியே இருக்கிற தொழிலாளர் நலச் சட்டங்களைத் தெரிந்திருக்கிற தொழிலாளர்கள், தொழிலாளர் நலன் எப்படி காங்கிரஸ் சர்க்கார் காலத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று வரலாறு தெரிந்திருக்கிற தொழிலாளர்கள் அவர்கள் நெசவுத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, கட்டிடத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி, அன் ஆர்கனைஸ்ட் செக்டாரிலே இருந்தாலும் சரி, ஆர்கனைஸ்ட் செக்டாரிலே இருந்தாலும் சரி, ஆர்கனைஸ்ட் செக்டாரில் இருந்து நல்ல பல நலன்களைப் பெற்று, வாழ்க்கை பெற்றிருக்கிற தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்தாலும் சரி— அத்தனை பேரும் இன்றைக்கு மனம் உவந்து சொல்கிறார்கள்.

இந்த சர்க்கார் இயற்றியிருக்கிற இதுபோன்ற சட்டங்களை இந்த சர்க்கார் போட்டிருக்கிற பாதுகாப்புச் சட்டங்களை எந்த ஆட்சியிலும் எந்த மாநிலத்திலும் இந்த ஒரு காலகட்டத்திலே, இவ்வளவு குறைந்த ஆண்டுகளில் நிறைவேற்றியதில்லை என்பதை இன்றைக்கு பெருமையோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

இங்கே ஒரு கருத்தை உங்கள் முன்னாலே வைப்பதை நான் பெருமையாக எண்ணுகிறேன். இந்தக் கட்டிடத் தொழிலாளர்களுக்கென்று ஒரு பாதுகாப்புச் சட்டம் வரவேண்டும்; தங்களுக்கு பாதுகாப்புத் தர வேண்டுமென்று அவர்கள் ஊர்வலம் நடத்தியதாலோ அல்லது கோரிக்கை வைத்ததாலோ இந்த அரசுக்குத் தர வேண்டும் என்பதில்லை. அவர்கள் கேட்பதற்கு முன்னாலே தொழிலாளர் பிரச்சனையில் அக்கறை கொண்டிருக்கிற ஒரு நல்ல அமைச்சரைப் பெற்றிருக்கிற காரணத்தால், ஒரு தொழிற்சங்கத் தலைவரை தொழிலாளர் நல அமைச்சராகப் பெற்றிருக்கிற காரணத்தால் இந்த மாநிலம் இப்படிப்பட்ட சட்டங்களை மற்றவர்களுக்கு முன்னோடியாகத் தந்திருக்கிறது. மத்திய அரசு நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டோம். ஆனால் இப்படிப் பட்ட சூழ்நிலையில் காலதாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே காலம் கடத்தப்படுகிறது. ஆகவே, நாம் இங்கே தனியாகச் சட்டம் போட்டு கட்டிடத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டுமென்று சொன்ன காரணத்தால்தான் கல் உடைக்கின்ற, கட்டிடம் ஏறுகின்ற அந்தக் கட்டிடத்

தொழிலாளர்கள் சொல்கிறார்கள், 'எங்கள் வாழ்க்கையில் இன்றைக்கு ஒளியேற்றி வைத்திருக்கிற இந்த நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், என்று பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கட்டிடத் தொழிலாளர்கள் சட்டத்தைப் பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இவர்கள் இன்ஷீயூர் செய்து கொள்ளவேண்டும், பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று வைத்திருக்கிறீர்கள். முதல் கட்டமாக வெளியிலே தனியார் ஒப்பந்தக்காரர்களிடம் வேலை செய்கின்றவர்கள் எத்தனை பேர்? எத்தனை பேர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு முன்னால், வர்களை பதிவு செய்துகொள்வதற்கு முன்பாக, அரசாங்கத்தினுடைய பொதுப் பணித்துறையில் எத்தனை காண்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள்? அரசாங்கத்தினுடைய ஹவுசிங் போர்டுலே எத்தனை காண்ட்ராக்டர்கள் இருக்கிறார்கள்? அரசாங்கத்தினுடைய குடிசை மாற்று வாரியத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று அவர்களுக்கு ஒப்பந்தம் அளிக்கின்றபொது, அந்த ஒப்பந்தத்திலே வேலை செயயக்கூடிய தொழிலாளாகள் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களையும் இன்ஷீயூர் செய்த பிறகு, பதிவு செய்த பிறகு தான் ஒப்பந்தம் தருவோம் என்ற ஒரு ஷரத்து இதிலே சேர்க்கப்படுமேயானால்—அந்த முறையிலே ஒரு சட்டத்தை நாம் உருவாக்கினால்தான் அந்த கான்ட்ராக்ட்காரர்கள் அரசு துறையைச் சார்ந்த நிறுவனங்களில் கட்டிடத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய இந்தச் சட்டத்திற்குள்ளே வந்த பிறகுதான், கான்ட்ராக்ட்காரர்கள் இந்த வேலையை துவக்கவேண்டுமென்ற ஒரு கண்டிஷனை போட்டால் நாம் ஒரு முன் மாதிரியைக் காட்டமுடியும். தமிழகத்திலே இந்தச் சட்டம் வருகிறபோது, தனியார்கள் இம்மாதிரி செய்ய வேண்டும் என்று கேட்கிறபோது, அரசுத் துறை நிறுவனங்களில் இந்த கான்ட்ராக்டர்களுக்கு ஒப்பந்தத்தைக் கொடுக்கிறபோது அந்த கான்ட்ராக்ட்காரர்கள் பதிவு செய்திருக்கிறார்களா இன்ஷீயூர் செய்திருக்கின்ற தொழிலாளர்களை வைத்திருக்கிறார்களா என்று பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டும் என்று நான் ஆலோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நம்மைப் பொறுத்தவரைக்கும் பல தொழிற்சங்கங்களைப் பார்த்திருக்கிறோம். பல தொழிற்சங்கத் தலைவர்களை தமிழகம் தந்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையிலே இருக்கின்ற தொழிலாளர்கள் நலனைப் புரிந்து இருக்கின்ற, உள்ள உணர்வுகளை தொட்டுப் பார்க்கக்கூடிய, நாடி நரம்புகளைத் தொட்டுப் பார்க்கக்கூடிய, தொழிற்சாலையிலுள்ள ஒருவரை தலைவராக உருவாக்க வேண்டும். அந்தத் தலைவர் தொழிலாளர்களுடைய குடும்பங்களின் நிலைகளைப் புரிந்திருக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களை திசை திருப்பமுடியாத அளவிற்கு ஒரே கோணத்திலே பார்த்து செய்கின்ற ஆற்றல் உடைய தலைவனாக உருவாக்கவேண்டும். அந்த அடிப்படையிலே அந்தத் தொழிற்சங்கங்களை நடத்த வேண்டுமென்றால், அந்தந்த தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கிற தொழிலாளர்களிலே ஒருவர் தலைவராக வரவேண்டுமென்று நாம் சொன்



னோம். இப்படி எந்த மாநிலத்திலும், ஒரு முதலமைச்சர் தொழிலாளர்களிலேயிருந்து ஒருவர் தலைவராக உருவாகவேண்டுமென்று சொன்னதாக வரலாறு இல்லை. புரட்சித் தலைவர் அவர்கள் இதைச் சொன்னார்கள். பல்வேறு இடங்களிலே இந்த நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம். தொழிற்சங்கத் தலைவர்களைப் பற்றி இங்கே சொல்ல விரும்புகிறேன். வெளியிலே இருக்கின்ற பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர்கள் வெளியிலே இருந்து வந்து, அந்தந்த தொழிற்சாலையிலே இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தேர்தலுக்கு நிற்கவேண்டுமென்றால், அந்தந்த தொழிற்சங்கங்களிலே அவர்களுடைய சொத்து கணக்குகளைக் கொடுத்து தாக்கல் செய்யவேண்டுமென்று உங்களால் ஏதாவது செயய முடிந்தால், அதை நான் வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தொழிலாளர் மத்தியிலே அடுக்கு மொழியிலே பேசி ஆதரவாகப் பேசுவதாக மேடை முன்னால் பேசி, முழங்கிவிட்டு, தொழிலாளர்களிடையே நல்லவிதமாகப் பேசிவிட்டு, தொழிலாளர்களுக்கு துரோகம் செய்கிற பல தலைவர்களைப் பார்த்திருக்கிறோம். தொழிற்சாலைகளை மூடிவிட்டு, தொழிலாளர்களை ஓடவிட்டு, அதற்குப் பின்னாலே கிடைக்கக்கூடிய ஆதாயம் என்னவென்று பார்க்கிறார்கள்.

ஆக தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் ஓட்டுக்களைப் பெற்று, அந்தத் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக வரவேண்டுமென்றால், முதலில் அவர்களுடைய சொத்துக் கணக்குகளைக் காட்டவேண்டுமென்று உங்களால் சட்டம் கொண்டு வரமுடியுமானால், அல்லது அதற்கான ஷரத்துக்களை இப்போது இருக்கின்ற சட்டத்திலே சேர்க்க முடியுமானால், அதற்காக உள்ளபடியே நாங்கள் பெருமைப் படுவோம். தொழிலாளர்களை திசைதிருப்புகின்ற அல்லது தொழிலாளர்கள் ஒருமித்த குரலில் கருத்துக்களைச் சொல்லும்போது மாறுபட்ட சங்கடத்திலே, கஷ்டத்திலே ஆளாக்கும்படியான பல தொழிற்சங்கத் தலைவர்களை என்னுடைய தொகுதியிலே அடையாளம் காட்டுகிறேன். சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று நான் சொல்வது காழ்ப்புணர்ச்சியால் அல்ல, சொத்துக் கணக்குகளைக் காட்ட வேண்டுமென்று சொல்வது, தொழிலாளர் பெருமக்கள் மீது இருக்கின்ற அன்புணர்ச்சி காரணத்தால்தான் சொல்கிறோம். பல தொழிலாளர்கள் சொல்கிறார்கள். எங்கள் தொழிற்சங்கத்திற்கு தலைவராக வரக்கூடியவர்கள் வரும்போது நல்லமுறையில் பேசினார்கள். சோஷலிசம் பற்றிப் பேசினார்கள். பொதுவுடைமைப் பூங்கா என்றெல்லாம் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு அவர்கள் படகு கார்களிலே வந்து போகின்ற நிலையைப் பார்க்கிறோம். அவர்களுடைய சொத்துக் கணக்கு பற்றிய விவரம் எங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்கிற நிலைமை பல இடங்களிலே இருக்கின்றன என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

(முற்பகல் 11–50)

நம்மைப் பொறுத்தவரைக்கும் இந்த அரசினுடைய அணுகுமுறை தொழிலாளர்களுடைய பிரச்சனையில் செம்மையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசினுடைய அணுகுமுறை, தொழிலாளர்கள் குடும்பத்தைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தொல்லை தராத அரசாகவும் இருந்து கொண்டிருக்கிறது. நான் பல்வேறு உதாரணங்களைக் கூடச் சொல்ல முடியும். பல்வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நம்மால் சொல்ல முடியும். அதிலும் குறிப்பாக, மேற்கு வங்கத்திலே இருக்கக்கூடிய நிலையை பொது உடைமை பேசுகிற மாண்புமிகு மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆளுகின்ற மாநிலத்தில் உள்ள நிலைமையை நம்மால் சுட்டிக்காட்ட முடியும். படித்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் ஸ்டிரைக் செய்யப்போனால் அதைத் தடுப்பதற்கு அவசரச் சட்டம் வருகிறது. தொழிலாளர்கள் தங்கள் உரிமைக்காக போராடுகிறபோது, அதைத் தடுப்பதற்கு சட்டம் வருகிறது. தொழிற்சாலைகளிலே பணி செய்கிற தொழிலாளர்கள் பாதுகாப்போடு வெளியே போகவேண்டும் என்று சொன்னால், காவல் துறையைச் சார்ந்தவர்களை வைத்து உள்ளே அனுப்புவோம் என்று காட்டு தர்பார் நிகழ்ச்சிகள் எல்லாம் கூட மேற்கு வங்கத்திலே இருப்பதை நாம் சுட்டிக்காட்ட முடியும். பல்வேறு உதாரணங்களை எடுத்துக் கூறவும் முடியும். மருத்துவர்கள் ஸ்டிரைக் செய்கிறார்கள். தங்களுடைய உரிமைக்காகப் போராடுகிறார்கள். அப்படிப் போராடுகிறபோது இந்த எசன்சியல் சர்விசிலே இருக்கக்கூடிய மருத்துவர்கள் செய்வது தவறு என்று மேற்கு வங்க முதல்வர் சொன்னால் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் இங்கே அத்தியாவசியப் பணிகளில் ஸ்டிரைக் வேண்டாம் அதைத் தடுத்து, நிறுத்துவதற்கு சட்டம் வரவேண்டும் என்று சொன்னால், இங்கே ஓங்கி குரல் எழுப்புகிறார்கள். எனவே இதையெல்லாம் நம்மால் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியாது.

அடுத்து ஒன்றை நான் சொல்லி, விடைபெறலாம் என்று நினைக்கிறேன். நகர அமைப்பைப் பற்றி ஒரு மானியக் கோரிக்கையிருக்கிறது. அதைப்பற்றி நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த நகர அமைப்புக்காக ஆண்டுதோறும் பணத்தை ஒதுக்கிக் கொண்டே வருகிறோம். நமக்கு என்று இருக்கிற சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு சில பணிகளை செம்மையாக முடிக்கவேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் இன்றைக்கு சென்னை நகரமும் அதைச் சுற்றியுள்ள புறநகர்களும் மிக வேகமாக வளர்ந்து கொண்டு வருகிறது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருக்கக்கூடிய மக்கள், தொழில் ரீதியாக வந்திருக்கக்கூடிய மக்கள் தொழிற்சாலைகளிலே வேலை பார்க்கக்கூடிய மக்கள் இங்கே வந்து குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய வில்லிவாக்கம் தொகுதி வளர்ந்துக் கொண்டிருக்கிற ஒரு பகுதியாக





இருக்கிறது. ஏறத்தாழ 1 லட்சத்து 94 ஆயிரம் வாக்காளர்கள் இருந்தார்கள், 1980 ஆம் ஆண்டிலே நடந்த தேர்தலின்போது. இன்றைக்கு ஏறக்குறைய 2 லட்சத்து 55 ஆயிரத்தைத் தாண்டக்கூடிய அளவில் வாக்காளர்கள் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. தமிழ்நாட்டிலே ஒரு பெரிய தொகுதியாக இருக்கிறது. அப்படி இருக்கின்ற இடங்களிலே இன்றைக்கு ரியல் எஸ்டேட் போடுபவர்கள் ஆங்காங்கே இருக்கிற இடத்தை பிரித்து தொழிலாளர் பெருமக்களாக வருகின்றவர்களுக்கு முறையாக விற்பதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற கொஞ்ச வருவாயில் ஒரு கிரவுண்ட் 5 ஆயிரம் ரூபாய்க்குக் கிடைத்தால் அல்லது 10 ஆயிரத்திற்குக் கிடைக்குமானால், அதை வாங்குவோம் என்று போகிறார்கள். திடீர் திடீர் என்று நகரங்கள் உருவாகின்றன. புதிய புதிய பெயர்களை வைக்கிறார்கள். அப்படி வைக்கிறபோது அதை பார்க்கிற மக்கள், அது அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவா? அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவா என்ற சட்ட நுணுக்கங்களை எல்லாம் பார்ப்பதற்கு நேரம் இல்லை. ரியல் எஸ்டேட் போடுபவர்கள் ஆங்காங்கே கல்லைப் போடுகிறார்கள். இது முக்கால் கிரவுண்ட், இது ஒரு கிரவுண்ட் என்று சொல்கிறார்கள். அங்கீகாரம் பெற்றதா, அதற்கு முறையான சாலை வசதிகள் வருமா? அதற்கு முறையான குடிநீர் வசதிகள் கிடைக்குமா, எம்.எம்.டி.ஏ.வினுடைய ஏரியாவிற்குள்ளே அது இருக்கிறதா என்றெல்லாம் ஏழைத் தொழிலாளர்கள் பார்ப்பதற்கு நேரம் இல்லை. ரியல் எஸ்டேட் ஓனர்கள் இன்றைக்கு ஆங்காங்கே இப்படிப்பட்ட மனைப் பிரிவுகளை ஏற்படுத்தி, அடிப்படை வசதிகளை செய்து தராத காரணத்தால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குள்ளே போகின்றபோது மக்கள் கேட்கிறார்கள். புதிய புதிய நகரங்கள், திடீர் நகரங்கள் ஆங்காங்கே மனைப்பிரிவுகள் உருவாகிறபோது, அவைகளை முறைப்படுத்துவதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்? அப்படிப்பட்ட நகரம் உருவாகிறபோது, எம்.எம்.டி.ஏ.வினுடைய அதிகாரம் பெற்றிருக்கிறதா? அவர்கள் பெட்டர்மென்ட் டாக்ஸ் கட்டியிருக்கிறார்களா? அவர்கள் முறையாக அரசினுடைய அனுமதியைப் பெற்றுதான் கல் போடுகிறார்களா என்று தெரியவில்லை. நான் லோகல் பாடியிலே விசாரித்துப் பார்க்கிறேன், நகரியத்திலே விசாரித்துப் பார்க்கிறேன். பஞ்சாயத்திலே கேட்கிறேன். இப்படி தனியாக கல் போட்டு, இவர்கள் இடத்தை பிரித்து விற்று வருகிறார்களே, அதைத் தடுப்பதற்கு சட்டம் இருக்கிறதா என்று கேட்கின்றபோது, அவர்கள் சொல்கிறார்கள், கல் போடுகிறார்கள், நேரடியாகத் தலையிடுவதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. நகர அமைப்பு என்று வருகிறபோது, அதிலே சென்னை நகரம் வளர்கிறபோது புதிய புதிய குடியிருப்புகள் தோன்றுகிறபோது முறையான முறையிலே அந்த மனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்பட்டவைகளாக இல்லை. தொழிலாளர் பெருமக்களுக்கு, வாழ வந்திருக்கிற மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பின்னாலே பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு நகர அமைப்பிலே மாற்றங்கள் இருக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே எடை அளவுகளைப் பற்றி ஒரு பிரிவு இருக்கிறது. பல இடங்களிலே நான் கேள்விப்படுகிறேன். இந்த எடை அளவுகள் பார்க்கிறபிரிவில் போதிய ஸ்டாப் இல்லை. ஆங்காங்கே புகார்கள் வருகின்றன. இப்படி புகார்கள் வருகிறபோது, அவற்றை எல்லாம பார்ப்பதற்கு உடனடியாக கவனிப்பதற்கு பறக்கும் படை போன்ற ஒரு அமைப்பை, இந்தத் துறையிலே உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இப்போது பல்வேறு ரேசன் கடைகளிலே நாம் பார்க்கிறோம், எடைகளை நிறுக்கின்றபோது, உதாரணமாக கிருஷ்ணாயில் வாங்குகிறபோது, பல தாய்மார்கள் சொல்கிறார்கள், 5 லிட்டர் என்று கொடுக்கிறார்கள், ஆனால் அதிலே பார்க்கிறபோது $3\frac{1}{2}$ லிட்டர்அல்லது 4 லிட்டர்தான் இருக்கிறது என்று தாய்மார்கள் எல்லாம் அங்கலாய்க்கிறார்கள். சில இடங்களில் தகவல் வந்தபோது நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட நடவடிக்கைகள் காலதாமதப்படுகிறபோது இப்படிப்பட்ட நிலைமைகளிலே சுணக்கம் ஏற்படுகிறபோது விரைவாகப் பணியை முடிப்பதற்கு, விரைவாக அவைகளைச் செய்வதற்கு பறக்கும் படை போன்ற ஒரு அமைப்பை இந்தத் துறையிலே ஆரம்பித்தாக வேண்டும். அப்படி அமைப்பை உருவாக்குகிறபோது தொலைபேசி இருக்கக்கூடிய வகையில் நிலைமைகளை வைத்தால் வெளியிலே இருக்கிற மக்களுக்கு பொதுவாக ஒரு தொலைபேசி எண்ணை இதற்கென்று கொடுத்து, எப்படி 100 என்ற எண்ணுக்கு காவல் துறை என்று சொல்லுகிறோமோ அப்படி உடனடியாக கான்டாக்ட் செய்வதற்கு, தொடர்பு கொள்வதற்கு இந்தத் துறையிலே வைத்துக் கொடுப்பார்களேயானால், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை யெல்லாம் அரசு எடுக்கிறது, அரசு கவனிக்கிறது என்று மற்றவர்களுக்குத் தெரியக்கூடிய வாய்ப்பை நாம் உருவாக்க முடியும் என்பதை யோசனையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திலே கலந்துக் கொண்டு, இந்த உரையை ஆற்றுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக, மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நல மானியத்தின் மீது பல்வேறு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களை யெல்லாம் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் சார்பிலே, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பின்னால் தொழிலாளர்களுக்காக எவ்வளவு நல்ல நல்வாழ்வு திட்டங்களையெல்லாம் அடுக்கடுக்காக கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றமும், தமிழ்நாடும் தெரிந்துக் கொண்டிருக்கிறது. எந்தப் பிரிவைச் சார்ந்த தொழிலாளர்களாக இருந்தாலும், எந்தக் காலத்திலேயும் குறைகள் இருக்கிறது



என்ற நிலை எப்போதுமே உண்டு. பணிபுரிகின்ற ஊழியர்களுடைய பிரச்னை என்பது ஒரு தொடர்புடைய பிரச்னை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, எல்லாத் தொழிலாளர்களுடைய, அத்தனை கோரிக்கைகளையும், தீர்த்துவிட முடியுமா என்று சொன்னால், அது எந்த அரசாலும் செய்ய முடியாதது என்பதை அனைவரும் ஒத்துக்கொள்வார்கள்.

ஆனால் இந்த அரசைப் பொறுத்த அளவிலே ஆட்சிப் பொறுப்பிலே 1977-லே அமர்ந்த பின்னால், இத்தனை ஆண்டுகளாக தொழிலாளர்களுக்கு அடுக்கடுக்காக சாதனைகளை செய்துகொண்டு வந்திருக்கிறது என்பதை பல்வேறு ஊழியர்களும், இன்று தமிழக அரசுக்கு பாரட்டி கடிதங்கள் எழுதியதில், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டி வாழ்த்தியிருக்கிறார்கள். இவைகளின் மூலமாக தமிழ்நாட்டு மக்கள், இந்த அரசு தொழிலாளர் நல அரசாக இருக்கிறது என்பதை பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணத்திற்கு நான் சில கருத்துக்களை, இந்த அரசு செய்த சில நன்மைகளையெல்லாம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1977-க்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, போக்குவரத்துக் கழக ஊழியர்கள் எல்லாம் சம்பள உயர்வு வேண்டும் என்று பல ஆண்டுக் காலமாக போராடி வந்தார்கள். போராடி வந்த நேரத்திலே அவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொடுக்கப்பட்ட பரிசு, சம்பள உயர்வு அல்ல, 'இரும்புக் கரம் கொண்டு நான் ஒடுக்குவேன்' என்ற பேச்சு. இதை அன்றைய முதல்வர் கருணாநிதி அவர்கள் சொன்னார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்,

அது மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களும் உணர்ந்திருக்கிறார்கள். அப்படி இரும்புக்கரம் கொண்டு தொழிலாளர்களை ஒடுக்குவேன் என்று சொன்ன அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதற்குப் பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், தொழிலாளர்களுக்கு பல நன்மைகளைச் செய்துள்ளது. குறிப்பாக போக்குவரத்துத் தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால், இந்தியாவிலே, நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநிலத்திலே தான், அரசாங்கம் தொழிலாளர்களுக்காக சாதனை செய்கிறது. அவர்களுக்காக குரல் கொடுக்கிறது என்று பல்வேறு நேரங்களிலே, கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் இந்த சட்டமன்றத்தின் வாயிலாக ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், சம்பள உயர்வைப் பொறுத்த அளவிலே அரசு ஊழியர்களுக்கு குறிப்பாக போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்கிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை செய்கிற ஒப்பந்த

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1984 மார்ச் 16

(நண்பகல் 12.00)

முறை ஒழுங்காக முறையாக நடத்தப்பட்டிருக்கிறதா இதற்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலங்களிலே, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே எந்த நன்மையும் செய்யவேயில்லை என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் இந்த அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னால் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும் போக்குவரத்து இலாகாவிற்கு பொறுப்பு ஏற்றிருக்கின்ற அண்ணன் திரு. முத்துசாமி அவர்களும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வைக் கொடுத்தார்கள். எப்படிக் கொடுத்தார்கள் என்றால் இந்தியாவிலேயே உள்ள 22 மாநிலங்களிலேயும் உள்ள எந்தப்போக்குவரத்துக் கழகத்திலேயும் இல்லாத அளவுக்கு இந்த அரசு செய்திருக்கிற சாதனை மிகப் பெரியது. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை என்று இருந்த ஒப்பந்தம் 3 ஆண்டுக் காலத்திற்கு ஒரு முறை என்ற முறையிலே ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவர் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 3 ஆண்டுகாலத்திற்கொரு முறை போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தத்தை உண்டாக்கியவர் புரட்சித் தலைவர்தான்.

அது மட்டுமல்ல, கல் உடைக்கின்ற தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் இன்னும் பணிபுரிகின்ற பல்வேறு தொழிலாளர்கள் அவர்கள் அகாலமாக மரணம் அடைய நேரிட்டால் அவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் தொகையும் பாதுகாப்பும் கொடுக்கிற அளவுக்கு இந்த அரசு அதற்கான உத்திரவுகளைப் போட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, தொழிலாளர் நலத் துறையை எடுத்துக் கொண்டால் தொழிலாளர்கள் பிரச்னைகள் பல்வேறு நேரங்களிலே எழுகிறபோது அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முதலாளிகளையும் தொழிலாளிகளையும் சமரசப் படுத்த வேண்டும். அப்படி சமரசப் பேச்சின் மூலமாக தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்யவேண்டும், தொழிலாளர்கள் பிரச்சினை ஏற்பட்டால் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடுகள் செய்து உடனுக்குடன் தீர்த்துவைக்க முயற்சிகளைச் செய்துவருகிறது அரசு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கன்சிலியேஷன் முறையிலே பேச்சுவார்த்தைகள் ஏற்படவில்லை என்றால் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு கடைசியிலே லேபர்கோர்ட்டிலே பிரச்சினையைவைத்து அதன் மூலமாக தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னால் பல நேரங்களிலே தொழிலாளர்களும் அரசும் அதை ஏற்றுக்கொள்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம். ஒரு லேபர் கோர்ட் ஒரு தீர்ப்பை வழங்குகிறபோது அந்தத் தீர்ப்பை மதிக்கிறோம். அதே மதிப்பை நீதிமன்ற தீர்ப்பு வழங்கப்படுகிற போதும் ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் நமக்கு வந்தாக வேண்டும். நாட்டிலே அதுபோன்ற நோக்கு



1984 மார்ச் 16] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

இன்றைக்கு நடக்கிறதா என்றால் இல்லை. குறிப்பாக எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கிற நல்ல பண்பாடு இருக்கிறதா என்று பார்த்தால் இல்லவே இல்லை. சட்டமன்றத்திலே நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை கொளுத்துகிறார்கள். ஒரு நீதிவிசாரணைக் கமிஷன் கொடுத்த தீர்ப்பையே சட்டமன்றத்திலே கொளுத்துகிறார்கள், என்று சொன்னால் அது சரியா என்பதை நாட்டு மக்கள் இன்றைக்குக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர் துறையிலே லேபர்கோர்ட் மூலமாக கொடுக்கப்படுகிற தீர்ப்பை எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எப்போதாவது கொளுத்தியதுண்டா? நான் கேட்கிறேன். ஒரு நீதிபதிஅவர்கள் கமிஷன் என்ற அடிப்படையிலே விசாரித்து அளித்த தீர்ப்பை இங்கே கொளுத்துகிறார்கள் என்றால் அவர்களுடைய அரசியல் வாழ்விலே அரசியல் எண்ணத்திலிருந்து அவர்களை நாட்டுமக்கள் அறவே ஒதுக்கி விட்டார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே தொழிலாளர் நல இலாகா மூலமாக செய்யப்படுகிற அத்தனை பணிகளையும் இன்றைக்கு நாட்டு மக்கள் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மிக அருமையாகப் பாடுபடுகிறார்கள். குறிப்பாக தொழிலாளர் நல வாரியம் என்ற ஒரு வாரியத்தை ஏற்படுத்தி இந்த நாட்டில் பணிபுரிகின்ற தனியார் துறையாக இருந்தாலும் அரசுத் துறையாக இருந்தாலும் எந்தத் துறையில் பணிபுரிகின்றவர்களாக இருந்தாலும், அவர்களின் எதிர்கால வாழ்க்கை நலம் பெறவேண்டும் என்ற காரணத்திற்காக தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக பல்வேறு பணிகளை இந்த அரசு செய்து வருகிறது. குறிப்பாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு இராகவானந்தம் அவர்களும் மிக அருமையாக செயல்படுகிறார்கள்.

தொழிலாளர் நலத்திற்காக தங்கும்ஓய்வு விடுதி குற்றாலத்தில் கட்டியிருக்கிறார்கள். சென்னையில் அவர்கள் வந்தால் இங்கே வந்து தங்குவதற்கு பல்வேறு வகையான ஓய்வு விடுதிகளை இங்கே அமைத்து இருக்கிறார்கள். அதற்கு ஜீவா இல்லம் என்று பெயரிட்டு தொழிலாளர் தலைவர்கள் வந்தால் 3 ரூபாய், 5 ரூபாய் வாடகைக்கு கொடுத்து சென்னையில் தங்குகிற அளவக்கு இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கின்ற அரசு இந்த தொழிலாளர் நல அரசு, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசு என்பதை இந்த நேரத்தில்நான்பணிவன்போடு குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் இப்படி எண்ணற்ற சாதனைகளை செய்து கொடுக்கக்கூடிய இந்த அரசை காரணம் இல்லாமல் எதிர்க்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக மின்சார வாரியத்தை எடுத்துக்கொண்டால் தமிழக அரசு பொறுப்பில் இருக்கிறது. நல்லதை செய்தாலும் எதிர்க்கிறார்கள். நல்லதை செய்கின்ற நேரத்தில் பாராட்டுகின்ற மனப்பான்மை, பக்குவம் எப்படி திராவிட முன்னேற்றக்கழகம் போன்ற எதிர்கட்சிகளுக்கு

இல்லையோ அதே எண்ணம், தொழிற்சங்கங்களிலும் அந்த
எண்ணத்தை இன்று வளர்த்துவிட்டு இருக்கிறார்கள். மின்சார
வாரியத்தில் பணி புரிகின்ற ஊழியர்களுக்கு இந்த மின்சார
வாரியத்திற்கு தமிழக அரசு மிகச் சிறப்பாக நன்மையை
செய்கிறது. ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று
பார்த்தால் அவர்களுடைய குறைகளைச் சொல்லவில்லை. இந்த
அரசு சில சாதனைகளைச் செய்தும் மின்சார வாரியத்தில் பணி
புரிகின்ற ஊழியர்கள் தங்களுக்கு குறைகள் இருக்கிறது, அரசு
இவைகளை செய்து தரவேண்டும் என்று சொன்னால் நாங்கள்
அவர்களுடைய கடமையை பாராட்டி இருப்போம். அதை
விட்டுவிட்டு அவர்கள் அரசை எதிர்க்கிறார்கள். ஒரு அரசியல்
கட்சி எதிர்க்கின்ற வேலையை தொழிற்சங்கம் செய்து வருகிறது
என்று சொன்னால் இவர்களுக்கு என்ன செய்ய வேண்டும்
என்பதை இந்த மன்றத்தில் வேதனையோடு குறிப்பிட்டுச்
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பாக
'தினகரன்' பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்தது. அதை
நம்முடைய அவை உறுப்பினர்கள் பார்த்து இருப்பார்கள்
என்று கருதுகிறேன். அதிலே தமிழ்நாடு மின் ஊழியர் தொழி
லாளர் முன்னேற்ற சங்கம் என்ற சங்கத்தின் சார்பில் அவர்கள்
அறிக்கையை வெளியிட்டு திராவிட முன்னேற்ற கழகத்தைச்
சார்ந்த தொழிற்சங்கத்தின் மூலமாக என்ன பணி செய்து
இருக்கிறார்கள் என்று பார்த்தால் அரசுக்கு கோரிக்கை வைக்க
வில்லை. மின்சாரவாரிய ஊழியர்கள் தங்களுக்கு சலுகைகள்
தரப்பட வேண்டும் என்று அரசிடம் கேட்கவில்லை. அதற்கு
மாறாக அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் இந்த
தேதியில் 16ஆம் தேதி அன்று சென்னையில் எழும்பூரில் உள்ள
பெரியார் திடலில் பொதுக்கூட்டம் நடைபெறும் என்று அறிவிப்பு
செய்து இருக்கிறார்கள். ஒரு தொழிற் சங்கம் என்ன செய்கிறது
என்பதை இந்த நாட்டு மக்கள் உணரவேண்டும் என்ற
காரணத்திற்காக சட்டமன்றத்தில் இதை நான் குறிப்பிட்டுக்
காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய அறிவிப்பு கழக தேர்தல்
நிதி அறிவிப்பு விழா. நன்றாகப் பாருங்கள். கழக தேர்தல் நிதி
அளிப்பு விழா, யார் செய்கிறார்கள்? ஒரு தொழிற்சங்கத்தைச்
சார்ந்தவர்கள் செய்கிறார்கள். இவர்களுக்கு உதவியை இந்த
அரசு எதற்காக செய்யவேண்டும் என்றுகூட நான் வேதனையோடு
கேள்வியை கேட்க கடமைப்பட்டு இருக்கிறேன். தொழிலாளர்
களுக்கு நல்ல திட்டங்களைச் செய்கின்ற இந்த அரசை,
மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அரசை, அரசாங்கத்தி
னுடைய ஊதியத்தைப் பெறுகின்ற மின்சார வாரியத்தில் உள்ள
ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு மின் கழக தொழி
லாளர்முன்னேற்ற சங்கம் என்ற பெயரை வைத்து இருப்பவர்கள்
அறிக்கையை வைத்து இங்கே சொல்லியிருக்கிறார்கள். திராவிட
முன்னேற்றக் கழக. கழக தேர்தல் நிதி அளிப்பு விழா என்று மிக
அருமையாக விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள். அங்கே யார்
யார் எல்லாம் பேசுகிறார்கள் என்று பாருங்கள். திராவிட
முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள்
பேசுகிறாராம், பொருளாளர் திரு. சாதிக்பாட்சா பேசுகிறாராம்
அங்கே கலந்துகொள்ளக்கூடிய அந்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள்



யார் யார் என்றால் திரு. ப.ரத்தினசபாபதி, திரு. கோவிந்தசாமி,
திரு. ஜெகன்நாதன் இவர்களைத் தவிர இன்னும் அந்தத்
தொழிற்சங்கத்தில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் அந்த மின்சார
வாரியத்தில் பணிபுரிபவர்கள் என்பதை நான் வேதனையோடு
சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவர்கள் எல்லாம்
தொழிற்சங்கத்தின் தோழர்களுக்காக கோரிக்கைகளை
வைக்காமல் இந்த அரசை மாற்ற வேண்டும் என்ற மிகப்பெரிய
தவறான செய்தியை இந்த அரசை மாற்றவேண்டும் என்பதற்காக
திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த அதன் தலைவர்
கலைஞர் அவர்களிடத்தில் போய் கழக தேர்தல் நிதி அளிப்பு
விழா என்று வைத்து இன்று மாலையில் 2 லட்சம் ரூபாய்
கொடுக்கிறார்களாம்.

(முற்பகல் 12-10)

இது நியாயமா? இது தர்மமா? இது சரியா என்பதை அந்தத்
தொழிற் சங்க நண்பர்களைப் பார்த்துக் கேட்கக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஏனென்றால் இந்த அரசு சாதனைகளைச்
செய்யவில்லை என்று சொல்லி நீங்கள் செய்ய வேண்டுமென்று
மின்சார ஊழியர்கள் சொல்லியிருந்தால் அதை நான் பாராட்டி
யிருப்பேன். ஏன், எதற்காக அந்த உணர்வு எனக்குத் தோன்று
கின்றது என்றால் நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 12
ஆண்டுக் காலம் பணியாற்றியவன் என்ற முறையிலே
அங்கேயுள்ள நிலைமைகளை நன்றாகக் கற்றவன். மாண்புமிகு
புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்த
மின்சாரத் துறையின் மூலமாக எத்தனை பேர்களுக்குப் பதவி
உயர்வுகள் வழங்கப்பட்டிருக்கின்றன, எத்தனை பேர்களுக்கு புதிய
வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவேன்.
நாட்டிலே எந்தயிடத்திலேயும் தொழிற்சங்கங்களுக்குக்
கிடைக்காத உரிமைகளெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
ஆனால் அந்த மின்சாரத் துறை ஊழியர்கள் இந்தத் தேர்தல்
நிதியளிப்பைக் கருணாநிதியிடம் கொடுத்து இந்த ஆட்சியை
மாற்ற வேண்டுமென்று சொல்வார்கள் என்றால் இதற்கு ஒரு
தொழிற்சங்கமா? இந்த அரசு அவர்களுக்கு எதையுமே செய்ய
வில்லையா என்பதை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ள
விரும்புகிறேன்.

இந்த அரசு செய்கின்ற நல்ல பணிகளை என்றைக்காவது
எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்—திராவிட முன்னேற்றக் கழக
இயக்கத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் பாராட்டியிருக்
கின்றனவா, வாழ்த்து தெரிவித்து இருக்கின்றனவா என்றால்
ஒரு நாளும் இல்லை. அரசு அளிக்கின்ற சலுகைகளை முதன்
முதலாகப் பெறுபவர்கள் எதிர்க்கட்சியைச் சார்ந்த
நண்பர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவன்
போடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி எத்தனையோ
நன்மைகளைப் பெற்று விட்டு, தமிழ்நாட்டிலே புரட்சித்
தலைவரவர்களின் அரசு தொழிலாளர் நல இலாக்காவின்
மூலமாகத் தருகின்ற சலுகைகளை யெல்லாம் பெற்று விட்டு

அரசை எதிர்க்கிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் இவையெல்லாம் பொறுத்துக் [illegible] என்பதை நான் வேதனையோடு கேட்டுக் [illegible] கொண்டிருக்கிறேன். இந்த அரசை மாற்ற வேண்டுமென்று [illegible] கருணாநிதி அவர்களிடத்திலே [illegible] வேதனையோடு கேட்கக் [illegible]. [illegible] எங்காவது கொடுத்தால் [illegible] தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களே கொடுப்பது [illegible] சரியல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர் நல இலாக்காவைப் பொறுத்தவரையில் இந்த அரசு மிகச் சிறப்பான பணிகளைச் செய்து வந்திருக்கிறது என்பதைப் பல [illegible] நாங்கள் எடுத்துக் காட்டி வருகிறோம். ஆகவே, இந்த அரசை [illegible] வேண்டிய பொறுப்பை இன்று [illegible] மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற போது, தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளைத் [illegible] மூலம் நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க [illegible] எந்த அளவிற்கு [illegible] வேகமாகப் பிரச்சினைகளைத் தீர்த்து வருகிறார்களோ அதற்கு [illegible] முட்டுக்கட்டை போடாதீர்கள். இந்த [illegible] அரசு [illegible] தொழிலாளர் நல [illegible] செயல்படவில்லை என்று நீங்கள் சொல்வது சரியல்ல, சரியல்ல, சரியல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

தொழிலாளர் நல இலாக்காவைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற [illegible] நம் [illegible] தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் [illegible] சபாவை [illegible] சொல்லி, அவர்கள் மிகவும் [illegible] பணியாற்றுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தை இ[illegible] கொண்டு வந்திருக்கிறது. [illegible] வேண்டாமா? அதைப் போலவே, கட்டிடத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டத்தை [illegible] கொண்டு வந்திருக்கிறதே [illegible] பாராட்டினார்களா? பீடித் தொழிலாளர்களுக்குப் [illegible] கொண்டு வந்ததே. அதைப் பாராட்டினார்களா? [illegible] அரசு வேண்டிய கம்யூனிஸ்ட் [illegible] சேர்ந்தவர்கள் கூட இன்றைக்கு வெளியிலே [illegible] இவர்களுக்கெல்லாம் [illegible] என்றால் கேட்க விரும்புகிறேன் [illegible] என்று பட்ட [illegible] சம்பந்தப் நடத்திக் கொண்டிருக்கின்ற [illegible] கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே [illegible] கருத்துக்களை [illegible] தரமாக எடுத்து வைக்க வேண்டாமா? கோழைகளைப் போல ஓடி விட்டார்களே என்பதை அறிந்து நான்மிக மிக வேதனைப்





படுகிறேன். நெசவாளர் பாதுகாப்புச் சட்டத்தைச் சிறப்பான முறையில் இந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இது போன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வரவில்லை என்பதை [illegible] பெருமிதத்தோடு பேசிக்கொள்ள முடியும்.

அதைப் போலவே, கட்டிடத் தொழிலாளர்களுக்கான பாதுகாப்புச் சட்டம்—அவர்கள் திடீரென்று மரணம் அடைந்து விட்டால் அவர்கள் குடும்பங்களுக்கு உதவி செய்வது போன்ற இப்படிப்பட்ட பல சட்டங்களைக் கொண்டு வருகின்றது நம்முடைய அரசு. அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். தொழிலாளர் நல இலாக்கா அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

சிம்சன் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அது எந்த அளவிற்குத் தீராமல் இருந்த ஒரு பிரச்சினை என்பதை நாம் அறிவோம். கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த நண்பர்கள் தீரக் கூடாது என்ற நோக்கத்தோடு பிரச்சினைகளையெல்லாம் ஆரம்பித்து வைத்தார்கள். அப்படி ஆரம்பித்து வைத்த நேரத்திலே பிரச்சினையை வளர்த்து கடைசியில் தொழிலாளர் நல அமைச்சரிடத்திலே இந்தப் பிரச்சினை வந்தது. இந்தப் பிரச்சினையை அவர்களால் தீர்க்க முடியாது என்று எதிர்க்கட்சிக்காரர்களால் பேசப்பட்டது. அப்படி தீர்க்க முடியாது என்று எண்ணிக் கொண்டு பல்வேறு இடங்களுக்கும் அவர்கள் சுற்றறிக்கை அனுப்பினார்கள். அந்த சிம்சன் பிரச்சினையை வைத்து தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல்வேறு இடங்களிலும் பிரச்சினையை வளர்க்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் [illegible] தொழிற் சங்கங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பினார்கள். [illegible] திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் எல்லா இடங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பினார்கள். சிம்சன் பிரச்சினையை வைத்து தமிழ்நாடு பூராவும் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற [illegible] எண்ணத்தோடு அவர்கள் எல்லாம் சுற்றறிக்கை விட்டார்கள்.

ஆனால் இந்த அரசு அந்த முதலாளிகளையும் அழைத்து வைத்து, தொழிலாளர்களையும் அழைத்து [illegible] வைத்து, கோட்டையிலே வைத்து பேசி எந்த அளவிற்கு அந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தார்கள் என்பதை எல்லாம் தமிழக மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆகவே [illegible] தொழிலாளர்களுக்காகப் பாடுபடுகின்ற ஒரே அரசு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தான். ஆனால் இந்த புரட்சித் தலைவர் அவர்களின் அரசை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று சொல்லி, இந்த அரசு செய்வது எதுவும் சரியில்லை என்று சொல்லி, எனவே இதை நாங்கள் எப்படியாவது மாற்றியே தீருவோம் என்ற எண்ணத்தோடு இந்த அரசின் மீது எந்த அளவிற்குத் தாக்குதல் தொடுத்தாலும், இந்தச் சட்டமன்றத்திற்கு வெளியே தாக்குதல் தொடுத்தாலும் சட்ட மன்றத்தின் உள்ளே தாக்குதல் தொடுப்பட்டாலும் அதை

எல்லாம் சந்திப்பதற்கு புரட்சித் தலைவரின் இந்த அரசின் படைக்கலம் தயாராக இருக்கின்றது என்று சொல்லி, இந்த அரசு கொண்டு வந்த இந்த திட்டங்களை நான் மனதார ஆதரித்து விடை பெறுகிறேன். நன்றி.

திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைய தினம் தொழிலாளர் வர்க்கத்துக்கு அரசு ஆற்றியுள்ள நன்மைகள் பற்றியும், தமிழகத்திலே புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு எந்த அளவிற்குத் தொழிலாளர்கள் வளமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும், தொழிலாளர்கள் எந்த அளவிற்கு இன்றைக்கு தங்களுடைய குடும்பங்களை நிம்மதியோடு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் எனக்கு முன்னால் இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள்.

தொழிலாளர் நலப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு தொழிலாளியாக இருந்து இன்றைய தினம் அமைச்சராகி தன்னுடைய வாழ்க்கையில் உயர்ந்து இருக்கிறார் என்பது ஓரளவிற்கு அனைவரும் அறிந்த ஒன்றாகும். யார், யாரை எந்தெந்தப் பொறுப்புக்கு விட்டால் அவர்கள் செம்மையாகச் செய்வார்கள் என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்து பார்த்துத் தான் தொழிலாளர்களைப் பற்றி நன்கு புரிந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைத் தொழிலாளர் நல அமைச்சராக ஆக்கி இருக்கிறார்கள். அதன் காரணமாக, அந்த சீரிய முயற்சி காரணமாக தமிழகத்தில் தொழிலாளர்கள் வளமாக வாழ்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆலைத் தொழிலாளியானாலும் சரி, விவசாயத் தொழிலாளியானாலும் சரி, அல்லது மற்ற நிறுவனங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களானாலும் சரி அவர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு தமிழகத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் மன நிறைவோடு வாழ்கிறோம் என்ற நிம்மதியைப் பெற்றிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் இன்றைய தினம் தொழிலாளி வர்க்கத்தைப் பற்றி இந்தத் தொழிலாளர் மானியத்திலே பேசுவதற்கு எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்கள் வராமல் இருப்பது வருந்தத்தக்க ஒன்று என்பதைச் சொல்ல நான் கடமைப் பட்டிருக்கிறேன் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தொழிலாளர்



களைப் பற்றிக் கவலைப்பட எங்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்று சொல்கிற கம்யூனிஸ்ட் ஆனாலும் சரி, தொழிலாளர்களுக்காகவே நாங்கள் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, இன்றைய தினம் இந்த மானியக்கோரிக்கை வருகின்ற போது அதிலே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்து, தொழிலாளர்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்களின் அரசு மேலும் செய்ய வேண்டிய பணிகளை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையிலிருந்து அவர்கள் தவறி இருக்கிறார்கள். ஆகவே எந்த அளவிற்கு அவர்கள் தொழிலாளர்களுக்காக அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சட்ட மன்றத்திற்கு வருகின்ற போது, இங்கே சில கடமைகளும், விதிமுறைகளும் இருக்கின்ற போது அந்த விதி முறைகளுக்கு மாறாக நடந்து மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளை மறந்து சட்ட மன்றத்தை ஒரு சாக்கடையாக மாற்றுவதற்கான முயற்சியைத்தான் இன்றைக்கு எதிர்க் கட்சியினர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

நியாயமான, தேவையான உதவிகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்வதிலே, தன்னுடைய கடமைகளை ஆற்றுவதிலே அவர்கள் சரியாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவாகச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்னால் தமிழகத்தை ஆண்ட காங்கிரஸ் ஆட்சியானாலும் சரி, அதற்குப் பிறகு ஆண்ட கருணாநிதியினுடைய ஆட்சியானாலும் சரி, தொழிலாளர் வர்க்கத்திற்கென்று என்ன செய்திருக்கிறார்கள் என்று கேட்போமானால் அது ஒரு கேலிக்குரிய பிரச்னையாகும். தொழிலாளர் வர்க்கத்தை நசுக்கி, சாறாகப் பிழிந்து தன்னை வளர்த்துக் கொண்டவர்கள் தான் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர் களுடைய வாழ்வுக்காக, அவர்கள் வசதிக்காக, அரும் பாடு பட்டவர் என்பதை இன்றைக்கு நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட வகையிலே தான் பேரறிஞர் அண்ணாவினுடைய கனவுகளை எல்லாம் நனவாக்க வேண்டு மென்ற வகையிலே தான் இன்றைய தினம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலாளர்களுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு இருக்கிறார், வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை இங்கே சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

—என்னுடைய கிழக்குத் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் விவசாயப் பெருங்குடி மக்கள் ஏராளமாக வாழ்கிறார்கள். பேரறிஞர் அண்ணா காலத்தில், விவசாயக் கூலிகள் [illegible] சொல்லப்படுபவர்களால் [illegible] கொளுத்தப் பட்ட செய்தியை அன்றைய தினம் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன். அன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் விவசாயக் கூலிகள் கொல்லப் பட்டதற்கு ஒரு [illegible] காரணை வைத்து அந்த அளவுக்கு மன வேதனைப்பட்டு கண்ணீர் வடித்தார்கள் என்பதை நிச்சயமாக அனைவரும் [illegible] இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படிப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ணீர் விட்டு, தொழிலாளர்கள், விவசாயக் கூலிகள் எப்படி எதிர்காலத்திலே [illegible] பல்வேறு திட்டங்களையெல்லாம் [illegible] அந்த வழியிலே தான் நம்முடைய தமிழக [illegible] புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் [illegible] தொழில் தகராறுகள் தீர்க்கப் படுவதற்கு [illegible] முயற்சிகள் எல்லாம் எடுத்து, அதன் [illegible] தொழிலாளர் நலம் பேணிப் பாதுகாக்கப்படுகிறது என்பதை அனைவரும் அறிவீர்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்று [illegible] தொழிலில் கூடமானாலும், நிறுவன மானாலும், [illegible] பிரச்சினைகள் எழுகின்றன என்கிறபொழுது, தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆனாலும் சரி, அந்த இலாகாப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் ஆனாலும் சரி, [illegible] கௌரவம் பார்க்காமல் தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு, பேச்சு வார்த்தையின் மூலம் [illegible] தகராறுகளைத் தீர்த்து, அவர்களுடைய எதிர்காலம் நல்ல முறையிலே இருக்க, அவர்களுக்கு வாழ்வு அளிக்க நடவடிக்கைகளை, முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பல [illegible] பல மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க் கின்றபொழுது, பல மாநிலங்களிலே இன்றைக்குத் தொழில் தகராறுகளும், தொழிலாளர்கள் எந்த அளவுக்கு நசுக்கப்படு கிறார்கள், அவர்களுடைய எதிர்காலம் எந்த அளவுக்கு ஒளி [illegible] இருக்கின்றன என்பதையும் நாம் பார்த்துக் கொண்டிருக் கிறோம்.

நம்முடைய [illegible] திற்கு அருகாமையிலே உள்ள புதுவை மாநிலத்தில் ஏறக்குறைய இரண்டுக் காலமாக [illegible] மில்ஸ் என்ற [illegible] டெக்ஸ் [illegible] மில்லிலே ஏறக்குறைய 7,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் வாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் [illegible] இணைந்த ஆட்சி நடைபெற்றிருந்தது [illegible] நீங்கள் தெளிவாக அறிவீர்கள் என்று நான் கருது கிறேன். அப்படிப்பட்ட அந்த நிலையில் அந்த 7,000 தொழி லாளர்கள் [illegible] வாழ்வளிக்கின்ற பிரச்சினையில். [illegible] வேலை பார்க்கின்ற சூழ்நிலையில் அங்கே இருக் கின்றவர்கள் யாரும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவும்



இல்லை. அந்த முயற்சியிலே வெற்றி பெறவும் இல்லை. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்று [illegible] சிம்சன் பிரச்னையை எடுத்துச் சொன்னார்கள். [illegible] தொழி லாளர்கள் தொழில் [illegible] இருந்த நிலைகளை எல்லாம், முதலாளிகளுடனும், தொழிலாளர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி, சிறப்பாக நம்முடைய [illegible] தமிழக முதல்வர் அவர்கள் நல்ல முயற்சியை மேற்கொண்டு வெற்றி கண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல விவசாயிகளுக்குக் கூலி உயர்வு என்று வரும் போது இது வரையில் எந்த அரசும் செய்ய முடியாத சாதனையைப் புரட்சித் தலைவர் அரசு செய்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். [illegible] கூலிகள் கேட்கிற அளவுக்கு அவர்களுடைய [illegible] அந்த அளவுக்கு விவசாயக் கூலியை உயர்த்தி [illegible] புரட்சித் தலைவர் அரசைத் தவிர வேறு எந்த அரசும் இல்லை என்பதை நம்மால் எடுத்துக் காட்ட முடியும். ஆனால் கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் விவசாயிகள் கூலி உயர்வு கேட்ட பொழுது எத்தனை விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதை [illegible] மறந்திருக்காது என்று நான் கருதுகிறேன். விவசாயிகளானாலும் சரி, மற்ற தொழிலாளர்களானாலும் சரி, அவர்கள் கூலி உயர்வு கேட்கிறார்கள் என்றால் அவர்களை [illegible] தொழி லாளர்களைக் கொன்று குவித்த [illegible] திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி [illegible] புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொழில் தகராறுகள் தீர்க்கப் பெற்று, விவசாயக் கூலிகள் [illegible] வாழ்வதற்கு பல்வேறு திட்டங்களை இந்த அரசு தீட்டிக் கொண்டிருக்கிறது. இந்த அரசைப் பற்றி [illegible] தவறான கருத்துக்களை மக்கள் மத்தியில் தூவி விடுவது, எவ்வளவு தான் நம்முடைய அரசு [illegible] செய்தாலும் [illegible] வேண்டுமென்று நேக்கத்தோடு எதிர்க் கட்சி [illegible] பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தொ[illegible] [illegible] வளர்களுடைய தலைவராக வர[illegible] பினார்கள். [illegible] தொ[illegible] எண்ணிப் பார்ப்பதற்கு வாய்ப்பு அப்போது [illegible] அண்ணா அவர்கள் எண்ணினார்கள். [illegible] அண்ணா அவர்களின் கனவுகளை நிறைவேற்றுகிற [illegible] தான் தொழிலாளிகளின் பணியாற்றிக் [illegible] தொழிலாளர் தலைவராக [illegible] ஆனால் தொழிலாளர்களுக்காக [illegible] கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள் [illegible] களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று [illegible] எந்த அளவிற்கு அவர்களைப் புறக்கணி[illegible] மக்கள் மன்றம் எண்ணிப் பார்த்து [illegible] நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. என். விஜயபாலன்] [1984 மார்ச் 16

புரட்சித் தலைவர் அவர்களின் அரசு பல்வேறு நன்மைகளை எல்லாப் பிரிவினருக்கும் சிறப்பாக செய்து மேன்மை புரிந்து வருவதை படித்தவர்களும், பாமர மக்களும், விவசாயக் கூலிகளும் ஆலைத் தொழிலாளர்களும், நிறுவனங்களில் பணிபுரிகிறவர்களும், அனைவரும் பாராட்டுகிறார்கள். அவர்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரசாக இந்த அரசு இருக்கிறது.

அண்மையில் கட்டிடத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சருடைய நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இப்படி தொழிலாளர்களின் வர்க்கத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு அரசை பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் நியாயமாக, முறையாக தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வார்களானால் அதை அரசு ஏற்றுக் கொள்ளும், அரசு தவறு செய்கிறது என்கிறபோது அந்தத் தவறை எடுத்துச் சொல்கிற முறையோடு, சட்டமன்ற விதிகளை, மரபுகளை காக்கிற வகையிலே எதிர்க்கட்சிகள் எடுத்துச் சொல்வார்களானால் நிச்சயமாக புரட்சித் தலைவர் அரசும் இந்த சட்டமன்றமும் தலை வணங்கும். அவற்றை ஏற்றுக் கொள்ளும். ஆனால் அதற்கு மாறாக ஏதாவது குழப்பத்தை, கலகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கருதினால் அது நியாயமாகாது. தொகுதியிலே இருக்கிற மக்கள் பொறுப்பு வாய்ந்த சட்டமன்ற உறுப்பினராக சட்டமன்றத்திற்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்று, தங்களுடைய தொகுதியைப் பற்றி, மக்களின் நலனைப் பற்றி, ஏழைத் தொழிலாளர்களைப் பற்றி பேசுவார்களென்று அனுப்பியிருக்கிற போது, சட்டமன்றத்தின் விதிகளுக்கு மாறாக நடந்து கொள்கிற சூழ்நிலையை மக்கள் மன்றம் நன்றாக உணர்ந்து கொண்டிருக்கும் என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அனைத்து வகையிலும் தொழிலாளர் வர்க்கம் சிறப்பாக வாழ்வதற்கு வகை செய்வதற்கு என்னுடைய நன்றியைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் மாட மாளிகையின் ஆட்சியாக, ஒரு குடும்பத்தின் ஆட்சியாக இருந்த தமிழக ஆட்சியை இன்றைக்கு மக்களுடைய ஆட்சியாக, தொழிலாளர்களுடைய ஆட்சியாக மாற்றிய பெருமை நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுக்கு உண்டு என்பதை முதலில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய அருமைச் சகோதரர் விஜயபாலன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல தங்களுடைய இளமைக் காலத்திலிருந்து தொழிலாளர்களுடைய நன்மைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட நம்முடைய தொழிலாளர் நலஅமைச்சர் அவர்கள் காலத்தில், தொழிலாளர்களுடைய நலம் மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட தமிழகத்திலே நல்ல முறையிலே பேணி பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை இங்கே இருக்கிற தொழிலாளர் சமுதாயம் மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களில் ஆட்சியில் இருப்பவர்களும், தொழிலாளர் தலைவர்



1984 மார்ச் 16] [திரு.கே. குப்புசாமி]

களும், இவர்கள் எல்லாம் பாராட்டுகிற நிலையில் இன்றைக்கு தமிழகம் இருக்கிறது. தொழிலாளர்கள் நலனை நம்முடைய புரட்சித்தலைவர் அரசு நல்லமுறையில் பாதுகாத்து வருகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர்கள் தங்களுடைய நலன்களை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது, அவர்களாகவே திட்டம் தீட்டி, அவர்களாகவே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்; அரசியல் கட்சிகளின் கைப்பாவைகளாக மாறி அவர்களுக்கு இரையாகி விடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–30.)

சாதாரணமாக முதலில் தொழிலாளர்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு முதலில் 'கன்சிலியேஷன்' — அதாவது சமரசம் பேசி பார்ப்பது, பிறகு அதிலே ஒரு முடிவு ஏற்படவில்லையென்றால், அதற்குப் பிறகு ஆர்பிட்ரேஷன், என்றும் அட்ஜுடிகேஷன் என்றும் இரு தரப்பினரையும் அழைத்து சமரசம் பேசி ஒப்பந்தத்திற்குக் கொண்டு வருவது போன்ற முறைகள் கையாளப்படுகின்றன. அந்த ஆர்பிட்ரேஷன் அல்லது அட்ஜுடிகேஷனில் நன்மை கிடைக்கவில்லை என்றால் அவர்கள் லேபர் கோர்ட்டுக்குச் செல்லலாம். அந்த லேபர் கோர்ட்டில் தீர்ப்பு சாதகமாக வருகிறபோது தொழிலாளர்கள் அதைப் பாராட்டுகிறார்கள். சில நேரங்களில் தீர்ப்பு நீதியின் அடிப்படையில் பாதகமாக வருகிறபோது அதை ஏற்றுக்கொள்கிற மனப்பக்குவம் தொழிலாளர்களுக்கு வருவது இல்லை. அதை ஏற்றுக்கொள்ளாத நிலையில் தான் ஏன் ஆர்பிட்ரேஷனில், அட்ஜுடிகேஷனில் இதைத் தீர்த்துக்கொள்ளத் தவறிவிட்டோம் என்று வருந்துகிறார்கள்.

இங்கேயிருக்கின்ற சட்டமன்றத்திலே கூட தீர்ப்பு என்று வருகிறபோது அதை ஏற்றுக்கொள்ளாது கிளர்ச்சிகளைச் செய்வதை சில அரசியல் கட்சிகள் கடைபிடித்துக்கொண்டு வருகிற நிலையை நாம் பார்க்கிறோம். ஆகவே, தொழிலாளர்களை மட்டும் குறை சொல்லி பயன் இல்லை. காரணம் ஒரு நீதிபதியால் தீர்ப்பு எழுதப்படுகிறபோது — அது சப் மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தாலும் சரி, அல்லது ஹைக்கோர்ட் நீதிபதி அளிக்கிற தீர்ப்பாக இருந்தாலும் சரி, அல்லது கமிஷன்கள் அளிக்கும் தீர்ப்பாக இருந்தாலும் சரி, அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்கிற மனப்பக்குவத்தை நாம் சட்டமன்றத்தில் கடைபிடிக்கத் தவறியிருக்கிறோமே என்பதை இன்றைய சம்பவங்கள் நமக்குக் காட்டுகின்றன என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்வேன்.

நான் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் பால் கமிஷன் அறிக்கை வந்த நேரத்தில், ஒரு குறிப்பை மட்டும் வைத்துக்கொண்டு, ஒரு சாராம்சத்தை வைத்துக்கொண்டு, அதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டு, அரசுக்கு எதிராக

எப்படியெல்லாம் அதை திசைத் திருப்ப முடியுமோ அப்படியெல்லாம் அவர்கள் ஈடுபட்டதை நாட்டு மக்கள் மறந்து விடவில்லை.

அதே நேரத்தில் இன்றைக்கு நம்முடைய முன்னாள் நீதிபதி திரு. ராமபிரசாத் ராவ் அவர்களால் அளிக்கப்பட்ட தீர்ப்பு நேற்றைக்கு இங்கே சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அந்தத் தீர்ப்பினை ஜனநாயகத்திலே நம்பிக்கை உடையவர்கள் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஒரு நீதிபதி என்பவர் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் சொந்தக்காரர் அல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல. இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானவர். அவர் அளித்த ஒரு தீர்ப்பை இங்கே கொளுத்துவது என்பது காட்டு மிராண்டித்தனம், பைத்தியக்காரத்தனம், அநாகரீகம், யதேச்சாதிகாரம், என்ற முறையில் அவர்கள் ரெளடித்தனமான முறையில் செய்து இருக்கிறார்கள், இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொது மக்களின் நலன் காக்க, நாம் இங்கே பாதுகாவலர்களாக இருக்கிறோம். இந்த அவையின் கண்ணியத்தை, கெளரவத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு இங்கேயுள்ள அரசியல் கட்சிகள் குறிப்பாக எதிர்க்கட்சிகள், ஆளும் கட்சிகள் ஆகியவற்றிடம் இருக்கிறது. இந்த அவையின் கண்ணியத்தையும், கெளரவத்தையும் குறைக்கவேண்டும் என்ற முறையில் திட்டமிட்டு, அரசியல் ஆதாயம் கருதி இப்படிப்பட்ட காரியத்தை எதிர்க்கட்சியினர் செய்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

இந்த நேரத்தில் தொழிலாளர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். பொதுவாக லேபர் கோர்ட்டுக்குப் போகாமல், கன்சிலியேஷன், ஆர்பிட்ரேஷன், அட்ஜுடிகேஷன் போன்றவைகள் மூலம் உங்கள் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ளுங்கள். அதுதான் எதிர்காலத்தில் உங்கள் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு வழிவகுக்கும். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டிய சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றைக்கு ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக கட்டாயமாக வெளியேற்றப்படவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும்கூட தொழிலாளர்கள் பற்றிச் சொல்லும்போது, இங்கே சட்டமன்றத்திற்குள்ளே இருக்கக்கூடிய உரிமைகளைப் பாதுகாக்க தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆங்கிலத்தில் 'வாச் அன்ட் வார்டு' என்று சொல்வார்கள். அவர்கள் எதற்காக இருக்கிறார்கள் என்றால் வெளியே இருக்கிற பொதுமக்களால், மேலே இருக்கிற பார்வையாளர்களால் சட்டமன்ற நடவடிக்கைக்கு குந்தகம் ஏற்படக்கூடாது, சபையின் கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டும்: சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ளே விரும்பத்தகாத விளைவுகள், மோதல்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்கின்ற மரபுகளைக் காப்பாற்றத்தான். அந்த கடமைகளைச் செய்வதற்காக பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் பொறுப்பிலே அவர்கள் இருக்கிறார்கள்.





இன்றைக்கு அந்த பாதுகாப்புத் தொழிலாளர்களுடைய பரிதாபகரமான நிலையைப் பார்த்தோம். உறுப்பினர்களை வெளியேற்ற வேண்டுமென்று நீங்கள் உத்தரவிட்டபோது அவர்களுக்கு ஒரு கூச்சம், ஒரு அச்சம் ஏற்பட்டது. அவர்கள் வெளியேற்றவில்லை; கன்சிலியேஷன்தான் செய்தார்கள். உங்கள் உத்தரவை அவர்கள் நிறைவேற்றவில்லை என்பதை வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டுமென்றால் உங்களுடைய மேலான பரிசீலனைக்கும் சிந்தனைக்கும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு ஊரிலே இருக்கிற தலைவர் என்றால் அவரை அந்த உள்ளூர் காவலர்களால் அடக்க முடியாது. ஏனென்றால் அங்கே இருப்பவர்கள் ஏதேதோ வகையில் அவரோடு தொடர்பு வைத்திருப்பார்கள். அதனால் அப்படிப்பட்டவர்களைப் பிடிக்க அவர்கள் கூச்சப்படுவார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களைப் பிடிக்க வெளியிலேயிருந்து ரிசர்வ் போலீஸ் வரும், மலபார் போலீஸ் வரும். அவர்கள் வந்தால்தான் கலைந்து ஓடுவார்கள், கூட்டம் கலையும், கலவரம் அடங்கும். உள்ளூரில் உள்ள போலீஸ் என்றால் அவர்களுக்குள்ளே இருக்கிற பழக்கத்தின் காரணமாக பிடிக்கமாட்டார்கள், கூச்சப்படுவார்கள். ஊருக்கு புதியவர்கள் என்றால் அவர்களுக்கு யாரையும் தெரியாது, விருப்பு வெறுப் பின்றி நடவடிக்கை எடுப்பார்கள். அப்படியானால்தான் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும். அந்தமுறையில் இங்கே இருக்கிற பாதுகாப்புத் தொழிலாளர்களை, பொதுமக்களால் ஏதாவது குந்தகம் ஏற்படாமல் பாதுகாக்க வைத்துக் கொள்ளலாம். ஆனால் உள்ளே நடக்கிற ரெளடித்தனத்தை, உள்ளே நடக்கிற பலாத்காரத்தை உள்ளே நடக்கிற ஜனநாயக விரோதப் போக்கினைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றால், துணைத் தலைவரவர்களே, உங்களுடைய கட்டுப்பாட்டில் தனியாக ஒரு படை இருக்க வேண்டியது தேவை, அவசியம் என்று நான் வலியுறுத்திக் கூறுகிறேன். அத்தகைய ஒரு படை இருக்குமானால் ஜனநாயகத்தை நிச்சயமாகக் காப்பாற்ற முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி தனியாக ஒரு படை வேண்டாம்; சமாளித்துக் கொள்ளலாம்.

**திரு. கே. குப்புசாமி:** துணைத் தலைவரவர்களே, நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இங்கே இப்போது இருக்கிற பாதுகாப்புத் தொழிலாளர்களுக்கு கூச்சமாக இருக்கிறது. 'Such a delicate situation need not be created in the House' உங்களுடைய கட்டுப்பாட்டில் தனியாக ஒரு பிரிவு இருந்தால் அவர்கள் அஞ்சாமல், கூச்சப்படாமல் உங்கள் ஆணையை நிறைவேற்றுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தமாதிரியான நிலைமை வரக்கூடாது; தவிர்க்கப்பட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒத்துழைப்புத் தந்து, சுமுகமான முறையிலே அவையை நடத்திச் செல்ல உதவியாக இருக்க வேண்டும்.

**திரு. கே. குப்புசாமி:** ஜனநாயக நெறிமுறைகளை, இந்த மன்றத்தின் மரபுகளைக் கட்டிக்காக்க வேண்டியது ஒவ்வொரு உறுப்பினருடையவும் கடமையாகும். அதைத்தான் ஆளும்கட்சி உறுப்பினர்களும் அமைச்சர்களும் தொடர்ந்து கட்டிக் காத்து வருகிறார்கள். ஆனால் அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்தோடு, சபையின் கண்ணியத்தைக் குறைக்க வேண்டும், பிற மாநிலங்களில் இருப்பவர்கள் எல்லாம் இந்த சபையைப் பற்றி ஏளனம் சய்ய வேண்டும் என்ற இழிவான நோக்கத்தோடு பலாத்காரமான நிகழ்ச்சிகளை நடத்தினால் அதைக் கட்டுப் படுத்தக்கூடிய நிலைமை இங்கே இருக்கின்ற பாதுகாப்புத் தொழிலாளர்களுக்கு இல்லை என்றால் அதற்கு என்று தனியாக தொழிலாளர்களை ஏற்படுத்திக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ள வேண்டும். செல்ஃப் ரெஸ்பெக்ட் இருக்க வேண்டும். அவைக்கு உள்ளே தீ வைப்பது, அரிவாளைத் தூக்குவேன் என்பது, அவைத் தலைவருக்குக் கட்டுப்படாமல் தொடர்ந்து கூச்சல் போடுவது எல்லாம் பெரிய தவறு. அவையை ஒழுங்காக நடத்திச் செல்ல உறுப்பினர்கள் உதவியாக இருக்க வேண்டும். உள்ளே தீ வைத்தால் என்ன செய்வது? இங்கே கிரிமினல் நடவடிக்கை எடுக்க முடியாது. இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்தால் அவர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஒன்றரை இலட்சம் வாக்குகளைப் பெற்று உறுப்பினராக உள்ளே எதற்காக வருகிறார்? தீ வைக்கவா? பக்கத்தில் இருக்கிற உறுப்பினர்கள் மேல் தீ பட்டால் என்ன செய்வது? ட்ரெஸ்கின் மேலே தீ பட்டால் அத்தனையும் எரிந்து சாம்பலாகிவிடும். தங்கள் கடமையை மறந்துவிட்டு, ஏதாவது பிரச்சனையைக் கிளப்பி, அந்தப் பிரச்சனையினால் ஏதாவது விளம்பரம் வராதா என்று பார்க்கிறார்கள். அது தவறு. உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தங்களுடைய செல்ஃப் ரெஸ்பெக்டைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்; தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்; 234 உறுப்பினர்களுக்கும் இந்தப் பொறுப்பு இருக்கிறது.

(பிற்பகல் 12–40)

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி பொறுப்பின்றி நடந்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகத் தான் இந்த யோசனையைச் சொன்னேன். அதோடு மட்டுமல்ல. இங்கே இருக்கிற தொழி



லாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் நான் இதைச் சொன்னேனே தவிர, வேறு — எதிர்க் கட்சி மீது குற்றஞ்சாட்ட வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. இதே நிகழ்ச்சிகள் இன்று வேறு எந்த மாநிலங் களிலாவது நடைபெற்றிருக்குமானால், நிலைமை எப்படி இருக்கும் என்று நாம் சிந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஜனநாயக முறையை கட்டிக் காக்கின்ற முறையிலே, இந்த மரபினுடைய கண்ணியத்தைக் கட்டிக் காத்திருக்கிறார்கள். அந்த அளவு நிகழாது, மரபையும் கண்ணியத்தையும் கட்டிக் காத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன்; என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரி வித்துக்கொள்கிறேன். அந்த நிலையில் புரட்சித் தலைவருடைய அரசு தொழிலாளர் நலனைப் பேணிக் காப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறது. தொழிலாளர் சமுதாயம் மற்ற சமுதாய மக்களோடு போட்டி போட்டு முன்னேறுவதற்கான திட்டங்களைத் தீட்டி வருகிறது என்ற நிலைமையில், என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அண்ணாதாசன், சமரசம், ஜே.சி.டி. பிரபாகரன், சு. முத்துக்கிருஷ்ணன், விஜயபாலன், இறுதியாக மாண்புமிகு குப்புசாமி ஆகிய உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்னார்கள்.

என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால், அமைச்சராக, இது என்னுடைய 7-வது மானியக் கோரிக்கை அல்லது 8 என்று கருதுகிறேன். இதுவரையில், எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடியவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்ல, அதற்கு பதில் சொல்லக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தேன். ஆனால் இன்றையதினம், எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் - ஒரு முக்கியமான மானியக் கோரிக்கை—அதிலே குறிப்பாக தொழிலாளர்கள் பிரச்சினைகளைப் பேச வேண்டிய நேரத்தில் இல்லாமல் போனது, நான் துரதிருஷ்டம் என்று தான் நினைக் கிறேன். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இருந்தாலும் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அவ்வளவு பேருமே மிகத் தெளிவாக பிரச்சினைகளை எடுத்துச்சொல்லி, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி சாதித்து இருப்பதை விளக்கமாக எடுத்துச் சொல்லி, இந்த அரசைப்போல எந்த அரசும் சாதிக்கவில்லை என்று ஆதாரத் தோடு எடுத்துச் சொன்னார்கள். அதற்காக நான் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மானியக் கோரிக்கையில் 'அர்பன் டெவலப்மெண்ட்', நகர்ப்புற வளர்ச்சி என்ற கோரிக்கை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதில் குறிப்பாக நம்முடைய Rapid Transport System பற்றி இதழ்கள் கூட சில நேரத்தில் தவறாக எழுதுகின்றன என்கின்ற காரணத்தால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்லவேண்டுமென்று கருதுகிறேன்.

பாதாள ரயில் என்று இன்னமும் நம்முடைய பல இதழ்கள் எழுதிக்கொண்டிருக்கின்றன. அது பாதாள ரயில் அல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நல்ல இதழ்கள், நிறைய விஷயங்கள் தெரிந்த இதழ்கள் கூட அதைப்பற்றி எழுது கின்ற நேரத்தில் பாதாள ரயில்கள் என்று எழுதுகின்றன. இங்கே வரப்போவது பாதாள ரயில் அல்ல. அதைப்பற்றிய விளக்கம் தர நான் விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் சென்னை மாநகரத்திலே முக்கிய பிரதான பகுதிகளில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, போக்குவரத்துப் பிரி —இரயில்வேத்துறை பிரிவு துரித இரயில் போக்குவரத்து ஒன்றை திருவான்மியூருக்கும், திருவொற்றியூருக்கும் இடையில் ரூ. 150 கோடி செலவில் தயாரித்து, மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியது. இவ்வரசும் பலமுறை மத்திய அரசை இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கக் கோரியும், பொருளாதார நெருக்கடி காரணமாக மேற்கூறிய திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க இயலாது என்று மத்திய அரசு தெரிவித்தது.

எனவே சென்னை கடற்கரை ரயில்வே நிலையத்திலிருந்து மயிலாப்பூர் லஸ் வரையிலும் 8.45 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூபாய் 60 கோடியிலேயிருந்து 70 கோடி வரை செலவாகும் துரித ரயில்வே பாதை அமைக்கும் திருத்திய திட்டம் ஒன்றை சென்னைப் பெருநகர போக்குவரத்துப் பிரிவு—ரயில்வே துறைப் பிரிவு — மத்திய அரசுக்கு அனுப்பியது. இத்திட்டப்படி 8.45 கிலோ மீட்டர் தூரத்தில், 2.93 கிலோ மீட்டர் தூரம் தரைப்பகுதியாகும். அதைத்தான் நான் முக்கியமாக பத்திரிகை நிருபர்களுக்கு தெரிவிக்க வண்டும் என்று ஆசைப்படுகிறேன். 8.45 கிலோ மீட்டர் தூரத்தில் 2.93 கிலோ மீட்டர் தூரம் தரைப் பகுதியாகும். 5.52 கிலோ மீட்டர் தூரம் 18 அடி உயரம் உள்ள மேல் மட்டப் பகுதியாகும். 2.93 கி.மீ. தூரம் தரை மட்டம்; 5.52 கி.மீ. தூரம் 18 அடி உயரம் உள்ள மேல் மட்டப் பகுதியாகும். இத்திருத்திய திட்டத்தை ஏற்றுக்கொண்டு இந்த திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் அளித்து ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள இவ்வரசு மத்திய அரசை ஜூன் 1980-ல் கேட்டுக்கொண்டது. இதன் பலனாக மத்திய திட்டக் குழு, இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளித்து ஆறாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சேர்க்க அனுமதித்து உள்ளது. மேலும் இத்திட்டத்தின் தொடக்கப் பணிக்காக ரயில்வே





அமைச்சரகம், 1983-84-ல் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1984-85-ம் ஆண்டுக்காக ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கு ரூபாய் 64 இலட்சம் மதிப்புள்ள 6.6 எக்டேர் பரப்புள்ள மாநில அரசுக்குச் சொந்த மான நிலத்தை ரயில்வேக்கு இலவசமாக அளிக்க இவ்வரசு ஒப்புக்கொண்டுள்ளது. மேலும் 2.111 எக்டேர் பரப்புள்ள தனியார் நிலங்களையும் சுமார் 140 இலட்சம் ரூபாய்ச் செலவில் கையகப்படுத்தி ரயில்வேக்கு இலவசமாக அளிக்க இவ்வரசு இசைந்துள்ளது. துரித ரயில் பாதைத் தடங்கள் வரும் அரசு மற்றும் தனியார் நிலங்களையும் உடனடியாக கையகப்படுத்தி நடவடிக்கை எடுக்கும்படி, சென்னை மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டு உள்ளார். மேலும் இப்பகுதியிலுள்ள நிலங்களில், கட்டிட வளர்ச்சியை வரன்முறைப்படுத்தும் பொருட்டு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக ரயில்வேக்கு உடனடியாகத் தேவைப்படும் அரசுக்குச் சொந்த மான நிலங்களை விரைவில் மாற்றம் செய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளும்படி சென்னை மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். இப்பணிகளைத் துவக்கு வதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு உள்ளன.

எனவே இத்திட்டத்தைப் பற்றி நான் விரிவாகச் சொல்ல விரும்பியதே இதைப்பற்றி சென்னை நகரத்திலே உள்ள மக்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது என்னுடைய அவாவாகும்.

அடுத்து, புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பின்னர்தான், சென்னையிலே குடிசையிலே வாழக்கூடிய மக்களுக்கு, அந்த இடத்தை அபிவிருத்தி செய்து, அந்த அவர்களுக்கே சொந்தமாக ஆக்கும் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதைப் பற்றிக் கூறும்போது மனையின் விலை அதிகமாக இருக்கிறது என்றார்கள். எதிர்க்கட்சித் தோழர்கள் இங்கே இருந்து பேசவில்லை என்று சொன்னாலும், அவர்கள் கொடுத் திருக்கிற வெட்டுப் பிரேரணைகளைப் படித்துப் பார்த்து, அவைகளில் இருந்து அவர்கள் கருத்து என்னவாக இருக்கிறது, என்ன பேச நினைக்கிறார்கள், எதன் மீது வெட்டுப் பிரேரணைகள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மனதிலே இருத்தி, அதற்கு ஏற்ற வகையிலேதான் என்னுடைய பதிலை இன்றையதினம் உருவாக்கியிருக்கிறேன். அதிலே ஒரு கருத்து, ஏழை எளியவர் களுக்கு மனைப் பட்டா கொடுக்க ஆரம்பித்து இருப்பதே புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான். அதை எந்த வகையிலே கொடுக் கிறோம் என்பதை நான் சற்று விளக்கமாகச் சொல்ல விரும்பு கிறேன். ஏன் என்றால், அது மக்களுக்கு மிகவும் உபயோககர மாக இருக்கும். அதுவும் ஏழை எளியவர்களுக்கு இந்த அரசு செய்திருக்கக்கூடிய மிக நல்ல திட்டமாகும்.

இத்திட்டத்தின் கீழ் 20 சதுர மீட்டர் பரப்பளவில் நிலம்
இருப்பவர்களுக்கு ரூபாய் 700 தரப்படுகிறது. 20 சதுர
மீட்டர் பரப்பளவு வைத்துக் கொண்டிருந்தால் அதற்குக் கிரயம்,
அதற்காக வாங்கப்படுவது 700 ரூபாய் தான். அந்த அளவுக்கு
இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம். அந்த அளவுக்கு
ஏழை எளிய மக்களுக்குப் போதும் என்று ஆசைப்படுகிறோம்.
ஆனால், என்ன செய்கிறார்கள் என்றால், நிரம்ப நிலத்தை
ஆக்கிரமித்திருக்கிறார்கள். அப்படி ஆக்கிரமித்திருக்கிற போது,
அவர்களை அந்த இடத்தை விட்டு வெளியேற்றுவது என்றால்,
சாமானியமல்ல. பெரிய சிக்கலே வந்துவிடும். அப்படி நாம்
ஆரம்பிக்கிறபோது, ஏன் உங்களுக்கு இவ்வளவு இடம் என்று
சொல்லி, 20 சதுர மீட்டர் உங்களுக்குப் போதும் என்று
சொன்னால், அதற்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் போர்க்
கொடியை உயர்த்த ஆரம்பித்து விடுவார்கள். எனவே, நாம்
செய்திருக்கிற ஏற்பாட்டை நான் விரிவாகச் சொல்ல ஆசைப்
படுகிறேன்.

(பிற்பகல் 12-50.)

ஆனால் நிலக் கிரயம் ஒரே தவணையில் வாங்கப்படுவதில்லை.
10 ஆண்டுகளுக்கு மாத தவணையில் ரூபாய் 7 என்னும் விகிதத்தில்.
வசூலிக்கப்படுகிறது. முன் வைப்புத் தொகையாக 90 ரூபாய்
மட்டும் வசூலிக்கப்படுகிறது. 20 சதுர மீட்டருக்கு மேலே 110
சதுர மீட்டருக்கு உள்ளே பரப்பளவுள்ள நிலத்திற்கு, 20 சதுர
மீட்டருக்கு ரூபாய் 700 அளவிற்கு மேல் உள்ள, ஒவ்வொரு
சதுர மீட்டருக்கும் அந்நிலம் அமைந்துள்ள பகுதியைப் பார்த்து—
20 சதுர மீட்டருக்கு 700 ரூபாய் வாங்கிக் கொள்கிறோம்.
கிரயம். ஆனால் அதற்கு மேலே இருக்கக்கூடிய நிலத்திற்கு,
இடத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும்,
35 ரூபாய், 40 ரூபாய், 45 ரூபாய், 55 ரூபாய் என்னும் விகிதத்தில்
நிலக் கிரயம் வாங்கப்படுகிறது. 111 மீட்டரிலிருந்து 220 மீட்டர்
பரப்பளவுள்ள நிலத்திற்கு மட்டும் ஒவ்வொரு சதுர மீட்டருக்கும்,
அந்நிலம் அமைந்துள்ள பகுதியைப் பார்த்து ரூ. 70, ரூ. 80, ரூ. 90,
ரூ. 110 என்னும் விகிதத்தில் நிலக் கிரயம் வசூலிக்கப்படுகிறது.
220 சதுர மீட்டருக்கும் அதிகமான பரப்பளவுள்ள மனைகளுக்கு
மட்டும், சந்தை விலையில் வசூலிக்கப்படுகிறது. 220 சதுர
மீட்டர் வரையில் ஆக்கிரமித்திருந்தால், எவ்வளவு என்று சொல்லி
விட்டேன். ஆனால் அதற்கு மேலும் சில பேர் ஆக்கிரமித்திருக்
கிறார்கள்.

அவர்களை வெளியேற்றுவது முறையாக இருக்காது. அதிலே
சிக்கல் வரும் என்ற காரணத்தால், அவர்களுக்கு மார்க்கெட்
விலையில் விலை நிர்ணயித்து, அந்த வகையிலே அந்த நிலத்தி
னுடைய விலையை நிர்ணயிக்கிறோம். இவ்விலையால் தங்களுக்குத்
தேவையான நிலத்தை மட்டும் வைத்துள்ள குடிசை வாசிகளுக்கு,
பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்று கருதப்படுகிறது





குடிசைவாழ் மக்கள் தேவைக்கு அதிகமான நிலத்தை ஆக்கிர
மித்துக் கொண்டு, உபரி நிலத்தை அதிக விலைக்கு விற்பதை
தடுக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அரசு இவ்வாணையை
பிறப்பித்திருக்கிறது.

குடிசை வாழ் மக்கள் ரூபாய் 30 முதல் 50 வரை பொதுவாக
குடிசைகளுக்கு வாடகை செலுத்துகிறார்கள் என்பதை நீங்கள்
எல்லாம் அறிவீர்கள். இந்நிலையில் அந்த நிலத்தை சொந்தமாக்க
பெறுவதற்கு அவர்கள் செலுத்தும் தொகை மிகக் குறைவானதே
யாகும். பயன் அடையும் குடும்பங்கள் தாங்கள் பெறும்
நிலங்களை இலவசமாகப் பெற்றால், விரைவிலே அதிகத்
தொகைக்கு விற்றுவிட முற்படுவார்கள். அதையும் மனத்திலே
வைத்து, நிலத்தினுடைய கிரயம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.
அரசு நிர்ணயித்துள்ள இவ்விலையைவிட, அதிக சதவிகித
விலைக்கு நிலங்கள் விற்கப்படுகின்றன. மற்ற இடங்களில் விலை
ஏதும் இன்றி மனைகள் கொடுக்கப்பட்டால், விரைவிலே அவைகள்
விற்கப்பட்டு, புது குடிசைகள் அங்கே வந்து விடும். சென்னையில்
குடிசைகளை அகற்றும் பணி இதனால் மிகவும் கடுமையாகும்.
எனவே வெட்டுப் பிரேரணையைக் கொடுத்திருக்கிற உறுப்பினர்
களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்துக்களைக்
கொண்டு வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்திருக்கும்
உறுப்பினர்களுக்கு இதை நான் பதிலாகச் சொல்லும் வகையில்
சொல்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுப்
பிரேரணைகள் இங்கே முன் மொழியப்பெறவில்லை.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : வெட்டுப்
பிரேரணையைக் கொடுத்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் அந்தக்
கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை மனதிலே வைத்துத்
தான், அதற்கு முழுமையான பதில் தரவேண்டும் என்று கருதிச்
சொன்னேன்.

அது மட்டும் அல்லாமல், இப்படி மனையைக் கொடுத்த
பிறகு, அவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக Home Improvement
Loan என்று தருகிறோம். உலக வங்கியின் மூலமாக எல்லா
இம்ப்ரூவ்மெண்டும் செய்கிறோம். அது மட்டும் அல்லாமல்
மனைப் பட்டாக் கொடுக்கிறோம். அத்தோடு, Home Improve-
ment Loan என்று சொல்லி, மாதம் 200 ரூபாய்க்கு குறைவாக
வருமானம் உள்ளவர்களுக்கு 600 ரூபாய் மானியமாகத்
தருகிறோம். 201-லிருந்து 250 வரை வருவாய் உள்ளவர்களுக்கு
1500 ரூபாய் கடனாகத் தருகிறோம். 251-லிருந்து 300
வரை உள்ளவர்களுக்கு, 2,500 ரூபாயும், 301-லிருந்து
600 வரை வருமானம் உள்ளவர்களுக்கு 3,500
ரூபாயும் கடனாகத் தருகிறோம். இப்படி தருவதனால்

மூலமாக அவர்கள் வீடுகளை நன்றாகக் கட்டிக் கொள்வதற்கு உபயோகமாக இருக்கிறது என்ற வகையில், அவர்களுக்கு அந்த உதவிகளைச் செய்கிறோம் என்பதை நான் மெத்தப்பெருமையோடு இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

அத்தோடு Sites and Services என்று சென்னையை சுற்றியிருக்கக் கூடிய இடங்களில் நகரத்திலே இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு, —அர்பன் புவர்—அவர்களுக்கு தங்கும் இடம் இருக்க வேண்டும். சென்னையிலே இருக்கக்கூடிய மக்களுக்கு மிக நரிசலாக இருக்கிறது என்று சொல்லி, அந்த பரவலாக வெளி இடங்களுக்கு கொண்டு போக வேண்டும். அதுவும் ஏழைகளுக்கு, இந்த சைட்ஸ் அண்ட் சர்வீசிலே கொடுக்கின்ற வசதிகளி பெரும்பகுதி கிட்டத்தட்ட 80 சதவீதம் ஏழைகளுக்காகக் கொடுக்கப்படுகிறது.

மற்றும் எம். ஐ. ஜி., எல். ஐ. ஜி. என்று சொல்கிற நடுத்தர வருவாய் உள்ளவர்கள், குறைந்த வருவாய் உள்ளவர்கள், அதிக வருவாய் உள்ளவர்களுக்கெல்லாம் 20 சதவீதம் தரக் கொடுக்கப் படுகிறது. அந்த அளவில் சைட்ஸ் அண்ட் சர்விஸ் திட்டத்தின கீழ், ரோடு, குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி, மனைகளை மேம்பாடு செய்தல் இவைகள் தரப்படுகின்றன. 80 சதவீதம் வசதிகள், ரூபாய் 350–க்கு குறைவாக உள்ள ஏழைகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இதிலே அவர்கள் பயனடைகிறார்கள். அங்கே கொடுக்கும்பொழுது Sanitary core வைத்து காலி மனைகள் தருகிறோம். அல்லது இரண்டு சுவர்களை வைத்து மேலே மூடி நிலம் கொடுத்து வீடு கட்டுவதற்கு வசதி செய்து தருகிறோம். சிலருக்கு முழுமையாக வீடு கட்டிக்கொடுக்கிறோம்.

முதல் உலக வங்கித் திட்டத்திலே சென்னையிலே, அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களிலே 12500 மனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அதற்கான செலவு ரூபாய் 15.0 கோடியாகும். இரண்டாவது உலக வங்கித் திட்டத்தில் முகப்பையூர், நெற்குன்றம், மதுரவாயல் ஆகிய இந்த இடங்களில் 1 ஆயிரம் மனைகள் அபிவிருத்தி செய்யப் படுகின்றன. இதற்கு செலவு 29 கோடி ரூபாய் ஆகும். இதைச் சென்னையைச் சுற்றிலும் செய்கிறோம். சென்னைக் அப்பாலுள்ள நகரங்களுக்கும் இந்த Sites and Services திட்டம் கொண்டு வரவேண்டுமென்று திட்டமிட்டு அரக்கோணம், இராணிப் பேட்டை காம்ப்ளக்ஸ், திருவண்ணாமலை, பண்ருட்டி, நாகப்பட்டிணம், கோபிச்செட்டிப்பாளையம், சிவகங்கை, ஓசூர், தர்மபுரி, பொள்ளாச்சி, மன்னார்குடி ஆகிய இடங்களுக்கும் இந்த Sites and Services scheme விரிவாக்கப்படுகிறது. அங்கேயும் இந்த வேலைகள் நடைபெறுகின்றன என்பதை நான் மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டத்தை செய்துவருகின்றன. நிலம் எடுப்பும் அபிவிருத்தியும் மேம்பாட்டு மனைத் திட்டம் போக்குவரத்து மற்றும் இதைச் சேர்ந்த வசதிகள், மண்டிகள் மற்றும் அங்காடிகள் அபிவிருத்தி குறைந்த செலவிலான அடிப்படை சுகாதார வசதிகள், இப்படிச் செய்து கொடுத்து 28 நகரங்கள், ஒரு லட்சத்திற்குக் குறைவாக உள்ள மக்கள் உள்ள நகரங்களுக்கு மாநில அரசும் மத்திய அரசும் 50:50 என்ற அளவில் பண உதவி தந்து திட்டத்தை செய்து வருகிறோம். அந்த ஊர்களைப் படிப்பது நல்லது என்று கருதுகிறேன். உதகமண்டலம், கரூர், தர்மபுரி, புதுக்கோட்டை, திருச்செங்கோடு, பழனி, கோபிசெட்டிப் பாளையம், மன்னார்குடி, மேட்டுப் பாளையம், செங்கற்பட்டு, கூனூர், தாராபுரம், உடுமலைப்பேட்டை, திருவண்ணாமலை, ஆத்தூர், நாமக்கல், கோயில்பட்டி, இராணிப்பேட்டை, ஆற்காடு, வாலாஜா நகர்த்தொகுதி, பொள்ளாச்சி, தேனி அல்லிநகரம், ஓசூர், காரைக்குடி, நாகப்பட்டனம், கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, சிவகங்கை, ஆரணி, அரக்கோணம் ஆகிய இந்த 28 நகரங்களுக்கு இந்தத் திட்டத்தை–அங்கேயெல்லாம் ஒரு லட்சத்திற்கும் குறைவாக மக்கள் இருக்கிற காரணத்தினாலே ஒரு நகரத்திறகு 80 லட்ச ரூபாய் வீதம் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த 80 லட்சத்தில் மத்திய அரசு

(பிற்பகல் 1-00)

40 லட்சமும், மாநில அரசு 40 லட்சமும் கொடுத்து முக்கியமாக அந்த நகரங்கள் முன்னேறுவதற்காக ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ. 80 லட்சம் கொடுத்து நிறைவேற்றும் வேலையை செய்து இருக்கிறோம்.

அதேபோல் மாநில அரசு மட்டும் சில நகரங்களை தேர்ந்து எடுத்து அவைகளில் கட்டண கழிப்பிடங்கள், பேருந்து நிலையங்கள், வணிக மையங்கள், வங்கி கட்டிடங்கள் போன்ற கட்டிடங்கள் அமைப்பதற்கும் அதன் காரணமாக சுற்றுப்புற சுகாதார சூழ்நிலைகள் தூய்மையாக இருப்பதோடு அந்த நகரத்திற்கு வருவாய் வருவதற்கு ஏற்பவும் செய்கிறோம். அந்த அளவில் ஏறத்தாழ 104 நகரங்களை தேர்ந்து எடுத்து அந்த நகரங்களுக்கு மாநில அரசே பணம் கொடுத்து 458. 636 லட்சம் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிட்டு செயல் பட்டுக் கொண்டு இருக்கிறோம், என்பதை இந்த நேரத்தில் மெத்த மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வெளி நாடுகளில் வேலை வாய்ப்பைத் தேடித்தருவதற்காக 30-11–78-ல் ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதன் மூலமாக 1978–79-ல் யாருக்கும் வேலை வாங்கித்தர முடியவில்லை. 1979-80-ல் 36 பேருக்கும், 1980-81-ல் 70 பேருக்கும், 1981-82-ல் 317 பேருக்கும், 1982-83-ல் 213

பேருக்கும் 1983-84-ல் 322 பேருக்கும் ஆக மொத்தம் 958 பேருக்கு வேலை வாய்ப்பு வாங்கித் தரப்பட்டிருக்கிறது. இவர்களை எந்த எந்த நாட்டுக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னால் ஐக்கிய அரபு குடியரசுக்கு 36 பேரும், லிபியாவுக்கு 31 பேரும், ஈராக்கிற்கு 607 பேரும், ஏமன் குடியரசுக்கு 252 பேரும் ஓமனுக்கு 32 பேரும் ஆக மொத்தம் 958 பேரை வெளிநாட்டுக்கு அந்த நிறுவனத்தின் மூலம் அனுப்பியிருக்கிறோம். இதன் பலனாக அன்னிய செலாவணி 1.25 கோடியிலிருந்து 1.75 கோடி ரூபாய் வரையில் இந்திய நாட்டுக்கு கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தில் அவர்களுக்கு சத்துவாச்சேரியில் 150 வீடுகள் கட்டியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். எனவே அந்தத் திட்டமும் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

தொழிலாளர்கள் பிரச்சினையை எடுத்துக் கொள்ளும்போது முதலில் பல பத்திரிகைகள் எழுதுவதை நான் சமீப காலத்தில் பார்த்து இருக்கிறேன். They take pleasure in doing so. 50 ஆயிரம் பேருக்கு வேலை இல்லாமல் அவதிப்படுகிறார்கள், தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை மூடிவிட்டக் காரணத்தால், இப்படி ஒரு பத்திரிகை எழுதுகிறது. இன்னொரு பத்திரிகையில் ஒரு லட்சம் பேருக்கு வேலை இல்லை. இன்னொரு பத்திரிகையில் "uneasy Truce" இப்போது இருக்கக்கூடிய அமைதி எப்போதும் இருக்காது வெடிக்கப் போகுது. அது அவருடைய எண்ணமா? அது என்ன கணிப்போ தெரியவில்லை. தமிழகத்தில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன அமைதி இல்லை என்று எழுதுகிறார்கள் 14 பேர் சேர்ந்து சொல்வது அது அரசியல் காரணம் 14 கட்சிகள் சேர்ந்து கூட்டணியாக அரசியல் காரணமாகச் சொல்வதிலே அர்த்தம் உண்டு. அவர்கள் ஏதாவது சொல்லியாக வேண்டும். ஆனால் பத்திரிகைகள் கூட அப்படி எழுதுகிற காரணத்தினால் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் தமிழகத்தில் மூடியிருக்கக்கூடிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 9 தான். அதனால் பாதிக்கப்பட்டு இருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை 2754 தான். எதை மறந்து விட்டாலும் குறிப்பாக பத்திரிகை நிருபர்கள் இதையாவது எழுதிக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

| | |
|---|---|
| பத்மா மில்ஸ் | 110 பேர், |
| Tamil Nadu Spinning Mills | 250 |
| Janardhana Mills | 700 |
| N. S. Krishna Rao Body Works | 510 |
| Sovereign Engineering | 64 |
| Southern Alloy | 270 |



| | |
|---|---|
| India Forge and Drop Stambing | 500 |
| Enforge Ltd. | 230 |
| Mini Equipments, Kovai | 120 |

ஆக மொத்தம் 2754 பேர் தான். தமிழகத்தில் தொழிற்சாலைகள் மூடியிருக்கிற காரணத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கிற தொழிலாளர்களின் எண்ணிக்கை 2,754 தான்.

இதில் பத்மா மில்லை தேசிய மயமாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு 7-12-83ல் எழுதியிருக்கிறோம். அதுபோல் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்லையும் தேசிய மயமாக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு 7-12-83 எழுதியிருக்கிறோம். அதே போல் ஜெனார்த்தனா மில்லையும் தேசிய மயமாக்கவேண்டும் என்று மத்திய அரசுக்கு 7-12-83 எழுதியிருக்கிறோம். என். எஸ். கிருஷ்ணா ராவ் பாடி ஒர்க்ஸ் ஐப் பொறுத்தவரையில் சமரச அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. சதர்ன் இன்ஜினியரிங்கைப் பொறுத்தவரையில் சென்னை தொழிலாளர் நலத் துறை துணை ஆணையாளர் முன்பு பேச்சுவார்த்தை நிலுவையில் உள்ளது. சதர்ன் அலாய் பவுண்டரி பிரைவேட் லிமிடெட், மாதவரம் இதைப் பொறுத்தவரையில் சென்னை இரண்டாவது தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் முன்பு பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருக்கிறது. இந்தியா போர்ஜ் டிராப் ஸ்டாம்பிங் இந்த நிறுவனத்தைப் பற்றிய பிரச்சனைப் பற்றி தொழில் நீதிமன்றத்தில் தீர்வுக்கு அனுப்பவேண்டும் என்று it has been referred on 10-3-83. அது தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. என்போர்ஜ் லிமிடெட். இந்தப் பிரச்னை 2-வது தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர் முன்பு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. மினி எக்குய்ப்மெண்டு, கோவை, இது கோவை 3-வது தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் திரு. சமரசம் அவர்கள் முன்னால் பேச்சுவார்த்தை நடக்கிறது. ஆகவே, இங்கே உள்ள சில நிறுவனங்களை—முக்கியமாக, மூடப்பட்டு இருப்பதைத் தேசிய மயமாக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். மேலும், மூடப்படாத—வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற பி. அன்ட் சி. மில்லை தேசிய மயமாக்க வேண்டும் என்று 7-12-83 அன்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். பி. அன்ட் சி. மில்லில் ஸ்ட்ரைக்தான் நடக்கிறது. அதையும் தேசிய மயமாக்க வேண்டுமென்று எழுதிக்கொண்டிருக்கிறோம்.

இன்னும்கூடச் சொல்கிறார்கள், தமிழ்நாட்டில் தொழில் அமைதி இல்லை, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகி விட்டது என்று. 50,000 என்றுகூட ஒரு இதழில் எழுதியிருக்கிறார்கள். அந்த நண்பர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்ற நிறுவனங்களைப் பற்றியெல்லாம்கூட நான் சொல்ல விரும்ப

வில்லை, ஆனால் மேற்கு வங்கத்தில் மட்டும் 53 தொழிற்சாலைகள்—ஜூட் மில்கள்—அவைகளில் 2 இலட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள்—2 இலட்சமாக அல்லது 2 இலட்சத்து 50 ஆயிரமா என்ற சரியான புள்ளி விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை; ஆனால் 2 இலட்சம் என்பது உண்மை. அவர்கள் ஜனவரி மாதம் 16 ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கே நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கருப்பையா அவர்கள் சொன்னார்கள், அவர்கள் தற்பொழுது இந்த அவையில் இல்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது; அவர்களெல்லாம் இருந்திருந்தால் இன்னும் சுவையாக விவாதங்கள் இருந்திருக்கும், கரூர் பிரச்னையைத் தீர்க்கவில்லை என்றால் 14 கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து சிம்சன் பிரச்னையில் பெரிய போராட்டத்தை நடத்தியதைப்போல் இதற்கும் ஏற்பாடு செய்வோம் என்ற ரீதியில் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், ஜனவரி மாதம் 16 ஆம் தேதியிலிருந்து இரண்டு இலட்சம் பேர்— ஜூட் மில்களைப் பொறுத்தவரையில் மட்டும்: மற்ற புள்ளிவிவரங்களை மேலவையில் சொல்கிறேன். வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்படியென்றால் ஜனவரி 16 ஆம் தேதியிலிருந்து பட்டினி கிடக்கிறார்கள். நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். 14 கட்சித் தோழர்களும்—தலைவர்களும், பாதயாத்திரையாக நேராக நடந்து சென்று, ஒவ்வொரு மாநிலத்திலேயும் மேற்கு வங்கத்தில் நடக்கின்ற அநீதியைப்பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டே கல்கத்தாவிற்குச் சென்று மாண்புமிகு முதலமைச்சர் ஜோதிபாசுவைப் பார்த்து, தமிழ்நாட்டிலே 14 ஆம் தேதி அளவிற்கு 11,507 பேர்தான் வேலை நிறுத்தம் செய்கிறார்கள், 3 லாக்கவுட், 12 ஸ்ட்ரைக் முந்தாநாள் வரையில். அதாவது 14 ஆம் தேதி தமிழகத்தில் 3 லாக்கவுட், 12 ஸ்ட்ரைக் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 11,507 பேர்.

பி. அன்ட் சி. மில் பெரிய தொழிற்சாலை, அதில் 7,800 பேர் இருக்கிறார்கள். அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இதைக் கழித்துப் பார்த்தால் 3,707 பேர்தான். பி. அன்ட் சி. மில்லைக் கழித்துவிட்டால், தமிழகம் முழுவதும் இன்றைக்கு organised labourers in plantation, Factories and Transport 9 லட்சத்து 41 ஆயிரம் பேர். பி. அன்ட் சி. மில்லைக் கழித்துவிட்டால் அதாவது 7,800 பேர்களைக் கழித்துவிட்டால் 3,707 பேர்தான் தமிழகத்திலே ஸ்ட்ரைக், லாக்கவுட்டினால் நேற்று முன்தினம் வரையில்—14 ஆம் தேதி வரையில் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனால் இங்கே போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். 14 பேர் சேர்ந்து விட்டோம் என்று மிரட்டுகிறார்கள். நான் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் இதிலே நீங்கள் காட்டுகின்ற அக்கறையைப் போல அங்கேயும் 



காட்டுங்கள். தமிழ்நாட்டில் உள்ள நிலைமைகளைப் பற்றி மட்டும்தான் அக்கறை வேண்டுமா இந்த 14 பேர்களுக்கு? இந்த 14 கட்சிகளில் இன்டர்நேஷனல் பார்ட்டீசும் இருக்கிறார்கள். சி.பி.எம். இருக்கிறது, சி.பி.ஐ. இருக்கிறது, இன்டர்நேஷனல் பார்ட்டீஸ். அது மட்டுமல்லாமல் தன்னுடைய ஊரோடு செல்வாக்கு இருக்கும் கட்சிகளும் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போல—மாநிலக் கட்சி என்றாலும், நாங்கள் அகில உலகப் பிரச்னைகளை எடுப்போம் என்று சொல்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த 14 கட்சிகூட்டணியில் இருக்கிறது.

நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், நாளையோ மறுதினமோ அல்லது சட்டமன்றம் முடிவதற்குள்ளோ—ஏனென்றால் ஜனவரி 16 ஆம் தேதியிலிருந்து இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் மேற்கு வங்கத்திலே பட்டினி கிடக்கிறார்கள்—ஊர்வலமாகச் சென்று இந்த வேலை நிறுத்தத்தை முடிப்பதற்கு ஆன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள நிலைமைகள் இங்கே பத்திரிகைகாரர்கள் எழுதுவதைப் போலவோ அல்லது எழுத வைப்பது போலவோ அல்லது அரசியல்வாதிகள் பேசுவதைப் போலவோ மோசமாக இல்லை: நான் ஏற்கனவே சொல்லியிருப்பதைப்போல, 11,507 பேர்—இதில் பி. அன்ட் சி. மில் போக 3,707 பேர்தான் ஸ்ட்ரைக் லாக்கவுட்டினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்வது சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். ஏனென்றால் மற்ற மாநிலங்களுக்கும், நம்முடைய மாநிலத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 1–10.)

1983-ல் ஸ்ட்ரைக்ஸ் அண்டு லாக் அவுட் 212. ஓர்க்கர்ஸ் அஃபெக்டட் 73925. இதை எல்லாம் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் ஆட்சிக்கு வந்து ஆறு, ஏழு ஆண்டுக் காலம் ஆகின்றது. ஒரு வேலை நிறுத்தத்தைக்கூட அதாவது ரன்னிங் ஸ்ட்ரைக்கை ஒன்றைக்கூட We have not prohibited. இதுதான் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி. டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சி. அப்படிக்கூட அவர்கள் சொல்ல மாட்டார்கள். அவர்கள் பாணியில் சொல்வது என்றால் எம்.ஜி.ஆர். ஆட்சி. அதாவது எம்.ஜி.ஆர். ஆட்சி, தொழிலாளர் விரோத ஆட்சி, தொழிலாளர் விரோதக் கொள்கையை அது கையாள்கிறது என்று காலையில் எழுந்தவுடன் விநாயகர் பக்தி கொண்டவர்கள் பூஜை நடத்துவதுபோல; அதுமட்டும் அல்லாமல் சுப்ரபாதம் பாடுவது என்று சொல்வார்களோ அதுபோல் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். புரட்சித் தலைவரின் ஆட்சி என்றவுடன் அது தொழிலாளர் விரோத ஆட்சி, தொழிலாளர் விரோதக் கொள்கையைக்

கையாளுகின்றது என்றுதான் சொல்கிறார்கள். அதிலே ஒரு பெரிய வேடிக்கை: அதாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1969-ல்2. 1971-ல் 1, 1972-ல் 7, 1973-ல் 6, 1974-ல் 1, 1975-ல் 1,1976-ல் 1 என்று இப்படி 19 முறை, நடந்து கொண்டிருந்த ஸ்ட்ரைக்குகளை இல்லீகல் என்று ப்ரொகிபிட் செய்திருக்கிறார்கள்.

அப்படி நடந்துகொண்டிருக்கின்ற ஸ்ட்ரைக்குகளைத் தடை செய்யக்கூடியவர்களோடு சேர்ந்துகொண்டு, நடந்துகொண்டிருக்கின்ற ஸ்ட்ரைக்குகளைத் தடை செய்யாத புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைப் பார்த்து கம்யூனிஸ்ட் தோழர்கள் குறை சொல்கிறார்கள். கட்சியை வளர்க்க வேண்டும் என்ற வகையிலே வேறு யாரோடாவது சேர்ந்து அவ்வாறு எதிர்க்கிறார்கள் என்றால் அதை ஒரு ஸ்ட்ரேட்டஜி என்று சொல்லிவிடலாம். ஆனால் 19 முறை நடந்துகொண்டிருக்கின்ற ஸ்ட்ரைக்குகளைத் தடை செய்தவர்களோடு சேர்ந்துகொண்டு நடந்து கொண்டிருக்கின்ற ஸ்டிரைக்குகளைத் தடை செய்யாத நம்மைத் தாக்குகிறார்கள் என்பது தாள மன வேதனை தரக்கூடியதாக இருக்கின்றது. இப்போதும்கூட சொல்கிறேன். கரூர் மிலலிலே ஒரு போராட்டம் நடக்கின்றது. அவர்கள் எல்லாம் லேர்னர்ஸ். அதாவது அப்ரன்டீஸ் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக் செய்கிறார்கள். அந்தப் பிரச்சினையைத் தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். ஆனாலும் அந்த வேலை நிறுத்தத்தைத் தடை செய்யவில்லை. அதன் காரணமாக இன்றையதினம் ஒரு மிகப் பெரிய பாராட்டுதல் சி.பி.எம். தோழர்களிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அது கிடைக்காமல் போய்விட்டதே என்று வருத்தப்படுகிறேன்.

அடுத்து 17-10-1983 முதல் 2500 தோட்டத் தொழிலாளர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். முதலாளிகள் கொடுத்துக்கொண்டிருந்த பஞ்சப்படியை நிறுத்திவிட்டார்கள், கொடுக்க மாட்டேன் என்று, அதற்குப் பின்னால் ஒரு ஒப்பந்தம் போட்டார்கள். அதன் காரணமாக 50 காசு, ஒரு ரூபாய் கொடுப்பது என்று ஒப்பந்தம் ஏறபட்டது. அதைத்தான் கொடுத்தார்கள். இதைக் கொடுக்கவில்லை, ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சட்சித் தோழர்களும் டி.எம்.கே, தோழர்களும் மற்றவர்களும் எந்த 10 (பி)யை இந்த அரசு கொண்டுவந்தபோது வேண்டாம் என்று எதிர்த்தார்களோ, அந்த 10(பி) யைப் பயன்படுத்தி, அந்த முதலாளி எந்தத் தேதியிலிருந்து அந்தப் பஞ்சப்படி கொடுப்பதை நிறுத்தினாரோ அந்தத் தேதியிலிருந்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு. திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இதை மனதாரப் பாராட்டினார்கள். அதுமட்டுமல்ல. இன்டெரிம் அரேஞ்மென்ட் என்ற அக்ரீமென்ட் வந்ததே அதையும் தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்று உத்தரவைப்போட்டு அந்த வேலை நிறுத்தம் 1-3-84-ல் நிறுவப்பட்டது. 17-10-83-ல்



ஆரம்பிக்கப்பட்ட அந்த வேலை நிறுத்தத்தில் எந்த 10 (பி)யை கம்யூனிஸ்ட் தோழர்களும் மற்றவர்களும் எதிர்த்தார்களோ அந்த 10(பி)-யை உபயோகப்படுத்தி தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டியதைக் கிடைக்கச் செய்தோம். இதிலே ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். தமிழகம் தவிர வேறு எந்த மாநிலத்திலும், அல்லது மத்திய அரசின் தொழிலாளர் நல அமைச்சருக்குக்கூட ஒரு தொகையைக்கொடு என்று சொல்வதற்கு அதிகாரம் இல்லை. அப்படிப்பட்ட சட்டம் அவர்கள் கையில் இல்லை. முதலாளியைப் பார்த்து இந்தத் தொகையைக் கொடு; தொழிலாளர்களுக்கு இந்தத் தொகையை கொடுத்தே ஆகவேண்டும்—கொடுக்கவில்லை என்றால் சிறைக்குப் போக வேண்டும்;—ஃபைன் மட்டுமல்ல இம்ப்ரிஷன்மென்ட் அன்ட் ஃபைன் ஆர் போத்; என்று ஒரு சட்டத்தை இந்த அரசுதான் கொண்டுவந்தது. முதலாளியையே ஜெயிலுக்கு அனுப்புகின்ற வகையிலே ஒரு சட்டம் இருப்பது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான்.

ஆக, அந்த 2,500 தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படாத பஞ்சப்படியைக் கொடுக்க வேண்டும் என்று 10 (பி)-யை உபயோகப்படுத்தி உத்தரவிட்டது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி. ஆனாலும்கூட, அதாவது இந்த ஒப்பந்தத்தைப் போட்டதற்குப் பிறகும்கூட, ஸ்ட்ரைக்கை ப்ரகிபிட் செய்யவில்லை: அதாவது அந்த வேலை நிறுத்தத்தைத் தடை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 10(பி)-யை உபயோகப்படுத்தினோம். தொழிலாளர்களுக்குப் பஞ்சப்படியை வாங்கிக் கொடுத்தோம். முதலாளிகள் பிரதிநிதிகள் வந்து என்னைப் பார்த்தார்கள். நான் சொன்னேன், I am sorry you will havs to pay even if it is through yonr nose. கொடுத்துதான் ஆகவேண்டும். ஏனென்றால் கொடுத்துக் கொண்டிருந்ததை நீங்கள் நிறுத்திவிட்டீர்கள். எனவே கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம் என்று சொன்னேன். அவர்களும் சரி, நாங்கள் கொடுக்கவில்லை யென்றால், என்றார்கள். I am ver y sorry youu will have to count the bars. செக்ஷன் 29 (ஏ)-ஐ இன்வோக் பண்ணுவோமே யானால் நீங்கள் கம்பி எண்ண வேண்டிய நிலை வரும். I have no sympathy for you because you have stopped paying the dearness allowance. என்று சொல்லி கேட்கும்படியாகச் செய்திருக்கிறோம். இங்கே இல்லை என்றாலும் மேலவையிலே பேசும் பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் வழக்கத்திற்கு மாறாக, இந்த அரசைப் பாராட்டுவார் என்று நான் நம்புகிறேன். ஆனால் 10(பி)-யை இன்வோக் பண்ணிக்கூட வேலை நிறுத்தத்தைத் தடை செய்யாத ஒரு அரசு புரட்சித் தலைவருடைய அரசு என்பதை நான் பெருமைபோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சியிலே தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டன, இவர்கள் திறப்பதில்லை என்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, 1971-லேயிருந்து

1976 வரையிலும் 9 தொழிற்சாலைகள் மூடியதைத் திறந்தார்கள், பாராட்டுகிறேன். ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் 17 தொழிற்சாலைகள் மூடியதைத் திறந்து இருக்கிறோம். Where is nine and seventeen? அது 9; எங்களுடைய காலத்தில் 17 தொழிற்சாலைகளைத் திறந்திருக்கிறோம். இதையெல்லாம் பார்த்துவிட்டு எப்படித்தான் பேசுகிறார்களோ, கான்கிரீட் எவிடன்ஸ் அல்லது கன்ஸ்ட்ரக்டிவ் கிரிடிசிசம் என்பார்கள். ஒரு ஆட்சியைப் பற்றி சொல்லும்பொழுது, தொழிலாளர் விரோத அரசு என்று சொன்னால், ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று சார்ஜஸ் வைக்க வேண்டும். அதில்லாமல் வேகாக பேசிவிட்டு போய்விட வேண்டியதா, சாதனையை நான் இப்பொழுது சொல்லும்போது என்ன பதில்? நான் இதற்கெல்லாம் பதில் எதிர்பார்க்கிறேன், இப்பொழுது இல்லையென்றால, மேலவையிலோ, பத்திரிகை மூலமாகவோ எதிர்பார்க்கிறேன்.

அது மட்டுமல்ல, குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்த வரையில் ஷெடியூலில் 13 தொழில்களைச் சேர்த்திருக்கிறோம். குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்றால், ஷெடியூல் சேர்த்துதான் பிறகு நிர்ணயிக்க வேண்டும். 13 தொழில்களைச் சேர்த்திருக்கிறோம். மேலும் 3 தொழில்களைச் சேர்க்க பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். 15 தொழில்களுக்கு முதன்முதலாகக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்திருக்கிறோம். இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தனியார் மருத்துவமனைகள், பிரைவேட் கிளினிக்ஸ் இருப்பது உங்களுக்குத் தெரியும். அங்கே எப்படி சார்ஜ் வாங்குகிறார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். உள்ளே போய் வெளியே வந்தால் ரூ. 100 கொடுக்க வேண்டுமென்கிறார்கள். கையைத் தொட்டுப்பார்த்தால் ரூ. 150 கொடுக்க வேண்டுமென்கிறார்கள். கண்ணிலே டாக்டர் கைவைத்தால், தொட்டுப்பார்த்தால், ரூ. 150 கொடுக்க வேண்டுமென்கிறார்கள். இது பிரைவேட் கிளினிக்குகளுடைய நிலைமை. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் நிலை என்ன, அவல நிலை மிகக் குறைவான ஊதியம், ரூ. 50, ரூ. 60, ரூ. 70, ரூ. 80 என்று வாங்கிக் கொண்டிருந்தார்கள். புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான் முதன் முதலாக பிரைவேட் ஹாஸ்பிட்டல்ஸ் அன்ட் டிஸ்பென்சரீஸ் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சிகரமாக இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். This is not a mean achievement. இது சாதாரண வெற்றி அல்ல. அங்கே இருக்கிற தொழிலாளர்களைப் பற்றி யாரும் சிந்திக்கவே இல்லை. முதன்முதலாக சிந்திக்க ஆரம்பித்தது புரட்சித் தலைவர் ஆட்சியில்தான், இப்படி முதன்முதலாகக் குறைந்தபட்ச ஊதியம் 15 தொழில்களில் இந்த ஆட்சி நிர்ணயித்திருக்கிறது. 24 தொழில்களில் ரிவைஸ் செய்திருக்கிறது, மாற்றி அமைத்திருக்கிறது. இன்னும் கமிட்டி போட்டு பரிசீலித்து வருவது 5 நிறுவனங்கள். குழு பரிந்துரை வந்து அரசு





பரிசீலனையில் இருப்பது இரண்டு. குழு ஒப்புக்கொண்டு ஆய்விலுள்ளவை, 15 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காக இப்பொழுது அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல் 1-20)

இராமநாதபுரத்தில் பெண்களும் குழந்தைகளும் அதிகமாக வேலை வாங்கப்படுகிறார்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காக அங்கே செப்பரேட் டிவிஷன் ஒன்று ஆரம்பித்து, டெப்புட்டி சீப் இன்ஸ்பெக்டர் ஒருவரை நியமித்து இருக்கிறோம். அவருடைய ஹெட்குவார்ட்டர்ஸ் சிவகாசியில் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய தொழிலாளர் கொள்கை என்ன என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்களுடைய தொழிலாளர் கொள்கை இதுதான். எது? நேரடியாக பேச்சு வார்த்தை நடத்துங்கள். அந்த நேரடிப் பேச்சு வார்த்தையில் வெற்றி பெறவில்லையென்றால், சமரச அதிகாரி முன்னால்வந்து பேச்சு வார்த்தை நடத்துங்கள். அதிலே வெற்றிபெறவில்லையென்றால் அமைச்சரை அணுகுங்கள். அதிலே ஒரு ஒப்பந்தம் வரவில்லையென்றால் 'Please resort to voluntary adjudication or arbitration.' அப்படியென்றால் அரசை அணுகினால் நாங்கள் தொழில் நீதிமன்றங்களுக்கு அனுப்ப தயாராக இருக்கிறோம். இந்த முறையைக் கையாண்டு வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பதற்கு இந்த அரசு வேண்டிக் கொள்கிறது. அப்படியே வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வரவேண்டுமென்றால் வேலை நிறுத்தத்தை தவிர்த்துவிடுங்கள்; 'This is a developing country.' இது வளர்ந்துவருகிற நாடு. இங்கே வேலை நிறுத்தங்கள் என்பது லக்சுவரி. இந்த நாடு வளர்வதற்கு அது சங்கடமாக இருக்கும். இங்கு உற்பத்தி அதிகமாக வேண்டும், ஆப்டிமம் லெவல் புரடக்ஷன் வேண்டும். அன்-இன்டரப்டட் புரடக்ஷன் வேண்டும். எனவே வேலை நிறுத்தத்தை தவிர்த்துவிடுங்கள். இல்லை, எப்படியாவது வேலை நிறுத்தம் நடந்துதான் தீரவேண்டுமென்றால் யாருக்காக நடத்துகிறீர்கள்? தொழிலாளர்களுக்காக, அதைதான் புரட்சித் தலைவர் சொல்கிறார். அப்படி வேலை நிறுத்தம் செய்துதான் ஆகவேண்டுமென்றால், புரட்சித் தலைவர் என்றைக்கு முதலமைச்சராக வந்தார்களோ அன்றையிலிருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார். அந்தத் தொழிற்சாலையில் நீங்கள் இரகசிய வாக்கெடுப்பு எடுங்கள். அப்படி வாக்கெடுப்பு எடுக்கிற போது 60 சதவீதத்தினர் வேலை நிறுத்தம் வேண்டுமென்று சொன்னால் வேலை நிறுத்தம் செய்யுங்கள், அதைப்போல கடைசியாக ஒரு ஒப்பந்தம் வருமேயானால், டிராப்ட் செட்டில்மென்ட், அந்த டிராப்ட் நகல் ஒப்பந்தத்தை தொழிலாளர்கள் முன்னாலே வைத்து அவர்கள் சொன்னது இரகசிய வாக்கெடுப்பு Please note the words 'secret ballot,' இரகசிய வாக்கெடுப்பு எடுத்து அதிலே 60 சதவீதத்தினர் ஏற்றுக் கொள்வார்களானால் ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடுங்கள்.

அதுதான் ஜனநாயகம் என்று இந்தக் கருத்தைச் சொல்கிறார். அதை நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தோழர்களோ, சி,பி.ஐ. தோழர்களோ ஏற்றுக்கொள்வதில்லை, இது எம்.ஜி.ஆர். சொன்னது தானே என்று அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இன்னொருவர் சொன்னதை நான் இங்கே படிக்க ஆசைப்படுகிறேன். 'He told the workers to use the weapon 'strike sparingly.' எப்போதாவது உபயோகப்படுத்துங்கள். 'To use the weapon 'strike' sparingly' because neither the owners, workers nor the Government benefit.' முதலாளிகளோ, தொழிலாளர்களோ, அரசோ இலாபம் அடையப்போவதில்லை. எதனால்? வேலை நிறுத்தத்தின் காரணமாக. எனவே அந்த கடைசி ஆயுதத்தை ஸ்பேரிங்லி எப்போதாவது உபயோகப்படுத்துங்கள் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். அது ஸ்டேட்ஸ்மென்னில் 28-12-83-ல் வந்திருக்கிறது. சொன்னவர் மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் ஜோதி பாசு, மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் ஜோதிபாசு சொல்கிறார், 'To use this weapon sparingly.' ஏனென்றால் அது தொழில் அதிபர்களை, தொழிலாளர்களை, அரசை பாதிக்கும். அதைச் சொல்லிவிட்டு எப்படி கோரிக்கை போட வேண்டுமென்று ஒரு ஆலோசனை சொல்கிறார். 'The demands should not be beyond the reach of the owners.' கோரிக்கைகள் முதலாளிகளால் கொடுக்க முடியாததாக இருக்கக் கூடாது. 'Take into consideration the paying capacity of the establishment.' இந்த அளவிற்கு நாங்கள் சொல்லவில்லை' சொல்லியிருப்பவர் ஜோதிபாசு, நாங்கள் சொல்கிற கொள்கையை விட இது மிகத் தீவிரமாக இருக்கிறது. இது ஸ்டேட்ஸ்மென்னில் வந்தது. நம்முடைய நியூஸ்-டுடே-யில் வந்ததை படித்து காண்பிக்க ஆசைப்படுகிறேன். அதைச் சொன்னவரும் மேற்குவங்கத்தின் முதலமைச்சர் ஜோதிபாசு தான். ஒரு விழாவில் கலந்துகொண்டு அவர் சொல்கிறார். 'The Chief Minister expressed satisfaction that the Dunlop India Limited having 61 per cent of Indian shares propose to invest 40 crores in West Bengal in the near future.' 40 கோடி விரிவாக்கத்திற்கு செலவுசெய்ய இருக்கிறார்கள். He urged the workers to work unitedly and solve all their disputes across the Table without retarding the progress of the company' கம்பெனியினுடைய வளர்ச்சியைப் பாதிக்காமல் 'Without retarding the progress of the company.' ஸ்ட்ரைக் பண்ணினால் குரோத் பாதிக்கும். அதுதானே அதற்கு அர்த்தம். பேச்சு வார்த்தையின் மூலமாக முடித்துக்கொள்ளுங்கள். நான் வருத்தப்படுகிறேன். சி.பி.எம். தோழர்கள் குறிப்பாக எதற்கெடுத்தாலும் ஆவேசமாகப் போகக்கூடிய என்னுடைய அருமை நண்பர் உமாநாத் அவர்களும், ரமணி அவர்களும், சங்கரய்யா அவர்களும் இங்கே இல்லையே என்று வருந்தப்படுகிறேன். ஜோதிபாசு அறிவுரையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா, அதாவது, Try to settle it across the table மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்படுகிறபோது, 60%





வாக்குகள் ரகசிய வாக்கு எடுப்புகள் மூலம் கிடைத்ததால் வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் ஜோதிபாசு அவர்கள் என்ன சொல்கிறார்? ரூ 40 கோடி விரிவாக்கத்திற்குப் போடுகிறார்கள் என்பதற்காக சொல்கிறார். ஏனென்றால், மேற்கு வங்கத்தில் பிரைவேட் செக்டார் இன்டஸ்ட்ரீஸ் வரவேண்டும். மிக்ஸ்டு எகானமிக்ஸ் பிரைவேட் செக்டாரை என்கரேஜ் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். தொழிலதிபர்கள் நிறையவரவேண்டும். தொழிற்சாலைகள் வரவேண்டும். அதன் மூலமாக அதிகமாக வேலை வாய்ப்புகள் பெருகவேண்டும், என்ற அடிப்படையில் சொல்கிறார் திரு. ஜோதிபாசு. ஆனால் புரட்சித் தலைவர் அதைச் சொல்கிறபோது தொழிலாளர் விரோத அரசு என்று சொல்கிறார்கள். இங்கே முதலமைச்சர் வேலைநிறுத்தத்தை ஸ்பேரிங்காக யூஸ் செய்யுங்கள் என்று சொல்கிறார். ஆனால் ஜோதிபாசு அவர்கள் பிரச்சினைகளை அக்ராஸ் தி டேபிள் செட்டில்மெண்டு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்; இது 5-3-84 நியூஸ் டுடேயில் வந்திருக்கிறது. இதெல்லாம் சரியான ரிப்போர்ட்தான் என்று அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதற்கு அவர்கள் என்ன சொல்லக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

நாங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நேரடியாகப்பேச வரவில்லையென்றால், வழக்கு மன்றத்திற்குத் தானே போகிறோம். அப்படி வழக்குமன்றத்திற்கு அனுப்புகிறபோது என்ன சொல்கிறார்கள் என்றால், அது சரியல்ல என்கிறார்கள். சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகள் இது குறித்து ஒரு நிலையான கொள்கையை உறுதியான கொள்கையைக் கையாளவேண்டும். 'தே ஆர் நாட் பாலோயிங் எ கன்சிஸ்டண்டு பாலிசி. நேற்றையதினம் பேசும்போது சொன்னார்கள். கரூர் பிரச்சினையை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது தவறு என்று சொன்னார்கள். ஏன் தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்பினீர்கள் என்று கேட்டார்கள். கரூரில் பேசிய நம்முடைய நண்பர் கல்யாணசுந்தரம், எம்.பி. சொன்னார், தொழில் நீதிமன்றம் சர்வரோக நிவாரணியா என்று கேட்டார்கள். ஆனால் அதே கல்யாணசுந்தரம், கந்தசாமி மில் பிரச்சினையை தொழில் நீதிமன்றத்திற்கு அனுப்புங்கள் என்று என்னை வைத்துச்கொண்டே முதலமைச்சரிடம் கேட்டார்கள். ஏன் இப்படி, இரட்டைக் கொள்கையை பாலோ செய்கிறீர்கள்? நீங்கள் ஒரு பிரச்சினையைப் பற்றி கோர்ட்டுக்கு அனுப்புங்கள் என்று சொன்னால். உடனே நான் 'எஸ்' என்று சொல்லி, எஸ். இராகவானந்தம் என்று கையெழுத்துப் போடவேண்டும். நீங்கள் வேண்டாம் என்று சொன்னால், அதற்கும் 'எஸ்' என்று சொல்லி நான் கையெழுத்திட வேண்டும். இப்படி நீங்கள் நினைத்தால் எங்களுக்கு என்று ஒரு கொள்கை இல்லையா? அண்ணா எங்களுக்குச் சொல்லித்தரவில்லையா, பிரச்சினைகளை பரிசீலித்து பரிந்துரை செய்வதற்கு கொஞ்சம் இண்டலிஜன்ஸ். காமன்சென்ஸ் எங்களுக்கு இல்லையா? கரூர் மில் பிரச்சினையை

கோர்ட்டுக்கு அனுப்பியது அவரே என்று பேசுகிறபோது, கந்தசாமி மில் பிரச்சினை குறித்து, கல்யாணசுந்தரம் வழக்கு மன்றத்திற்கு அனுப்புங்கள் என்று கேட்பது தவறில்லையா? ஆகவே தான், நாங்கள் ஒரு சீரான கொள்கையை, நிலையான கொள்கையை வைத்து. எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமோ, அப்படி முடிவெடுத்து செய்து காண்டுவருகிறோம்.

'அனதர் ஒன் மோர்இன்கன்சிஸ்டென்சி' பற்றி நான் குறிப்பிடவிரும்புகிறேன். 'டேம்கோ' தொழிற்சங்கம் சி ஐ டி.யூ—க்கு சொந்தமா? அல்லது குசேலருக்குச் சொந்தமா? அதிலே யார். தலைவராக இருப்பது என்ற போராட்டம் நடந்த நேரத்தில் அதை சிவில் கோர்ட்டுக்கு விடவேண்டும் என்று சொன்னோம். சமரச பேச்சுவார்த்தைகள் மூலம் அதைத் தீர்க்கமுடியவில்லை. ஆனால் அவர்கள் 12 (3) செட்டில்மெண்டு போடவேண்டுமென்று சொன்னார்கள். 12 (3) செட்டில்மெண்டு போட வேண்டுமென்று சொன்னால், சமரச அதிகாரி கையெழுத்துக்கு யார் அதை ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களும் கையெழுத்து போடவேண்டும். அதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தினால் 18 (1) செட்டில்மெண்டு போடுங்கள் என்று சொன்னோம். அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் 4-3-84 அன்று மேட்டூர் கெமிக்கல்ஸ்-ல், ஏ.ஐ.டி யூ.சி. ஐ.என்.டி.யூ.சி. ஆகியவற்றை விட்டுவிட்டு, சி.ஐ.டி.யூ தனியாக வலியச்சென்று 18 (1) செட்டில்மெண்டு போட்டுக்கொண்டார்கள்.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது,

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் 18 (1) செட்டில்மென்ட் சி.ஐ.டி.யு. யூனியன் தனியாகப் போடடுக்கொள்ளலாம். ஆனால் 'டாம்கோவில்' அப்படி 18 (1) செட்டில்மென்ட் போட்டுக்கொள்ளுங்கள் என்று நாங்கள் சொன்னால் செய்ய மறுக்கிறார்கள். அது குசேலருக்கு சொந்தமா சிந்தனுக்குச் சொந்தமா என்ற தகராறு இருக்கிறது. ஆகையால் உங்களைப் பொறுத்தவரையில் 18 (1) செட்டில் மென்ட் போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறோம். மேட்டூர் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில் 18 (1) செட்டில்மென்ட் போட்டவர்கள் 'டாம்கோவில்' போடச்சொன்னால் அது தொழிலாளர் விரோதக் கொள்கை என்று சொல்கிறார்கள். இதை எல்லாம் நீங்கள் சிந்தித்துச் சொல்லி விட்டீர்கள். அரசின் சார்பில் நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன். நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்துகொள்வார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்துவருகின்ற சரியான நியாயமான காரியங்களை அவர்கள் எண்ணிப்பார்த்து வருகின்ற காரணத்தால் எந்தத் தேர்தல் வந்தாலும் இந்த நாட்டு மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் பக்கம் நின்றார்கள்; இனியும் நிற்பார்கள் என்றுகூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.





**கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,17 86,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;** பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின்கீழ் ரூ. 27,21,77,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 1[illegible]-3-1984 காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1—32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.**

125. கோயம்புத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏலம்விடும் மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விதிக்கப்படும் விற்பனை வரியை ஆறு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-12-1983 ஆம் நாளிட்ட 1416 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை ]தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் I/1956) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பற்றது].

126. 4–3–1979 முதல் 23–3–1979 வரை தேங்காய்கள் கொள்முதல் செய்த எந்த ஒரு வணிகரும் செலுத்தும் வரியினை தள்ளி வைத்தல் குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 17-12-1983 ஆம் நாளிட்ட 1433 ஆம் எண்

அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1956) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

127. தமிழ்நாடு 1953 ஆம் ஆண்டு விளம்பர வரி விதிகளை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 22-1-1983 ஆம் நாளிட்ட 1354 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

128. பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை (தமிழ், ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1951) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

129. தமிழ்நாடு முதல் அமைச்சர், அமைச்சர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோர் மீது சாராயம், இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மதுவகைகள் ஆகியவற்றின் உற்பத்தி, மொத்த விநியோகம் சில்லரை விநியோகம் ஆகியவைகளுக்கான உரிமை மற்றும் உரிமம் வழங்குவது மற்றும் இவை தொடர்பான பொருள்கள் சம்பந்தமான சாட்டுரைகளை விசாரிக்க அமைக்கப் பட்ட நீதிபதி திரு டி, இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கையின் முடிவுகள் (ஆங்கிலம்.)

130. நீதிபதி திரு டி. இராமபிரசாத்ராவ் விசாரணைக் குழுவின் அறிக்கை ஏற்கப்பட்டது குறித்த 15-3 1984 ஆம் நாளிட்ட மதுவிலக்கு ஆயந்தீர்வைத் துறையின் 330 ஆம் எண் அரசாணையின் நகல்.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

53. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1 84-85 (தமிழ், ஆங்கிலம்).

54. வேலை வாய்ப்பு—பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (29 ஆம் எண் மானியக் கோரிக்கையின் துணை மானியக் கோரிக்கை). (தமிழ், ஆங்கிலம்).

55. ''தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்'' குறித்த சிறு புத்தகம்.

56. தமிழ்நாட்டில் நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85.



## இணைப்பு I

(390ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

கோரிக்கை எண். 29.—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### பாகம் 1

### அத்தியாயம் 1

### பொது.

1. 1. 1983 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அமைதியான தொழில் நல்லுறவு நிலவியது. அமைதியான தொழில் நல்லுறவைப் பெறுவதற்காக அரசு தேவையானபோதெல்லாம் சட்டங்களை இயற்றியுள்ளது. நிருவாகங்களும் தொழிற் சங்கங்களும் மக்களுக்கு நலன் பயக்கத்தக்க கொள்கையை கடைபிடிப்பதற்கு அதிக அளவில் ஒத்துழைப்பு நல்கின. அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கு சட்டப்படி வரையறுத்த குறைந்தளவு ஊதியங்கள் அளிப்பதன் மூலம் அவர்களின் நலனைப் பாதுகாப்பதில் அரசு தீவிரமாக உள்ளது. நிருவாகமும் தொழிலாளர்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயலாற்றும் சுமுக நிலைக்கு அரசு தனது பாராட்டு தலைத் தெரிவிக்கிறது.

தொழிலாளர் நலத்துறையின் பணிகள் பின்வரும் தலைப்பு களின்கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன.

(1) தொழில் உறவுகள் தொடர்பான சட்டம்

(2) பணி, நிபந்தனைகள் மற்றும் வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள்

(3) ஊதியங்கள் குறித்த சட்டங்கள்;

(4) சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள்;

(5) தொழிலாளர் நலப் பணிகள்;

(6) எடைகள் அளவைகள் குறித்த சட்டங்கள்,

## அத்தியாயம்—2

### தொழில் உறவுகள் தொடர்பான சட்டம்.

### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

2-1-1982, 1983-ஆம் ஆண்டுகளில் எழுந்த தொழில் தகராறுகளின் எண்ணிக்கையும், அவற்றை முடிவு செய்தது பற்றிய விவரங்களும் இணைப்பு—1-ல் கொடுக்கப்பட்டுள்ளன. வேலை நிறுத்தங்கள்;

2.2. முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள். கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இணைப்பு —2 இல் கொடுக்கப்பட்டுள்ளது,:—

2.3. பின்வரும் காரணங்களினால் வீணான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

(1) ஸ்ரீலங்காவில் தமிழ்மக்கள் அடைந்த துன்பம் குறித்தும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் தங்கள் மன வேதனையைத் தெரிவிக்கவும், துன்பமடைந்த அவர்களுக்கும் தங்களுடைய உறவினர்களையும், சொத்துக்களையும் இழந்தவர்களுக்கும், அனுதாபங்களைத் தெரிவிக்கவும்' இத்தகைய துன்பங்களும் கொடுமைகளும் மீண்டும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு எல்லா அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் ஒத்துழைப்புடன் 2-8-1983 அன்று மாநிலம் முழுவதும் பொது கடையடைப்பு நடத்தியது.

(2) 1983 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டத்தில் நடைபெற்ற 76 நாள் வேலை நிறுத்தம்.

(3) கோயம்புத்தூரில் துணி ஆலைகளில் நடைபெற்ற ஒரு பகுதித் தொழிலாளர்களின் ஒரு நாள் வேலை நிறுத்தம்.

(4) கோயம்புத்தூர், இலட்சுமி மெஷின் ஒர்க்ஸ் நிறுவனத்தில 1,800 தொழிலாளர்கள் சுமார் 30 நாட்களுக்கு செய்த வேலை நிறுத்தம்.

1983.ம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புக்கள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால் தீர்வு காணப்பட்ட வழிமுறைகளைஇணைப்பு 3-ல் காணலாம்.

2-4.1982, 1983-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் பற்றி தொழிற்சாலை வாரியான புள்ளி விவரம் இணைப்பு-4 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2.5. இம்மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழிலாளர் நீதி மன்றங்களுக்கு தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 33-சி (2) பிரிவின்கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை' இக்குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு-4.)



### தொழிற்சாலைகளை மூடிவிடுவதைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

(1) திருமகள் ஆலை, குடியாத்தம்:

2.6. பங்குதாரர்களிடையே நிலவிய நீண்ட நாள் பகைமை காரணமாக இந்த ஆலையில் வேலை நிறுத்தப்பட்டது. இதனால் இந்த ஆலை பொருளாதார ரீதியில்கட்டுபடியாகாத ஆலையாக ஆகிவிட்டது. 452 தொழிலாளர்கள் வேலை இழந்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் பல்வேறு நாட்களில் பேச்சு வார்த்தை நடத்தியதன் மூலம் ஆலையை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்தார். பின்னர் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த ஆலை புதிய இயக்குநர்களால் எடுத்துக்கொள்ளப் பட்டது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் ஆலோசனையின் பேரில் தொழிலாளர் நல ஆணையர் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியதால் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 8-7-1983 அன்று உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது, 15-7-1983 அன்று ஆலை மீண்டும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) ஸ்ரீஇராமலிங்க சூடாம்பிகை ஆலை, திருப்பூர்:

2.7. இந்த ஆலை 25-7-1982 லிருந்து 1,400 தொழிலாளர்களை லே-ஆப் செய்தது. நிதி இடர்பாடுகளின் காரணமாக இந்த ஆலை நலிவுற்ற தொழில் பிரிவாக ஆகிவிட்டது. புதிய நிருவாகம் ஒன்று 4-5-1983 அன்று இந்த ஆலையை எடுத்துக் கொண்டது. இதற்கு உத்தரவாதம் அளிக்கும்படி அவர்கள் அரசை அணுகினர். இந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்பும், தொழிலாளர் நல ஆணையர் முன்பும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன இதற்கிடையில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 500 என்ற வீதத்தில் 1,400 தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக முதலமைச்சரின். இடருதவி நிதியிலிருந்து அரசு ரூ. 7 இலட்சம் வழங்கியது. அதன் பின்னர் 15-12-1983 அன்று ஆலையை திறப்பது சம்பந்தப்பட்ட மற்ற, பிரச்சினைகள் தொடர்பாக 9-12-1983 அன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்பு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்படிக்கைசெய்து கொள்ளப்பட்டது. 15-12-1983-லிருந்து ஆலையை சுத்தம் செய்யும் பணியும், பழுது பார்க்கும் பணியும் தொடங்கப்பட்டதாகவும், ஆலை தற்போது செயல்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[1984 மார்ச் 16

3. டிரான்ஸ்பார்மர் அண்ட் ஸ்விச்கீர் லிமிடெட், சென்னை:

2.8. இந்நிறுவனம் பொருளாதார ரீதியில் கட்டுபடியாகாத வகையில் செயல்பட்டதால், 1-4-1983-ல் இருந்து தொழிலாளர்கள் அனைவரும் லே-ஆப் செய்யப்பட்டனர். இந்நிறுவனம் நலிவுற்ற தொழில் பிரிவாக ஆகிவிட்டது. இந்நிறுவனத்தை மீண்டும் திறப்பது பற்றி தொழில் துறை பரிசீலித்து வந்தது. ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 250 வீதம் 220 தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக முதலமைச்சரின் பொது இடருதவி நிதியிலிருந்து ரூ. 55,000 வழங்கியது. மத்திய அரசு பிறப்பித்த அவசரச் சட்டத்தின் மூலமாக, சென்னை டிரான்ஸ்பார் மர் அன்ட் ஸ்விச்கீர் லிமிடெட்டை இந்திய அரசு நிறுவனமான ஆன்ட்ரூயூல் (Andrew yule) நிறுவனம் எடுத்துக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் 18-11-1983 அன்று திறக்கப்பட்டது.

4. துணிகள்;

2.9. தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பல்வேறு தொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். (அண்ணா தொழிற்சங்க பேரவை தவிர) இத்தொழிற் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், 1982 ஆம் ஆண்டுக்கு (1982–83) ஊதியக் கொடையும், முந்தைய ஆண்டுகளில் அதாவது 1978-79, 1979.80. 1980–81 ஆம் ஆண்டுகளில் வழங்கியதைப் போன்று கூடுதல் தொகையும் வழங்குமாறு கேட்டு, வேலை நிறுத்த அறிவிப்புகளைக் கொடுத்தனர். சென்னை, தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் பல்வேறு நாட்களில் இணக்க பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அவர் நடத்திய விவாதத்தின் அடிப்படையிலும், தொழிலாளர் நல இணை ஆணையர் முன்பு மேற்கொண்டும் நடைபெற்ற இணக்க பேச்சு வார்த்தைகளினாலும் 25-10-1983 அன்று தொழில் தகராறுகள் சட்டத்தின் (12/3) பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின்படி 1982 ஆண்டுக்கு 1982-83 ஊதியக் கொடை வழங்குவதற்கும். கீழே குறிப்பிட்டுள்ளவாறு தொழிலாளர்கள் பணி புரிந்த நாட்களின் அடிப்படையில் தொகை வழங்குவதற்கும் இந்த உடன்பாடு வகை செய்கிறது.

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 275 நாட்களும், அதற்கு மேலும் .. | 400 |
| 2. | 200 நாட்கள் முதல் 274 நாட்கள் வரை | 300 |
| 3. | 100 நாட்கள் முதல் 199 நாட்கள் வரை .. | 200 |
| 4. | 50 நாட்கள் முதல் 99 நாட்கள் வரை — | 100 |
| 5. | 30 நாட்கள் முதல் 49 நாட்கள் வரை .. | 50 |

2.10. ஏறக்குறைய 1.15 இலட்சம் துணி ஆலைத் தொழிலாளர்கள் இந்த உடன்பாட்டினால் பயனடைந்தனர்,



1984 மார்ச் 16]

5. போக்குவரத்துக் கழகங்கள்.

2.11 தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகங்களில் பணிப்புரியும் தொழிலாளர்கள் உள்ள பல்வேறு தொழில் சங்கங்கள் சம்பள வீதங்களையும் படிகளையும் திருத்துதல், மற்ற கோரிக்கைகள் ஆகியவை தொடர்பான பிரச்சினை குறித்து கோரிக்கை எழுப்பினர். மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் முன்பு இது குறித்து 18-7-1983, 8-8-1983 9-8.1983 11–8–1983, 16 8-1983' ஆம்நாட்களிலும் இறுதியில் 17-8-1983 அன்றும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் நன்முயற்சி காரணமாக மத்திய தொழிற்சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளும், பல்வேறு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பிரதிநிதிகளும் 17-8-1983 அன்று உடன்பாடு ஒன்று செய்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து சென்னை தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் முன்பு மேற்கொண்டு நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து பின்வரும் கழகங்களில் அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட நாட்களில் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. | சோழன் சாலைப்போக்குவரத்துப் பொறியியல் கழகம், கும்பகோணம். | 26-8-1983 |
| 2. | ஜீவா போக்குவரத்துக்கழகம், ஈரோடு | 27–8–1983 |
| 3. | மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி. | 29–8–1983 |
| 4. | பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், மதுரை, பாண்டியன் பொறியியல் கழகம், மதுரை. | 29-8-1983 |
| 5. | கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி | 30-8-1983 |
| 6. | சேரன் போக்குவரத்துக் கழகம்' கோயம்புத்தூர், சேரன்பொறியியல் கழகம், பொள்ளாச்சி. | 27-8.1983 |
| 7. | நேசமணி போக்குவரத்துக் கழகம். நாகர் கோவில். | 30–8–1983 |

2.12 இந்த உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டதால் மாநகரிலும், வெளியூர்களிலுமுள்ள போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதியம் முறையே ரூ. 75 ரூ. 65 ஆக உயர்ந்தது. இதனால் பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 67000 ஆகும். இந்த உடன்படிக்கைகளில் கையொப்பமிடாத சி. ஐ. டி. யு. எல்பி. எஃப், ஏ. ஐ. டி. யு, சி, சங்கங்கள் பொது கோரிக்கைகள் குறித்து வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது

மட்டுமல்லாமல், ஏற்கெனவே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் செல்திறன் குறித்தும் எந்த அளவிற்கு அவை தங்களை கட்டுப்படுத்தும் என்பது குறித்ததும் வினவின. இது குறித்து இணக்க பேச்சுவார்த்தைகள் நடத்திய தொழிலாளர் நல ஆணையர் அரசுக்கு இணக்க முறிவு அறிக்கையை அனுப்பியுள்ளார். 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்படி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையையொட்டி தொழிலாளர்கள் உடன்படிக்கையின்கீழ் வரும் கோரிக்கையை எழுப்புவதிலிருந்து தொழிலாளர்கள் தடை செய்யப்படுவதால், இக்கோரிக்கைகள் குறித்து நீதிமன்ற தீர்ப்புக்கு விட மறுத்து, அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

6. தோல் பதனிடு தொழிற்சாலைகள்.

2.13. தமிழ்நாட்டிலுள்ள தோல் பதனிடு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வெவ்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஊதியத்தை திருத்துதல், ஆண்டுச் சம்பள உயர்வு, தற்காலிக விடுப்பு முதலியவை தொடர்பாக கோரிக்கைகளை எழுப்பினர். தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் முன்பு 1983 ஜூலை, ஆகஸ்ட் செப்டம்பர் ஆகிய நாட்களில் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின்பலனாக தகராறிலுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து 26-9-1983 அன்று உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. இந்த் உடன்படிக்கை காரணமாக தோல்பதனிடு தொழிற்சாலைகளில் பணிபுரியும்சுமார் 25000தொழிலாளர்கள் அவர்களுடைய ஊதியத்தில் ரு. 80 உயர்வு பெற்று பயனடைந்தனர்.

7. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம்.

2.14. மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடிதம் வரப்பெற்றநாளிலிருந்து 21 நாட்களுக்குப் பின்னர் எந்த ஒரு நாளிலும் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக குறிப்பிட்டு 20-4-1983 அன்று வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். இக்கோரிக்கையில் ஊதிய திருத்தம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, தொழிலாளர் இறந்த பின்னர் அவருடைய குடும்பத்ினருக்குக் கிடைக்கும் ஓய்வூதியப் பயன் திட்டம் முதலியவை அடங்கும். இருதரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் பலனாகவும், தொழிலாளர் நல ஆணையர் நடத்திய இணக்க பேச்சு வார்த்தைகளினாலும், 10-10-1983 அன்று உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கையினால் சுமார் 14,000 தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்கு ரூ. 133 முதல் ரூ. 20[illegible] வரை பயன்பெற்றனர்.



8 பீடித் தொழில்.

2.15. பீடித்தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஊதியத்திருத்தம், ஊதியக்கொடை ஆகியவை உட்பட தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி 10-1-1983 அன்று வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தனர். இதன் விளைவாக சென்னை, தொழிலாளர்நலத்துணை ஆணையர் (ஆய்வு)தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும், பீடித் தயாரிப்பாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடனும் பல்வேறுபேச்சு வார்த்தைகள் நடத்தினார். பின்வரும் மாவட்டங்களிலுள்ள பீடி தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவற்றுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள நாட்களில் தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்டன.

| | |
|---|---|
| வட ஆற்காடு மாவட்டம் | 4-5-1983 |
| சென்னை மாநகர், செங்கற்பட்டு மாவட்டம் | 5-5-1983 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் | 5-5-1983 |
| சேலம் மாவட்டம். | |
| 1. டி.சி. திவான் முகைதீன் அன்ட் சன்ஸ் திவான் பீடி கம்பெனி' சேலம் மற்றும் | |
| 2. பூக்கூடை பீடிவியாபாரி, சையத் காதர் தெரு, சேலம் (ஆகிய நிருவாகங்களைப் பொறுத்த வரையில் | 24-5-1983 |

2.16. இந்த உடன்பாடு ஊதியத்தில் 80 காசு உயரவும், 1,000 பீடி சுற்றுவதற்கு ஊதிய கொடையாக 15 காசு அளிக்கவும் வகை செய்கிறது. இந்த உடன்பாட்டினால், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் 5-5-1983 லிருந்து மாநிலம் முழுவதும் வேலை நிறுத்தம் செய்வதாக அச்சுறுத்தியது தவிர்க்கப்பட்டது.

9. சவுத் இந்திய விஸ்கோஸ் லிமிடெட், சிறுமுகை, கோயம்புத்தூர் -

2.17. கோயம்புத்தூர் தலைமை அலுவலகம் உட்பட உதகமண்டலம், கோடைக்கானல் கிளை அலுவலகங்களில் பணியாற்றும் 2.300 தொழிலாளர்கள் தினக்கூலி பெறும்தொழிலாளர்கள், மாதாந்திர ஊதியம் பெறும் பணியாளர்கள் [1981-82 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடையைக் கோரி, 14-11-1982 16-11-1982 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனையடுத்து, நிருவாகம். தலைமை அலுவலகம், கிளை அலுவலகங்களிலுள்ள தொழிற்சாலைகளை 21-11-1982 ஆம் நாளிலிருந்து கதவடைப்பு செய்தது. சென்னை, தொழிலாளர்

நலத்துறை ஆணையர் நடத்திய சமரசப் பேச்சு வார்த்தையின் விளைவாக, இரு தரப்பினரிடையை 2–4–1983 ஆம் நாளன்று தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டு, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ரத்து செய்தனர். நிருவாகமும் 4–4-1983 ஆம் நாளிலிருந்து கதவடைப்பை நீக்கியது,

10. கே. சி. பி. லிமிடெட், சென்னை.19.

2.18. சென்னை-19 திருவொற்றியூர் கே. சி. பி. நிறுவனத்தில் சுமார் 600 தொழிலாளர்கள்கே. சி. பி. தொழிலாளர்கள் சங்கத்தை சேர்ந்தோராவர்; இத்தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி 9-6–1982 ஆம் நாளிலிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். இதனையடுத்து, 26-2–1982 ஆம் நாளன்று தொழிலாளர்கள் திடீரென வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக, நிருவாகம் செய்த ஊதியக் குறைப்பை எதிர்த்து தொழிலாளர்கள் 6–3–1982 ஆம் நாளன்று முற்றுகைப் போராட்டம் செய்த போது பல தவறான செயல்களைச் செய்ததால் நிருவாகம் 33 தொழிலாளர்களை பணியறவு செய்தது. தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பற்றியும், 33 தொழிலாளர்களை வேலையிலிந்து பணியறவு செய்தது பற்றியும் சென்னை தொழிலாளர்கள் நலத்துறை துணை ஆணையர் (ஆய்வு) பலசுற்று இணக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இணக்கப் பேச்சு வார்த்தைகளில் உடன்படிக்கை ஏதும் செய்துகொள்ளப்படாததால் தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பான அடிப்படை ஊதியத்தை திருத்தியமைத்தல், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி போன்ற கோரிக்கைகளை குறித்தும் பணியறவு செய்யப்பட்ட 33 தொழிலாளர்கள் குறித்தும் 20-10-1982 நாளிட்ட 2245 ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பட்டு தீர்ப்பு வழங்குவதற்காக சென்னை தொழில் நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டது தீர்ப்பு வழங்குவதற்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும், தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்தனர். சங்கம் ஆஜர் ஆக தவறியதன் காரணமாக இவ்வழக்கு சென்னை தொழில் நடுவர் மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. எனினும் தொழிலாளர்கள் தாமாகவே முன்வந்து வேலை நிறுத்தத்தை ரத்து செய்து, 24–1-1983 ஆம் நாளிலிருந்து பணியை மீண்டும் தொடங்கினர். தீர்ப்பில் இத்தகராறுகள் குறித்து இறுதி செய்யப்படாததால், இருதரப்பினரும், நிலுவையாகவுள்ள இந்த பிரச்சினையில் தலையிட்டு உடன்படிக்கை செய்து முடிப்பதற்கு உதவுமாறு தொழிலாளர் நலத்துறை துணை ஆணையரை [ஆய்வு] வேண்டினர். சென்னை தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் [ஆய்]வு இருதரப்பினருடன் தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தையாலும், அவரது பரிந்துரைகளின் அடிப்படையிலும், தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம் பிரிவின்கீழ் 4-5–1983 ஆம் நாளன்று அவரது முன்னிலையில் இரு உடன்படிக்கைகள் ஏற்பட்டன. பொதுக்கோரிக்கைகள் குறித்த ஒப்பந்தம் மாதம் ரூ. 60 ஊதிய



உயர்வு ஏற்பட வகை செய்ததோடு, ஒவ்வொரு மாதமும் ரூ. 100 ஊக்கத்தொகையாக ஈட்ட, வாய்ப்புக்கும் வழி செய்தது.

பணியறவு செய்யப்பட்ட 33 தொழிலாளர்கள் தொடர்பான உடன்படிக்கையில் 27 தொழிலாளர்கள் தொடர்ந்து பணியில் இருந்ததாகக் கருதப்படுவதுடன், ஆனால் முன்னாள் ஊதியம் ஏதும் வழங்கப்படாமல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு வகை செய்யப்பட்டது. எஞ்சியுள்ள 6 தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு மொத்த தொகை ரூ20,000 வழங்குவதோடு பணிக்கொடை உட்பட பணியிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு மாத ஊதியம் என்ற அடிப்படையில் இழப்பீட்டுத்தொகை வழங்க உடன்பாடு செய்யப்பட்டது. இந்த இரு உடன்படிக்கைகளினால், நீண்ட நாட்களாக கே. சி.பி. நிறுவனத்தில் இருந்து வந்த தகராறுகள் இறுதியாக தீர்த்து வைக்கப்பட்டன.

11. டன்லப் இந்தியா லிமிடெட்

2.19 அம்பத்தூர், திருவாளர்கள் டன்லப் இந்தியா லிமிடெட்டுக்கும் அம்பத்தூர் டன்லப்தொழிற்சாலை தொழிலாளர்கள் சங்கத்திற்குமிடையே செய்து கொண்ட 10–6-1978 ஆம் நாளிட்ட நீண்டகால உடன்படிக்கை முடிவுற்றதன் பேரில் அதே சங்கத்தின் தொழிலாளர்கள் 10-6–1982 ஆம் நாளன்று புதிய கோரிக்கைகளைக் கொடுத்தனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையரின் முன்னிலையில் நடைபெற்ற பல சுற்று நேரடி பேச்சுவார்த்தைகள்–இணக்கப் பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர், 27-5–1983 ஆம் நாளன்று இருதரப்பினர்களாலும் 12[3] ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கையில் கையொப்பம் இடப்பட்டது. இந்த உடன்படிக்கையினால் ஊதியத் திருத்தம், அகவிலைப்படி, வீட்டுவாடகைப்படி, பயணவிடுப்புச் சலுகை, விடுப்புச் சலுகைகள், ஏனைய பயன்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

12. சிவானந்தா ஸ்டீல்ஸ் லிமிடெட், சென்னை

2.20 சென்னை, சிவானந்தா ஸ்டீல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து 29–7–1981 ஆம் நாளிட்ட உடன்படிக்கையின் 8 ஆம் ஷரத்தின்கீழ் பணி நிலைகளைப் பொருத்தமாக மீண்டும் வரையறை செய்யுமாறு கோரி 2 –7-1983 ஆம் நாளிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனையடுத்து 1982–83 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை – தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தின்கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவப்படி வழங்குதல், அண்மையில் பணி நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏனைய படிகள் வழங்குதல் போன்ற சில கோரிக்கைகளை சங்கமும் எழுப்பியது, இதற்கிடையில், ஒழுங்கற்ற நடவடிக்கைகளைச் செய்ததற்காக

நிருவாகம் 10 தொழிலாளர்கள் மீது குற்றஞ்சாட்டி அவர்களை பணியறவு செய்தது. நிலுவையாக உள்ள அனைத்துப் பிரச்சனைகளும் சென்னை தொழிலாளர் நலத்துணை ஆணையரினால் (ஆய்வு) பல்வேறு நாட்களில் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு முடிவாக 24-11-1983 ஆம் நாளன்று இவரது முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டது. இந்த உடன்படிக்கையின் காரணமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை ரத்து செய்து, 24-11-1983 ஆம் நாளன்று மீண்டும் பணியைத் தொடங்கினர். இதனையடுத்து உடன்படிக்கையின் 7 (எ) (பி) பகுதிகளின்படி. 25-11-1983 ஆம் நாளன்றும் 10-1-1984 ஆம் நாளன்றும் இவர் தனது முடிவைத் தெரிவித்ததால் வேலை நீக்கம் செய்யப்பட்ட சில தொழிலாளர்கள் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டனர்.

## 13. மதுரா கோட்ஸ் லிமிடெட், மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி

2.21 1982-83 ஆம் கணக்கு ஆண்டிற்கான ஊதியக் கொடையை ஆதாயத்துடன் இணைப்பதற்குப் பதிலாக உற்பத்தியுடனோ அல்லது உற்பத்தித்திறனுடனோ வருடாந்திர ஊதியக் கொடையை இணைப்பது தொடர்பான பிரச்சினை குறித்து மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள மதுரா கோட்ஸ் லிமிடெட் நிருவாகத்திற்கும். அதன் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்த தொழில்தகராறுகள் 28-2-1983 ஆம் நாளன்று சென்னை தொழிலாளர் நல இணை ஆணையரின் முன்னிலையில் தொழில் தகராறுகள் சட்டத்தின் 12(3) ஆம்-பிரிவின் கீழ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

## 14. இலட்சுமி மிஷின் ஒர்க்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

2.22 இந்நிறுவனத்தில் பணிபுரியும் சுமார் 1,500 தொழிலாளர்கள் லேபர் ப்ரோகிரசிவ் ஃபெடரேஷன் அண்ணா தொழிற் சங்கப் பேரவை, சென்டர் ஆப் இந்தியன் டிரேட் யூனியன், ஆல் இந்தியா டிரேட் யூனியன் காங்கிரஸ் தமிழ்நாடு நேஷனல் டிரேட் யூனியன் காங்கிரஸ், இந்தியன் நேஷனல் டிரேட் யூனியன் காங்கிரஸ், ஹிந்த் மஸ்தூர் சபா, வேறு சில தனிப்பட்ட சங்கங்கள் ஆகிய சங்கங்களைச் சேர்ந்தவர்கள் ஆதாயத்தில் பங்குத் தொகை வழங்குவதைத் தொடர்ந்து வருமாறும், பங்குத் தொகையை அதிகரிக்குமாறும் நிருவாகத்தை கேட்டுக்கொண்டனர். பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தபோது தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைத் தெரிவித்து தொழிலாளர் நல இணை ஆணையர் முன் பேச்சு வார்த்தை நடத்துமாறு கேட்டுக் கொண்டனர். பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த போது தொழிலாளர்கள் 13-8-1983 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். இணக்கப்



பேச்சு வார்த்தைகளின் விளைவாக 12(3) பிரிவின்கீழ் 14-10-1983 ஆம் நாளன்று உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. இந்த உடன்படிக்கை ஆதாயத்தில் பங்கு ஊதியங்களில் திருத்தம். அகவிலைப்படி செயலூக்கத் தொகை முதலியவற்றிற்கு வகை செய்கிறது. தொழிலாளர்கள் 17-10-1983 அன்று மீண்டும் வேலைக்குச் சென்றனர்,

## 15. எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் குரூப் கம்பெனிகள்

2.23 கோயம்புத்தூர் எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தில் சுமார் 890 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இத்தொழிலாளர்கள் கோயம்புத்தூர் தொழிலாளர்கள் சங்கத்தையும் (சென்டர் ஆப் இந்தியன் டிரேட் யூனியன்), கோயம்புத்தூர் மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர்கள் சங்கத்தையும் (ஆல் இந்தியா டிரேட் யூனியன் காங்கிரஸ்) சேர்ந்த உறுப்பினர்களாவர். 14-7-1982 அன்று கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் சில பிரச்சினைகள் குறித்து உடன்படிக்கை செய்தார். உடன்படிக்கையைச் சேர்ந்த பகுதிகளில் ஒரு பகுதி செயல்படுத்தப்படாததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கும், வேலைக்கு வந்த தொழிலாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டதில், திரு. சாந்தப்பன் என்ற தொழிலாளர் தாக்கப்பட்டார். அதே நாளன்று அதாவது 3-9-1982 அன்று அவர் இறந்துவிட்டார்.

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நன்முயற்சியால், கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர், கோயம்புத்தூர் எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் 4 தொழில் பிரிவுகளைப் பொறுத்த மட்டில் 20-9-1982 அன்று உடன்படிக்கை செய்தார். தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்கு இருதரப்பினரிடையேயும் பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் தீர்வு காணவும், அப்படியும் தீர்வு காணப்படாவிட்டால் கோயம்புத்தூர் தொழிலாளர் நலத் துணை ஆணையர் தலையிட்டு தீர்வு காண்பதாகவும் அந்த உடன்படிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இருதரப்பு பேச்சு வார்த்தை வெற்றிகரமாக அமையாததால் தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தினார். கோயம்புத்தூர் எவரெஸ்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் அனைத்து தொழிற் பிரிவுகளையும் பொறுத்த வரையில் 24-8-1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. தற்போது இந் நிறுவனங்கள் வழக்கம் போல் செயல்பட்டு வருகின்றன.

## 16. சேஷசாயி தொழில் நிறுவனம்

2.24. 10–3–1978 அன்று உடன்படிக்கை முடிந்ததன் பேரில், சேசாயி தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு தொழிற்சங்கங்களின் மூலம் முறையீடு செய்தனர். சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் சமரச பேச்சு வார்த்தையைத் தொடர்ந்தும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனையின் பேரிலும் தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் 5-10-1983 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. இந்த உடன்படிக்கையினால் 1500 தொழிலாளர்கள் பயன்பெற்றனர்.

## 17. பாசிட் ஏசியா நிறுவனம், சென்னை

2.25 சம்பள வீதங்களைத் திருத்தி அமைத்தல், அகவிலைப் படி ஊதிய உயர்வுக்கு பணிக்கால அளவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளல் ஆகியவை அடங்கிய பொது கோரிக்கைகளின் மீது சென்னை பாசிட் ஏசியா நிறுவனத்தின் நிருவாகத்திற்கும், அந்நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட தொழிற் தகராறில் சென்னை தொழிலாளர் நலத் துணை ஆணையர், (ஆய்வு), சமரச பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் காரணமாக தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின் கீழ் 12-10-1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

## 18. பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம், திருச்சி

2.26 திருச்சிராப்பள்ளி, பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்திற்கெதிராக பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் (எம். எச். டி,) திட்டங்கள் தேசிய தொழிற் சங்கத்திற்கு நாட் கூலி பெறுவோரின் பணியை முறைப்படுத்துதல், மிகை ஊதியங்கள் வழங்கல் இலவச பேருந்து '' ஷட்டல் '' முறைகளை மீண்டும் கொண்டு வருதல், போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தல் கழித்துக் கொள்ளப்பட்ட அரை நாள் ஊதியங்கள் முதலியவற்றைத் திருப்பிக் கொடுத்தல், போன்றவை சம்பந்தமாக, தொழிற்தகராறு ஏற்பட்டது. இவ் விஷயம் சமரசத்திற்காக தொழிலாளர் நல தனித் துணை ஆணையருக்கு வந்தது, தொழிற்தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின்கீழ் 27-10-1983 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

## 19. நாச்சியம்மை பருத்தி ஆலை, செட்டிநாடு

2.27 இந்த ஆலையின் தொழிலாளர்கள், 1982-83 ஆண்டிற்கான ஊதியக் கொடை தொடர்பாக, 31-10-1983 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். மதுரை தொழிலாளர் நல உதவி



ஆணையரும் அதன் பின் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையரும் பல்வேறு தேதிகளில் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தினர். 24–12–1983 அன்று தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது, தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பிரிவின்கீழ் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதன் காரணமாக, தொழிலாளர்கள் 26–12–1983 முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டனர்.

## 20. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை

2.28 ஊதிய திருத்தம் முதலிய கோரிக்கைகளை முன் வைத்து இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத்தின் தொழிலாளர் சங்கப் பணியாளர் சங்கம் வேலை நிறுத்தம் செய்வதாக இந்நிறுவனத்திடம் அறிவித்தன. இவ்விஷயம், சமரசத்திற்காக சென்னை தொழிலாளர் இணை ஆணையருக்கு வந்தது; தொழிற் தகராறுகள் சட்டத்தின் 12(3) பிரிவின் கீழ் 5–12–83 அன்று உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது, இதற்கு முன்னர், உற்பத்தி ஊக்கத் தொகை வழங்குவது தொடர்பாக, 12 (3) பிரிவின் கீழ் 31–10–1983 அன்று தொழிலாளர் நல இணை ஆணையர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது.

## 21. சதர்ன் ஸ்விட்சு கியர் நிறுவனம், சென்னை–58.

2.29 ஊதியங்கள், அகவிலைப்படி, ஏனைய பணி நன்மைகள், 1982–83–க்கான ஊதியக்கொடை, பதவி உயர்வு, உற்பத்தி, உற்பத்தித்திறன் முதலிய கோரிக்கைகளை வைத்ததில், மேற்சொன்ன நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே தொழில் தகராறு ஏற்பட்டது. இதன் காரணமாக இந்நிறுவனத்தை 21–11–1983 முதல் மூட வேண்டியதாயிற்று. தொழிலாளர் நலத் தனித்துணை ஆணையர் பல முறை சமரச பேச்சு வார்த்தை நடத்தினார். ஆதலால், 13–12–1983 அன்று அவர் முன்னிலையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. மூடப்பட்ட நிறுவனம் திறக்கப்பட்டு, 15–12–1983 முதல் மீண்டும் பணி நடைபெறத் தொடங்கியது.

## 22. சிம்சன் குரூப் கம்பெனிகள்

2.30. சிம்சன் குரூப் கம்பெனிகள் தொழிற்சங்கமும், பணியாளர் சங்கமும் அந்தந்த சிம்சன் குரூப் கம்பெனியின் நிர்வாகத்திற்கு தாங்கள் 22-11-1983 அன்று அல்லது அதற்குப் பின்னர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக அறிவிக்கை கொடுத்தனர். அடிப்படை ஊதிய வீதங்களைத் திருத்தியமைத்தல், அகவிலைப்படி ஊதிய உயர்வு, கல்விப்படி விடுப்புகால பயணச் சலுகை, சில தொழிலாளர்களை வேலைக்கமர்த்தாமை முதலிய பொதுவான கோரிக்கைகள் வேலை நிறுத்த அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. உத்தேச வேலை நிறுத்த நிலைமைகளைக் கருதிப் பார்த்து, தொழிலாளர் நல இணை ஆணையரின்

முன்னிலையில் 1983 நவம்பரில் பல்வேறு நாட்களில் பேச்சு
வார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்தப் பேச்சு வார்த்தை
களின் போது, பல்வேறு கருத்துக்களில் மாற்றம் ஏற்பட்டன.
அதனையடுத்து 25-11-1983 அன்று பணி நிறுத்தம் தொடர்
பான விஷயங்கள் உட்பட பல விஷயங்கள் குறித்தும் இரு
தரப்பினரிடையே பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இரு
தரப்பு பேச்சு வார்த்தைகளினால் உடன்படிக்கை ஏற்பட்ட
தாகவும், வேலை நிறுத்தம் ஏற்படாது என நம்பிக்கை தெரி
வித்ததாகவும் நிர்வாகத்தின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
நிர்வாகத்தினரின் கூற்று மறுக்கப்பட்டது. கோரிக்கைகள் ஏற்கப்
படாததாலும், பணி நீக்கம் செய்யப்பட்ட 15 தொழிலாளர்
களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள நிர்வாகத்தினர்
ஒப்புக் கொள்ளாததாலும் தொழிலாளர்கள் 28-11-1983 முதல்
வேலை நிறுத்தத்தைத் தொடங்கினர் என்று தொழிற் சங்கம்
தெரிவித்தது. சிம்சன் குருப் கம்பெனிகளில் உள்ள 17 தொழில்
பிரிவுகளில் சென்னை விளம்பர கம்பெனி, சென்னை, ரிகோல்ட்
கெமிக்கல்ஸ் நிறுவனம் ஆகியவை நீங்கலாக, ஏனைய
தொழில் பிரிவுகள் அனைத்திலும் பணியாற்றுகிற சுமார்
10,050 தொழிலாளர்கள் இந்த வேலை நிறுத்தத்தினால் பாதிக்
கப்பட்டனர். அதனையடுத்து, தொழிலாளர் நல இணை
ஆணையர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் பேச்சு
வார்த்தைகள் நடத்தப்பட்டன. 31-12-1983 அன்று நடந்த
விவாதத்தில் பணியை மீண்டும் தொடங்குவதற்கு இடைக்
கால ஏற்பாடுகள் அடங்கிய சில கருத்துக்களைத் தெரிவித்தார்.
சில மாற்றங்களுடன் மேற்சொன்ன கருத்துகளை நிர்வாகம்
ஏற்றுக் கொண்ட போதிலும், இடைக்கால ஏற்பாடு எதுவும்
தங்களுக்கு தேவையில்லையென்றும், ஆனால், தங்களுடைய
அனைத்து கோரிக்கைகளுக்கும் இறுதியாக தீர்வு காணப்பட
வேண்டுமென்றும் தொழிற் சங்கம் தெரிவித்தது. இதற்கிடையில்
15 தொழிலாளர்களை வேலைக்கமர்த்தாதது தொடர்பான
பிரச்சினை சென்னை தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக
அனுப்பப்பட்டது. இவ் விஷயத்தில் தலையிட்டு, தகராறைத்
தீர்த்து வைக்குமாறு முதலமைச்சரை தொழிற் சங்கங்களும்,
ஏனைய தொழிற் சங்கங்களின் தலைவர்களும் கேட்டுக்
கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளின் பேரில்,
முதலமைச்சர் அவர்கள் 18-2-1984, 20-2-1984 ஆகிய நாட்
களன்று நிர்வாகத்தினருடனும். தொழிற் சங்கத் தலைவர்
களுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். 20-2-1984 அன்று
முதலமைச்சரின் ஆலோசனையின்பேரில், நிர்வாகத்தினருக்கும்
தொழிற் சங்கங்களுக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டது.
அதன் அடிப்படையில் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்
பட்டு, தொழிலாளர்கள் 22-2-1984 அன்று பணிக்கு
திரும்பினர்.

23. <u>பி. அண்டு சி. மில்ஸ், சென்னை.</u>

2.31. இந்திய அரசு, தமிழ்நாடு அரசு ஆகியவற்றின்
முயற்சிகளினாலும், அப்போது இருந்த சென்னை தொழிலாளர்
நல ஆணையரின் பேச்சு வார்த்தைகள், உடன்படிக்கை ஆகிய





வற்றின் காரணந்தாலும், 1-1-1981 முதல் மூடப்பட்டிருந்த பின்னி நிறுவனம், சென்னை பி. அண்டு சி. மில்ஸ் ஆகியவை 19-6-1981 அன்று மீண்டும் திறக்கப்பட்டன. அந்த ஆலை மீண்டும் நலிவுற்றது. எட்டு நாள் ஊதியத்தை பிடிக்குமாறு தண்டனை வழங்கியதை திரும்பப் பெறுதல், குறிந்த நாட்களில் ஊதியங்கள் வழங்குவது, குழுவின் உறுப்பினர்கள் அலுவல் உறுப்பினர்களது தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்தல், தொழிலாளர்களை நிர்வகித்தல் முதலிய கோரிக்கைகளை வைத்து, சென்னை தொழிற் சங்கம் 26-12-1983 அன்று நிருவாகத்திற்கு வேலை நிறுத்த அறிவிப்பை கொடுத்தது. திரு. ஜி. கமலரத்தினத்தின் தீர்ப்பில் முடிவு செய்யப்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை குறித்து மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துதல், பணம் வகையில் நன்மைகள் உரிமைகள், 1982-83 கான ஊதியக் கொடை, ஈமச் சடங்கு நன்மைக்கான நிதி, பயன்படுத்திக் கொள்ளாத சிகிச்சைசப்படி முதலியவை தொடர்பான கோரிக்கைகளை வைத்து பி. அண்டு சி. ஆலை பணியாளர் சங்கமும் 6-1-1984 அன்று நிருவாகத்திற்கு வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது. தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் பேச்சு வார்த்தை நடத்தினார். அதனையடுத்து, இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி, 13-1-1984 அன்று தொழிலாளர் நலத்துறை அரசு ஆணையர் மற்றும் செயலாளரின் முன்னிலையில் தொழிலாளர் நலத் தனித்துணை ஆணையர் சமரச பேச்சு வார்த்தையைத் தொடங்கினார். பின்னி பொறியியல் தொழிலாளர் சங்கமும் நிருவாகத்திற்கு (பின்னி இஞ்சினியரிங் ஒர்க்ஸ்) மீனம்பாக்கம், வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்தது; மேற் சொன்ன சங்கமும் 13-1-1984 அன்று பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டது. இந்தப் பேச்சு வார்த்தைகளில் தொழிலாளர் நலத்துறையின் அரசு ஆணையர் மற்றும் செயலாளர் சில கருத்துக்களைத் தெரிவித்தார்; 13-1-1984, 14-1-1984 அன்று பேச்சு வார்த்தையைத் தொடருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டு தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையரைச் சந்திக்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இதற்கிடையில், பொங்கல் பண்டிகை முன் பணம் வழங்குவது தொடர்பாக 14-1-1984 அன்று பி அண்டு சி. மில் நிருவாகத்தினர் மில்லில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டனர் என்றும் அதனையடுத்து பதட்ட நிலையும் குழப்பமும் ஏற்பட்டது என்றும், மேலும் தொழிலாளர், நிர்வாகப் பணியாளர் சிலரைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து தொழிலாளர்கள் 14-1-1984 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்தம் தொடருகிறது. இந்த வேலை நிறுத்தத்தில் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சுமார் 7,800 பேராகும்

தொழிற் சங்கத்தின் தலைவர் திரு. எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை 23-1-1984 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் முறையீடு ஒன்று செய்துக் கொண்டார். சென்னை தொழிற் சங்கத்தின் முறையீடு குறித்து இந்திய அரசின் கருத்துக்களை

இவ்வரசுக்குத் தெரிவிக்குமாறு மத்திய வர்த்தக அமைச்சரை மாண்புமிகு முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார். இந்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது,

வழக்குத் தொடருதல்

2.32 1983-ல் அரசு பின்வரும் இனங்களில் வழக்குத் தொடர அனுமதி வழங்கியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | சுவாமி அண்டு கம்பெனி, கோயம்புத்தூர், (குத்தகைதாரர்—வாசுதேவா தொழில் நிறுவனம்) | 1—9—1982-ஆம் நாளிட்ட 12(3) உடன்படிக்கையை நிறைவேற்றாமை. |
| 2. | திரிலயபிள் மெஷினரி கம்பெனி, சென்னை. | சென்னை, தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிறைவேற்றாமை. |
| 3. | தவமணி டெக்ஸ்டைல்ஸ், சிவகிரி. | கோயம்புத்தூர், தொழில் நீதி மன்றத்தின் தீர்ப்பினை நிறைவேற்றாமை. |
| 4. | பி. ஏ. ஏ. எக்ஸ்பிரஸ், பாலக்காடு தருமபுரி மாவட்டம். | 12(3) உடன்படிக்கையை நிறைவேற்றாமை. |

2.33. இனம் எண். 2-ஐப் பொறுத்த வரையில், குற்றஞ் சாட்டப்பட்டவர் அதாவது இந்நிறுவனத்தின் உரிமையாளர், நீதித் துறை மாஜிஸ்டிரேட்டு முன்னிலையில் தொழிலாளர் திரு. ஜெயராமனுக்குச் சேர வேண்டிய ரூ. 300 கொடுத்துள்ளார்கள். எனினும் நீதி மன்றம், குற்றஞ்சாட்டப்பட்டவர் தொகை செலுத்தத் தவறியதற்காக ரூ. 25 அபராதம் விதித்தும் அவர் மீது வழக்குத் தொடரவும் தீர்ப்பு வழங்கியது.

2.34. ஏனைய மூன்று வழக்குகளும் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி

2.35 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பின்வரும் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க அரசு உத்திரவிட்டுள்ளது.

1. சென்னையிலுள்ள டிரான்ஸ்பார்மர் ஸ்விட்சு கியர் நிறுவனத்தைச் சேர்ந்த 220 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் இந்நிதியிலிருந்து ரூ 250 வீதம் வழங்கப்பட்டது.

2. திருப்பூரிலுள்ள இராமலிங்கா கூடாம்பிகை ஆலையைச் சேர்ந்த 1,400 தொழிலாளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ 500 வீதம் மேற்சொன்ன நிதியிலிருந்து வழங்கப்பட்டது.

3. நீலகிரியிலுள்ள கார்டைட் தொழிற்சாலையைச் சேர்ந்த ஏழு தொழிலாளர்களுக்கு தலா ரூ. 1,000 என்ற வீதத்தில் வழங்கப்பட்ட தொகை ரூ. 7,000



தொழிற்சங்கங்கள்

2.36. 1-1-1983 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,932. இவ்வாண்டில் 449 தொழிற்சங்கங்கள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. 683 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது. 19 தொழிற்சங்கங்களின் பதிவு ரத்து செய்யப்பட்டது, திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. நான்கு தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. 1983 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப்படி பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 3,713,

சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

2.37. தொழில் நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவ ஊக்குவிக்கும் பொருட்டு. அரசு "சுமுகமான தொழிலுறவுக்கு பரிசு வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழிலாளர் பிரதிநிதிகளுடன், ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு 1981 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களைத் தேர்ந்தெடுத்தது. இவர்களுக்கு முதற்பரிசாக சுழற்கோப்பை ஒன்றும் நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றும், இரண்டாம் பரிசாக தகுதிச் சான்றிதழ் ஒன்றும் இதற்கென சென்னையில் 24-1-1984 அன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்ட விழாவில் மாண்புமிகு தொழில் அமைச்சர் வழங்கினார்.

[1984 மார்ச் 16

அத்தியாயம் 3

**பணி நிபந்தனைகள். வேலை நிலைமைகள் குறித்த சட்டங்கள் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்.**

3.1.1983 ஆம் ஆண்டு தொடக்கத்தில், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 11,465 தொழிற்சாலைகள் இருந்தன. 1983 டிசம்பர் திங்கள் இறுதியில் 470 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டதுடனும் 925 தொழிற்சாலைகள் புதிதாகப்பதிவு செய்யப்பட்டதுடனும் சேர்ந்து தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 11,920 ஆக உயர்ந்தது. 31-12-1983 அன்றுள்ளவாறு இச்சட்டத்தின் கீழ் பணிபுரிவோரின் எண்ணிக்கை 7,85,864 ஆகும்.

3.2. இச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் முறையே இணைப்புகள் 5, 6, 7-ல் தரப்பட்டுள்ளன.

3.3. தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரங்கள் பின்வருமாறு

| ஆண்டு. | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1982 — — .. | 50 | 25,889 |
| 1983 ... ... .. | 45 | 20,547 |

3.4. அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள், தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதால் (1982 ஆம் ஆண்டில் 7,01,450 தொழிலாளர்களிலிருந்து 1983 ஆம் ஆண்டில் 7,85,864 தொழிலாளர்கள் அதாவது 84,414 தொழிலாளர்கள் அதிகமாக உள்ளனர்), உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது. உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்களின் எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. தொழில் பாதுகாப்பு மேம்படுத்துகிற மும்முர நடவடிக்கைகளான பாதுகாப்புக் கல்வி பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் பாதுகாப்புச் சுற்றாய்வு முதலியவற்றை நடத்தியதாலும் தொழிற்சாலைகள் சட்டத்தின் பாதுகாப்பு விதித்துறைகளைச் சிறந்த முறையில் ஆய்வு செய்து செயல்படுத்தியதாலும் இது சாத்தியமாயிற்று.



1984 மார்ச் 16]

**தொழிலாளர்களின் உடல் நலன், பாதுகாப்புக்காகத் தனிப் பிரிவு அமைத்தல்.**

3.5. தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் உடல்நலன், பாதுகாப்பு ஆகியவற்றில் இத்துறை மிகவும் கவனம் செலுத்துகிறது. எனவே ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஆய்வுக் கூடங்களில் ஏற்பாடு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவற்றிற்கு வகை செய்யும் நோக்கத்துடன் இத்துறையில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்த தொழிற்சாலை சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது, தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்களாக பணிபுரிவதற்கு, இத்துறையில் ஆறு முழு நேர மருத்துவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். துறையின் பாதுகாப்பை மேம்படுத்துகிற நடவடிக்கைகள் மும்முரப்படுத்துவதற்காக இரண்டு பாதுகாப்புப் பிரிவுகள் தொடங்கப்பட்டன தொழிற்சாலை சுகாதார ஆய்வுக்கூடம், சான்றளிக்கும் அறுவை மருத்துவர்கள் பாதுகாப்புப் பிரிவுகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும், தொழிற்சாலை சுகாதாரம் உடல்நலம், பாதுகாப்பு தொடர்பானவற்றைப் பார்த்துக் கொள்ள, தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளர் பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலுவலகம் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

**அரசு வழங்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பரிசுகள், உழைப்பு வீரர் பரிசுகள்:—**

3.6. தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் நல்ல முறையில் நடைபெறுவதைப் பாராட்டி இம் மாநிலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான பரிசு வழங்கும் முறை உள்ளது. இம்முறை தொழிற்சாலைகளில் விபத்துக்கள் நடைபெறுவதைத் தடுக்கும் முக்கியப் பணியில ஈடுபட்டுள்ள நிர்வாகிகள் தொழிலாளர்கள் ஆகியோர்களை ஊக்குவிப்பதற்காக வழங்கி வரும் பரிசாகும். இவ்வரசு வழங்கும் பாதுகாப்புப் பரிசைத் தவிர, பாதுகாப்பை மேம்படுத்தல், உற்பத்தியைப் பெருக்குதல், தொழில் திறமை, தொழில் முறைகளில் புதிய கண்டுபிடிப்புகள் மேம்பாடு கண்டு பொருள் வீணாவதை குறைத்தல், முதலியவை குறித்து தொழிலாளர்கள் கருத்துரைகளை அளிக்கும் வகையில் அவர்களை ஊக்கிவிப்பதற்காக உழைப்பு வீரர் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. இப்பணிகளில் தொழிலாளர்கள் பெரும் பங்கு வகிப்பதற்காக இத்திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை 1983 ஆம் ஆண்டில் மூன்று வகைகளின் கீழ் ரூபாய் 500 ஆக இருந்ததை ரூ. 1,000 ஆகவும் ரூபாய் 250-ஐ ரூபாய் 500 ஆகவும் ரூபாய் 100-ஐ 250 ரூபாய் ஆகவும் அரசு உயர்த்தி உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1981 ஆம் சாதனை ஆண்டில் பரிசு பெற தகுதி உடையவர்களின் பெயர்கள் முடிவு செய்யப்பட்டு ரொக்கப் பரிசும் சுழற்கோப்பைகளும் 24-1-1984 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டன. 1982 சாதனை ஆண்டுற்கான விண்ணப்பங்கள் தொழிலாளர்களிடமும் நிர்வாகத்தினரிடமும் வரப் பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

3.7. பாதுகாப்புப் பிரிவுகள்—பெருவாரியாக விபத்துக்கள் ஏற்படும் என்று கருதப்படும் மதுரை. கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் பாதுகாப்புப் பிரிவுகள் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றன. இந்தப் பாது காப்பு பயிற்சி வகுப்புகளைத் தவிர, கருத்தரங்குகள் முதலியவை தேசீய பாதுகாப்புச் சபை, விபத்தில் உயிரிழப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான சங்கம், பணியாளர்கள் நலச் சங்கம் போன்ற நிறுவனங்களின் உடனுழைப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன. இவைத் தவிர தொழிலாளர்கள் பயன் அடைவதற்காக, தொழிற் சாலை பாதுகாப்புப் பற்றிய திரைப்படங்கள் காண்பிக்கப்படு கிறது. பாதுகாப்புப் பற்றிய சுவர் ஒட்டிகள் தயாரிப்பதற்கு, தேசிய பாதுகாப்புச் சபைக்கு உதவி புரிகின்றன. 1983 ஆம் ஆண்டில் பயனடைந்த 1041 தொழிலாளர்களுக்கு, மதுரையில் உள்ள பாதுகாப்புப் பிரிவு 34 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகளை யும் நடத்தின. 1983 ஆம் ஆண்டில் இரு பாதுகாப்புப் பிரிவு களால், 13 பாதுகாப்பு சுற்றாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1983 ஆம் ஆண்டில், பாதுகாப்பைப் பற்றிய விளக்கும் 6 துண்டு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. தொழிற்பாதுகாப்புப் பற்றிய காலாண்டு இதழ் ஒன்றும் வெளியிடப்பட்டது.

3.8. பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள்:

தொழிற்சாலை பாதுகாப்புப் பற்றி, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும். மேற்பார்வையாளர்களும் பயன் பெறும் வகையில் தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரால், (சுகாதாரம்—பாதுகாப்பு) 24 பயிற்சி வகுப்புகள் 1983 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. இப்பயிற்சி வகுப்புகள் மூலம் 700 பேர் பயன் பெற்றனர். இவ்வகுப்புகளில் தொழிற்சாலை பாது காப்புப் பற்றிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

தொழிற்சாலைகளில் 63 பாதுகாப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இவற்றால் 1,741 பேர் பயனடைந்தனர்.



## தொழிலாளர் உடல் நலன்.

3.9 சென்னையில் உள்ள, மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தில் ஆய்வுக் கூடத்துடன் இணைந்து தொழிற்சாலைத் தொழிலாளர் சுகாதாரம் உடல் நலம் பேணும் பிரிவு செயல் படுகிறது. ஆபத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை மருத்துவப் பரிசோதனை செய்ய ஆய்வுக் கூடங்களில் ஏற்பாடு செய்தல், அவர்கள் தொழில் சார்ந்த நோய் எவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று ஆராய்தல் போன்றவற்றிற்கு வகை செய்யும் நோக்கத்துடன் இப்பிரிவு செயல்படுகிறது. 1983 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் களின் இரத்தம், சிறுநீர், சளி முதலியவற்றின் 987 மாதிரிகள் பெறப்பட்டு, அவை தொழிலாளர் நலம் பேணும் ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்டன.

3.10. தொழிலாளர் உடல்நிலையைக் கவனிப்பதற்கான மருத்துவப் பிரிவு:

கைத்தறி தொழிற் துறை போன்ற நிறுவன அமைப்பின் கீழ் வராத தொழிற் பிரிவுகளில் பணியாற்றுபவர்களுக்கு மதுரையில் உள்ள மருத்துவப் பிரிவு மருத்துவ வசதிகளை அளிக்கிறது. 1983 ஆம் ஆண்டில் மதுரை, முதன்மை நிலையத்தில் கடந்த ஆண்டு 193 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருக்க இவ்வாண்டு 499 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. செல்லூர் துணை நிலையத்தில் கடந்த ஆண்டு 354 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டிருக்க இவ்வாண்டு 1,893 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது.

## சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் :

3.11. சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சிராப் பள்ளி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் பணியாற்றிவரும் சான்றளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆறுபேர். தொழிலாளர்கள், சிற்றுண்டிச் சாலைப் பணியாளர்கள் ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள், ஆகியோரை மருத்துவப் பரிசோதனை செய்து அவர்கட்கு மருத்துவத் தகுதி சான்றிதழ்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். இந்த சான்றளிக்கும் மருத்துவர்கள், திறம்பட பணியைச் செய்வதற்காக, தொழிற்சாலைகள் சட்டம் 87,92,94 ஆம் பிரிவுகளின் கீழ், கூடுதல் ஆய்வாளர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர். இந்த சான்றளிக்கும் மருத்துவர்கள் கடந்த ஆண்டில், ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் 7,683 தொழிலாளர்களை பரிசோதனை செய்திருக்க இவ்வாண்டும் 9,637 தொழிலாளர்களைப் பரிசோதனை செய்து, சான்றளித் துள்ளனர். தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகளில் கடந்த ஆண்டு 4,012 இளம் தொழிலாளர்களை பரிசோதனை செய்திருக்க, இவ்வாண்டு 6,951 இளம் தொழிலாளர்களைப் பரிசோதித்துச் சான்று அளித்துள்ளனர். இவர்களைத் தவிர, 802 சிற்றுண்டிச் சாலை பணியாளர்களையும் பரிசோதனை செய்தனர்.

[1984 மார்ச் 16

தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டம் :

3.12. இச்சட்டத்தின் கீழ் வரும் கடைகள், நிறுவனங்களின் எண்ணிக்கை, நடத்தப்பட்ட ஆய்வு விவரம், இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் ஆகிய விவரங்கள் 5, 6, 7, 8 ஆகிய இணைப்புகளில் உள்ளன.

நிலையான, தற்காலிக விலக்குகள் :

3.13. இந்த ஆண்டில் தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்' நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து அரசு 4 இனங்களுக்கு (சந்தைகள் திருவிழாக்கள் நீங்கலாக) தற்காலிக விலக்கும் அளித்துள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர், சந்தைகள், திருவிழாக்களுக்கு அளிக்கப்படும் விலக்கு உட்பட 18 இனங்களுக்குத் தற்காலிக விலக்கு அளித்துள்ளார்.

3.14. தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் 86 இனங்களுக்குத் தற்காலிக விலக்கும், 14 இனங்களில் இச்சட்டத்தைச் செயலாக்குவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அனுமதியும் அளித்துள்ளார்.

3.15. இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு விண்ணப்பங்கள் ஆண்டுத் தொடக்கத்தில் பரிசீலனையில் இருந்தன. இந்த ஆண்டு இரண்டு விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த நான்கு இனங்களிலும் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் :

3.16. இச்சட்டத்தின் கீழ்வரும் ஓட்டல் நிறுவனங்களின் எண்ணிக்கை வசூலிக்கப்பட்ட பதிவுத்தொகை, நடத்தப்பட்ட ஆய்வுகள், இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட மேல் முறையீடுகள் ஆகிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 5, 6, 7, 8 ஆம் விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் :

தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள் :

3.17. வசூலிக்கப்பட்ட உரிமத்தொகை, ஆய்வாளர் நடத்திய ஆய்வுகள், இச்சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவைபற்றிய விவரம் 5, 6, 7, 8 ஆகிய இணைப்புகளில் உள்ளன.



1984 மார்ச் 16]

தொழிலாளர் நலன் :

3.18. பீடித் தொழிலாளர்களின் நலனுக்காக மத்திய அரசு செஸ்வரி வசூலிக்கிறது. மேலும் நலப்பணிகளை மேற்கொள்வதற்காக அமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த அமைப்பு இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும், இந்த ஆண்டில், தமிழ்நாட்டில் பின்வரும் தொழிலாளர் நலப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

சுகாதாரம் :

3.19 மூன்று நிலையான மருந்தகங்கள் தொடங்கப்பட்டுள்ளன. அவை எப்போது தொடங்கப்பட்டன என்ற விவரம் வருமாறு :

(1) சென்னை. பழைய வண்ணாரப்பேட்டையில் நிலையான மருந்தகம் (24—2—1983).

(2) குடியாத்தத்தில் நிலையான மருந்தகம் (25-2-1983).

(3) முக்கூடல் (திருநெல்வேலி) நிலையான மருந்தகம் (28-2-1983).

3.20. இம்மாநிலத்தில் தற்போதுள்ள மருத்துவ நிலையங்கள் அனைத்தும் பீடித் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை அளிக்கின்றன.

3.21. மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சகம் திரு நல்வேலியிலுள்ள முக்கூடலில் 50 படுக்கை வசதியுடைய மருத்துவ மனையினை அமைக்க நிருவாக அனுமதி அளித்துள்ளது. இதற்கான நிலத்தை கையகப்படுத்த தக்க நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

வீட்டு வசதி :

3.22. பொருளாதார நிலையில் நலிவுற்ற தொழிலாளர் வர்க்கத்தினருக்கு வீட்டுவசதி திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் உதவித் தொகை 1-4-1983 முதல் 1,500 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது,

3.23. வேலூரில் சத்துவாச்சாரி என்னுமிடத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டிய குடியிருப்பில் உள்ள வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு 150 தொழிலாளர்களுக்குத் தகுதியுடைமை இருப்பதாக ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

படிப்புதவித் தொகை :

3.24. இந்த ஆண்டில் தமிழகத்தில் அறிஞர்கள் 1,761 பேருக்கு 3,31,100 ரூபாய் அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது.

[1984 மார்ச் 16

3.25 1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதி சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி தமிழக அரசின், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் தலைமையில் 9 உறுப்பினர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை தமிழக மாநிலத்துக்கென்று மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழு இந்த ஆண்டில் இருமுறை கூடி, தமிழக பீடித் தொழிலாளர்களுக்கு நலம் பயக்கும் பணிகளை மேம்படுத்த பல்வேறு வழிவகைகள் பற்றி விவாதித்தது.

### 1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம்.

3.26. 1961 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிப் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளும், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றன.

3.27. வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம், நடத்தப்பட்ட ஆய்வுகள், விதித் துறைகளை மீறியவர்கள்மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5, 6, 7 ஆகிய இணைப்புகளில் உள்ளன.

### 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் பிற செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள் பல்வேறு விதித்துறைகள்) சட்டம்.

3.28. வெளியூரில் இச்சட்டம் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில் தொழிலாளர் நல ஆணையாளர் (சென்னை) அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகிறது.

3.29. இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை இணைப்பு 7-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

### செய்தித்தாள் பணியாளர்களுக்காகப் பலேகர் நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயலாக்குதல்.

3.30. இம்மாநிலத்தில் பலேகர் நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளுக்கு உட்பட்ட மொத்தம் 307 செய்தித்தாள் நிறுவனங்களில் 101 செய்தித்தாள் நிறுவனங்கள் அப்பரிந்துரைகளைச் செயலாக்கியுள்ளன. 163 செய்தித்தாள் நிறுவனங்கள் செயல்படவில்லை. 9 செய்தித்தாள் நிறுவனங்கள் இப்பரிந்துரைகளை இன்னும் செயலாக்கவில்லை. 34 செய்தித்தாள் நிறுவனங்களில் பணியாளர்கள் எவரும் இல்லை. எஞ்சிய செய்தித்தாள் நிறுவனங்கள் இப்பரிந்துரைகளைச் செயலாக்குகின்றனவா என்பது கண்காணிக்கப்பட்டு வருகின்றது.



1984 மார்ச் 16]

### 1926 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சி பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

3.31. மருந்தாக்கத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துகிற இச் சட்டம், இச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றது.

### 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :

3.32. 1983 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சுமார் 92,300 தொழிலாளர்கள் பணிபுரியும் 451 தோட்டங்கள் இருந்தன. இந்த ஆண்டில், 61 தொழிலாளர்கள் பணியாற்றும் 3 தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. தோட்டமெதுவும் பட்டியலில் இருந்து அகற்றப்படவில்லை. ஆண்டு இறுதியில் 454 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்று இருந்தன. 31-12-1983 அன்று உள்ளபடி, தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,361 ஆகும்.

3.33. சென்னையிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணையாளர் தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச் சட்டத்தின் விதித்துறைகளைச் செயலாக்குவதில் இவருக்கு உதவியாக மலைத் தோட்ட ஆய்வாளர்கள் ஏழு பேர் உள்ளனர். இவர்களின் தலைமையகம் கூடலூர், உதகமண்டலம், குன்னூர், வால்பாறை, ஏற்காடு, திண்டுக்கல், நாகர்கோயில் ஆகிய இடங்களில் உள்ளன. இந்த ஆய்வாளர்கள் தவிர நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய ஈரிடங்களில் பணிபுரியும் இரண்டு மருத்துவ அதிகாரிகள் இச் சட்டத்தின் படி மருத்துவ வசதி அளிக்கின்றனர். மலைத் தோட்டப் பகுதியில் உள்ள மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஆய்வு செய்கின்றனர். இந்த ஆண்டில் இம் மருத்துவ அதிகாரிகள், 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் வழக்கமாக 606 தடவை சென்று மருத்துவமனைகளையும், மருந்தகங்களையும், ஆய்வு செய்தனர். மேலும், 3 தடவை தனி ஆய்வும் 3 தடவை விடுமுறை ஆய்வும், 1 தடவை திடீர் ஆய்வும் மேற்கொண்டனர்.

3.34. இச்சட்டத்தின்கீழ் மேற்கொண்ட ஆய்வுகள்தொடுக்கப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 6, 7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல்—நீக்குதல்) சட்டம்.

3.35. இச்சட்டத்தைத் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகமும் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகமும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர்.

3.36. இச்சட்டத்தின்கீழ், 1983 ஆம் ஆண்டில் 399 உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கியுள்ளனர். பதிவு அதிகாரிகள் 94 பேரை முதன்மை தொழிலதிபர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

3.37. மேற்கொண்ட ஆய்வுகள், தொடுக்கப்பட்ட வழக்குகள் அவற்றின் முடிவு ஆகியவை குறித்த விவரங்கள் 6,7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆலோசனைக் குழு :

3.38. 1977ஆம் ஆண்டு முதல் மாநில ஒப்பந்த தொழிலாளர் ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இது 1981-ல் திருத்தியமைக்கப்பட்டது. இக்குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த/நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

3.39. மேற்கண்ட குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை ஆய்வு செய்ய 1983 ஆம் ஆண்டில் துணைக்குழு ஒன்றை அரசு நியமித்தது. இக்குழு அதுபற்றி ஆய்வு செய்து வருகிறது.

1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலை (நிலை ஆணைகள்) சட்டம்.

3.40. 1983 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 85 தொழில் நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங்கினர். 19 இனங்களில் நிலை ஆணைகளின் திருத்தங்களுக்கு நடப்பாண்டில் சான்றிதழ் வழங்கினர். நடப்பாண்டில் மேல் முறையீட்டு அதிகார மன்றங்கள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றம் இச்சட்டத்தின் 6ஆம் பிரிவின்கீழ் 6 முறையீடுகள் மீது தீர்ப்பு வழங்கினர். இச்சட்டத்தின் 13-ஏ ஆம் பிரிவின்கீழ் 7 மனுக்களின்மீது இந்த நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

3.41. நடப்பாண்டில் தாக்கல் செய்த வழக்குகள் ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரங்கள் 6,7 ஆகிய இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சட்டம் இத்துறையின் மூலம் தொடர்ந்து செயற்படுத்தப்படுகிறது.



தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம் :

3.42. இச்சட்டம், 24 மாதங்களில் 480 நாட்கள்தொழிலாளர் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவருக்கு நிலையான அந்தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், 1-1-1982-லிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச்சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். அவர்கள் தாக்கல் செய்த ரிட் மனுக்கள் உயர்நீதி மன்றத்தின் விசாரணையில் உள்ளன.

3.43. நடப்பாண்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகம் மேற்கொண்ட ஆய்வு விவரம் 6ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, 1983 ஆம் ஆண்டு கட்டிடம்—கட்டிடத் தொழிலாளர் (பணி நிலைமைகள்—பல்வகை விதித்துறைகள்) சட்டமுன்வடிவு.

3.44. கட்டிடத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் ஊதியம், சுகாதாரம், பாதுகாப்பு, பணி நிலைமைகள் ஆகிய வகையில் தொழிலாளர் நலன் கருதி, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கட்டிடம்—கட்டிடத் தொழிலாளர் (பணி நிலைமைகள்—பல்வகை விதித் துறைகள்) சட்ட முன்வடிவினை சட்டமன்றத்தில் கொண்டு வந்தது.

1979 ஆம் ஆண்டு பன்மாநில இடம் பெயர் தொழிலாளர் (பணி முறைப்படுத்தல்—பணி நிலைமைகள்) சட்டம்.

3.45. பன்மாநில இடம் பெயர் தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்தவும் அவர்களின் பணி நிலைமைகள் குறித்த விதித்துறை இயற்றவும், மத்திய அரசு கொண்டுவந்த 1979 ஆம் ஆண்டு பன்மாநில இடம் பெயர் தொழிலாளர் (பணி முறைப்படுத்தல்—பணி நிலைமைகள் சட்டம் 11-6-1979 ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.

3.46. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை மேற்சொன்ன சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட வரைவு விதிகள் 12-9-1983-ம் நாளிட்ட தொழிலாளர் நலத்துறையின் 2154ஆம் எண் ஆணையில் அரசினால் உறுதி செய்யப்பட்டுள்ளன. அந்த விதிகள் 12-9-1983 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் (சிறப்பு வெளியீட்டில்) வெளியிடப்பட்டுள்ளன.

## அத்தியாயம் 4.

## ஊதியங்கள் சட்டம்.

### 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம்.

4.1. 1983 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்காணும் வேலைகளை பொறுத்தமட்டில் குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்துள்ளது/திருத்தியமைத்துள்ளது:—

1. புகையிலை தயாரிப்பில் வேலை (பீடி சுற்றுபவர் நீங்கலாக) (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

2. வாசனை சுவை புகையிலை தயாரிப்பில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

3. கல் வெட்டியெடுக்கும் இடங்களில் கல் உடைக்கும் வேலை அல்லது கற்களை ஜல்லிகளாக்கும் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

4. பஞ்சிலிருந்து விதை நீக்குதல், பஞ்சு அழுத்துதல், பஞ்சு கழிவு ஆகியவற்றின் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

5. வெட்டு மரத்தொழிற்சாலையில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

6. முந்திரி தொழிலில் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

7. ஓட்டல்கள், சிற்றுண்டியகங்களில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

8. திரைப்படத் தொழிலில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

9. வெளுப்பாக்குதல், சாயம் தோய்த்தல் ஆகிய நிறுவனங்களில் வேலை (நிர்ணயிக்கப்பட்டது).

10. கைத்தறி நெசவில் வேலை (திருத்தியமைக்கப்பட்டது).

11. கைத்தறிப்பட்டு நெசவில் வேலை (திருத்தியமைக்கப்பட்டது).

12. சோப்பு தயாரிப்பில் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

13. விசைத்தறித் தொழிலில் வேலை (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).





14. மருத்துவ மனைகள்-தனி மருத்துவ மனைகள் ஆகியவற்றில் வேலை (அரசினர் மருத்துவ மனைகள், தொழிலாளர் நலக் காப்புறுதி மருத்துவ மனைகள், மருந்தகங்கள் தவிர) (நிர்ணயிக்கப்பட்டுள்ளது).

15. சாலை அமைத்தல். பராமரித்தல் ஆகிய வேலைகள் அல்லது கட்டிட வேலை அல்லது கல் உடைத்தல், ஜல்லிஉடைத்தல் ஆகிய வேலைகள் (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

19. தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்பில் வேலை (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

17. மைகா சுரங்கங்களில் வேலை (மத்திய அரசு அறிக்கையின் மறு வெளியீடு) (திருத்தியமைக்கப்பட்டுள்ளது).

18. வேளாண்மை, அதன் துணைத் தொழில்களில் வேலை.

4.2. பீடி சுற்றுபவர் தொடர்பாக அவர்களின் குறைந்த அளவு ஊதிய வீதத்தை உயர்த்துவது குறித்து பொது மக்களிடமிருந்து மறுப்புரை/கருத்துரை கேட்டு அரசு வரைவு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இந்த வரைவு அறிவிக்கையை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.3. பின்வரும் பணிகள் தொடர்பாக குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க ஆலோசனைக் குழுக்களை அரசு அமைத்துள்ளது.

1. ஆட்டோ ரிக்‌ஷாக்கள், டாக்சிகள் ஓட்டுவதில் வேலை;

2. செங்கல் ஓடு உற்பத்தித் தொழிலில் வேலை;

3. அச்சகங்களில் வேலை;

4. மீன்பிடி தொழிலில் வேலை.

4.4. பின்வரும் வேலைகளுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிக்க அல்லது திருத்தியமைக்க ஆலோசனைக் குழுக்களை அமைப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது :—

(1) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும் தோல் பொருள் தயாரிப்பதிலும் வேலை;

(2) ஜவ்வரிசித் தொழிலில் வேலை;

(3) மோட்டார் பட்டறைகளில் வேலை;

(4) சரக்குகளை ஏற்றி இறக்கும் தொழிலில் வேலை;

(5) பொதுப் பொறியியல், வடிவமைப்புத் தொழிலில் வேலை;

(6) மூக்குப்பொடித் தயாரிப்புத் தொழிலில் வேலை;

(7) உப்பளங்களில் வேலை;

(8) அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை;

(9) சலவை நிலையங்கள், துணி வெளுப்பு (கம்பெனி, பட்டுத்துணி உட்பட) தொழிலில் வேலை;

(10) எண்ணெய் ஆலைகளில் வேலை;

(11) அரிசி ஆலை, மாவு ஆலை அல்லது பருப்பு ஆலையில் வேலை;

(12) வனத்தொழிலில் வேலை;

(13) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை;

(14) தையல் தொழிலில் வேலை;

(15) செயற்கை வைரம் அறுக்கும் வேலை;

(16) நார்ப்பொருள் தயாரிப்பில் வேலை;

(17) தேயிலைத் தொழிற்சாலையில் வேலை;

4.5. (சமையல்) பாத்திரங்கள் தயாரிப்பு வேலைக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க ஆலோசனைக் குழு தெரிவித்த பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

4.6. ஆய்வு ஆண்டில், அரசு பின்வரும் வேலைகளை 1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் சேர்ந்துள்ளது:—

(1) டப்பா கொள்கலன் தயாரிப்பில் வேலை;

(2) கழிவுப் பஞ்சாலையில் வேலை;

மேற்கூறிய வேலைகளுக்கு குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயிப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

## குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை மன்றம்.

4.7. குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனை மன்றம், ஆய்வு ஆண்டில் மூன்று முறை கூடியது. இக்குழு, மேற்படி கூட்டங்களில் முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளதுடன், அட்டவணையிடப்பட்ட வெவ்வேறு வேலைகளுக்கும் குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிப்பதில் அல்லது திருத்தியமைப்பதில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கென்று அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்கள் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் பரிந்துரைத்துள்ளது.

4.8. தொழிலாளர் நல நீதிமன்றங்களின் நீதிபதிகள், குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்கிற முறையில், 1983 ஆம் ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் வழங்காதது பற்றிய 3 கோரிக்கை மனுக்களை விசாரித்து தீர்ப்பளித்தனர்.



## 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம்.

4.9. இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில் தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

4.10. நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 6,7 ஆம் இணைப்புகளில் உள்ளன.

## தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம்.

4.11. தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும்போது அவர்களுக்குத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

4.12. வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி வாழ்க்கைப்படி வழங்கக்கோரி, இவ்வாண்டுத் தொடக்கத்தில் 29 உரிமைக் கோரிக்கைகள் பைசல் செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில் அத்தகைய உரிமைக் கோரிக்கைகள் 196 துறை அலுவலர்களால் பெறப்பட்டன. அவற்றுள் 157 கோரிக்கைகள் இவ்வாண்டிலேயே பைசல் செய்யப்பட்டன. ஆண்டு இறுதி நிலவரப்படி 68 கோரிக்கைகள் பைசல் செய்யப்படாமல் உள்ளன.

## அத்தியாயம் 5.

### 1959 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி—பல்வகை விதித்துறைகள் சட்டம்.

5.1. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 173 தொழிற்சாலைகளுக்கும், குறிப்பிட்ட வகை தொழில் நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்துகிறது. வருங்கால வைப்புநிதி, குடும்ப ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றுக்காக மூன்று திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

5.2. இந்த ஆண்டில், ஆஸ்பெஸ்டாஸை ஆதாரமாகக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு 1—9—1983-லிருந்து இச்சட்டம் நீட்டிக்கப்பட்டது.

### நிறுவனங்களையும் சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொணருதல்.

5.3. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இச்சட்டத்தின் கீழ் கொணரப்பட்ட நிறுவனங்கள், பணியாளர்கள், சந்தாதாரர்கள், ஆகியோர் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் பட்டவை. | மொத்த . |
|---|---|---|---|
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 434 | 17,170 | 17,604 |
| பணியாளர் எண்ணிக்கை. | 3,35,767 | 13,38,588 | 16,74,355 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை. | 3,21,593 | 12,13,476 | 15,35,069 |

### 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்கள்.

5.4. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இத்திட்டத்தின் கீழ் வந்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை 11,14,276 ஆகும்.



### 1976 ஆம் ஆண்டு பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின் கீழ் உறுப்பினராதல்

5.5. அனைத்து உறுப்பினர்களும் அதாவது 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட, விலக்களிக்கப்படாத நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தாமாகவே இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

5.6. ஆயினும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் கூட்டு காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூடுதல் பயன்பெறும் ஏற்பாட்டைத் தொழிலதிபர்கள் செய்திருக்கும் பொழுது அவர்கள் பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் சேருவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. இதுவரை 38,235 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட 122 நிறுவனங்களுக்கு இந்த விலக்களிக்கப்பட்டுள்ளது.

### கேட்பு, வசூல், நிலுவை.

5.7. மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1983 ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை விவரங்கள் வருமாறு :—

| | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| கேட்பு | 6,245.25 | 1,061.34 | 238.11 |
| வசூல் | 5,966.81 | 1,016.24 | 230.12 |
| நிலுவை | 278.44 | 48.10 | 7.99 |

[1984 மார்ச் 16

5.8. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும் பகுதி பின்வரும் வகைத் தொழில் நிறுவனங்களில் வசூலிக்கப்படாது முடங்கிக் கிடக்கின்றன :—

| (1) | தொழிலாளர் வருங்கால வைப்புநிதி. (2) | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். (3) | தொழிலாளர் வைப்புடன் இணைந்த காப்புறுதி. (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| (1) தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகளைப் பொறுத்த மட்டில் அவற்றை எடுத்துக் கொள்வதற்கு முன்பிருந்த கால அளவுக்குரிய நிலுவைகள். | 57.15 | .. | .. |
| (2) மேற்கூறிய திட்டம்பொருந்துவதை எதிர்த்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 80.77 | 7.37 | 2.54 |
| (3) கலைக்கப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள். | 16.39 | 0.84 | 0.29 |
| (4) மூடப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள். | 4.50 | 0.40 | 0.10 |
| மொத்தம் .. | 158.81 | 8.61 | 2.93 |

5.9. நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து அவை நாட்டுடைமையாவதற்கு முன்பிருந்த காலத்திற்குரிய நிலுவைத் தொகையை வசூலிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

5.10. ரூ. 119.63 இலட்சம் நிலுவைத் தொகையை முனைப்பாக வசூலிப்பதற்கு இந்த அமைப்பு வரி வசூல் சான்றிதழ்களை ஏற்கனவே அளித்துள்ளது. 364 இனங்களைப் பொறுத்த ரூ. 56.45 இலட்சம் வரையிலான வசூல் விவகாரம் மாவட்ட ஆட்சியர்களிடம் பைசல் செய்யப்படாமல் உள்ளன. இத்துடன் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 நிலவரப்படி நிலுவை வசூல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட 1,311 வழக்குகள் விசாரணையில் உள்ளன.



1984 மார்ச் 16]

## பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்துத் தீர்த்தல்

5.11. 1983 ஆம் ஆண்டில் 52,339 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பாக 2,316.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

5.12. 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலுள்ள உரிமைக் கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| (அ) 31–12–1982 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்துத் தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 6,345 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 67,364 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 73,709 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 52,339 |
| (உ) குறைபாடுகளை சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 13,822 |
| (ஊ) 31-12-1983 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 7,548 |

5.13. 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :—

| | |
|---|---|
| 1. இறப்பு | 2,595 |
| 2. வயது முதிர்வு பெற்றமை | 7,756 |
| 3. நிரந்தரமாக இயலாமையுற்றது | 46 |
| 4. பதவியை விட்டு விலகியது | 23,078 |
| 5. ஆட்குறைப்பு செய்யப்பட்டது | 13,309 |
| 6. இடம் பெயர்தல் | 4,505 |
| 7. பணியிலிருந்து நீக்கப்பட்டது | 333 |
| 8. பல்வகை | 357 |
| மொத்தம் .. | 52,339 |

5.14. 1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்பநல ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :

| | |
|---|---|
| (அ) 31-12-1982 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . . . | 6,722 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . | 64,810 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 71,532 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 41,529 |
| (உ) குறைபாடுகளை சரிசெய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 22,133 |
| (ஊ) 31-12-1983 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . . . | 7 870 |

1983 ஆம் ஆண்டில் 41,529 தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 71.74 இலட்சமாகும்.

31-12-1983 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,289 ஆகும்.

5.15. 1976 ஆம் ஆண்டு தொழிலாளர் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31-12-1983 ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப்படாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . . . | 836 |
| (ஆ) 1983 ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . | 2,543 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 3,379 |
| (ஈ) 1983 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை . . . . . . | 2,101 |



| | |
|---|---|
| (உ) குறைபாடுகளைச் சரி செய்து அனுப்புமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 444 |
| (ஊ) 31—12—1983 ஆம் நாள் நிலவரப்படி நடவடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 834 |

தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 87.85 இலட்சமாகும்.

5.16. 58,651 சந்தாதாரர்களுக்கு மொத்த ரூ. 1,331.36 இலட்சம் முன் பணமாக வழங்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரம் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

5.17. இம்மாநிலத்தில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் சக்தியைப் பயன்படுத்துகின்ற 10-ம் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலை புதி துறைகளின் கீழ் மின்சக்தியைப் பயன்படுத்தாத 20 அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத் திட்டம் பொருந்தும். ஓட்டல்கள், உணவகங்கள், திரைஅரங்குகள் ஆகியவையும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,000 ரூபாய்க்கு குறைவாக ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின் கீழ் பயன் பெறுவர். இத்திட்டம் தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு பின்வரும் உதவிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| (1) | மருத்துவ உதவி . . . . | மருத்துவப் பொருட்களாகப் வழங்கப்படுகிறது. |
| (2) | நோய் கால உதவி . . . . | பணமாக அளிக்கப்படுகிறது. |
| (3) | பேறுகால உதவி . . . . | டி |
| (4) | ஏலாமையுற்றோருக்கு உதவி . . | டி |
| (5) | சார்ந்துள்ளவர்கள் நல உதவி . . | டி |
| (6) | இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை | டி |

5.18. இம்மாநிலத்தில் புதிய பகுதிகளுக்கு இத்திட்டம் படிப்படியாக நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. இது தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| | | |
|---|---|---|
| (அ) | தொழிலாளர்களின் எண்ணிக்கை .. | 5,15,000 |
| (ஆ) | ஈட்டுறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை | 6,21,000 |
| (இ) | இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 6,2[illegible],000 |
| (ஈ) | பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை. | 24,09,000 |

5.19. 1983–84–ல் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம் பின்வரும் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(1) செங்கல்பட்டு மாவட்டத்தில் பாடியநல்லூர், அலமாதி.

(2) வட ஆற்காடு மாவட்டத்தில் வாலாஜாபேட்டை.

(3) செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர், திருநின்றவூர், காக்களூர்.

(4) திருமலையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்.

அரசு ஆணையின் விவர அட்டவணையில் அறிக்கையிடப்பட்ட பகுதிகளில் உள்ள 20 நபர்களுக்கு மேல் பணியாற்றி வரும் அல்லது பணியாற்றி வந்த தனியார் போக்குவரத்து நிறுவனங்களில் இச்சட்டத்தின் விதித்துறைகளை 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28 ஆம் நாள் முதற்கொண்டு அரசு செயல்படுத்தப்பட்டுள்ளது.

5.20. புதிதாகச் சேர்க்கப்பட்ட நிறுவனங்களில் பணியாளர் உட்பட இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் மொத்த எண்ணிக்கை 5.15 இலட்சமாக உயர்ந்துள்ளது.

5.21. மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், மாநில காப்புறுதித் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்கு நிகராக உள்ளது. எனவே அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை போக்குவரத்துக் கழகங்களை இத்திட்டத்திலிருந்து நீக்கிவிடலாமென அரசு கருதியுள்ளது.

5.22. மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்ற வீதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. இக்கழகமும் மருத்துவ செலவிற்காக செலவிடப்படும் தொகைக்கு உச்சவரம்பு வரையறை செய்துள்ளது. இந்த உச்சவரம்பு



1983-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது, தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 130 (காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு முழு மருத்துவ வசதி).

5.23. மேற்சொன்ன உச்சவரம்பிற்கு மேற்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருத்துவப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ. 25-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 55-க்கு உட்பட்ட தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது.

5.24. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர், (வட ஆற்காடு மாவட்டம்) ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவ மனைகளும், 116 நிலையான மருந்தகங்களும், 9 நடமாடும் மருந்தகங்களும் 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 2 பகுதிநேர மருந்தகங்களும் செயற்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு:—

| | | படுக்கைகள். |
|---|---|---|
| (1) | தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவனை, அயன்புரம் (சென்னை). | 625 |
| (2) | தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை. | 206 |
| (3) | தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துமனை, மதுரை. | 202 |
| (4) | தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கோயம்புத்தூர். | 500 |
| (5) | தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்). | 50 |

5.25. ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளும், 45 மருந்தகங்களில் அரசுக்கு அல்லது தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன. எஞ்சிய மருந்தகங்கள் வாடகை கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

5.26. சென்னை 23 அயன்புரத்திலுள்ள காப்புறுதி மருத்துவமனையில் வரும் நோயாளிகளின் நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு வசதி செய்வதற்காகவும், குழந்தைகள் மருத்துவப் பிரிவு, பல் மருத்துவச் சிகிச்சை பிரிவு (24 படுக்கை வசதிகள்) ஆகியவற்றை அயன்புரம் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்ட மருத்துவ மனையிலிருந்து சென்னை கே. கே. நகர் தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்ட மருத்துவமனைக்கு மாற்றுவதற்கு 1984ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது

5.27. பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றும் 50 படுக்கைகள் கொண்ட மேலும் நான்கு தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனைகளைக் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி பல்வேறு நிலைகளில் உள்ளது.—

1. சேலம் தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவ மனை.

2. மேட்டூர் அணை தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

3. திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவமனை.

4, சிவகாசி தொழிலாளர் நல காப்புறுதித் திட்ட மருத்துவ மனை.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம்—

5.28. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம் பின்வரும் நேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது:—

(அ) பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் தொழில் விபத்துக்களுக்காக.

(ஆ) தொழில் முறையில் ஏற்படும் இறப்பு அல்லது நோய் களுக்காக.

இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப் பணி யாளர்கள், இரயில்வே பணியாளர்கள் குறிப்பிட்ட சில தீங்கு விளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு (நாட்கூலி அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள் நீங்கலாக) தொழிலதிபரின் வர்த்தக அல்லது வணிக காரியங்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்காக நியமிக்கப்பட்டு உள்ள நாட்கூலி பெறும் பணியாளர்கள் ஆகியோருக்குப் பொருந்தும்.

5.29 தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையாளரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

5.30. தொழிற்சாலை விபத்துக்கள் துயர் துடைப்பு நிதி.—கல் உடைத்தல், வெடி வைத்து தகர்த்தல், கிணறு தோண்டுதல் அல்லது அவைபோன்ற ஆபத்தான தொழில்களில் பணிபுரியும் போது காயமேற்பட்டு அதனால் நிலையாக பணியாற்ற



இயலாமற்போன தொழிலாளர்களுக்கு அல்லது மரணமடைந்த தொழிலாளர்களைச் சார்ந்து இருப்பவர்களுக்கு உதவியளிக்கும் பொருட்டு, ஆண்டொன்றுக்கு 15,000 ரூபாய் தொடர் மானியத் துடன் அரசால் இந்நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1923—ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச் சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர் களிடம் பணி புரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந் தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். இவ்வாண்டில் இந்நிதியிலிருந்து துயர் துடைப்புத் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டம்.

5.31. இச்சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாள நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச் சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல் முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1983 ஆம் ஆண்டில் பெற்று, தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8 ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

திருத்தம்.

5.32. தொழிலாளர் ஒருவர் தொழிலதிபரிடம் ஒரு ஆண்டில் குறைந்த அளவு 240 நாட்கள் பணியாற்றினால் தான் அவருக்கு பணிக்கொடை வழங்கப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் லாலப்பா, லிங்கப்பா ஏனையோருக்கும் ஷோலாப்பூர் லட்சுமி விஷ்ணு டெக்ஸ்டைல் மில்ஸுக்குமிடையே நடந்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் சில குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான பணிக்கொடையை இழக்க நேரிடும் தொழிலா ளர்களுக்கு அத்தகைய இழப்பு ஏற்படாமல் இருக்க வகை செய்யும் பொருட்டு 1972 ஆம் ஆண்டு பணிக்கொடை வழங்கல் சட்டத்தின் 2 (சி) பிரிவை திருத்தும் வகையில் இவ்வரசு சட்ட முன்வடிவு ஒன்றை இயற்றியுள்ளது. மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட இச்சட்ட முன்வடிவு இந்தியக் குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 6.

## தொழிலாளர் நலப் பணிகள்.

### அரசு உதவி பெறும் தொழிற்சாலைத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.

தனியார் துறை தொழிலதிபர் திட்டங்கள்.—

6.1. தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இச்சட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

6.2. சிறிய இரு அறைகளைக் கொண்ட (இருமாடிகள்) வீடுகள் கட்டுவதற்காக உச்சவரம்புத் தொகையாக ரூ.5,350-ம், சிறிய இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 6,050-ம் முறையான இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 7,600-ம் முறையான இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (இருமாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்பு தொகையாக ரூ. 8,[illegible]00-ம் இத்திட்டத்தின் கீழ் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

6.3. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,274 வீடுகள் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இதுவரை செலவிட்ட தொகை ரூ. 54.32 இலட்சமாகும்.

மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம்.

6.4. குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட மலைத்தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும், 37.50 சதவீதம் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

6.5. அறிக்கையாண்டில் பின்வரும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

| | வீடுகளின் எண்ணிக்கை. | கடன் | உதவித் தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. சோலையார், காளையார், எஸ்டேட், வால்பாறை. | 70 | 1,40,000 | 1,05,000 |
| 2 ஈஞ்சப்பாறை எஸ்டேட், வால்பாறை. | 12 | 24,000 | 18,00 |



6.6. இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை 26.40 இலட்சம் செலவில் 1,057 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்.

6.7. தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையின்கீழ் 1971 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலைப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலான பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அண்மைக் காலத்தில் மேலும் பல திட்டங்களை நிறைவேற்றவும் கருதியுள்ளது.

6.8. ஏற்கனவே உள்ள 30 தொழிலாளர் நல நிலையங்களுடன் இவ்வாண்டில் பின்வரும் நான்கு இடங்களில் தொழிலாளர் நல நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

1. தாச்சநல்லூர்.
2. காஞ்சிபுரம்.
3. கரூர்.
4. திருவொற்றியூர்.

### விடுமுறை இல்லம் (Holiday Home)

6.9. தொழிற்சாலைப் பணியாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகை செலுத்தக்கூடிய, விடுமுறை இல்லம் (Holiday Home) ஒன்று ரூ. 15 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது, 1983 இல் திறந்து வைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம்.

6.10. இவ்வாரியம் செயல்படுத்திய ஏனைய நலத் திட்டங்கள், அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு—

| தொழிலாளர் நல நிலையங்கள்— | 1983—84 |
|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள் .. | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை. | 39 |
| (ii) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை. | 1,344 |

(2) பாலர் பள்ளிகள்—

| | | |
|---|---|---|
| (i) | நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 34 |
| (ii) | பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 2,000 |

(3) குழந்தைக் காப்பு நிலையங்கள்—

| | | |
|---|---|---|
| (i) | நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 5 |
| (ii) | பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை. | 214 |

(4) படிப்பகங்கள்—

| | | |
|---|---|---|
| (அ) | படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை | 7 |
| (ஆ) | பயன்பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை. | 61,832 |

(5) ஏனைய திட்டங்கள்—

| | பயனடைந்தோரின் எண்ணிக்கை. | தொகை. ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பி கொடுத்தல். | 558 | 28,198 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து படிப்பு கட்டணங்கள். | 736 | 74,824 |
| (இ) புத்தக வங்கி .. | 23,472 | 3,95,804 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள். | 641 | 1,28,200 |



6.11. பின்வரும் படிப்புகளுக்காக 1982 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கும் படிப்புதவித் தொகை வழங்கிய வகையில் வாரியம் நிதியுதவி அனுமதித்துள்ளது—

| | பயனடைந்துள்ளவர்களின் எண்ணிக்கை. | தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. |
| (அ) பொறியியல் படிப்பிற்கான படிப்புதவித் தொகைகள். | 18 | 18,000 |
| (ஆ) பொறியியல் பட்டயப் படிப்பிற் படிப்புதவித் தொகைகள். | 24 | 14,400 |
| (இ) மருத்துவப் பட்டப் படிப்பிற்கான கான படிப்புதவித் தொகைகள். | 5 | 5,000 |
| (ஈ) தொழிற் பயிற்சி நிலையங்கள் படிப்புக்களுக்கான படிப்பு உதவித் தொகை. | 18 | 5,400 |
| (உ) மேல்நிலைப் பள்ளிக் கல்வி .. | 13 | 6,500 |

சட்ட உதவி:—

6.12. உயர்நீதி மன்ற வழக்குகள் தொடர்பாக, தொழிற் சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனை களுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற வீதத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. 1983 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் இரு மனுதாரர்களுக்கு ரூ. 150 வீதம் மொத்தம் ரூ. 300 வழங்கப் பட்டுள்ளது.

6.13. தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள, தகுதி வாய்ந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர் களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூபாய் 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப் பட வேண்டுமென இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர் கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகங்கள் உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந்த

பட்டத் தொழிலாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பை எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடையவ ராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக் கைகளின் போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப் பட்டிருக்க வேண்டும். 1983 ஆம் ஆண்டில், இத்தகைய சட்ட உதவி வேண்டி ஏழு மனுக்கள் வரப் பெற்று, அவற்றிற்காக ரூபாய் 350 வழங்கப்பட்டது.

## தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்கள்.

6.14 சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்கு சட்ட உதவி செய்வது தொடர் பாக, ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நபர் குழு அளித்த பரிந்துரைக்கிணங்க, அரசு இச்சட்ட ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இக் குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்து வரும் மனுக்களை கருணை உணர்வோடு பரிசீலனை செய்து, அவர்களுடைய துயரை நீக்குவதற்காக அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், தொழிலாளர் நலன் தொடர்புடைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அணுக வேண்டியவர்களைப் பற்றி யும் அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது.

6.15 இக்குழுக்கள் 1983 ஆம் ஆண்டில் 331 முறையீடு களுக்குத் தீர்வு கண்டுள்ளன.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம், சென்னை.

6.16. தமிழ்நாடு அரசால் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையந்தான்—தென்னிந்தியாவில் முதல் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழி லாளர் கல்வி நிலையமாகும். இந்நிலையத்தின் நோக்கங்கள் வருமாறு?—

(1) தொழிற்சங்க நடவடிக்கைத் தரத்தை உயர்த்துதல்;

(2) தொழிலாளர்களுக்கு நலன் பயக்கும் வகையில் நிருவாக வாயில்களை மேம்படுத்துதல்;

(3) திறமையான தொழிலாளர் நல நிருவாகப் பணியை உருவாக்குதல்.



6.17. 1983 ஆம் ஆண்டில், இந்நிலையம் பின்வரும் திட்டங் களைச் செயல்படுத்தியுள்ளது.

(1) சென்னையில், அரசு சார்புச் செயலாளர்களுக்குத் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி நினைவுகூர் பயிற்சி;

(2) வணிக நிறுவனங்கள் தொழிலதிபர்களுக்கு கடைகள் நிறுவனங்கள் சட்டம், ஏனையத் தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றிய வகுப்புகள் நடத்துதல்;

(3) தொழிற்சங்க தலைமை பற்றிய திட்டம்;

(4) தொழிற்சாலைகளில் மேற்பார்வைப் பணியாற்று பவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டம்;

(5) கூட்டுறவுச் சங்கங்களின் தலைமை நிருவாகிகளுக்கு நினைவுகூர் பயிற்சி அளித்தல்;

(6) துறை அதிகாரிகள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோர்களுக்கு நினை வூட்டுப் பயிற்சி அளித்தல்.

6.18. இந்நிலையம் இதுவரையில் நடத்திய பயிற்சி வகுப்புகள், கருத்தரங்கங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை 194 ஆகும். இவற்றில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை 6,968 ஆகும்.

## தொழிலாளர் நல நிருவாகம் பற்றிய பட்ட மேற்படிப்பு, பட்டயக் கல்வி.

6.19. இக்கல்வி நிலையம் 15–9–1979 முதல் தொழிலாளர் நல நிருவாகம் பற்றி ஓராண்டு பகுதி நேர பட்ட மேற்படிப்புப் பட்டய வகுப்பை நடத்தி வருகிறது. இக்கல்வியில் தேர்ச்சி பெற்றவர்கள் தொழிலாளர் நிருவாகம், தொழிலாளர் நல உறவு, தொழிலாளர் நல நடவடிக்கைகள் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புகள் பெறுகின்றனர். இதுவரை தொழிலாளர் நல நிருவாகத்தில் 101 மாணவர்களுக்கு பட்டயம் வழங்கப் பட்டுள்ளது.

## தொழிலாளர் நலன் பற்றிய தமிழ் திங்களிதழ்.

6.20. இந்நிலையம் ''உழைப்பவர் உலகம்'' திங்களிதழ் ஒன்றை தமிழில் வெளியிட்டு வருகிறது. தொழிலாளர் நீதி மன்றங்கள், உயர் நீதிமன்றங்கள், உச்ச நீதி மன்றம் ஆகியவை தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அளித்த முக்கியமான தீர்ப்புகள் பற்றிய செய்திக் குறிப்புகள் இதில் வெளியிடப் படுகின்றன. அரசு அறிவிப்புகள், வாழ்க்கைச் செலவுப் புள்ளி, வேலை நிறுத்தம், கதவடைப்புகள் ஆகிய புள்ளி விவரங்களையும் வெளியிடுகிறது.

[1984 மார்ச் 16

## வருங்கால திட்டம்.

6.21. தொழிலதிபர்கள்-தொழிலாளர் நல்லுறவு, பணியாளர் அமைப்பு குறித்த மேலாண்மை தொழிலாளர் நலன் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி திட்டத்தை மேற்கொண்டு வருவதற்காக இந்நிலையத்தில் ஆராய்ச்சிக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் நடுவர் மன்றம் தீர்ப்பு அளிப்பதில் ஏற்படும் கால தாமதம் பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சி நிறைவுறும் தருவாயில் உள்ளது. இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப் பட்டு வருகிறது.



1984 மார்ச் 16]

## அத்தியாயம் 7.

### எடைகள்-அளவைகள் குறித்த சட்டம்.

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற் படுத்துதல்) சட்டம்.

7.1. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள்
(செயற்படுத்துதல்) சட்டம், குறைவாக எடைபோடுதல்,
அளவையிடும் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள், எடைகள்,
அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின்
கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் தொழிலாளர்
நல இணை ஆணையாளரும் ஆவர் (ஆய்வு). இவருக்கு உதவி
யாக இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள்,
தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத்
துறை உதவி ஆய்வாளர்கள் சென்னை மாநகர், செங்கல்பட்டு,
மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை—
அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள்(Stamping Inspectors)
ஆகியோரும் சென்னை மாநகர் செங்கல்பட்டு, கோயம்புத்தூர்
ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வா
ளர்களும் (பிரிவு) ஆகியோரும் இவருக்கு உதவியாக பணியாற்று
கின்றனர். 1983 ஆம் ஆண்டில் 7 எடை அளவைகளில் முத்திரை
யிடும் ஆய்வாளர்கள் பதவிகளுக்கும் கோயம்பத்தூர் மாவட்டத்
திற்காக ஒரு தொழிலாளர் நல துணை ஆய்வாளர் (பிரிவு)
பதவிக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. சென்னை,
செங்கல்பட்டு, மதுரை ஆகிய இடங்களுக்காக ஏற்கெனவே
எடை-அளவைகள் முத்திரையிடும் ஆய்வாளர்களை நியமிக்க
அனுமதி வழங்கப்பட்டது. எடை அளவைகளில் முத்திரையிடும்
பணிக்காக மட்டுமே எடை—அளவைகள் முத்திரையிடும்
ஆய்வாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதால், சென்னை,
செங்கல்பட்டு, மதுரை, கோயம்பத்தூர் மாவட்டங்களிலுள்ள
வணிகர்கள் பெரும் பயன் அடைகின்றனர்.

7.2. எடை—அளவைகள் குறைவாக போடப்படுதல்,
தவறான எடைகள்-அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்து
வதை த்விர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர்
சோதனைகள் நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகள் நடத்துதல்
உட்பட கூட்டாகச் சோதனை இடுதல், தமிழ்நாடு எடைகள்—
அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றம் இழைப்பவர்கள் மீது சட்ட
நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கை
களை மேற்கொண்டுள்ளது.

7.3. 1983 ஆம் ஆண்டில் எடைகள்—அளவைகள் சட்டம்,
விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக கடந்த ஆண்டில் போடப்
பட்டு நிலுவையில் இருந்த 17,924 வழக்குகள் உட்பட 18,694
வழக்குகள் போடப்பட்டன. இவ் வழக்குகள் அனைத்திலு

[1984 மார்ச் 16

தண்டனை அளிக்கப்பட்டது. ரூ. 11,51,268 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை—அளவைகளில் முத்திரை இடுவதற்கான கட்டணமாக 1983 ஆம் ஆண்டில் ரூ. 57,21,530.10 வசூலிக்கப் பட்டது.

7.4. 1682—83 ஆம் ஆண்டில் இச்சட்டத்தின் கீழ் எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடை-அளவைகள் உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் பழுதுபார்ப்பவர்கள், விற்பனை யாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு வழங்கிய உரிமங் களின் (புதிய புதுப்பித்தல்), விவரம் வருமாறு:—

| ஆண்டு. | பழுது பார்ப்பவர்கள். | விற்பனை யாளர்கள். | தயாரிப் பாளர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982 .. | 258 | 589 | 121 |
| 1983 .. | 267 | 587 | 113 |

7.5. அறிக்கை ஆண்டில் விற்பனையாளர்கள், தயாரிப் பாளர்கள், பழுதுபார்ப்பவர்கள் ஆகியோரிடமிருந்து ரூ. 1,56,262.50 உரிமக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

7.6. எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப் போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளை செயல் படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறி ழைக்கும் வணிகர்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார்.

7.7. 1983 ஆம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களை சோதனையிடும் பொருட்டு இத்துறை 2,37,542 ஆய்வுகள் மேற்கொண்டது. எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப்பகுதிகளில் தீவிரமாக செயல் படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள் கிராமங்களில் முறை யான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்ளுகின்றனர். 1983 ஆம் ஆண்டில் 10,869 கிராமங்களில் 76,055 வணிகர்களை சார் நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

7.8. எடைகள்-அளவைகள் குறைவாக போடப்படுவது குறித்து மேற்கொள்ளப்படும் சோதனைகள் தவிர மாநிலம் முழுவதிலுமுள்ள வர்த்தக நிறுவனங்களில் திடீர் சோதனை யையும் இத்துறை நடத்துகிறது. நடத்தப்பட்ட திடீர் சோதனைகள் பற்றிய விவரம் இணைப்பு 10-ல் கொடுக்கப் பட்டுள்ளது.



1984 மார்ச் 16]

7.9. 1983 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ஆம் நாளில் கூட்டாக நடத்தப்பட்ட திடீர் சோதனைகளின்போது கைப் பற்றப்பட்ட தவறான, குறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப்படாத பல்வேறு எடைகள் அளவைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| எடைகள் .. .. .. | 22,406 |
| கொள்ளளவு கருவிகள் .. .. .. | 15,294 |
| நிறுவைக் கருவிகள் .. .. .. | 519 |
| அளக்கும் கருவிகள் .. .. .. | 411 |
| துலாத்தராசுக்கள் (பீம் ஸ்கேல்ஸ்) .. | 3,227 |

பாகம்—2.

இணைப்பு—1.

தொழில் தகராறுகள்.

| விவரம். | 1982 (1982 ஜனவரி முதல் நாளிலிருந்து 1982 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) | 1983 (1983 ஜனவரி முதல் நாளிலிருந்து 1983 டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை. | 1,542 | 1,730 |
| (ஆ) வரப்பெற்ற புகார்கள் எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை.. .. — | 7,347 | 7,580 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 7,159 | 7,356 |
| (ஈ) இணக்க முறையில் தீர்வு கண்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 1,328 | 1,416 |
| (உ) வேறுவகையில் சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை | 4,907 | 4,908 |
| (ஊ) தொழிலாளர்கள் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 894 | 1,032 |
| (எ) நடுவர் நீதிமன்றத்தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 1 | .. |
| (ஏ) தொழில் தகராறுகள் சட்டம் 10 (2) ஆம் பிரிவின்கீழ் நீதிமன்ற தீர்ப்புக்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 29 | .. |
| (ஐ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்ததகராறுகளின் எண்ணிக்கை .. | 1,730 | 1,954 |

## இணைப்பு 2.

1983 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். | 1982 (1982 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1982 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் முடிய) | 1983 (1983 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் நாளிலிருந்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் முடிய) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) கதவடைப்புக்கள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை .. .. | 187 | 21: |
| (ஆ) வீணான உழைப்பு நாட்கள் | 18,05,978 | 21,16,218 |

## இணைப்பு 3.

1983 ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழிமுறைகள்.

| | |
|---|---|
| 1. நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை .. .. .. | 43 |
| 2. தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கப்பட்டவை .. .. | 7 |
| 3. தொழிலாளர் துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப்பட்டவை .. | 141 |
| 4. மூடப்பட்டவை .. .. .. | 5 |
| 5. ஆண்டிறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. | 16 |



## இணைப்பு 4.

(1) தொழில் வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொழில் எண்ணும் தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகளின் எண்ணிக்கை. 1982 | 1983 | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. 1982 | 1983 | இழந்த உழைப்பு நாட்கள். 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (அ) துணி நெசவு .. | 80 | 117 | 23,237 | 35,440 | 5,86,166 | 7,20,309 |
| (ஆ) பொறியியல் .. | 52 | 49 | 10'429 | 19,530 | 6,43,526 | 7,75,712 |
| (இ) தோல் பதனிடும் தொழிற்சாலைகள். | 3 | 5 | 2,650 | 1,342 | 3,900 | 49,810 |
| (ஈ) புகையிலை, பீடித் தொழில். | .. | .. | .. | .. | .. | .. |
| (உ) மலைத்தோட்டங்கள் | 6 | 10 | 4,887 | 6,808 | 1,57,190 | 3,46,146 |
| (ஊ) ஏனையவை .. | 46 | 31 | 25,474 | 10,815 | 4,15,196 | 2,24,241 |
| மொத்தம் .. | 187 | 212 | 66,677 | 73,935 | 18,05,978 | 21,16,218 |

**(ii) தீர்ப்பு வழங்குதல்:**

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1982 (2) | 1983 (3) | தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1982 (4) | 1983 (5) |
|---|---|---|---|---|
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 32 | 87 | 36 | 57 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 862 | 783 | 909 | 980 |
| (இ) 10(2) ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்பட்டவை | 29 | .. | .. | .. |
| ஈ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 1 | .. | .. | .. |
| (உ) தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33-சி (2) ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை .. .. .. | 2,556 | 1,909 | .. | 1,560 |

**(iii) தொழிற் தகராறுகள் சட்டத்தின் 33-சி (1) ஆம் பிரிவின்கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்காக அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்**

| ஆண்டு. (1) | நேர்வுகளின் எண்ணிக்கை. (2) | தொகை ரூபாய். (3) |
|---|---|---|
| 1982 .. .. .. | 143 | 13,76,996 20 |
| 1983 .. .. .. | 74 | 5,97,307·92 |



## இணைப்பு 5.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும் (1) | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. (2) | இந்த ஆண்டில் அனுமதிக்கப்பட்டவை. (3) | முடிக்கப்பட்டவை. (4) | தண்டனை அளிக்கப்பட்டவை. (5) | விடுதலை பெறப் பட்டவை (6) | தண்டிக்கப் பட்டவை. (7) | திரும்ப பெறப் பட்டவை. (8) | முடிவு றாமல் உள்ளவை. (9) | பெறப்பட்ட அபராத தொகை ரூபாய். (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 2,620 | 3,706 | 3,869 | 3.547 | 110 | 10 | 202 | 2,457 | 6.43.745 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | 5.882 | 18,763 | 19,960 | 19,759 | 51 | 72 | 78 | 4,685 | 7,80,918 |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | 1,673 | 2.909 | 3,272 | 3,205 | 13 | 18 | 36 | 1,310 | 1,98,283 |
| 4. 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம். | 169 | 325 | 350 | 339 | 8 | 3 | . | 144 | 60.880 |
| 5. 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப் படுத்தலும் நீக்குதலும்) சட்டம். | 34 | 79 | 77 | 72 | 1 | .. | 4 | 36 | 3.015 |
| 6. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 2,061 | 5.428 | 5,524 | 5,460 | 21 | . | 26 | 1.965 | 1,76,986 |

**(ii) தீர்ப்பு வழங்குதல்:**

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7. 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 65 | 86 | 104 | 100 | 2 | 1 | 1 | 47 | 33,100 |
| 8. 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். | 817 | 1,546 | 1,658 | 1,617 | 10 | 4 | 27 | 705 | 88,315 |
| 9. 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம். | 1,055 | 3,137 | 3,017 | 2,959 | 21 | 14 | 23 | 1,175 | 1,99,920 |
| 10. 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம். | 5 | 87 | 71 | 70 | .. | .. | 1 | 21 | 3,170 |
| 11. 1972 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம். | 1 | 1 | 1 | 1 | .. | .. | .. | 1 | 50 |
| 12. 1966 ஆம் ஆண்டு பீடி சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம். | 173 | 164 | 177 | 164 | 6 | .. | 7 | 160 | 23,295 |
| 13. 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம். | 6 | .. | .. | .. | .. | .. | .. | 6 | .. |
| 14. 1981 ஆம் ஆண்டு வாழ்க் கைப்படி வழங்கல் சட்டம். | .. | 1 | 1 | 1 | .. | .. | .. | .. | 25 |



## இணைப்பு 6.

தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| ஆண்டு. | நிறுவனங்களின் எண்ணிக்கை. | அமர்த்திக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. | வசூலிக்கப்பட்ட உரிம/பதிவு தொகை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| **அமைப்பு ரீதியான தொழிற்சாலைகள்** | | | |
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் | | | |
| 1982 .. .. .. .. | 11,465 | 7,01,450 | 55,11,712 |
| 1983 .. .. .. .. | 11,920 | 7,85,864 | 58,30,396 |
| (2) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | | | |
| 1982 .. .. .. .. | 451 | 92,300 | இதற்கு அவசியமில்லை |
| 1983 .. .. .. .. | 454 | 92,361 | |
| (3) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம். | | | |
| 1982 .. .. .. .. | 1,658 | 58,511 | 81,140·25 |
| 1983 .. .. .. .. | 1,614 | 62,874 | 91,624,93 |

அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்:

(1) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 1,173 | 10,979 (வீட்டிலிருந்து பணிபுரிபவர்கள் 2 இலட்சம்.) | 20,951·00 |
| 1983 .. .. .. .. | 1,195 | 12,004 (வீட்டிலிருந்து பணிபுரிபவர்கள் 2 இலட்சம்.) | 37,133·00 |

(2) 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்-நிறுவனங்கள் சட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 2,72,363 | 2,66,182 | இதற்கு அவசியமில்லை |
| 1983 .. .. .. .. | 2,70,505 | 2,65,963 | |

(3) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்.

| | | | |
|---|---|---|---|
| 1982 .. .. .. .. | 26,349 | 66,966 | 2,87,622·95 |
| 1983 .. .. .. .. | 25,676 | 70,874 | 2,96,142·00 |



இணைப்பு 7.

பல்வேறு தொழிலாளர் நலச் சட்டகளின் கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விவரம்.

| சட்டத்தின் பெயர். | முறையான ஆய்வு. | விடுமுறை ஆய்வு. | சிறப்பு ஆய்வு. | திடீர் ஆய்வு. | இரவு நேர ஆய்வு. | சோதனை ஆய்வு. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம். | 21,599 | 1,014 | 2,607 | 679 | 819 | 2,631 |
| 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள்—நிறுவனங்கள் சட்டம். | 3,80,176 | 38,682 | 5,950 | 9,382 | 11,965 | .. |
| 1958 ஆம் ஆண்டு .. தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம். | 49,460 | 860 | 654 | 506 | 131 | .. |
| 1961 ஆம் ஆண்டு .. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம். | 3,503 | 60 | 128 | 67 | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1965 ஆம் ஆண்டு .. உழைக்கும் பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம். | 230 | .. | .. | .. | .. | .. |
| 1980 ஆம் ஆண்டு .. ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைபடுத்தல்-நீக்குத..) சட்டம். | 1,626 | .. | .. | .. | .. | .. |
| 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம். | 1,92,861 | 2,005 | 1,856 | 1,421 | .. | .. |
| 1951 ஆம் ஆண்டு .. மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம். | 1,032 | 75 | 35 | 18 | .. | .. |
| 1936 ஆம் ஆண்டு .. ஊதியம் வழங்கல் சட்டம். | 57,247 | 142 | 104 | 184 | .. | .. |
| 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டம். | 1,20,484 | 1,340 | 1,398 | 1,464 | .. | .. |



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1966 ஆம் ஆண்டு .. பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள் சட்டம்) | 2,536 | 33 | 86 | 6 | .. | .. |
| 1938 ஆம் ஆண்டு .. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம். | 589 | 23 | 12 | 8 | .. | .. |
| 1961 ஆம் ஆண்டு .. மகப் பேறு பயன் சட்டம் | 10,690 | .. | .. | .. | .. | .. |
| 1981 ஆம் ஆண்டு .. தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம். | 1,057 | .. | .. | .. | .. | .. |

## இணைப்பு 8.

(அ) பல்வேறு தொழிலாளர்கள் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| தொடர் எண்ணும் விவரங்களும். | * தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | ** தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | ** பணிக்கொடை வழங்குதல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள். | 38 | 34 | 124 | 160 | 350 | 315 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 70 | 85 | 208 | 214 | 880 | 1,736 |
| (3) மொத்த வழக்குகளின் எண்ணிக்கை. | 108 | 119 | 332 | 374 | 1,230 | 2,051 |
| (4) நடப்பாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 74 | 72 | 172 | 199 | 915 | 1,711 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 34 | 46 | 160 | 175 | 315 | 340 |

*தொழிலாளர் நல அலுவலர்கள், தொழிலாளர் நல உதவி ஆணையர் (இணக்கம்) ஆகியோரால் முடிவு செய்யப்பட்டவை.

**தொழிலாளர் நலத் துணை ஆணையர்களின் அலுவலகங்களில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையர்களால் முடிவு செய்யப்பட்டவை.



(ஆ) தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.—

| விவரமும் தொடர் எண்ணும். | தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1982 | 1983 | 1982 | 1983 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| (1) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 254 | 299 | 181 | 168 | 146 | 87 |
| (2) இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை. | 927 | 1,031 | 671 | 579 | 141 | 208 |
| (3) மொத்தம் .. | 1,181 | 1,330 | 852 | 747 | 287 | 295 |
| (4) இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 882 | 970 | 684 | 430 | 200 | 220 |
| (5) ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை. | 299 | 360 | [illegible] | [illegible] | 81 | 75 |

## இணைப்பு 9.

### தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் பற்றிய விவரங்கள்.

| நோக்கம். | இனங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (பத்தி 62.). | 14,265 |
| (ஆ) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக்குடியிருப்பு வாங்க அல்லது வீட்டுமனை சுங்கம், அரசு முகவரமைப்புகளின் கடனைத் தீர்க்க (பத்தி 68-பி அண்டு 68-பிபி). | 8,689 |
| (இ) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன்பணம் (பத்தி 68-எச்). | 8,221 |
| (ஈ) உறுப்பினருக்கு/அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக (பத்தி 68.ஜே). | 922 |
| (உ) உறுப்பினர்களின் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள்கள், மகன்கள் சகோதரிகள், சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகள், மகன் [illegible] 68-எம்). | 23,764 |
| (ஏ) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68-என்). | ஏதுமில்லை. |

இணைப்பு 10.

**1958-ம் ஆண்டு எடைகள் அளவைகள் குறித்த சட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட திடீர் சோதனைகள் பற்றிய விவரம்.**

| தொழில் வகை | திடீர் சோதனை நடத்தப்பட்ட நாள். | செய்யப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை. | கண்டுபிடிக்கப் பட்ட முறை கேடுகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| உணவு பங்கீட்டுக் கடைகளிலும் ஏனைய முகவர் அமைப்புகளிலும். | 3-2-1983<br>5-2-1983 | 246 | 79 |
| Do | 19-4-1983<br>20-4-1983 | 336 | 113 |
| எரிவாயுக்கலங்கள் (Gas Cylinders) (விற்பனையாளர்கள் இடங்களில்) | 15-3-1983 | 195 | 10 |
| எரிவாயு கலன்கள் .. .. (பங்கீடு செய்யும் இடங்களில்) | 15-3-1983 | 27 | 1 |
| பெட்ரோல் பங்குகள் ... ... (பம்புகளின் அளவுகளை சரிசெய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.) | 6-6-1983<br>7-6-1983 | 447 | 48 |



## இணைப்பு II

(390-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### அத்தியாயம்—I

### தேசிய வேலைவாய்ப்புப் பணி.

**1.1. வேலைவாய்ப்பகங்கள்:**

தொழில்நுட்பம் அறிந்தவர்களுக்கும், உடல் ஊனமுற்றவர்களுக்கும், தொழில் ரீதியில் தகுதி பெற்றவர்களுக்கும் உரிய தனி வேலைவாய்ப்பகங்கள் ஐந்து உட்பட இம்மாநிலத்தில் முப்பத்தொன்பது வேலை வாய்ப்பகங்கள் உள்ளன. கடந்த ஆண்டில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, பணியில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை, பதிவேடுகளில் எஞ்சியுள்ளவர்களின் எண்ணிக்கை, அறிவிக்கப்பட்ட பதவிக்காலியிடங்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்பகங்களின் பணியைப் பயன்படுத்திக் கொண்ட தொழிலதிபர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் ( காடுக்கப்பட்டுள்ளன.

**1.2. உடல் ஊனமுற்றோருக்கான தனி வேலைவாய்ப்பகம்:**

உடல் ஊனமுற்றோரின் தனிப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பிரிவாக நான்கு பிரிவுகளைக் கொண்ட தனி வேலைவாய்ப்பகம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. உடல் ஊனமுற்றவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக மத்திய அரசிடமிருந்து முழு உதவிபெற்று கோயம்புத்தூரிலுள்ள வேலைவாய்ப்பகத்தில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

**1.3. வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டுதல்/வேலைவாய்ப்பு ஆலோசனை அளித்தல்:**

வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் புதுக்கோட்டை, தருமபுரி ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது எல்லா மாவட்டங்களிலும் வாழ்க்கைத் தொழிலுக்கு வழிகாட்டும் பிரிவுகள் உள்ளன.

**1.4. 1959 ஆம் ஆண்டு பதவி காலியிடங்களை கட்டாயமாக வேலை வாய்ப்பகத்திற்குத் தெரிவித்தல் சட்டத்தைச் செயற்படுத்தல்:**

30-9-1982 ஆம் நாள் நிலவரப்படி இச்சட்டத்தின் செயல் வரம்பின்கீழ் மொத்தம் 13,186 நிறுவனங்கள் இருந்தன. 30-9-1983 ஆம் நாள் நிலவரப்படி 14,111 நிறுவனங்கள்

ன. வேலைவாய்ப்பகங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட பதவி
பிடங்களின் எண்ணிக்கையையும், பின்னர் இந்நிறுவனங்
நிரப்பப்பட்ட பதவிக்காலியிடங்களின் எண்ணிக்கையும்
ணப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

வேலைவாய்ப்பற்றோர் இடருதவித் திட்டம்:

ந்தாண்டுகளுக்கும் மேலாக வேலைவாய்ப்பகப் பதிவேடு
பெயரைப் பதிவு செய்துள்ளவர்களும், பெற்றோரின்
வருமானம் ரூ. 2,000-க்குக் குறைவாக உள்ளவர்களுமான
த வேலைவாய்ப்பு அற்றவர்களுக்கு இடருதவித் தொகை
தும் அரசின் திட்டம் 1-7-1980-விருந்து செயல்படுத்தப்
வருகிறது. கடந்த ஆண்டில் (காலண்டர்) எய்திய
ன தொடர்பான விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்
ள்ளன.

சுய வேலைவாய்ப்பு:

தசிய வேலைவாய்ப்புப்பணி நிறுவனத்தின் கடமைகள்
ணப்பதாரர்களைப் பதிவு செய்து நியமனம் செய்வதுடன்
து விடக்கூடாது; ஆனால் சுயவேலைவாய்ப்புக்கு வழி
தல், பயிற்சியளித்தல், விண்ணப்பதாரர்களை தயார்
ல் ஆகியவற்றையும் கவனிக்கவேண்டும் என்பது தற்போது
ம் உணரப்பட்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து
உதவிப்பெற்று கடந்த ஆண்டில் வேலூரிலுள்ள வேலை
பகத்தில் தனி வேலைவாய்ப்புப் பிரிவு ஒன்று அமைக்கப்
ள்ளது. இப்பிரிவில் உள்ள வேலை வாய்ப்பு அலுவலர்
லையில் விருப்பம் உள்ள நபர்களுக்கு அறிவுரையும்
ம் காட்டுவார்; இதற்கு வேண்டிய வங்கி உதவியும்
டு செய்கிறார்.

ராம இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்
தாழில் பயிற்சி நிலையங்களிலும் இவற்றைப் போன்ற
ய நிறுவனங்களிலும் பயிற்சி பெற்ற அனைவருக்கும்
லை வாய்ப்பு முயற்சிகளை மேற்கொள்வதற்காக நிதி
அளிக்கும் புதிய இயக்கத்தின் பயனாக சுயவேலை
பு பெருகியுள்ளது. மாவட்ட ஆட்சியரின் தலைமையின்
இதற்கென அமைக்கப்பட்ட பணிக் குழுவானது
ிற்சியாளர்களுக்கு நேர்முகத் தேர்வு ஒன்றினை நடத்தி
புள்ளவர்களின் பெயர்களை வணிக வங்கிகளுக்கு அனுப்பி
உதவி வழங்குமாறு பரிந்துரை செய்கின்றது. இந்நிதி
ரூ. 3,000 முதல் 10,000 வரை வழங்கப்
து. கிராம இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத்
த்தின்கீழ் 31-3-1983 ஆம் நாள் வரையில் தொழில்
நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ள 10,031 பேருள்





இதுவரையில் 6,500 பேர் ஏற்கெனவே தேர்வு செய்யப்
வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். இதுவ
2,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு 1 கோடி ரூபாய் வ
நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

1.7. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்:

பொதுவாக இங்கு நிலவும் வேலையில்லாப் பிரச்சனை
தீர்வு காணும் முயற்சியின் ஒரு பகுதியாக குடும்ப
ஒருவருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் திட்டத்தினை
அரசு ஏற்கெனவே ஒரு கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்
கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்ப
குறித்து மாநில அளவில் ஆய்வு நடத்தியதில் சுமார்
இலட்சம் பேர் சுயவேலைவாய்ப்பிற்கு விருப்பம் தெ
துள்ளனர் என்று தெரிய வருகிறது.

2. அரசு பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவா
நிறுவனம் அனுப்பியவர்களிலிருந்து வேலைக்கு ஆள் எ
போது ஏனைய தகுதிகள் சமமாயிருப்பின் வேலையி
குடும்பங்களிலிருந்து வருபவர்க்கு சலுகை கொடுக்க வே
மென்று அரசு சமீபத்தில் ஆணை வெளியிட்டுள்ளது. வேலை
குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான சான்றிதழை வரு
துறை வழங்கும்.

1.8. கணக்கீட்டுப் பொறிமயமாக்குதல்:

வேலைவாய்ப்பகத்தில் பணி திறம்பட நடைபெ
அங்கு முறைகேடுகள் நிகழாமல் தவிர்க்கவும் வேலைவா
அலுவலகங்களின் அன்றாடப் பணிகளை கணக்கீட்டுப்
மூலம், செய்வதன் அவசியம் குறித்து அரசு நன்கு உ
துள்ளது. இதனை மனதில் கொண்டு, வளரும் நாடுகளி
அறிவியல், தொழில் நுட்பக் குழு (வ.நா.அ.தொ.கு) செ
யிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தின் தொ
நுட்ப உதவியுடன் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து
வாய்ப்பு அலுவலகங்களில் பணிகளையும் படிப்படியாக
கீட்டுப் பொறி மயமாக்குவதென்று அரசு திட்டமிட்டு
சென்னை வட்டாரத்திலுள்ள ஐந்து வேலைவாய்ப்பு அலு
களின் பணிகளை கணக்கீட்டு பொறிமயமாக்குவத
1984-85 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீ
ரூபாய் 6.5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்க
அடுத்த ஆண்டுகளில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

அத்தியாயம் 2.

கைவினைஞர் பயிற்சி.

2.1. தொழில் பயிற்சி நிலையங்கள்:

இம்மாநிலத்தில், மகளிருக்கென்று தனியாக 3 தொழில் பயிற்சி நிலையங்கள் இருப்பது உட்பட மொத்தம் 35 தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில் பயிலுவோரின் எண்ணிக்கை 14,272 பேர். 1982 ஆம் ஆண்டில் 8,264 மாணவ மாணவியர் சேர்க்கப்பட்டிருக்க, 1983 ஆம் ஆண்டில் 9,189 மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1983-84-இல் கோயம்புத்தூர், மதுரை, வடசென்னை ஆகிய இடங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் மூன்றாவது முறை மாற்றுப் பணியை அரசு கொண்டு வந்தது. 1984-85-இல் சேலத்திலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் மூன்றாவதுமுறை மாற்றுப் பணியைக் கொண்டுவர தற்போது உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதனால், மேலும் 200 மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதன் பொருட்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் பயிற்சி நிலையங்களில் நவீன இயந்திரங்கள், சாதனங்களை அமைக்கவேண்டிய அவசியம் பற்றி அரசு நன்கறியும் இதன். பொருட்டு, 1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கக் கருதப்பட்டுள்ளது.

2.2. 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பழகுவோர் பயிற்சி:

இச்சட்டத்தின்படி, தொழில் பழகுவதற்காக மாநிலத் தொழில் பழகுவோர் குழுவால் அனுப்பப்படுகிறவர்களுக்குத் தொழிலதிபர்கள் பயிற்சி அளிக்க வேண்டும். தொழில் பழகும் காலம், தொழிலைப் பொறுத்து 6 மாதத்திலிருந்து 4 ஆண்டுகள் வரை உள்ளது. பயிற்சியில் தேறிய பின்னர் அதற் கான தேசியச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வரும் தொழில் பழகுவோர் பற்றிய விவரங்கள் 30-9-1983 நிலவரப்படி இணைப்பு 4 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவை அருகாமையிலுள்ள தொழிற்சாலைகளில் பயிற்சி பெறும் தொழில் பழகுவோரின் தொழில் நுட்பக் கல்வித் தேவையை நிறைவு செய்கிறது. 1983-84-இல் ஒசூரில் தொழில் பழகுதல் தொடர்பான பயிற்சி நிலையம் அமைக்கப் பட்டது. இதனையும் சேர்த்து இம் மாநிலத்தில் தற்போது மொத்தம் 9 தொடர்புப்பயிற்சி நிலையங்கள் உள்ளன.



2.3. வாழ்க்கைத் தொழில் உயர்வு பயிற்சித் திட்டம்:

இத் திட்டம், ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டம், அனைத்து நாடுகள் தொழிலாளர் நல நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் சில தொழில் பயிற்சி நிலையங்களில் செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில், இத் திட்டம், அம்பத்தூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் செயலாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில் நிறுவனங்கள் இத் திட்டத்தைப் பெரிதும் பாராட்டியுள்ளன. இத்திட்டம் மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் விரைவில் செயலாக்கப்படும்.

2.4. கோயம்புத்தூரில் ஏழாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உடல் ஊனமுற்ற மகளிருக்கு வாழ்க்கைத் தொழில் புதுவாழ்வு நிலையம் அமைக்கப்படவிருப்பதாக மத்திய அரசு, தமிழக அரசுக்குத் தெரிவித்துள்ளது.

2.5. சுய வேலை வாய்ப்புப் பயிற்சி:

தமிழ்நாடு கிராமப் பகுதி இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், கிராமப்பகுதி இளைஞர்களுக்குப் பொறியியல் தொழில்களிலும், பொறியியல் சார்ந்த தொழில்களிலும், 28 தொழில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடந்த ஆண்டுகளில் இத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்கள் 1.6. பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள புதிய திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

பயிற்சியைத் திறம்பட நடத்துவதற்கு வகை செய்யும் பொருட்டு சென்னை சிறு தொழில் பணி நிலையத்தின் ஒத்துழைப்புடன் தொழில் பயிற்சி நிலையங்களைச் சேர்ந்த பயிற்சி அதிகாரிகளுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிய நினைவு கூர் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. கைவினைஞர்கள் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெறும் பயிற்சியாளர்கள் அனைவருக்கும் சுய வேலை வாய்ப்பு தொடர் பான பயிற்சி வகுப்புகளை நடத்தவும், இதில் உள்ள நடை முறை தொழில் நுட்பப் பிரச்சனைகளை அவர்கள் நன்கு தெரிந்துக்கொள்வதற்கு வகை செய்யவும் கைவினைஞர் களுக்குப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது.

2.6. புதிய திட்டங்கள்:

மேற்கு ஜெர்மனி அரசின் உதவியுடன் கோயம்புத்தூரில் கற்பிப்பு கருவி நிலையம் ஒன்றை ஏற்படுத்த (Instructional Media Institute) மத்திய அரசு கருதுகிறது. இந்த நிறுவனம் தொழில் பயிற்சி நிலையங்களில் பயன்படுத்துவதற்காக பயிற்சிக்குத்

தேவையான புத்தகங்கள், ஒலி, ஒளி துணைக் கருவிகள் போன்ற வற்றைத் தயார் செய்யும். ஏற்படுத்தக் கருதியுள்ள இந்நிறுவனத் திற்கான இடம் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கான இறுதி அனுமதி மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

7 ஆம் திட்டக் காலத்தில். தமிழ்நாடு மாநிலத்தில், மகளிருக்கான வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வட்டார நிலையம் ஒன்றை (Regional Vocational Training Institute for Women) ஏற்படுத்தவேண்டுமென்று, இவ்வரசு மத்திய அரசைக் கேட்டுள்ளது.



அத்தியாயம் 3.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.

தமிழக அரசு நிறுவனமான அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக, 1978 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று நிறுவப்பட்டது.

இந் நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 ரூ. 50 இலட்சமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு:—

(1) பயிற்சி பெற்ற, ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாங்கித் தருதல்;

(2) அயல் நாடுகளில் பணியாற்றும் பணியாளர்கள் அனுப்பும் வருவாயைத் தக்கவாறு முதலீடு செய்தல்;

(3) இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் கூட்டுத் தொழில் நிறுவனங்களை நிறுவுதல்;

(4) இந்தியப் பொருள்களின் ஏற்றுமதியை மேம் படுத்துதல்.

தற்போது, பணியாளர்களுக்கு, அயல்நாடுகளில் வேலை வாங்கித்தரும் பணியை இந்நிறுவனம் தீவிரமாகக் கவனித்து வருகிறது. அயல் நாடுகளில் வேலை பெற விரும்பும் பணியாளர் களை இந்நிறுவனம் பதிவு செய்து கொள்கிறது. 31-12-1983 ஆம் நாளன்றுள்ளபடி, இந்நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்களின் எண்ணிக்கை 18,069 பேர் ஆகும். இந் நிறுவனம் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், ஈராக், லிபியா, தெற்கு ஏமன் ஆகிய நாடுகளுக்கு இதுவரையில் 926 பேரை அனுப்பி யுள்ளது. அவர்கள் மூலமாக இந்தியாவிற்கு அந்நியச் செலாவணி வகையில் ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1.75 கோடி கிடைப்பதாக மதிப்பிடப்படுகிறது.

[1984 மார்ச் 16

அத்தியாயம் 4.

கோரிக்கை 57—பல்வகை மூலதனச் செலவு.

495. ஏ. ஏனைய சமூக சமுதாய நலப்பணிகள் ஏ.பி. வேலை வாய்ப்பு.

கைவினைஞர் பயிற்சித் திட்டத்தை செயற்படுத்த ரூ. 7.43 இலட்சம் 1984-85 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப் பட்டுள்ளது. இது பகுதி 1 திட்டத்தின் மூலதனச் செலவாகும். இத்தலைப்பின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட இருக்கும் சில துணைத் திட்டங்கள் வருமாறு:—

4.1. தொழில் பயிற்சி நிலையங்களில் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்:

இம்மாநிலத்திலுள்ள 25 தொழில் பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களில் தெரிந்தெடுக்கப்பட்ட பணியாளர்களுக்கு நிலையான குடியிருப்புகள் உள்ளன. 1984-85 வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 பணியாளர்களின் குடியிருப்புகளின் பராமரிப்புக்காக அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4.2 தொழில் பயிற்சி நிலையங்களில் மாணவர் விடுதிக் கட்டிடத்தைக் கட்டுதல்:

இம்மாநிலத்திலுள்ள 24 தொழில் பயிற்சி நிலையங்களில் நிலையான மாணவர் விடுதிக் கட்டிடங்கள் உள்ளன. ஈரோடு தொழில் பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதி கட்டும் பணி 1982-83-ல் தொடங்கப்பட்டுள்ளது. 1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.73 இலட்சம் ஈரோடு தொழில் பயிற்சி நிலையத்தில் மாணவர் விடுதிக்கான சில்லரைப் பணிக் காக ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4.3. அரக்கோணத்திலும், கடலூரிலும் (மகளிர்) தொழில் பயிற்சி நிலையங்களுக்கு இயந்திரங்கள், கருவிகள் மற்றும் கட்டிடங்களுக்கு செய்தல்:

1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,000 அரக்கோணம் மற்றும் கடலூர் (மகளிர்) தொழில் பயிற்சி நிலையங்களின் கட்டிடப் பணிக்காக அடையாள நிதியாகவும் ரூ. 1.50 இலட்சம் இயந்திரங்கள், கருவிகள் வாங்குவதற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.



1984 மார்ச் 16]

4.4. தொழில்களைப் பல்திறப்படுத்துதல்

கிண்டி, செங்கல்பட்டு, திருச்சி மற்றும் புதுக்கோட்டை ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் தொழில்களைப் பல் திறப்படுத்தும் திட்டம் 1981, 1982-இல் அமுல் செய்யப்பட்டது. 1984–85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 0.23 இலட்ச மீதமுள்ள இயந்திரங்கள், கருவிகள் வாங்க ஒதுக்கப் பட்டுள்ளது.

4.5. சாதனங்கள் வாங்குதல்:

பல்வேறு தொழில்களுக்காக, மைய அரசு வரையறுத்த கருவிகள், சாதனங்கள் குறித்த தரப்பட்டியலைத் திருத்தி யமைத்ததனால் கம்மியர் (இயந்திர வேலையாள்) முதலிய தொழில் பிரிவுகளுக்கு கூடுதலான இயந்திரங்களும் சாதனங் களும் வாங்க வேண்டியுள்ளது. இதற்காக 1984-85 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.6. தொழில் பயிற்சி நிலையங்களின் வளர்ச்சி:

1983-84 ஆம் ஆண்டு ஒசூர், திண்டுக்கல், மேட்டூர் அணை விருதுநகர் ஆகிய தொழில் பயிற்சி நிலையங்களில் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள கருவிகள் மற்றும் அச்சு வார்த்தல் ஆகிய தொழிற் பிரிவுகளுக்கு கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கவும், மேனிலைத் தொட்டி கட்டவும், வடசென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலுள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கவும் நிதி செலவிடப்பட்டுள்ளது.

1984–85 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.92 இலட்சம் மீதமுள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள், தொழில் பயிற்சி நிலையங்களில் மூன்றாவது முறை பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிலத்திற்கும், கட்டிடத்திற்கும் ரூ. 2000 ஒதுக்கப்பட்டுள்ளது. (இதில் அனுமதிக்கப்பட வேண்டிய அடையாள நிதி ஒதுக்கீடு ரூ. 1,000/– சாட்டியது ரூ. 1,000.)

4.7. கம்மியர் தொழில் பொது மின்னணுவியல் பயிற்சி:

அடையாறு பயிற்சிப் பிரிவுக்கு கருவிகள், சாதனங்கள் வாங்குவதற்காக ரூ. 10,000/- 1984–85 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

4.8. தற்போதுள்ள தொழில் பயிற்சிநிலையங்களில் நவீன வசதிகள் செய்து கொடுத்தல்

1983-84 ஆம் ஆண்டு வேலூர் தொழில் பயிற்சி நிலையத்தில் தோல் பதனிடும் தொழில்களுக்காக கட்டிட வேலை மேற் கொள்ளப்பட்டது.

1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 0.78 இலட்சம், கோயம்புத்தூரிலுள்ள வாழ்க்கைத் தொழில் மேற்பயிற்சித் திட்டத்திற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1984-85 ஆம் ஆண்டு அம்பத்தூர், கோயம்புத்தூர் மற்றும் 1983-84-ல் புதியதாக தொடங்கப்பட்ட மதுரையிலுள்ள வாழ்க்கைத் தொழில் மேற்பயிற்சித் திட்டத்திற்கான இயந்திரங்கள், கருவிகள் வாங்க ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

4.9. திரு. மூலராமவர்மா அரசு நெசவு நிலையம், நாகர்கோவில்:

இந்நிலையத்திற்கு வேண்டிய இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க ரூ. 2,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இதில் அனுமதிக்கப்படவேண்டிய அடையாள நிதி ஒதுக்கீடு ரூ. 1000 சாட்டியது ரூ. 1,000)

4.10. அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்திற்கு மூலதனப் பங்கு உதவி:

1984-85 ஆம் நிதி ஆண்டில் அடையாள நிதி ஒதுக்கீடு ரூ.1,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



## இணைப்பு-1.

தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஆற்றிய சாதனைகளின் விவரங்கள்:—

1. வேலைவாய்ப்புகள்:

| விபரங்கள். | 1-1-1982 லிருந்து 31-12-82 வரையிலான காலத்தில். | 1-1-1983 லிருந்து 31-12-83 வரையிலான காலத்தில் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 தமிழ் நாட்டிலுள்ள வேலை வாய்ப்பகங்களால் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை .. | 5,50,720 | 5,25,767 |
| 2 வேலைக்கு அமர்த்தப் பட்டவர்களின் எண்ணிக்கை .. | 72,578 | 75,686 |
| 3 அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை .. | 99,292 | 99,883 |
| 4 வேலை வாய்ப்பு அலுவலகங்களை உபயோகித்த வேலை அளிப்போர்களின் எண்ணிக்கை | 24,767 | 23,762 |
| 5 டிசம்பர் திங்கள் 31-வது நாளின் நிலவரப்படி வேலை வாய்ப்பகப் பதிவேட்டிலுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. | 14,15,918 | 15,36,391 |

2. தொழில் மற்றும் வேலை வாய்ப்பு, அலுவலகம் சென்னை.

| விபரங்கள். (1) | 1-1-1982 முதல் 31-12-82 வரை. (2) | 1-1-1983 முதல் 31-12-82 வரை. (3) |
|---|---|---|
| பதிவு செய்தவர்கள் .. | 11,075 | 18,033 |
| வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் .. .. | 3,666 | 3,205 |
| 31 டிசம்பர் 1983 முடிய செல்லுபடிப் பதி வேட்டில் உள்ள வர்கள் .. | 24,907 | 31,555 |

3 உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகம்.

| விபரங்கள். | 1-1-1982 முதல் 31-12-1982 வரை. | | | |
|---|---|---|---|---|
| | பார்வை யற்றோர் | காது கேளா தோர் மற்றும் ஊமை. | கை, கால். ஊன முற்றோர். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| பதிவு செய்தவர்கள் .. | 348 | 294 | 4,308 | 4,950 |
| வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் | 55 | 135 | 2,077 | 2,267 |
| செல்லுபடி பதி வேட்டில் உள்ளவர்கள் | 1,490 | 1,203 | 14,948 | 17,641 |





3. உடல் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலை வாய்ப்பு அலுவலகம்— தொடர்ச்சி.

| விபரங்கள். | 1-1-1982 முதல் 31-12-1983 வரை. | | | |
|---|---|---|---|---|
| | பார்வை யற்றோர். | காது கேளா தோர் மற்றும் ஊமை. | கை, கால் ஊன முற்றோர். | மொத்தம். |
| | (6) | (7) | (8) | (9) |
| பதிவு செய்தவர்கள் | 239 | 246 | 4,429 | 4,914 |
| வேலையில் அமர்த்தப் பட்டவர்கள் .. | 69 | 95 | 2,077 | 2,241 |
| செல்லுபடி பதிவேட்டில் உள்ளவர்கள். | 1,480 | 1,077 | 16,250 | 18,807 |

[1984 மார்ச் 16

இணைப்பு

1959 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பகங்கள் (வேலைக் காலி இடங்களை கட்டாயமாக அறிவித்தல்) சட்டம்—அமுலாக்கப்பட்ட விபரங்கள்.

| காலம். | அறிவிக்கப்பட்ட காலி இடங்கள் | நிரப்பப்பட்ட காலி இடங்கள். |
|---|---|---|
| 1. 1-1-1982 முதல் 31-12-1982 வரை .. .. .. | 88,800 | 64,681 |
| 2. 1-1-1983 முதல் 30-9-1983 வரை. .. .. .. | 60,277 | 52,381 |



1984 மார்ச் 16]

இணைப்பு 3.

வேலையற்றோர் உதவித் திட்டம்:

31—12—1983 அன்று நிலவரப்படி பயனடைந்தவர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) | 1-7-1980 முதல் 31-12-1983 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. .. .. | 49,555 |
| (2) | பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. ... .. .. | 29,993 |
| (3) | வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. | 20,648 |
| (4) | டிசம்பர் 1983 வரை பயனடைந்த தகுதி வாய்ந்தவர்களென அடையாளப் படுத்தப்பட்ட பார்வையிழந்தவர்களின் எண்ணிக்கை .. .. .. | 335 |
| (5) | பரிசீலனை செய்து ஒப்பளிப்பு அளிப்பதற்காக வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்பட்ட பார்வையற்றோர்களின் பூர்த்தியான விண்ணப்பங்களின் எண்ணிக்கை .. | 335 |
| (6) | வட்டாட்சியரால் அனுமதி அளிக்கப்பட்ட பார்வையற்றோர் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை .. .. .. | 82 |

1980—81, 1981—82, 1982—83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான செலவு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1980—81 .. .. | 22.04 |
| 1981—82 .. .. | 75.29 |
| 1982—83 .. .. | 81.58 |
| 1983—84 .. .. (டிசம்பர் 1983 வரை) | 39.59 |

3. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 347.04 இலட்சம் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த கீழ்க்கண்ட 14 நகரங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகளால் சமபங்காக வழங்கப்பட்டன:

| வ. எண். | நகரின் பெயர். | வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|
| 1 | கோபிச்செட்டிபாளையம் | 35.50 |
| 2 | மன்னார்குடி | 36.50 |
| 3 | ஓசூர் | 25.00 |
| 4 | உடுமலைப்பேட்டை | 20.00 |
| 5 | உதகமண்டலம் | 8.00 |
| 6 | தர்மபுரி | 40.00 |
| 7 | மேட்டுப்பாளையம் | 30.00 |
| 8 | நாகப்பட்டினம் | 12.00 |
| 9 | சிவகங்கை | 15.00 |
| 10 | தேனி அல்லிநகரம் | 30.00 |
| 11 | இராணிப்பேட்டை வளாகம் | 32.00 |
| 12 | தாராபுரம் | 20.00 |
| 13 | திருவண்ணாமலை | 26.54 |
| 14 | பொள்ளாச்சி | 16.50 |

4. இதுதவிர கரூர், ஆத்தூர், பழனி, கோவில்பட்டி, உடுமலைப்பேட்டை, புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய நகரங்களுக்கு கூடுதல் கடன் வழங்கக் கோரும் பரிந்துரைகள் மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. 8 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் 179 ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டங்களைச் செயலாக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் ரூ. 12.09 கோடி வழங்கியுள்ளன. இவ்வினங்களுக்காக 1984-85 ஆம் ஆண்டு ரூ 360 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. மாநில நகர்-ஊரமைப்பு வளர்ச்சி நிதி மூலம் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வருமானம் தரும் ஆக்கப்பணிகளை மேற்கொள்ள மாநில அரசு தனது உதவிகளை தொடர்ந்து அளிக்கும் வகையில் 1983-84 ஆம் ஆண்டில் 22 நகராட்சிகளுக்கு ரூ. 9.50 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. 1984-85-ல் இவ்வகையில் ரூ. 80.00 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி போன்ற மண்டல வளர்ச்சி முனைகளை அபிவிருத்தி செய்து அதன் மூலம் தேவையான வசதிகளை அளிக்க வேண்டி, ரூ. 355.55 கோடி மதிப்பீடுள்ள தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்



தயாரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதியுதவியைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளமைய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பு மத்திய அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. மேம்பாட்டு மனைத்திட்டம், சாலைகள், குடிசைப்பகுதி முன்னேற்றம் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் போன்ற திட்டங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் உள்ளதுபோல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் அடங்கும்.

**முழுமைத் திட்டங்கள்:**

7. மகாராட்டிரத்திற்கு அடுத்து, தமிழ்நாட்டில் தான் மிக அதிகமான நகரங்கள் உள்ளன. எனவே நகர்ப்புறங்களின் சீரான வளர்ச்சிக்கு ஏதுவாக, நகர்ப்புற பகுதியிலுள்ள நிலங்களின் பயன்படுத்தும் முறைகளை நிர்ணயிப்பது அவசியத்தேவையாகின்றது. எனவே நிலப்பயன் முறைகளை நிர்ணயிக்கும் முழுமைத் திட்டங்களை உருவாக்கிடும் பணிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 5 நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. மற்றைய நகராட்சிகளுக்கும் முழுமைத் திட்டங்களை தயாரிக்கும் பணி, 1985 ஆம் ஆண்டின் மத்தியில் நிறைவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒன்று மற்றும் இரண்டு:**

8. சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் I நிறைவுறும் நிலையில் உள்ளது. 73.90 கோடி ரூபாய் செலவில் சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் II 1981 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9. குடிசைப்பகுதி மேம்பாடு.—குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான தெரு விளக்குகள் மற்றும் சாலைகள் அமைத்தல், குடிநீர் வழங்கல், பொது கழிவறை அமைத்தல் மற்றும் கழிவு நீர் அகற்றுதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டு 46,893 குடும்பங்கள் கொண்ட 140 குடிசைப் பகுதிகளில் மேம்படுத்தும் பணி முடிக்கப்பட்டு இருக்கிறது. 6,539 குடும்பங்கள் கொண்ட 35 குடிசைப் பகுதிகளில் ரூ. 1,041 லட்சம் செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. குடிசைப் பகுதிகளில் குடியிருப்போருக்கு அவரவர் குடிசை மனைகளை அவர்களுக்கு சொந்தமாக்கித் தருவது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். இதுவரை 19,850 குடும்பங்களுக்கு மனை உரிமை பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. குடிசைவாழ் மக்கள் தங்கள் வீடுகளை மேம்படுத்திக்கொள்வதற்காக ரூ. 312 லட்சம் செலவில் 11,799 குடும்பங்களுக்கு வீட்டு மேம்பாட்டுக்கடன் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ் குடிசைவாழ் மக்களை வெள்ளம் மற்றும் கழிவு நீர் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க மாம்பலம், நந்தனம், விருகம்பாக்கம், சாலிகிராமம் மற்றும் அரும்பாக்கம் போன்ற இடங்களில் கழிவுநீர் வடிகால்களும் மற்றும் கழிவுநீர் உபவடிகால்களும் கட்டப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 16

கூவம்நதி சீர்திருத்தத் திட்டம்:

10. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் II-ன் கீழ் மொரசப்பேர் கிழக்கு பகுதியில் 74 13 ஹெக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 5,086 குடியிருப்பு மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் 4 4 வீட்டு மனைகள் பொருளாதார நலிவுற்ற பிரிவினருக்கும், குறைந்த வருவாய் பிரிவினருக்கும் ஆகும். வேளம் மொகப்பேர் மேற்கு மற்றும் மதுரவாயல் பகுதிகளில் 142 ஹெக்டேர் நிலப்பரப்பை ஆர்ஜிதம் செய்து ...மனைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மற்றும் பள்ளிக்கூடங்கள், மருத்துவ மையங்கள், அங்காடிகள், மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் போன்ற வசதிகளும் அமைக்கப்படும். 1984-85-க்கான வரவு செலவு திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு ரூ. 400 இலட்சம் ஆகும்.

திடக்கழிவுப் பொருள்களை செம்மையாகக் கையாளுதல்:

11. கழிவுப் பொருள்களை சேகரித்தல் மற்றும் அழித்தல் ஆகிய பணிகளுக்காக ரூ. 161 இலட்சம் செலவில் தேவையான கருவிகளையும், வாகனங்களையும் வாங்குதல் மற்றும் ஒரு மாற்று நிலையம் அமைத்தல், வாகனங்களின் பணிமனைகள் அமைத்தல் போன்றவற்றிற்கென சென்னை மாநகராட்சிக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது. கருவிகள் வாங்குவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

12. சென்னை நகருக்காக ரூ. 135 கோடி மதிப்புள்ள விரிவான சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் III வகுக்கப்பட்டு உலக வங்கி முன் ஒப்புதலுக்கு வைப்பதற்காக, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் செயற்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்:—

கோயம்பேடு மொத்த வியாபார மையம் —

13. சென்னை நகரின் மையப்பகுதிகளில் விரைவாகப் பெருகி வரும்மக்கட் தொகையின் காரணமாக நகரின் நெருக்கடி மிகுந்த இடங்களில் மக்கள் நெரிசல், மற்றும் வணிகம் மற்றும் சாலை நெருக்கடியினை குறைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நகரின் மையப்பகுதிகளில் போக்குவரத்து நெருக்கடியினை குறைப்பதற்காக, மொத்த வியாபாரத்தலத்தினை இடம் மாற்றி அமைக்க, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

14. தற்போது உள்ள கொத்தவால் அங்காடியினை கோயம்பேட்டிற்கு மாற்றுவதன் மூலம் வியாபார மையப்பகுதியான, ஜார்ஜ் டவுனின் நெருக்கடியினைக் குறைக்கும் குறிக்கோளானது நிறைவேற்றப்படுகிறது. இதுவரையிலும் 153 ஏக்கர் நிலமானது ஆர்ஜிதம் செய்யப்பட்டு தொடக்கப்பணிகளான, மண், நிலத்தடி



1984 மார்ச் 16]

நீர், ஆகியவை ஆராய்வு செய்யப்பட்டுள்ளது. அழுகும் பொருள் அங்காடிக்காக சிறந்த சாலைகள் அமைப்பதற்கான வேலைகள் ஏற்கெனவே துவக்கப்பட்டு, தாழ்ந்த நிலப்பரப்பு களை மேம்படுத்துவதற்குரிய வேலைகள் எடுத்துக்கொள்ளப பட்டுள்ளன; சுமார் 3,200 கடைகள் அழுகும் பொருள், தானியம், மற்றும் துணி கடைகளுக்காக ஒதுக்கப்படும். அழுகும் பொருட்கள் அங்காடிக்கான கடைகள் கட்டுவதற்காக ஹட்கோ போன்ற நிறுவனத்திடமிருந்து நிதி உதவி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1984-85ல் ரூ. 100 இலட்சம் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்குண்டான செலவினங்களுக்காக வியாபாரிகளிடமிருந்து முன்பணம் பெறப்பட்டு வருகிறது.

வெளியூர்களுக்கான பேருந்து நிலையங்கள் மற்றும் சுமை வாகன நிலையங்கள்:

15. கோயம்பேடு—மொத்த நிலப்பரப்பான 67 ஏக்கரில் சுமார் 40 ஏக்கர் நிலங்கள் பேருந்து மற்றும் சுமை வண்டி நிலையங்களுக்காக இதுவரை எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட வரைபடங்கள் மற்றும் வளர்ச்சிப்பணிகள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

16. மாதவரம்.—97 ஏக்கர் நிலப்பரப்பு நில ஆர்ஜிதம் செய்வதற்கான வேலை முடிவுறும் தருவாயிலுள்ளது. பேருந்து நிலையங்களுக்கான வரைபடங்கள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் தயாரிக்கப்படுகிறது.

17. ஆலந்தூர்.—விமான நிலைய அதிகாரிகளின் ஆட்சேபணைகளின் காரணமாக ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக வேறு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இதற்கு பாதுகாப்புத்துறையின் அனுமதி பெற துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

18. இத்திட்டத்திற்காக 1984-85-ல் ரூ. 50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இரும்பு எஃகு மற்றும் இரும்புத் தளவாட அங்காடி

19. தற்போதுள்ள இரும்புதளவாட அங்காடியினை சாத்தாங்காட்டிற்கு மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டு சாத்தாங்காடு மற்றும் மணலி கிராமங்களில் 158 ஏக்கர் நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. SAIL, TISCO, IISCO போன்ற முக்கிய நிறுவனங்கள், மற்றும் சிறு தொழில் வியாபாரிகளின் சங்கத்துடனும் மனை பிரிவு வரைபடம் மற்றும் மதிப்பீட்டுத் தொகை ஆகியவற்றை முடிவு செய்ய விரிவான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன.

1984-85ல் இத்திட்டத்திற்காக 25 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20. மணலி உபநகரம்—1,430 ஏக்கர் பரப்பினை இரண்டு கட்டங்களில் அபிவிருத்தி செய்து சுமார் 5,000 பேர்களுக்கு குறிப்பாகத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கு வீட்டு வசதி செய்துதர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதுவரை 489.34 ஏக்கர் பரப்பு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மீதி 941 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வது நடவடிக்கையில் உள்ளது. தமிழக அரசின் கடன் உதவியுடன் நில அபிவிருத்தி செய்யப்பட்டு ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவி மூலம் வீடுகள் கட்டும் பணியும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை பல்வேறு வருமானம் பெறுவோருக்கான 100 வீட்டு மனைகளும் குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கான 1,228 வீடுகளும் தவணை முறைத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது தவிர சமுதாயத் தேவைகளுக்கான பள்ளிகள், அங்காடிகள் மத மற்றும் கலாச்சார பகுதிகள், மருத்துவ மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைக்கும் பணி ஆகியவையும் படிப்படியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

21. மேலும் 5,500 குடும்பங்கள் வசிக்கும் அளவில் 130 ஏக்கர் பரப்பினை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 1984–85 ஆம் ஆண்டில் ரூ.135 இலட்சம் செலவு செய்ய, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் திட்டம் இட்டுள்ளது.

22. மறைமலை நகர்.—இந்தப் புதுநகர் தொழில் பகுதியோடு கூடிய 10 தனி குடியிருப்பு பகுதிகள் கொண்டதாகவும் மற்றும் மைய பகுதி, தேவையான திறந்தவெளிகள், பொழுதுபோக்குக்கான இடங்கள் போன்றவை நிறைந்த சுய தேவைகள் கொண்ட நகராகவும் அமையும். இதற்காக சுமார் 3,300 ஏக்கர் நிலப்பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் 1,000 ஏக்கர் பரப்பு ஆர்ஜிதம் செய்யப்பட்டு மிகுதி நிலம் பல்வேறு நில ஆர்ஜித நிலைகளில் உள்ளன. தற்போது 3 குடியிருப்பு பகுதிகள் மேம்பாட்டுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை பல்வேறு வருமான பிரிவினருக்காக 463 காலி குடியிருப்பு மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்காக 1,186 வீடுகள் இதுவரை கட்டப்பட்டு 892 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதி 294 வீடுகள் கூடிய சீக்கிரம் ஒதுக்கீடு செய்யப்படவிருக்கிறது. சமுதாயத் தேவைகளான, பள்ளிகள், அங்காடிகள், போக்குவரத்து மதம் மற்றும் கலாசார பகுதிகள் தவிர சாலைகள், குடிநீர் வசதிகள், கழிவு நீர் வசதிகள், மின்சார வசதிகள் சூழ்நிலை அழகுபடுத்தல் போன்ற அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

23. 480 ஏக்கர் நிலப்பரப்பு தொழிற்சாலைப் பகுதியாக மேம்படுத்தப்பட்டு பல்வேறு அளவுகள் கொண்ட 85 மனைகள் தொழில் நடத்துவோர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில்பகுதி மனைகளுக்கு தேவை அதிகமாக இருப்பதால் 85 ஏக்கர் நிலப்பரப்பினை தொழிற் பகுதியாக மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு மேம்படுத்து வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1984-85-ல் இத்திட்டத்திற்காக ரூ. 125 இலட்சம் செலவு செய்ய சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிட்டுள்ளது.



**நிலபயன்பாட்டிற்கான ஒழுங்கு முறை விதிகள்.**

24. நாட்டில் வெகு வேகமாக வளர்ந்துவரும் பெருநகரங்களில் சென்னை மாநகரும் ஒன்றாக இருப்பதால் வேகமாக வளர்ந்து வரும் மற்ற பெருநகரங்களில் உள்ள நிலைமையைப் போன்று மிகக் குறைந்த அளவில் உள்ள நிலப்பரப்பினை இம்மாநகரின் குடியிருப்பு, வியாபாரம், தொழில் அபிவிருத்தி இவைகளின் தேவையையும் நிலத்தடி நீரின் தன்மைக்கு ஊறுவிளைவிக்கக் கூடாது என்பதனையும் கருத்தில் கொண்டு உரிய முறையில் பயன் படுத்தவேண்டிய அவசியம் உள்ளது. சுருங்கச் சொன்னால் சுகாதாரக் கேடுகளையும் கட்டுக்கடங்காத நெருக்கமிக்க சூழ்நிலையையும் உருவாக்கக்கூடிய வளர்ச்சியைத் தடுக்க வேண்டியது அவசியமாகிறது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும எல்லைக்குள் அதிலும் குறிப்பாக சென்னை மாநகரின் புற எல்லையில் குடியிருப்பு வியாபாரம் மற்றும் பல உபயோகங்களுக் கென நிலததேவை வெகு அதிகமாக உள்ளதால் இப்பகுதியில் வரைமுறையற்ற அனுமதி பெறாத மேம்பாடுகள் அடிக்கடி செய் யப்பட்டு வருகின்றன. திட்ட அனுமதி பெறாத வீட்டுமனைத் திட்ட அமைப்புகளில் (Layouts) உள்ள வீட்டு மனைகளைப் பொது மக்கள் வாங்காமல் இருக்கும்பொருட்டு அவர்கள் திட்டவரை முறைகளைப் பற்றித்தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விளம்பரங்கள் செய்து வருகிறது. அனுமதி பெறாத மேம்பாடுகளைத் தடுக்கும் பொருட்டும் திட்டமிட்ட கட்டுப்பாடான மேம்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டும் வேறுபல நடைமுறைத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன.

2770

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984 மார்ச் 19, திங்கட்கிழமை.

பங்குனி 6, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''அறன்ஈனு இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்''

சேர்க்கும் திறம் அறிந்து தீமை ஒன்றும் இல்லாமல்சேர்க்கப் பட்டு வந்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் கொடுக்கும் இன்பத்தையும் கொடுக்கும்.

## 1. தகவல் கோரல்.

(அ) மேலவை (பட்டதாரி தொகுதி) தேர்தலில் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் தவறுகள்.

திரு. பொ. விஜயராகவன்: நேற்றைக்கு நடைபெற்ற சட்ட மன்ற மேலவை உறுப்பினர் (பட்டதாரி தொகுதி) தேர்தலில் ஏராளமான தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பது மட்டு மல்ல. பல்வேறு ஊழல்கள்....(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தே தலை நடத்துவது நான் அல்ல. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால். ஸ்பீக்கர் சம்பந்தமாக இருந்தால் சொல்லுங்கள். தேர்தல் பற்றிய ஒரு டிமாண்டு வருகிறது. (குறுக்கீடு)

Thiru R. UMANATH: We may be permitted to have a discuission. Unfair methods have been followed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஃபேரா, அன்ஃபேரா (fair or unfair) என்பதைப்பற்றி நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்?

திரு. ரா. உமாநாத்: மரத்தடியில் வோட்டர்கள் இருப்பதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இது பப்ளிக் இம்பார்ட்டன்ஸ் உள்ள பிரச்சினை (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறுகள் நடந்திருக்கலாம். நான் ஒத்துக்கொள்கிறேன். நீங்கள் முறையாகக் கொண்டு வாருங்கள். பட்ஜெட் விவாதத்தில் இதையெல்லாம் வைத்தால் சரியாக வராது.

திரு. ரா. உமாநாத்: ஹோல் பிராசஸ் பற்றி விவாதிக்க வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று நடந்த தேர்தல் முறையைப் பற்றி நாம் எப்படி முடிவு எடுக்க முடியும்? எலெக்ஷன் பெடிஷன் மீதுதான் இதையெல்லாம் பற்றி டிஸ்கஸ் செய்வார்கள். (குறுக்கீடு)

Thiru R. UMANATH: A discussion shall be permitted on this important issue. Unfair methods have been adopted. I am not saying about the Candidates problem.

(குறுக்கீடு) அதைப்பற்றி பொதுவாக ஜனங்கள் மத்தியிலே தவறான கருத்து உருவாகியிருக்கலாம். நான் இந்த டிஸ்கஷன் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 11 மணிக்கு மேல் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டுகிறேன். அதிலே வேண்டுமானா பேசி முடிவு எடுக்கலாம். நோட்டீஸ் கொடுங்கள்.

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியில் தண்டலம் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஒரு பெண்ணிடம் தவறாக நடந்துகொண்ட வன்முறையாளர்களை ..(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி 54 விதியின் கீழ் ஏற்கனவே கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அது வரும்போது பேசிக்கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி: முதலில் 54-ல் கொடுத்திருக்கிறார்கள் அதுதிரும்பவும் வந்துவிட்டது. (குறுக்கீடு) மறுபடியும் கொடுத்திருக்கிறார்கள்.



திரு. என். ஏ. பூங்காவனம்: நான் திரும்பவும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55-ல் கொடுத்திருக்கிறார்கள். நான் கூப்பிட்டு விதி 54-ன் கீழ் கொடுங்கள் என்று சொன்னேன். விதி 54-ன் கீழ் எடுத்துக்கொள்வதை பற்றி பரிசீலிக்கலாம்.

(இ) ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்—திருவண்ணாமலை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையில் மோதல் ஏற்பட்டு வியாபாரம் நடைபெறாமல் தேங்கிக் கிடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி விதி 54-ன் கீழ் கொடுங்கள். அதை எடுத்துக்கொள்ளலாம்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) (சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இச்சட்ட முன்முடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

3. அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1984. (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

2. அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி).

(இ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

4. வரவு-செலவுத் திட்டம் 1984-85—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண். 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும். ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,40,81,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

**திரு. என். எஸ். வி. சித்தன்**: தலைவர் அவர்களே, To discuss policy நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,40,81,000—ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. சு. பாலன்**: தலைவர் அவர்களே, பழைய தட்டெழுத்து மிஷின்களுக்கு இருமுனை வரிகளில் இருந்து ஒரு முனை வரி விதிக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,40,81,000—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. என். பழனிவேல்**: தலைவர் அவர்களே, தமிழகத்தில் விற்பனையாகும் வெளி மாநில பரிசுச் சீட்டுக்கு விதிக்கப்பட்டுள்ள 20 சதமான விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,40,81,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. தி கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, விவசாய உற்பத்திக்குப் பயன்படுத்தும் இரசாயன உரம், பூச்சி மருந்து ஆகியவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,40,81,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னால் அவையிலே வைக்கப்பட்டுள்ள குறிப்பை ** நான் அவையில் படித்ததாக எடுத்துக்கொண்டு, அதைக் குறிப்பேட்டில் ஏற்றிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பிலே அமைச்சர் அவர்கள் இந்த மானியத்தை இங்கே வைத்திருக்கிறார்கள். இதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட் கிறார்கள்.

மாநிலத்திற்கு சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறார்கள் ஆனால் இன்றைக்கு எக்சைஸ், புரகிபிஷன் என்று சொல்லக் கூடியது, இத்தோடு இணைந்த ஒரு மானியம். ஆனால் அது விவாதிக்கப்படவில்லை. அந்த இலாக்காவை நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டார்கள். அது ஒரு பொன் விளைகின்ற பூமி, அந்த இலாக்கா. அந்த இலாக்கா இப்போது பறி போய்விட்டாலும் கூட, அந்த மானியம் விவாதிக்கப் படுமா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் எக்சைஸ் என்று

**638—663-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





வருகிறபோது, சேல்ஸ் டாக்ஸ் என்று வருகிறபோது பாட்டிலிங் காக இருந்தாலும், பிளண்டிங்காக இருந்தாலும், ஐ.எம்.எப்.எல். ஆக இருந்தாலும், இத்தோடு தொடர்புடையது. எனவே அது பற்றி, விவாதிப்பதற்காக உரிய மானியம் இங்கே வைக்கப் படாதது உண்மையிலே வருத்தம் அளிக்கக்கூடிய ஒன்றாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மாநிலத் திலே எண்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் என்று ஒரு பிரிவு வருகிறது. திரைப்படத்திற்கு வரிவிலக்கு வழங்கக்கூடிய ஒரு பிரிவு திரைப்படத்திற்கு வரிவிலக்கு வழங்கக்கூடிய வகையில் ஒரு கமிட்டி இருக்கிறது. அதற்கு யார் தலைவர் என்று கேட்டால் இந்த அரசாங்கத்தினுடைய பெருமைக்குரிய நீதிபதி ராம்பிரசாத் ராவ் அவர்கள். ராம்பிரசாத் ராவ் அவர்கள் அந்தக் கமிட்டியினுடைய தலைவர். அவர் வழங்குகிற தீர்ப்பு ரொம்பவும் நியாயமான தீர்ப்பு. அதற்குத் தலை வணங்க வேண்டும். அவர் என்ன படத்திற்கு விதி விலக்கு அளித்திருக் கிறார் என்று தெரியுமா? அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர், அந்தக் கட்சியின் பேச்சாளர், பெயர் திருவை. அண்ணாமலை, அவருடைய படம், கடவுளின் தீர்ப்பு. அந்தப் படத்திற்கு விதிவிலக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் எத்தனையோ படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ராம்பிரசாத் ராவ் அவர்கள் தீர்ப்புக்கு, முடிவுக்குத் தலைவணங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்......

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். இதிலே யார் தலைவர் என்பது முக்கியம் அல்ல. எந்தப் படத்திற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம். விதிவிலக்கு அளிக்கப்பட்ட படத்தையும், விதிவிலக்கு அளிக்கப்பட மறுத்த படத்தையும் ஒப்பிட்டு நோக்கி, சமுதாயத் திற்கு எந்தப் படம் நல்ல கருத்துக்களைச் சொல்கிறது, சமுதாயத்தினுடைய முன்னேற்றத்தைச் சொல்கிறது என்று பார்த்து, இப்படிப்பட்ட படங்களுக்கு விதிவிலக்கு அளிக்காமல் சமுதாயத்திற்குக் கேடு விளைவிக்கின்ற படத்திற்கு விதிவிலக்கு அளித்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அதை மாற்றிக் கொள் வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, ஒரு படத்திற்கு விதிவிலக்கு வழங்கு கின்ற அதிகாரம் அந்தக் கமிட்டிக்கு உண்டு. ராம்பிரசாத்ராவ் அந்தக் கமிட்டியினுடைய தலைவர், அது நியாயம் என்ற கருத்திலே கொடுத்திருக்கலாம். ஆனால்....(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கமிட்டி போடப்பட்டிருப்பது, எல்லாவற்றையுமே அசோ அல்லது அமைச்சர்களோ அல்லது செயலாளரோ போய் பார்க்க முடியாது என்பதற்காக அரசுக்கும், அமைச்சர்களுக்கும் உதவிகரமாக இருப்பதற்காக, அவைகளைப் பார்த்து சிபாரிசு செய்வதோ அல்லது தள்ளிவிடவே , அந்த கமிட்டி செய்ய முடியும். சிபாரிசு செய்தால், அரசு போட்டிருக்கிற உத்தரவின்படி, ஜி.ஓ.வின்படி, அதற்கு ஏற்றவாறு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்து அனுப்புவார்கள். அதற்குப் பிறகுதான் அதை ஏற்றுக்கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் அதற்கு அரசுக்குத் தான் அதிகாரம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன விவரங்களை மறுக்கவில்லை. ஏன் அப்படி நடைபெறுகிறது என்பதற்கான காரணங்களைச் சொல்கிறார். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே இருக்கிற முக்கியமான பிரச்சினை, நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய மாநில அரசுக்கு வருகின்ற வருவாய் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. 1937 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, மதுவிலக்கை ரத்து செய்ததினால், ஏற்பட்ட எக்சைஸ் கலால் வரி இழப்பை ஈடு செய்வதற்காக, இந்த சேல்ஸ் டாக்ஸை அறிமுகப்படுத்தினார்கள்.

அதை கற்பகத் தரு என்று பேசுவார்கள், காமதேனு என்று பேசுவார்கள். ஆனால் அதற்கு சேல்ஸ் டாக்ஸ் என்று பெயர் தான். அது இந்த மாநிலத்திற்கு வரி ஈட்டுகின்ற ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

நாம் இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தை கொஞ்சம் புரட்டிப் பார்க்கிறோம் என்று சொன்னால், அதில் மாநில சர்க்கார் என்பது குளோரிபைடு முனிசிபாலிட்டி என்ற வகையில், அலங்கரிக்கப்பட்ட ஒரு நகரியமாக இருக்கிறது என்பதுதான் உண்மை.

விலங்குகளுக்கு வரி போடலாமா? முடிந்தால் தலைகளுக்குக் கூட வரி போடலாமா என்று யோசிக்கக்கூடிய நிலைமை. முகலாய சக்கரவர்த்திகள், பாதுஷாக்கள் ஆண்ட காலத்திலே ஜஸியா என்ற வரி இருந்ததுபோல, என்னென்ன பொருள்களுக்கெல்லாம் வரி போடலாம் என்று யோசிக்கிற நிலைமை மாநில அரசுகளுக்கு ஆனால் அதற்காக தலைக்கு வரி போட முடியுமா? முடியாது. ஏனென்றால் அந்த வகையில் தான் மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு வரி போடுகின்ற உரிமைகளை வழங்கியிருக்கிறது.



இன்றைக்கு வரிபோடும் அதிகாரங்கள் எல்லாம் மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது. எக்சைஸ் டியூட்டி, எக்ஸ்போர்ட் டியூட்டி, கார்ப்பரேட் டியூட்டிஸ், வெல்த் டாக்ஸ், Excise duty in respect of succession Act என்று இந்த அமுதசுரபிகள் எல்லாம், அட்சய பாத்திரங்கள் எல்லாம் மத்திய சர்க்காருடைய கையிலேதான் இருக்கிறது.

1935 ஆம் வருஷம் வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலே உருவாக்கப்பட்ட சட்டத்திலே இருக்கிறபடி, பத்திரிகைகளில் வருகிற விளம்பரங்கள் கொடுப்பதற்காக போடப்படுகின்ற வரி மாகாணங்களிடம் தான் கொடுக்கப்பட்டிருந்தது. அது இன்றைக்கு மத்திய சர்க்காருக்குப் போய்விட்டது. அதேபோல் மாநிலங்களுக்கிடையே நடைபெறுகின்ற வியாபாரம் அதிலே போடப்படுகின்ற வரி, 1935 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையில் மாநில அரசுகளிடம் தான் இருந்தது. அதை தற்போது மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டது.

அதுபோல ஷேர் மார்க்கெட் மீது டாக்ஸேஷன் பவர் மாநில அரசிடம் இருந்தது. இன்றைக்கு அது மத்திய சர்க்காருக்குப் போய்விட்டது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே ஒருமுறை பேசும்போது சொன்னார்கள். 1977-லிருந்து 82 வரையில் 5 ஆண்டுகாலமாக பல்வேறு விதமான வரி விதிப்புகளை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு போயிருக்கிறது. இந்த வரிகளில் கிட்டத்தட்ட 3702 கோடி ரூபாயில், மத்திய சாக்கார், தமிழகத்திற்கு கொடுத்திருப்பது 1165 கோடி ரூபாய் தான். கஸ்டம்ஸ் இன்றைக்கு மத்திய அரசு வசூலிக்கிறார்கள், நமக்கு அதிலே ஷேர் உண்டா என்றால் இல்லை. அதைப் போலவே கார்ப்பரேஷன் டாக்ஸ், கம்பெனிகளிடமிருந்து பெறப்படுகிற வருமானம் 2382 கோடி ரூபாய் வருகிறது, அதிலே தமிழகத்திற்கு ஒரு காசு ஷேர் உண்டா என்றால் கிடையாது.

நம்முடைய அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்த திரு. மேனன் முன்னால நிதியமைச்சர், திரு. சந்தானம், திரு. இராமலிங்கம் செட்டியார், துர்க்காபாய் இவர்கள் டிராப்ட் கான்ஸ்டிடியூஷன் தயாரிக்கிறபோது எக்சைஸ், கஸ்டம்ஸ், கார்ப்பரேஷன் டாக்ஸ் இவைகளிலே எல்லாம் மாநிலங்களுக்கு ஷேர் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அதற்குப் பிறகு திரு. கோபால்சுவாமி அய்யங்கார் இருந்த எக்ஸ்பர்ட் கமிட்டி மூலமாக அவைகள் எல்லாம் மாநிலங்களுக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுத்தப் பட்டு விட்டது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1957—ஆம் ஆண்டுக்கு முன்னாலே துணிக்கு வரி போடுகிற அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்தது. அதைப் போலவே சர்க்கரைக்கு

வரிபோடுகிற அதிகாரம் இருந்தது, புகையிலைக்கு வரிப் போடுகிற அதிகாரம் இருந்தது. ஆனால் 1957-க்குப் பிறகு மத்திய சர்க்கார் அவைகளையெல்லாம் எடுத்துக்கொண்டார்கள். மாநில சர்க்கார் அவைகளுக்கு விற்பனை வரி போடமுடியாத படி எக்சைஸ் டியூட்டி அடிஷனல் எக்சைஸ் டியூட்டி என்று மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்கிறார்கள். அதிலே மாநிலங்களுக்குப் பங்கு தருவதாகச் சொன்னார்கள் ஆனால் எந்தப் பங்கும் தரவில்லை. இன்னொரு பேரபாயமும் இருக்கிறது. மக்களிடமிருந்து அதிகமான வருவாயைப் பெற்றுத் தரக்கூடிய வரிகளையெல்லாம் மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்டு போய்விட்டது. டெல்லியிலே இருக்கிற சர்க்கார் திவாரி குழு என்று ஒரு குழுவை அமைத்து ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. வனஸ்பதி, பெட்ரோலியம், சிமின்ட், மருந்துப் பொருட்கள், காகிதம், காகித அட்டை இவைகள் மீது வரி விதிக்கிற அதிகாரம் மாநிலங்களுக்கு இருந்தது. அதை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்கிற முறையிலே, டெல்லியிலே ஒரு மாநாடு நடைபெற்றது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலந்துக்கொண்டார்கள், எல்லோரும் போனார்கள். அந்த கமிட்டியின் ரிப்போர்ட்டை அந்த மாநாடு பரிசீலித்தது, மாநில அரசு விற்பனை வரி போடக்கூடாது என்றும், இவைகளுக்கு மத்திய அரசு அடிஷனல் எக்சைஸ் டியூட்டி போடுவதாகவும் முடிவு எடுக்கப்பட்டது. அதற்கு முதலமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். காஷ்மீர் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது, ஆந்திரா எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறது. மேற்கு வங்க முதலமைச்சர் திரு. ஜோதிபாசு மாநில சுயாட்சி மீது தொடுக்கிற மற்றொரு யுத்தம் என்று இதை வருணித்து இருக்கிறார்கள். கடைசியாக பைனான்ஸ் மினிஸ்டர் திரு. பிரனாப் முகர்ஜி அவர்கள் தலைமையில் ஒரு குழு போடப்பட்டு இதைச் சிந்திக்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சரும் அதிலே ஒரு உறுப்பினராக இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த வரிகளையெல்லாம் விடுவதாலே மாநிலத்திற்கு 160 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது, தமிழகத்திற்கு தமிழக மக்களுக்கு மிகப் பெரிய இழப்பு ஏற்படுகிற அபாயம் இதிலே இருக்கிறது.

மத்திய சர்க்கார் நம்மீது தொடுத்திருக்கிற, அதிகாரத்தைப் பறிக்கிற காரியத்தை ஒட்டுமொத்தமாக தமிழக மக்களின் சார்பில் எதிர்க்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதிலே எதிர்ப்புத் தெரிவித்தது குறித்து மகிழ்ச்சி. ஆனால் அந்த எதிர்ப்பு சரியாக இருக்க வேண்டும். ஏனென்றால் பல்வேறு பிரச்சினைகளிலே எதிர்ப்பு அளவிலே இருக்கிறோமே தவிர சரியாக இருக்க முடியவில்லை. தமிழகத்திற்குத் தேவையான அரிசி நமக்கு கிடைத்ததா என்றால் இல்லை. முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். இப்போது கிடைக்கிறதா



இல்லை. 20 கிலோ அரிசி கொடுக்கப்படுகிறதா? இல்லை. ஆனாலும் முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருக்க முடிகிறதா? முடியவில்லை. காரணம் என்ன? இன்றைக்கு போராட்ட முறைகள் மாறிவிட்டன. அதைப் போலவே டாக்ஸைப்பற்றி சொல்கிறபோது இந்தப் பிரச்சினை குறித்து இதற்குப் போராடுகின்ற போராட்டம்—மத்திய சர்க்காரோடு எப்படிப் போராடுவது என்பது எனக்குத் தெரியு—எப்படிப் போராடுவது என்பது எனக்குத் தெரியும். என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆடுகிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும், பாடுகிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டுமென்று சொன்னார்கள். டெல்லி மாநாடு மத்திய சர்க்கார் என்ற மாடு கொஞ்சம் கஷ்டமான மாடு, கொஞ்சம் விவரமில்லாமல் இருந்தால் முட்டி விடும். இன்னும் சொல்லப் போனால் கொஞ்சம் இதுவாக இருந்தால் உதைத்து விடும். இந்த மாட்டினுடைய தன்மைகள் இவை. நாங்கள் எல்லாம் எமர்ஜன்ஸி கொடுமைகள் அனுபவித்தவர்கள். ஆகவே நான் சொல்ல விரும்புவது ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தால் பிரச்சினை தீர்ந்துவிடாது. தமிழ் மக்களின் சார்பில் மிகக் கடுமையாக நாம் எதிர்க்க வேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பொது விற்பனை வரிமூலமாக வருமானம் 51822 லட்ச ரூபாய் என்று புள்ளிவிவரம் இதிலே போட்டிருக்கிறார்கள். மற்ற ஆண்டுகளைக் காட்டிலும் அந்த பர்சன்டேஜ் இந்த ஆண்டு குறைவாக இருப்பதாக பாலிசி நோட்டிலேயிருந்து தெரிகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் வசூலிக்க வேண்டியவர்களிடமிருந்து வருமான வரியை இந்தச் சர்க்கார் இன்னும் வசூலிக்கவில்லை. தனியார் ஆலைகளிடமிருந்து வர வேண்டிய பணம் 24 லட்ச ரூபாய். விற்பனை வரிமூலமாக சர்க்கரை ஆலைகளிடம் இருக்கிற அரியர்ஸ் 4 கோடியே 70 லட்சத்து 40 ஆயிரத்து 488 ரூபாய், இவைகள் எல்லாம் சர்க்காருக்கு வரவேண்டிய பாக்கிகள். அதுமட்டுமல்ல, 1972-73 க்கு ஸ்பிக்கிலிருந்து பல கோடி ரூபாய் வரவேண்டும். அது மட்டுமல்ல, பாட்டிலிங், பிளண்டிங் யூனிட்டுகள் பல லட்ச ரூபாய்கள் தரவேண்டும். திருநெல்வேலியிலே ஒரு நிறுவனம் 12 லட்ச ரூபாய் தரவேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் நான் கற்பனை செய்து உதிர்த்த கணக்குகள் அல்ல. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் கொடுத்திருக்கிற புள்ளி விவரத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன். சேல்ஸ் டாக்ஸ் கட்ட வில்லையென்றால் அரியர்ஸ் சம்பந்தப்பட்டவர்களை யெல்லாம் பத்திரிகையில் படம்போடுவோம் என்று சொன்னார்கள். ஏன் அந்தத் தொகையை வசூலிக்க முடியவில்லை. ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. என்ன காரணம்? சேல்ஸ் டாக்ஸ் வருவாய் குறைந்திருப்பதற்கு என்ன காரணம், விவரம் என்பதை அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10.20)

சும்மா இருந்த நேரத்திலேயே திடீர் என்று கைத்தறிப் பட்டுக்கு 5 சதவீதம் வரி போட்டீர்கள். அதற்கு முன்னால் அதற்கு வரி கிடையாது. திடீர் என்று 5 சதவீதம் வரி போட்டீர்கள். திடீர் என்று அந்த 5 சதவீத வரியை ரத்து செய்தீர்கள். இதற்கு பின்னால் இருக்கக் கூடிய மர்மம் என்ன?

இன்னும் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், மல்கோத்ரா பியாரிலால், மல்கோத்ரா, சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு என்ன சொல்லியது, அந்த இரும்பு துண்டு துகள்களிலிருந்து உருவாக்கப்படும் உருளைப்பொருட்களுக்கு வரி விதிக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது. எவ்வளவு ரூபாய் இதன் மூலமாக அரசுக்குக் கிடைக்கிறது. 122 லட்ச ரூபாய் கிடைக்கிறது. எத்தனை மில்கள்? 47 மில்களிலிருந்து நமக்கு இது கிடைக்கிறது. ஆனால், ஏன் நீங்கள் அந்தத் தொகையை வசூல் செய்யவில்லை? ஏற்கனவே இவைகளுக்கு நீங்கள் வரி போடுகிற போது ஹைக்கோர்ட்டுக்குப் போனார்கள். வரி விதிக்கக் கூடாது என்று ஹைக்கோர்ட் சொல்லியது. அடுத்து சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். வரி விதிக்கலாம். என்று சொல்லியது. இடையிலே கேஸ் நடந்தது 6 வருடங்கள் அந்த 6 வருடத் தொகையையும் சேர்த்து வசூலிக்கலாம் என்று சொல்லியாகிவிட்டது. ஏன் நீங்கள் அதற்கு விதிவிலக்கு கொடுக்கிறீர்கள்? என்ன காரணம்? பெட்ரோலுக்கு வரி போட்டு இருக்கிறீர்கள். குறை என்றால் குறைப்பீர்களா? பஸ் கட்டணம் உயரப்போகிறது. ஆட்டோ கட்டணம் உயரப் போகின்றது. குறைப்பீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வதை விட்டுவிட்டு புதிதாக ஏதாவது சொன்னால் எங்களுக்குத் திருப்பி பதில் சொல்வதற்கு உற்சாகமாக இருக்கும். ஸ்டீல் ரோலிங் மில் பற்றி மாண்புமிகு முன்னால் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இங்கே அரை மணி நேரம் பேசி அதற்கு வேண்டிய காரண காரியங்களை நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு இன்றைக்கு உங்கள் கட்சியைச் சார்ந்த துணைத்தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதைப்பற்றிப் பேசி அதற்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். திருப்பி அதையே நீங்கள் பேசினால் நான் முதலில் சொன்ன பதிலையேதான் திருப்ப அப்படியே சொல்ல வேண்டும் அல்லது இந்தத் தேதியில் நான் பேசிய பேச்சை திருப்பி நீங்கள் படித்துக்கொள்ளுங்கள் என்று இலகுவாகப் பதில் சொல்லிவிட முடியும். ஆகவே புதிய விஷயங்களைச் சொன்னால் அரசுக்கும் நல்லதாய் இருக்கும், மக்களுக்கும் நல்லதாய் இருக்கும்.

திரு அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கலைஞர் அவர்களாலு நண்பர் துரைமுருகன் அவர்களாலும் ஏற்கனவே எழுப்பப்



பெற்று அதற்கு நீங்கள் பதில் சொல்லியிருக்கிறீர்கள். அந்த பதிலைப் படித்துவிட்டு வந்து தான் நான் பேசுகிறேன். பதில் சொன்ன பிறகு, நீங்கள் சொல்லியிருக்கக் கூடிய காரணங்கள் நியாயமானதா என்பதற்கு நாங்கள் பதில் சொல்வதற்கு எங்களுக்கு அவகாசம் இல்லை. எனவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி– பழைய . சம்பவமாக இருந்தாலும்–அதிலே எவ்வளவு பெரிய தவறுகள் நடக்கிறது, தொடர்ந்து எப்படி நடக்கிறது என்பதை சுட்டிக்காட்டுவதற்காகத் தான் சொன்னேனே தவிர அரைத்த மாவை அரைத்து நேரத்தை வீணாக்குவதற்காக அல்ல.

அதற்கு நீங்கள் சொல்லியிருக்கக்கூடிய காரணம் — 122 லட்சம் ரூபாய் வரி வசூலிக்கலாம் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்தும் கூட ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு வரி விலக்கு தரப்பட்டிருக்கிறது – என்ன தெரியுமா ஆந்திராவில் இல்லை, கேரளாவில் 5 வருடங்களுக்கு அவகாசம் கொடுத்து இருக்கிறார்கள்; கர்நாடகாவில் 3 வருடங்களுக்கு அவகாசம் கொடுத்திருக்கிறார்கள் ஆகவே நாங்களும் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன், பிற மாநிலங்களில் செய்வதை எல்லாம் நீங்கள் செய்ய தயாராக இருக்கிறீர்களா? மேற்கு வங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கிறார்கள் நீங்கள் கொடுக்க தயாரா ஆந்திராவில் மாண்புமிகு என்.டி.ஆர். அவர்கள் நில வரியை ரத்து செய்தார்கள். நீங்கள் செய்ய தயாரா அவரே மேல் சபையையும் எடுத்து இருக்கிறார்கள், நீங்கள் எடுப்பீர்களா அவர் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு கொடுக்கிறார், நீங்கள் கொடுப்பீர்களா?

நான் கேட்க விரும்புகிறேன், இராஜ நர்த்தகி என்ற பதவியை அவர் எடுத்து விட்டார் நீங்கள் எடுப்பதற்கு யாராக இருக்கிறீர்களா சரி அவர் காவி உடை அணிந்து இருக்கிறார் நீங்கள் அணியுங்கள் என்றா நான் கேட்கிறேன். ஆக இன்றைக்கு பிற மாநிலங்களில் இருக்கக்கூடிய காரியங்களை எல்லாம் நீங்கள் செய்ய முடியாது. அதற்கு மட்டும் பிற மாநிலங்களை . காரணம் காட்டுகிறீர்களே? சைக்கிள் உதிரி பாகங்களுக்கு நான் கேட்கிறேன் மகாராஷ்டிராவில் வரி உண்டா? கர்நாடகத்தில் வரி உண்டா? 3 சதவீதம் போட்டு இருக்கிறீர்கள். ஆக இன்றைக்கு கேரளாவில் சிலைடு காட்டுவதற்கு சிலைடு சார்ஜஸ் 3½ ரூபாய் தான். இங்கு எவ்வளவு போட்டு இருக்கிறீர்கள். ஆக பிற மாநிலங்களில் இருப்பதை எல்லாம் நீங்கள் செய்கிறோம் என்று சொல்லுகின்ற வாதம் சரியல்ல.

இதற்குப் பின்னால் இருக்கக்கூடிய மர்மங்கள் இன்றைக்கு தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் போட்டிருக்கக் கூடிய வரிகள் சாதாரண மக்களை பாதிக்கக் கூடியவரிகளாக இருக்கின்றன. அண்ணா அவர்கள் சொன்னார்கள், வசதி படைத்தவர்கள் மீது வரி போட்டு ஏழை எளிய மக்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று. வரி மூலம் அவர்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். நீங்கள் போட்டிருக்கிற வரிகளை, நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு போட்டிருக்கக் கூடிய வரிகளைத் தொகுத்துக் காட்டுகிறேன். தாய்க்குலம் என்று பேசுகிறீர்கள். தாய்க் குலம் பொட்டு வைத்தால்கூட அந்த நெற்றிப் பொட்டுக்கு வரி வருகிறது. லிம்ஸ் ஸ்டிக்-க்கு வரி வருகிறது. பவுடருக்கு வரி வருகிறது. கவரிங் நகைகளுக்குக் கூட — ஏனோ, நான் கேள்விப்படுகிறேன் — வரி இருப்பதாக. இன்னும் சொல்லப் போனால் ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற பொருள்களுக்கு — — — சத்துணவு போடுவதாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். குழந்தைகள் சாப்பிடுகிற பிஸ்கட்டுக்கு வரி, மிட்டாய்க்கு வரி, பால் உணவுப் பொருள்களுக்கு வரி. ஏழை மக்கள் பயன் படுத்துகிற சைக்கிள் உதிரி பாகங்களுக்கு வரி மீனுக்கு வரி, நண்டுக்கு வரி, நத்தைக்கு வரி, மஞ்சளுக்கு வரி, கடுகுக்கு வரி, பூண்டுக்கு வரி, புளிக்கு வரி, மோட்டார் டயருக்கு வரி, ட்யூப்க்கு வரி, சிமெண்ட்க்கு வரி. இன்னும் எதற்குதான் வரியோ. முதல் அமைச்சர் அவர்கள் இருப்பதால் சொல்கிறேன், அவர்கள் ஒரு படத்தில் பாடியிருப்பதால். அநியாயம் அநியாயம் இந்த ஆட்சியில். குனிந்தால் வரி நிமிர்ந்தால் வரி என்று பாடியவர் தான் அவர்கள். அதற்குத் தான் வரி இந்த ஆட்சியில் இல்லையேதவிர மற்றபடி இவ்வளவு வரிகளைப் போட்டிருக்கிறீர்கள். நுழைவு வரியை எடுத்துவிடுவதாகச் சொன்னீர்கள். பழைய படி நுழைவு வரி என்ற பூதம் இருக்கிறது. எடுத்து விட்டீர்கள். அதற்குப் பதிலாக கூடுதல் விற்பனை வரி என்று சொல்கிறபோது அது பிளாக்மார்க்கட்டுக்கு வழிவகை செய்யும். நான் கேட்கிறேன். ஒரு வியாபாரிக்கு ஆண்டு ஒன்றுக்கு 12 லட்சம் ரூபாய் டேர்ன் ஓவர் என்றால் அவர்களுக்கு வருகிற லாபத்திற்கு வரி கட்டவேண்டுமென்று சொன்னால் அல்லது வரி கட்டவேண்டும் என்று சொன்னால் அதை நுகர்வோரிடமிருந்து வாங்கக் கூடாது என்று சொன்னால் அவர்கள் ஒழுங்காக கணக்கு காட்டுவார்களா அவர்கள் பீஸ் கொடுப்பார்களா உங்களுக்கு எப்படியும் கட்டியாக வேண்டும். ஆகவே கூடுதல் விற்பனைவரி என்று சொல்லும் போது மறைமுகமாக ப்ளாக் மார்க்கட்டை, கள்ள மார்க்கட்டை திறந்துவிடுகிறீர்கள் என்று தான் பொருள்.

அடுத்து, பெட்ரோலுக்கு மட்டுமல்ல, டீஸலுக்கு வரி. உங்கள் ஆட்சியில் இரவு நேரங்களில் கூட விவசாயம் செய்யச் சொல்கிறீர்கள். இரவு நேரங்களில் விவசாயம் செய்ய





முடியுமா பகல் நேரத்தில் விவசாயம் செய்வதே சிரமமாக இருக்கிறது. இரவு நேரங்களில் விவசாயம் செய்கிற அளவிற்கு சில நேரங்களில் மின்சாரம் கிடைப்பது இல்லை. பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு உண்டா? விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை தருகிறீர்களா என்றால் இல்லை. கரும்பின் விலை குறைவாக இருக்கிறது. நெல்லின் விலை குறைவாக இருக்கிறது. ஆனால் இன்றைக்கு விலைவாசியோ ஏறிக்கொண்டேயிருக்கிறது. இந்த டீசல் விலை உயர்வினால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா இன்று நீங்கள் போட்டிருக்கக்கூடிய வரிகள் ஏழை மக்களைப் பாதிக்கக்கூடிய வரிகள். லாட்டரி சீட்டுகளில் வேலைப் பார்ப்பவர்கள் யார்? ஊனமுற்ற லட்சக்கணக்கான ஏழை எளிய மக்கள். அவர்களுக்கு வரிப் போட்டிருக்கிறீர்கள். அவர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள். காட்டுவதைக் காட்டிப் பெற வேண்டியதைப் பெறுவதற்கு உரிய ஆற்றல் அவர்களிடம் இல்லை. கோர்ட்டுக்குப் போய்விட்டார்கள். 20% வரி. அது யாரைப் பாதிக்கிறது. லாட்டரிச் சீட்டுக்கு வரி விதிக்கிறீர்கள் இன்னொன்றையும் சொல்கிறேன்.

இன்று நான் உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அரசாங்கத்திற்கு வருமானம் வருகிற பல வழிகள் இருகின்றன. உங்களுக்குத் தெரியாதா, தெரியும். அதை ஏன் சர்க்கார் எடுத்துக் கொள்ளக்கூடாது உதாரணத்திற்குச் சொல்கிறேன். சர்க்கரை ஆலைகளை எடுங்கள். மதுரையில் எடுத்தீர்களே, எல்லா சர்க்கரை ஆலைகளையும் எடுங்கள். கைத்தறி ஆலைகளை எடுங்கள். சிமெண்ட் ஆலைகளை எடுங்கள். பஸ்களை தேசியமயமாக்குங்கள். பாட்லிங்க் ப்ளென்டிங்க் பொன் விலையும் பூமி அல்லவா? எவ்வளவு வசதிகள் வருகின்றன கோடிக்கணக்கான அளவிற்கு ரூபாய் வருமானம் வருகிறது. ஐ.எம்.எப்-யை எடுத்துக் கொண்டுள்ளோம் என்கிறீர்கள்; சரி. ஹோல்சேலை எடுத்துக் கொண்டீர்களா ஏன் பாட்லிங்க் அன்ட் ப்ளென்டிங்கை எடுக்கவில்லை அதைக் கேட்டால் பப்ளிக் இன்டெரஸ்ட், ஆகவே எடுக்கவில்லை என்கிறீர்கள். எடுக்காததன் காரணம் என்ன. இல்லையென்றால் அது லஞ்சத்திற்கு வழிவகுக்கும். தனி நபர்கள் லைசென்ஸ் வாங்க நுழைவார்களா மாட்டார்களா காரணம், கண் சிமிட்டுகிற வசதி படைத்த, வருமானம் வருகிற தொழிலாக இருக்கிறது. சபாநாயகர் அவர்களே, உங்கள் அனுமதியோடு சொல்கிறேன் ஏனென்றால் தற்போது கோர்ட்டு தீர்ப்பு முடிந்து விட்ட காரணத்தால் சொல்கிறேன். உங்கள் மீது தவறான குற்றச் சாட்டு சொல்லப் பட்டிருக்கலாம். சரியாக இருக்கலாம், அது வேறு விவகாரம் அதற்கு நாம் ஏன் இடம் கொடுக்க வேண்டும் இன்று தனியார் கையில் லைசென்ஸ் கொடுக்கப் போகிறீர்கள் என்ற காரணத்தால் ராமபிரசாத் ராவ் கமிஷன் முன்னால் புகார் வந்தது. எதற்காக புகார் வந்தது புகாருக்குக் காரணம் என்ன இந்த லைசென்ஸ் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விற்பனை வரிக்கு இராமபிரசாத் ராவ் கமிஷனுக்கும் என்ன சம்பந்தம்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இது விற்பனை வரியே தவிர எக்ஸைஸ் வரி அல்ல. எக்ஸைஸ் வரி பற்றி வரும்போது நீங்கள் பேசலாம், அப்போது நான் அவற்றிற்கு பதில் சொல்கிறேன்.

(முற்பகல் 10-30)

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், பாட்டிலிங், பிளண்டிங் ஆகியவற்றுக்கு அரசாங்கம் விற்பனை வரி விதிக்கிறது. விற்பனை வரி ஜூரிஸ்டிக்ஷனிலே வருகிறது. எனவே, அதைப்பற்றிப் பேசுவதற்கு எனக்கு உரிமை உண்டு. எனவே, இது இர்-ரெலவன்ட் இல்லை. ஆக ....

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அனுமதி வழங்குகின்ற அதிகாரம் வணிகத் துறைக்கு இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, அதற்கு என்று ஒரு நாள் ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், அதிலே தெளிவாக வைத்துக் கொள்ளலாம். ஆக, இன்றைக்கு அந்தப் பிரச்னைக்குள் செல்லவில்லை. இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக, இந்த விற்பனை வரியைப் பற்றி இன்றைய தினம் தெரிவிக்க விரும்புகிறேன். 'பெஸ்ட் ஆப் ஜட்ஜ்மென்ட்' என்று சொல்லிக்கொண்டு, டர்ன் ஓவர் ரூ. 50,000 திலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வரக்கூடியவர்களுக்கு எக்ஸ்செம்ஷன் கொடுக்கப்படுவதால், டர்ன் ஓவரைக் கூடுதலாகக் காட்டி, வணிகத் துறையினர் அதிலே கொள்ளையடிக்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், மேல் மட்டத்திலே இருந்து, கீழ் மட்டத்திலே உள்ள நிர்வாகம், நாம் எல்லோரையும் சொல்லவில்லை—அதிலே ஒரு சிலர் தவறு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, இதை அரசாங்கம் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, சோதனைச் சாவடிகளிலே இது மாதிரியான தவறுகள் நடைபெறுவதாக தகவல்கள் எனக்கு வந்திருக்கின்றன. அவைகளை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கடி நான் குறுக்கிடுவதற்கு என்னை மன்னிக்க வேண்டும். எல்லாவற்றிலும் திறமையான, நேர்மையான



நிர்வாகத்தை நடத்துவதற்கு இந்த அரசு விரும்புகிறது. இங்கே பேசுபவர்கள், இன்றைக்கு நாட்டிலே எத்தனையோ சோதனைச் சாவடிகள் இருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான லாரிகள் வருகின்றன. அங்கே தவறு நடக்கிறது. இங்கே தவறு நடக்கிறது என்று குறிப்பிட்டு சட்டசபையிலே பேசினால், அரசுக்கும், மக்களுக்கும் பயன்படுமாதலால், நான் உங்கள் அனைவருக்கும் அன்போடு சொல்லிக்கொள்கிறேன்— —சோதனைச் சாவடிகள் மூலம் அரசுக்கு வருமானம் அதிகரிக்க வேண்டுமென்று எந்த அரசும் விரும்பும்; இந்த அரசும் விரும்புகிறது. இந்த குறிப்பிட்ட சோதனைச் சாவடியில், இன்ன தவறு நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரியின்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அது உறுதுணையாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, பல்வேறு குற்றச்சாட்டுகளை, பல்வேறு துறைகளில், பல்வேறு சந்தர்ப்பங்களில் இங்கே சொல்லியிருக்கிறோம். அடுக்கடுக்காகச் சொல்ல வேண்டும் என்றால், சொல்கிறேன். ஏதாவது அதன்மீது நடவடிக்கை உண்டா? பொதுவாக நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவது —— நான் சோதனைச் சாவடிகளில் இந்த மாதிரியான சிக்கல்கள் நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறேன். அதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு தகவல். கலைவாணர் அரங்கத்திலே குழந்தைகள் படத்தைக் காட்டுகிறார்கள். அந்தப் பெயரைப் போட்டுக் கொண்டு, சின்னக் குழந்தைகள் அல்ல, பெரியவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால், மாறுவேடத்தில் போய்ப் பாருங்கள். அந்தப் படங்களுக்கு விதிவிலக்கு உண்டு. இந்தத் தந்திரத்தைக் கையாண்டு, சிலர் திட்டமிட்டு இந்தப் படங்களை திரையிடுகின்றனர். இத்தகைய படங்களைக் கலைவாணர் அரங்கத்திற்கு கொண்டுபோனால், முழுமையாக இதற்கு விதி விலக்கு கிடைக்கும் என்று இந்தத் தொழிலில், சிலர்- ரத்தத்தின் ரத்தங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, அப்படியல்ல. குழந்தைகளுக்கான படங்களைக் காட்டும்போது, அதைப் பார்க்க பெரியவர்கள் வரலாம், யார் வேண்டுமானாலும் வரலாம். அதைத் தடுத்து அரசு எப்படி உத்தரவு போட முடியும்? குழந்தைகள் படம் என்று சொல்லும்போது, அதிலே பட்சிகள், மிருகங்கள், காடுகள் போன்றவைகள் வருகின்றதா என்பதைப் பார்த்து, அவைகளுக்கு விதிவிலக்கு கொடுக்கப் படுகின்றது. ஆனால், அதைப் பார்க்க பெரியவர்கள் போகக் கூடாது என்ற தடை உத்தரவு நாம் போட முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் தலைவர் அவர்களே, இன்னார் இந்தப் படத்திற்குப் போகக் கூடாது என்ற தடை உத்தரவை போட முடியாது, அது அவர்களது ஜீவாதார உரிமை. அது அடிப்படை உரிமை. வேடிக்கை என்னவென்றால், பெரியவர்கள் படமும் அங்கே திரையிடப்படுகின்றது. ஒன்றிரண்டு படங்கள் அப்படி அங்கே வந்திருக்கின்ற காரணத்தினால், உங்கள் கவனத்திற்கு அதைக் கொண்டுவர விரும்புகிறேன். நீங்கள் விசாரித்துப் பாருங்கள். சிறியவர்களும், பெரியவர்களும் அந்தப் படத்திற்கு வருகிறார்கள். எந்த நோக்கத்திற்காக அது போடப்படுகிறதோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை. வரிவிலக்கு பெறவேண்டும் என்பதற்காக அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். காம்பவுண்டிங் டாக்ஸ் — இதை சென்னைக்கு கொண்டுவருவதில் என்ன சிக்கல் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்? அதைப் போலவே, செலக்ஷன் கிரேடில் சில பிரச்னைகள் வருகின்றது. தஞ்சாவூரிலே இன்றைக்கு ஒரு தகவல் கிடைத்திருக்கிறது. அதாவது, செலக்ஷன் கிரேடு என்பது ஸ்பெஷல் கிரேடாக மாற்றப்பட்டிருக்கிறது. இதனால், ஏற்கனவே 30 சதவீதம் காம்பவுண்டிங் டாக்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது, இப்போது 50 சதவீதம் ஆக கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அது தேவைதானா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹோட்டல்களில் விற்கப்படும் உணவுப் பண்டங்களுக்கு வரி இல்லை என்று இந்த அவையிலேயே சொல்லியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். ஆனால் சுற்றுலாத் துறையின் அங்கீகாரம் பெற்ற ஹோட்டல்களில் டாக்ஸ் போடப்படுகிறது. சில சுற்றுலா ஹோட்டல்களில் நான் சாப்பாடு சாப்பிட்டிருக்கிறேன். அங்கே விற்கப்படுகின்ற காப்பி, தோசை போன்றவைகள் தரமானதாக இல்லை. ஆனால் அவற்றிற்கு டாக்ஸ் மட்டும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதைக் குறித்து அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விற்பனை வரி என்பது அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற ஃபைனாஸ்ஷியல் ரிசோர்சஸாக இருந்தாலும்கூட ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகின்ற அளவிற்கு அவர்கள் மீது வரி போடுவது சரியாகாது. மஞ்சள் என்பது மங்களகரமாக மதிக்கப்படுகின்றது; தாலிக்குக் கூட மஞ்சள் கயிறு என்றுதான் சொல்வார்கள்; அப்படிப் புனிதமாகக் கருதப்படுகின்ற அந்த மஞ்சளுக்குக்கூட வரி போடுவது சரியல்ல.

ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக் கூடிய கடுகு, பூண்டு ஆகியவைகளுக்கு வரி போட்டிருப்பது சரியல்ல. எனவே, நீங்கள் அவைகளுக்குப் போட்டிருக்கின்ற, ஏழை எளிய மக்கள் பயன்



படுத்துகின்ற பொருட்களுக்குப் போட்டிருக்கின்ற வரிகளை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுழைவு வரி என்ற பூதத்தை ஆயிரம் அடிக்குக் கீழே குழி தோண்டி புதைத்து விடுங்கள். அவ்வாறின்றி, அதைக் கையிலே வைத்துக்கொண்டு நீங்கள் சித்து விளையாட வேண்டாமென்று கேட்டு, முடிக்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களால், வணக்கத்திற்குரிய இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்களின் சார்பாக இந்த மன்றத்தில் கொண்டு வந்திருக்கின்ற, கோரிக்கை எண். 4 — பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் — நிர்வாகம் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மக்களின் உணர்வுகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்வதற்கு, இந்தச் சட்டமன்றத்தில் வைப்பதற்கு நான் பெருமைப்படுகிறேன்.

இதுவரையிலே எத்தனையோ பட்ஜெட்டுகளைப் போட்டிருக்கிறார்கள். மத்திய அரசும், மாநில அரசுகளும் பல்வேறு விதமான நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை என்ற பெயரில் இந்திய யூனியன் அரசால் போடப்பட்டிருக்கும் அந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்பொழுதுகூட, மத்திய அரசுக்கு அது பல்வேறு வகைகளில் சாதகமாக இருந்தாலும்கூட, மாநில அரசுகளுக்கு அது பெரும்வகையில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் ஆரம்பத்திலேயே சுட்டிக்காட்டுவது நல்லதாக இருக்குமென்று நம்புகிறேன்.

காரணம் என்னவென்றால், மத்திய அரசிலே 100 கோடி ரூபாய் துண்டு விழுகிறது என்றால் அதற்கு வேண்டிய நோட்டுகளை அச்சிட்டுவிடலாம். ஆனால், மாநில அரசிலே பட்ஜெட்டில் துண்டு விழுகிறது என்றால் நோட்டு அடிக்க முடியாது. அது மட்டுமல்லாமல், மத்திய அரசிலே துண்டு விழுகின்றபோது நோட்டு அடிக்கின்றபொழுது அது மாநில அரசில் விலைவாசி உயர்வையும், பொருளாதாரச் சீரழிவையும் ஏற்படுத்துகிறது என்றால்கூட அது மிகையாகாது. எனவே, மத்திய அரசிலே பட்ஜெட்டிலே துண்டு விழும்போது மாநில அரசுகளிலே இருக்கக் கூடியவர்களைக் கலந்தாலோசித்து இந்திய தேசியக் கமிஷனின் முழு அங்கீகாரத்தையும் பெற்ற பிறகு அவர்கள் தாக்கல் செய்வார்களேயானால் இப்படிப்பட்ட சங்கடங்களோ, பிரச்னைகளோ வராது என்று நம்புகிறேன். ஆனால் அதை யல்லாம் கவனத்திற் கொள்ளாது, சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து மத்திய அரசு அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்குவதால் மாநிலங்களிலே விலைவாசி உயர்வும், மாநிலங்களிலே பொருளாதார நெருக்கடியும் மிகப் பெரிய அளவிற்கு ஏற்பட்டு, மாநில அரசின் கைகளில் பிரச்னைகள் அடங்காத நிலை ஏற்பட்டு

விடுகிறது என்பதை இந்த நேரத்தில் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆகவே, ஓர் இடத்திலே செய்கின்ற தியாகம் மறு இடத்திலே துரோகமாக அமைந்து விடுகிறது. மத்திய அரசிலே இந்த ஆண்டில் பட்ஜெட்டில் கொடுத்த சில சலுகை களின் காரணமாக மாநில அரசுகள் வருவாயை இழக்கின்ற வகையில், மாநில அரசுகளின் பங்குகள் குறைகின்ற வகையில், மாநில அரசுகளின் வளர்ச்சி தடைப்படும் வகையில் இருப்பதால் இதைப்பற்றி மறு ஆய்வு செய்ய வேண்டிய கட்டாயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதற்கேற்ற வகையில் மீண்டும் முனைப்பாக இருந்து, மாநில அரசின் கோரிக்கைகளையும், எண்ணங்களையும், உணர்வுகளையும், மாநிலத்தில் உள்ள மக்களின் நிலைமைகளையும் மத்திய அரசிடத்திலே வற்புறுத்திப் பெற வேண்டும். அதற்கேற்ற வகையில் இந்த மாநில அரசு தக்க நேரத்திலே, உரிய நேரத்திலே மத்திய அரசின் கவனத் திற்குக் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் இன்றைக்கு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் பொற்காலமாக விளங்குகின்ற வகையில் பல்வேறு முனைப்பான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. மாநில அரசு இந்த நேரத்தில் குத்தகை நில உடமையாளர் குறித்த ஒரு குழு போடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40.)

மாவட்டந்தோறும் அதற்கேற்ற ஒரு குழு அமைக்கப்பட்டிருக் கின்றது. கடந்த மாதம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டத்திற்கு வந்து கிருஷ்ணகிரி வட்டத்திலே உள்ள விவசாயத் தொழிலாளர்கள், நில உடமை யாளர்கள் ஆகியோர்களை எல்லாம் கலந்து ஆய்வு நடத்தினார்கள். அதாவது எந்தெந்த வகையில் நிலங்களைக் குத்தகைக்கு எடுக்கிறார்கள், அவற்றிலே என்னென்ன பினாமிகள் இருக்கின்றன, எந்தெந்த வகைகளில் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள், முதலாளிகள் எந்தெந்த வகைகளில் ஏமாற்றப் படுகின்றார்கள் என்பதை எல்லாம் கண்டறிய அஃபிஷியல்ஸ் மற்றும் நான் அஃபிஷியல்ஸ் என்று சொல்லக்கூடிய வகையில் அதாவது உத்தியோக சார்பற்றவர்களும் மற்றவர்களும் உறுப் பினர்களாக உள்ள அந்தக் குழுக்கள் சென்று பொதுமக்கள் கொடுக்கக்கூடிய விண்ணப்பங்கள் முதலியவைகளைப் பெற்று பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது: பொது மக்கள் நிலைமைகளை ஒரு குழுவாகவும் வந்து தெரிவிக்கலாம் அல்லது தனித்தனியாகவும் தெரிவிக்கலாம் என்ற வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டு விவசாயத் தொழிலாளர்களும், குத்தகை யாளர்களும் மேம்பாடு அடைகின்ற வகையிலே நல்ல வழிமுறை



களை இந்த அரசு கொண்டு வந்திருப்பது, சுதந்திரம் அடைந்து இதுவரையிலும் எந்த அரசும் செய்யாத ஒரு மாபெரும் புரட்சி யாகும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவுக்கு மிகத் தேவையான, நியாயமான, ஒரு உணர்வு பூர்வமான, அனுபவபூர்வமான திட்டத்தைக் கொண்டு வந்து விவசாயத் தொழிலாளர்களுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ஏற்படக்கூடிய இன்னல்களைக் களைவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட அருமையான திட்டத்தைக் கொண்டு வந்து அதன்மூலமாக குழுக்களை அமைத்து அவர்கள் சென்று பார்த்து வரக்கூடிய வகையில், ஏற்பாடு செய்யப்பட்டிருக் கின்றது. இப்படிப்பட்ட அருமையான திட்டம் இந்த அரசின் சார்பிலே ஏற்படுத்தப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி அணை நீர்த்தேக்கம் தர்மபுரி மாவட்டத்திலே இருக்கின்றது. கடந்த அரசின் ஆட்சியின்போது அதற்கு நீர் வரி போட்டிருந்தார்கள். அதாவது 1983 ஆம் பசலிக்கு 30 ரூபாய், 1984 ஆம் பசலிக்கு 60 ரூபாய், 1985 ஆம் பசலிக்கு 120 ரூபாய், 1985 ஆம் பசலிக்கு 240 ரூபாய், அதற்குப் பிறகு 480 ரூபாய் என்று இரண்டு இரண்டு மடங்காக வரி உயர்த்திக் கொண்டே வரப்பட்டது. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடமும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களிடமும் நாங்கள் சொன் னோம். அதனை சீரமைத்து தமிழகம் முழுவதும் ஒரே நிலையில் இருக்கவேண்டும் என்ற வகையிலே இவ்வளவுதான் ஒரு ஏக்கருக்கு நீர் வரி என்ற வகையிலே நிர்ணயம் செய்த காரணத்தால் அந்த விவசாயிகள் பாசன வசதியைப் பெற்று இன்றையதினம் இந்த அரசைப் பாராட்டக்கூடிய நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி முனைப்பான நடவடிக்கையை எடுத்து அந்த விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் நல்லதொரு மறுமலர்ச்சி ஏற்படத்தக்க வகையிலே இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து பயிர்ப்பாதுகாப்புத் திட்டம் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இன்ஸ்யூரன்ஸ் என்பதைப் பொறுத்த வரையில் ஆதியிலே உயிருக்கு மட்டும் என்று கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு லாரிகள், பஸ்கள் போன்றவற்றிற்குக் கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைய தினம் பயிர்ப் பாதுகாப்பு என்ற வகையில் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வெள்ளத்தால் அல்லது, வறட்சியால் பயிர் களுக்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டால் அதனால் விவசாயிகள் பாதிக்கப்படாத முறையில் அவர்களுக்கு உதவ வேண்டும் என்ற வகையிலே ஒரு பசுமைப் புரட்சியினைச் செய்வதற்குரிய வழி வகையினை உருவாக்கக்கூடிய வகையில் அந்தத் திட்டத்தையும் இந்த அரசு கொண்டு வந்திருப்பதைப் பாராட்டுவதிலும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படி ஏராளமான நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது மிகப் புரட்சிகரமான திட்டம் பட்டா பாஸ் புக் வழங்கும் திட்டம். ஏற்கெனவே இருந்த நிலைமைகளைப் பொறுத்தவரையில் ஒரு இடத்திலே நிலம் இருக்கின்றது என்று சொன்னால் அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்பதுகூடத் தெரியாத நிலைமை இருந்தது. இந்த நிலம் யாருக்குச் சொந்தம், எங்கே எப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று கூடத் தெரியாத நிலைமை இருந்தது. ஏற்கெனவே இருந்த அரசின் முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் எங்கள் ஊருக்கு வந்து கிட்டத்தட்ட 40 பேருக்கு பட்டா கொடுத்தார்கள். அப்படி பட்டா கொடுத்துவிட்டு வந்ததற்குப் பிறகு பார்த்தால் அந்தப் பட்டாவிற்குச் சொந்தமான நிலமே இல்லை. அந்த இடத்திலே அரசாங்க நிலமே இல்லை. யாரோ ஒரு தனியாருடைய நிலம் அது; வேறு ஒருவருக்குச் சொந்தமானது; 50, 60 ஆண்டுக் காலமாக அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நடைபெறுவது வெறும் சேல்ஸ் டாக்ஸ் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கை தான். நிலம் சம்பந்தப்பட்டது அல்ல.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் மிக அருமையான, தேவையான திட்டங்களைக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்துகின்றபோது அது எந்தத் திட்டமாக இருந்தாலும் அதற்கு வேண்டிய அளவில் என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ அதை எல்லாம் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தான் கொண்டு வருகிறார்கள்.

இங்கே சில உறுப்பினர்கள் பேசுகின்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார் அரிசி கேட்டு, இப்போது உண்ணாவிரதம் இருப்பாரா என்று ஒரு கேள்வியினைக் கேட்டார்கள்? அந்த நேரத்தில் இந்த நாட்டிலே ஒரு திட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால், சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்த காரணத்தால் மட்டுமல்லாமல் அரிசியே இல்லாத அவல நிலை ஏற்பட்டது. போதிய மழை இல்லாத காரணத்தால், வறட்சி ஏற்பட்ட காரணத்தால் பாதிப்புக்கள் ஏற்பட்டன. கர்நாடகத்திலே இருந்து கொண்டு வரப்படவேண்டிய தண்ணீர் வந்து அது மேட்டூரில் நிரம்பி தஞ்சாவூருக்குச் சென்று தஞ்சையை வளம் கொழிக்கச் செய்யக் கூடிய நல்ல புஞ்சை பூமியாக ஆக்குகின்ற வகையில் நிலைமை இல்லாமல் இருந்தது. அப்படி தஞ்சை பஞ்சையாக விடப்பட்ட நேரத்தில் அரிசி தேவை என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பாரா என்று கேட்கிறார்கள். இப்போது இவ்வளவு பேசக்கூடியவர்கள் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தபோது என்ன சொன்னார்கள்? மத்திய



அரசிடத்திலே மாநில அரசு ஒழுங்காக நடந்து கொள்ளவில்லை
யென்று சொன்னாலும், மத்திய அரசுக்குத் தேவையான அரிசியை
இவர்கள் கலெக்ஷன் செய்து, அந்தத் தொகுப்புக்குக் கொடுக்
காமல் இருந்தாலும், மத்திய அரசை மாநில அரசு கேட்காமல்
இருந்தாலும், கேட்காமல் மாநில அரசு புதிய திட்டத்தை அறிமுகப்
படுத்தியிருந்தாலும், அதை எப்படிச் செய்திருந்தாலும், நீங்கள்
இந்தத் திட்டத்திற்கு, அரிசியைக் கொடுங்கள் என்று சொன்
னார்கள். எங்கள் ஆட்சியிலே இந்தக் காலகட்டத்திலே இதோ
பார் இவ்வளவு அரிசியைக் கொடுத்தோம் என்ற பட்டியலைக்
கூடப் போட்டுக் காட்டினார்கள்.

இது எப்படி இருக்கிறது என்றால், ஆற்றங்கரை ஓரத்திலே
இருந்த சின்னஞ்சிறு குழந்தைகள் எல்லாம் ஒரு ஆமை வந்து
கொண்டிருந்ததைப் பார்த்து, கல்லைப் போட்டுக் கொண்டிருந்
தார்கள். 10, 15 குழந்தைகள் கல்லைப் போட்டுக் கொண்
டிருந்துங்கூட, அந்த ஆமை சாகவில்லை. அப்பொழுது அந்த
இடத்திற்கு வந்த ஆசாடபூதி சாமியார் ஒருவர் அதைப்
பார்த்தார். அவர் ஆற்றங்கரை ஓரத்திலே ஒரு மடத்திலே
தங்குபவர். அவருக்கு அந்த ஆமை மேல் எக்கச்சக்கமான கோபம்.
ஆனால் அவர் ஆசாடபூதி மனிதர். கல்லெடுத்துப் போட்டு
அதனைச் சாகடிக்க முடியாது. ஆகவே, உடனே அவர்
சொன்னார், தப்பித் தவறி அதைத் திருப்பிப் போட்டு அடிக்கப்
போறீங்கடா, அது செத்துப் போகப் போதுடா, என்று. உடனே
குழந்தைகள் பார்த்தார்கள், ஆமையைத் திருப்பிப் போட்டு,
கல்லால் அடித்தார்க்ள். அது செத்துப் போய் விட்டது. அதைப்
போல ஆலோசனை சொல்ல, எதிர்க்கட்சியாக இருப்பவர்கள்
எல்லாம் உண்டு. அப்படிப்பட்ட தலைவர்கள், அந்த வழியிலே
வந்தவர்கள் இப்பொழுது கேட்கிறார்கள், முதலமைச்சர் உண்ணா
விரதம் இருப்பாரா என்று? இருந்த உண்ணாவிரதத்தை ஏற்றுக்
கொண்டார்களா, மறுத்தார்களா? இந்த மாநிலத்திற்கு இவ்வளவு
தேவை என்று வாதாடுகிறபொழுது, நிலைமையை எடுத்துச்
சொல்கின்றபொழுது, உங்களது கடமை என்ன? அந்த
நேரத்திலே மாநிலத்திலே இருக்கக்கூடிய மக்கள், மாநிலத்திலே
இருக்கக்கூடிய குழந்தைகள், நல்லமுறையிலே தங்களுடைய
வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு
முதலமைச்சர் உண்ணாவிரதம் இருக்கும்போது, அதையும்
நையாண்டி செய்தவர்கள், கேலி செய்தவர்கள், கிண்டல்
செய்தவர்கள், மாறாக, என்ன, என்னவோ காரணங்களை, அந்த
ஆசாடபூதி சொன்னதைப் போல் எடுத்துச் சொல்ல வேண்டாம்.
ஆனால் அப்படி எடுத்துச் சொன்னவர்கள் உண்டு. அப்படிப்
பட்டவர்கள் இன்றையதினம் பார்த்து நீங்கள் உண்ணாவிரதம்
இருப்பீர்களா என்று கேட்கக்கூடிய அளவிலே இருக்கிறார்கள்.
ஆகவே இதையெல்லாம் எண்ணிப் பார்க்கின்றபொழுது இந்த
அரசைப் பொறுத்தவரையில் எந்தச் சோதனை வந்தாலும்
மக்களுக்கு இப்படிப்பட்ட தேவையான திட்டங்களைப்
போடுவதும் அதற்குத் தேவையான வழிவகைகளை அந்தந்த
நேரத்திலே வகுப்பதும், எந்த, எந்த நேரத்தில் மத்திய அரசை

அணுகி, உதவியைப் பெறுவதற்கு அதை வாதாடியா, போராடியா என்பது காலப் போக்கில் அவ்வப்போது ஏற்படுகின்ற சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப வாதாடிப் பெற்று, போராடிப் பெற்று, இந்த ஆட்சியை நல்லமுறையிலே நடத்திக் செல்லவும், மக்களைக் காப்பாற்றக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே தொடர்ந்து புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே சொல்லிக்கொள் வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே, 'கடவுளின் தீர்ப்பு' என்ற திருவை அண்ணாமலை படத்திற்கு எக்சம்ஷன் கொடுத்தது பற்றிச் சொன்னார்கள். நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்திலே வருகின்ற கருத்து, உண்மையிலே பொதுமக்களுக்குப் பல்வேறு வகையிலே அறிவுரை சொல்வதாக இருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட படத்திற்கு கொடுக்காமல் வேறு எந்தப் படத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்ல வேண்டும். (திரு. அ. ரகுமான்கான் குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர், இன்னொரு உறுப்பினருக்குப் பதில் சொல்லிக் கொண்டே போனால், அதற்குக் காலம் இடம் தராது. அந்தந்த உறுப்பினர்கள் பேசட்டும்; எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்து நான் அரசின் சார்பிலே பதில் சொல்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னார். அதுபோல் நானும் சொல்கிறேன். நான் பொதுவாகத்தான் சொல்கிறேன், பேரவைத் தலைவர் அனுமதித்தால் அவரும் சொல்லலாம். (குறுக்கீடு) எந்த, எந்த வகையிலே, யாருக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டும், எதைச் செய்ய வேண்டுமென்று குழு எடுத்துச் சொல்கின்ற ஆலோசனையின் அடிப்படையிலேதான் அரசாங்கம் செய்திருக்கிறது என்பதை இன்றைய தினம் பொதுமக்கள் பாராட்டுகிறார்கள். அந்தப் படத்திற்கு மட்டுமல்ல, இன்னும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் படங்களுக்குக் கூட எக்சம்ஷன் கிடைத்திருக்கின்றன,

அதுமட்டுமல்ல, இந்த நிலையில் நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, பேரறிஞர் அண்ணா அவர்கள் கதை வசனம் எழுதி, கலைவாணர் என். எஸ். கே. நடித்த 'நல்லதம்பி' என்ற படம் எங்கிருந்தாலும் அதை வாங்கி, தமிழகம் முழுவதும் போடுவதற்கு வாய்ப்பு உருவாக்கித் தரவேண்டும். பல்வேறு வகையிலே, அரசு செய்திப் படங்களாகக்கூட அதை வெளியிட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன திட்டங்களை, புரட்சித் தலைவர் இன்றையதினம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார். பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த, எந்த வகையிலே நினைத்தாரோ, அந்தக் கருத்துக்களை எல்லாம்



எடுத்துக் காட்டும் படமாக அது இருக்கிறது. அதிலே விவசாயிகள் பிரச்னை இடம் பெற்றிருக்கிறது. குழந்தைகள் பிரச்னைகள் இருக்கின்றன. அதிலே பல்வேறு விதமான பிரச்னைகள் எல்லாம் உள்ளடங்கி இருக்கின்றன. இன்றையதினம் நாம் ஏழை, எளியவர்களுக்கெல்லாம் இலவசமாக வேட்டி, சேலைக் கொடுக்கின்றோம். அதைப் பற்றியும் உள்ளடக்கிய படமாக அது இருக்கிறது. ஆகவே, புரட்சித் தலைவர் அரசு செய்து வருகின்ற அந்தத் திட்டங்கள் எல்லாம் அண்ணாவின் திட்டங்கள் என்பதைத் தெரிவிக்கும் வகையில் இருக்கும் அதுபோன்ற படங்களை நம் தமிழ்நாடு அரசே கூட விலைக்கு வாங்கி, பொது மக்களுக்குச் செய்தித் துறையின் மூலமாக போட அனுப்பி வைக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

(முற்பகல் 10-50.)

ஆகவே, அதுபோன்றவைகளை நாம் செய்யலாம்: இப்போது சினிமா வரியைப் பொறுத்தவரையில் முதலே இல்லாமல் வருமானம் வருகிற அளவிற்கு, நாம் செய்திருக்கிறோம். அரசாங்கத்திற்கு செலவு இல்லாத வகையிலே, கம்பவுண்டிங் என்று சொல்கிறார்களே, அந்த வரிகள் எல்லாம் கொண்டு வந்த பிறகு, இந்த அரசாங்கம் வந்த பிறகு தான் அதிகாரிகள் போய் கணக்குகளை கண்டுபிடித்து அவர்களிடத்தில் வரிகளை வாங்காமல், வரி ஏய்ப்புகளை தடுக்கக்கூடிய முறையிலே நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. அதிகாரிகள் செல்லாமலேயே இப்போது தியேட்டர்காரர்கள் ஒழுங்காக வரிகளை, அரசாங்கத்திற்கு செலுத்துகிறார்கள். இந்த புதிய முறைகளை கொண்டு வந்ததன் காரணமாக வரி ஏய்ப்பு என்பது முழுமையாக குறைந்து விட்டது. இந்த வரியைப் பொறுத்தவரையில் நான் சொல்வதுண்டு, கிராமத்திலும் இதையே சொல்வார்கள், ''கல்யாணம் பண்ணாமல், கட்டிலும் மெத்தையும் தேடாமல். பிள்ளைப்பேறும் பார்க்காமல், புட்டிப்பாலும் ஊத்தாமல், மச்சான் பெத்தான் பிள்ளை; அவன் மனசு ரொம்ப வெள்ளை'' என்று சொல்வார்கள். அதைப்போல, அரசாங்கம் பல கோடி ருபாய்களை முதலீடு செய்து அதன் மூலம் வருமானம் வரவேண்டுமென்ற நிலை இல்லாமல், அரசாங்கம் எந்தவிதமான மூலதனத்தையும் போடாமல், மற்றவர்கள் போடுகிற மூலதனத்திலிருந்து அரசாங்கத்திற்கு போதிய வருவாய் வருகிற அளவிற்கு இந்த வரி விதிப்பினை நன்கு சீரமைத்து செய்திருப்பது ஒரு திறமையான நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த வரித்துறையைப் பொறுத்தவரையில் மத்திய — மாநில அரசுகளின் பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும் கூட, மாநில அரசு இந்த வரியை சீரமைத்ததன் காரணமாக புதிய வரிகளை புகுத்தாமலேயே, வருவாய் வருகிற அளவிற்கு, மிகத்திறமையாக நிர்வாகத்தை நடத்தக்கூடிய முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த கோரிக்கையினை வரவேற்று அமர்கிறேன்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும், நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பிலே பல ஆண்டுகளாக ஆண்டுதோறும் வரிகள் உயர்ந்து கொண்டே வருகின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். சென்ற முறை இந்த மானியக் கோரிக்கை விவாதத்திலேயே எடுத்துச்சொன்னோம். இன்றைக்கு எல்லாப் பொருள்களுக்குமே ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டு வருவதின் மூலமாகவரி ஏய்ப்புகளைத் தடுக்க முடியும்; அது மக்களை, வியாபாரிகளைப் பாதிக்காத முறையிலே அரசாங்கத்திற்கு வருமானத்தை உருவாக்கும் என்று சொன்னோம். அரசாங்கம் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அரசு குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். எங்கேயெல்லாம் சாத்தியமோ அந்த இடங்களில் எல்லாம் கண்டுபிடித்து ஒருமுனை வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். அவைகளை கண்டுபிடிக்க முடியாத பல பொருள்களுக்கெல்லாம் பல முனை வரி இருப்பதாகச் சொல்கிறார்கள். அரசு இன்றைக்கு நிச்சயமாக அத்தகைய பொருள்களுக்கு மொத்த வியாபாரிகளிடத்திலே கூட ஓரளவிற்கு ஒருமுனை வரி விதிப்பதன் மூலமாக அரசிற்கு வேண்டிய நிதியாதாரம் கிடைக்கும். அரசு மீண்டும் அதை பரிசீலிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வியாபாரிகள் வியாபாரம் செய்வதற்காக லைசென்ஸ் பெறுகின்ற முறைகளிலும் பல சிக்கல்கள் இருக்கின்றன. குறிப்பாக இன்றைக்கு சர்க்கரை, கோதுமை போன்றவைகளுக்கு லைசென்ஸ் பெறவேண்டுமென்றால் ஆர். டி. ஓ. விடமும், வேறு சில பொருள்களுக்கு லைசென்ஸ் பெற உணவு வழங்கல் துறையிடத்திலும், இன்னும் பல பொருள்களுக்கு லைசென்ஸ் பெற நகராட்சிகள், பேரூராட்சிகளிடத்தில் சென்று லைசென்ஸ்களை பெற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதன் காரணமாக வியாபாரிகள் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். அதில் பல தவறுகள் ஏற்பட வழிவகை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் வியாபாரம் செய்கிற வியாபாரிகளுக்கு ஒரே இடத்தில் லைசென்ஸ் வழங்குவதற்குள்ள முறைகளை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி செய்வதன் மூலமாக அரசாங்கத்திற்கு போதிய வருவாய் கிடைப்பதற்கு வழி ஏற்படும். அந்தக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே மத்திய அரசு நீண்ட பல ஆண்டுகளுக்கு முன்னாலே மாகாணங்களுக்கு வரி விதிக்கக்கூடிய உரிமை இருந்ததை மத்திய அரசு எடுத்துக் கொண்டதன் மூலமாக பல கோடிக்கணக்கான இழப்பு மாநில அரசுகளுக்கு ஏற்பட்டது. மேலும் இன்றைக்கு புதிய பல வரிகளை எடுத்துக் கொள்வதற்குமுள்ள முயற்சியிலே மத்திய அரசாங்கம் ஈடுபட்டிருப்பதாககுறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.





மாநில அரசாங்கங்களின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட அதை ஆட்சேபித்து இருப்பதாகவும், அதனை ஆராய்ந்து அறிவதற்கு ஒரு குழுவை நியமித்து இருப்பதாகவும், அந்தக் குழுவில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் ஏற்கனவே பேசிய போது சொன்னார்கள். மத்திய அரசாங்கம் அந்த வரி விதிப்பிலே மாநிலங்களுக்கு அதிக உரிமை கொடுக்காமல் இருக்கும் நிலை இருக்கிறது. மாநில சர்க்கார் அதைக் கடுமையாக எதிர்த்து போராடி, மாநிலங்களுக்கு நியாயம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே கருத்தை நானும் இங்கே சொல்லிக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளையும், வரிகளையும், நிதி ஆதாரங்களையும் கொடுக்காமல் இருக்கிறது. மாநிலங்கள் தன்னாட்சிப் பெறுவதற்கு தேவையான உரிமைகளைக் கேட்பதற்கும், நியாயமான உரிமைகளைப் பெறுவதற்கும் இன்றைக்கு இந்திய நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் 5 மாநில முதலமைச்சர்கள் ஒன்று கூடி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுவதற்கும், நிதி ஆதாரங்களை அதிகரித்துக் கொள்வதற்கும், மத்திய அரசின் பொருளாதார கொள்கையை மாற்றுவதற்கும் ஒரு பலமான கிளர்ச்சியை நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் குழுவிலே அங்கம் பெறாமல் தனியாக நின்று குரல் கொடுத்தால் போதாது. மாநில மக்களுக்கு அதிக அதிகாரங்கள் பெறுவதற்கும், நிதி ஆதாரங்களைக் கூடுதலாக்குவதற்கும், இன்றைக்கு அந்தக் குழுவோடு சேர்ந்து நாமும் குரல் கொடுப்பதன் மூலமாகத்தான், நம்முடைய குரலையும் அவர்களுடைய குரலோடு இணைத்துக் கொடுப்பதன் மூலமாகத்தான் மாநிலங்கள் அதிக அதிகாரத்தைப் பெற முடியும், அதிக நிதி ஆதாரங்களைப் பெற முடியும். ஆகவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு வரி விதிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிற முறை என்னவென்றால், ஏற்கனவே 50,000, ரூபாய்க்கு என்று இருந்த வரி விலக்கு இப்போது 1 லட்சம் ரூபாய்க்கு உயர்த்தப்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த வரி விலக்கு உயர்த்தப்பட்டு இருந்தபோதிலும், நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே 50 ஆயிரம் ரூபாய்க்கு என்று இருந்த நேரத்திலுள்ள விலைவாசி இன்றைக்கு 75 ஆயிரம், 1 லட்சம் என்று உயர்ந்து இருக்கிறது. ஆகவே அந்தவரி விலக்கை மேலும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு நிதி ஆதாரங்களை பெறுவதற்காக மாநில அரசு சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் நுழைவு வரியைக் கொண்டு வந்தார்கள். அந்த நுழைவு வரியை விதிக்கக் கூடாது என்று அந்த நேரத்திலேயே இந்த மன்றத்தில் இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குரல்

கொடுத்தோம். அதே நேரத்திலேயே வியாபாரிகளும் குரல் கொடுத்தார்கள். அதற்காக மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது. அதன் விளைவாக நுழைவு வரியை நிறுத்தி வைத்து, அதைப் பற்றி ஆலோசிப்போம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்தக் குறிப்பிலே என்ன சொல்லப் பட்டு இருக்கிறது என்று சொன்னால், அந்த நுழைவு வரி விதிப்பதற்கான சட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுஇருக்கிறது. அங்கே இருந்து அனுமதியை எதிர்நோக்கியிருக்கிறோம் என்று இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், அந்த நுழைவு வரிக்கு பதிலாக வேறு எந்த முறையிலே வருவாயைப் பெருக்கலாம் என்பதையும் ஆராய்வதற்காக ஒரு குழு அமைத்து இருப்பதாகவும், அந்த குழுவிலே வியாபாரப் பெருமக்களைக் கலந்து ஆலோசித்து, பின்னர் ஒரு புதிய முறை கொண்டு வந்து இருப்பதாகவும் இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே இருந்த வரி விதிப்பிலே உள்ள முறைகளை மாற்றியிருப்ப தாகவும், விற்பனை வரி மீதான சர்சார்ஜ் உயர்த்தப்பட்டுள்ளது போன்ற விவரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ரூ. 3 லட்சத்திற்கு மேல் ரூ 5 இலட்சம் வரையிலுள்ள வரி விகிதத்தை 0.4% லிருந்து 5%—மாக மாற்றியிருப்பதாகவும், ரூ. 5 லட்சத்திற்கு மேல் ரூ. 7 லட்சம் வரை 0.5%லிருந்து 0.7 சதவிகிதமாக உயர்த்தியிருப்பதாகவும், ரூ.7 லட்சத்திற்கு மேல் ரூ. 10 லட்சம் வரையில் வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.6 சதவீதத்தில் இருந்து 1 சத விகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் ரூ. 10 லட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.7 சதவீதத்திலிருந்து 1.25 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது என்றும், இந்த உயர்த்தப்பட்டுள்ள கூடுதல் விற்பனை வரி, வரி விதிக்கத்தக்க விற்பனைத்தொகை ரூ. 3 லட்சத்திற்கு மேல் இருந்தால் மட்டுமே பொருந்தும் என்பதால் வணிகர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வரியினால் அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படாது என்றும், அதை நுகர்வோர் மீது அவர்கள் விதிக்க அவசியமில்லை என்றும் கருதுவதாக இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. எந்த வியாபாரியும் தான் செலுத்த வேண்டிய வரியை பொது மக்களிடமிருந்து வசூலிக்காமல் அவர்களுக்கு வரும் லாபத்தில் இருந்து கட்ட முன்வருவது இல்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அவர்கள் இதை வரி என்று போடாமல், அவர்கள் செய்கிற வியாபாரப் பொருள்களின் விலையை உயர்த்தி, அதன் மூலம் பொது மக்களிடம் இருந்து வசூலித்து, அதை அரசுக்குக் கட்டுவார்களே ஒழிய தாங்களாகவே அதைக் கட்ட மாட்டார்கள். ஆகவே, இந்த வரி மறைமுகமாக பொதுமக்கள் மீது திணிக்கப்படும். ஆகவே, இதிலே தெரிவிக்கப்பட்டுள்ளது போல் இது நடக்கிற காரியம் அல்ல. நிச்சயமாக சாதாரண மக்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள். இதனால் விலைவாசியும் உயரும். ஆகவே, இது குறித்து அரசு ஆராய வேண்டும். இந்த வரி விதிப்பைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் சொன்னார். தமிழ்நாட்டில், இந்த சேல்ஸ் டாக்ஸ் என்பது செல்வம் கொழிப்பதாக, பொன்முட்டை இடும் வாத்தாக இருக்கிறது. இந்த வரியை மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே இருக்கிறார்கள். விற்பனை வரி, அதற்கு மேல்வரி, அதற்குமேல் கூடுதல் வரி என்று இப்படி என்ற முறையிலே இந்த வரி உயர்ந்து கொண்டே போகிறது. அது மட்டுமல்ல, இப்போது சொல்லியிருக்கிறார்கள். பெட்ரோல், டீசல், மற்றுமுள்ள எண்ணெய்களுக்கு எல்லாம் வரி விதிப்பை உயர்த்தி யிருக்கிறார்கள். இந்த டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் போன்றவைகளுக்கு வரியை உயர்த்தியிருப்பதால் அரசுப் போக்குவரத்துக் கழகத்திலே கூட கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதாக சில நாட்களுக்கு முன்னாலே பத்திரிக்கையில் பார்த்தேன். தனியார்கள் கூட இந்த வரி உயர்வினால் டிக்கட் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனாலும் மக்கள் பாதிக்கப் படுவார்கள்.

(முற்பகல் 11-00)

ஆக இப்படிப்பட்ட சின்ன சின்ன வரிகள் மூலம் அரசுக்கு அதிக வருவாய் வரப்போவதில்லை, அதே நேரத்தில் வியாபாரிகள் விலையை உயர்த்தி, அதனால் பொது மக்கள் பெருமளவுக்குப் பாதிக்கப்படுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட வரி உயர்வினால் 5 கோடி, 6 கோடி ரூபாய் வருமானத்தைப் பெறுவதைவிட மத்திய அரசிலிருந்து மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கை தீவிரமாக வற்புறுத்தி பெற முயற்சிக்க வேண்டும். அதன் மூலமாக நம்முடைய வருவாயைப் பெருக்க வேண்டும். அதைச் செய்யாமல் ஏற்கனவே பாதிக்கப் பட்டிருக்கிற மக்களை மேலும் மேலும் பாதிக்கக் கூடிய முறையிலே வரி விதிப்புச் செய்யக் கூடாது.

அது மட்டுமல்ல. இந்தக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த விற்பனை வரி சம்பந்தமாக ஏற்படுகிற சங்கடங்களைப் பற்றி ஆராய்ந்து அறிவதற்கு மாநில, மாவட்ட அளவிலே குழுக்கள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும் அதில் வியாபாரிகள் அங்கம் வகிப்பார்கள் என்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் குடியாத்தம் நகரிலிருந்து வியாபாரிகள் அந்தக் குழுவிலே அங்கம் வகிக்கவில்லை. அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கேட்டிருக் கிறார்கள். 7, 8 மாதங்களாகக் கேட்டுக் கொண் டிருக்கிறார்கள். இன்னும் அளிக்கப்படவில்லை. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய பிரதிநிதிகள் அங்கம் வகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

கடைசியாக நான் குறிப்பிட விரும்புவது இந்த நுழைவு வரியை கட்டாயமாக நீங்கள் கைவிட வேண்டும். இது மக்களை பெரிதும் பாதிக்கும் என்பதால் சில நாட்களுக்கு முன்னால் மாநிலம் முழுவதும் இயக்கம் நடத்தப்பட்டது. மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிலே சொல்லியிருப்பதால் மேலும் அந்த வரி வருமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதைக் கைவிட வேண்டுமென்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கிற 1984–85 ஆம் ஆண்டிற்கான விற்பனை வரி மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நம்முடைய தமிழ்நாட்டின் முக்கிய வருவாயான விற்பனை வரியின் மூலமாக அனைத்து சமுதாய நலத் திட்டங்களையும் நிறைவேற்ற வழிவகை செய்யும் நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு ஒரு பெரும் வருவாயைத் தேடித் தருவதாக இந்த வரி இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் இந்த விற்பனை வரித் துறை ஆண்டுக்காண்டு செம்மையாக்கப்பட்டு, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் இந்தத் துறை பற்றிய பல்வேறு முன்னேற்றப் பணிகளை நாம் பார்த்து வருகிறோம். அந்த வகையிலே இந்த ஆண்டும் கூடுதலான மையங்கள், அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு, கூடுதலான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இந்த நெருக்கடியான நேரத்திலும் கூட தேவைப்படுகிற இடங்களில் எல்லாம் பணிகளை நிறைவு செய்கின்ற அளவுக்கு கூடுதல் அலுவலகங்களை ஏற்படுத்தி, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. அதன் காரணமாக ஆண்டுக்காண்டு இத்துறையின் மூலம் வருவாயும் பெருகிக் கொண்டே வந்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் விற்பனை வரி அதிக அளவில் கூடுதலாகாமல், அதிகமான வருவாயைத் தேடித் தந்திருக்கிறார்கள். அது வருவாய்த் துறை அமைச்சரின் தலைமையில் இந்தத் துறை ஏற்றுக் கொண்டிருக்கிற சீரமைப்புப் பணிகள் மூலமாகத்தான் முடிந்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வருமானத்தைப் பெறுகின்ற அதே நேரத்தில் மத்திய அரசிடமிருந்து விற்பனை வரியை கைவிட்டுவிட்டு, அதற்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வையை விதிக்க வேண்டுமென்று சொல்லி, அதை மாநில அரசுக்கு பகிர்ந்தளிக்கக் கூடிய திட்டத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னபோது, அதை ஆரம்பத்திலேயே





இந்த அரசு எதிர்த்து வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுதான் வன்மையாகக் கண்டித்து, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, இந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கூறியது. அதன் காரணமாக அவர்கள் இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்தாலும் இதற்கு மாற்றுக் கருத்து என்ன என்று கேட்டிருந்தாலும், தொடர்ந்து இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்து கொண்டிருப்பதாக நமக்கு சில நேரங்களில் தகவல் வருகிறது. இந்த நிலைக்கு மத்திய அரசு போய்விடாமல் நம்முடைய மாநில அரசு பார்த்துக் கொள்ள வேண்டும். விற்பனை வரி என்பது மாநில அரசின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு, சமுதாய நலப்பணிகளுக்கு ஆதாரமாக இருப்பதால் இதிலிருந்து வருகின்ற வருமானம் முழுவதும் மாநில அரசுக்கே இருக்கத்தக்க வகையில் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மத்திய அரசாங்கம் ரூ. 32,586 கோடிக்கு 1983–84 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தயாரித்து அளித்துள்ளது அவர்களுக்கு இருக்கிற வரவு இனங்களில் வருமான வரிக்கு முக்கிய காரணமாக இருக்கிறது. கஸ்டம்ஸ் வரி, கார்ப்பொரேட் வரி, இன்கம் டாக்ஸ், எக்சைஸ் டியூட்டி, இப்படி பெரும் நிதியாதாரங்களைத் தேடித் தருகிற பல வரி முறைகளைக் கொண்டிருக்கிற மத்திய அரசாங்கம் தொடர்ந்து எக்சைஸ் வரியில் நமக்கு உரிய பங்கினை அளிக்கவில்லை என்கிற குறைபாட்டையும், 7-வது பைனான்ஸ் கமிஷன்–நிதிக் குழுவினுடைய பரிந்துரை அடிப்படையில் அவர்கள் கொடுத்து வருகிற பங்கீடு நியாயமான முறையில் இல்லை என்பதையும் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே நமது வருவாயை எவ்வளவு தூரம் நாம் பெருக்கினாலும். கூடுதல் வரியை நம் மக்கள் மீது சுமத்தும் போது அவைகளைத் தாங்க முடியாத நிலையில், கூடுதலான நிதியாதாரங்களை, எக்சைஸ் வரியானாலும், இன்கம் டாக்ஸ்—ஆனாலும், அதிலிருந்து பெறுவதற்கு நாம் உரிமை படைத்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவு கூற விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய இன்கம் டாக்ஸ்–லிருந்து நமக்கு என்று தருகிற நிதியை அவர்கள் வெறும் கலெக்ஷன் அடிப்படையில் மட்டும் இல்லாமல், மக்கட் தொகையின் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கிறார்கள். அப்படி மக்கட் தொகை அடிப்படை என்று வருகிறபோது, ஒரு பக்கம் குடும்பக்கட்டுப்பாட்டைத் தீவிரமாக வருகிறபோது, ஒரு பக்கம் குடும்பக்கட்டுப்பாட்டைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகிறோம். இந்தியாவிலேயே குடும்பக் கட்டுப்பாட்டை சிறந்த முறையில் நிறைவேற்றுகிற மாநிலம் நம்முடைய மாநிலம் தான் என்று மத்திய அரசாங்கம் பாராட்டியிருக்கிறது. ஆகவே மக்கட் தொகையை தேசிய கொள்கையாக ஏற்று இருக்கிற நாம், அதன் அடிப்படையில் வருவாயைப் பிரித்துக் கொடுக்கிறபோது நமக்கு உரிய வருமானத்தைப் பெற முடியவில்லை.

1982-83-மத்திய அரசாங்க பட்ஜெட்டில் தமிழகத்திற்குக் கிடைத்தது 8 சதவீதம் தான். ஆனால் உத்தரப்பிரதேசத்திற்கு இன்கம் டாக்ஸ் டிவிடெண்டு 15 சதவீதமும், மகராஷ்டிரத்திற்கு 11 சதவீதமும் கிடைத்திருக்கிறது. ஆக இப்படிப் பல வழிகளிலே இன்றைக்கு இருக்கிற நிதி பகுப்பு முறையில் தமிழகத்தினுடைய உரிய வருமானங்கள் தடுக்கப் படுகின்றன. ஆகவே விற்பனை வரி மூலமாக அதிக நிதியை நமது மாநில அரசாங்கத்திற்குப் பெற்றுத் தருகிற முயற்சியில் நமது அரசு ஈடுபட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல மத்திய அரசாங்கத்தினுடைய எக்சைஸ் வரியைப் பொறுத்தவரையில், நமக்குக் கிடைக்கிற பங்கு அடிஷனல் எக்சைஸ் வரியில் ஸ்பெஷல் கமோடிட்டீஸ், சர்க்கரை டெக்ஸ்டைல்ஸ் (அதாவது ஜவுளி) இந்த இரண்டு பொருள்களின் மூலமாக நமக்குக் கிடைக்கிற வரி 6 சதவீதம், ஆனால் மகாராஷ்டிரத்திற்கு 17 சதவீதமும், உத்திரபிரதேசத்திற்கு 13 சதவீதமும் கிடைக்கிறது. ஆக வருமான வரியிலிருந்தும், எக்சைஸ் டியூட்டியிலிருந்தும் நமக்குக் கிடைக்கிற வருமானம் தொடர்ந்து குறைந்து கொண்டே வந்திருக்கிறது.

அடுத்து ரயில்வே கிரேண்டு, ரயில்வே பாசஞ்சர் ஃபேர் மூலமாக நமக்குக் கிடைப்பது 6.85 சதவீதம். உத்தரப் பிரதேசத்திற்கு 18 சதவீதம் என்ற நிலைமை இருந்து வருகிற காரணத்தால். தொடர்ந்து கட்சி வேறுபாடு இல்லாமல் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மக்கள் சார்பிலும், மத்திய அரசாங்கத்தினுடைய நிதி அதிகாரங்கள் பகிர்ந்து அளிப்பதில் ஒரு ஆய்வு, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம். வேறு ஒரு நிதிக் குழுவை அமைத்து இதற்கான பரிகாரம் வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தின் மூலம் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியாதாரங்களைப் பெறுகின்ற உரிமைக் குரலை நாம் எழுப்ப வேண்டும். நமக்குக் கிடைத்திருக்கிற வருமானம் மிகக் குறைவாக இருந்தாலும், அதில் ஆண்டுக்காண்டு பல சீரமைப்புகளை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கேளிக்கை வரியை சீரமைத்து கூடுதல் வரியை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் மக்கள் இந்த வரிப் பளு அதிகமாக இருக்கிறது என்று அவ்வப்போது கருதினால், அல்லது அரசு கருதினால் அவைகளை பரிசீலிப்பதற்கு, அதிலே அவர்களுக்கு விலக்கு அளிக்க கன்செஷன் என்ற முறையில் நிவாரணம் அளிப்பதற்கு நமது அரசு தயங்கவில்லை.





ஆகவே அந்த வகையில் முறையாக தமிழகத்தினுடைய விற்பனை வரியை நிர்வகித்து வருகிற மாண்புமிகு நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கீழே இயங்குகிற அந்தத் துறை பொதுமக்களுடைய பாராட்டுக்குரிய ஒரு துறை, ஆகவே அந்தத் துறையின் நிர்வாகத்தை மேலும் செம்மைப் படுத்த அவர்கள் இன்னும் கூட வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிதிநிலைக்கு ஏற்ப கூடுதலான பணியாட்களை அவர்களுக்கு தந்து இன்னும் வேகமாக அவர்கள் செயல்படுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

இன்று ஒரே ஒரு வரி விதிப்பில், அதாவது கடலை எண்ணெய்க்கான வரி விதிப்பில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக இதில் வியாபாரத்தில் ஈடுபட்டு உள்ளவர்களும் கடலை எண்ணெய் அரவை ஆலை வைத்திருக்கின்ற ஆலை அதிபர்களும் தொடர்ந்து கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை மட்டும் இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கிட்டத்தட்ட 20 சதவீதம் கொள்முதல் விலைக்கு, கூடுதலான வரி விதிப்பு இருக்கிறது. அதன் காரணமாக வரி ஏய்ப்பதற்கான வழிகளும், வரி ஏய்ப்புக்கான முயற்சிகளும் ஒரு பக்கம் இருப்பது மட்டுமல்லாமல், ஒரு எசன்சியல் கமாடிட்டி, அத்தியாவசியமான உணவுப் பொருளினுடைய விலையேற்றத்திற்கும் அந்த வரி விதிப்பு முறை காரணமாக இருக்கிறது. இதிலே சென்ட்ரல் எக்சைஸ்-ம் வருகிறது, நம்முடைய வரியும் வருகிறது. இது தவிர மார்க்கெட் கமிட்டியினுடைய சர்-சார்ஜும் வருகிறது. இப்படிப் பல வரிகளை இந்தக் கமாடிட்டியோடு இணைப்பதன் காரணமாக, பல முனை வரியாக இருப்பதன் காரணமாக, பல இடங்களில் வரி ஏய்ப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து ஏற்படுகிறது என்பதை அந்த ஆலையை மில்லை நடத்துகிறவர்கள் கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்த வரி ஏய்ப்பைத் தடுக்கிற முறையில் அதிலே இருக்கிற பல முனை வரியை சீராக்கி ஒரே இடத்திலான வரியாக நாம் மாற்றுவது அந்த அத்தியாவசியமான பொருளுக்கான விலையைக் குறைப்பதற்கும் வழி ஏற்படும், அதே நேரத்தில் கூடுதலான வருமானத்திற்கும் வழி ஏற்படுத்தும் என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விற்பனை வரியை லாட்டரி சீட்டுக்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த பரிசுச் சீட்டைப் பற்றி பல நேரங்களில் இங்கே கேள்வியாக வந்தபோது வேறு மாநிலங்களில் இருந்து வருகிற பரிசு சீட்டைக் குறைப்பதற்கு அல்லது அதனுடைய விற்பனையைத் தடுப்பதற்கு ஏதாவது தீவிரமான நடவடிக்கைகளை நாம் எடுத்தாகவேண்டும் என்று இந்த மன்றத்திலே இருக்கிற பல்வேறு எதிர்க்கட்சியைச் சேர்ந்த

உறுப்பினர்கள் எல்லாம் வலியுறுத்தி வந்தார்கள். அதற்கான ஒரு முறையைக் கையாண்டு, அதற்கான விற்பனை வரியை, 20 சதவீதம் என்று கொண்டு வந்தபோது, இப்போது அனைத்து எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் நண்பர்களும் அதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆகவே, பரிசுச் சீட்டைப் பற்றி தொடர்ந்து கூறி வந்த கருத்துக்களை மறந்துவிட்டு, இந்தச் சட்டம் கொண்டு வந்து வரி விதிப்பு கொண்டு வந்த நேரத்தில் அவர்கள் எதிர்ப்பது என்பது ஒரு சந்தர்ப்பவாதம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அதைச் சீரமைப்பதற்கான வழியைக் கையாளவேண்டுமே ஒழிய முழுக்க முழுக்க வெளி மாநிலத்தின் சீட்டுக்களை, அதன் மீதான விற்பனையைக் குறைப்பதற்கும், நமது மாநிலத்தின் சீட்டுக்களின் விற்பனையை அதிகரிப்பதற்கும், இது ஒரு நல்ல வரி விதிப்பாகும். இது பேராசைக்காரர்களின் மீது போடப்பட்ட வரி விதிப்பே தவிர, வரி விதிப்பினால் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள் என்கிற வகையில், ஏஜெண்டுகளுக்காக இங்கே பேசியதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. ஆகவே, இதைப்போன்ற தேவையான கூடுதல் வருமானத்தைப் பெறுவதற்கும், நிதி ஆதாரங்களை பெருக்குவதற்கும் கொண்டு வரும் இந்த திட்டத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்,

அடுத்து 46-வது அரசியல் திருத்தச் சட்டம். நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் சுட்டிக்காட்டி இருப்பதுபோல் உரிய முறையிலே இன்று மத்திய அரசாங்கத்தால் ஆராயப்படவேண்டிய, உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய திருத்தம். அதை நான் மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வந்து மானியக் கோரிக்கையில் கொண்டு வரப்பட்டு இருக்கிற நல்ல திட்டங்களை நல்ல சீர்திருத்தங்களை வரவேற்று எனது உரையை முடிக்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற மானியக் கோரிக்கை எண் 4-ன் மீது பேசுகின்ற நல்ல வாய்ப்பை அளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றையதினம் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிகத் தெளிவாக பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக இங்கே எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூறும்போது, ஏதாவது இந்த அரசின் மீது குறை சொல்லவேண்டும், ஏதாவது குற்றம் காணவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் அவர்கள் பேசியிருக்கிறார்களே தவிர நல்ல பல கருத்துக்களை எடுத்துக்கூற அவர்கள் முன்வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இங்கே அவர்கள் வரி விதிப்பைப் பற்றிக் கூறும்போது மஞ்சள் மற்றும் நெற்றிப்பொட்டு ஆகிய



வற்றின் மீது வரியை விதித்துள்ளதாக எடுத்துக்கூறினார்கள். அவர்கள் பார்ப்பது லிப்ஸ்டிக்கை நெற்றிக்குக் கீழே போட்டு இருக்கிற மகளிரைப் பார்க்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மஞ்சளை தாய்மார்களெல்லாம்மாதத்திற்கு 2 கட்டுக்கள் தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இந்த மஞ்சள் எந்தெந்த வகைகளுக்கு பயன்படுகிறது? அது எப்படி ஆடம்பரப் பொருளாகக் கொண்டு வரப்படுகிறது? அதைப் பார்க்க வேண்டும். விக்கோ டெர்மரிக் போன்ற ஆடம்பரப் பொருளாகக் கொண்டு வரப்படுகிறது. இது போன்ற இனங்களுக்கு வரி விதிப்பது ஒன்றும் தவறு இல்லை என்று கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் அவர்களுக்கு எந்தெந்த வகையிலே வருமானத்தை பெருக்க வேண்டுமோ அந்தந்த வகைகளாகப் பார்த்து, வருமானத்தை பெருக்கிக்கொண்டு வருகிறார்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் கூறியதெல்லாம் மிகப் பொருத்தமானதாகும். இன்றையதினம் தமிழகத்திலே நாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம். கிராமங்களுக்குச் சென்றால், கிராமத்திலே இருப்பவர்கள் அவர்களுக்கு இருக்கிற பிரச்னைகளை, குறைகளை நம்மைப் பார்த்துத்தான் கேட்கிறார்களேயல்லாமல், அங்கேயிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, மத்திய அரசையோ பார்த்து இருக்கின்ற பிரச்னைகளை தீர்க்க வேண்டும் என்று கேட்பதில்லை.

மாநிலங்களிலே எப்படி உள்ளாட்சி மன்றங்கள் செயல்படுகின்றனவோ, அதைப்போல இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை பிரச்னைகளையும் தீர்க்க வேண்டிய பொறுப்பில், உள்ளாட்சி மன்றங்களாகவே மாநில அரசுகள் இருக்கின்றன.

கடந்த ஆண்டு கடுமையான வறட்சி, அதேபோல கடுமையான வெள்ளத்தையும் சந்திக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனாலே மாநிலத்திலே எந்த அளவுக்கு மின் தட்டுப்பாடு ஏற்பட்டு, அதன் காரணமாக நமக்கு வரக்கூடிய வருமானம் குறைந்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இந்த நேரத்திலே நாம் ஏதாவது கூடுதலாக வரியை விதித்துத்தான் இந்த நிலைமையை சமாளிக்க முடியும். நிலைமை இப்படி இருக்கும்போது, இன்றைக்கு கூடுதலாக துணிகள், சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது விற்பனை வரிக்கு பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை மத்திய அரசு போட்டிருக்கிற காரணத்தாலே, அவற்றின் மீது மேலும் வரி விதிக்க முடியாத நிலைமை இருக்கிறது.

ஆனால் மத்திய அரசு இதன் மூலம் பெறுகின்ற வருவாயில் உரிய பங்கை முறையாக மாநில அரசுக்கு கொடுக்கின்றதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மத்தியிலே பொறுப்பிலே இருக்கின்றவர்கள், அவர்களுக்கு என்று நாட்டு பாதுகாப்பையும், அதேபோல வெளிநாட்டு உறவையும் மட்டும் வைத்துக் கொண்

மீதி அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை பன்னெடுங்காலமாக வைக்கப்பட்டு வருகிறது. மாநிலம் தன்னாட்சி பெறவேண்டும். அப்போதுதான் மாநில அரசு தன்னுடைய மாநில மக்களுக்கு ஆற்றக்கூடிய கடமைகளை முறையாக செய்ய முடியும். ஆனால் இங்கே மத்திய அரசு எந்தெந்த துறைகளிலே எல்லாம் அதிகமான வரி வருமானம் கிடைக்க முடியுமோ, அவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு மத்திய எக்ஸைஸ் மூலம் அதிக வருவாய் கிடைக்கிறது. அதுபோல வருமான வரி மூலம் வருவாய் செல்கிறது. வெல்த் டேக்ஸ் வேறு போடுகிறார்கள். இப்படி பல்வேறு வரிகள் மூலமாக மத்திய அரசுக்கு பெருவாரியான வருமானம் வருகிறது. எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சின்னராஜ் அவர்கள் கூறியது போல, அவர்கள் இம்மாநிலத்தில் இருந்து பெறுகின்ற அளவிற்கு உரிய பங்கை நமது மாநில அரசுக்கு கொடுக்கிறார்களா என்றால் இல்லை. ஜனத்தொகையின் அடிப்படையில்தான் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள் ஆனால் நாம் ஜனத்தொகையை பெருக்கக் கூடாது என்று, குடும்பக் கட்டுப்பாட்டை தீவிரமாக கொண்டு வர வேண்டும் என்று முனைப்பாக முன் நின்று செயலாற்றி, அதில் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறோம். அப்படி இருப்பதினால் நமக்கு உரிய பங்கு கிடைப்பதில்லை. ஆகவே, மத்திய அரசு இதில் சற்று யோசித்து செயலாற்ற வேண்டும். இந்த மாநிலத்திலிருந்து என்ன வருவாய் வருகிறதோ, அதைச் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் உரிய பங்கைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதற்கான திரிபாதி கமிட்டியினுடைய அறிக்கையை வைத்துக் கொண்டு, மத்திய அரசு வனஸ்பதி, மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துகள், சிமிட்டி, காகிதம் மற்றும் காகித அட்டை, பெட்ரோலியம் போன்ற பொருள்கள் மீது வருமான வரிக்கு பதிலாக கூடுதல் ஆயத்தீர்வையை விதிக்க வேண்டும் என்ற விருப்பத்தை அடிக்கடி தெரிவித்து வருகிறார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் அதற்கு இந்த மாநில அரசு கடுமையான எதிர்ப்பை தெரிவித்து வருகிறது. இதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளார்கள். இது மாநிலத்தினுடைய வருவாயை பாதிக்கும். மாநில அரசு செயல்பட முடியாத சூழ்நிலை ஏற்படும். ஆகவே, இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ளக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். அதை ஆராய்வதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே நம்முடைய மாநில முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கூட உறுப்பினராக இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சூழ்நிலை கைவிடப்பட வேண்டும். மாநில அரசுகளுக்கு வருகின்ற வருமானத்தில் கை வைக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இந்த அரசைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு ஏழை எளிய மக்களுக்கு நல்ல பணிகளை திட்டங்களாக செயலாற்றி வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும். பல்வேறு வரி குறைப்புகளையும் இந்த அரசு செய்திருக்கிறது. ஆனால் அதையெல்லாம் மாற்றுக் கட்சியினர் பாராட்டுவதற்கு தவறியிருக்கின்றனர்.

டிரக்குகள், பேருந்துகள் ஆகியவற்றின் மூலமாக நம்முடைய மாநிலத்திற்கு கிடைக்கின்ற வருவாயையும், அண்மையிலே உள்ள பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களுக்கு கிடைக்கின்ற வருவாயையும் நாம் பன்னெடுங்காலமாக பார்த்து வருகிறோம். அண்டை மாநிலங்களில் நிலவும் குறைந்த வரிவீதத்தையும், வணிகத்தையும் மாற்றுவதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்பதையும் கருத்தில் கொண்டு தான், டிரக்குகள் பேருந்து அடிக்கட்டைகள் ஆகியவற்றின் விற்பனை மீது 15 சதவீதத்திருந்து 9 சதவீதமாக வரி குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக வணிகம் பெருகி நம்முடைய மாநிலத்திற்கு அதிக வருமானம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அடுத்து, அதேபோல குன்னூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் விளையக் கூடிய ஏலம், தேயிலை போன்ற பொருள்களுக்கு, உள்ளூர் வணிகத்தை ஊக்குவிப்பதற்காக, 5 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாக வரி குறைக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-20)

அடுத்து இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள பெரும்பான்மையோர் செய்கிற தொழில் வேளாண்மைத் தொழில்தான். 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்று சொல்வார்கள். வேளாண்மைத் தொழிலைச் செய்கிறவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தருகின்ற முறையிலே வேளாண்மைக்குப் பயன்படுத்துகின்ற கருவிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அது பாராட்டத்தக்கது.

அதைப்போலவே ஸ்ரீலங்கா அகதிகளுக்காக சிறு தொழில்கள் நிறுவனத்திடமிருந்து உதவிபெற்று ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற 70 கடைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்காவிலிருந்து வந்த அகதிகள்பற்றி மாற்றுக் கட்சியினர் இங்கேயும் வெளியேயும் இந்த அரசு சரியாகச் செய்யவில்லை என்று பேசுகிறார்கள். ஆனால் இந்த அரசு அவர்களைப் பலப்படுத்துகின்ற முறையிலே அவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்கிற முறையிலே அவர்கள் வைத்திருக்கிற கடைகளுக்கு விலக்கு அளித்திருக்கிறது. அதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போன்று பல திட்டங்களை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. ஏழை மக்கள் பயன்படுத்துகின்ற டிரான்சிஸ்டர்கள் மீது 15 சதவீதமாக போடப்பட்டிருந்த வரியை 10 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். சமூக நலத்துறையால் நடத்தப்படும் பல்வேறு நிறுவனங்களுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்குச் சமுதாயக் கண்ணோட்டத்தோடு எந்த எந்தத் துறையிலே வரி போடவேண்டுமோ அந்தத் துறையிலே சமுதாயத்தைப் பாதிக்காத வகையிலே காரியங்களைச் செய்து வருகிறோம். இதற்காக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இந்த வரிவிதிப்பின் மூலம் மொத்த வருமானத்திலே 69 சதவீதம் நம்முடைய மாநிலத்திற்கு வருமானம் வருகிறது. கடந்த ஆண்டு 696 கோடியாக இருந்த வருமானம் 1982–83 இல் அதில் 18 கோடி ரூபாய் குறைந்து இருக்கிறது. நான் நினைக்கிறேன், பெரு முதலாளிகள் வரி ஏய்ப்பதன் காரணமாகக் குறைந்திருக்கிறது என்று. இந்த துறையிலே யாருக்கு வரிச் சலுகைகள் செய்ய வேண்டுமோ அவர்களுக்குச் செய்யாமல் இவர்கள் வரியை ஏய்க்கக்கூடிய முறையிலே சந்தர்ப்பம் கொடுப்பதன் மூலமாக கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. ஒரு பக்கத்திலே வரிபோட்டு வரியை வசூலிப்பதிலே தடங்கல் செய்வது, வேறு ஒரு பக்கத்திலே கடுமையாக வசூல் செய்வதன் மூலமாக சிறு சிறு ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களைப் பாதிக்கச் செய்வதன் காரணமாக இந்த வரிகளை ஓரளவுக்குத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல முனை வரி ஒழிக்கப்படவேண்டும், ஒரு முனை வரிபோட வேண்டுமென்று பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம், ஆனால் தொடர்ச்சியாக எங்கு பார்த்தாலும் ஒரு முனை வரிக்குப் பதிலாக பலமுனை வரி தொடர்ந்து இருந்து வருகிறது. ஆகவே அதை மாற்றி ஒரு முனை வரிபோடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நுழைவு வரி என்ற ஒரு வரியை ஏற்கெனவே இந்த மன்றத்திலே கொண்டு வந்தபோது கடுமையாக எதிர்க்கப்பட்டது. பிறகு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்று அதுவும் முதலாளிகள் வேண்டுகோளுக்கிணங்க, அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு, பேச்சுவார்த்தைக்கு இணங்க என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது நிறுத்தப்பட்டிருக்கிறது, நிச்சயமாக நுழைவு வரி வந்தே தீரும் என்று சொல்லப்படுகிறது. இந்த மன்றம் அதற்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்திருப்பதால் அதைத் தள்ளுபடி செய்யவேண்டும், நிறுத்தியாகவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அது மட்டுமல்ல, பரிசுச் சீட்டு வெளியிடுவது கூடாது பிற மாநிலத்திலே இருந்தும் கொண்டுவரக்கூடாது என்ற ஒரு கருத்து நிலவிக்கொண்டிருக்கிறபோது பரிசுச் சீட்டிற்கு 20 சதவீதம் வரி போடப்படுகிறது. அதைப் போடுவதன் மூலமாக சாதாரண மக்கள் பரிசுச் சீட்டு விற்பனையாளர்களுக்கு கெடுதலை, சிக்கல்களை செய்கிறது. ஆகவே அந்த வரியை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சர்வசாதாரணமாக இருக்கக்கூடிய தொழிலாளி வர்க்கம் வாங்கக்கூடிய சம்பளத்திற்கு தொழில் வரி போடப்படுகிறது. அவர்கள் எந்த அளவுக்கு சம்பளம் வாங்குகிறார்களோ அதற்கு தொழில் வரி போடப்படுகிறது. அந்தத் தொழிலாளர்களுக்குப் போடப்படும் வரியை நிறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கோழி தீவனத்திற்கும் வரி போடப்படுகிறது. கோழி வளர்ப்பு, கோழிப் பண்ணை வளர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் கோழித் தீவனத்திற்கு வரி போடப்படுகிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்து தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தி நூலுக்கு வரி 3 லிருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதன் மூலமாக பருத்தி ஆடையை பயன்படுத்துகிற மக்களுக்கு அதிகமாக தொந்திரவு ஏற்படுத்தும். ஆகவே அந்த வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும். ஒட்டு மொத்தமாகப் பார்ப்போமானால் குதிரை பந்தயத்திற்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்று கேள்விபடுகிறோம் குதிரைப் பந்தயம் நாட்டிலே இருக்கக்கூடாது என்று சொல்கிற நேரத்திலே குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்றும், ஒருமுனை வரியை கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு கடைசியாக இந்த நுழைவு வரியை உடனடியாக தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவையினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் நான் கொடுத்து இருக்கின்ற வெட்டு பிரேரணையினை வலியுறுத்தி இங்கு தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை இந்த மா-மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்த மானிய கோரிக்கையின் மீது மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கின்ற இந்த குறிப்பில் பல்வேறு புள்ளிவிவரங்களை கொடுத்து இருக்கிறார்கள்.

முதலாவதாக, 1982–83 ஆம் ஆண்டில் மாநில அரசுக்கு மாநில வருவாயில் 69 சதவீதத்திற்கும் அதிகமாகவே கிடைத்து இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். 1982–83 இல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 696 கோடிக்கு அதிகமாகவே கிட்டியிருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதிலே கொடுக்கப்பட்டு இருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்ற நேரத்தில் 1978-79 ஆம் ஆண்டு ஏறத்தாழ 319 கோடி ரூபாய் நம்முடைய அரசுக்கு இந்த துறையின்மூலம் வருவாய் கிடைத்து இருக்கிறது. 1982–83 ஆம் ஆண்டில் இது ஏறத்தாழ 700 கோடி ரூபாய் கிடைக்கின்ற அளவுக்கு இன்னும் அதிகமாக சொல்லவேண்டும் என்றால் நூற்றுக்கு அதிகமான சதவீதம் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளில் அதிகமாக கிடைத்து இருக்கிறது. ஒன்று வரி உயர்வு இன்னும் பல்வேறு இனங்கள் மூலமாக வரி போடுவதன் மூலமாக அரசுக்கு இந்த வருவாய் கிட்டியிருக்கிறது. பொதுவாக அரசு பல்வேறு க்ஷேமநல பணிகளைச் செய்வதற்கு வரி மிகவும் அவசியம் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்கமுடியாது. அரசு வரி போடுகின்ற நேரத்தில் அந்த வரி சுமைகளை தாங்குகின்றவர்கள் மீதுதான் அந்த வரியை போடவேண்டும், அந்த வரி சுமையை தாங்க முடியாதவர்கள் மீது அரசின் வரி பளு இருக்கக்கூடாது என்பதில் நாம் அனைவரும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால் அண்மைக் காலங்களில் அரசு போடுகின்ற வரியைப் பார்க்கின்ற நேரத்தில் இந்த கொள்கைக்கு உடன்பாடாக இருக்கிறதா என்றப் பார்த்தால் நிச்சயமாக இல்லை என்று என்னால் சொல்ல முடியும். இந்த அரசு ஏழைகளின் பிரதிநிதிகளாக இருந்து கொண்டிருக்கிறது என்று பல்வேறு நேரங்களில் அரசுத் தரப்பில் சொல்லப்படுகிறது, ஆனால் அரசினுடைய இந்த வரி விதிப்புக் கொள்கையைப் பார்க்கிற நேரத்தில் அண்மைக் காலங்களில் பெட்ரோல், டீசல் போன்ற இனங்களிலே வரியை உயர்த்தியிருக்கிறார்கள். பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை முன்னிட்டு சர்வ தேசப் பொருளாதார பிரச்சினைகளை நாம் அடிப்படையாக வைத்துப் பார்க்கிற நேரத்தில் சிலபல கட்டாயங்களுக்கு உட்பட்டு மத்திய அரசு எண்ணையின் விலையை உயர்த்துகின்ற நேரத்தில் ஒருமித்த குரலாக மத்திய அரசு எண்ணெயின் விலையை உயர்த்தியது தவறு என்று இங்கே கூக்குரல் எழுப்பப்படுகிறது.

(முற்பகல் 11-30)

ஆனால், அதேநேரத்தில் டீசல், பெட்ரோல் போன்ற பொருட்களுக்கு வரியை உயர்த்துவது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்ற வினாவினை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. டீசலைப் பொறுத்தவரையில் வாகனங்களுக்குப் பயன்படுகின்றது என்பது ஒருபுறம் இருந்தாலும், விவசாயிகளுக்கு நிரந்தரமாக மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற பொழுது டீசல் மீது வரியை உயர்த்துவது பொருத்தமாக இருக்காது என்பதை



வலியுறுத்த விரும்புகிறேன். விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு இடுபொருட்களின் விலையும் உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் டீசலுக்கான விலையையும் உயர்த்துகின்ற காரணத்தால் ஏற்கனவே இருக்கின்ற சுமையை அதிகப்படுத்துவதாக அது அமையும். எனவே, விவசாயிகளுக்கு டீசல் விலையைக் குறைத்து, நியாயமான விலையில் அவர்களுக்குக் கிடைக்கின்ற முயற்சிகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த முறை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்தபொழுது பல்வேறு இனங்களில் வரிகளை அரசாங்கம் உயர்த்தியதை எல்லா எதிர்க்கட்சிகளும் ஒருமித்த குரலில் எதிர்த்தோம். அந்த வகையில் பணக்காரர்களைப் பாதிக்கின்ற வரிகள் அல்ல, ஏழை எளிய மக்களை, குறிப்பாக நடுத்தர மக்களை பாதிக்கின்ற வகையில். இந்த அரசாங்கம் வரிகளை உயர்த்தியிருந்ததால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முறையில் நாங்கள் வெளிநடப்பு செய்தோம் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மஞ்சள், பூண்டு, கடுகு போன்றவைகளுக்கு விதிக்கப்படுகின்ற வரியைப் பொறுத்தவரையில் பணக்காரர்களுடைய வருவாயைப் பார்க்கின்றபொழுது, அவர்களுடைய செலவை ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில் இந்த இனங்களில் வரி உயர்வானது அதிகமாக அவர்களுக்குச் சுமையாக இருக்க முடியாது. ஆனால் ஏழை எளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற அந்தப் பொருட்களுக்கு வரியை உயர்த்துகின்ற நேரத்தில் நிச்சயமாக அந்தச் சுமை அவர்களுக்கு அதிகமாக இருக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

வெள்ளைப் பூண்டிற்கு இந்த அரசாங்கம் வரி போட்டிருக்
கிறது. இந்த மாமன்றத்தில் இந்த வரிசையிலே இருக்கின்ற
பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். வெள்ளைப் பூண்டு
என்பது மஞ்சளைப் போன்ற ஒரு காய்கறி இனமாக இருக்கிறது.
எனவே, அதற்கு வரி போடுவது என்பது நியாயமாக ஆகாது
என்று சொல்லியிருக்கிறோம். எனக்குக் கிடைத்த தகவல்களின்
படி, இந்த வெள்ளைப் பூண்டுக்கு வரி போடுவது நியாயமாக
ஆகாது, அது காய்கறி இனத்தைச் சார்ந்தது என்றெல்லாம்
ஒரிசா உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக
அறிகிறோம். நம்முடைய மாநிலத்திலேயேகூட வணிக வரித்
துறை—சேல்ஸ் டாக்ஸ் அப்பலேட் ட்ரிப்யூனல்கூட ஒரு தீர்ப்பில்
கடந்த ஆண்டு கொடுத்திருப்பதாக எனக்கு விவரம் கொடுத்திருக்
கிறார்கள். வெள்ளைப் பூண்டைப் பொறுத்தவரையில் அது
காய்கறி இனத்தைச் சார்ந்தது. [illegible] இனத்தைச் சார்ந்தது.
அழுகின்றாலும், வெம்பினாலும் [illegible] தொல்லை நிரம்பிய
பொருளாத அது இருக்கிறது. [illegible] ஆகவே, வெள்ளைப் பூண்டு
காய்கறி இனத்தைச் சார்ந்ததாக இருப்பதால் அதற்கு வரி
விலக்கு கொடுக்க வேண்டுமென்று எங்களிடத்திலேயும்

சொன்னார்கள்! அரசாங்கத்திடத்திலேயும் அப்படிப்பட்ட கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள் என்று நான் கேள்விப் படுகிறேன். இந்தப் பூண்டுக்குப் போடப்படுகின்ற வரியின் காரணமாக எவ்வளவு வருமானம் வருகிறது என்று பார்த்தால் கோடிக்கணக்கில் வரவில்லை; 700 கோடி, 800 கோடி என்று வரும் நேரத்தில் ஐந்து இலட்சம் அல்லது ஆறு இலட்சம்தான் வரும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அரசாங்கம் இந்தப் பிரச்னையில் உள்ள நியாயத்தைக் கருத வேண்டும். எத்தனையோ மலைஜாதி ஏழை மக்கள் நன்மை அடைகின்ற விதத்தில், ஏழை எளிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் பயனடையும் வகையில் இருக்கின்ற இந்த பூண்டுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். இந்த நல்ல செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் தங்களுடைய பதில் உரையிலே சொல்லுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதனால் அரசாங்கத்திற்கும் விளம்பரம் கிடைக்கும், ஏழை எளிய மக்களும் நன்மை அடைவார்கள்; இதன் காரணமாக அரசாங்கத் திற்கு பெரிய அளவில் வருமானம் குறைந்து விடாது என்று கூற விரும்புகிறேன்.

சைக்கிள்களின் உதிரிப் பாகங்களுக்கு வரியைக் குறைக்க வேண்டுமென்று பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த வரிசையில் உள்ள நாங்கள் சொல்லியிருக்கிறோம். மோட்டார் வாகனங்கள் ஒரு புறம் இருக்க ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற சைக்கிள் பாகங்களுக்கு வரிபோடுவது அல்லது வரியை உயர்த்துவது சரியல்ல. முன்பு 6 சதவீதம் வரியாக இருந்தது. பிறகு நாங்க ளெல்லாம் எடுத்துச் சொன்ன பிறகு அதில் உள்ள நியாயத்தை ஏற்றுக்கொண்டு அதை 3 சதவிதமாகக் குறைத்திருக்கிறார்கள். அதைப் பாதியாக ஆக்கியிருக்கிறார்கள். அவ்வாறில்லாமல் அந்த வரியை அறவே நீக்க வேண்டும். அதனால் அரசாங்கத்திற்கு மிகப் பெரிய இழப்பு வந்துவிடாது. எத்தனையோ இனங்களில் வரிகளைப் பெறுகிறோம்; சாராயக் கடைகள், மதுக் கடைகள் மூலம் கோடி கோடியாக வருமானம் கிடைக்கின்ற நேரத்தில் இந்த ஏழை எளிய நடுத்தர மக்கள் பயன்படுத்துகின்ற சைக்கிள் களின் உதிரிபாகங்களுக்கு வரியை எடுத்து விடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பக்கத்து மாநிலங்களில் இதற்கு வரி இல்லை. எனவே, அவர்கள் சொல்லுகின்ற நியாயத்தை ஒத்துக்கொண்டு, 6 சதவிகிதத்தி லிருந்து 3 சதவிகிதமாகக் குறைத்திருப்பதைப்போல, அதை அறவே நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற பால் பவுடருக்கு வரியை உயர்த்திய பொழுது கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தில் அன்றைக்கு வெளிநடப்பு செய்தோம். ஆகவே அதில் உள்ள நியாயத்தை உணர்ந்து இப்பொழுது அவை களுக்கு வரிவிலக்கு அளிப்பது மெத்த பொருத்தமாக இருக்கு மென்று கருதுகிறேன்.



எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், இந்த நுழைவு வரியை எந்த விதத்திலும் நுழைய விடக்கூடாது என்று. கடந்த ஆண்டு சட்டமன்றத்தில் எதிர் வரிசையில் இருந்தவர்கள் ஒருமித்த குரலில் எதிர்ப்பு தெரிவித்து, அரசாங்கம் அதை தற்காலிகமாகத்தான் நிறுத்தியிருக்கிறது. இதனால் ஒருவேளை திரும்பவும் வந்துவிடலாம் என்ற பயம் பொது மக்களிடத்திலே இருப்பதால் அதை அறவே ஒழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் அதாவது நுழைவு வரி இல்லை என்றாலும் கூட அதை விட அதிகமான அளவில் சுமை கூடுகின்ற வகையிலே இன்றைக்கு வணிக வரிகளை அரசாங்கம் உயர்த்தி இருக்கின்றது. இது ஏற்கனவே இருக்கின்ற பளுவை அதிகமாக ஆக்குகின்ற முறையாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விளக்கக் குறிப்பிலே சொல்கின்றபோது வணிக வரிச் சுமையை நுகர்வோர் மீது சுமத்தக்கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். எப்படி வணிகர்கள் நுகர்வோர் மீது சுமத்தாமல் இருப்பார்கள்? கிடைத்திருக்கின்ற விவரங்களைப் பார்க்கின்ற போது மூன்று இலட்சத்திற்குக் கீழே அந்தத் தொகை இருக்குமானால் அதற்கு வரி கிடையாது என்று சொல்லி இருக்கிறார்கள். 3 இலட்சத்திற்கு மேல் 5 இலட்சம் வரை யுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்தப் பட்டிருக்கின்றது. இது 25 சதவீதம் உயர்வாகும். 5 இலட்சத் திலிருந்து 7 இலட்சம் வரை உள்ள தொகையைப் பொறுத்த வரையில் .5 சதவீதத்திலிருந்து .7 சதவீதமாக உயர்த்தி இருக்கிறார்கள். இது 40 சதவீத வரி உயர்வாகும். 7 இலட்சத்திற்கு மேலே 10 இலட்சம் வரை உள்ள தொகை யினைப் பொறுத்தவரையில் .6 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இந்த வரி உயர்வு 65 சதவீதமாகும். அதைப்போலவே 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகையைப் பொறுத்தவரையில் .7 சதவீதத்திலிருந்து 1.22 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக் கின்றது. இது ஏறத்தாழ 70 சதவீத வரி உயர்வாகும். இப்படி 50, 60, 70 சதவீதம் என்ற அளவுக்கு வரியினை உயர்த்தி இருப்பது நியாயமா?

ஆனால் நாங்கள் ஏழை மக்களின் மீது வரி போடவில்லை. வணிகர்களின் மீதுதான் வரி போட்டிருக்கிறோம் என்று நீங்கள் சொல்லக்கூடும். வணிகர்கள் அந்த வரியினை எப்படிச் செலுத்து வார்கள் வணிகர்கள், நுகர்வோர்களுக்குக் கொடுக்கின்ற பொருட்களின் விலையைத் தானே உயர்த்துவார்கள் மறைமுக மாக. ஆகவே இது மறைமுகமாக மக்களின் மீது விதிக்கப்படு கின்ற வரியாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு அதிகமான அளவுக்கு வரியினை உயர்த்தி இருப்பது நியாயம்தானா? வணிகர்கள் பெயராலே சாதாரண மக்கள் வாங்குகின்ற அன்றாடப் பொருட்களின் மீதும் இந்தச் சுமையை நீங்கள் சுமத்துகின்ற காரணத்தால், அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லாட்டரி டிக்கட் விற்பனையில் 20 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கின்றது. பொதுவாக லாட்டரிச் சீட்டு விற்பனை வேண்டாம் என்று சொல்லக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள். ஏழை எளிய மக்களுடைய கற்பனை யான ஆசையைத் தூண்டக்கூடிய வகையில் மறைமுகமாக இந்த லாட்டரி சீட்டுகள் துணையாக இருக்கின்றது. அப்படிப் பட்ட ஆசையைத் தூண்டுவதற்குத் துணையாக அமையும் இந்த லாட்டரிச் சீட்டு விற்பனை என்று சொல்லக் கூடிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாங்கள். அப்படிப்பட்ட லாட்டரிச் சீட்டு விற்பனையில் வரி இப்போது 20 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. அவ்வாறு உயர்த்தப்படுவதன் காரணத்தால் அந்தச் சுமை வாங்குவோர்மீது தான் விழுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே அரசாங்கம் இதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அரசாங்கம் வணிகவரி போட்டியிருக்கின்றது. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் திரைப்படக் கொட்டகைகளில் அதிகமான பணத்திற்கு டிக்கெட் விற்றாலும் கூட அங்கே திரைப்படக் கொட்டகைகளில் செய்யப்படவேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. குளிர் சாதன வசதி போன்ற வற்றுக்கெல்லாம் சேர்த்து அதிகமான தொகையை வசூலித்துக் கொண்டு குளிர்சாதன வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட நிலையில் கட்டணத்தையாவது குறைக்கிறார்களா என்றால் குறைப்பதில்லை. ஆகவே படம் பார்ப்பவர்களின் பல்வேறு வசதிக்காக என்று கட்டணம் வாங்கினாலும் அந்த வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதை எல்லாம் அரசாங்கம் முறையாகக் கவனிக்க வேண்டும். வியாபாரிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் இடையே சம்பளம் இல்லாத அலுவலர்களாகத் தான் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பொது மக்களிடத்திலே இருந்து வரியைப் பெற்று அரசாங்கத்திற்குக் கொடுக்கக் கூடிய பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கின்ற காரணத் தால் வணிக வரி அலுவலகத்தில் வியாபாரிகள் தங்க வசதி களையும், பல்வேறு நல்ல வாய்ப்புகளையும் செய்துகொடுக்க வேண்டும்.

செக் போஸ்ட்கள் என்ற அளவிலே ஆங்காங்கே நியமிப் பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்றது. ஆனால் அந்த செக் போஸ்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது அது ஒரு சடங்காகத்தான் நடப்பதாகத் தெரிகின்றது. போக்குவரத்திலே செல்கின்ற லாரிகளுக்கும் மற்றவைகளுக்கும் வழியினை அடைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு தடங்கலாகத்தான் இருக்கின்றதே தவிர, லாரிகளிலே ..ன்னென்ன பொருட்கள் வருகின்றன என்பதைச் சரியாக முறை ..ாக கண்காணிப்பதில்லை. எந்த இடத்திலும் அப்படிப்பட்ட



நிலையம் இல்லை. அங்கே போகின்ற வாகனங்களை நிறுத்தி விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிப்பது, மற்றவைகளைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு சடங்கு போல் ..ான் நடக்கின்றதே தவிர, சரியாக நடப்பதில்லை. எனவே அரசாங்கம் இதுபற்றிக் கவனித்து முனைப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டால் தான் உண்மையிலேயே அரசாங்கத்திற்குச் சேரவேண்டிய வரி, தடைப்படாமல் சரியாக வந்து சேரும். எனவே அரசாங்கம் இதை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

(முற்பகல் 11-40)

அடுத்தபடியாக, குதிரைப்பந்தயம் ஒழிப்பு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். குதிரைப்பந்தய ஒழிப்புச் சட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டுவரப்பட்டது. அதை எதிர்த்து அந்தச் சங்கத்தினர் உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்தார்கள். உயர்நீதிமன்றம் குதிரைப் பந்தயம் ஒழிப்பு செல்லும் என்று தீர்ப்பு வழங்கியது. அப்படிச் செல்லும் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு கொடுத்ததை எதிர்த்து, அந்தச் சங்கத்தினர் உச்சநீதி மன்றத்திற்கு—டில்லிக்கு மேல் முறையீடு செய்திருக்கிறார்கள். அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று 7 ஆண்டுகள் ஆகின்றன என்று கருதுகிறேன். ஆனாலும் கூட, அது சம்பந்தமான முறையான தீர்ப்பு வரவில்லை. கேட்டால் சொல்வார்கள். நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறது. நாம் என்ன செய்ய முடியும் என்று. ஆனால் பல்வேறு கட்டங்களிலே, பல்வேறு வழக்குகளிலே அதிக காலம் தேங்கும் போது அரசாங்கமே விரைவாக விசாரணைக்கு வழக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மனுப்போட்டு, துரிதப்படுத்த முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூல மாக மாண்புமிகு அமைச்சரைக் கேட்டுக் கொள்வேன், இந்தக் குதிரைப் பந்தய ஒழிப்பு வழக்கிலே அரசாங்கம் அக்கறை எடுத்து, அதனை விரைவிலே தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுக்க ஏன் தயங்குகிறது? மது ஏழை மக்களைச் சீரழிக்கிறது குதிரைப்பந்தயம் நடுத்தர மக்களை சீரழிக்கிறது என்ற கொடுமை இருப்பதால், இரண்டையுமே ஒரே நிலையில்தான் எங்களால் பார்க்க முடிகிறது. குதிரைப் பந்தயம் எத்தனையோ குடும்பங்களை இன்றைக்கு நாசமாக்கியிருக்கிறது.

வரதட்சணைக் கொடுமை பற்றி சொல்கிறார்கள். திருமணம் ஆன பின்னாலும்கூட வரதட்சணை கொடுக்காத காரணத்தாலே பெண்கள் ஓரளவு கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்று சொல்கிறார்கள். குதிரைப்பந்தயக் கொடுமை பயங்கரமான கொடுமை, எத்தனையோ குடும்பங்கள் இன்றைக்கு நாசமாகி மண் மூடிப் போகின்ற அளவுக்கு இன்றைக்குச் சமுதாயத்திலே நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆகவே, அரசாங்கம் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதிலே விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். விரைவில் அரசாங்கம் உரிய மனுவைத் தாக்கல் செய்து, அந்த வழக்கை கூடிய விரைவில் விசாரிக்க முயற்சிகளை

எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குதிரைப் பந்தயம் இருக்கிற காரணத்தால், அது சம்பந்தமாக ஒரு பழமொழி சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். குதிரை கீழே தள்ளியதோடு மட்டுமல்லாமல், குழியும் பறித்தது என்று சொல்வார்கள். முன்பெல்லாம் குதிரைப் பந்தயம் என்று சொன்னால் ஆண்டுக்காண்டு 3,4 மாதங்கள் மட்டும் குதிரைப் பந்தயம் நடக்கும். இல்லை, 5 மாதங்கள் கூட நடக்கும். ஆனால் இப்பொழுது வருஷம் 12 மாதங்களும் நடக்கின்றன. உச்ச நீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிற இந்தச் சமயத்தில், முன்னாலே 3,4 மாதங்கள் நடந்ததற்கு மாறாக இப்பொழுது 12 மாதங்களும் குதிரைப் பந்தயம் நடக்கிறது என்று சொன்னால், எத்தனை கோடிக்கணக்கான ரூபாய் பாழாகிறது. நான் கேள்விப்பட்டிருக்கிறேன், எனக்குத் தெரியாது. இன்டர் வெனியூ பெட்டிங் என்ற பெயரில் தொடர்ந்து 12 மாதங்களும் குதிரைப் பந்தயம் நடப்பதாக. ஆகவே, குதிரைப் பந்தயம் இன்றைக்கு நாட்டைப் பற்றிக் கொண்டிருக்கிற ஒரு புற்று நோய் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

பஞ்சமாபாதகங்களில், 3 பாவத்தை முக்கியமாகச் சொல்கிறார்கள். மது, மாது, சூது ஆகிய 3 பாவங்கள் கொஞ்சம்கூட குறைவில்லாமல் இப்பொழுது இருக்கின்றன. மதுக் கடைகளைத் திறக்கக் கூடாது என்ற கொள்கையைச் சேர்ந்தவர்கள் நாங்கள் ஆனால், மதுக் கடைகளைத் திறந்து விட்டார்கள். அமைச்சர் தான் சொல்கிறார் அடிக்கடி, மதுக்கடைகளை மூடிவிடுவோம், மதுக்கடைகளை மூடிவிடுவோம் என்று. ஆனால் சாராயம் இன்றைக்குத் தெருவிலே ஓடிக்கொண்டே இருக்கிற அளவுக்கு மதுக் கடைகள் இன்றைக்கு அதிகமாக இருக்கின்றன. ஆகவே 3 பாவங்களில் ஒன்றான, மது இப்படி இருக்கும்போது, சூது—குதிரைப் பந்தயம் நாட்டை எப்படி சீர்குலைக்கிறது என்பதைக் குறிப்பிட்டேன். ஆக, பல்வேறு முறைகளில் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவேதான் நான் சொல்கிறேன். தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவனுக்கோர் "குணமுண்டு என்று ஒப்பிட்டுப்" பார்க்க வேண்டுமென்றால், நீங்கள் முன்னேறிய மாநிலங்களைப் பார்த்துச் சொல்லுங்கள், நல்ல காரியங்களுக்குச் சொல்லுங்கள் தொழில் துறையிலே முன்னேறியிருக்கிறார்கள். பொருளாதார வளத்திலே முன்னேறியிருக்கிறார்கள், இன்னும் பல்வேறு இனங்களில் முன்னேறி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் விட்டு விட்டு......

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவனுக்கோர் குணமுண்டு என்று சொன்னார். ஆகவே தமிழ்நாட்டைத் தனியாகப் பிரித்துக்கொடுப்பதற்கு அவர்கள் ஒத்துழைப்புக் கொடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.



திரு. என். எஸ். வி. சித்தன்: இப்படியெல்லாம் சொல்லி, என்னை இடுக்குக்குள்ளே நுழைத்து, என்னைத் தனிமைப் படுத்த வேண்டுமென்றால், நீங்கள் நிச்சயமாக ஏமாந்து போவீர்கள். நான் முன்னமேயே சொன்னேன். நல்ல காரியங்களுக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்றால், அவன் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறான் என்று முன்னேறியிருக்கிற ஒருவனைப் பார்த்து ஒப்பிட்டுப் பார்க்கலாமே தவிர, அவன் கெட்டு குட்டிச் சுவராய் போயிருக்கிறான், நானும் அவன் மாதிரி ஏன் போகக் கூடாது என்று கேட்டால், என்ன நியாயம் இருக்கும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அதைத்தான் மது, மாது, சூது என்று சொன்னேன். இன்றைக்கு மதுக்கடைகள் ஏராளமாக திறக்கப்பட்டிருக்கின்றன. சூதும் பெருமளவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாதைப்பற்றி சொல்வதென்றால் இன்றைக்கு பத்திரிக்கைகளில் தினந்தோறும் 'மசாஜ் கிளப்பைப்' பற்றி செய்திகள் வந்துக்கொண்டிருக்கின்றன. மசாஜ் கிளப் என்பது சமுதாயத்திற்கு பெரிய ஆபத்தாக, பெரிய தொல்லையாக வந்து கொண்டிருக்கிறது. அது சமுதாயத்தையே சீரழிக்கிற ஒரு பாவமான காரியமாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு சென்னையில் மசாஜ் கிளப் என்பது அரசாங்கத்தினுடைய, சட்டத்தினுடைய துணையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே சமுதாயத்தை சீரழிக்கிற பாவமான காரியங்களான மது, மாது, சூது ஆகிய மூன்றையும் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது நாடு உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு. இங்கே ஜனாதிபதிக்குத் தான் அதிகமான சம்பளம் என்று சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். தனியார் கம்பெனிகளை நாம் விட்டு விடலாம். ஆனால் ஜனாதிபதியின் சம்பளத்தைவிட அதிகமான சம்பளத்தை குதிரைப் பந்தய சங்கத்தின் செயலாளர் பெறுகிறார் என்று கேள்விப்படுகிறேன்: குதிரைப் பந்தயத்திலே பல்வேறு முறைகேடுகள், ஊழல்கள், தவறுகள் நடைபெறுகின்றன என்று சொல்கிறார்கள். இந்த ஊழல்கள், முறைகேடுகள் பற்றி நான் சொல்வதென்றால்,....

திரு சேலம். மு. ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் ஏதோ போதி மர புத்தரைப் போல நமக்கெல்லாம் புத்திமதிகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே தமிழ் நாட்டிலே சாராயம் ஆறாக போகிறதாம். இந்தியாவிலே 28 மாநிலங்களில் குஜராத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் சாராயம் சட்டவாக பெருகி இருக்கிறது அது போகட்டும், மசாஜ் கிளப்பை பற்றி சொல்கிறார்கள். மகாராஷ்டிரத்தைப் போல சிகப்பு விளக்குப் பகுதி இங்கு அவர் ஏற்படுத்த விரும்புகிறார்களா? அது அவர்களுடைய விருப்பமா? என்று கேட்க விரும்புகிறேன்;

திரு. என். எஸ். வி. சித்தன்: தமிழகத்திலே இருக்கிற வாக்காளப் பெருமக்களால் நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். தமிழ்நாடு மக்களுடைய பிரச்னைப் பற்றி பேசுவதற்காக நாங்கள் இங்கே வந்திருக்கிறோம். தமிழ்நாட்டின் நலனிலே எங்களுக்கு அக்கறை உண்டு. நான் நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசியதற்கு சொன்னேன். நீங்கள் இப்படியெல்லாம் சொல்வீர்கள். வேறொரு மாநிலத்தை உதாரணம் காட்டுவீர்கள் என்று சொன்னேன். நல்லவைகளை பின்பற்ற முயற்சி செய்யுங்கள் என்று அதையும் சொன்னேன். ஏன் தமிழகம் முன்மாதிரியாக இருந்து விடக் கூடாது? நான் போதி மரத்தின் புத்தனாக இருப்பதில் பெருமைப்படுகிறேன். உறுப்பினருக்கு இன்னொன்றும் சொல்வேன். குஜராத் மாநிலத்தில் இன்றைக்கும் மதுவிலக்கு அமலில் இருக்கிறது. நான் சொல்வது, காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் நாங்கள் மதுவிலக்கைக் கொண்டு வந்தோம். நீங்கள் அதை ரத்து செய்திருக்கிறீர்கள். ஆகவே கொண்டு வந்த பெருமை எங்களைச் சாரும். அந்த வரலாறும், பாரம்பரியமும் எங்களுக்கு உண்டு. ஆகவே இப்படி இன்னொரு மாநிலத்தைச் சொல்லி சிகப்பு விளக்குப் பகுதிக்கு நண்பர் ஆறுமுகம் அவர்கள் போக வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் எதற்கெடுத்தாலும் நாம் தனியாக இருக்கவேண்டும், தனியாக இருப்பது, தனித்தன்மை என்றெல்லாம் சொல்கிறார்கள். தேசிய நீரோட்டத்தைப் பற்றி பேசக்கூடியவர்கள் அவர்கள்.

The National Ground water is very dry அப்படிப்பட்ட நிலையில் இவர் தனி தனி என்று சொல்கிறார். ஏதாவது போர் வெல் போட வேண்டுமா?

திருமதி டி. யசோதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நாம் குஜராத்தை முன்மாதிரியாகக் காட்டுவதைப் போல தமிழகத்தையும் அதுபோன்று உதாரணம் காட்ட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்களே தவிர இருக்கிற தீமைகளுக்கெல்லாம் உதாரணம் காட்டி சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு உதாரணம் காட்டிச் சொல்வது சரியாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன் (குறுக்கீடு)

(முற்பகல் 11-50)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிற போது இடையில் குறுக்கிடுவது கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் தொடர்ந்து பேசலாம்.



திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மதுக்கடைகளை மூடிய பெருமை காங்கிரஸ் கட்சிக்கு உண்டு என்று சொன்னேன். அதிலே திரு. ஆறுமுகம் அவர்கள் கூட பெருமை கொள்ளலாம். காரணம் அந்த நேரத்தில் அவர் எங்களோடுதான் இருந்தார். இப்போது ஏன் அவர்கள் அதைத் திறந்தவர்களோடு நின்று கொண்டு பேசுகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயச் சங்கத்திலே இருக்கின்ற செயலாளருக்கு மிக அதிகமான சம்பளம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதைப்போலவே அங்கே நடைபெறுகின்ற முறைகேடுகளைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் அங்கே எந்தவிதமான தவறும் நடக்காமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான்கு அதிகாரிகளை அந்தச் சங்கத்திலே போட்டியிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. அந்த நான்கு அதிகாரிகளும் குதிரைப் பந்தயத்திற்குப் போகிறார்களா விளையாடுவதற்காக அல்ல அவற்றைச் சரிபார்ப்பதற்காக போகிறார்களா என்று பார்த்தால் இல்லை என்ற தகவல் தான் எனக்குக் கிடைத்து இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், அந்தக் குதிரைப் பந்தய சங்கத்திலே அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் இருவர் இருக்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அந்த அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் அந்தச் சங்கத்திற்குச் சென்று அந்தச் சங்கத்தின் நிர்வாகத்திலே பங்கு கொண்டு செயலாற்றுகின்ற நிலைமை இருக்கிறது. அவர்களை அரசாங்கம் நியமனம் செய்யவேண்டும். பல்வேறு முக்கிய பணிகளில் இருக்கின்ற தொழில் அதிபர்கள், செல்வந்தர்களை அதிலே போடுகின்ற காரணத்தால் நாம் எந்தக் காரணத்திற்காக அதிகாரப் பற்றற்றவர்களை அதிலே போடவேண்டும் என்று கருதினோமோ அந்தக் கொள்கை நிறைவேறாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே வருகின்ற காலங்களிலே அரசாங்கம் இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குதிரைப் பந்தய சங்கத்திலே பல கோடி ரூபாய்க்கு வருவாய் வருகின்ற காரணத்தால், அந்தப் பணம் நடுத்தர மக்களிடமிருந்து வருகின்ற காரணத்தால் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படவேண்டும் என்ற கருத்தை நான் கொண்டுள்ளவனாக இருந்தபோதிலும் அது இருக்கின்ற வரையில், அதிலே வருகின்ற அந்த நடுத்தர மக்களின் பணம் முறையாக ஒழுங்காகச் செலவு செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்காக அரசாங்க சார்பில் நன்றாக விவரம் அறிந்த, ஒரு சீனியர் ஐ. ஏ. எஸ். அதிகாரியை, எந்தவிதமான ஆசாபாசங்களுக்கும் இடம் கொடுக்காத ஒரு சீனியர் அதிகாரியை அந்தச் சங்கத்தின் செயலாளராக அரசாங்கம்

நியமிப்பதன் மூலம் அந்தக் குதிரைப் பந்தயத்தின் மூலம் கிடைக்கும் வரி நல்லமுறையில் பயன்படுத்துவதற்கு துணையாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு, துணைத் தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாகத் தெரிவிக்க விரும்புவது, இன்றைக்கு அரசாங்கத்தின் வருவாய் பலகோடி ரூபாய் அளவிற்குப் பெருகியிருக்கிறது. அரசாங்கத்தின் எண்ணம் வரியை உயர்த்துவதால் மட்டும் அதிகமான வருமானம் வரும் என்று இருக்கக்கூடாது. போடப்பட்ட வரியை ஒழுங்காக வசூலிப்பதன் மூலமும், குறைவான வரி விதிப்பை வைப்பதன் மூலம் வியாபாரிகள் முறையாக கணக்கு வைத்துக் கொள்ள முடியும் என்பதாலும் வரியின் மூலம் வருமானம் உயரும். இன்றைக்கு பல முனை வரி இருப்பதன் மூலம் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம். ஒரிரு பொருள்களுக்குத்தானே பல முனை வரி இருக்கிறது என்று இருப்பினும் அவற்றிற்கு கணக்கு வைத்துக் கொள்ள வேண்டியிருப்பதால் விவசாயிகளுக்கு சிரமம் இருக்கிறது. ஆகவே, எல்லாப்பொருள்களுக்கும் ஒரு முனை வரி விதிக்கவேண்டும். மேலும் பல்வேறு இனங்களுக்கு போடப்பட்டுள்ள வரி குறைக்கப்படவேண்டும். நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கக்கூடிய வரி குறைக்கப்படவேண்டும்.

நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நல்ல இதயம் படைத்தவர்கள். நியாயம் என்று சொன்னால் அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். அது இந்தத் தரப்பில் இருந்து சொல்லப்படுகிறது என்று அதைக் கருதாமல் சாதாரண ஏழை எளிய மக்களை பாதிக்கும் வரிகளை அரசாங்கம் ரத்து செய்யவேண்டும் என்று கோரி, என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையிலே வரி விதிப்பது பற்றியும் அந்த வரியை ரத்து செய்யவேண்டியது பற்றியும் அரசு அதிலே எப்படிகவனம் செலுத்த வேண்டும் என்பது பற்றியும், முக்கியமான வரிகளை எப்படி வசூல் செய்ய வேண்டும் என்பது பற்றியும், வரி இல்லாமல் எந்த அரசும் நிர்வாகம் செய்ய முடியாது என்பது பற்றியும், வரி இல்லாவிட்டால் வளர்ச்சிப் பணிகள் நடைபெறாது என்பது பற்றியும், வரியை வசூல் செய்கின்ற முறைகளிலே தவறு இருக்கிறது என்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஒரு ஜனநாயக நாட்டில் வரி விதிப்பதற்கான அதிகாரத்தைப் பெற்று, அதிகாரம் பெற்றிருக்கிற வரிகளை முறையாக வசூல் செய்து, வசூல் செய்த பணத்தை மக்களுடைய நன்மைக்காக முறையாகச் செலவு செய்யக்கூடிய பெரும் பொறுப்பு தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா அரசுகளுக்கும் உண்டு என்பது உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.



அது மட்டுமல்ல. ஒரு அரசு என்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மாநில நிர்வாகத்தை நடத்தாவிட்டால், மன்னர் ஆட்சி என்றால், வரி விதிக்கப்பட்டு, விதிக்கப்பட்ட வரியை வசூல் செய்து, எந்த வரி எப்படி செலவிடப்படுகிறது என்பதைக் கேட்க ஆள் இருக்காது. எப்படி வேண்டுமானாலும் அதை செலவழிக்க முடியும். ஆனால் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசில், விதிக்கப்படுகிற வரி எப்படி வசூலிக்கப்படுகிறது; எப்படி பங்கிடப்படுகிறது, எப்படி செலவிடப்படுகிறது என்பதை ஒரு ரூபாயானாலும் ஒரு பைசாவானாலும் இந்த மாமன்றத்தில் உங்களுடைய அனுமதியைப் பெற்றுத்தான் அந்தப் பணத்தை செலவு செய்ய முடியும் என்பது உங்களுக்குத் தெரியும். விதிக்கப்படுகிற வரியின் மூலம் வருகின்ற பணத்தை யாரும் எடுத்துக்கொண்டு போய்விட முடியாது; யாரும் அதை தவறாக செலவிட்டுவிட முடியாது. அந்த அளவுக்கு கண்ணும கருத்துமாக இந்தநாடும் பார்த்துக் கொண்டிருக்கிறது; நீங்களும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்ல. ஜனநாயகத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசு அல்லது ஜனநாயகம் என்கிறபோது பல்வேறு அரசியல் கட்சிகள் தேர்தலிலே போட்டியிடுகின்றன. போட்டி போடுகிறபோது அவர்கள் மக்களிடத்திலே சில வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்கள். அந்த வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, போட்டியிடுகிறார்கள். வாக்குறுதிகளைக் கொடுக்கிறபோது மக்களுடைய நன்மைக்காக, மக்களுடைய முன்னேற்றத்திற்காக, மக்களுடைய நலன்களுக்காகத்தான் வாக்குறுதிகளைக் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற வாக்குறுதிகளை தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆட்சிக்கு வந்த பிறகு, நிறைவேற்றுவதற்கு வரிகளை அல்லது நிதி ஆதாரங்களை முறையாகப் பெறுவதற்கு அந்த அரசுக்கு உரிமை இருக்கிறது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இன்றைக்கு இருக்கிற நிலைமையில் பார்க்கும்போது மாநில அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரம் மிகக்குறைவு. இந்த குறைந்த நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு, மிக மிக யோசனை செய்து அந்த யோசனையின் அடிப்படையில், மக்களைப் பாதிக்காமல் வரி போட்டு, அந்த வரி பணத்தை முறையாக, சிந்தாமல் சிதறாமல் வசூல் செய்து, அரசு கஜானாவுக்குக் கொண்டுவந்து அதன் பிறகு உங்கள் அனுமதி பெற்று, கஜானாவிலிருந்து பணத்தை எடுத்து முறையாகச் செலவிடுகிறது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசும்போதுகூட பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்காகத்தான் பரிந்து பேசியிருக்கிறார்கள். இந்த அரசுக்கு இருக்கிற நிதி ஆதாரம் மிக்கவும்குறைவு. இருக்கிற நிதி ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் இன்றைக்கு இந்த அரசு பல திட்டங்களைப் போட்டு, அவைகளைச் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த
அரசுக்கு ஆண்டுதோறும் வரி அதிகமான அளவுக்கு வந்து, இந்த
ஆண்டு குறைந்திருக்கிறது என்று இங்கே சொன்னார்கள்.
எப்படிக்குறைந்திருக்கிறது என்ற காரணத்தை நான் பின்னாலே
சொல்கிறேன். எந்த ஆண்டையும் விட குறையாமல் இந்த
ஆண்டும் வருமானம் கிடைத்திருக்கிறது. கொஞ்சம் விளக்க
மாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த ஆண்டு மார்ச் 31–ந்
தேதிக்குப் பின்னால் பார்க்கிறபோதுஇந்தக்கணக்குக்குறையாமல்
இருக்கும் என்பது மட்டுமல்ல; கூடுதலாகவே இருக்கும் என்பது
அடுத்த ஆண்டு நிதிநிலை அறிக்கை வருகிறபோது அல்லது வணிக
வரித் துறை பற்றி இந்த அவைக்கு அறிவிக்கின்ற சந்தர்ப்பம்
வருகிறபோது தெரியும் என்பதை மட்டும் நான் இந்த நேரத்தில்
உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

இங்கே பேசுகிறபோது முதலமைச்சர்கள்மாநாட்டைப் பற்றிப்
பேசினார்கள். முதலமைச்சர்களுடைய மாநாட்டில் மாண்புமிகு
தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இப்படி
இருக்கிற நிதியாதாரங்களை மத்திய அரசுக்குக் கொடுக்க முடி
யாது என்பதை மிகத் தெளிவாகச் சொன்னார்கள். தெளிவாகச்
சொன்னது மட்டுமல்ல, அச்சடித்துப் புத்தகத்தைக் கொடுத்
தார்கள்; அதிலே கீழே கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார்கள்.
அதிலே ஒரே ஒரு வரியைப் படிக்க வேண்டுமென்றால்.......
'I would conclude by saying that the Tamil Nadu Government categorically oppose the levy of additional excise duty on Sales Tax'
என்று கையெழுத்துப் போட்டுக்கொடுக்கப்பட்டிருக்கிறது
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல்,
அங்கே பேசுகிறபோதுகூட மிகக் கடுமையாக என்று சொல்லக்
கூடாது; மிகவும் நுணுக்கமாகச் சொன்னார்கள். அவர்கள்
சொன்னதைத்தான் நான் இங்கு சொன்னேன். தேர்ந்தெடுக்கப்
பட்ட அரசு, அந்த அரசு நிதியாதாரங்கள்இல்லாவிட்டால் எப்படி
அந்த அரசை நடைமுறைப்படுத்த முடியும்? அதுமட்டுமல்ல,
நான் ஒன்றைச் சொல்கிறேன். அங்கே நடந்ததைச் சொல்லக்
கூடாது, இருந்தாலும் சொல்கிறேன். நீங்கள் எல்லாம் மனதிலே
வையுங்கள். செய்தித் தாள்களில் போட்டாலும் சரி, போடா
விட்டாலும் சரி. அவர்கள் சொன்னார்கள். மனதை விட்டு
இங்கே இருக்கிற எல்லா முதலமைச்சர்களையும் பேசச் சொன்
னால், நான் சொன்ன கருத்தைத்தான் சொல்வார்கள் என்று
அவர்கள் சொன்னார்கள். இதைவிட வேறு என்ன சொல்வது?
அப்படியென்றால், எந்த அளவிற்கு வினயமாகவும் சொல்கின்ற
முறைப்படியும் அதைச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்
திடம் எப்படி கேட்க வேண்டுமோ அப்படிக் கேட்பேன், எப்படிச்
சொல்ல வேண்டுமோ அப்படித்தான் சொல்வேன் என்பதை
நீங்கள் உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான்
தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் இன்றைக்கு இருக்கிற



நிதியாதாரத்திலே எங்கோ போய்விடும் என்று நீங்கள் நிச்சய
மாக அஞ்சத் தேவையில்லை, அதை விடுவதற்கு இந்த அரசு
தயாராக இல்லை என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்
கிறேன். இன்றைக்கு உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால்,
தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1981-82ல் 1,07,556 பேர்கள்
வணிகர்களாக இருந்தார்கள். 1982-83ல் 1,35,618 பேர்களாக
இருந்தார்கள். ஆக இந்த அரசு எந்த அளவிற்கு வணிகத்
துறையில் அதிகமாகச் செய்வதற்கு என்னென்ன முறைகளைக்
கையாண்டு கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இங்கே பேசுகிறபோது எல்லோருமே ஒரு முனை
வரியைப் பற்றிப் பேசினார்கள். அதிலே அருமை சகோதரர்
மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி பேசினார்கள். நம்முடைய
காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசினார்கள்.
ஆனால் அவர்கள் இரண்டு பேரும் ஒரே கருத்தை அழுத்தம்
திருத்தமாகச் சொல்கிறபோது, அந்தக் கருத்தை எப்படிச் சொல்
கிறார்கள் என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு
முனை வரி, பல முனை வரியிலே இருக்கும் சங்கடங்களைப் பற்றி
சொல்லியிருக்கிறேன். 1981-82ல் இந்த அரசு பெறுகிற வருவா
யில் 90 சதவீதம் ஒரு முனை வரியிலே வந்தது; 1983—84-ல்
92 சதவீதம் ஒரு முனை வரியிலே வந்தது; என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். இப்படி ஒரு முனை வரி பல முனை வரி
களிலே சங்கடங்கள் இருக்கின்றன. ஆனால் சங்கடங்கள் இருந்
தாலும், இந்த அரசு கூடியவரையில் ஒரு முனை வரியைக்
கொண்டு வருவதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்
கொண்டு வருகிறது. அதை ஒன்றன் பின் ஒன்றாய் செய்து
கொண்டிருக்கிறது. பொருள்களின் உற்பத்தியாளர், பங்கீட்டு
முறை (டிஸ்ட்ரிபியூஷன் பாயின்ட்)-லே தெளிவாகத் தெரிகிறது.
இவைகளின் மீது ஒரு முனை வரியைப் போடுவது மிக இலகுவாக
இருக்கும். ஆனால் அந்தப் பொருளை எங்கே உற்பத்தி செய்
தார்கள், எங்கே விற்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியாத
இடத்திலே ஒரு முனை வரி போட்டால், எங்கே வேண்டுமானா
லும் அந்தப் பொருளின் மீது விற்கிற வரியை ஏமாற்றுவதற்கு
வாய்ப்பிருக்கிறது என்பதால் அதைக் கடுமையாக இந்த அரசாங்கம்
பார்த்துக்கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஒரு லட்சம் வரைக்கும்
வியாபாரம் செய்பவர்களுக்கு இன்றைக்கு வரியே இல்லை.
முதலிலே 50 ஆயிரமாக இருந்தது, இன்றைக்கு 1 லட்சமாக
உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு முனை வரியாக இருந்
தால், அவர்கள் 5 ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும் கணக்கு
வைத்துக் கொள்ளவேண்டும். பலமுனை வரியிலே கணக்கு
வைத்துக்கொள்வதிலே சங்கடங்கள் இல்லை. ஒருமுனை வரியிலே
தான் சங்கடங்கள் இருக்கின்றன. 5 ரூபாய்க்கு வாங்கியிருந்
தாலும், விற்றாலும் அந்தப் பொருள் இதற்கு முன்னால் வரி
செலுத்தப்பட்ட பொருள் என்பதற்கு ஆதாரபூர்வமான கணக்கு
வைத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் வரி செலுத்த

வேண்டும். 50 ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும், 5 ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும், ஒரு ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும் ஒரு முனை வரியாக இருந்தால் அவர்கள் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் மல்டி பாயிண்ட் என்றால் ஒரு லட்சம் வரைக்கும் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியதில்லை. அப்படி ஒரு லட்சம் வரைக்கும் கணக்கு வைத்துக்கொள்வது தேவையா இல்லையா, ஒரு முனை வரி தேவையா என்று நாம் பார்க்கிறபோது பொதுவாக ஒரு முனை வரியைவிட மல்டி பாயிண்ட் தான் மக்களுக்கு நல்லதாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், சில பொருள்களுக்கு நாம் ஒரு முனை வரி போட்டோம். உடனே அவர்கள் ஒரு முனை வரி வேண்டாம் சங்கடங்கள் வரும், பலமுனை வரி போடுங்கள் என்று கடிதம் கொடுத்தார்கள். உதாரணமாக பிளாஸ்டிக் பொருள்கள், சீப்பு, மெழுகு, எழுதுபொருள்கள் இவைகள் எல்லாம் ஒரு முனை வரியிலிருந்து பல முனை வரியாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே சொல்கிறபோது எப்படி எப்படியெல்லாம் வருமானம் வருகிறது என்பதைச்சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தைப் பற்றிச் சொல்கிறபோது அதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளாது. குதிரைப் பந்தயம் மட்டுமல்ல, அது எந்த சூதாட்டமாக இருந்தாலும், சூதாட்டம் என்று சொன்னால் மது, மாது (குலுக்கீடு) 3 பொருள்கள் என்று சொல்கிறார்கள். (குலுக்கீடு) சரி, இந்த மூன்றிலேயும் அரசு கண்டிப்பாக இருக்கிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

இந்தக் குதிரைப் பந்தயத்தைப் பொறுத்தவரையிலும் முதல்வர் அவர்கள் அதை ஒழிக்கவேண்டும் என்றுதான் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். குதிரைப் பந்தயத்திற்கு ஏழை எளியவர்கள் சில பேர்கள் போகிறார்கள். பணக்காரர்கள் பூராவும்—வசதிபடைத்தவர்கள் மட்டும் தான்—போகிறார்கள், குதிரைப் பந்தயம் கேடு விளைவிப்பது என்பது தெரியும். தெரிந்தும் சில பேர்கள் செல்கிறார்கள். ஆனால் எல்லோரும் செல்வதில்லை. ஆகவே இதிலே லட்சக்கணக்கான பேர்கள் செல்வதில்லை. கோடீஸ்வரர்கள், லட்சாதிபதிகள் மிக அதிகமாகச் செல்கிறார்கள். இன்றைக்கு போக்குவரத்துச் சாதனங்கள் மிக அதிகமாக இருக்கின்றன. கட்டை வண்டியிலே போக வேண்டியதில்லை. கால் நடையாகப் போகவேண்டியதில்லை. ஆகாய விமானத்திலே போகிறார்கள். காரிலே கூட போவதில்லை. குதிரைப் பந்தயம் இங்கே இல்லையென்றால், பெங்களூர் போகிறார்கள். நினைத்த நேரத்தில் போகிறார்கள். கல்கத்தாவிற்குப் போகிறார்கள். பம்பாய்க்குப் போகிறார்கள். ஆகையினாலே இன்றைக்கு இதிலே வருகிற வருமானம் அதிகம் இல்லாவிட்டாலும், ஓரளவிற்கு இருந்தாலும், அதை எடுக்கவேண்டும் என்று இந்த அரசு எண்ணி





யதால், அதற்கு வேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ளும். அப்படி எடுத்துக் கொண்டாலும் மீண்டும் அவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போவார்கள் என்பதை இந்த அரசு மனதிலே வைத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மதுபானத்தைப் பற்றி இங்கே சொன்னார்கள். பலமுறை முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள்; வெளியிலேயும் பேசியிருக்கிறார்கள். இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில் மிகக் கடுமையாக இருக்கிறது. இதிலே கடுமையாக இருந்தாலும், தவிர்க்க முடியாமல், இன்றைக்கு மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிறது. இதே சட்டமன்றத்திலே மதுக் குற்றம் செய்தவர்களுக்கு, கள்ளத்தனமாக காய்ச்சுபவர்களுக்கு கள்ளத்தனமாக குடிப்பவர்களுக்குச் சிறைத் தண்டனை என்று கொண்டுவந்தபோது, எல்லோரும் எவ்வளவு வன்மையாக எவ்வளவு மிக மிகக் கடுமையாக எதிர்த்தீர்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு நல்ல காரியத்தைக் கொண்டு வருகிறபோது, பல சங்கடங்கள் இருக்கத்தான் செய்யும். குடித்துவிட்டு வீட்டிலே போய் அவனுடைய மனைவியை அடித்தால், அந்த மனைவி தாங்கிக்கொள்வாளா இல்லையா என்பது வேறு. ஆனால் குடித்துவிட்டுப் போகின்றவர்கள், வீட்டிற்குப் போகாமல் சிறைச்சாலைக்குக்கொண்டுபோய்அடைக்கப்பட்டால்அவனுடைய மனைவி மிகவும் வருத்தப்படுவாள். குடித்துவிட்டு இரண்டு அடி அடித்துவிட்டுப் போகட்டும், ஆனால் சிறைச்சாலைக்கு போகக் கூடாது என்று எண்ணுவது இயற்கைதான். ஆகவே எப்படி இருந்தாலும் அது தற்காலிக இடையூறு. இதிலே கடுமையாகக் கொண்டுவந்தால் குடிக்கமாட்டார்கள் என்று கொண்டு வருகிறபோது நீங்களெல்லாம் மிக அதிகமாக எதிர்த்தீர்கள். இருந்தாலும் அதைக் கொஞ்சம் தளர்த்தியிருக்கிறோம். தளர்த்தினாலும் அது நிரந்தரமாக தளர்த்தப்பட்டது அல்ல. போஸ்ட் போன்மென்ட் என்று சொல்வார்களே அது போல. இந்தத் தளர்த்தலும் ஒரு போஸ்ட்போன்மென்ட் தானே தவிர, இந்த மதுவிலக்கு கொள்கையிலேயெல்லாம் இந்த அரசு மிக கவனமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்கிறபோது, இந்தக் கூடுதல் விற்பனை வரியைப் பற்றிச் சொன்னார்கள். கூடுதல் விற்பனை வரி என்பதுயாருக்குபோடப்பட்டிருக்கிறதுஎன்றால் 50 ஆயிரம், 80 ஆயிரம், 90 ஆயிரம், 1 லட்சம், $1\frac{1}{2}$ லட்சம் 2 லட்சம், $2\frac{1}{2}$ லட்சம், $2\frac{3}{4}$ லட்சம் என்று டர்ன் ஓவர் வருகிற வியாபாரிகளுக்கெல்லாம் போடவில்லை. டர்ன் ஓவர் 3 லட்சத்திலிருந்து 5 லட்சம் வரைக்கும் உள்ளவர்களுக்குதான் போட்டிருக்கிறோம். முதலிலேயும் அப்படித்தான் இருந்தது. அதுகூட மிக அதிகமாக இல்லை. 0.4 சதவீதம் நான் அல்லது $0.4\frac{1}{2}$ சதவீதம். அந்த 0.4 சதவீதத்தை இப்போது 0.5 ஆக ஆக்கியிருக்கிறோம்,

அதைப்போல 5 லட்சத்திலிருந்து 7 லட்சம் என்று டர்ன் ஓவர் இருப்பவர்களுக்கு இந்தக் கணக்கையெல்லாம் பார்த்து தெரிந்துகொண்டால், நீங்கள் குறைத்துப் போட்டிருக்கிறீர்கள், ஏன் கூட போடவில்லை என்று சொல்வீர்கள், ஏனென்றால் இதிலே வியாபாரிகளுக்குக் கூட அதிகமாக வருவாய் இல்லை. பெரிய பெரிய இன்டஸ்ட்ரிஸ் தான் வருகின்றன. டர்ன் ஓவர் லட்சக்கணக்கிலே வருவது பெரிய பெரிய இன்டஸ்ட்ரிஸ் களுக்குத்தான் என்பதை நான் உங்களுக்கு சொல்வேன்.

அப்படி பெரிய இன்டஸ்ட்ரிஸ் என்று வருகிறபோது 5 லட்சத்திலிருந்து 7 லட்சம் வரையில் டர்ன் ஓவர் வருகிறவர் களுக்கு முதலிலே அதாவது இப்போது வாங்குவது 0.5 சத வீதம். அதை 0.7 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். கொஞ்சமாக உயர்த்தியிருக்கிறோம். அதேபோல 7 லட்சத் திலிருந்து 10 லட்சம் வரைக்கும் 0.6 சதவீதத்திலிருந்து 1 சத வீதமாக ஆக்கியிருக்கிறோம். 10 லட்சத்திற்கும் மேலே இருப் பவர்களுக்கு 0.7 சதவீதத்திலிருந்து 1.25 சதவீதம் போட்டிருக் கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்

இங்கே புதியதாக வரிகளைப்போட்டிருக்கிறோம் என்று சொன் னார்கள். நான்புதியதாக வரிகளைப் போடுவதற்குகாரணங்களை முன்பே சொன்னேன். பின்னாலும் அதை நான் சொல்ல இருக்கிறேன். அடுத்து வரிகளைப் போடுகிறபோது எப்பொழு தும் எந்த அரசுமே வரிபோடுவதற்கு முன்னாலே, மற்றவர்களை கலந்து ஆலோசிப்பது இல்லை. ஏன்? இது நிதிநிலை அறிக்கை யினுடைய ரகசியம். நிதிநிலை அறிக்கையினுடைய ரகசியத்தை கலந்து ஆலோசிப்பது குற்றம்தான். ஆனால் அப்படி அது குற்றமாக இருந்தாலும் நிதிநிலை அறிக்கையிலேஎன்னசொல்லப் போகிறோம் என்பதைத் தெரிவிக்காமல், அதே நேரத்தில் மக்களுடைய பிரதிநிதிகளை அழைத்துப் பேசிபோடுவதுஎன்பதில் தவறு இல்லை.

நான் முதலிலேயே இங்கே எவ்வளவு வணிகர்கள் இருக் கிறார்கள் என்பதை லட்சக் கணக்கிலே சொன்னேன். அந்த லட்சக் கணக்கிலே உள்ள வணிகர்களுடைய பிரதிநிதிகளை அழைத்து அதில் நாங்கள் யாரையும் நியமிக்கவில்லை, உங்கள் பிரதிநிதிகளை அனுப்புங்கள் என்று முதல்வர் அவர்கள் அறிக்கை விட்டார்கள், சொன்னார்கள். ஆகவே அவர்களாகவே ஐந்து பேர்களைக்கொடுத்தார்கள். அந்த ஐந்து பேர்களின் ஆலோசனை யின் பேரில்தான் இந்த டர்ன் ஓவர் கணக்கை அதிகப்படுத்தி யிருக்கிறோம். அவர்கள் சொன்னதை வைத்துத்தான் அதிகப் படுத்தியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல உங்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குச் சில பொருள்களுக்கு வரி விகிதங்களை அதிகமாக்கிப்போட்டிருக் கிறோம் என்றாலும் அதுவும் அவர்களைக் கேட்டுத்தான் போட்டிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





இதில் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது பெட்ரோல் வரிவிதிப்பு தமிழகத்தில் 11 சதவீதம். அதாவது முன்பு இருந்தது. கேரளாவில் 15 சதவீதம், கர்நாடகத்தில் 12.5 சதவீதம். ஆனால் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால் ஆந்திராவில் 12 சதவீதம், கர்நாடகத்தில் 15 சதவீதம், கேரளா வில் 15 சதவீதம், தமிழ்நாட்டில் 14 சதவீதம்.

அதேபோல விமான—டர்பன் எண்ணெய் இன்றைக்கு தமிழ கத்தில் 10 சதவீதம், ஆந்திராவில் 10. அதாவது நான் உயர்த்திய பிறகு சொல்கிறேன். முதலிலே இருந்தது தமிழ்நாட்டில் 7. இப்போது தமிழ்நாட்டில் 10, கேரளாவில் 8, கர்நாடகாவில் 14, ஆந்திராவில் 10. இது உயர்வேக டீசல் எண்ணெய். இன்றைக்கு இது கேரளாவில் 20 சதவீதம், கர்நாடகாவில் 14 சதவீதம், ஆந்திராவில் 11 சதவீதம். தமிழ்நாட்டில் 14. ஒவ் வொன்றிற்கும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டு, எந்த மாநிலத் திற்கும் அதிகம் இல்லாமல், அதுவும் அவர்களோடு கலந்து ஆலோசித்து செய்திருக்கிறோம். (குறுக்கீடு) உயர்வேக டீசல் எண்ணெய் தமிழ்நாட்டில் 14, கேரளாவில் 20 சதவீதம், கர்நாடகாவில் 14 சதவிதம், ஆந்திராவில் 11 சதவீதம். இதைத் தான் சொன்னேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம்: ஆந்திராவிலே 11 சதவீதம்; தமிழ்நாட்டிலே 14 சதவீதம். டீசல் அதிகமாக விவசாயிகள் பயன்படுத்துவது. ஆகவே ஏற்கெனவே மத்திய சர்க்காரிலே— திரு. சரண்சிங் இருந்தபோதுகூட— டீசலுக்கு வரியை ஏற்றினால் அது விவசாயிகளைப் பாதிக்கும் என்பதால் அதற்கு ஏற்றாமல் பெட்ரோலுக்கு மட்டுந்தான் வரி ஏற்றினார்கள். ஆகவே விவசாயிகள் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய டீசலுக்கு வரிவிதிக்காமல் அதையாவது விட்டுவைப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இவைகளை யெல்லாம் ஆலோசனை செய்துதான் போட்டிருக்கிறோம். அதிகமாக ஏற்றவில்லை. பருத்தி நூலுக்கு வரியை உயர்த்திய தாகச் சொன்னார்கள். அறிவிக்கப்பட்டபோது 1 சதவீதம் அதிகம் என்றாலும் அதற்குப் பிறகு குறைத்து இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே அறிவித்த போது அது அறிவிக்கப்பட்டது. பிறகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கைமீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கிற போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று குறைத்து இருக்கிறது என்ற செய்தி உங்களுக்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள், வரியை ஏமாற்றிக்கொண்டு போகிறார்களே, ஏன் வரிகளைப் போடுகிறீர்கள் என்று சொன்னார்கள். இங்கே பேசிய திரு. ரகுமான் கான் சோதனைச் சாவடிகள் தேவையா என்று கேட்டார்கள். சோதனைச் சாவடிகள் இல்லாமல் இருப்பது நல்லதுதான். யாரும் குற்றம் செய்யாவிட்டால் நல்லதுதான். அவர்கள் பேசுகின்றபோது இடையில், சித்து விளையாட்டு, சித்து விளையாட்டு என்று நான்கு முறைகள் சொன்னார்கள். சித்து விளையாட்டு என்றால் என்ன என்பதைப்பற்றி ஒரு முறை சொன்னாலும் பரவாயில்லை, நான்கு முறைகள் சொன்னவர்கள் அதைப்பற்றி என்ன என்று ஒரு முறைகூட சொல்லவில்லை. அதுவரையில் எனக்கு மகிழ்ச்சிதான். சித்து விளையாட்டு என்றால் என்ன என்று எனக்குப் புரியவில்லை. புரியாமல் இருப்பது நல்லதுதான்.

சோதனைச் சாவடிகள் இல்லாமல் இருப்பது நல்லதுதான், நீதிமன்றங்கள் இல்லாமல் இருப்பது நல்லதுதான். காவல் துறையே இல்லாமல் இருப்பது நல்லதுதான். அதற்காக எல்லாம் எவ்வளவோ அதிகமாக செலவாகிறது. ஆனால் அவைகள் இல்லாமல் அரசு நடக்குமா என்றால் இல்லை. உலகத்திலே உள்ள அத்தனை பேர்களும் குற்றவாளிகளா என்றால் இல்லை. ஒரு சில குற்றவாளிகள் இருப்பதால் காவல் துறை தேவைப்படுகிறது, ஒருசில தவறுகள் நடப்பதால் நீதிமன்றங்கள் தேவைப்படுகின்றன. நீதிமன்றங்கள் இல்லாவிட்டால் குற்றங்கள் அதிகரித்துப் போகும், காவல் துறை இல்லாவிட்டால் குற்றங்கள் அதிகரித்துப் போகும், சோதனைச்சாவடிகளும் அப்படித்தான்.

ஆனால் சோதனைச் சாவடிகளிலே வருகிற அத்தனை லாரிகளும் தவறான லாரிகளாக வரவில்லை. அதிலே மெஜாரிட்டி, மைனாரிட்டி என்று பார்க்கமுடியாது. தமிழ்நாட்டில் குற்றவாளிகள் குறைவாக இருக்கிறபோதும் காவல் துறை தேவைப்படுகிறது, குற்றங்களின் பெர்சன்டேஜ் குறைவாக இருக்கிறபோதும் நீதித் துறை தேவைப்படுகிறது, வியாபாரத்திலே குற்றவாளிகள் குறைவாக இருக்கிறபோதும் சோதனைச் சாவடிகள் தேவைப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சோதனைச் சாவடிகளில் ஏதாவது தவறு நடந்தால் என்னிடம் சொல்லுங்கள். என்னால் முடிந்தவரையிலே அதைச் சீர்திருத்த, செம்மைப்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு, நேர்மைப்படுத்துவதற்கு, இந்த அரசுக்காகவும் மக்களுக்காகவும் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சோதனைச் சாவடிகளிலே தணிக்கை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை—1981-82 இல் 57,34,230 லாரிகளை பரிசோதனை செய்திருக்கிறார்கள். அவ்வளவு பேர்களும் குற்றம் செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. 57 லட்சத்தில் 54,639 லாரிகள் தவறாக முறையில்லாத சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சோதனைச் சாவடிகள் இல்லாவிட்டால் இந்த 50 ஆயிரம் என்பது 50 லட்சத்திற்குக்கூட வந்துவிடும். 1982-83 இல் சோதனைச்சாவடிகள் மூலமாக பரிசோதனை செய்யப்பட்ட லாரிகள் 63,90,175. அவ்வளவு லாரிகளும் தவறு செய்யவில்லை. தவறு செய்திருக்கிற லாரிகள் 66,751 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதேபோல் சோதனைச் சாவடிகள் மட்டும் அல்லாமல் இன்றைக்கு என்போர்ஸ்மெண்டு என்று ஒரு விங்கு இருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். அதிலே இன்றைக்கு எத்தனையோ இடங்களில் பரிசோதனை செய்து இருக்கிறார்கள். அவர்கள் சர்வசாதாரணமாக பரிசோதனை செய்வது இல்லை. பரிசோதிப்பதற்கு முன்பாக பரிசோதிப்பதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்து தவறு செய்திருக்கிறார்களா என்பதை ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் அவைகளைப் போய் பரிசோதனை செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக ஒன்று இரண்டைச் சொல்ல வேண்டும் என்றால், சென்னையில் வசந்தி வணிகர், சென்னை—5-12-1983-ல் பரிசோதனை செய்த போது—பொருள்கள் விவரம் எவர்சில்வர், எந்த அளவுக்கு அவர்கள் கணக்கில் கொண்டு வரவில்லை என்றால் 3.78 கோடி ரூபாய்க்கு. அதை அரசு கண்டுபிடித்ததால் அரசுக்கு அதிகமான லாபம் 40 லட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் ஆர். என். அப்பாதுரை செட்டியார், மதுரை—ஒவ்வொரு ஊரிலும் ஒன்றைச் சொல்கிறேன்—அவர்கள் நகைக் கடை வைத்து இருக்கிறார்கள். அவர்கள் கணக்கைப் பார்த்தபோது அவர்கள் கணக்கில் கொண்டுவராமல் விடப்பட்ட பொருள்களின் மதிப்பு 2.5 கோடி ரூபாய் ஆகும். இதனால் அரசுக்கு வருமானம் 18.4 லட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, தர்மல் சேஷ்மால், சென்னை,—18-8-1983-ல் அவர்களைப் பரிசோதித்து இருக்கிறார்கள். எவர் சில்வர் கணக்கில் கொண்டுவராத பொருட்களின் மதிப்பு 1.50 கோடி ரூபாய். இதனால் அரசுக்கு வருமானம் 20 லட்சம் ரூபாய் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். அடுத்து, விஜயலட்சுமி பேப்பர் மார்க்கெட், மதுரை அவர்கள் கணக்கில் 20 லட்சம் ரூபாய் கணக்கு வரவில்லை. அதைக் கண்டுபிடித்ததால், அரசுக்கு வருமானம் 3 லட்சம் ரூபாய் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, தாம்ஜீ, சேலம்–பருப்பு வகைகளில் 1½ கோடி ரூபாய்க்கு கணக்கில் வரவில்லை இதைக் கண்டுபிடித்ததால் அரசுக்கு வருமானம் 15 லட்சம் ரூபாய். இப்படிப் பல்வேறு நூற்றுக்கணக்கானவைகளை இன்றைக்கு அரசு கண்டுபிடித்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை எல்லாம் செய்தும் அரசுக்கு எப்படி வருமானம் குறைகிறது என்று சொன்னால் நான் முதலிலேயே சொன்ன மாதிரி வருமானம் குறைந்தாலும் இந்த அரசு கணக்கு போடுகிறபோது 31 ஆம் தேதி வருகிறபோது சென்ற ஆண்டை விட எந்த அளவுக்கு அதிகமாக வருமோ அந்த அளவுக்கு அதிகமாக வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைக்கு உயர்நீதி மன்றங்களில் மட்டும் இருக்கிற வழக்குகள் எத்தனை என்றால் 5 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வழக்குகள் 186, 4 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வழக்குகள் 808; 3 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வழக்குகள் 2039, 2 ஆண்டுகளுக்கு மேல் உள்ள வழக்குகள் 3348; ஒரு ஆண்டுக்கு மேல் உள்ள வழக்குகள் 4915. இப்படி பல வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் இன்றைக்கு நமக்குவரவேண்டிய பணம்வரவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒன்றைச் சொன்னால் நலமாக இருக்கும். இன்றைக்கு ஏன் பணம் வரவில்லை என்பதை வாதிட்டாலும் நான் முதலில் சொன்னதைப் போல நிச்சயமாக பணம் வருவதற்கு இந்த அரசில் இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய திறமையினால் இவ்வளவு சங்கடங்களுக்குப் பிறகும் அவைகளினால் இந்த ஆண்டு எவ்வளவு வருவாய் வர வேண்டுமோ அவை வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்து இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஏன் வரி குறைந்தது என்றால், தொடர்ந்து இரண்டு வருடமாகவறட்சி. வறட்சி வந்ததனாலே தண்ணீர் இல்லை; தண்ணீர் இல்லாததால் கரண்ட் இல்லை; கரண்ட்—பவர். பவர் இல்லாததால் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இயங்கவில்லை. பெரிய பெரிய தொழிற்சாலைகள் இயங்கவில்லை என்றால் பொருள் இல்லை; பொருள் இல்லையென்றால் பொருள் விற்கவில்லை; பொருள் விற்கவில்லை என்றால் வரியில்லை; இப்படி பல காரணங்களால்தான் இப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்வெட்டு பற்றி மட்டும் சொல்ல வேண்டுமென்றால், 1983-84 இல் 155 நாட்கள் மின்வெட்டில் இருந்தன. 60 சதவீதம், 80சதவீதம், 30 சதவீதம், 45 சதவீதம் என்று 1983-84-ல் மட்டும் மின் வெட்டு. என்ன செய்வது? அரசுக்கு மின்சாரம் கொடுக்க முடியவில்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுத்து விட்டால் விவசாயிகளுக்கு மின்சாரம் போகாது. வீட்டிற்கு விளக்கு வராது; வீதி விளக்குகள் இருக்காது.

திரு. அ. ரகுமான்கான். மன்றத்தினுடைய மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இங்கே நீண்ட விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், எங்களுக்குத் தரப்பட்ட பாலிசி நோட்—மானியக் கோரிக்கை சம்பந்தமான பாலிசி நோட்டில் பார்த்தால் இவ்வளவு விவரங்கள் கொடுக்கப்படவில்லை. கோர்ட்டுகளில் இவ்வளவு வழக்குகள் இருக்கின்றன; அதைப்போலவே இன்னொரு விவரம் என்னவென்று கேட்டால், இந்த ஆண்டில் வருவாய் இவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது, அதற்கான காரணங்கள் என்ன என்று சொல்லப்படுகிறது. இம்மாதிரி விளக்கங்களையெல்லாம் எங்களுக்கு அளிக்கப்பட்ட புத்தகத்தில் கொடுக்காமல் ஏதோ பாட்டுப் புத்தகம் போல் கொடுத்தால் உறுப்பினர்கள் விவாதிப்பதற்கு சௌகரியம்



இல்லாமல் இருக்கிறது. பல்வேறு விவரங்களை இப்பொழுது அவர்கள் சொல்கிறார்கள். கோர்ட்டில் இவ்வளவு வழக்குகள் இருக்கின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள்; முன்கூட்டியே இதைக்கொடுத்திருந்தால் நாங்கள் தெரிந்துகொண்டு விவாதிப்பதற்கு வசதியாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் ''ஒன் ஹார்ஸ் ரேஸ்'' ஆக இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, அரசுக் குறிப்பில் கூடியவரையில் எல்லாவற்றையும் விவரமாகக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேண்டியபடி, இப்படிப்பட்ட குறிப்புகள் விட்டிருந்தாலும், இப்படிப்பட்ட குறிப்புகளையெல்லாம் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எந்தக் குறிப்பையும் மறைக்க வேண்டியதில்லை. நான் இங்கே சொல்லப்போகிறேன்; பேசப் போகிறேன். இந்தக் கருத்தை அவர்கள் முன்பே சொல்லியிருந்தால் நான் கூடப்பேசாமல் இருந்திருக்கலாம். குறிப்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டிருக்கலாம். ஆகவே, அதைக் கொடுப்பதற்கு அரசு முயற்சியெடுத்துக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் முதலில் சொல்லியபடி 1983–84—இல் எத்தனை நாட்கள் மின்வெட்டு இருந்தது என்பதைக் குறிப்பிட்டேன். அதேபோல, அந்த ஆண்டு மட்டுமல்ல—1982-83—இல் சொல்ல வேண்டுமென்றால் நீங்கள் பயந்து விடுவீர்கள்—வறட்சியாலே 293 நாட்கள் மின் வெட்டுகள் இருந்திருக்கின்றன. 75 சதவிகிதம், 50 சதவிகிதம், 60 சதவிகிதம் என்று 1982-83 ஆம் ஆண்டில் 293 நாட்கள் மின் வெட்டு இருந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி இருந்ததால்தான் பல்வேறு விதத்தில் நமக்கு வருவாய் குறைக்கப்பட்டிருக்கிறது. மோட்டார் வாகனம், சிமென்ட், உரம், கரும்பு போன்றவைகளுக்கு ரூ. 2670 இலட்சம் வருவாய் குறைந்திருக்கிறது. மின் வெட்டினாலே இன்னொன்றிலே 337 இலட்சம் குறைந்திருக்கிறது. குறைவான ஏற்றுமதியினாலே 79 இலட்சம் குறைந்திருக்கிறது. 1983-84 ஆம் ஆண்டில் ஸ்பென்சர் போன்ற கம்பெனிகள் 59 இலட்சம் வரி கொடுக்கவில்லை. அவைகளுக்கு வரி குறைப்பு மற்றும் வரி இழப்பினாலே 175 இலட்சம் குறைக்கப்பட்டு இருக்கிறது. வறட்சியினாலே வரி இழப்பு 390 இலட்சம். பிற மாநிலங்களில் வரிக் குறைப்பினாலே 1144 இலட்சம் வேலை நிறுத்தம்

கதவடைப்பினால் 327 இலட்சம்; மின் வெட்டினால், இன்னொரு இடத்தில் பாதிக்கப்பட்டிருப்பது 196 இலட்சம். மொத்தம் பார்க்கற பொழுது 53 கோடி ரூபாய் இதுவரைக்கு வறட்சியாலும் மின் வெட்டினாலும் அரசுக்கு வரவேண்டிய வருவாய் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இட மாற்றம்—கன்சைன்மெண்ட் டாக்ஸ்—பாண்டிச்சேரி போன்ற இடங்களிலேயெல்லாம் வரி குறைப்பினாலும், அல்லது வரி இல்லாததனாலும் இன்றைக்கு இவ்வளவு வரி குறைப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12–30)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொன்னார்கள். இப்போது இங்கே அவர்கள் இல்லை. இந்த அரசு எவ்வளவு சங்கடத்திற்குப் பிறகு வரியைக் கொண்டு வருகின்றது என்பதை நானே சொன்னால் அவர்கள் நிச்சயமாக அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1967 ஆம் ஆண்டு வரையிலும் நமக்கே வரி விதிக்கின்ற அதிகாரம் இருந்தது. அதற்கு பிறகு அந்த அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக் கொண்டது. 1957–58-லிருந்து 1982-83 வரை நம்முடைய மாநில அரசிற்கு வரவேண்டிய வருவாய் அதாவது இந்த துணி, சர்க்கரை, புகையிலை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாய 301 கோடிக்கு 11 கோடிதான் குறைவு. அதாவது 289.95 கோடி ரூபாய் அளவுக்கு மாநில அரசுக்கு அதனால் வருவாய் குறைந்திருக்கின்றது. ஆனால் நடப்பாண்டிற்கு முந்தைய ஆண்டு அதாவது 1982-83—ல் அந்தப் பொருட்களைப் பொறுத்தவரையில் அதாவது 40 சதவீதம் என்ற அளவுக்கு மற்ற பொருட்களின் விலை ஏறி இருக்கின்றபோது இதிலே 10 சதவீதம்தான் ஏறி இருக்கின்றது. ஆகவே 1982–83 என்ற ஓராண்டிலே மட்டும் நமக்கு வரவேண்டிய வருவாய் 127 கோடி ரூபாய். ஆனால் வந்தது 32.1 கோடி. அப்படி என்றால் 94.89 கோடி மாநில அரசுக்கு வரவேண்டிய வருவாயில் குறைந்திருக்கின்றது. ஆனால் நாம் வரிகள் போட்டிப்பது கிட்டத்தட்ட 52 கோடி ரூபாய் அளவுக்குத்தான். எனவே இதை எண்ணிப் பார்க்கவேண்டும். நமக்கு வரவேண்டிய வரிகள் ஒழுங்காக வந்திருந்தால் இவைகளைப் போடவேண்டிய நிலைமையே அரசுக்கு ஏற்பட்டிருக்காது.



அடுத்து கன்சைன்மெண்ட் டாக்ஸ், அதாவது இடமாற்ற வியாபாரம். இங்கே தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை வேறு மாநிலங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். அப்படி அனுப்புகின்றபோது அவற்றிற்கு நம்மால் வரி போட முடியவில்லை. அதற்கு கன்சைன்மெண்ட் டாக்ஸ் என்ற அளவிலே நாம் வரி விதிக்க வேண்டும் என்றால் அதற்காகப் பார்லியமென்டிலே நான் கான்ஸ்டிட்யூஷன் அமென்ட்மெண்ட் கொண்டுவரவேண்டும். அது குறித்து பல முறை இந்த அரசு கடிதம் எழுதி இருக்கின்றது. எனவே மாநில அரசிற்கு அந்த வரி போடுகின்ற அதிகாரம் தேவை என்று வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இப்பொழுது பொருட்களை வேறு மாநிலங்களுக்குக் கொண்டு சென்று முறையற்ற வகையில் அவற்றை விற்பதால் இந்த அரசுக்கு வருகின்ற நஷ்டம் 10 கோடி. ஏற்கனவே நான் குறிப்பிட்ட இழப்பு 94 கோடி. இப்போது இதிலே 10 கோடி. ஆக, கிட்டத்தட்ட 104 கோடி ரூபாய் இந்த ஆண்டு மட்டும் இந்த மாநிலத்திற்கு மத்திய அரசால் நஷ்டம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலபேர் பேசினார்கள். முதலமைச்சர் அவர்கள் "I categorically oppose on behalf of the Government of Tamil Nadu" என்று சொன்னார்கள் என்பதை நான் உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். எந்தப் பொருட்களை என்பதைச் சொல்கிறேன். வனஸ்பதி, மருந்துப் பொருட்கள், சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம் இவற்றைப் பொறுத்தவரையில் 1981–82-ல் நம்முடைய மாநிலத்திற்கு வரவு எவ்வளவு தெரியுமா? 135 கோடி. 1982-83-ல் நம்முடைய மாநிலத்திற்கு வரவு ரூபாய் 160 கோடிக்குக் கொஞ்சம் தான் குறைச்சல். அதாவது 159.2 கோடி. இதை எல்லாம் நான் சொல்வதற்கான காரணம் என்ன என்பதைச் சொல்கிறேன். முன்பு நான் சொன்னதுபோல் சர்க்கரை, துணி, புகையிலை ஆகியவற்றின் மூலம் வரவேண்டிய வருவாய் இழப்பு பற்றிச் சொன்னேன். இந்த ஆண்டு நமக்கு 127 கோடி ரூபாய் வரவேண்டும்; ஆனால் 32 கோடி ரூபாய் மட்டுமே வருகின்றது. ஆகவே இந்த நிலைமைகளை எல்லாம் பார்க்கின்றபோதுதான் இவைகளை நீங்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இந்தக் காரணங்களைக் காட்டி, நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொன்னோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெயிலிலே எவ்வளவோ பேர்கள் வருகிறார்கள், போகிறார்கள். ரெயிலிலே அவர்கள் வருகின்றபொழுது இரண்டு மூன்று சங்கடங்கள் இருக்கின்றன. நிறையப் பொருள்களை பினாமியாகக் கொண்டுவருகிறார்கள். பினாமியாகக் கொண்டு வந்து விற்றுவிடுகிறார்கள். அப்படி வருகிறபொழுது இந்த அரசு கடிதம் எழுதி, நீங்கள் அவர்களைத் தடுக்க வேண்டுமென்றது. தடுக்க வேண்டுமென்றால் எப்படி முடியும்? இங்கேயிருக்கிற வணிகவரித்துறை அதிகாரிகள் கையெழுத்து

வாங்கவேண்டும். அவர்களிடம் அந்தப் பாரத்திலே கவுண்டர் சைன் வாங்க வேண்டும் அதற்குப் பிறகு சரக்குகளைப் பெற வேண்டுமென்று சொன்னோம். முதலிலே மறுத்தார்கள். இல்லை, இல்லை, என்று மீண்டும், மீண்டும் சொன்ன பொழுது, சரி, எல்லாம் முடியாது. எவ்வளவோ பொருள்கள் இருக்கின்றன. உங்கள் மாநிலத்தைப் பொறுத்தவரையில் எந்தப் பொருள் என்று ஒரு பொருளைச் சொல்லுங்கள் என்றார்கள், இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லா பொருள்களையும் வேண்டாம், குறைந்தது 10 அல்லது 15 பொருள்களுக்கு மட்டுமே பரிசீலனை செய்வதற்கு வணிகவரித் துறை அதிகாரிகள் பாரத்தில் கையெழுத்துப்போட்டு அனுப்ப— பாரத்தை அவர்களே அனுப்புவார்கள்—வேண்டும், அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றோம். அது பதிவு செய்த வியாபாரி மூலமாகத்தான் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கிறது. ஏற்றி அனுப்பப்படுகிற பொருள்மீது வரி விதிக்கிற அளவுக்குத் தெரிந்து கொள்கிறோம் என்று கேட்டோம். பொருளைக் கேட்டார்கள், சமையல் எண்ணெய், வெல்லம், பிண்ணாக்கு பணியன், சவ்வரிசி, ஏலக்காய், இப்படி 10 பொருள்களைச் சொன்னவுடன் இவை உள்ளனவா என்று பார்ப்பதற்கு ஒரு ஆளைப் போடவேண்டும். நிர்வாகச் செலவு செய்யவேண்டும் ஆகவே, அந்தச் செலவை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா என்று கேட்டார்கள். மீண்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன், இந்த அரசு அதற்குக் கடிதம் எழுதியது. நிர்வாகச் செலவு, அலுவலகச் செலவு ஆகியவற்றை இந்த அரசு ஏற்றுக் கொள்ளும் என்று கடிதம் எழுதியிருக்கிறோம். அப்படிக் கடிதம் எழுதியும் பதில் வராததால், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் முறையாக நமக்கு வரவேண்டியவை வராமல் இருக்கின்றன.

நான் முதலிலே டெக்ஸ்டைல்ஸ், ஷுகர் பற்றிச் சொன்னேன். இப்பொழுது ரெயிலைப் பற்றிச் சொன்னேன். இப்படி முறையாக வரவேண்டிய பணம் வராத அளவு நமக்குச் சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

7—வது நிதிக் கமிஷன் ஒன்று சொல்லியிருக்கிறார்கள், டிக்கட்டுக்கு நமக்காக டாக்ஸ் போட்டுக் கொடுக்கவேண்டும் என்று. ஆனால், அது தேவையில்லையென்று டிக்கட்டோடு சேர்த்துக்கொண்டார்கள். சேர்த்துக்கொண்ட பிறகு என்ன நிலைமை? நான் சொல்லவில்லை, 7—வது நிதிக் கமிஷன் சொல்கிறது, சொல்கிறபொழுது 1961—62—ல் 1 கிலோ மீட்டருக்கு 2.0 பைசா என்று சொல்லியிருக்கிறார்கள். 1976—77-ல் 1 கிலோமீட்டருக்கு 4.0 பைசா அல்லது 4.03 பைசா என்று 100 மடங்கு அதிகமாயிருக்கிறது. ஆனால் 1962—ல் என்ன கொடுத்தார்களோ, அதையேதான் இன்றைக்கும் கொடுத்து வருகிறார்கள். ஆனால், இது மாநிலங்கள் கேட்கின்ற நியாயமான-கேள்வி நியாயமாகக் கேட்கிறார்கள்.



என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அதன்மூலமாக வரவேண்டிய ரூ. 5 கோடி வரவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன். சரி, இப்படி நமக்கு வரவேண்டிய பணம் வரவில்லையென்று சொன்னேன். அவர்களுக்கு எவ்வளவு வந்திருக்கிறது? இந்த ஆண்டு மட்டும் மத்திய அரசுக்கு ரூ. 25,000 கோடி கிடைத்திருக்கிறது. இன்கம் டாக்ஸ், கார்ப்பரேட் டாக்ஸ், கஸ்டம்ஸ் டூட்டி இப்படி பல்வேறு துறைகள் மூலமாக ரூ. 25,000 கோடி வந்திருக்கிறது. ஆனால், அந்த ரூ. 25,000 கோடியில் எல்லா மாநிலங்களுக்கும் அவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்று பார்த்தால். மாண்புமிகு திரு. சித்தன் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ரூ. 25,000 கோடி வசூல் செய்து ரூ. 5,000 கோடிதான் எல்லா மாநிலங்களுக்கும் தருகிறார்கள். ஏன் கொடுக்க முடியவில்லை? அவர்களுக்கும் சில செலவுகள் இருக்கின்றன. ஆகையினால் தான் அவர்களால் கொடுக்க முடியவில்லை. அவர்களுக்கு வேண்டாத செலவை எடுத்து அவர்கள் தலையிலே போட்டுக் கொண்டிருக் கிறார்கள். வேண்டாத செலவைத் தலையில் எடுத்துப்போட்டுக் கொண்டிருப்பதால் அவர்களுக்குப் பணத்தைக் கொடுக்க முடிவதில்லை. ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் அங்கே ஒரு எஜுகேஷன் மினிஸ்டர் இங்கே ஒரு எஜுகேஷன் மினிஸ்டர்; அங்கே ஒரு அக்ரிகல்ச்சர் மினிஸ்டர், இங்கே ஒரு அக்ரிகல்ச்சர் மினிஸ்டர்; அங்கே ஒரு அக்ரிகல்ச்சர் செகரட்டரி, டெபுட்டி செகரட்டரி அதைப்போல மற்ற மினிஸ்டர்கள், மற்ற அதிகாரிகள் என்று இருக்கிறார்கள். அதைப்போல எஜுகேஷன், அக்ரிகல்ச்சர், இன்டஸ்ட்ரீஸ், கோ—ஆப்பரேஷன், புட், சோஷியல் வெல்பேர் என்று இப்படி பல்வேறு துறைகளுக்கு அங்குமிங்கும் இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

திரு. எல். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய— மாநில உறவுகளைப் பற்றி ஆராய்வதற்குத் தான் சர்க்காரியா கமிஷன் போட்டிருக்கிறார்கள், நாம் நம்முடைய கருத்துகளைச் சொல்லி இருக்கிறோம். விரிவாக ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்கவிருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: ஆண்டுகள் பல கழித்து இந்த நினைவு இப்படி எல்லோரும் எடுத்துச் சொல்லியதன் காரணமாக.அவர்களுக்குப் பட்டும் படாமலும் வந்து, அதன் காரணமாக சர்க்காரியா கமிஷனைப் போட்டிருக்கிறார் கள். அதுவரையிலும் ஒரு ஆண்டிற்கு வருகிற 20 கோடி ரூபாய் யாருடைய பணம்? தேவையில்லாமல் எஜுகேஷனிற்கு, ஹெல்த்திற்கு என்று இப்படி பல்வேறு துறைகளுக்கும், அதற்கான அரசு அதிகாரிகளுக்கும், நிர்வாகத்திற்கும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டினுடைய வருமானத்தில் பெரும்பகுதியான பணம் நாட்டினுடைய வளர்ச்சித் திட்டங் களுக்குத் தான் பயன்படுத்தப்பட வேண்டும். நாட்டினுடைய

வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தினால் நாடு முன்னேறும். நாடு முன்னேறுவது என்றால் எல்லோரும் நாட்டைத் தூக்கிக் கொண்டுபோய் வைப்பதில்லை. நாட்டை முன்னேறச் செய்வதற்கு மற்ற நிர்வாகச் செலவுகளைக் குறைத்துக் கொண்டு, தேவையில்லாத செலவினங்களைக் குறைத்துக் கொண்டு வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்துவது. அதை இப்போதே செய்துவிடலாம். எஜுகேஷன் என்றால் என்ன? இந்தியாவைப் பொறுத்தவரையில் பல்வேறுபட்ட மொழிகளை பேசுகிற மக்கள் இருக்கிறார்கள். பல்வேறுபட்ட கலாச்சாரம் அவர்களிடத்தில் இருக்கின்றது பல்வேறுபட்ட நடைமுறைகள் இருக்கின்றன. பல்வேறுபட்ட உணவு வழக்கங்கள் இருக்கின்றன. பல்வேறுவிதமாக ஆடைகளை அணிகிறார்கள். ஒரு கல்ச்சரை உருவாக்குவதுதான் எஜுகேஷன். நம்முடைய தமிழகத்தினுடைய கல்ச்சரை உருவாக்குவதற்கு நமக்குத் தெரியாதா? அங்கே 500 மைல், 1,000 மைல் அப்பாலிருந்து நம்முடைய கல்ச்சரை தெரியாத, நாம் பேசுகிற மொழியைத் தெரியாத, அவர்களா நம்முடைய கல்ச்சரை உருவாக்குவார்கள்? அதற்கு வேறு பணம் வீணாகுவதா? ஆகவேதான் அவர்களாலே இயலாமை காரணமாக, அவர்கள் பல்வேறு விதமான தேவையில்லாத வேலைகளை தலையில் தூக்கிப்போட்டுச் செய்வதாலே, செய்ய வேண்டியதை செய்யாததாலேதான் அவர்களால் பணம் கொடுக்க முடியவில்லை.

இங்கே சர்க்காரியா கமிஷன் என்று சொன்னார்கள். சர்க்காரியா கமிஷனில் யார்இருக்கிறார்கள்? சர்க்காரியாவிற்கு சட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்று தெரியும். சர்க்காரியா விற்கு 'யோசனை சொல்வதற்கு, மக்களிடத்திலே நெருங்கிய தொடர்புள்ளவர்கள் அந்த கமிஷனில் இருக்க வேண்டும். யார் மக்களிடத்தில் தொடர்புடையவர்கள்? இந்த நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சிகளினுடைய ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு பிரதிநிதி அதிலே இருக்க வேண்டும். அவர்கள் ஒரு எண்ணத்தைச் சொல்வார்கள். அந்த எண்ணத்தை நடைமுறைப்படுத்த சட்டபூர்வமாக அதற்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக 'கான்ஸ்டிட்யூஷனல் எக்ஸ்பர்ட்' அதிலே இருக்க வேண்டும். கான்ஸ்டிட்யூஷனல் எக்ஸ்பர்ட்டும், மக்களின் தேவைகளைத் தெரிந்து சொல்வதற்காக பல்வேறு அரசியல் கட்சிகளினுடைய பிரதிநிதிகள் ஒரு கட்சிக்கு ஒருவர் என்று இருந்தால் போதும். அதற்குப் பிறகு காரியத்தைச் செய்தால் ஓரளவுக்கு வெற்றிபெறும் என்று நினைக்கிறோம். அது எப்படியோ எனக்குத் தெரியாது. ''ஒரு காரியத்தைத் தள்ளிப்போட வேண்டுமென்றால் ஒரு கமிட்டியைப் போட்டு கிடப்பிலே போடு'' என்று சொல்வார்கள். நீங்கள் சொல்கிறபோது அவைகளுக்கு நான் பதில் சொன்னால் நீங்கள் ஏன் இங்கே காண்பிக்கிறீர்கள்? அங்கே காண்பிக்கிறீர்கள்?



என்று சொல்வீர்கள். ஆகவே அப்படியெல்லாம் இல்லாமல் சர்க்காரியா கமிஷன் விரைவில் இதில் முடிவெடுத்தால் அதற்குத் தமிழ்நாட்டு மக்களுடைய சார்பிலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பிலும், மாண்புமிகு சித்தன் உள்பட அனைவருக்கும் நான் நன்றியையும். பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

மத்திய அரசு இவைகளை வாங்கிக் கொடுக்கவேண்டு மென்று சொன்னேன். அவர்கள் மத்திய அரசிற்கு ஒன்றும் இருக்க வேண்டாமா என்று கேட்டால் அவர்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறேன். மத்திய அரசு எவைகளை வைத்துக் கொள்ளலாம் என்றால். டிபன்ஸ்—பாதுகாப்பு, பாரின்-அபேர்ஸ் வெளி விவகாரம். கம்யூனிகேஷன்—தகவல் தொடர்பு, ரயில்வேஸ் இவைகளை எல்லாம் வைத்துக்கொண்டால் இவ்வளவு வேலை பளு மத்திய அரசிற்கு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்வேன். தேவை இல்லாதவைகளைத் தலையில் தூக்கிப் போட்டுக்கொண்டு இருக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே நாம் வரியைப் போடுகிறோம் என்று சொன்னால், உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வேன். எவ்வளவோ பணம் பல்வேறு வகைகளில் வரவேண்டிய பணம், கோடிக்கணக்கான பணம் இந்த மாநில அரசுக்கு நியாயமாக வரவேண்டிய வரிப் பணம் வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலில் இரட்டை ஆட்சி இருந்தது. அந்த இரட்டை ஆட்சியில் தான் முதலமைச்சர்கள் (பிரைம் மினிஸ்டர்கள்) வந்தார்கள். அந்த பிரைம் மினிஸ்டர்கள் என்ன டிசைடு சய்தார்கள் என்று சொன்னால், இரட்டை ஆட்சி முறையில் மாநிலங்கள் வரி விதிக்கக்கூடாது என்பதுதான். அந்த அடிப்படையில்தான் சில இனங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொண்டார்கள். அந்த அடிப்படையில், 1935 ஆம் ஆண்டு ப்ரொவின்சியல் ஆக்ட் கீழ், மாநிலங்களுக்கு இருந்த வரி விதிப்பு அதிகாரத்தை, சாராயக் கலவை உள்ளடக்கிய மருந்து, சோப்பு வகைகள் மீதான ஆயத்தீர்வை. பங்கு வருவாய்கள் (ஷேர் மார்க்கெட்) ஆகியவைகளை எடுத்துக் கொண்டார்கள். அந்த அதிகாரங்கள் இன்றைக்கு நம்மிடத் தில் இல்லை. பத்திரிகைகள், அவற்றில் வரும் விளம்பரங்கள் மீதான வரிகள் அரசியல் சட்ட விதிகளின்படி இந்த அரசுக்குக் கிடைக்கும் என்ற நிலை இருந்தும் அவர்கள் அதை விதிக்க வில்லை, எங்களுக்கு வரவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஒன்றைச் சொன்னால் நீங்கள் தவறாகக் கருத மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இந்தியக் கான்ஸ்டிட் டியூஷனை முறையாகச் செய்தார்களா இல்லையா என்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. நான் அவைகளிலே போக விரும்பவில்லை. ஆனால் இந்த

கான்ஸ்டிட்டூஷனிலே இருப்பவைகள் நான் சொல்லவேண்டுமானால் ஆர்ட்டிகள் 269–படி Taxes levied and collected by the Union but assigned to the States; அதாவது, பணத்தை அவர்கள் வசூல் செய்யலாம். ஆனால் பூராவையும் மாநிலங்களுக்குக் கொடுத்து விட வேண்டும். இப்படி இருக்கிற நிலைமையில் அவர்கள் அதைச் செய்தார்களா என்று சொன்னால் இல்லை என்றுதான் நான் சொல்ல வேண்டும். அப்படி அவர்கள் செய்திருந்தால் ஏன் நாங்கள் வரி போடுகிறோம்? வரி போடுவது என்றால் மக்களிடையே அதற்கு எதிர்ப்பு இருக்கிறது. வரி போடுவதால் மக்களிடத்தில் வெறுப்பு ஏற்படுகிறது. ஆகவே நாங்கள் வரி போடமாட்டோம். ஆனால் மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமைக்காக, எங்களுக்கு வரவேண்டிய பணம் வராத நிலைமையில் வரிபோடுகின்ற கட்டாயத்திற்கு எங்களைப் பிடித்துத் தள்ளி இருக்கிறார்கள். இந்த ஆர்ட்டிகிளை கான்ஸ்டிட்டூஷனில் கொண்டு வந்தது 1952 ஆம் ஆண்டில் என்று நினைக்கிறேன். இன்றைக்கு 1984 ஆகிறது. இதுவரையில் அவர்கள் அதைப் போடவில்லை.

அதைப்போலவே, ஆர்ட்டிகிள் 269–ல் சொல்லியிருக்கிறார்கள். Duties in respect of succession to property other than agricultural land—அக்ரிகல்சுரல் லேண்ட் அல்லது மற்றவைகளில் யாராவது உரிமை வாரிசு மாற்றம் கோரிவந்தால், அதற்கு அவர்கள் வரி போடலாம் ஆனால் எடுத்துக் கொள்ளக் கூடாது. நமக்குக் கொடுத்துவிட வேண்டும். இதுதான் சட்டம்.

அதேமாதிரி மற்றொன்று. Terminal taxes on goods or passengers carried by railway, sea, air அதாவது பொருள்கள் கடல் வழியாக வந்தாலும் சரி, விமானம் வழியாக வந்தாலும் சரி, ரயில்வே வழியாக வந்தாலும் சரி மத்திய அரசு வரி போட வேண்டும், நமக்குத் தரவேண்டும். ஆனால் அவர்கள் ஏன் போடவில்லை என்பது எனக்குத் தெரியாது.

இன்னொன்று சொல்லவேண்டுமானால், Taxes on railway fares. அதற்குக்கூட போடவில்லை, Taxes on the sale or purchase of newspapers and on advertisements published therein. இதை நான் சொல்லவில்லை. ஆர்ட்டிகிள் 269 சொல்கிறது. Taxes levied and collected by the Union but assinged to the States. அதைப் போடவில்லை. இவ்வளவுக்கும் பிறகு நாம் வரி போடாமல் என்ன செய்வது என்பதை நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட காரணங்களால்தான் நாம் வரி போட்டு இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



இங்கே பல்வேறு உறுப்பினர்கள் சொன்னதற்கு எல்லாம் நான் பதில் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். அப்படி ஏதாவது சொல்லாமல் விட்டு இருந்தாலும் அதைப்பற்றி நான் சொல்வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஒருமுனை வரியைப் பற்றி பதில் சொல்லியிருக்கிறேன். குதிரைப் பந்தயத்தைப் பற்றி பதில் சொல்லியிருக்கிறேன்.

(பிற்பகல் 12–50)

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தைப் பற்றிச் சொல்லும்போது, அங்கே பல ஊழல்கள் நடைபெறுவதாக பரவலாக ஜனங்கள் சொல்கிறார்கள். குதிரைப் பந்தயத்தில் ஜெயிக்கின்ற குதிரையை லகான் பிடித்து இழுத்து, ஜெயிக்கவிடாமல் பண்ணிவிடுகிறார்கள். குதிரைக்குத் தீனி போடுவதற்காகக் கொடுக்கப்படும் பணத்தில் கையாடல் நடப்பதாகச் சொல்கிறார்கள். மொத்தத்தில் 50 சதவீதத்திற்குமேல் குதிரைகளை 'ஓண்' செய்கிறவர்களின் ஆதிக்கம் தான் அங்கே இருக்கிறது என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட கம்பிளைண்ட்ஸ் எல்லாம் வருகின்றன. அரசாங்க நாமினி அங்கே இருந்தும் அரசாங்கத்திற்கு ஒன்றும் பயனில்லை. இந்த ஊழல்களைத் தடுக்க, குறிப்பிட்ட நபர்களுடைய ஆதிக்கத்தை நீக்கம் செய்ய, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசு அதிகாரிகளில் மேல்மட்டத்தில் இருக்கிறவர்கள் அந்தப் பொறுப்பில் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட அதிகாரி என்று நாம் போடுவதில்லை. ஏனென்றால் ஒருவரே தொடர்ந்து இருந்தால் ஏதாவது தவறு வரக்கூடும் என்ற சந்தேகம். குதிரைப் பந்தயம் நடைபெறும்போதெல்லாம் அந்த அதிகாரிகள் அங்கே போகவேண்டுமென்றில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு உண்மையை நான் உங்களுக்குச் சொல்வேன். சீர்காழி என்பது ஓர் ஊர். அங்கிருந்து ஒருவருடைய மகன் சினிமாப் படம் எடுக்க சென்னைக்கு வந்தார். மகனை அழைத்துச் சென்றுவிட வேண்டுமென்று தந்தை வந்தார் நான்கு நாள் சென்னையில் தங்கியிருந்தார். பின் அவரே சினிமா எடுக்க ஆரம்பித்து விட்டார். ஊரைச் சொன்னேன்; பெயரைச் சொல்லக் கூடாது. அதைப்போல வந்துவிடக்கூடாது. தினந்தோறும் அதிகாரிகள் அங்கே போகவேண்டுமென்றில்லை. அவர்கள் போய்ப் பார்வையிடுகிறார்கள். தவறு நடக்காமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். தவறு நடந்தால் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அதிலே அக்கறை செலுத்தி, தவறு நடக்காமல் அரசாங்கம் பார்த்துக் கொள்ளும். வரி ஏய்ப்பைத் தடுக்க இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு. என் எஸ். வி. சித்தன்:** துணைத் தலைவரவர்களே குதிரைப் பந்தயச் சங்கத்தில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்ற தாகவும், அரசாங்கம் அதுபற்றி விசாரிக்க ஒரு விசாரணை நடத்திக்கொண்டிருக்கிறது என்றும் தகவல் வந்தது. அந்த விசாரணை எப்போது நடந்தது? விசாரணை நடந்துகொண் டிருக்கிறதா அல்லது முடிந்துவிட்டதா? இன்னும் முடியவில்லை என்றால் எப்போது முடியும்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, அம்மாதிரி தகவல் எனக்கு வரவில்லை. ஏதாவது தவறு நடந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம். திரு. உமாநாத் அவர்கள் வேகமாக ஓடுகிற குதிரையை இழுந்து நிறுத்திவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட விவரங்களைச் சொன்னால், அவற்றைக் கவனிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் இந்த பிளன்டிங் யூனிட்டை ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்டார்கள். நாங்கள் இப்போது ஐ.எம்.எஃப்.எல். மற்றும் ஹோல்சேல்லை எடுத் திருக்கிறோம். எல்லாவற்றையும் ஒரே நாளில் எடுத்துக் கொண்டால் அரசால் சிறாக நிர்வகிக்க முடியாது. பல இன்டஸ் டிரீஸ் இருக்கின்றன. எல்லா இன்டஸ்டிரிகளையும் அரசே எடுத்து நடத்துவது என்றால் அதிலே பல சங்கடங்கள் ஏற்படும் சங்கடங் கள் இல்லாமல் நடத்த முடியாது. எல்லாவற்றையும் ஒரே நாளில் அரசாங்கமே எடுத்து நடத்தக்கூடிய தன்மையில் இந்த மாநில அரசாங்கமும் இல்லை; இந்திய துணைக் கண்டத்தில் எந்த அரசாங்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சினிமாப் படங்களுக்கு வரிவிலக்கு அளித்ததுபற்றிச் சொன்னார்கள். எல்லா படங்களுக்கும் வரி விலக்கு கொடுப் பதில்லை. அதற்கு என்று ஒரு குழு இருக்கிறது. அதிலே 9 பேர்கள் இருக்கிறார்கள். அந்த ஒன்பது பேர்களும் வரிவிலக்கு கொடுக்கலாம். கொடுப்பது சரி என்று சொல்கிற படங்களுக்கு மட்டும்தான் கொடுக்கிறார்கள். ''கடவுளின் தீர்ப்பு'' என்ற படத்தைப் பற்றிச் சொன்னார்கள். அந்தப் பார்த்துச் சொன்னார்களா, பார்க்காமல் சொன்னார்களா என்று தெரியவில்லை. சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள், ஜாதி பேதமற்ற சமுதாய சீர்திருத்தக் கருத்துக் களை மையமாகக் கொண்டது அந்தப் படம். 'ஒன்றே குலம்' என்பதை மையமாக வைத்து அந்தப் படத்தைத் தயாரித் திருக்கிறார்கள். ஜாதி சமய சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டு, சமுதாய மறுமலர்ச்சிக்கு வழிகாட்டுவதாக அந்தப் படம் இருக்கிறது. எல்லோரும் ஒரே குலம், ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பதை விளக்கிக் காட்டுகிறது அந்தப் படம். சங்கரய்யன் என்ற பாத்திரப்படைப்பின் மூலம் வேதங்களை ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள்; ஜாதிபேதம், சமய பேதம் இருக்கக்கூடாது என்று சொல்கிறார்கள்.



தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபன், மேல் சாதியைச் சேர்ந்த ஒரு பெண், இருவருக்கும் இடையே புனிதமான மன உணர்வோடு பிறக்கும் தூய்மை காதல் என்பது. அதை நீங்கள் நன்றாக கவனித்துக் கொள்ளவேண்டும். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வாலிபன், மேல் சாதியிலே பிறந்த பெண், இருவருக்கும் இடையே பிறந்த புனிதமான மன உணர்வுகள், பிறக்கின்ற தூய்மையான காதல், அத்தனை சோதனைகளையும் வென்று நிறைவேறி யிருக்கிறது, அந்தக் காதல். காதல் என்றால் என்ன? காதல் என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியும். காதல் என்றால் கட்டிப்புரள்வதா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உறுப்பினர் களுக்குச் சொல்லிக் கொடுக்காதீர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** அப்படி காதலர்கள் ஒருவரை ஒருவர் தொடாமல் நடித்திருக்கிறார்கள். ஆக மனப்பூர்வமான காதல் அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே காதல் என்று கட்டிப் பிடிக்காது, தெய்வீகமான உறவு என்பதை வலியுறுத்தி அது கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. காதலர்கள், தொடாமல், கெடாமல், தூய்மையோடு பழகும் கண்ணியத்தை வடிவமாக எடுத்து, அந்தப் படம் எடுக்கப் பட்டிருக்கிறது. உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்பதற்கு, காதலுக்கே அது வழி வகுத்திருக்கிறது. இந்தப் படத்திற்குக் கொடுக்காமல், வேறு எந்த படத்திற்குக் கொடுப்பது? கண்மூடித்தனமான பழக்கங்கள், மூட நம்பிக்கை உள்ள கருத்துக்கள் அங்கே கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. கண்மூடித் தனமான பழக்கங்கள், மூட நம்பிக்கைகள் இவைகளை அகற்றும் விதத்தில், அண்ணாவின் வழி வந்த அரசு, புரட்சித் தலை வருடைய அரசு இன்றைக்கு இவைகளுக்குக் கொடுக்காமல். வேறு எந்தப் படத்திற்கு இந்த வரி விலக்கை கொடுப்பது, என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், கொடிய எண்ணங்களை, அங்கே தாக்கி இருக்கிறார்கள். சாதி பேத வெறி உணர்வுகளை இந்தப் படத்தின் மூலமாகக் கொண்டுவந்திருக்கிறோம். எல்லா தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் அளவிற்குக் கொண்டுவந்திருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்கிற போது....(குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அண்ணா வழியில் அண்ணாவின் கருத்துக்கள் என்று சொல்லப்பட்ட படம். ஆகையால் அந்தப் படத்திற்கு டாக்ஸ் எக்செம்ஷன் கொடுக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் படம் அப்படி உருவாவதற்கு முன்பே, அந்தப் படத்தினுடைய கதையை, ஆரம்ப கட்ட நிலையில் நானும் இருந்தவன் தான்

அந்தப் படத்தை எடுத்தவர் இப்போது உங்கள் கட்சிக்கு வந்திருக்கிறார். ஆக நீங்கள் வேறு காரணம் சொல்கிறீர்கள். ஆனால் நான் கேட்கிறேன். என்னென்ன படங்கள் வந்தன? எத்தனை படங்கள் வந்தன? இந்தப் படம் மட்டும் அண்ணாவின் கொள்கை இலட்சிய வழியில் வந்த படமா? பாக்கி படங்கள் அப்படி இல்லை என்று நீங்கள் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு வேறு என்னென்ன படங்கள் வந்தன? ஏனென்றால், இந்தக் கதை 'கடவுளின் தீர்ப்பு' என்ற கதை, ஏற்கெனவே அது வேறு கதை. அந்தக் கதையிலே வேறு சில பாத்திரங்கள், கட்சி மாற்றத்தின் காரணமாக சில மாற்றங்கள் வந்தன. அது ஏற்கெனவே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படம். ........(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: 'கடவுளின் தீர்ப்பு'— அதை நீங்கள் நன்றாகப் பார்த்திருக்கிறீர்கள். நன்றாக பார்த்த பிறகு கூட, அதை நீங்கள் மறுத்திருக்கிறீர்கள். அதிலே சாதி பேதத்தை ஒழித்திருக்கிறோம். அதிலே காதலைப்பற்றிய ஒரு உயர்ந்த எண்ணத்தை அது உருவாக்கியிருக்கிறது. தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஒரு பெண், உயர்ந்தச் சாதியைச் சேர்ந்த ஒரு ஆணைக்காதலித்து இருக்கிறார்கள். அதிலே நாங்கள் இங்கே சொல்கிற போது, காதல் என்பது தெய்வீகக் காதல்—தெய்வத்தின் மீது நம்பிக்கை இல்லை. அந்தக் காதலில் நேர்மையானபடி, கட்டிப் புரளாமல்....(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் வழியில் வந்த படம், அதற்காகக் கொடுக்கப்பட்டது என்பதை வாதமாக வைத்துக்கொள்ளலாம். ஆனால் பக்த மார்க்கண்டேயா—பானுமதி எடுத்த படத்திற்குக் கொடுத்திருக்கிறீர்கள். அதையாவது அண்ணாவின் வழிக் கொள்கை என்று சொல்லப்பட்ட ஒரே ஒரு படம், ஆகையால் கொடுக்கிறோம் என்று சொன்னால், பக்த மார்க்கண்டேயா— பானுமதி எடுத்தபடம். அண்ணா வழியா? அதற்கு எப்படி டாக்ஸ் எக்சம்ஷன் கொடுத்தீர்கள்? (குறுக்கீடுகள்) இந்தப் படம் திருவை அண்ணாமலை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது எடுத்த படம். அந்தப் படத்தைப் பற்றிய சில கருத்துக்களைச் சொல்லிய நபர்களில் நானும் ஒருவன். ஆனால் இப்போது அவர் உங்கள் கட்சிக்கு வந்த பிறகு, அண்ணாவின் வழி என்று காரணம் காட்டி, பக்த மார்க்கண்டேயா....(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல சர்ச்சை. ஆகவே கொஞ்சம் பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் படத்தை நானும் பார்த்தேன், வெளியிடுவதற்கு முன்பாக முதலிலே அதிலிருந்த கதை, அந்தப் பெண்ணை தெய்வமாக வைத்திருந்தார்கள். தெய்வம் வந்து, பெண்ணாகப் பிறந்து அந்தக் கருத்தைச் சொல்வதாக உயர்ந்த சாதியிலே பிறந்த பெண்ணாக, அதை மாற்றி எங்கள்



கட்சிக்கு வந்ததால், அதை மனித சாதி உள்ளதாக மாற்றி, அந்தப் பெண் அந்தத் தாழ்த்தப்பட்ட ஆணை கல்யாணம் செய்து கொள்வதாக அந்தக் கதை முடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இங்கே வந்த பிறகு அது தெய்வத்தன்மை என்பது போய் மனிதத் தன்மை என்று வந்திருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அதுமட்டுமல்ல, வேறு படங்களுக்கு கொடுத்தது என்பதை ஒரு ஆங்கிலப் படம் என்று எடுத்துக்கொள்ளவேண்டும். ஒன்றும் அறியாத மக்கள், காட்டுவாசிகள், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம், பொதுச் சொத்து தனிச் சொத்து, தனி உரிமை கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு ஆகாயத்திலே பறந்து போய்க்கொண்டு இருக்கிற ஒரு விமானி ஒரு பாட்டிலைத் தூக்கிப் போடுகிறான். அதைக் குடித்துவிட்டு, என்ன என்று அவர்களுக்குப் புரியவில்லை. அது புதிதாகக் கிடைத்த பிறகு அந்த மனித உணர்வில், அது எனக்கு வேண்டும் உனக்கு வேண்டும் என்று போட்டி வந்தபோது, அந்தச் சமுதாயம் ஒரு 10, 15 பேர்கள் என்ற குடும்பமாக இருந்தாலும், அவர்களுக்குள்ளே பிரிவினைவந்து, தனி உடமை, எப்படி மனிதனைப் பிரிக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. அப்படிப்பட்ட கதைகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனவே தவிர, அது யார்? எதற்கு, சொந்தத்திற்கு என்று இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு விளக்கம் மட்டும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி ஏற்கனவே பேசி முடித்தாகிவிட்டது. (குறுக்கீடு) இதற்கு என்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுதான் தீர்மானம் செய்கிறது. சரியாக இல்லை என்றால், பின்னால் எக்ஸ்பஞ்ச் பண்ணிவிடுவேன்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் சொல்லிய கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். அறிவுபூர்வமான, இன்னும் சொல்லப்போனால், அண்ணாவின் பகுத்தறிவுப் படங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது சரிதான். தமிழ்நாட்டில் எவ்வளவோ படங்கள் எடுக்கப்படுகின்றன. அப்படி என்றால் இந்த ஒரு படத்திற்கு மட்டும்தான். வேறு படங்களுக்கு இல்லையா? ஆகவேதான் நான் கேட்கிறேன். என்னென்ன படங்கள் குழுவிற்கு வந்தன. எந்தெந்தப் படங்களில் இந்த அம்சங்கள்

இல்லை, இதிலே இருக்கிறது என்று சொன்னால் சரியாக இருக்கும். அடுத்து பானுமதி அம்மையார் அவர்கள் நடித்த பக்த மார்கண்டேயா....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடவுளின் தீர்ப்பு என்ற உடனேயே கடவுள்தான் அங்கே வந்துவிட்டார்கள் என்று பயந்து அவர்கள் முதலிலே தெரிந்து கேட்டார்களோ, இல்லையோ என்று எனக்குத் தெரியாது. எப்படிக் காதலர்கள் தொடாமல் கெடாமல் தூய்மையோடு பழகினார்கள் என்று எல்லாம் நான் உங்களுக்குத் தெரிவித்தேன். (குறுக்கீடு) இதிலே தொடலாம். தூய்மை கெடாமல்... (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு தாயும் மகனும் கட்டிப் பிடிக்கிறார்கள்; ஒரு தங்கையும், அண்ணனும் கட்டிப் பிடிக்கிறார்கள்; ஒரு பெண்ணும், ஆணும், சம வயதோ, அல்லது கொஞ்சம் குறைவோ, அதிகமோ கட்டிப்பிடிக்கிறார்கள். எடுக்கின்ற முறையில்தான், அதிலே அருவருப்புக் காட்சித் தெரியுமே தவிர, அதைத் திறமையாக எடுத்தார்களானால் இதிலே குற்றம் இருக்காது. அதற்குத்தான் அருவருப்பு வேறு, நாம் வெறுப்பு அடைவது என்பது வேறு, கட்டிப்பிடிப்பது வேறு; கட்டிப்பிடிக்க முடியவில்லையே என்று ஏக்கம் கொள்வது வேறு (கை தட்டும் ஒலி, சிரிப்பு) நமக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்தில் சொல்லலாம்; அது இயற்கை; எல்லோருக்கும் தோன்றும். ஆனால் அமெரிக்கா போய் அந்தப் படங்களைப் பார்த்தால் தான் தெரியும். ஆனால் இந்தப் படத்தைப் பொறுத்த வரையில் கதாநாயகனும் கதாநாயகியும் எந்தக் காட்சியிலேயும் ஒருவரை ஒருவர் தொட்டுப் பேசவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இந்தப் படத்திற்குக் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்திற்குக் கொடுத்ததன் நோக்கத்தைச் சொன்னேனே தவிர வேறு அல்ல. அதேபோல பல்வேறு படங்களுக்கும் குறிப்பிட்டு இங்கே கேட்டார்கள். அதற்கு ஏன் கொடுக்கவில்லை, இதற்கு ஏன் கொடுக்கவில்லை என்று. அதற்கு நாம் ஒரு குழு போட்டிருக்கிறோம். அந்தக் குழுவிலே 9 பேர்கள் இருக்கிறார்கள். அந்தக் குழுவினர் தீர்மானித்து, பிறகு தான் அதைக் கொடுக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்படி இந்தக் கடவுளின் தீர்ப்பை எதிர்க்கிறார்கள் என்று தெரியவில்லை, படத்தின் மூலமாக கடவுளின் தீர்ப்பை எதிர்க்கலாம். பரவாயில்லை, வரவேற்கத்தக்கதும் கூட, ஆனால் அந்தப் படத்தையே அவர்கள் எதிர்க்கிறார்கள். அதுதான் சரியல்ல.



அதற்கு அடுத்து கொடுத்த படம்' குழந்தைகள் படம். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ''சிறுவர் உலகம்,'' ''பக்த துருவ மார்க்கண்டேயா,'' போன்ற சிறுவர் படங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் சிறுவர் படங்களாக இல்லை என்றால், கொடுத்திருக்க மாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) அடுத்து ''சிறுவர் காட்டிய வழி,'' ''பாட்டிச் சொன்ன கதை,'' போன்றவைகளும் சிறுவர்கள் படம் என்பதற்காக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் கொடுக்கிற போதும், இதற்கும் குழுக்களை போட்டு ஆராய்ந்து அதற்குப் பிறகுதான் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நீங்கள் சொன்ன பல்வேறுவிதமான கோரிக்கைகளுக்கெல்லாம் நான் இங்கே பதிலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவர் சொல்லும்போது, மீண்டும் மீண்டும் ஒன்றைப் பற்றியே சொன்னார். ஸ்டீல் ரோலிங் மில் பற்றி. ஸ்டீல் ரோலிங் மில்லைப் பற்றி பூராவும் நான் சொல்ல வேண்டும் என்றால், நேரம் போதாது. அதில் பூராவும் பதில் வேண்டும் என்று தேவைப்படுகிறவர்கள், அது சம்பந்தமான என்னுடைய உரையை ஒன்றிண்டு பக்கங்கள் படித்து விட்டு இங்கே வந்து பேசினார்களா? அல்லது பூராவும் படித்து விட்டு பேசினார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்கிறேன் ஏப்ரல் மாதம் 1982-83 தொகுப்பு (சட்டமன்ற) புத்தகத்தில், ஏப்ரல் பதிப்பு-இந்த ஸ்டீல் ரோலிங் மில்லைப் பொறுத்தவரையில் 988, 989, 990, 991, 992 ஆக 5 பக்கங்கள் இருக்கின்றன. இந்த ஸ்டீல் ரோலிங் மில்லைப்பற்றி 5 பக்கங்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அதையே மீண்டும் மீண்டும், பேசி இந்த அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கருதுகிறேன். சுருக்கமாக திரட்டி வேண்டுமானால் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 5 பக்கங்களிலும் இருக்கும் முழு பதிலையும் சொல்ல வேண்டுமென்றால், டைம் போதாது. (மணியடிக்கப் பெற்றது) இன்னும் ½ மணி நேர விவாதம் வேறு இருக்கிறது. ஆகவே உங்கள் பேச்சைக் கொஞ்சம் சுருக்கிக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது நான் என்னுடைய உரையின் கடைசி இடத்திற்கு வந்திருக்கிறேன். மணியைப் பார்த்து பார்த்து பேசுவதினாலேதான், நானே சுருக்கமாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்.

எனவே. திரு. ரகுமான்கான் அவர்களுக்கு 5 பக்கங்களையும் விளக்கமாக அளிக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். உங்களுக்கு இதில் முக்கியமாகச் சொல்லவேண்டும் என்றால்

ஸ்டீல் ரோலிங் மில்லுக்கு வரியே எடுக்கவில்லை. அதை முதலிலே எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு எல்லோரும் எடுத்துச் சொன்னதைப் போல், மல்டி பாயின்ட்டை சிங்கிள் பாயின்ட்டாகத்தான் ஆக்கியிருக்கிறோம். என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். Multi-point becomes Single-point

(பிற்பகல் 1-10)

வியாபாரிகள் தாங்கள் ஏற்கெனவே மூலப்பொருள்களின் மீது, பழைய இரும்புகள் மீது 4 சதவீதம் வரியை செலுத்தியுள்ளதால், பூர்த்தி செய்த பொருள்களுக்கு மேலும் 4 சதவீத வரி கூடாது என்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் அதை வேண்டிக் கொண்டபோது நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கும் ஒரு குழு அமைத்தோம். அதில் 5 பேர்கள் இருந்தார்கள். யார் யார் அந்தக் குழுவைச் சார்ந்தவர்கள் என்றால்; இண்டஸ்டரிஸ் துறையைச் சார்ந்தவர்கள், நம்முடைய வணிகத்துறை இயக்குநர் அறநிலையத் துறை செயலாளர், பொதுப்பணித்துறை செயலாளர், அரசுத் துறை செயலாளர், இந்த 5 பேர்கள் சேர்ந்து அதைச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். சிபாரிசு செய்திருக்கிறபோது அவைகளுக்கு மொத்தமாக வரியை எடுக்கவில்லை. மல்டிபாயின்டாக இருந்ததை சிங்கிள் பாயின்ட்டாகக் கொண்டுவந்து இருக்கிறோம். முதலிலேயே மூலப்பொருட்களை வாங்குகிறபோதே 4 சதவீதம் செலுத்தியிருந்தால் பிறகு அதற்கு 4 சதவீதம் வரியில்லை. ஒரே ஒரு வரிதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூலப்பொருட்களுக்கு 4 சதவீதம் வரி செலுத்தியிருந்தால் பூர்த்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு 4 சதவீதம் வரி. போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இன்டஸ்ட்ரி தமிழ்நாட்டிலே இருக்க வேண்டும். ஸ்டீல் ரோலிங் மில் வேறு மாநிலத்திலிருந்து இங்கே இருந்து வந்தால் அதற்கு வரி உண்டு. அந்த மூலப் பொருட்களை வேறு மாநிலத்திலே வாங்கி அங்கே 4 சதவீதம் வரி செலுத்தி இருந்தாலும் தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு 4 சதவீதம் இங்கே வரி உண்டு. மூலப்பொருட்களைத் தமிழ்நாட்டிலே வாங்கியிருக்கவேண்டும். 4 சதவீதம் வரி செலுத்தியிருக்கவேண்டும். தமிழ்நாட்டிலே இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல; உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், இன்கம்டாக்சுக்குக் கணக்குக் கொடுக்கிற பேலன்ஸ் ஷீட்டிலே இதற்கு வரிப் போடவில்லை என்பதை எழுதியாகவேண்டும். ஒரு கண்டிஷன் போட்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, 12 ஆயிரம் தொழிலாளர்கள் இதற்கு வரி போடுவதால் பாதிக்கப்படுவார்கள். மற்ற மாநிலங்களில் இவைகளுக்கு 4 சதவீதம் தான் இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே 4 சதவீதம் வரி என்றுதான் இருக்கிறபோது ஸ்டீல் ரோலிங் மில்லினுடைய அந்த புராடக்ட் வெளியே விற்பனைக்கு வருகிறபோது விலையை ஏற்றி விற்கவேண்டியிருக்கிறது. நேர்முகமாகவோ மறைமுகமாகவோ உருக்கிய பொருள்கள்மீது வரிப்போடக் கூடாது என்று ஒரு



கண்டிஷன் போட்டு வைத்திருக்கிறோம். அது மட்டுமல்ல பாலன்ஸ் ஷீட்டிலே காட்டவேண்டுமென்று கொடுத்து இருக்கிறோம். இவைகளை எல்லாம் ஏற்கெனவே பதில் சொல்கிறபோது 5 பக்கம் நான் பேசியிருக்கிறேன். இந்தப் புத்தகத்திலே 5 பக்கம் இருக்கிறது அது. 1 தரம், 2 தரம், 3 தரம் பேசியிருக்கிறார்கள். மீண்டும் அதையே சொன்னார்கள் என்றால் — அவர் இப்போது இங்கு இல்லை — வேறு சொல்வதற்கு இல்லை என்பதற்காக எதையாவது சொல்லி வைப்போமே; மக்கள் இதை மறந்துவிடுவார்களே மறந்து இருப்பார்களே என்று, அது மட்டும் அல்லாமல் இதற்கு நான் தயாராக வந்து இருக்கமாட்டேன் என்று நினைத்து இருப்பார்கள்; உண்மையிலேயே நான் தயாராக வரவில்லை. இங்கே அவர் சொன்ன பிறகுதான் கொண்டுவரச் சொன்னேன். அதையே திருப்பி அவர்கள் சொல்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆகவே கொண்டுவரச்சொல்லி அதைப்பற்றி தெரிவித்தேன் என்பதைச் சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னவைகளுக்கு எல்லாம் நான் கூடியவரையில் பதில் சொல்லியிருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, வெட்டுப் பிரேரணைகளுக்கு நான் மார்க் செய்து பதில் தயாரித்து அந்தப் பதில்களையெல்லாம் தெரிவித்து இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டைப் மிஷின்களுக்கு இரண்டாவது தரம் வரி போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். புது மிஷினுக்குதான் வரி. உருக்கியதற்குப் பிறகு விற்க வெளியே வருகிறபோது ஸ்டீல் ரோலிங் மில் போல் வரி உண்டு என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: இப்போது வாக்கெடுப்பு திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன், என். பழனிவேல் மற்றும் தி. கா. நல்லப்பன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண்: 4-பொது விற்பனை வரியும். ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,40,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரியதொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

## 5. அரைமணிநேர விவாதம்*

### திருச்சி வட்டாரப் பொறியியற் கல்லூரி முன்னாள் முதல்வர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, திருச்சி ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரியின்
முன்னாள் முதல்வர், பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின்
தற்போதைய துணை வேந்தர் புரப்பசர் மணி சுந்தரத்தின்
பேரில் சில சீரியஸ் ஊழல் குற்றச்சாட்டுகளை நான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களிடம் 1977 ஆம் ஆண்டிலேயே சமர்ப்
பித்தேன். இன்றைக்கு கூட பத்திரிகையில் கனடா நாட்டி
னுடைய நிகோர்ஷியா யூனிவர்சிட்டி டாக்டர் பட்டம் அவருக்கு
வழங்க இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.
அதே புரப்பசர் மணி சுந்தரத்தின் மீது பெரிய ஊழல் குற்றச்
சாட்டு அது தான். 'subject matter of discussion' அதில்
ஒன்றை மட்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்
கிறேன். இந்த டாக்டர் பட்டம் அல்லது அவருடைய திறமை
என்றப் பிரச்சினை எல்லாம் இதில் வராது. ஏன் என்று
சொன்னால் திறமையான ஆள் என்றாலும் ஊழல் என்றால்
ஊழல் தான். திரு. அந்துலே விஷயமாக மஹாராஷ்டிரா
ஹைகோர்ட்டில் நீதிபதி திரு. லென்டன் அவர்கள் தந்த
ஜட்ஜ்மெண்டை நீங்கள் எல்லாம் பார்த்து இருப்பீர்கள்.
அவருடைய திட்டங்களினால் நிறைய நல்லதை செய்திருக்
கிறார்கள். ஜட்ஜ்மெண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒருவர்
900 நல்லது செய்திருந்தாலும் ஒரு விஷயத்தில் கெடுதல்
என்று சொன்னால் அந்த 900 நல்லது ஒரு கெடுதலை நியாயப்
படுத்த முடியாது. ஆகவே இப்போது சொல்ல விரும்புகிறேன்.
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்த
ஆஸ்பெக்ட்டை ப்ரயிஸ் செய்ய முடியாது. 7 ஆண்டுகளுக்கு
பிறகு தான் இந்த முடிவு கூறப்பட்டது. நான் கேட்ட
கேள்விக்கு நான் கொடுத்த குற்றச்சாட்டுக்கு, விவர
அறிக்கையின் பதில் என்னைப் பொறுத்தவரையில் நான்
படித்துப் பார்க்கும்போது நிரூபிப்பதாகவே நான் புரிந்து
கொள்கிறேன். அதேசமயம் புரப்பசர் மணி சுந்தரத்தின்
ஊழலை ஷீல்டு பண்ணக்கூடிய முறையில் ஊழல்சாரர்களுக்கு
புகலிடம் கொடுக்கக்கூடிய முறையில் அந்த டிபார்ட்மெண்டு
நோட் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். அது அப்படி
அமைந்து இருப்பதாக எனக்கு ஒரு இம்ப்ரஷன் ஏற்பட்டிருக்கிறது.
அதற்கு என்னுடைய 4-வது குற்றச்சாட்டுக்கு அரசின் பதில்
சரியான சான்று ஆகும் என்று நான் சொல்லவிரும்புகிறேன்.
நான் கொடுத்த 4-வது குற்றச்சாட்டு என்ன என்றால் பகுதி
நேர பி.ஈ. பட்டப்படிப்பிற்கு ஒருவரை சேர்க்கவேண்டுமானால்

*1984 மார்ச் 7 ஆம் நாள் பதிலளிக்கப்பெற்ற
195—*வினா எண் 16868





அவர் கல்லூரியிலிருந்து ஆர்.ஐ.சி.லிருந்து 30 கல் தொலைவில்
பணி ஆற்றுபவராக 3 ஆண்டு அனுபவம் பெற்றவராக இருக்க
வேண்டும் என்று கட்டாயமாக விதி இருக்கிறது. புரப்பசர்
மணி சுந்தரம் இந்த விதியை காலில் போட்டு மிதித்து பீகாரில்
வசிக்கும் யாதவ் என்பவரை தேர்ந்தெடுத்து விதியை மீறி
சேர்த்தார் எனவே அதன் மூலம் அட்மிஷன் விஷயத்தில் ஊழல்
செய்தார் என்பது என்னுடைய 4-வது குற்றச்சாட்டு. ஆனால்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் இங்கே வைத்து
இருக்கக்கூடிய விவர அறிக்கையில் 'I quote.:—

''திரு. கபில்தேவ் யாதவ் என்பவர் 6 ஆண்டு பணி அனுபவம்
உள்ளவர் என்றும் திருச்சி அரியமங்கலம் தொழில்துறையில்
பணியாற்றுபவர் என்றும் சான்றிதழ் அளித்ததன் அடிப்படையில்
இவருக்கு பகுதி நேரப் பட்டப்படிப்புக்கு இடம் அளிக்கப்பட்டது.
பின்னால் புகார் வரப்பெற்ற பின் விசாரித்தபோது அவர் அங்கு
பணியாற்றவில்லை என்பது தெரிய வந்தது''. இப்படி மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பதிலில் இருக்கிறது. இதைப் படித்தால்
புரப்பசர் மணி சுந்தரம் இன்றைக்கு விசாரித்து கண்டுபிடித்தது
மாதிரி தோன்றும். அப்படி இல்லை. நான் கொடுத்த
புகாரின் பேரில் சி.ஐ.டி. ஸ்பெஷல் செல் விசாரித்தபோது
கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. புரப்பசர் மணி சுந்தரம்
கண்டுபிடித்தது அல்ல. கண்டுபிடிக்கப்பட்ட பின் ஏன்
நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதற்கு மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய நோட்டில் பதில்
எப்படி இருக்கிறது என்றால், 'ஐ கோட்,

''எனினும் இவர் 1979-ல் படிப்பை முடித்துச் சென்று
விட்டதாலும் அப்போது இவரது மூலச் சான்றிதழ்கள்
இவருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டு விட்டதாலும் அவற்றைச்
சரிபார்க்க முடியவில்லை''. என்பது மாண்புமிகு அமைச்சர்
அவர்களுடைய பதில். இது முற்றிலும் உண்மைக்கு புறம்
பானது, ஏன் என்று சொன்னால் இந்த மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பதிலினுடைய கடைசி பக்கத்தில் 10-வது பக்கத்தில்
என்ன இருக்கிறது, 'ஐ கோட்',

''திரு. மணி சுந்தரத்தின் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு
களை ஆராய 1978-ல் குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையின்
தனிப்பிரிவால் விசாரணை செய்யப்பட்டு ஒவ்வொரு குற்றச்
சாட்டின் மீதும் விரிவான அறிக்கை பெறப்பட்டது''.

இது அரசினுடைய நோட்டில் நமக்கு கொடுத்து இருப்பது.

(பிற்பகல் 1-20)

அப்பொழுது 78-லேயே கண்டுபிடித்தாகிவிட்டது என்பது
கவர்ன்மெண்ட் ரிப்ளை. யாதவ் போனது 79-லே என்று
கவர்ன்மெண்ட் ரிப்ளையில் இருக்கிறது. ஆகவே, அந்த

நேரத்தில் — 1978-லேயே கண்டுபிடித்திருக்கும்பொழுது—அவர் அங்கேயே இருக்கிறார், 1979-லேதான் அவர் போகிறார், எனவே அவர் அங்கே அப்பொழுது கல்லூரியிலேயே இருக்கிறார். அப்பொழுது 1978-லேயே போலிச் சான்றிதழ் என்று கண்டு பிடித்திருக்கும்பொழுது அந்தப் போலிச் சான்றிதழ் புரபசர் மணிசுந்தரத்தின் கையிலே உள்ளது என்பது படுகிறது. ஆகவே, 79-லே போகிற ஆளைப்பற்றியே 78-லேயே அவர் கையில் இருக்கும்பொழுது என் கையில் இல்லை என்று எப்படிச் சொல்லுவார்? நான் மினிஸ்டர் ரிப்ளையிலேயிருந்து சொல்கிறேன். ஆகவே இதுவும் கட்டுக்கதை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

மேலும், பீகார்காரர் யாதவுக்குத் தெரியாத அரிய மங்கலத்தில் எப்படிப் போலிச் சான்றிதழை அவர் பெற முடியும்? புரபசர் மணிசுந்தரத்திற்கு அரியமங்கலத்தில் அறிமுகம் உண்டு. இந்த யாதவ் அன்றைய மத்திய அரசினுடைய ஒரு அமைச்சருக்கு வேண்டியவர் என்பதினாலே மத்திய அமைச்சருக்கு ஒப்லைஜ் பண்ணுவதற்காக புரபசர் மணிசுந்தரம் இந்த யாதவுக்குத் தெரியாத ஊரிலே சர்டிபிகேட்—போலிச் சான்றிதழ் வாங்கி கொடுத்து, இந்த மாதிரி சேர்க்கப்பட்டிருக்கிறது என்பது விஷயம். ஆகவே, பதில் உரையில் இந்த வாதங்களுக்கு அமைச்சர் என்ன பதில் சொன்னாலும், ஒரு விஷயத்தில் அமைச்சர் அந்த நோட்டை நம்பிப் பதில் சொல்கிறதனாலே அவர் சிக்கியிருக்கிறார் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அதாவது, அரசு இதில் விசாரணைக்கு நியமித்த குழு இந்தக் குறிப்பிட்ட குற்றச்சாட்டில் ஒரு தீர்ப்பு கூறிவிட்டது. அமைச்சர் அதைச் சரியாகப் படித்தாரா, டிபார்ட்மெண்டிலே இதிலே சரியாகக் கவனித்தார்களா என்று தெரியாது. ஏனென்று சொன்னால், அந்தக் குழு நான் இப்பொழுது சொன்ன குற்றச்சாட்டிலே ஒரு தீர்ப்பைக் கொடுத்தாகிவிட்டது. என்ன தீர்ப்பு என்றால், புரபசர் மணிசுந்தரம் தெரிந்தே இந்த விதியை மீறி யாதவ் என்கிறவரைச் சேர்த்துள்ளார் என்றும், இந்தக் குற்றச்சாட்டு நிரூபணமாகிவிட்டது என்றும் விசாரணைக் குழு எழுதியுள்ளது. நான் பாசிட்டிவ்வாக அக்செப்ட் பண்ணிச் சொல்கிறேன். Because I have read it. இந்தத் தீர்ப்பை இந்த அறிக்கை சப்ரஸ் பண்ணியிருக்கிறது என்பது ஒரு சீரியஸ் மேட்டர். அவையிடமிருந்து இந்தத் தீர்ப்பு மறைக்கப்பட்டிருக்கிறது என்பது: மறுத்ததோடு அல்லாமல் இந்தக் குற்றமும் நிரூபிக்கப்படவில்லை என்று பொருள்பட திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. They constitute serious contempt of the House. ஏனென்றால், தீர்ப்பையே மறைப்பது என்பது; மறுத்தது மட்டுமல்ல. distort பண்ணி, குற்றவாளி அல்ல என்று, தீர்ப்புக்கு நேர்முரணாக ரிப்ளை பண்ணுவது என்பது. அமைச்சர் பதில் கூறும்பொழுது மேலும் நான் கூறும் இந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்வது நல்லது. அவர் தன்னைக் கரெக்ட் பண்ணுவது நல்லது; இல்லாவிட்டால் நான் கட்டாய



மாக இது மறைக்கப்பட்டிருக்கிறது; அதுதான் தீர்ப்பு; குற்றவாளி தான் இந்த குற்றச்சாட்டிலே மணிசுந்தரம் என்று தீர்ப்பு என்பதை நான் ப்ரூப் பண்ணுவேன். அமைச்சர் சிரியஸான நிலைமையில் சிக்குவார் ப்ரூப் பண்ணினால். ஆகவே, பதில் சொல்கிற பொழுதே அதை அவர் ஒப்புக்கொள்வது நல்லது என்று சொல்கிறேன்.

நான் மேலும் கேட்கிறேன், போலிச் சான்றிதழ் என்று தெரிந்தபிறகு யாதவ் பேரில் ஏன் கிரிமினல் ப்ராசிகியூஷன் எடுக்கவில்லை. 1979-லேதான் போனார். போலிச் சான்றிதழ் கவர்ன்மெண்டே ஒப்புக்கொள்கிறார்கள் என்று தெரிந்தபிறகு கிரிமினல் ப்ராசிகியூஷன் போடலாமே. For falsification of the certificate you can prosecute. அது இல்லை. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட ஊழலுக்காக புரபசர் மணிசுந்தரத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான ஒரு விஷயம், 6-வது குற்றச்சாட்டு முஜிப்ஷா என்ற மாணவரை—அவரும் போலிச் சான்றிதழ் கொடுத்துச் சேர்ந்துவிட்டார் என்பது பற்றி. அமைச்சர் பதில் என்ன தெரியுமா? ஐ கோர்ட் இவர் கொடுத்தது போலிச் சான்றிதழ் என்று கண்டுபிடிக்கப்பட்டதால் இவரை கல்லூரியில் இருந்து நீக்கியாகிற்று. இதன் மீது மேல் நடவடிக்கை தொடர வட்டாரப் பொறியியற் கல்லூரி முதல்வருக்கு தேவை ஏற்படவில்லை என்று ரிப்ளை. அதிலும் நான் சொல்கிறேன். நான் சொன்ன குற்றச்சாட்டை அட்மிட் செய்கிறார்கள். ஆனால் நடவடிக்கை இல்லை. போலிச் சான்றிதழ் சமர்ப்பித்தபோது நான் கேட்கிறேன், கிரிமினல் குற்றம் அல்லவா? அது போர்ஜரி அல்லவா? கல்லூரியை சீட் பண்ணுவது இல்லையா? கேரளத்திலே மார்க் லிஸ்ட் போர்ஜரி பண்ணியதற்காக மாணவர்களையே பிராசிகியூட் பண்ணியிருக்கும்போது போர்ஜரி செய்த அந்த முஜிப்ஷா என்பவரை ஏன் பிராசிகியூட் செய்யவில்லை. இதிலே ஏன் செய்யவில்லை. அந்த புரபசர் மணிசுந்தரம் ஏன் செய்யவில்லை என்றால் அதில் விஷயம் இருக்கிறது. உண்மை என்னவென்றால், டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷனும், புரபசர் மணிசுந்தரமும் சேர்ந்து தெரிந்தே ஒரு பெரிய செல்வாக்கு வாய்ந்தவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில், முஜிப்ஷா என்பவரை இந்த போலிஸ் சர்டிபிகேட்டோடு சேர்த்து, ஆனால் கல்லூரியிலே புரபசர்களிடமிருந்து அது அம்பலம் ஆயிற்று. அம்பலம் ஆனபிறகு There is no other go. அதனாலே வெளியே அனுப்பினார்கள். ஆனால் நார்மலி, போர்ஜரி என்று செய்த பிறகு கிரிமினல் ப்ராசிகியூஷன் வரும். ஆனால் இவர்களெல்லாம் சேர்ந்து செய்ததாலே அம்பலப்பட்ட பிறகு, வெளியேற்றினார்களே தவிர, கிரிமினல் ப்ராசிகியூஷன் நடத்தவில்லை. காரணம், அதற்கான இவர்களுடைய கொல்லூஷன் அதிலே இருப்பதால்தான் என்று சொல்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, என்ஜினியரிங் கல்லூரியிலே இந்த மாநிலத்தில் அட்மிஷன் தேர்வாணைக் குழுதான் தேர்வு செய்யும்.

அந்தத் தேர்வு திருச்சி ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரி அட்மிஷனுக்கும் பொருந்தும். செலக்ஷன் கமிட்டி ஒரு மாணவனுக்குத் தகுதி இல்லை என்று நிராகரிந்தால் அவரைச் சேர்க்கக்கூடாது அல்லவா? செலக்ஷன் கமிட்டி ரிஜெக்ட் பண்ணியதற்குப் பிறகு எடுக்கக்கூடாது, ஆனால் பணக்காரர்கள் என்ன செய்வார்கள்? இப்படி சேர்க்கப்படாமல் இருந்தால் அப்படிப்பட்ட தங்களுடைய பையன்களைத்தனியார் கல்லூரியில் பணம் கொடுத்து சேர்த்து அங்கே இருந்து இன்டர் கல்லீஜியஸ் ட்ரான்ஸ்ஃபர் என்ற பெயரால் அவர்களை நிராகரித்த கல்லூரிக்கே மீண்டும் கொண்டு வந்து விடுவார்கள். இதுதான் பணக்காரர்கள் முறை. நிராகரித்த ரீஜினல் கல்லூரிக்கே வந்து விடுவார்கள் என்றால் இது ஊழல்தானே? மற்ற பர்மிஷன் எல்லாம் இருந்தாலும் இது ஊழல்தானே? இப்படி ஊழல் செய்துதான் மணலி ரீஃபைனரி சேர்மன் திரு. தீனதயாளன் அவர்களின் மகன் அதாவது ரீஜினல் இன்ஜினியரிங் கல்லூரிக்குத் தகுதியில்லை என்று ரிஜக்ட் பண்ணப்பட்டவர் இந்த ட்ரான்ஸ்ஃபர் என்ற பெயராலே மீண்டும் அங்கே கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறார். இவர் இந்தக் கல்லூரிக்கு அன்ஃபிட் என்று ரிஜக்ட் பண்ணப்பட்டவர். He is now studying here,

அதேபோல்தான் மத்திய அரசின் இணைச்செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்களுடைய மகன் கோவை பி.எஸ்.ஜி. இன்ஸ்டிட்யூட்டில் சேர்க்கப்பட்டு தகுதியற்ற மார்க்குடன் ட்ரான்ஸ்ஃபர் என்ற பெயராலே ஆர்.ஈ.சி.க்குத் திரும்பிவிட்டார். ஆகவே இவ்வாறு தேர்வாணைக் குழுவாலே நிராகரிக்கப்பட்ட மாணவர்களை மீண்டும் சேர்ப்பது ஊழல் அல்ல என்கிறார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில். அதற்குக் காரணம் என்னவாம். நிராகரிக்கப்பட்டவர்கள் இப்படி ஆர்.ஈ,சி.க்கு சேர்க்கப்பட்டது ஏன் என்பதற்கு பதில் சொல்கிறார்கள். சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகிகள் சம்மதித்தார்களாம்; டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷன் சம்மதித்தார்களாம்; நான் கேட்கிறேன், இவர்கள் சம்மதித்தால் ஊழல், ஊழல் அல்லாமல் போகுமா? If they do it. they are also colluding. என்று அர்த்தம். ஆனால் பதில் இப்படி கொடுக்கப்பட்டிருக்கின்றது நான் குற்றம் சாட்டுகிறேன். ப்ரஃபசர் திரு. மணி சுந்தரமும், சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகியும்—I do not know whether he is the ex-Registrar,——டைரக்டர் ஆஃப் டெக்னிக்கல் எஜுகேஷனும் கொல்லுட் பண்ணி, கூட்டு சேர்ந்துதான் இந்த அன்ஃபிட்டான ஸ்டூடன்ஸைச் சேர்த்திருக்கிறார்கள். அதேமாதிரி ஃபர்ஸ்ட் க்ளாஸ் வாங்கிய பல ஏழைப் பையன்கள் இந்த கல்லூரியால் ரிஜக்ட் பண்ணப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஹையர் செக்கண்டரியிலே செக்கண்ட்



க்ளாஸ் வாங்கிய ஒருவர் அதாவது மத்திய அரசின் அன்றைய முதன்மை கல்வி ஆலோசகர் திரு. நரசிம்மன், ஐ.ஏ.எஸ். அவர்களின் மகன் சேர்க்கப்பட்டிருக்கிறார். ஏழை மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஃபர்ஸ்ட் க்ளாஸ் வாங்கியிருந்தாலும் கூட அவர்களுக்கு இடம் இல்லை. Because they have no money, they have now status, they are poor. ஆனால் செகண்ட் க்ளாஸ் மார்க் வாங்கிய இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் மகன் சேர்க்கப்பட்டிருக்கிறார். இதுவும் ஊழல் என்று சொல்கின்றபோது அதற்கு இந்த அரசு என்ன பதில் சொல்கிறது தெரியுமா? ஆன் தி ஸ்பாட் அட்மிஷனிலே இப்படி அனுமதிக்கலாமாம். அப்படி என்றால் ஃபர்ஸ்ட் க்ளாஸ் மார்க் வாங்கிய மாணவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்களிலிருந்து இந்த ஆன் தி ஸ்பாட் அட்மிஷனில் கூப்பிட வேண்டியதுதானே? ஆகவே ஆன் தி ஸ்பாட் அட்மிஷன் என்பது ஒரு மோடஸ் ஆபரேண்டி. அதாவது ஊழல் செய்வதற்கு இது ஒரு மோடஸ் ஆப்பரேண்டி, என்று நான் சொல்கிறேன்.

அடுத்து இன்னொரு சீரியஸ் மேட்டர் இருக்கின்றது. 75 சதவீதம் நாட்களாவது வகுப்புக்கு மாணவர்கள் வரவில்லை என்றால் தேர்வு எழுத அனுமதிக்கக்கூடாது என்று பல்கலைக் கழகத்தினுடைய விதி இருக்கின்றது. அந்த விதியின் கீழ் தமிழகத்தில் பல மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படவில்லை. ஏனென்றால் அவர்களுக்குப் போதிய அட்டெண்டென்ஸ் இல்லை என்பதால். ஆனால் ப்ரஃபஸர் திரு. மணிசுந்தரத்திற்கும் அந்த கல்லூரியில் உள்ள டீச்சிங் ஸ்டாஃபுக்கும் சண்டை இருந்திருக்கின்றது. இவர் அங்கே இருந்தபோது அதன் காரணமாக மாணவர்களைத் தன்பக்கம் இழுப்பதற்காக வகுப்புக்கு வராமல் இருந்த மாணவர்களைத் தேர்வு எழுத அனுமதித்திருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் என்ன? அதை டினை பண்ணவில்லை. அதை ஒத்துக்கொண்டு என்ன பதில் சொல்கிறார். ஒத்துக்கொள்கிறார் என்றால் பல்கலைக்கழக விதிப்படி மாணவர்கள் 75 நாட்களாவது வகுப்புகளுக்கு வரவேண்டும் என்றிருந்தாலும் வகுப்புகளுக்கு மாணவர்கள் வரத்தேவை இல்லாத விருப்பம் உண்டு என்கிறார். வெரிஃபைன்; இந்த விதியை அனுமதித்துவிட்டால் நம்முடைய கல்லூரியிலே அநேக மாணவர்கள் வரமாட்டார்கள். ஆகவே முக்கால்வாசி மாணவர்கள் வரத் விருப்பம் இல்லாத எந்த வகுப்புக்கும் மாணவர்கள் வரத் தேவையில்லை என்ற சலுகையும் இருக்கும், இதுவும் சரி என்கிறார் மாண்புமிகு அமைச்சர். மற்ற சில கல்லூரிகள் இந்த விதியை மீறுகிறார்களாம்—இப்படி ஒரு நியாயம் சொல்லப்படுகின்றது— வேறு சில கல்லூரிகளில் 75 பெர்சென்ட் அட்டென்டென்ஸ் இருக்க வேண்டும் என்ற விதியை மீறிவிட்டு, அவர்கள் மீறுகிறார்கள் என்றால் இல்லீகல் இல்லையா? ஒரு சட்டவிரோதம் இன்னொரு சட்டவிரோதத்தை நியாயப்படுத்த முடியாது.

இன்னொரு இடத்திலே உள்ள ஒரு ஊழல், இங்கே இருக்கின்ற ஊழலை நியாயப்படுத்த முடியாது. ஆனால் இப்படி வராத மாணவர்களும் தேர்விலே அதிக மதிப்பெண்கள் வாங்கி இருக்கிறார்களாம்; அதனால் அது தப்பு இல்லையாம். அதாவது ஆப்சன்ட் ஆனவர்களுக்கு அதிக மதிப்பெண்கள் கிடைத்திருக்கிறதாம். ஆகவே 75 நாட்கள் வராமல் இருந்தது தப்பு இல்லை என்று பதில் வந்திருக்கின்றது. அப்படி என்றால் விதியை மீறலாம் என்று மாநிலம் பூராவும் ஒரு புதிய விதியைப் போடுங்கள். I have no objection.

(பிற்பகல் 1–30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ரா. உமாநாத்: புதிய விதிகளைப் போடுங்கள். மாகாணம் பூராவும்—ஒரு யூனிவர்சிட்டியிலே, இரண்டு இடங்களிலே சலுகை வேண்டாம்—போடுங்கள். ஓரிடத்திலே, போடலாம் என்றால், இஷ்டம் இல்லாததால் வகுப்பிற்கு வராத மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெறுவதால் 75 நாள் விதியை ரத்து செய்கிறோம் என்று போடுங்கள். Or you do not apply it. மாநிலம் முழுவதற்கும் ஒரு நியாயம். புரபசர் மணிசுந்தரத்திற்கு ஒரு நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

இப்படி நான் கொடுத்த பெருவாரியான குற்றச்சாட்டுகள் உண்மை என்று ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை ஊழல் அல்ல என்று நியாயப்படுத்தப்படுகிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக ஒருவர் கொடுத்த புகார் பேரிலே ஒரு கமிட்டி விசாரணை செய்தால், துணைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே நான் கேள்வியைக் கேட்கிறேன், ஒரு விசாரணைக்கு நான் கம்ப்ளெயின்ட் கொடுத்து, விசாரணை கமிட்டி அமைத்தால், அதை நிரூபிக்க சாட்சியம் என்ன எல்லாம் இருக்கிறது என்று தாவா கொடுத்து, என்னை அழைத்து விசாரிப்பார்கள் அல்லவா? நான் தானே கம்ப்ளெயினன்ட் என்னை சப்ஸ்டான்ஷியேட் பண்ணு என்று கூப்பிட்டு விசாரிப்பார்கள் அல்லவா? எனக்கு முன்னால் திரு. அனந்தன் நம்பியார் எக்ஸ் எம்.பி. கொடுத்தார். அவரைக் கூப்பிட்டு விசாரித்தார்களா? இல்லை. ஆனால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள், அரசு அமைத்த கமிட்டி, தாவா கொடுத்த என்னையோ அல்லது திரு. அனந்தன் நம்பியாரையோ அழைத்து ஒரு தடவை கூட விசாரிக்கவில்லை. நான் கேட்கிறேன், ஓடிவிட்டதா, என்று. இங்கேயே சொல்கிறோம் இல்லையா! ஏன் நீங்கள் ஆஜராகவில்லை என்று. அதைப் போல, என்னைக் கூப்பிடவில்லை என்பதாலே You are not prepared to face. ஒருவேளை, அந்த கமிட்டி, புரபசர் மணிசுந்தரம் பெரியவராக இருப்பதால் அவரைத் தப்பித்து ... முன் முடிவை



எடுத்திருப்பதனால்—Pre-judging the issue—என்னை அழைத்து விசாரித்தால் நான் கொடுக்கும் சாட்சியம் புரபசர் மணி சுந்தரத்தைக் காப்பாற்ற முடியாமல் போகும் என்று நினைத்திருப்பதால் என்னை விசாரிக்கவில்லையென்ற முடிவுக்கு வந்தால் என்ன தப்பு என்று நான் கேட்க விரும்புகிறேன்.

1977-ல் இந்த மகஜரை நான் முதலமைச்சரிடம் கொடுக்கும் போது திட்டவட்டமாகக் கேட்டேன். ஏனென்றால் 1973-லிருந்து குற்றங்கள் நடந்திருக்கின்றன. அப்பொழுது நான் அசெம்பிளியிலே இல்லை. ஆனால் பலர் முயற்சித்திருக்கிறார்கள். Some how Prof. Manisundaram escaped. ஆகையால் தான் 1977-லே நான் முதல்வரைப் பார்த்து கொடுக்கும்போது நேராகக் கேட்டேன், இதற்கு முன்னாலிருந்த அரசுகளிடம் புரபசர் மணிசுந்தரம் எப்படியோ தப்பித்துவிட்டார். உங்களைச் சரிக்கட்டுவாரா சொல்லுங்கள். நான் ஃபிராங்காகப் பேசினேன். ஏனென்றால் இப்படி உங்களுக்கு முன்னாலிருந்தவர்களிடம் அவர் எஸ்கேப் பண்ணி இருக்கிறார். உங்களையும் சரிக்கட்டி எஸ்கேப் பண்ணுவாரா என்றால், உங்களிடம் கொடுத்து பிரயோஜனம் இல்லை என்று சொன்னேன். முதலமைச்சர் கறாராகச் சொல்லிவிட்டார், என்னிடமிருந்து தப்பிக்க முடியாது என்று. நான் அதைக் கொடுத்தேன், நம்பினேன். ஆனால் இந்தக் கேள்விக்கு அமைச்சரிடமிருந்து பதில் முதலமைச்சருக்குத் தெரியுமா என்று எனக்குத் தெரியாது. தெரிந்தும் முதலமைச்சர் அதற்கு சம்மதித்திருக்கிறார் என்றால், முதலமைச்சரும் அவருடைய செல்வாக்குக்கு உட்பட்டு விட்டாரா என்று எனக்கு அச்சம் ஏற்படுகிறது. ஆகவே, நான் கூறுவது என்னவென்றால், இங்கே எழுப்பிய பிரச்சினை ஒவ்வொன்றிற்கும் பதில் கூறவேண்டும். குறிப்பாக விதியை மீறி பேரா நியமனச் சேர்த்ததால், புரபசர் மணிசுந்தரம் குற்றவாளி என்று கூறிய தீர்ப்பை அமைச்சர் மறைத்து வைத்ததற்கும் பதில் கூறவேண்டும்; பாரதிதாசன் யூனிவர்சிட்டியைக் காப்பாற்றுவதற்காக இவ்வளவு சீரியஸ் சார்ஜ்ஸ் இருக்கிறபொழுது அவரை அந்த பொறுப்பிலிருந்து ரிமூவ் பண்ணவேண்டும். போலிச் சான்றிதழ்கள் தந்ததால், சம்பந்தப்பட்டவர்களை கிரிமினல் பிராசிக்யூஷன் செய்யவேண்டும். புரபசர் மணிசுந்தரம் பேரில் இருக்கிற குற்றச்சாட்டுகளுக்கு ஒரு ஜுடிஷியல் என்கொயரி நடத்த வேண்டுமென்று நான் கோரி, முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியினுடைய கல்லூரித் தலைவராக இருந்த மணிசுந்தரம் அவர்கள் அந்தக் கல்லூரித் தலைவராக இருந்தபொழுது நடைபெற்றதாகச் சொல்லப்படுகிற பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. அந்தக் கேள்விகளுக்குப் பதில் இங்கே அவைமுன் வைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் கேட்டார்கள். அவர்கள்

தந்தது 1977-ல். என்னிடத்திலே சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சரிடத்திலும் எழுதித் தந்து அந்த அடிப்படையிலே புலனாய்வுத் துறை விசாரணை நடைபெற்றது. ஆளுகைக் குழு—கவர்னிங் பாடி—யினுடைய விசாரணையும் அதுபற்றி நடைபெற்றது. அந்த அடிப்படையிலேதான் பதிலும் தந்து இந்த அவை முன்னாலே அது விவர அறிக்கையாக வைக்கப் பட்டது.

அந்தக் கல்லூரியானது மத்திய மாநில அரசினுடைய சமபங்கான மானியத்தின் அடிப்படையில் அதேபோல் ஆளுகையிலேயும் அவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு நடைபெறுகிற ஒரு கல்லூரியாகும். அதிலே 50 சதவீத மாணவர்களை, நாம் தேர்ந்தெடுக்கிற மாணவர்கள் பட்டியலிலேயிருந்து நாம் நிரப்புகின்றோம். மீதி 50 சதவீதத்தை பிற மாநிலங்களில் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அதைப்போலவே பிற மாநிலங்களில் இருக்கிற வட்டார கல்லூரிகளுக்கு நாம் இங்கேயிருந்து தேர்ந்தெடுத்து அனுப்புகிறோம். இப்படி அகில இந்திய அடிப்படையில் ஒரு ஒருமைப்பாட்டு உணர்வு வளர்க்கப்பட வேண்டும் என்பதற்காக மத்திய அரசின் உதவியோடு நடந்து வருகிற வட்டாரப் பொறியியல் கல்லூரிகளில் அதுவும் ஒன்றாகும். இதில் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே நடைபெற்ற சில குறிப்பிட்ட புகார்களின் அடிப்படையில் தான் விசாரணை நடைபெற்று நாம் இங்கே சொல்லி இருக்கிறோம். இதிலே குறிப்பாக நடைபெற்ற அந்தக் குற்றச்சாட்டுகளை விசாரித்து ஒரு குழு அறிக்கை தந்திருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் நாம் பதிலை தந்திருக்கிறோம். அந்த பதில் திருப்தியில்லை என்று சொல்வதற்கு எல்லாவிதமான உரிமைகளும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இருக்கிறது. ஆனால் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது ஒரு குறிப்பிட்ட நபர் மீது, தனிப்பட்ட விரோதம் இருப்பதைப் போல இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு பேச ஆரம்பிப்போமானால்..........

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட நபர் மீது, தனிப்பட்ட குரோதம் என்று சொல்கிறார்கள். புரபசர் மணிசுந்தரம் அவர்களை நான் நேரில் ஒரு தடவை கூடப் பார்த்ததில்லை. I do not know him. ஆனால் என்னிடம் அந்த ஃபாக்ட்ஸ் வந்த பிறகு I strongly felt that this must be pursued. தனிப்பட்ட விரோதம் என்பது கிடையாது. அவரை எனக்கு தெரியவே தெரியாது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைச் சொல்வதற்குக் காரணம், அப்படி இருக்கக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இந்தப் புகார்களை விசாரிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதேநேரத்தில் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பொறுப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டு, நாளைக்கு அவர் [illegible]



திருச்சியிலேயே குடியிருக்கக் கூடாது என்று கூட கேட்கலாம். அது வேறு விவகாரம். புகார்கள் நிரூபிக்கப்பட்டிருந்தால் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம். நடவடிக்கை எடுப்பதும், எடுக்காததும் அந்த ஆளுகைக் குழுவினுடைய பொறுப்பு. அதிலே மத்திய அரசினுடைய உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து செய்ய வேண்டிய பொறுப்பு. நாமே பார்த்து செய்ய வேண்டியது ஒன்றுமில்லை.

திரு. ரா. உமாநாத் : மத்திய—மாநில அரசுகள் இரண்டிற்கும் பொறுப்பு இருக்கிறபோது, சார்ஜஸ் என்க்குவயர் பண்ணுவதற்கு கமிட்டி நியமித்தது நாம் தான். இதற்கு இன்வெஸ்டிகேட் செய்த சி.ஐ.டி. செல் நம்முடைய ஸ்டேட் செல் தான்.

You have already exercised your power.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நாம் விசாரிக்கிறபோது ஒத்துழைப்பு தந்திருக்கிறார்கள். அதைப்போல ஆளுகைக்குழு விசாரித்து இருக்கிறது. அதற்காக அது அட்டானமஸ் பாடி இல்லை என்று சொல்வதோ அல்லது அதில் மத்திய அரசிற்கு பங்கு இல்லையென்று சொல்வதோ, மத்திய அரசு பிரதிநிதிகளை மீறி நாம் ஒன்று செய்யமுடியும் என்று சொல்வதோ சரியாக இருக்காது. (குறுக்கீடு) மத்திய—மாநில அரசுகள் சமபங்கு ஏற்று நடத்துகிற ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு தன்னாட்சி உரிமைப் பெற்ற அட்டானமஸ் பாடி. இப்போது நாம் எந்த நடவடிக்கை எடுப்பதாக இருந்தாலும் தமிழ்நாடு அரசு எப்படி எடுப்பது?

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, எந்த நடவடிக்கை எடுக்கவேண்டி வந்தாலும் தமிழ்நாடு அரசு எப்படி எடுப்பது என்று அமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். கேள்விக்கு பதில் என்பதைப் போல ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் தமிழ்நாடு அரசு தான் பதிலை இந்த அவைக்கு கொடுக்கிறது. இப்போது தமிழ்நாடு அரசு ஒவ்வொரு பதிலிலும், குற்றச்சாட்டில் தங்களுடைய நிலை என்ன என்பதைச் சொல்லி, எங்களுடைய நிலை இது தான், ஆகவே எங்களால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றால் அல்லது நாங்கள் பொறுப்பு செய்திருக்கிறோம் என்றால் என்னால் புரிந்து கொள்ள முடியும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆளுகைக் குழு விசாரித்து இருக்கிறது என்பதிலே என்ன புரிந்து கொண்டீர்கள்? எடுத்துச் சொன்னவர்களின் அடிப்படையிலே நாங்கள் அங்கே சொல்லி அதற்கான ஏற்பாடுகளை செய்து அந்த விசாரணை செய்திருக்கிறோம் என்பது தான் அதற்கு அர்த்தம். ஆகவே நீங்கள் சொல்லிய கருத்துக்களை எல்லாம் அங்கே சொல்லி அவர்கள் அந்த நடவடிக்கையை எடுப்பார்கள்.

என்று அவரும் படித்திருக்கிறார். அதுவும் எனக்குத் தெரியும் அப்படி இருக்கிற போது, துறையிடமிருந்து இந்த அவைக்கு கொடுக்கும் குறிப்பில், அந்த விஷயம் சப்ரஸ் பண்ணி இருப்பது எப்படி என்பதை என்கொயரி செய்ய வேண்டும். அப்படி என்கொயரி செய்தால், அதற்கு பொறுப்பானவர்கள் யார் என்று தெரியும். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்9

மாண்புமிகு திரு, செ. அரங்கநாயகம் : போலி சான்றிதழ்கள் பொறுத்தவரையில் நடவடிக்கை என்பது கல்லூரியை விட்டு நீக்க வேண்டுமென்பதாகும். அதைச் செய்துவிட்ட காரணத்தால் அதோடு அவர்கள் விட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது தெரிந்தே அதை அந்தக் கல்லூரித் தலைவர் செய் திருக்கிறார், அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்கிறார். (குறுக்கீடு) அதைப் பார்த்து, நான் அதற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு துணைத் தலைவரவர் களே, இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உமா நாத் அவர்கள் சொல்லியக் குற்றச்சாட்டுகள்....(குறுக்கீடு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : துணைத் தலைவரவ. களே, திரு. உமாநாத் பேசி, நான் அதற்குப் பதில் சொல்கிறேன். இடையிலே மற்றவர்கள் குறுக்கிட வேண்டாம். (குறுக்கீடு) இன்னொன்று. பல்கலைக் கழக விதிகளின்படி 75 சதவீதம் மாணவர்கள் வருகை தரவேண்டும். அப்போதுதான் அவர்கள் பல்கலைக்கழகத் தேர்வு எழுத அனுமதிக்கப் படுவார்கள். எனினும் விருப்பம் இல்லாத வகுப்புகளுக்கு வர வேண்டியதில்லை என்ற சுதந்திரம் மாணவர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. காரணம் கல்லூரியை சுமூகமாக நடத்துவதில் மாணவர்களின் இணக்கமான உறவைப் பெறுவதற்காக முதல்வர் இப்படிச் செய்திருக்கிறார். மேலும் இதனால் அமைதியின்மை ஏற்படவில்லை. மாணவர்கள் பொதுவாகவே அறிவில் சிறந்து இருக்கும் காரணத்தால் வகுப்புகளுக்கு வராவிட்டாலும் தேர்வில் மிக உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றுள்ளார்கள்.

சான்றாக 1977 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத் தேர்வு எழுதிய 191 மாணவர்களில் 153 பேர் முதல் வகுப்பில் அல்லது சிறப்புத் தேர்வு பெற்றுள்ளனர். 34 பேர் இரண்டாவது வகுப்புப் பெற்றுள்ளனர். எனவே குறைந்த பட்ச வருகைப் பதிவு முறை கண்டிப்பாகப் பின்பற்றப்பட வில்லை. ஐ. ஐ. டி. போன்ற மத்திய அரசு நிறுவனங்களில் வருகைப் பதிவு விதிகள் கடுமையாகப் பின்பற்றப்படுவதில்லை. மேலும் தற்கால போக்கிற்கேற்ற சிந்தனையின் விளைவாக இது போன்று சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கலாம். அதற்கு அடுத்து......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரைமணி நேர விவாதம் என்பது நம்முடைய விதிமுறைகளின்படி சரியாக அரை மணி நேரத்தில் ஆட்டோமேட்டிக்காக (automatic) முடிவடைந்துவிடுகிறது. எனவே, அவையின் அனுமதியுடன் விதி 53 தளர்த்தப்பட்டு விவாதம் சிறிது நேரம் நீட்டிக்கப் படுகிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அடுத்து இந்த பி.எஸ்.ஜி. கல்லூரியில் ஒருவர், 75 சதவீதம் மதிப்பெண் பெற்ற பிரதீப் குமார் என்ற மாணவர் பி.எஸ்.ஜி. கல்லூரியில் மானேஜ்மென்ட் கோட்டாவில் சேர்ந்திருக்கிறார். அதற்குப் பிறகு அவர் ட்ரான்ஸ்ஃபர் வாங்கி, ரீஜினல் எஞ்சினீயரிங் காலேஜுக்கு வந்திருக்கிறார். இது பல்வேறு சமயங்களில் நடைபெறக்கூடிய ஒன்றுதான். ஆக, இந்த அடிப்படையில் ஊழல் என்று மாண்புமிகு உறுப்பினர் நினைத்தால் நான் அதற்கு ஒன்றும் சொல்ல முடியாது. காரணம் இதைப்போன்ற நிலைமை பல கல்லூரிகளில் நடைபெறுகிறது.

திரு. ரா. உமாநாத் : இன்டர் ட்ரான்ஸ்ஃபர் நடக்கலாம். பட் ரிஜெக்டட் கான்டிடேட் எப்படி வரமுடியும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ரிஜெக்டட் கான்டிடேட் அல்ல. மானேஜ் மென்ட் கோட்டாவில் 70-க்கு மேல் மார்க் இருந்தால் அவர்கள் சேர்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த அடிப் படையில் அட்மிஷன் கேட்டு வந்திருக்கிறார், அவர்கள் சேர்த்திருக்கிறார்கள். ஒன்ஸ் ஹி இஸ் அட்மிட்டெட். அந்த மாதிரி வேறு மாநிலங்களில் சேர்ந்த மாணவர்கள் இங்கே வருகிறார்கள். இது ஒரு பெரிய தவறு இல்லை. பலருக்கு நாம் இதைச் செய்கிறோம். யாருக்கும் செய்ய முடியாது என்ற நிலை வருமானால் பலரும் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். ஏதாவது குறிப்பிடத்தக்க காரணம் இருந்தால் ஏற்றுக்கொள்கிறோம், அல்லது பல்கலைக்கழகம் ஏற்றுக் கொள்கிறது. அந்தக் குறிப்பிட்ட காரணம் உடல்நிலை சரி யில்லை என்பது அல்லது பெற்றோர்களுடைய நிலைமை என்பதை வைத்து இந்த அனுமதியை அளிக்கிறோம்.

நாமே சில சமயங்களில் இவர் வந்து சொல்லும்போது செய்ய வேண்டியிருக்கிறது. இது ஊழல் என்று சொல்ல முடியாது. காரணம் ஒரு தடவை சேர்ந்தவர், அப்புறம் பின்னால் எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் போய்ச் சேரலாம் என்ற உரிமை இருக்கிறது. ட்ரான்ஸ்பர் என்ற முறையில்; அதனால் போய்ச் சேருகிறார்கள். ஆக, அந்த அடிப்படையில்தான் நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதோடு இந்த அறிக்கையை நான் ஆளுகைக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி, அவர்களுடைய கருத்தையும் பெற்று, தக்க நடவடிக்கை எடுப்பேன் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு இணங்க பேரவையின் நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22-3-1984 (வியாழன்) — ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பொதுச் சுகாதாரம் மற்றும் மருத்துவம் பற்றிய மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலாக —

எண் 31 — பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும்

எண் 44 — எழுதுபொருள், அச்சுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

26-3-1984 (திங்கள்) — ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் மற்றும் எழுதுபொருள், அச்சுத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளுக்குப் பதிலாக கீழ்க்கண்ட மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

எண் 1 — நிலவரித் துறை

எண் 41 — இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

எண் 46 — இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

எண் 11 — மாவட்ட நிர்வாகம்

22-3-1984 அன்று பிற்பகல் பேரவைக் கூட்டம் இருக்காது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20-3-1984 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.





## 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ). சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

131. வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 4-7-1977 ஆம் நாளிட்ட II (2)/CTRE/3827/77 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் — சமய அறக்கட்டளைகள் துறையின் 13-1-1984 ஆம் நாளிட்ட 43 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறிய இனாம் (நீக்குதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1963) 48 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

132. சென்னை பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17-11.1983 ஆம் நாளிட்ட 1569 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

133. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாவது ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

134. 16-3-1984 ஆம் தேதிய நிகழ்ச்சி நிரலில் 'அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 'அ' — சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்' என்ற தலைப்பின்கீழ் உள்ள இனம் 129-ன் தொடர்பாக நீதிபதி திரு. டி. இராமபிரசாத ராவ் விசாரணைக் குழுவால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் நகல் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

### (ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

57. கோரிக்கை எண் 4 — தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய தீர்வைகளும் — நிர்வாகம் குறித்த விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

58. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 16/1984.)

[1984 மார்ச் 19

59. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்), தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1984) நகலும், இணைப்பும்.

60. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு. திருத்த) சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/1984) நகலும், இணைப்பும்.

இணைப்பு

(550–ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 4.

தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்.

வணிக வரித் துறை நிர்வகித்து வரும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் ஏனைய வரிச் சட்டங்களே மாநிலத்தின் பெரும்பான்மையான வருவாயினை ஈட்டித் தருகிறது.

1956 ஆம் ஆண்டு மத்திய வரிச் சட்டம் வணிக வரித் துறையால் நிர்வகித்து வரும் இரண்டாவது முக்கியத்துவம் வாய்ந்த சட்டமாகும். இச்சட்டமானது மாநிலங்களுக்கிடையே நடைபெற்றுவரும் வர்த்தகங்கள் குறித்ததாகும். இது மத்திய வரிச் சட்டம் என்றாலும்கூட இதனை நிர்வகிப்பது அந்தந்த மாநிலங்களின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டுள்ளது. மற்றும் இச் சட்டம் மூலம் ஈட்டப்பெறும் வருவாய் அனைத்தும் அந்தந்த மாநிலங்களையே சாரும்.

வணிகவரித்துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது.

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரிச் (மேல் வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரி சட்டம்.



1984 மார்ச் 19]

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தைய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள், தங்கும் இல்லங்களில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்

2. தமிழ்நாடு பொது விற்பனை வரி, ஏனைய வணிக வரிகள் ஆகியவற்றின் மூலம் தமிழ்நாட்டிற்கு 1982–83 ஆம் ஆண்டில் மாநில வருவாயில் 69 சதவீதத்திற்கும் அதிகமாகக் கிடைத்தது. 1982-83-இல் வணிக வரிகள் வாயிலாக ரூ. 696.04 கோடி வருவாய் கிட்டியது, இத் தொகை கடந்த ஆண்டான 1981-ல் கிடைத்த ரூ. 594.25 கோடியைக் காட்டிலும் 17 சதவீதம் கூடுதல் ஆகும்.

3. கடந்த ஐந்தாண்டுகளில், வணிக வரித் துறைக்கு கிடைத்த வருவாய், அத்துறை செலவிட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் பின்வருமாறு:—

| ஆண்டு. (1) | | | வரவு. (2) | செலவு. (3) |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1978–79 | .. | .. | 3,19,40.05 | 558.57 |
| 1979–80 | .. | .. | 3,88,27.94 | 598.09 |
| 1980–81 | .. | .. | 4,91,63.93 | 669.00 |
| 1981–82 | .. | .. | 5,94,25.00 | 778.31 |
| 1982–83 | .. | .. | 6.96,04.09 | 942.59 |
| 1983–84 | .. | .. | 5,18,22.64 | 753.82 |
| | | | (1983 ஆம் ஆண்டு டிசம்பர் வரை). | (1983 ஆம் ஆண்டு நவம்பர் வரை). |

1983-84 ஆம் ஆண்டில் 1983 டிசம்பர் வரை ரூ. 5,18,22.64 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இதற்கு முந்தைய ஆண்டில் இதே கால அளவில் வசூலான தொகை ரூ. 4,95,21.82 இலட்சமாகும். இத் தொகை சென்ற ஆண்டு தொகையை விட ரூ. 23,00.82 இலட்சம் அதிகரித்துள்ளதையே காட்டுகிறது. அதாவது முந்தைய ஆண்டைவிட 4.6 சதவீதம் அதிகரித்துள்ளது.

1980-81 ஆம் ஆண்டிலிருந்து வருவாய் அதிகரிப்பு
பின்வருமாறு:—

| வருடம் | | | | வருவாய் அதிகரிப்பு. (சதவீதம்) |
|---|---|---|---|---|
| (1) | | | | (2) |
| 1980–81 | .. | .. | .. | 26 |
| 1981–82 | .. | .. | .. | 21 |
| 1982–83 | .. | .. | .. | 17 |

எனவே நடப்பு ஆண்டில் வசூலிக்கப்பட்ட தொகை வழக்கமான
வருவாய் அதிகரிப்பினைக் காட்டவில்லை.

4. வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்.

வணிகவரி அலுவலகங்களுக்கு வரும் வணிகப் பெரு
மக்களுக்கும், வணிகவரி அலுவலகப் பணியாளர்களுக்கும்
தேவையான வசதிகளை நல்கும் நோக்கத்துடன், படிப்படியான
முறையில் வணிக வரி அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் பணியை
அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது காஞ்சிபுரம், கோவில்
பட்டி, ஈரோடு, தஞ்சாவூர், திருநெல்வேலி, கும்பகோணம்,
கடலூர், தருமபுரி, சேலம், உதகமண்டலம் வேலூர், தூத்துக்குடி
கோயம்புத்தூர், திண்டுக்கல், பொள்ளாச்சி, திருப்பூர் நாகர்
கோவில், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள வணிக வரி
அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.
மதுரை, தேனி, திருச்சிராப்பள்ளி, கரூர், பூவிருந்தவல்லி ஆகிய
இடங்களில் வணிகவரித் துறைக்கான அலுவலகக் கட்டிடங்கள்
கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணியும் நடை
பெற்று வருகிறது. சென்னை மாநகரத்தின் கிரீம்ஸ் சாலையிலுள்ள
வணிக வரித் துறையின் அலுவலகக் கட்டிடங்களின் கட்டுமானப்
பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தின் முதல்
மாடியிலும் இரண்டாவது மாடியிலும், 28-3-1983-லிருந்து
இத்துறை அலுவலகங்கள் அமைந்துள்ளது. ஏனைய இரு மாடி
களும் விரைவாக பயன்படுத்த தயார் நிலைக்கு வரும் என்று எதிர்
பார்க்கப்படுகிறது. மதுரையிலும், வணிக வரித் துறையின்
அலுவலகக் கட்டிடங்களில் பணி முடிக்கப்பெறும் நிலையில்
உள்ளது. சென்னையில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன்,
தற்பொழுது தனியார் கட்டிடங்களில் இயங்கி வரும் அனைத்து
நிருவாக அலுவலகங்களும் இந்த அரசு கட்டிடங்களுக்கு மாற்றப்
படும். அதேபோன்று, மதுரையில் கட்டிடம் கட்டி முடிக்கப்
பட்டவுடன், தற்போது தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும்
அனைத்து நிருவாக அலுவலகங்களும், அதற்காகக் கட்டி
முடிக்கப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்படும். பட்டுக்
கோட்டையில், வருவாய்த் துறைக்கும் வணிக வரித் துறைக்கும்
சேர்ந்து கூட்டாகக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.
எழும்பூரிலும், மைலாப்பூரிலும் உள்ள வருவாய்த்துறை
அலுவலகங்களிலும், திருப்பூரிலுள்ள வணிகவரித்துறை அலுவல
கத்திலும் கூடுதல் மாடிகள் கட்டும் பணி அரசின் ஆய்ந்த
பரிசீலனையில் உள்ளது.





5. பூவிருந்தவல்லி, ஒசூர் ஆகிய இடங்களில் சோதனைச்
சாவடிகள் கட்டும் பணி சமீபத்தில் முடிவடைந்துள்ளது
கே. ஜி. சாவடி, களியக்காவிளை, புளியறை ஆகிய இடங்களில்
மூன்று சோதனை சாவடிகளும் சின்னூராப்பட்டி, சின்னசேலம்,
மீனாட்சிபுரம் ஆகிய இடங்களில் மூன்று பெரும் சோதனைச்
சாவடிகளும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேலும்,
கடம்பர் கோயிலிலும், கட்டபடியிலும் சோதனைச் சாவடிகள்
கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

6. மேசை, நாற்காலி, அலமாரி, தொலைபேசி ஆகியனவும் ஏனைய
வசதிகளும்

பழைய மேசை, நாற்காலி, அலமாரி, தொலைபேசி ஆகிய
வற்றை மாற்றிவிட்டு அதற்குப் பதிலாக அலுவலகங்களில்
பணிக்கு ஏற்றப் போதுமான புதிய மேசை, நாற்காலிகள்
ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, பார்வை
யாளர்களுக்கான மேசை, நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளது.
இப்போது கட்டப்பட்டு வருகின்ற அனைத்து அரசு அலுவலகக்
கட்டிடங்களிலும், பார்வையாளர்கள் கூடத்தில் வசதி செய்யப்
பட்டுள்ளது. கழிவறைகள் உணவருந்தும் கூடம், மிதிவண்டி
நிறுத்துமிடம் ஆகிய வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.
மேசை, நாற்காலிகள் வாங்குவதற்காக 1982—83-ல் ரூ.32.54
இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக 1983-84-ல்
ரூ.2.63 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

வணிக வரித் துறை அதிகாரிகளோடு தொலைபேசி மூலம்
வணிகர்கள் எளிதில் தொடர்பு கொள்ளவும், வணிக வரித்
துறை அலுவலர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளவும்
இயலும் வகையில் தொலைபேசி வசதிகள் படிப்படியாக
அனைத்து அலுவலகங்களுக்கும் செய்து தர முடிவு செய்யப்
பட்டுள்ளது. 37 வரி விதிப்பு வட்டங்களைத் தவிர, வணிக
வரித்துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் தொலைபேசி
வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதற்கான செயற்
குறிப்புகள் அரசுக்கு வரப் பெற்றுள்ளன.

7. பணியாளரமைப்பு.

1-1-1983 முதல் 31-12-1983 வரையில் அனுமதிக்கப்பட்ட புதிய
பதவிகளுக்கான விவரங்கள்.

பணியின் தன்மையை மேம்படுத்துவதற்கும், மேற்பார்வை
யிடுவதற்கும், வரி வசூல் செய்வதற்கும் கீழ்க்காணும் புதிய
பதவிகள் 1983-ல் அனுமதிக்கப்பட்டுள்ளன.

(i) சேலம், மேல்முறையீட்டு உதவி ஆணையரின் (வணிக
வரிகள்) அலுவலகத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் மேல்
முறையீடுகளை நடவடிக்கை எடுத்துக் குறைப்பதற்காக துணைப்
பணியாளருடன், ஈரோடு மேல்முறையீட்டு உதவி ஆணையரின்
(வணிக வரிகள்) பதவி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(ii) சென்னை, கூடுதல் அரசு வழக்குரைஞரின் அலுவல கத்தில் அதிக வேலையைச் சமாளிப்பதற்கு தட்டச்சர் பதவி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

(iii) ஏனைய வணிக வரி மாவட்டங்களுக்கு இணையாக, புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஐந்து வணிகவரி மாவட்டங்களான நாகர்கோவில், அருப்புக்கோட்டை, நாமக்கல், திருவண்ணா மலை, கோயம்புத்தூர் (வடக்கு) ஆகியவற்றுக்கு ஐந்து புள்ளி யியல் ஆய்வாளர் பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்டது.

(iv) அதிகரித்த பணிச் சுமையைப் பகிர்ந்து கொள்வதற்கு எட்டு துணை ஆணையர் அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு தட்டச்சர் வீதமும் 26 உதவி ஆணையர் அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும், ஒரு தட்டச்சருமாக 34 தட்டச்சர் பதவி களுக்கு அனுமதிக்கப்பட்டது.

(v) சேலம், சென்னை, மதுரை, திருநெல்வேலி ஆகிய கோட்டங்களில் வணிக வரி அலுவலரின் தலைமையின் கீழ் பணியாளர்களைக் கொண்ட நான்கு தணிக்கைக் குழுக்களுக்கு அனுமதிக்கப்பட்டது

(vi) செயல்படுத்தும் பிரிவிற்கு வண்டிகளுடன் 15 ஓட்டு நர்கள் பதவிகளுக்கு அனுமதிக்கப்பட்டது.

(vii) இரண்டு வட்டார உதவி ஆணையர்களுக்கு (Territorial Assistant Commissioners) வண்டிகள் வழங்க வகை செய்யப் பட்டது.

(viii) சென்னையிலுள்ள வணிக வரித் துறை பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு ஓட்டுநருடன் அம்பாசிடர் கார் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## 8. கூடுதல் ஆயத்தீர்வை.

1957 ஆம் ஆண்டு முதல் இந்திய அரசு துணிகள், சர்க்கரை, புகையிலை ஆகியவற்றின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத் தீர்வை வரியை விதித்து வருகிறது. கூடுதல் ஆயத் தீர்வையின் நிகர வருவாயில் ஒரு பங்கைப் பெறுவதற் கான தகுதி தனக்கு இருப்பதால் இந்த பொருட்களின் மீது மாநில அரசு விற்பனை வரி எதனையும் விதிக்க முடியாது. விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பது குறித்த நிலை ஆய்வுக் குழுவின் மூன்றாவது கூட்டம் 13-6 1983 அன்று புதுடில்லியில் திட்டக்குழு செயலாளர் திரு. கே. வி. இராமநாதன் தலைமையில் நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் விற்பனை வரி வசூல் 14 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை கூடுதலாக உள்ளது என்று மாநில அரசு இக் கூட்டத்தில் சுட்டிக் காட்டியது. எனினும், கூடுதல் ஆயத் தீர்வையின் பங்கு இந்தத்



தொகைக்கு இணையாக இருந்ததில்லை. எனவே இசைவளிக்கப் பட்ட மதிப்பான 10.8 சதவீதம் எப்பொழுதோ எய்தப்பட வேண்டி இருந்தும் இதுவரை எய்தப்படாததால் மாநிலங்களுக்கு பெருமளவு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இத்தகைய நிலையில் மேற்குறிப்பிட்ட 10.8 சதவீதம் 1989–90 ஆம் ஆண்டுக்கு முன்னர் எய்த முடியாது. அக்கால அளவிற்குள் 10.8 சதவீதம் வரி விதிப்பு எய்த வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும், எனவே சிறப்பு முயற்சிகளை எடுக்காவிட்டால் மாநிலங்கள் வருவாயை தொடர்ந்து இழக்கும் என்றும் குறிப்பிடப்பட்டது.

சில பொருட்களைப் பொறுத்த மட்டில், கூடுதல் ஆயத் தீர்வை விதிப்பதை நீட்டிக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை அவ்வப்போது மத்திய அரசு தெரிவித்து வந்துள்ளது. வனஸ்பதி மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துகள் சிமிட்டி, காகிதம் மற்றும் காகித அட்டை, பெட்ரோலியம் பொருட் களின் மீது விற்பனை வரிக்குப்பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிப்பதற்கான செயற்குறிப்புமீது தனது அறிக்கையை திரிபாதி குழு அனுப்பியுள்ளது. 2—11—1983 அன்று புதுடில்லியில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் நடத்திய முதல் அமைச்சர்கள் மாநாட்டில், மேற்சொன்ன 5 பொருள்களின் மீது விற்பனை வரிக்குப் பதிலாக கூடுதல் ஆயத்தீர்வை விதிக்கும் கருத்துரு விற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடுமை யான எதிர்ப்பு தெரிவித்தார்கள். ஏனைய மாநிலங்களிலிருந்தும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இவை குறித்து மாநில அரசுகளுக் கிடையே கருத்து ஒருமைப்பாட்டை கொண்டு வருவதற்காக தொடர்ந்து முயற்சிகள் செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

## 9. 1982 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் (46 வது திருத்தம்) சட்டம்.

இந்த சட்டத்திற்கு குடியரசு தலைவரின் இசைவு 2-2-1983 அன்று பெறப்பட்டது. மாநிலங்களுக்கிடையே ஆன ஒப்படைச் சரக்கு போக்குவரத்து, பணி ஒப்பந்தங்கள், தவணைக் கொள் முதல், பொருட்களைக் குத்தகைக்கு விடுதல், சட்டப்படிக்கு இணைக்கப்படாத சங்கங்களுக்குச் செய்யப்படும் விற்பனை, ஆற்றக்கூடிய பணி வகைக்காக எனக் கருதப்படும் (உணவு மற்றும் பானங்கள்) விற்பனை ஆகியவற்றிற்கு வரிவிதிக்க இச்சட்டம் வகை செய்கின்றது. மேற்சொன்ன இனங்கள் இதுவரை விற்பனை அல்லது கொள்முதல் மீது வரிவிதிப்புதன் வரம்புக்கு அப்பாற்பட்டதாக இருந்து வந்தன. மாநிலங்களிடையே ஆன ஒப்படைச் சரக்கு போக்குவரத்து வரி கணிசமான கூடுதல் வருவாய்க்கு வழி செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இச்சட்டம் இயற்றப்படுவது மத்திய அரசினால் மேற் கொள்ளப்பட்டு நாடாளுமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் (46 ஆம் திருத்தம்) சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் ஒப்படைச்சரக்கு அனுப்புகை வரி விதிப்பு முறைகள் பற்றி மாநில அரசு தனது கருத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்து, நாடாளுமன்றத்தில் இதுகுறித்து உடனடியாக சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது. 9-11-1983 அன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய கருத்துக்களை வலியுறுத்திக் கூறினார். மேற்கொண்டு கால தாமதம் செய்யாமல் சட்டம் கொண்டுவரும்படி மத்திய அரசைக் கேட்டுக் கொண்டார். பன்மாநில விற்பனைக்கு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிக்கப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் மாநில அரசுக்கு வழங்குவது போன்று ஒப்படைச் சரக்கு அனுப்புகை வரி மூலம் கிடைக்கும் வருவாயை சரக்குகள் எங்கிருந்து அனுப்பப்பட்டனவோ அந்த மாநிலங்களுக்கே கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப் பட்டது. எனினும் ஒப்படைச்சரக்கு அனுப்புகை வரியில் ஒரு பகுதியைத் தங்களுக்கே வழங்க வேண்டுமென்று சில மாநிலங்கள் கேட்டன. எனவே மத்திய நிதியமைச்சரைத் தலைவராகவும், ஒருசில முதலமைச்சர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு குழு ஒன்றை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட பெயர் பட்டியலில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் ஒருவராவார். இக்குழு விரைவில் கூடி, மாநிலங்களுக்கிடையே ஒப்படைச் சரக்கு அனுப்புகை மீது வரிவிதிப்பது தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும்.

திருத்த அரசியலமைப்புச் சட்டத்தின்படி அனுமதிக்கப் பெற்ற ஏனைய கொடுக்கல் வாங்கல் மீது வரிவிதிப்பதைப் பொறுத்தவரையில் தக்க சட்டத்தை இயற்றும்படி மாநில அரசுகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. தவணைக் கொள் முதலுக்கும் இணைக்கப்படாத சங்கங்கள் குறித்தும் வரிவிதிக்க தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் ஏற்கனவே வகை செய்கிறது. திருத்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்ட மற்ற கொடுக்கல் வாங்கல்கள் குறித்து வரி விதிக்கச் சட்டத்தில் திருத்தங்கள் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

**10. வணிக வரித்துறை பணியாளர்கள் பயிற்சி நிலையம், சென்னை.**

வணிக வரித்துறை அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதற் கென்றே அனைத்து வசதிகள் கொண்ட பயிற்சி நிலையம் 11—2—1982 முதல் சென்னையில் செயல்படத் தொடங்கியது. இந்நிலையம் துணை ஆணையாளர் பதவித்தரத்தில் இயக்குநர் ஒருவரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது. அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதில், இவருக்கு அனுபவமுள்ள உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அதிகாரி ஒருவரும் உதவி புரிகின்றனர். வணிகவரி அதிகாரிகள், வணிகவரி துணை அதிகாரிகள், வணிகவரி உதவி அதிகாரிகள் ஆகியோருக்கான பயிற்சிக் காலம் முறையே 8 வாரங்கள், மூன்று வாரங்கள்



6 வாரங்கள் ஆகும். இதுவரை, இத்துறையில் 148 வணிகவரி அதிகாரிகள், 186 வணிகவரி துணை அதிகாரிகள், 197 வணிகவரி உதவி அதிகாரிகள் ஆக 531 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இந் நிலையத்தின் இயக்குநர், பயிற்சி ஆசிரியர்கள் ஆகியோர் தயாரித்த பாடமுறைகள் பயிற்சி பெறுபவர்களுக்கு வழங்கப் படுகின்றன. பயிற்சி பெறுபவர்களின் பயனுக்காகவும் பயிற்றுநர் களின் பயனுக்காகவும் இங்கு நூலகம் உள்ளது. இந்த நூலகத்தில் சுமார் 13,000 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் உள்ளன. பயிற்சியாளர்களுக்கு அவர்கள் பெற்ற பயிற்சியில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. பலர் கூட்டாகச் சேர்ந்து விவாதித்தல், பயிற்சியில் அவர்களுக்குள்ள ஈடுபாடு முதலியவற்றில் அதிகாரிகள் பங்கு பெறுவதைக் கொண்டு பயிற்றுநர்கள் பயிற்சி யாளர்களின் தகுதியை மதிப்பிட்டு மதிப்பெண் வழங்குகின்றனர். வணிகம், தொழில் ஆகியவற்றில் நடைமுறையில் அனுபவம் பெறும் பொருட்டு தேர்ந்தெடுத்த சில தொழில் நிறுவனங்கள் கம்பெனிகள் ஆகியவற்றைச் சென்று பார்வையிடவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. பந்தைய வரி விதிப்பு முறையில் நடைமுறைப் பயிற்சி பெற, பயிற்சி பெறுபவர்கள், குதிரைப் பந்தைய மைதானத்திற்கும் அழைத்து செல்லப்படுகின்றனர். பொது மக்கள் தொடர்பு, வருமானவரி, கணக்கு, பொறியியல் முதலியவற்றில் வல்லுநர்களாக விளங்குபவர்களை இங்கு அழைத்து வந்து இப்பயிற்சியாளர்களுக்கு விரிவுரையாற்றவும், ஏற்பாடு செய்யப்படுகின்றது. குஜராத்தி மொழி கற்று சான்றிதழ் பெற வகுப்பு விரைவில் நடத்தப்பட உள்ளது. பெருமளவில் உற்பத்தி செய்து வணிகத்தில் ஈடுபட்டுள்ள அரசுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அதிகாரிகளுக்கும் பயிற்சி நடத்தவும் இந்நிலையம் முயன்று வருகிறது. ஏனைய மாநிலங்களிலுள்ள வணிக வரித்துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான செயற்குறிப்பு பரிசீலனை யிலுள்ளது.

இந்நிலைய இயக்குநரை, தனி அலுவலகத் தலைவராக அரசு ஏற்பளித்துள்ளது.

**11. ஆலோசனைக் குழுக்கள்:**

அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

மாவட்டக் குழுவிற்கு, மாவட்ட ஆட்சியர் தலைமை வகிக் கிறார். இக்குழுவில், அரசு அதிகாரிகள் மட்டுமின்றி, வர்த்தக சபை, வணிகச் சங்கங்கள், கூட்டுறவுத் துறை, வேளாண் மைத் துறை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் இடம் பெற் றுள்ளனர். இக்குழு விற்பனை வரிச் சட்டங்கள், நடைமுறைகள் தொடர்பாக வாணிபத்தில் உள்ள பிரச்சினைகள் பற்றி விவாதித்து தக்க நிவாரண வழிகளைத் தெரிவிப்பதுடன் விற்பனை

வரிச் சட்ட நிருவாகம், விற்பனை ஆகியவை குறித்துத் துறைக்கு ஆலோசனை வழங்குகிறது. விற்பனை வரிச் சட்ட நிருவாகத்தை மேம்படுத்தவும், வணிகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் கவனிக்கவும் இக்குழுக்களின் பரிந்துரைகளும் கருத்துரைகளும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

12. மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு:

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழு கடைசியாக 1982 ஜனவரி முதல் மேலும் 2 ஆண்டுகளுக்கு மாற்றியமைக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு வணிகச் சங்கங்கள் வர்த்தக சபை பிரதிநிதிகள் 48 பேர், 6 சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள், சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஒருவர், அரசு அதிகாரிகள் 5 பேர் ஆகியோர் உள்ளனர். விற்பனை வரிச் சட்ட நடைமுறைகளை நிருவகிப்பதில் காணும் பல்வேறு பிரச்சினைகள் பற்றி வணிகர்களும் அரசும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் இக்குழு உதவி புரிகிறது. இக்குழுவின் கூட்டம் கடைசியாக சென்னையில் 11-10—1983—ல் நடைபெற்றது.

13. வணிகர்கள் நல ஆலோசனைக் குழு:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். இக் குழுவில் அரசு சார்பற்றவர்கள் 15 பேரும், அரசு அதிகாரிகள் மூவரும் உள்ளனர். மேலும் மாண்புமிகு நிதியமைச்சர் கிராமத் தொழில் அமைச்சர், தொழிலமைச்சர் ஆகியோர் அலுவல் முறையில் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர். வணிகர்களுக்குள்ள இடர்பாடுகளை அறிந்து அவற்றைக் களைவதற்கான வழி வகைகள் பற்றிப் பரிசீலிப்பதே இக்குழுவின் நோக்கமாகும். இக்குழுவின் கூட்டம் கடைசியாக சென்னையில் 21-10-1983 அன்று நடைபெற்றது.

14. நுழைவு வரி:

தமிழ்நாடு நுழைவு வரிச் சட்ட முன்வடிவு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையிலும், சட்டமன்ற மேலவையிலும், முறையே 27—4—1983, 28-4—1983 ஆகிய நாட்களில் நிறைவேற்றப் பட்டது. இம் மாநிலத்தில், மாநகராட்சிகள், தனிநிலை நகராட்சிகள், தேர்வுநிலை நகராட்சிகளில், பயனுக்கு அல்லது விற்பனைக்கு என்று கொண்டு வரப்படும் சில பொருட்களுக்கு நுழைவுவரி விதிக்கக் கருதப்பட்டது. ஓரிடத்தில், ஒரு வரி விதிப்பு முனையில் மட்டுமே நுழைவு வரி விதிக்கக் கருதப் பட்டது. இச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் வரவேண்டியுள்ளது.



நுழைவுக் கட்டணம் விதிக்கக் கருதியுள்ளது பற்றி மறு பரிசீலனை செய்யுமாறு வணிகர்கள் அரசைக் கேட்டுக் கொண்டனர். அதன் பேரில், நுழைவு வரி விதிப்பதற்குப் பதிலாக வேறு வகையில் வணிக வரி விதிப்பதன் மூலமாக மாநிலத்தில் வருவாயைப் பெருக்குவதற்கான வழிவகைகளைக் கண்டறிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குழு ஒன்றை அமைத்தார். இது பற்றி குழு பரிந்துரைகளை அரசுக்கு அளித்து, அரசு முடிவெடுக்கும் வரை, நுழைவு வரி விதிப்பதை நிறுத்திவைக்கப் பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவர் மாண்புமிகு நிதி அமைச்சராவார். இதில் அரசு சார்பற்ற உறுப்பினர்கள் ஐவரும் (தொழில்-வணிகப் பிரதிநிதிகள்), அரசு அதிகாரிகள் இருவரும் உறுப்பினர்களாக உள்ளனர். வணிக வரி ஆணையாளர் இக்குழுவில் உறுப்பினர்-செயலாளராக உள்ளார். மேலும், மாண்புமிகு மின் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், தொழில் அமைச்சர் ஆகியோரும் இக்குழுவில் உறுப்பினராவார். இக்குழுக் கூட்டம் 4—8—1983, 16-8-1983, 24-8-1983, 30-8-1983 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் நுழைவு வரி சம்பந்தப்பட்ட குழுவின் உறுப்பினர்களை 27-2-1984 அன்று சந்தித்து கலந்துரையாடினார். வர்த்தகப் பிரதிநிதிகள் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான நுழைவு வரிக்குப் பதிலாக 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தினை பயன்படுத்தி கூடுதல் விற்பனை வரியினை உயர்த்தலாம் என்று மேற்படி குழுவின் அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர். எனினும் இவ்வரிச் சுமையை, வணிகர்கள், நுகர்வோர்கள் மீது சுமத்தக் கூடாது என்றுள்ள தடையை எடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்து சட்டத் திருத்தம் வேண்டுமெனக்கூறினர். தமிழ்நாட்டிற்கும், அண்டை மாநிலங்களுக்கும் இடையில் தற்போதுள்ள விற்பனை வரியில் கணிசமான அளவு வேறுபாடு இருக்கும் இனங்களில் எல்லாம் கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் பொருட்டு, தமிழ்நாட்டில் அத்தகைய இனங்கள் தொடர்பாக விற்பனை வரியினை உயர்த்தலாம் என்றும் குழு கருத்து தெரிவித்தது. இக்குழுவின் கருத்துக்களை அரசு கருத்தில் கொண்டு ஆழ்ந்த ஆலோசனைக்குப் பின்னர், கூடுதல் விற்பனை வரி வீதங்களை 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதற்கொண்டு கீழ்க் குறிப்பிட்டவாறு உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

[அ] ரூ. 3 இலட்சத்துக்குமேல் ரூ.5 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்துதல்.

[ஆ] ரூ. 5 இலட்சத்திற்குமேல் ரூ. 7 இலட்சம் வரை வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரிவீதத்தை, 0.5 சதவீதத்திலிருந்து 0.7 சதவீதமாக உயர்த்துதல்.

(இ) ரூ. 7 இலட்சத்திற்குமேல் 10 இலட்சம் வரையுள்ள வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.6 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக உயர்த்துதல்.

(ஈ) ரூ. 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகைக்கான வரி வீதத்தை 0.7 சதவீதத்திலிருந்து 1.25 சதவீதமாக உயர்த்துதல்.

உயர்த்தப்பட்டுள்ள கூடுதல் விற்பனை வரி, வரி விதிக்கத்தக்க விற்பனைத் தொகை ரூ. 3 இலட்சத்திற்குமேல் இருந்தால் மட்டுமே பொருந்தும் என்பதால் வணிகர்கள் செலுத்தவேண்டிய கூடுதல் வரியினால் அவர்களுக்கு அதிகச் சுமை ஏற்படாது என்று அரசு கருதுகிறது. எனவே அந்த நுகர்வோர்மீது விதிக்க அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

15. புள்ளி விவரத் தகவல் தொகுப்புப் பிரிவு:—

வணிக வரி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள புள்ளி விவரத் தகவல் தொகுப்புப் பிரிவில், நான்கு பிரிவுகள் உள்ளன. வணிக வரி அதிகாரிப் பதவித்தரத்தில் உள்ள முறை பகுப்பாய்வாளர் இதன் தலைவராவார். பொதுமக்கள் தொடர்பு அதிகாரியான துணை ஆணையாளர் ஒருவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

விற்பனை வரி தொடர்பான புள்ளி விவரங்களைக் கணக்கீட்டுப் பொறியின் மூலம் கணிப்பதற்காக, அவற்றைத் தொகுப்பதே இப்பிரிவின் முக்கியப் பணியாகும். பொருள் வாரியான மொத்த விற்பனைத் தொகை, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட வரி ஆகியவை பற்றிய புள்ளி விவரம் வரையறுக்கப்பட்ட படிவங்களில் வரி விதிப்பு அதிகாரிகளால் அனுப்பப்படுகின்றன. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழோ மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழோ வரத மொத்த விற்பனைத் தொகை பற்றிய விவரம், ஒவ்வொரு வணிகரின் சம்பந்தப்பட்ட ஆண்டு வரி விதிப்பு ஆணைங்களின்படி வெவ்வேறு படிவங்களில் அனுப்பப்படுகிறது. இத்துடன், ஒவ்வோராண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு ஆண்டு மொத்த விற்பனைத் தொகையானது ஒரு இலட்சமும் அதற்கு மேற்பட்டும் இருக்கிற வணிகர்களிடமிருந்து பொருள் வாரியான ஆண்டு மொத்த விற்பனைத் தொகை, வரி பற்றிய தற்காலிகப் புள்ளி விவரமும் பெறப்பட்டு வரவு-செலவுத் திட்டக் காரியங்களுக்கென, புள்ளி விவரத் தகவல் தொகுப்புப் பிரிவில் பரிசீலிக்கப்படுகிறது.

இவ்வாண்டில் 1981–82 ஆம் வரிவிதிப்பு ஆண்டுக்கான புள்ளி விவரங்களைக் கொடுத்துத் தொகுக்கப்பெறும் பணி, புள்ளி விவரத் தகவல் தொகுப்புப் பிரிவில் முடிக்கப்பட்டது. 30-9-1983 ஆம் நாளுடன் முடிவடைகிற அரையாண்டிற்கான தற்காலிகப் புள்ளி விவரங்களும் புள்ளிவிவரத் தகவல் தொகுப்புப் பிரிவில்



முடிக்கப்பெற்று. கணக்கீட்டுப் பொறியின் மூலம் கணிப்பதற்கென அரசு புள்ளி விவரத் தகவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டன.

1983 ஆம் ஆண்டில், 1982 செப்டம்பர் மாதத்துடன் முடிவடைகிற அரையாண்டுக்கான தற்காலிக புள்ளி விவரத் தொகுப்புடன் 1980–81 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரத் தொகுப்புச் சுருக்க விவர அட்டவணை அரசு புள்ளி விவரத் தகவல் தொகுப்பு நிலையத்திலிருந்து வந்துள்ளது. கேளிக்கை வரி தொடர்பான புள்ளிவிவரங்களைக் கணக்கீட்டுப் பொறியின் மூலம் கணிப்பதென முடிவு செய்யப்பட்டது. இந்த வகையில் 1981–82 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்கள் வரி இணக்கம் செய்யப்படாத பகுதிகளில் உள்ள கேளிக்கை வரி அதிகாரிகளிடமிருந்து வரப்பெற்று, அவை தொகுக்கப்பெற்று, கணக்கீட்டுப் பொறியின் மூலம் கணிப்பதற்கென அரசு புள்ளிவிவரத் தகவல் தொகுப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டன.

தமிழ்நாடு வணிக வரித் துறையில் ''தகவல் முறை'' தொடர்பாக புதுடில்லியில் உள்ள பொது, நிதி, கொள்கை குறித்த தேசீய நிறுவனம் கொடுத்த அறிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த முறையை மாதாந்திரக் கணக்கு அடிப்படையிலான முறையாக மாற்றி அதிக வருவாய் கிடைக்கக் கூடிய பொருட்கள் தொடர்பான தகவல், அவ்வப்போது கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

16. நிறுவன அமைப்பு நடைமுறைப் பிரிவு:—

இப்பிரிவில், வணிக வரி அதிகாரி ஒருவரும், தட்டச்சர் ஒருவரும், அடிப்படைப் பணியாளர் ஒருவரும் உள்ளனர்.

நாளுக்கு நாள் இத்துறை விரிவடைந்து வருவதால் வரி விதிப்பு அலுவலகங்களில் உள்ள பணிச் சுமைபற்றி முறையாக ஆராய்ந்து, அவசியமான அலுவலகங்களில் கூடுதல் பணியாளர்களை நியமிப்பது குறித்து ஆலோசனை வழங்குவதற்காக, இப்பிரிவு 1971 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இது தவிர இப்பிரிவு பின்வரும் பணிகளையும் கவனிக்கிறது:—

(1) தகவல் கொடுப்பவர்களுக்கு வெகுமதிகள் வழங்குதல்.

(2) துறை அதிகாரிகளுக்கு ரொக்க வெகுமதியும் முதலமைச்சரின் தகுதிச் சான்றிதழும் வழங்குதல்.

(3) ஏனைய மாநிலங்களிலிருந்து அரசு அதிகாரிகள் வந்து பார்வையிடுதல் பற்றிய ஏற்பாடுகள்.

கருநாடக மாநிலத்தில் வரிவீதங்கள், வரிவிற்பனை முனைகள், வரி விலக்குகள், வரி வீதக் குறைப்புகள் தொடர்பான தகவலைத் திரட்டும் பொருட்டு, வணிக வரித் துறை அதிகாரி (நிறுவன அமைப்பு, நடைமுறைப் பிரிவு) பெங்களூரில் உள்ள விற்பனை வரி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டார்.

[1984 மார்ச் 19

17. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் சட்ட விதிகளுக்குத் திருத்தங்கள்.

இரசாயனப் பொருள்கள் விற்பனை மீது ஒருமுனை வரி விதிக்கப்படுவதற்குப் பதிலாக பலமுனை வரி விதிக்கப்படுவதற் காக மாற்றப்பட்டதனையடுத்து இச் சட்டத்தின் 3 (4) பிரிவின் கீழ் சலுகை வீதத்திற்கான திட்டம், மூலப் பொருள்கள் பட்டியலிலிருந்து இரசாயனப் பொருள்கள் என்பதை நீக்கப்படும் வகையில் திருத்தப்பட்டது.

செயல்படுத்தும் பிரிவில் வணிகவரி உதவி அலுவலரின் பதவித் தரத்திற்குக் குறையாத அதிகாரிகள் அனைவரும், பதிவுப் புத்தகங்களைக் கொண்டுவந்து காட்டுமாறும், ஆய்வு செய்வதற்கு மான அதிகாரங்களைச் செலுத்தவும் பொருள் எடுத்துச் செல்பவருக்கு அல்லது ஒப்படை பெறுபவருக்கு வழங்கப்பட்ட பொருள்களை சோதனை செய்வதற்கான அதிகாரமும் இச் சட்டத்தின் 40 (3) புதிய உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்டது.

வரி மதிப்பீடு செய்வதற்காக வணிக வரி உதவி அலுவலருக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் ரூ. 1,00,000-க்கு அதிகமான விற்று முதலைக் கொண்ட நேர்வுகளிலும் வரி மதிப்பு செய்யும் வகையில் விரிவுபடுத்தப்பட்டது. பிறநேர்வுகளில் வணிக வரி உதவி அலுவலர் ஒருவர் வரி மதிப்பீடு செய்வதற்கான வரி உச்சவரம்பு ரூ. 500-லிருந்து ரூ. 1,000-க்கு அதிகரிக்கப் பட்டது.

எப்போதாகிலும் வணிகம் செய்பவர்களைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரி மதிப்பீடு செய்வதற்கான அதிகாரம் வணிக வரித் துறை அதிகாரிகளுக்கு அளிப்பதற்கான புதிய விதித் துறை ஒன்று இயற்றப்பட்டது.

விவரக் கணக்குகளை அளிப்பது. வரி செலுத்துவது தொடர்பாக ஆண்டின் தொடக்கத்தில் வணிகர் தனது விருப்பத்தை எழுத்து மூலமாக தெரிவிக்கும் வகையில் 18—வது விதி திருத்தப்பட்டது.

மாத அடிப்படையில் வரி செலுத்தும் வணிகர்கள் அத்துடன் முந்தைய ஆண்டில் கிடைத்த மொத்த வரி விதிக்கத்தக்க விற்று முதலையும் மே 1 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னதாக அந்த ஆண்டில் உண்மையில் வரி அல்லது வரிகளாக வசூலிக்கப் பட்டத் தொகையையும் காட்டக்கூடிய ஆண்டு விவரக் கணக்கை அளிக்கலாம் என்பதற்கு வகை செய்ய 18 ஆம் விதியில் 4—A என்ற துணை விதி ஒன்று புதிதாக சேர்க்கப்பட்டது. இது. முன்னதாக அனுப்பப்பட்ட மாதவிவரக் கணக்கில் உள்ள தவறு களை திருத்திக் கொள்ள வகை செய்யும்.



1984 மார்ச் 19]

வணிகர் ஒருவர் தனது விவரக் கணக்கில் அல்லது விவரக் கணக்குகளில் விற்றுமுதல் எதனையும் குறிப்பிடத் தவறி விட்டால் (வரி விதிக்கத்தக்கதாக வரி மதிப்பீட்டு அதிகாரி கருதக் கூடிய) அல்லது அத்தகைய விற்றுமுதலின் மீது செலுத்த வேண்டிய வரித் தொகையைச் செலுத்தத்தவறினால் விவரக் கணக்கை அளிப்பதற்கும் ஒவ்வொரு மாதமும் நிலுவையாய் உள்ள வரித் தொகையைச் செலுத்துவதற்கும் அளிக்கப்பட்ட அனு மதியை ரத்து செய்ய வரிமதிப்பீட்டு அதிகாரிக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மற்றொரு திருத்தம் கொண்டு வரப் பட்டது.

பொருள் வழங்கியவர்களால் வரி செய்யப்பட்டது குறித்து சரி பார்க்க இயலும் வகையில் ஒவ்வொரு காலாண்டிலும் கொள் முதல் செய்யப்பட்ட ஒவ்வொரு பொருளையும் குறித்த வரையில் ஒரே சமயத்தில் ரூ. 1,000-க்கு அதிகமாக கொள்முதல் செய்யக்கூடியவை அனைத்தும் குறித்த விவரங்களை வரை யறுக்கப்பட்ட படிவத்தில் பொருள்கள் கொள்முதல் செய்யக் கூடிய அரசு நிறுவனம் ஒவ்வொன்றும் அளிக்க வேண்டுமென்கிற வகையில் 18—B என்ற புதிய விதியொன்று சேர்க்கப்பட்டது.

இரண்டாவது விற்பனையைப் பொறுத்தவரையில் வரிவிதிக் கப்படத் தக்கதல்ல என்ற அடிப்படையில் வணிகர்கள் தொகுதி எதற்கும் அல்லது பொருள்களின் வகைக்கு அல்லது இரண்டிற்கும் விலக்களிக்க ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கும் 19-Bவிதிக்கு (3) துணை விதி புதிதாகச் சேர்க்கப்பட்டது.

காலந்தாழ்த்திக் கொடுக்கப்படும் தொகைக்கு வணிகர்கள் அரசிடமிருந்து வட்டித் தொகையை கோரிப் பெறுவதற்கான நடைமுறையை வரையறுக்கும் புதிய விதி ஒன்று (23—A) சேர்க்கப் பட்டது.

பதிவு செய்வதைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட விதிகள், வணிகம் நடத்தக் கருதும் நபரால் அல்லது வணிகம் நடத்தக்கூடிய உரிய வயதடையாத ஒருவரின் பாதுகாவலர், பொறுப்பாளர், அல்லது முகவர் வணிக நிறுவனத்தை பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துக் கொள்ள வகை செய்யக்கூடிய விதத்தில் திருத்தப்பட்டன.

முகவர்கள் மூலம் அனுப்புகை சரக்குகளின் அடிப்படையில் செய்யப்பட்ட பற்று வரவுகளின் மீது விலக்கு கோரும் வணிகர் களின் நேர்வில் அனுப்புகை சரக்குகள் குறிப்பு அல்லது அனுப்புகைப் பொருள்களை அவர்கள் கட்டாயமாகப் பேணிப் பராமரிக்க வேண்டும். முகவர்கள் அளிக்கும் விற்பனை ரசீதுகளை அனுப்பவேண்டும் என்பதற்கு வகைச் செய்யக்கூடிய விதித் துறையை நீக்குவதன் மூலம் வணிகத்தின் நலனுக்கேற்ப விதி திருத்தப்பட்டது.

[1984 மார்ச் 19

ரசீதுகளின் தொடர் எண்கள் 1—லிருந்து ஒரு இலட்சம் வரை இருக்கவேண்டும் என்று குறிப்பிடும் விதித்துறையால் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளைக் குறைப்பதற்காக உச்ச எல்லை ஒரு இலட்சம் என்பது நீக்கப்பட்டது.

வணிகருக்காக அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்காக வாதிட அமர்த்தப்பட்டுள்ள வழக்குரைஞர்களுக்கு அறிவிப்பு, அழைப்பாணை அல்லது ஆணை அனுப்பப்படலாம் என்பதற்கு வகை செய்ய 52 ஆம் விதி திருத்தப்பட்டது.

முதல் விவர அட்டவணையில் திருத்தம்—

இனம் எண் 16:

நிருவாக, சட்ட சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்காக "கழிவுப் பஞ்சு" என்ற பதிவு, "அனைத்துவகை கழிவுப்பஞ்சு (விதை நீக்கம் செய்வது, நூற்பது ஆகிய வகையில் பெறப்பட்டிருந்தாலும் அல்லது வேறுவகையில் பெறப்பட்டிருந்தாலும்)" என்று 1-1-1983—லிருந்து விரிவுபடுத்தப்பட்டது.

இனம் 24. இப்பதிவு நீக்கப்பட்டு வணிக—வரிச்சரக்குக் குறிச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகப் பெயரின் கீழ் விற்பனைச் செய்யப்படும், "பால் பொருள்கள்" (பால் நீங்கலாக ஆனால் பால் பவுடர் உட்பட), என்பது 103 ஆம் இனத்தில் சேர்க்கப்பட்டது. இதற்கு முன்பு 4 சதவீதத்தில் வரி விதிக்கப்படத்தக்கதாக இருந்தது. 1—7—1983-லிருந்து பத்து சதவீதமாகியது.

இனம் 41E. வரிவிதிப்பதில் ஏற்படக்கூடிய சட்டச் சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்காக மாவரைக்கும் எந்திரங்கள் இந்த புதிய பதிவின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அதற்கு, இம் மாநிலத்தில் அதன் முதல் விற்பனை முனையில் 1—1—1983-லிருந்து 12 சதவீதத்தில் வரிவிதிக்கப்படத்தக்கதாகும்.

இனம் 102. "கண்ணாடிக் கம்பிகள், உருளை வடிவக் கண்ணாடிகள் (அவை தட்டுவடிவில், ஓவியவடிவில் அல்லது ஏனைய வடிவில் இருந்தாலும்)" என்பதை சமதளக்கண்ணாடி இனத்தில் சேர்க்கும் வகையில் இப்பதிவு 1—1—1983-லிருந்து திருத்தப்பட்டது. சமதளக் கண்ணாடி என்பது மத்திய ஆயத் துறை விளக்கத்தின் அடிப்படையில் அமையும்.

இனம் 103 பால்பொருட்களுடன் பதப்படுத்தப்பட்ட பாறையும் இம் மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 10 சதவீத வரிவிதிக்கத்தக்க இனமாக 1-7-1983—லிருந்து சேர்க்கப்பட்டது. இந்தப் பதிவு வணிக-வணிகக் குறிச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வணிகப் பொருள்களின் கீழ் விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு மட்டுமே பொருந்தும்.



1984 மார்ச் 19]

இனம் 109. இனம் எண் 109-லிருந்து எவர்சில்வர் நிப்புகள், எவர்சில்வரால் தயாரிக்கப்பட்ட பாகங்கள், துணைப்பொருட்கள் ஆகியவற்றை நீக்குவதற்காக, "இந்த அட்டவணையில் பிறிதோரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை தவிர எவர்சில்வரால் செய்யப்பட்ட பொருள்கள் என்று இந்தப் பதிவு 1-1-1983-லிருந்து திருத்தப்பட்டது.

இனம் 116—எ. விளையாட்டுச் சாமான்கள் என்பது, விளையாட்டுக்கான அல்லது விளையாட்டுப் போட்டிகளுக்கான பொருட்களாகக் கருதவியலாதென்பதால் அவை ஒருமுனை வரியிலிருந்து பலமுனை வரிவிதிப்பின் கீழ் 1-1-1983—லிருந்து கொண்டுவரப்பட்டன. இது சிறு வணிகர்களின் நலனைக் கருதி செய்யப்பட்டது.

இனம் 143: வணிகத்தின் நலன் கருதி "சீப்புகள்", 8 சதவீத ஒருமுனை வரி விதிப்பதிலிருந்து பலமுனை வரி விதிப்பிற்கு 1—7—1983-லிருந்து கொண்டுவரப்பட்டது.

மாநிலத்தின் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்காக அரசு கீழ்க்குறிப்பிட்ட பொருள்களின் விற்பனை வரி வீதங்களை 3—3—84 முதற்கொண்டு உயர்த்தியுள்ளது:—

| | |
|---|---|
| இனம் 151 பெட்ரோல் | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. |
| இனம் 152 விமான டர்பன் எண்ணெய் | 7 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. |
| இனம் 153 உயர்வேக டீசல் எண்ணெய் | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. |
| இனம் 154 இலகுவான டீசல் எண்ணெய் | 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக உயர்த்தப் பட்டது. |
| இனம் 156 மசகு எண்ணெய் | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப் பட்டது. |
| இனம் 157 கனிம எண்ணெய் | 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப் பட்டுள்ளது. |

[1984 மார்ச் 19

**புதிய இனம் 163:** பரிசுச் சீட்டு விற்பனையின் மீது அளிக்கப் பட்ட விலக்கை இச்சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் நீக்கவும் 28—1—1984-லிருந்து இம்மாநிலத்தில் அவற்றின் முதல் விற்பனை முனையில் 20 சதவீதத்தில் ஒரு முனை வரி விதிக்கவும் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

**புதிய இனம் 164:** கோழித்தீவனம் மற்றும் கால்நடை கலவைத் தீவனத்தின் மீது தற்போதுள்ள 5 சதவீத பலமுனை வரியை 5 சதவீத ஒரு முனை வரி யாக மாற்றப்பட்டுள்ளது

**இரண்டாம் அட்டவணையில் திருத்தம் :**

இனம் 3 (a) இதன் கீழ் ஹோசைரி நூல் நீங்கலாக பருத்தி நூல் விற்பனை மீது விதிக்கப்படும் விற்பனை வரியை 3 சதவிதத்திலிருந்து 4 சதவீதமாக உயர்த்தப்பட் டுள்ளது.

**வரிவிலக்கு, சலுகை வீத வரிவிதிப்பு ஆகியவற்றை நீக்குதல்.**

1940 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தில் காயத்துணி (Gauze) சேர்க்கப்பட்டதால், இதன் விற்பனை மீது அளிக்கப்பட்டிருந்த விலக்கு 7—9—1983-லிருந்து திரும்பப் பெறப்பட்டுள்ளது.

மோட்டார் கார்களின் விற்பனை மீதான வரி வீதம் 7 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகவும் சிறிய டீசல் வண்டிகளின் விற்பனை மீதான வரிவீதம் 10-லிருந்து 12 சதவீதமாகவும் 1—4—1983 லிருந்து அதிகரிக்கப்பட்டது.

ஒப்படைச் சரக்கு விற்பனை மூலம் வரி ஏய்ப்பு செய்யப் பட்டதன் காரணமாக வரிவீதம் குறைக்கப்பட்டதனால் வருவாய் பெருமளவிற்கு குறைந்ததினால் தாவர எண்ணெய்கள் பிண்ணாக்குகள் ஆகியவற்றின் விற்பனை மீதான வரிவீதம் 2 சதவீதத்திலிருந்து 3 சதவிதமாக 1—12—1983 லிருந்து அதிகரிக்கப்பட்டது.

வணிகப் பெயரில்லாத அல்லது 1958ஆம் ஆண்டு வணிகக் வணிகக்குறி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத வணிகப் பெயருடன் கூடிய பேக்கரி உற்பத்திப் பொருள்கள் அனைத்தும் ஆண்டுக்கு இரண்டு லட்ச ரூபாய் அதிகமாக விற்றுமுதல் இல்லாத வணிகர் ஒருவரால் விற்பனை செய்யப்படுகையில் அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளன.

மனிதர்கள் அல்லது விலங்குகள் உண்ணத்தக்க அரிசி படு பொருள்களின் மீதான வரி விலக்கு 25—5—1983லிருந்து கட்டுப் படுத்தப்பட்டது. கெட்டுப்போன அரிசியிலிருந்து தயாரிக்கப் படும் உண்ணத்தகாத ஸ்டார்ச், உணவுப் பொருள்கள் என்பதன் கீழ் வர வேண்டும் என்று உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பிலும் விஞ்சி நிற்பதாக இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.



1984 மார்ச் 19]

''இரசாயனங்கள்'' பல்முனை வரிவிதிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால் சென்னை-4 ல் உள்ள தமிழ்நாடு கெமிகல் புரொடக்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சோடியம் ஹைட்ரோ சல்பைட்டின் விற்பனை மீது அளிக்கப் பட்ட வரிவிலக்கு 1—7—1982 லிருந்து முந்தைய பயனுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

**விலக்குகளும், வரி குறைப்புகளும் :**

அண்டை மாநிலங்களில் நிலவும் குறைந்த வரி வீதத்தையும், வணிகத்தை மாற்றுவதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்பதையும் கருத்தில் கொண்டு டிரக்குகள், பேருந்து அடிக் கட்டைகள் ஆகியவற்றின் விற்பனை மீது விதிக்கப்பட்ட வரி 15 சதவிதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. இவ்வரி வீதம் 9 சதவீதத்திலிருந்து 6 சதவிதமாக 3—3—1984 முதற்கொண்டு மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

மின்சார பொருள்களின் வரிவீதங்கள் பயன்படுத்துவதற்காக மின்சார நிறுவனங்களின் பெயர்ப்பட்டியல் குறிப்பிடப்பட்டது.

ஏலக்காய் மீது வரி விதிப்பது கொள்முதல் முனையில் இருந்து விற்பனை முனைக்கு 27—1—1982 அன்று மாற்றப் பட்டதால் அந்த நாளுக்கு முன்னர் ஏற்கனவே வரி விதிக்கப் பட்டிருந்த ஏலக்காய் விற்பனை மீது செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிக்கப்பட்டது.

பழைய, தேய்ந்த அல்லது நசுங்கிய நகைகளுக்கும் பாலமரில் வெள்ளி (Palama: l silver) உட்பட தங்கம் அல்லது வெள்ளி பொருள்களின் விற்பனைக்கும் 1—8—1983 லிருந்து சலுகை வரி வீதமான 2 சதவீதம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் வணிகத்தை ஊக்குவிக்கவும், மற்ற மாநிலங்களுக்கு விற்பனை செய்வதை தடுப்பதற்காகவும் கோயம்புத்தூர், குன்னூர் ஆகிய இடங்களில் உள்ள ஏல விற்பனை நிலையங்களில் தேயிலை ஏல விற்பனை மீது இருந்த விற்பனை வரி 5 சதவீதத்தி லிருந்து 2½ சதவீதமாக குறைக்கப்பட்டது. இச்சலுகை மேலும் ஆறு மாத காலத்திற்கு 9—11—1983 லிருந்து நீட்டிக்கப் பட்டது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள பர்மா அங்காடி வியாபாரிகள் சங்கத்தின் பர்மா அகதி வியாபாரிகளால் விற்பனை செய்யப் படும் பொருள்களின் மீது செலுத்தத்தக்க வரிக்கு அளிக்கப்பட்ட விலக்கு 17—2—1984 லிருந்து மேலும் 4 மாத கால அளவிற்கு அல்லது திருச்சிராப்பள்ளி சிங்காரத்தோப்பில் இந்த வியாபாரி களுக்கு அங்காடி பகுதி கட்டிட்த்தொகுதி கட்டி முடிக்கப்படும் வரை இதில் எது முன்னதோ அக்கால அளவுவரை நீட்டிக்கப் பட்டுள்ளது.

தெளிவாகத் தெரியும் பொருட்டு, வேளாண்மைக் கருவிகளாகப் பயன்படுத்தப்படுபவையும் வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டவையுமான பல்வேறு கருவிகள் பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இராசபாளையம், சென்னை சிப் போர்ட் நிறுவனம் தயாரிக்கும் எல்லா வகை காகித அட்டைப் பெட்டிகளின் விற்பனை மீது விதிக்கப்படும் வரி 19—3—1983லிருந்து மேலும் இரண்டாண்டு காலத்திற்கு 10 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

சென்னை-2 யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம், சென்னை-10, திருவாளர்கள் பண்டாலை கார்டியோ தொராசிக் ஃபௌண்டேஷன் நிறுவனத்திற்கு விற்பனை செய்த ஸ்டாண்டர்டு 20 டீசல் 'விஸ்தா வியூ' (vista vue) ஆம்புலன்ஸ் வேனின் விற்பனைக்கு வரி விதிப்பதிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

அம்மோனியம் குளோரைட், சோடா ஆஷ், ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக சதர்ன்ஸ் பெட்ரோ கெமிக்கல் இன்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், தூத்துக்குடி ஆல்கலி கெமிக்கல்ஸ் அண்டு பெர்டிலைசர்ஸ் லிமிடெட்டுக்கு விற்பனை செய்த அம்மோனிய வாயு குறித்து 1—4—1983-லிருந்து 31—3—1984 வரையுள்ள காலத்திற்கு உற்பத்தியைப் பெருக்குவதற்காக வரியிலிருந்து விலக்கக்களிப்பட்டது.

வட ஆற்காடு, நாட்ரம்பள்ளி ஸ்ரீராம கிருஷ்ணா மடம் அற நிலைய மருந்தகத்திற்கு மருந்துகள், மருந்துப் பொருட்கள் மருத்துவக் கருவிகள் ஆகியவற்றை விற்பனை செய்தது குறித்து செலுத்தத்தக்க வரிக்கு 7—9—1983 லிருந்து விலக்களிக்கப்பட்டது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் ஸ்ரீலங்கா அகதிகளுக்கு 70 சிறு கடைகள் விற்பனை செய்தது குறித்து செலுத்தத்தக்க வரிக்கு விலக்களிக்கப்பட்டது.

சென்னை-68 மணலி திருவாளர்கள் இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட் தயாரித்த பாலியெஸ்டர் நூலிழை விற்பனையின் மீது 20—12—1982 லிருந்து 19—9—1983 வரை 3 சதவீத பல முனை வரி வீதம் என்றும் 20—9—1983 லிருந்து 15—7—1984 வரை 2 சதவீத பலமுனை வீதம் என்றும் குறைக்கப்பட்ட வரி வீதத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

செமி டிரெயிலர்களின் (Semi—Trailors) விற்பனை மீது செலுத்தத் தக்க வரி 1—4—1983-லிருந்து 31—3—1984 வரை 15 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.



சென்னை-23, திருவாளர்கள் பாம்பனாடி எனர்ஜி சிஸ்டம் பிரைவேட் லிமிடெட் சூரிய வெப்பத்தால் இயங்கும் கருவிகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அலுமினியத் தகடுகள், அலுமினியக் குழாய்கள், அலுமினிய சேனல்கள், அலுமினிய கிளாஸ், செயற்கை நாரிழை, கம்பளி, எப்.ஆர்.பி. பொருள்கள், கையால் இயக்கப்படும் சாதனங்கள் ஆகியவற்றின் கொள்முதல் மீது செலுத்தத்தக்க வரிக்கு 1–1–1983-லிருந்து 31–3–1984 வரையுள்ள காலத்திற்கு விலக்களிக்கப்பட்டது.

சிறு விவசாயிகள் பயன்படுத்தும் மண்வெட்டி மற்றும் மனித சக்தி அல்லது மிருக சக்தி கொண்டு இயக்கப்படும் பிற விவசாய சாதனங்களுக்கு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இச் சலுகை 6-11-1974 முதல் முன்மேவு பலனுடன் வழங்கப்பட்டது.

வட ஆற்காடு மாவட்டம் காட்பாடியிலுள்ள வொர்த் டிரஸ்ட் நிறுவனம் பர்னூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் நடத்தும் தொழிற் பள்ளியில் உற்பத்தியாகும் பொருள்களுக்கு வரி விலக்களித்ததைத் திருத்தி அது உற்பத்தி பொருள்களுக்கு மட்டும் அல்லாமல் துணைக் கருவிகள் விற்பனைக்கு பொருந்துமாறு ஆணையிடப்பட்டது.

மனித சக்தி அல்லது மிருக சக்தி கொண்டு இயக்கப்படும் விவசாயக் கருவிகளுக்கு உதிரிபாகங்களாகப் பயன்படும் பொருள்களின் விற்பனையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இச்சலுகை 1-4-1970 முதல் முன்மேவு பலனுடன் வழங்கப்பட்டது.

ஒரு அலை வரிசை அல்லது இரு அலை வரிசைகள் உள்ள வானொலிப் பெட்டிகளுக்கு (டிரான்சிஸ்டர் வானொலி உள்பட) விதிக்கப்பட்டிருந்த வரியான 15 சதவீதத்தை 10 சதவீதமாக 25-8-1980 முதல் குறைக்கப்பட்டது.

சமூக நலத்துறையால் சென்னையில் 24,25 மற்றும் 26-9-1983-ல் நடத்தப்பட்ட பொருட்காட்சியில் நாப்கின்ஸ், துணி மாட்டிகள், சந்தனப் பூச்சு, மாலைகள், சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் பவுடர், கண்ணாடிப் பொருட்கள் முதலான பொருட்களின் விற்பனையில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா தமிழ்நாட்டில் பஞ்சு விளைவிப்போரிடமிருந்து கொள்முதல் செய்யும் பஞ்சிற்கு செலுத்தவேண்டிய கொள்முதல் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் கொள்முதல் செய்யப்பட்ட பஞ்சினை காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா கொள்முதல் செய்த நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

வரித் தள்ளுபடி.

4-3-1979-லிருந்து 23-3-1979-க்கான காலத்திற்கு தேங்காய் வியாபாரிகள் தேங்காய் வாங்குவதன் மீது செலுத்த வேண்டிய வரியானது அவர்கள் ஏற்கெனவே அவ்வரியினை வசூலித்து இருக்காவிடின் வரியினை தள்ளுபடி செய்யப்பட்டது.

1972—73-லிருந்து 1978—79 வரையுள்ள காலத்திற்கு வெள்ளியம்பாளையம், கொங்குபைபர் இன்டஸ்டிரியல் கோ ஆப்பரேடிவ் வொர்க்கர்ஸ் செலுத்தத்தக்க விற்பனை வரி ரூ. 29,004-ம் சொஸைட்டி லிமிடெட் ரூ. 1,762-ம் தள்ளுபடி செய்யப்பட்டன. அபராதம்

அரக்கோணம் தமிழ்நாடு ஸ்டீல் லிமிடெட் இறக்குமதி செய்த இரும்பு துணுக்குகளிலிருந்தும் உலோகக் கட்டைகளிலிருந்தும் தயாரித்த மீண்டும் உருளைசெய் முறைக்குட்படுத்தப்பட்ட பொருட்களுக்கு செலுத்தத்தக்க வரி 1-4-1977-லிருந்து 31-7-1981 வரை உள்ள காலத்திற்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கும்பகோணம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகத்திற்கு பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் திருச்சிராப்பள்ளிக் கிளை 61 வண்டி உடைமை உரிமையை மாற்றிக் கொடுத்ததற்குச் செலுத்தத்தக்க வரி தள்ளுபடி செய்யப் பட்டது.

புதிய சலுகைகள்:

தற்போது ரூபாய் ஐம்பதாயிரம் மொத்த விற்பனைத் தொகை வரையில், பலமுனை விற்பனை வரி விதிப்பினின்றும் விலக்கு அளிக்கப்படுகிறது. இத்தகைய விலக்கு அளிப்பதற்கான வரம்பை ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்த அரசு கருதியுள்ளது. இதனால் சுமார் 20,000 வணிகர்கள் பயனடைவர்.

ரூபாய் முப்பதாயிரத்துக்குக் குறையாத மொத்த விற்பனை தொகையைச் கொண்ட வணிகர்கள் தமிழ்நாடு பொது விற்பனை சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று தற்போது வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மொத்த் விற்பனைத் தொகையை ரூபாய் ஐம்பதாயிரமாக உயர்த்தவும் அரசு கருதியுள்ளது.

18. மத்திய விற்பனை வரிச் சட்டத் திருத்தங்கள் :

மோட்டார் கார்கள், டீசல் சிறு வண்டிகள் ஆகியவற்றின் விற்பனை மீது அளிக்கப்பட்ட மொத்த வரிவிலக்கு ரத்து செய்யப் பட்டு வரி வீதம் 1-10-1983-லிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப் பட்டது.



கையினால் தயாரிக்கப்படும் விளையாட்டுப் பொருள்கள், கலைப்பொருள்கள் ஆகியவற்றின் மாநிலங்களுக்கு இடையேயான விற்பனைமீது விதிக்கப்படும் வரியைப் பொறுத்தவரையில், 4 சதவீத சலுகைவீதத்தை இத்தகைய பொருள்களுக்கும் நீட்டிக்க அரசு முடிவு செய்துள்ளது.

19. தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தில் திருத்தங்கள் :

சில நகராட்சிகளின் நிலை மாற்றப்பட்டால் தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம், தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வரி செலுத்தும் முறையில் அல்லது வரி வீதத்தில் மாற்றம் ஏற்படும்.

நுழைவுச் சீட்டில் கேளிக்கை வரி அதிகாரியின் அதிகார பூர்வ மான முத்திரையைப் பெறுவதற்கு முன்னர் அதில் மொத்த தொகையும், நிகர தொகையும், பல்வேறு வீதங்களும் தெளிவாக அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்று 27 ஆம் விதியின் திருத்தம் கோருகிறது.

2. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு தொலைக் காட்சியில், வீடியோ கேஸட் ரிக்கார்டர்கள் மூலம் திரைப்படம் காட்டுதல் (முறைப்படுத்தல்) அவசரச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 2/1984) அரசு வீடியோ கேஸட் ரிக்கார்டர்கள் மூலம் திரைப்படம் காட்டுவதற்கு உரிமம் வழங்கும் முறையைக் கொண்டு வந்துள்ளது. வீடியோ கேஸட் ரிக்கார்டர்கள் மூலம் திரைப்படம் காட்டுவதற்கு தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் வரி விதிப்பதற்கு இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது.

0. தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டம் :

குதிரைப் பந்தய வரி சென்னையில் 20 சதவீதமாக உள்ளது. இது 31-3-1984 வரை செயலில் இருக்கும். உதகமண்டலத்தில் நடைபெற்ற குதிரைப் பந்தயங்களுக்கு குறைக்கப்பட்ட வரி வீதமான 15 சதவீத வரி வீதம் 30-6-1983 வரை தொடர்ந்து செயலில் இருந்தது. வெளியூர்களில் நடைபெறும் பந்தயங்களுக்கு இங்கு பந்தயம் கட்டி ஆடுவதற்கு 31-3-1984 வரை 15 சதவீத வரி தொடர்ந்து செயலில் இருக்கும்.

21. தமிழ்நாடு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம் விதிகளில் திருத்தங்கள்:

அச்சிடப்பட்ட பணப்பட்டி புத்தகங்களின் மீது வரி விதிப்பு அதிகாரியின் முத்திரை இடப்பட வேண்டும் என்பதிலிருந்து எந்த ஒவொரு தங்கும் விடுதியின் உரிமையாளருக்கும் விலக்களிப்பதற்காக வணிகவரி ஆணையருக்கு அதிகாரம் அளிப்பதற்கு 2-A என்னும் புதிய விதி கொண்டுவரப்பட்டுள்ளது.

22. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம் :

திரையரங்குகள் காட்டும் விளம்பர வில்லைகள், படங்கள் ஆகியவற்றிற்கு வரி விதிக்கும் பொருட்டு 5-12-1983 லிருந்து புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

23. வருவாய் : A. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டம் :

1979-80-லிருந்து 1983-84 வரையுள்ள (1983 டிசம்பர் வரை) ஆண்டுகளில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

ஆண்டு. — மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1979–80 | 25,827.90 |
| 1980–81 | 34,361.75 |
| 1981–82 | 44,937.50 |
| 1982–83 | 53,782.95 |
| 1983–84 | 40,450.07 (1983 டிசம்பர் வரை). |

1981-82 ஆம் ஆண்டில் (1982, டிசம்பர் இறுதி வரையில்) இச் சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் ரூ. 38,161.99 இலட்சமாகும். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில் கிடைத்த வருவாய் ரூ. 40,450.07 இலட்சமாகும். இந்த வருவாய் முந்தைய ஆண்டு இதே கால அளவுக்கான வருவாயுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், 1983-84 ஆம் ஆண்டு ரூ. 2,288.08 இலட்சம் அதிகரித்துள்ளது. அதிகரித்த வருவாய் 6 சதவீதமாகும்.

B. 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் :

1979-80-லிருந்து 1983-84 ஆம் ஆண்டு வரை (1983 டிசம்பர் வரையில்) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் கிடைத்த வருவாய் பற்றிய விவரம் வருமாறு :—

ஆண்டு. — மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.)

| | |
|---|---|
| 1979-80 | 6,854.07 |
| 1980-81 | 8,574.67 |
| 1981-82 | 9,554.98 |
| 1982-83 | 11,597.34 |
| 1983-84 | 8,147.97 (1983 டிசம்பர் வரை). |



முந்தைய ஆண்டு இதே கால அளவுக்கான வருவாயுடன் (ரூ. 8,316.54 இலட்சம்) ஒப்பிடும்போது 1983-84 ஆம் ஆண்டில் (1983 டிசம்பர் வரையில்) ரூ. 168.57 இலட்சம் வருவாய் குறைந்துள்ளது. தொழிற்சாலையில் ஏற்பட்ட மின்வெட்டு தொழிலில் ஏற்பட்ட மந்தநிலை, ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மாற்றுதல், ஒப்படைச் சரக்கு விற்பனை ஆகியவை அதிகரித்தது. புதுச்சேரியில் ட்ரக் வண்டிகள், டயர்கள், டியூப்புகள் முதலியவற்றின் வரி வீதம் குறைக்கப்பட்டது, ஆகிய பாதகமான நிலைகளே வருவாய்க் குறைந்ததற்கான முக்கியமான காரணங்களாகும்.

C. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச்சட்டம் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டம்.

மேற்சொன்ன சட்டங்களின்கீழ் 1979-80-லிருந்து 1983-84-ம் ஆண்டு வரை (1983 டிசம்பர் வரையில்) கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :—

ஆண்டு. — மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1979–80 | 2,671.13 |
| 1980–81 | 2,892.91 |
| 1981–82 | 3,146.11 |
| 1982–83 | 3,642.04 |
| 1983–84 | 2,857.70 (1983 டிசம்பர் வரை) |

சென்ற ஆண்டு இதே கால அளவுக்கான வருவாயுடன் (ரூபாய் 2,684.34) ஒப்பிடும் போது 1983-84 ஆம் ஆண்டில் (1983 டிசம்பர் வரையில்) ரூ. 173.36 இலட்சம் வருவாய் அதிகரித்தது. அதிகரித்த வருவாய் சுமார் 6.5 சதவீதமாகும். இணக்கவரி ஏற்பாட்டுத் திட்டம், மூன்று மாநகராட்சிகள் மற்றும் தனிநிலை நகராட்சிகள் ஆகியவை நீங்கலாக அனைத்து பகுதிகளிலும் தொடர்ந்து செயலிலிருந்தது.

இவ்விரு சட்டங்களும், கேளிக்கைகள் மீது வரி விதிக்க வகை செய்கின்றன. தொகை செலுத்துவதன் பேரில் மக்கள் அனுமதிக்கப்படும் திரைப்படங்களுக்கும் குதிரைப் பந்தயத்திற்கும் மட்டும் வரி விதிக்க வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்படும் வரி மூலம் கிடைக்கும் வருவாய் முழுவதும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களிடம் கொடுக்கப்படுகிறது. அத்துடன், தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின்கீழ் கிடைக்கப்பெறும் அடிப்படை கேளிக்கை வரித் தொகையில் 90 சதவீதத் தொகையும் அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. வரி இணக்கம் செய்து கொள்ளும் திட்டம் செயலில் இருக்கின்ற பகுதிகளில் கிடைக்கும்

வருவாய், அரசுக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் இடையே 40:60 என்ற விகிதத்தில் ஒதுக்கப்படுகிறது.

D. தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் வரிச் சட்டம் :—

சென்னையில், கிண்டியிலும் உதகமண்டலத்திலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன.

1979–80-லிருந்து 1983–84 வரையில் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1979–80 .. .. .. .. .. | 266.08 |
| 1980–81 .. .. .. .. .. | 408.39 |
| 1981–82 .. .. .. .. .. | 454.63 |
| 1982–83 .. .. .. .. .. | 450.88 |
| 1983–84 .. .. .. .. .. | 269.16 (1983 டிசம்பர் வரை.) |

சென்ற ஆண்டு இதே கால அளவுக்கான (ரூ. 273·07 இலட்சம்) வருவாயுடன் ஒப்பிடும் போது ரூ. 3.91 இலட்சம் அல்லது 1.5 சதவீதம் வருவாய் குறைந்துள்ளது. இவ்வாண்டில் குறைந்த எண்ணிக்கையில் குதிரைப் பந்தயங்கள் நடத்தப்பட்டதே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும், மொத்தப் பந்தயத் தொகையும் குறைந்துவிட்டது.

E. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீது வரி விதிப்புச் சட்டம் :—

1980-81-லிருந்து 1983-84 வரையில் (1983 டிசம்பர் வரை) மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற வருவாய் குறித்த விவரம் வருமாறு :—

| ஆண்டு. | மொத்த வருவாய். (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1980–81 .. .. .. .. . | 32.73 |
| 1981–82 .. .. .. .. .. | 107.31 |
| 1982–83 .. .. .. .. .. | 130.88 |
| 1983–84 .. .. .. .. .. | 97.74 (1983 டிசம்பர் வரை) |



சென்ற ஆண்டு இதே கால அளவுக்கான (ரூபாய் 85·83 இலட்சம்) வருவாயுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் வருவாயில் ரூ. 11.36 இலட்சம் அதிகரித்துள்ளது. இது 13.7 சதவீதமாகும்.

24. வர்த்தகப் பெருமக்கள் வரி விதிப்பிற்குரிய பொதுமக்கள் வணிகவரித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கடந்த ஆண்டுகளைப் போன்று ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடனும் நட்புணர்வுடனும் செயல்பட்டுவருவது அவசியம் எனச் சொல்ல தேவையில்லை.

ஆவணக்காப்பக
சென்னை 600 008.
136234